12



# தம்பிக்கு
# அண்ணாவின் கடிதங்கள்

T 28052

வி.சி-

# தம்பிக்கு

# அண்ணாவின் கடிதங்கள்

—இரண்டாம் பகுதி—

C. N. அண்ணாதுரை, M. A.

பாரி நிலையம்
59. பிராட்வே · சென்னை-1.

முதற் பதிப்பு : ஜனவரி, 1963.

விலை ரூ. 1-50

அச்சிட்டோர் : ஜீவன் பிரஸ், சென்னை—5 (680—II)

# பதிப்புரை

'தம்பிக்கு அண்ணுவின் கடிதங்கள்' என்னும் நூல் வரிசையில் இது இரண்டாவது தொகுதியாகும். இதில் இருபத்தேழாம் கடிதம் முதல் நாற்பத்தைந்தாவது கடிதம் வரை இடம் பெற்றுள்ளன. முதல் தொகுதியை ஆதரித்துதவிய தமிழ்ப் பெருமக்கள் இதனையும், இனித் தொடர்ந்து வெளிவரவிருக்கும் தொகுதிகளையும் ஆதரித்துதவ வேண்டுகிறேம்.

பாரி நிலையத்தார்

# பொருளடக்கம்


| கடித எண் | | | பக்க எண் |
|---|---|---|---|
| 27. | ஹெலிகாப்டரும் இரதமும் ! | ... | 5 |
| 28. | தங்கத் திரை | ... | 18 |
| 29. | உன்னல் முடியும் | ... | 33 |
| 30. | கலை உலகக் காணிக்கை | ... | 43 |
| 31. | குருபக்தி | . | 50 |
| 32. | "பாவி, பொல்லாதவன்..." | ... | 63 |
| 33. | அகலிகையும் ஆச்சாரியாரும் | ... | 74 |
| 34. | தம்பி, தயார் ! தயார் ! | ... | 82 |
| 35. | முத்தான வாய் திறந்து... | ... | 95 |
| 36. | மேற்கொண்டுள்ள மேலான பணி | ... | 106 |
| 37. | புலித்தோலும் எலிவாலும் | ... | 115 |
| 38. | தண்டோரா சர்க்கார்—1 | ... | 134 |
| 39. | ,, ,, —2 | ... | 150 |
| 40. | ,, ,, —3 | ... | 166 |
| 41. | கிளிக்குப் பச்சை பூசுவதா ? | ... | 183 |
| 42. | எங்கள் பெரியார் | ... | 199 |
| 43. | அம்பில் அழைக்கிறுர் | ... | 214 |
| 44. | நாவலர் நம் கழகக் காவலர் | ... | 228 |
| 45. | குடும்ப பாசம் | ... | 240 |

கடிதம் : 27

# ஹெலிகாப்டரும் இரதமும்!

★ வேதகாலமும் விஞ்ஞானப் பொருள்களும்—நாய் பூஜை——புல்கானின் வரவேற்பு.

தம்பி,

ஊரெல்லாம் ஒரே விழாமயம், பார்க்கிருயல்லவா!! ஆசியாவின் ஜோதி வந்தார்—விழா காட்டப்பட்டது! ஒரு திங்களாயிற்று, இதோ பாபு ராஜேந்திர பிரசாத் பவனிக்கான விழா நடைபெறுகிறது! இது கண்டு மகிழ்வோரின் மனம், விழாக் கோலத்தைக் கலைத்துக்கொள்வதற்குள், புல்கானின் வருகிருர், பிரம்மாண்டமான விழா நடைபெற இருக்கிறது. அவருக்கு நடத்தப்படும் விழாவிலே இன்னின்ன வண்ணம் தெரியவேண்டும் என்று திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கும்போதே, நேபாள நாட்டு மன்னரும், மஹாராணியாரும் வரவேற்கப்படவேண்டிய விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பாலம் விமான நிலையத்தில் வரவேற்பு—குழந்தைகள் பூச்செண்டு அளித்தல்—முப்படைப் பிரிவினரைப் பார்வையிடல், நேரு பண்டிதரின் கைகுலுக்குதல், ராஜ கட்டம் சென்று காந்தியார் சமாதியில் மலர் சொரிதல், ஜனதிபதி மாளிகையில் விருந்து, அதை அடுத்து பார்லிமெண்டில் பேச்சு, அதை அடுத்து ஒரு விருந்து, பிறகு 'தாஜ் மஹால் ஜும்மா மசூதி, தங்கக் கோயில் ஆகிய காட்சிகளைக் கண்டு வியப்படைதல், இடையிடையே இன்னிசை, நடனம்—பிறகு பக்ரா-நங்கல், சிந்திரி, சித்தரன்ஜன், இப்படிப்பட்ட 'க்ஷேத்திரங்களைக்' கண்டு மகிழ்தல், பிறகு தெற்கே திருவிழாக் கோலம், திரும்ப

வும் டில்லியில் கோலாகலம், இறுதியில் வந்தவரும் பண்டிதரும் சேர்ந்து உலகுக்கு அறிக்கை வெளியிடுவது. இது 'விழா' முறையாக இருந்து வருகிறது! புல்கானினுக்கும் இது தான், டல்லசுக்கும் இதுவேதான்!! நேபாள மன்னர் இந்தச் 'சுவை'யினை ரசித்துக்கொண்டிருக்கிறார், புல்கானின் வந்து போன பிறகு, சவுதி அரேபியா மன்னர், இந்தச் சுவைகளைப் பெறப்போகிறார். சவுதி அரேபிய மன்னர், உலகிலே உள்ள பெரும் பணக்காரரில் ஒருவர்! அவருக்குச் சொந்தமாக உள்ள எண்ணெய்க் கிணறுகள் மூலமாக மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 200 கோடி ரூபாய் வருமானம் வருகிறதாம். புல்கானின் 'விஜயம்' செய்து, அதன் பயனாக இங்கு 'சமதர்ம' மணம் நமக்கெல்லாம் மகிழ்வூட்டியதும், சவுதி அரேபிய மன்னர் வருவதும், அவருடைய 'விஜயம்' 'முதலாளித்துவ' மோகத்தை தேவைப்படுவோருக்கு ஊட்டுவதுமாக எவ்வளவு நேர்த்தியான முறையிலே அமைந்திருக்கிறது பாரீர், பாரதப் பண்பாடு. எதற்கும் இடம் உண்டு, எதுவும் எதனுடனும் இருக்கும், இது இன்னாருக்கு உரியது என்று இராது.

பர்ணசாலை என்றால், அங்கு, பஞ்சேந்திரியங்களைக் கட்டுப் படுத்தவும், மூவாசையைத் துறந்திடவும் மூலத்தை உணர்ந் திடவும், முறையும் நெறியும் கிடைக்கும் இடம் என்றுதான் கூறுவர்—பாரதப் பண்பாடு அப்படி அல்ல!—இங்கு பர்ண சாலையில், துஷ்யந்தன் சகுந்தலையை அடைகிறான்! நல்லது மட்டுமே சொல்கிறேன், கல்லான கதையை விட்டுவிடுகிறேன். அந்தநாள் தொட்டு இந்த நாள்வரை எது செயல் முறை, எதைக் கொள்ளல் வேண்டும், எதைத் தள்ளிடவேண்டும், என்பதைப் பற்றி அதிகமான அளவு அக்கரை காட்டாமல், கிடைப்பதை இருப்பதுடன் சேர்த்துக்கொள்வதும், 'பத் தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று' என்று திருப்தி அடைவதுமாகவே காலந்தள்ளி வந்திருக்கிறார்கள்; இதைப் பெருமைக்குரியதாகவும் போற்றிப் புகழ்கிறார்கள்.

பிரிட்டிஷ்—அமெரிக்க முதலாளிகள் திட்ட வட்டமாகக் கூறுகிறார்கள், 'இந்தியா' தொழிற்கூடமாவதற்கான முயற்சிக் குப் பணம் பெரும் அளவுக்கு நாங்கள் போடத் தயாராக இருக் கிறோம்—ஆனால், தொழில்களைத் தேசீய உடைமை ஆக்குவது என்ற திட்டமோ, அன்னிய நாட்டாருக்கு இங்கு பொருளா தாரத் துறையிலே ஆதிக்கம் இருத்தல் ஆகாது என்ற திட்டமோ கிடையாது என்று எங்களுக்கு உறுதி அளிக்கப்பட வேண்டும்.

தொழிலில் கிடைக்கும் இலாபத்தை எங்கள் நாட்டுக்குக் கொண்டு செல்வதற்குத் தங்கு தடை இருக்கக்கூடாது— என்று கேட்கிறார்கள்.

அமெரிக்காவில் உள்ள பாரதப் பிரதிநிதியும், இங்குள்ள நிதி மந்திரியும், 'ததாஸ்து'—என்கிருர்கள். அதாவது, அன்னிய நாட்டு முதலாளிகளின் இலாப வேட்டைக் காடாக இந்த நாட்டை குத்தகைக்கு விடுவதற்குச் சம்மதிக்கிருர்கள்.

அதேபோது, ஆவடித் தீர்மான மூலம், சமதர்மம் அளிப்ப தாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்திருக்கிருர்கள்.

இந்த முரண்பாடு சரியா என்று கேட்டாலோ, இதுதான் பாரதப் பண்பாடு, நாங்கள் மிகச் சிரமப்பட்டுக் கண்டறிந் துள்ள 'சீலம்' என்றும் பேசுகிருர்கள்.

புல்கானினும் வருகிருர், சவுதி அரேபிய மன்னரும் வருகி ருர் ; இருவருக்கும் விழா ; இருவரும் குதூகலமடைகிருர்கள் ; இருவருக்கும் நேரு பண்டிதர் நண்பர் !

சவூதி அரேபியா மன்னர் விஜயம் செய்வது தவறு என்று கூறுவதற்காக இவ்விதம் எழுதவில்லே. எந்த ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கும் நேர்மையான தொடர்பு ஏற் படுத்திக் கொள்ளாமலேயே, எவரிடமும் இன்முகம் காட்டி, எதற்கும் இசைவு அளித்துக்கொண்டு செல்லும் போக்கிலே நாடு நடத்தப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டவே இதைக் கூறுகிறேன்.

கடவுள், மனிதனின் சிருஷ்டி ! மதம், மனிதனிடம் ஏற் படுத்தப்பட்ட மனமயக்கம்.

என்று சென்ற திங்கள், மாஸ்கோ 'ரேடியோ' தெரிவித்தது என்று இங்குள்ள ஏடுகளெல்லாம் அறிவித்தன !

அந்த நாட்டு புல்கானின் வருகிருர்—அவருக்குக் கல்கத்தா வில் இராமாயணம் நிழல் நாடகமாக உதயசங்கர் நடனக்குழு வினரால் நடத்திக் காட்டப்பட ஏற்பாடாகி இருக்கிறது.

ஒரு பெரும் தலைவருக்கு பொழுதுபோக்குக்காக நடத்திக் காட்டப்படும 'காட்சி'யைப்பற்றி, நான் வலிந்து பொருள் கொள்வதாகக் கருதாதீர்கள். காரணமின்றி அல்ல, இராமா யணம் காட்டப்படுவது !

காளிதாசரின் 'சாகுந்தலம்' காட்டப்பட்டால், இளங்கோ வின் சிலப்பதிகாரம் காட்டப்பட்டால், இதுபோல் ஒவ்வோர் மொழியிலும் உள்ள கலை ஓவியங்கள் காட்டப்பட்டால், வெளிநாட்டுத் தலைவருக்கு இந்நாட்டுக் கலைக்காட்சி நடத்திக் காட்டப்படுகிறது என்று பொருள் கொள்ளலாம். நடத்தப் படுவது இராமாயணம் !

இது போலவேதான், 'பாரதப் பண்பாடு' பல்வேறு முனை களிலும் தலைவிரித்தாடுகிறது.

டில்லிப் பட்டணத்தில், ஆசியா கண்டத்திலேயே இது வரை இப்படிப்பட்ட ஓர் பிரம்மாண்டமான காட்சி நடத்தப்

பட்டதில்லை என்று எவரும் வியந்து கூறத்தக்கதான 'பொருட் காட்சி' நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவும் ரஷியாவும் பிரிட்டனும் பிறநாடுகளும், தத்தமது தொழிற்திறமையை, விஞ்ஞான முன்னேற்றத்தை விளக்கிடும் வகையில் பொருள்களைக் காட்டியும், பொருள்செய் முறைகளை விளக்கியும் பொருட்காட்சியில் இடம் பெற்றுள் ளன. காண்போர், முற்போக்கு நாடுகள் தொழில் துறை யிலே எவ்வளவு ஆச்சரியகரமான முன்னேற்ற மடைந்துள் ளன என்பதைப் பாராட்டுகின்றனர். நேரு பண்டிதர், இந்தப் பொருட்காட்சியின் தத்துவத்தை விளக்கி விரிவாகப் பேசியு மிருக்கிறார்; இலட்சக்கணக்கான மக்கள் சென்று காண் கின்றனர்.

கண்ணாடி மனிதன் என்றோர் காட்சிப் பொருள் அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

கண்ணாடியால் செய்யப்பட்டுள்ள மனித உடல்! மனித உடலுக்குள்ளே என்னென்ன உறுப்புக்கள் என்னென்ன முறை யிலே அமைந்து, எவ்வகையிலே இயங்குகின்றன என்பதை, கண்ணாடி மனிதன் மூலம் பாமரனும் கண்டறியலாம். இரத் தக் குழாய்கள் தெரிகின்றன. இரத்தம் எப்படி எப்படி ஓடு கிறது என்பது காட்டப்படுகிறது. இதயத் துடிப்பு, மூளையின் அமைப்பு, நரம்புகளின் படைப்பு—எல்லாம் தெளிவாகத் தெரிகிறது, கண்ணாடி மனிதன் மூலம்!

பொருட்காட்சியிலே இந்த விஞ்ஞானப் பாடம் அளிக்கப் பட்டு வரும் இதே நேரத்தில்'பாரதத்தின்' மற்றோர் பகுதியில், வேத காலத்து இரதங்கள் ஓடுகின்றன! அதை இலட்சக்கணக் கான மக்கள் கண்டு களித்து ஆரவாரம் செய்கின்றனர்.

விஞ்ஞான அறிவளிக்கும் பொருட் காட்சியை நேரு பண் டிதர் திறந்து வைக்கிறார்—இந்த வேதகாலக் காட்சியைத் துவக்கிட, பம்பாய் கவர்னர் மேதாப் முன் வருகிறார்.

உலகில் சாந்தி சமாதானம், சுபீட்சம், ஆகியவை ஏற்பட, ஐ. நா. சபை, நால்வர் மாநாடு, ஜினிவா மந்திராலோசனை, பாண்டுங் முயற்சி, நேருவின் பஞ்சசீலம், இவை ஒன்றும் முறை யாகாது—கோடிக் கணக்கான மக்கள் சமாதானம் கோரலாம், பல்லாயிரக் கணக்கான மைல்கள் பறந்து சென்று பண்டிதர் உலக சமாதானம் பற்றி உள்ளத்தை உருக வைக்கலாம், புல் கானின் வாக்களிக்கலாம், சோ இன் லாய் சமரசம் பேசலாம், மாலடோவ் மலர்ந்த முகத்துடன் காட்சி அளிக்கலாம், அமெ ரிக்காவும் சமாதானம் பேசலாம் ஆனால் இவையெல்லாம் உலக சமாதானத்தை ஏற்படுத்தா—உலகிலே சாந்தி நிலவ, இதோ நாங்கள் தொண்டு புரிகிறோம் பாரீர், என்று கூறுவது

போலச் சில பண்டிதர்கள் கிளம்பி, யாககுண்டங்களை வெட்டச் செய்தார்கள், டன் டன்னாக விறகும் டின் டின்னாக நெய்யும் கொண்டுவரச் செய்தார்கள், 'கோஷ்டி கோஷ்டி'யாகக் கிளம்பிச் சென்று வேத பாராயணம் செய்து, வாஜபேய யாகம் செய்தனர் !

யாகம் நடைபெற்ற இடத்திலே, இப்போதும் வெப்பம் இருக்கக் கூடும்—புல்கானின் வருகிறார்.

பூனா நகரில், வாஜபேய யாகம் பிரஜாபதி தேவனுக்காக நடத்தப்பட்டிருக்கிறது

ஏழு நாட்கள் நடைபெற்றன, மூன்று நூற்றாண்டுகளாக இப்படிப்பட்ட மகிமை வாய்ந்த யாகம் நடைபெற்றதில்லையாம்.

நூற்றுக் கணக்கான புரோகிதர்கள், யாக குண்டத்தைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு, வேதமந்திரங்களைச் சொல்ல, ஆயிரக்கணக்கானவர்கள் 'பூஜை புனஸ்காரம்' செய்து புண்ணியம் தேடிட, பம்பாய் மாகாண கவர்னர் அரி கிருஷ்ண மேதாப் இந்த யாகத்தின் மேன்மை பற்றித் தமது மேலான கருத்தினைக்கூற, ஆனே எனும் பழம் பெரும் தேச பக்தர், நோய் வாய்ப்பட்டிருந்த நிலையிலும் அங்கு படுக்கையுடன் எடுத்துக்கொண்டு வரப்பட்டு, அவரும் தமது உரையை அருள, இலட்சம் மக்கள் கண்டு களிபேருவகை பூத்தனர், இந்தத் திங்களில்.

பூனாவில் இந்தப் புண்ய யாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில், நேரு பண்டிதர், என் க்ஷேத்திரம் அணையும் தேக்கமும், தொழிலும் வளமும், என்ற தமது பேச்சை அமிருதசரசில் அளித்துக் கொண்டிருக்கிறார்.

வாஜபேய யாகத்தை முடித்துக்கொண்டு, பாரதத்தின் பழைய காலமுறைப்படி, வேதகால இரதங்கள் ஜோடித்து, பலர் 'ரிஷிகளாகக்' காட்சி தந்து, இரத சாரத்யப் பந்தயம் நடத்திக் காட்டினராம் !!—கடைசி நாளன்று.

இராமனும் கிருஷ்ணனும், சேதி நாட்டரசனும், அவந்தி தேசாதிபதியும், கர்ணனும் சகுனியும், சகாதேவனும் சல்லியனும், அபிமன்யுவும் பிறரும் புயலெனச் செல்லும் புரவிகள் பூட்டப்பட்ட இரதங்களிலே சென்றனர் என்று புராணம் படிக்கிறார்களல்லவா—அந்தச் செல்லரித்த ஏடுகளிலே காட்டப்படும் காட்சிகளைக் காண,வேதகால இரதசாரத்யக் காட்சியை ஏற்பாடு செய்து காட்டினர்—பல்லாயிரவர் கண்டனர்—பரவசமடைந்தனர்.

அதேபோது, டில்லிப் பட்டணத்தில் வேறோர் ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. புல்கானின் விஜயத்தின்

போது, உற்சாக மிகுதியால் இலட்சக்கணக்கில் கூடிடும் மக்கள் கட்டுக்கடங்காது போவர் என்ற கவலையால், போலீஸ் அதிகாரிகள் ஹெலிகாப்டர் விமானத்தில் ஏறிக்கொண்டு, மேலே தாழ்வாகப் பறந்து கொண்டே, மக்களை ஒழுங்கு படுத்தும் திட்டம் தயாரிக்கிறார்கள்.

புனாவில், வேதகால இரதம் ஓடிக்கொண்டிருக்கிறது,

டில்லியில் ஹெலிகாப்டர் விமானம் தயாராகிறது !!

'பாரதம்' எவ்வழி செல்கிறது என்று கூறமுடியும்? யாக குண்டமும் தெரிகிறது விஞ்ஞானக் கூடமும் அமைக்கப்படுகிறது, இரதமும் ஓடுகிறது ஹெலிகாப்டரும் பறக்கிறது! புல்கானின் வரவேற்கப்படுகிறார், சவுதி அரேபிய மன்னருக்கும் இராஜ உபசாரம் தயாராகிறது.

மேதாப் பேசுகிறார், பாரதம் யாக யோகாதிகளிலே சிறந்த தேசம்,—என்று

நேரு பண்டிதர் அதே கிழமை வேறோர் பகுதியிலே பேசுகிறார், இன்னமும் நாம் சாணியுகத்தில்தான் இருக்கிறோம்,—என்று.

உலகம் அணுயுகத்தில் இருக்கிறது—பாரதம் சாணியுகத்தில் இருக்கிறது, என்று கூறுகிறார் நேரு பண்டிதர்—மனம் நொந்து கூறுவதுபோலத்தான் இருக்கிறது.

அவர் இவ்விதம் கேலியும் வேதனையும் கலந்த குரலில் எந்தச்சாணியுகம் பற்றிக் குறிப்பிடுகிறாரோ, அதைச் சிலாக்கியமானது, என்று புகழ்ந்து பேசி, வாஜபேய யாகத்தைத் துவக்கி வைக்கிறார் கவர்னர் மேதாப்! எல்லாம், பாரதத்தில்! எதுதான் நமக்கு உரியது? எவவழிதான் நல்வழி? எந்த முறையைப் பின்பற்றப் போகிறீர்கள்? என்று கேட்டாலோ, தலைவர்கள் கோபம் கொள்கிறார்கள்—குழப்பம் அடைகிறார்கள், இவர்கள் இவ்விதம்தான் 'பத்தாம் பசலிகள்'. பண்டிதர் அப்படிப்பட்டவர் அல்ல, அவர்தான் காசி அரித்துவாரம், சேது சீரங்கம் திருப்பதி தில்லை, இவைகளல்ல என் திவ்ய க்ஷேத்திரங்கள்; என் திவ்ய க்ஷேத்திரங்கள், தேக்கம் அணை, சிந்திரி சித்தரன்ஜன், என்ஜின் எழில், என்று பேசுகிறாரே, அவர் நாட்டினை, அறிவுலகத்தின் சார்பில் நடத்திச் செல்வார், விஞ்ஞானப் பாதை வழி நடத்திச் செல்வார் என்று எண்ணித் தெம்பும் தைரியமும், நம்பிக்கையும் பெறலாம் என்றாலோ, இவ்வளவு பகுத்தறிவும் பேசிவிட்டு, அவரும் இராமலீலா பார்க்கச் செல்கிறார், பேரப்பிள்ளைகளுடன்! அவரும் இவ்வளவுதான் என்று தெரிகிறபோது ஆயாசப்படாமல் என்ன செய்வது?

அந்த வாலிபன் பதறினான் இளம் பெண் பதைபதைத்தது கண்டு! அவள் அழுகுரல், அவன் இதயத்தைத் துளைத்தது.

ஐயயோ ! என்று அணங்கு அலறுகிறுள், அந்தோ ! கொடுமை! கொடுமை ! என்று கூவுகிருன் இளைஞன்.

பெரு நெருப்பிலே பெண்ணை இறக்கினர். புத்தாடை உடுத்திக் கொண்டாள் பூவை—மஞ்சள் குங்குமம் இட்டுக் கொண்டு, மாங்கலியத்தை எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொண்டு, மாமி மாமன் காலில்'விழுந்து வணங்கிவிட்டு, சூழ நின்ற சுற்றத்தாரைக் கலங்கிய கண்களுடன் பார்த்துக் கும்பிட்டுவிட்டுப், பிணக்குழியைப் பற்றிக் கொண்ட பெரு நெருப்பை மும்முறை வலம்வந்து, "ஈசா ! இதோ நானும் என் நாதனுடன் வருகிறேன், ஏற்றுக்கொள். பதியை இழந்து பாவை புவியில் வாழ்வது பெரும் பாபம், எனவே இதோ, உடன்கட்டை ஏறுகிறேன், உன் திருவடியில் சேர்த்துக் கொள் !" என்று பிரார்த்தனை செய்கிறுள்.

"உத்தமி உடன்கட்டை ஏறுகிறுள், பத்தினி, பர்த்தாவுடன் செல்கிறுள்—அவளுடைய பாததூளி பட்டாலே பாபம் சம்ஹரிக்கப்படும், உடன்கட்டை ஏறிடும் காட்சியைக் கண்டோருக்குக் கர்மம் கழுவப்படும்; கடவுளருள் கிட்டும்" என்று பயபக்தியுடன் பேசுகின்றனர்.

பத்தினிப் பொண்ணு

பாரதக்கண்ணு

என்று பாடுகிறுர்கள்; தாளம் கொட்டுகிறுர்கள்.

தீயின் அருகே செல்லச் செல்ல, அவள் கண்களிலே ஓர் மிரட்சி ஏற்படுகிறது; வாலிபனுக்கு அது விளங்குகிறது.

"ஜெய்மகாதேவ்! ஜெய் சங்கர்! ஜெய் சீதாராம்!" என்று கோஷம் கிளம்புகிறது.

ஆயிரம் நாவுகள் படைத்த கோர உருவம்போல, நெருப்புத் தெரிகிறது, பெண்மணியின் கண்களுக்கு ! எனினும் அவள் அருகே செல்கிறுள்.

மகளே ! அருமை மகளே ! என்று தாய், அழுது என்ன பயன் ? அவள் உத்தமி பத்தினி, எனவே அவள் சுட்டுச் சாம்பலாக்கப்பட வேண்டியவள் ! இளம் பெண், இந்த வயதிலா இந்தக்கதி என்று சிலர் பச்சாதாபப்படலாம். ஆயினுமென்ன, அவள் பாரதப் பெண்—பதி பிணமானுன், அவன் உடல் அதோ நெருப்பில், இவள் இனி பூவுலகில் இருப்பானேன். உயிருடன் இருந்தபோது யாருடன் மஞ்சம் ஏறி கொஞ்சிக் கிடந்தாளோ அவனுடன்தான் இப்போதும் இருக்கவேண்டும். அதுதான் பாரதப் பண்பாடு. போ, மகளே, போ, நாதன் இருக்குமிடத்துக்குத்தான் நாயகி செல்லவேண்டும். அது மலர் தூவிய பஞ்சணையானுலும் சரி, கொழுந்து விட்டெரியும் நெருப்பானுலும் சரி, அதுதான் உன் இடம்; போடி பெண்ணே,

போ, போ. நெருப்பு அணைந்திடுவதற்குள் போ. நீறு ஆகி விடுவாய், நேராகச் சொர்க்கம் சேர்ந்திடுவாய். சதியும் பதியும் இணைபிரியாமல் வாழ்வீர்கள். அவன் செல்கிறான், உன்னை அழைக்கிறான், போடி மகளே, போ."—என்று பாரதப் பண்பாடு கூறுகிறது. அந்தப் பெண் செல்கிறாள்—வாலிபன் பதைக்கிறான். நெருப்பில் இறங்குகிறாள்,

"ஐயோ" என்று அலறித் துடித்து, அதைவிட்டு வெளிவர எழுகிறாள், நீண்ட கம்புகளைக்கொண்டு 'சாஸ்திர சம்பிரதாய ரட்சகர்கள்' அவளை மீண்டும் நெருப்பில் தள்ளுகிறார்கள். அவள் உடலைத் தீ பற்றிக்கொள்கிறது—வேதனையால் துடிக் கிறாள்—வேதமுணர்ந்தவர்கள் அவள் தீக்குண்டத்தைவிட்டு வெளி ஏறாவண்ணம், கோல்கொண்டு தடுத்து, அவளைப் பிண மாக்குகிறார்கள். பாரதத்துக்கு மற்றோர் பத்தினி கிடைத்து விட்டாள். ஆனால் ஒரு ஒப்பற்ற சீர்திருத்த வீரனும் கிடைக் கிறார். அவர்தான் இராஜாராம் மோகன்ராய்.

தன் அண்ணி, உடன்கட்டை ஏறியபோது, வைதீக வன் கணாளர்கள் காட்டிய குரூரத்தைக் கண்டபோதுதான், இராஜாராம் மோகன்ராய், மடைமையினால் விளையும் கொடுமை குறித்து உணரமுடிந்தது. சுடலையில் அவர் எடுத் துக்கொண்ட சூளுரையை நிறைவேற்ற அவர் இந்தியாவில் மட்டுமல்ல, இங்கிலாந்துவரை சென்று போரிட்டார்—வெற்றி கண்டார். சதி சட்டப்படி தடுக்கப்பட்டது. வைதீ கர்கள் அவர்மீது காட்டிய குரோதம் கொஞ்சமல்ல, அவர்கள் சாஸ்திரத்தை, யுகயுகமாக இருந்துவந்த சம்பிரதாயத்தை எடுத்துக் கூறினர். ராஜராம் மோகன்ராய்க்கு சுடலையில் கண்ட காட்சி உடனே மனக் கண்ணில் தெரியும், அவர் இதயத்தில் பெருநெருப்பு மூளும், பொறிகள் வார்த்தை களாகி வெளிவந்து, வைதீகத்தைச் சுட்டுச் சாம்பலாக்கிற்று.

சதியை ஒழித்தார் இராஜாராம் மோகன்ராய்!

நான் அறிவேன்! நான் அறிவேன்! உடன்கட்டை ஏறு வது என்பது எவ்வளவு கொடுமை என்பதை நான் அறிவேன். என் கண்ணால் கண்டேன், அலறினாள், துடித்தாள், உயிருக் காக மன்றாடினாள், உலுத்தர்கள் என்ன செய்தனர்? கோல் கொண்டு அவளை நெருப்பில் தள்ளினர்—உயிர் கருக்கினர்.

அபலையின் அழுகுரலைக் கேட்டால், கன்னெஞ்சக்காரனுக் கும் கருணை பீறிட்டெழும். அந்த அழுகுரல் பிறர் செவியில் விழக்கூடாது என்பதற்காக வைதீக வெறியர்கள், காது செவிடு படும்படி சங்கம் ஊதினர், தாளம் தட்டினர், மேளம் கொட்டி னர், பஜனைச் சத்தமிட்டனர், எல்லாம் ஒரு பெண்ணைப் பிண மாக்க; தங்கள் பைத்யக்காரமுறையை வாழவைக்க, நான்

கண்டிருக்கிறேன் அந்தக் கயமையை—என்று இராஜாராம் கர்ஜனை புரிந்தார்; தர்க்கம் நடத்தினர்; ஏடுகள் தீட்டினர்; வாதுக்கு வந்தோரை முறியடித்தார்; வஞ்சகரின் எதிர்ப்புகளைச் சமாளித்தார், சீமை சென்று பேசினர்; பார்லிமென்டில் சொற்பெருக்காற்றினர்; வென்றார்; சதி எனும் மடமையைக் கொன்றார்.

பாரதத்தில் இப்போது இங்கொன்றும் அங்கொன்றுமாக 'சதி' நடக்கிறது.

சட்டம் இருக்கிறது; எனினும் 'சதி' நமது பாரதப் பண்பாட்டின் சின்னம் என்று கருதுவோர் இருக்கிறார்கள்; அவர்களிடம் ஒரு புதுத் துணிவும் காணப்படுகிறது.

> "மதுந்தா என்ற இடத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தன் கணவர் இறந்துவிட்டதும் அவருடனேயே 'உடன் கட்டை' ஏறியதாகச் சென்ற கிழமை ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.
>
> தனது கணவன் உடல் எரிந்துகொண்டிருக்கும் போது, மஞ்சள் நிற சேலை அணிந்துகொண்டு கழுத்தில் ஒரு மாலையுடன் தோன்றி மயானத்தில் கூடியிருந்தவர்களிடம் தான் உடன் கட்டை ஏறப்போவதாகத் தெரிவித்துவிட்டு நெருப்பில் குதித்துவிட்டாளாம்.
>
> அந்தப் பெண்ணை எவரும் தடுத்து நிறுத்தியதாகத் தெரியவில்லை.
>
> நெருப்பில் விழுந்த அந்தப் பெண், துடித்துத் துடித்து அலறினளாம். ஆனல் அந்த அலறலைவிட அதிக உரத்த தொனியில் தாரை, தப்பட்டைகள் முழங்கினவாம்; குருக்கள்மார் வேதங்கள் ஓதினராம், சில நிமிட நேரத்தில் அந்தப் பெண் சாம்பலானளாம்."

நாடு, எவ்வழி நடத்திச் செல்லப்படவேண்டும் என்பதில் ஓர் திட்ட வட்டமான கொள்கையில்லாததால், விளையும் கோரங்களில் இஃதொன்று. வேறென்ன ?

பாபு இராஜேந்திர பிரசாத் தமிழகத்துச் சுற்றுப் பயணத்தில் ஓரிடத்தில்,

"நாடு இப்போது பழைய காலத்திலும் இல்லை; புதிய காலத்திலும் இல்லை, இவை இரண்டும் போட்டியிடும் ஓர் இடைக்காலத்தில் இருக்கிறது" என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்.

அவர், பழமையின் பக்கமா, புதுமையின் சார்பிலா என்பதை அறிவிக்கவில்லை. அவருடைய அலுவல்கள் அதனை அறிவிக்கின்றன.

திருப்பதியில் தெரிசனம், சமஸ்கிருத பரீஷத்தில் பிரசன்னம், மடாதிபதியின் சமயப் பிரசார ஸ்தாபனத்தில் பேச்சு—இப்படி அவர் அலுவல்கள்.

மதத்தின் பெயர்கூறிக்கொண்டு எப்படிப்பட்ட மூடத்தனத்தையும் செய்யவைக்கலாம் என்ற நெஞ்சழுத்தம், வைதீகத்தின் துணை கொண்டு ஆதிக்கம் செலுத்துபவர்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது. யாராருக்கோ 'யோகம்' அடிக்கிறது. மனிதர்களைத் தள்ளிவிடுங்கள். நாய்க்கு அடித்திருக்கிறது யோகம்! மஞ்சள் குங்குமம் தடவி, மலர் சூட்டி, விருந்து வைத்துப் பூஜை செய்திருக்கிறார்கள், நாய்களுக்கு!

இங்கு, நாம் தம்பிரான்களுக்கு ஏனய்யா தங்கப் பாதக் குறடு, சைவத்தைப் போற்றுகிறேன் என்று கூறிக்கொண்டு ஏன் மாமிச மலைகளைப் பல்லக்கில் ஏற்றிச் சுமந்து திரிகிறீர்கள் என்று கேட்கிறோம்.

சங்கரர் தந்து சென்ற அறிவு விளக்கம் ஆத்மீக வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கிறது என்று கூறிக்கொண்டு, பாத பூஜை செய்தால் பவப்பிணி போகும் என்று நம்பிக்கொண்டு, காலைக் கழுவி நீரைக் குடிக்கிறாயே, என்ன கேவலமான புத்தி ஐயா! உனக்கு என்று கேட்கிறோம்.

இப்படியா கேட்கிறாய், என்னைத் திருத்த நீ யார், என் விருப்பம் போல் நான் செய்வேன், எனக்கு நற்கதி கிடைக்க வேண்டும் என்பதற்காகப் புனித ஏடுகளிலுள்ளதை பூஜிதர்கள் கூறுவதைக் கேட்டு நான் நடந்துகொள்வேன், அதைத் தவறு, அறிவீனம் என்று விளக்கிட நீ ஆயிரம் காரணம் காட்டுவாய், அதனாலென்ன, நீ சொல்வதாவது நான் கேட்பதாவது என்று நம்மிடம் வாதாடுகிறார்கள். வைதீகத்தின் பிடியிலுள்ள மக்கள் நாய்க்குப் பூஜை செய்திருக்கிறார்கள்—புல்கானின் வருகைக்காக நாடு விழாக் கோலம் கொண்டிருக்கிற இப்போதுதான்!

இப்போது, டில்லியில் வரவேற்பும், பம்பாயில் இராஜோபசாரமும் பெற்றுக் கொண்டிருக்கிறாரே, இந்தியாவின் நண்பர் நேபாள மன்னர்—அவருடைய நாட்டில்.

நாய்கள், மங்கள ஸ்நானம் செய்விக்கப்பட்டு, மஞ்சள் குங்குமம் அணிவிக்கப்பட்டு, மாலைகள் சூட்டப்பட்டு, காத்மாண்டு நகரவீதிகளில் செல்கின்றன! கல்லடிபட்டுக் கொண்டும், எச்சில் இலை பொறுக்கிக் கொண்டும், ஒன்றுக்கொன்று கடித்துக் கொண்டும், குரைத்துக் கிடக்கும் இந்த நாய்களுக்கு, இப்போது விசேஷ விருந்து அளித்து விழுந்து கும்பிடுகிறார்கள்.

யமதர்மராஜனுடைய வாசலில் இரண்டு நாய்கள் காவலாம்.

நாய்களுக்கு இங்கு இந்தப் பூஜை செய்தால், யமதர்மனுக்குத் திருப்தியாம்.

யமனுக்குச் சந்தோஷம் என்ருல் என்ன—மரண பயம் கிடையாது.

எனவே. இந்த நாய் பூஜை நடக்கிறது—தீபாவளிப் பண்டிகையின் போது.

நாய்க்கு நடத்தப்படும் பூஜை போலவே, எருமைக் கிடாவுக்கும் பூஜையாம்.

நேபாளநாட்டுத் தீபாவளி இவ்விதம் இருக்கிறது.

இங்கே பசுவுக்குப் பூஜைசெய்வோரும், பாம்புக்குப் பால் ஊற்றுவோரும், செச்சே, இது என்ன பைத்யக்காரத்தனம், நாய்க்குப் பூஜையா, மஞ்சள் குங்குமமாம், மாலை மரியாதையாம், பூஜையாம் நாய்க்கு. இதுவா பக்தி? இதுவா மதம், என்று கேலி பேசுவர்.

இங்கு பசு, பாம்பு-அங்கு நாய்.

எல்லாம், மதத்தைப்பற்றி மனதிலே குடிகொண்டிருக்கிற மயக்கத்தின் விளைவுதான்.

நாய்களுக்குப் பூஜை செய்யும் நாடு நேபாளம், என்று ஒரு மேயோ கூறிவிட்டால் மட்டும், கோபம் கொப்பளித்துக் கொண்டு வருகிறது; நாம் மதத்தின் பெயரால் மூடத்தனம் நிலவுகிறது என்று கூறினாலோ, ஏடா, மூடா, எமது மார்க்கத்தில் பொதிந்து கிடக்கும் ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் நீ அறிவாயா? என்று பேசிடும் பெரியவர்கள் கிளம்பிவிடுகிறார்கள், இதோ நாய்களுக்குப் பூஜை நடக்கிறது.

அருவருப்பு அடைவோர் இல்லை, வேண்டுமானால், விஷயம் கேள்விப்பட்டதும், இங்கு அந்த பூஜை முறையின் விவரம் தெரிந்துகொள்ள ஆவல்கொள்வோர் கிடைப்பர்.

“நாய் என்ருல் கேவலம் என்று பொருளா? தெரியுமா, பைரவர் என்று நமது புனித ஏடுகளில் கூறப்பட்டிருப்பது, அவருக்கு வாகனம் நாய்தான்” என்று ஆதாரம் பேசுவர் பஜனைக் கூடத்தார்.

நாயைக் கும்பிடுவதுபற்றி இந்த சூனமானக்கள் கேலி பேசுகிருர்களே, நாயிடம் கொஞ்சி விளையாடலாமா, நாய்க்கு பிஸ்கட்டும் பாலும் கொடுப்பதைக் கண்டித்தார்களா? நாய் வளர்த்து, நம்மையும் நாய் வளர்க்கப் பழக்கப்படுத்தி வெள்ளைக்காரனைக் கண்டித்தார்களா? நாய், சுதந்திரப் போருக்குத் தியாகம் செய்தது இவர்களுக்குத் தெரியுமா? நாய் செய்த தியாகம்கூடச் செய்யாதவர்கள்தான் இந்தச் சூ. மா. க்கள்,

கேளீர், கதையை. சத்யாக்கிரகத் தொண்டரைத் தாக்க ஒரு வெள்ளைக்கார வெறியன் ஓடிவந்தான். கையில் துப்பாக்கி. நெஞ்சில் வஞ்சகம், சத்யாக்கிரகி என்ன செய்வான்? ஓடாதே, கோழையாகாதே என்று மனம் கூறிற்று. புத்தியோ, ஓடு ஒளிந்துகொள் அது கோழைத்தனமாகாது, பாரததேவியின் விலங்கினை ஒடித்திட நீ சேவை செய்ய வேண்டும், அதற்காக உயிர் வாழ வேண்டும், எனவே இப்போது உயிரைக் காப்பாற்றிக்கொள் என்று இடித்துரைத்தது அவன் ஓடினான், அவனு ஓடினான், அடிமை இந்தியா ஓடிற்று ! ஆங்கில ஏகாதிபத்யம் துரத்திக்கொண்டு வந்தது. அப்போது கேவலம் ஒரு நாய்— ஆனால் பாரதத் திருநாட்டிலே பிறந்து வளர்ந்த நாய், கிளம்பிற்று வீராவேசமாக! நாய் பாரதத்தின் சேய் என்ற உரிமையுடன், முழக்கமிட்டது; வெள்ளையன் மேலே பாய்ந்தது, குரல்வளையைக் கடித்தது; அவன் திணறினான், கூவினான், ஏகாதிபத்யம் மரணக் கூச்சலிட்டது; நாய் பாரத மண்ணிலே பரங்கி ஆதிக்கமா, என்று கேட்கவில்லை, ஆனாலும், தேசபக்தர்களின் பேச்சு, அந்த நாயின் உள்ளத்திலேயும் வீராவேசத்தை ஊட்டிவிட்டிருக்க வேண்டும்—எனவே அது புலியாயிற்று. போர், சடும்போர், பைரவருக்கும் பரங்கிக்கும் போர் மூண்டது. இறுதியில், அந்தப் பாதகன், பரங்கி, தன் கைத்தடியால் நாயின் மண்டையில் ஓங்கி அடித்தான்—இரத்த வெள்ளம்—கடைசி முழக்கம்—நாய் மண்ணிலே பிணமாயிற்று—செத்தும், அதன் கண்கள் மூடிக்கொள்ளவில்லை—அன்னியனை விடமாட்டேன் என்று அப்போதும் கூறுவது போலிருந்தது.

அப்படிப்பட்ட 'நாய்' சேவை செய்ததை அறியாத இந்த அறிஞர்களும் பெரியார்களும், இப்போது நாய் பூஜை செய்வதைக் கேவலமாகப் பேசுகிறார்கள். இதைத் தேசீயவாதியாகிய நான், செக்கிழுத்த சீலரின் வழி நிற்கும் நான், அனுமதிக்கமாட்டேன்—என்று பேசி, தங்கள் திறமையைக் காட்டிக் கொள்ளவும் சிலர் உண்டு— ஒருவராவது, இது என்ன கேவலப் போக்கையா, நாயைப் பூஜித்தா நாதன் அருளைப் பெறுவது என்று கேட்க மாட்டார்கள்? ஏன் ? நாதன் அருள் பெற்றதற்காக கூறப்பட்டுள்ள புண்ய காதைகளில், இதைவிட அருவருப்பான நிகழ்ச்சிகள் உள்ளன—படித்தும் பக்க நின்று கேட்டும் பரவசப்படும் நாடாயிற்றே !

நாய்களுக்குப் பூஜை செய்வது, கேவலம்தான், ஆனால் அதைக் கேட்டால், கைகொட்டிச் சிரித்திடத்தான் தோன்றுகிறது, வேறென்ன என்பார்கள்.

கேட்டதும், கோபமும் வேதனையும் கிளம்பத்தக்க செயலிலும், மதத்தின் வழி நிற்பதாகக் கூறிக் கொள்வோர், இப்போது ஈடுபடுகிறார்கள்.

வாரீர், வணங்கிடுவோம் வாரீர், இந்த உத்தமனை மறவாதீர், இவன் நமக்காக, நமது ஜீவனும் இந்து மதத்துக்காக சர்வ பரித்தியாகம் செய்த மகான்—மாவீரன். உயிரைத் துச்சமென்று எண்ணி, மார்க்கத்தை இரட்சித்த மகா புருஷன். நமது புராதன மார்க்கமாம் இந்து மார்க்கத்துக்கு பேராபத்து நேரிடும்போதெல்லாம், இப்படிப்பட்ட 'ரட்சகர்' அவதரிப்பது நமது பாரதத்துக்கே தனிச் சிறப்பளிக்கிறது. இந்தப் பாரத வீரனை, இந்து மார்க்க ரட்சகனை, மதக்காவலனை, கொண்டாட வாரீர்—என்று அழைத்திருக்கிறார் ஒரு பாரத்வாசி.

இவ்வளவு புகழுரைகளும் அர்ச்சித்துக் கொண்டாட வரும்படி கூறுவது, யார்பொருட்டு, மகாத்மா காந்திக்காகத் தானே. அந்த மகானுக்குத்தானே இந்தக் கொண்டாட்டம் என்று கேட்பீர்கள், மூர்ச்சையாகிவிடாதீர்கள், இது மகாத்மாவின் நினைவு நாள்கொண்டாட்ட அழைப்பு அல்ல—அவரைச் சுட்டுக் கொன்றானே கோட்சே அவனுக்காக.

ஆமாம், தம்பி! ஆமாம், பகிரங்க அழைப்பு, கொண்டாட்டத்துக்கான ஏற்பாடு !!

1949 ஆம் ஆண்டு நவம்பர் 15-இல் அம்பாலா சிறையில், அகிலம் போற்றிய உத்தமர் காந்தியாரைச் சுட்டுக் கொன்ற உலுத்தன், ஆரிய கோட்சே, தூக்கிலிடப்பட்டான்.

இந்த நவம்பர் 15-ந் தேதி, இந்தக் கொலைகாரனுடைய ஆறாவது ஆண்டு நினைவு நாள் கொண்டாட்டம் நடத்த குவாலியரில், தண்டாவாடே எனும் இந்துமகாசபைக்காரன் தன் சகாக்களுடன் கூடி ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தான்.

மகாத்மா கொல்லப்பட்ட வழக்கிலே இவனும் சிக்கினான் —விடுதலை செய்யப்பட்டான்.

இவனுக்கு, நேரு பண்டிதரின் ஆட்சி இருக்கும் போதே, கொலைகாரக் கோட்சேயை அவதார புருஷன் போலக் கொண்டாட்டம் நடத்திப் பாராட்டும், துணிவு ஏற்பட்டு விட்டது ! ஏன் ? மார்க்கரட்சகன் கோட்சே ! இந்துமதத்தைக் காப்பாற்றவே காந்தியைக் கொன்று, தன் உயிரைப் பலிகொடுத்தான் என்று பேசிட, பெருமைப்பட, உற்சாகமூட்ட இந்துமத வெறி இடமளிக்கிறது !!

கலாம் விளையும் என்று காரணம் காட்டி அவன் போலீஸ் காவலில் வைக்கப்பட்டான்.

பாரதநாடு தவிர வேறெங்கு இத்தகைய 'பாதகன்' துணிவு பெறமுடியும்.

நாட்டிலே இன்றும் கப்பிக் கொண்டிருக்கும் குருட்டறிவை, கொலைகார கோட்சே கும்பல் நம்பிக் கொண்டு

இருக்கிறது, என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக் காட்டாக இருக்கிறது.

நாய்க்குப் பூஜை செய்கிருர்கள் !

கொலேகாரனுக்குக் கொண்டாட்டம் நடத்த முயற்சிக் கிருர்கள் !!


இவை யாவும் எதன் விளேவு ? பழைமைக்கு பாதுகாவல ராக ஆளவந்தார்கள் உளர் என்ற நிலேமைதான்.

பாபு ராஜேந்திரப் பிரசாத் கூறியது போல, பழைமைக் கும் புதுமைக்கும் இடையிலே உள்ள ஓர் கொந்தளிப்பில் நாடு இருக்கிறது, ஆனல் ஆளவந்தார்கள், நிச்சயமாகப் பழைமை யின் பாதுகாவலர்களாகத்தான் பணியாற்றி வருகிருர்கள். புதுமையை அவர்கள் அடியோடு விலக்கிடவில்லே, இயலாத தாலும், அதன் இனிமை அவர்களுக்குச் சுவை அளிப்ப தாலும்.

ஆனல் இந்தத் தலேமுறையில் நாடு எவ்வழி செல்வது என்பது பற்றி முடிவு எடுத்தாக வேண்டும்—ஹெலிகாப் டரா ? வேதகால இரதமா ?—என்பது தீர்மானமாகி விட வேண்டும்.

அன்புள்ள,

*20—11—1955*



கடிதம் : 28

# தங்கத் திரை

★ ரஷியாவின் சிறப்பு—சோவியத் தலேவர்கள் வருகை—இந்தியத் திட்டங்களில் குறைபாடுகள்.

தம்பி,

அன்னிய நாட்டுச் சகோதரர்களே ! வாருங்கள் எங்கள் ஊருக்கு ! வந்து பாருங்கள் எங்கள் நகரத்தை !

சிரித்து மகிழ்ந்து அளவளாவும் இனிய சுபாவமும், அதிதி களே அன்புடன் வரவேற்று உபசரிக்கும நற்பண்பும் கொண்ட வர்கள் எங்கள் மக்கள். எங்கள் நகரில் கொடிய குளிரும்

பனியும் உண்டு. ஆனல் எங்கள் இதயங்கள் மென்மை யானவை—அன்பின் கதகதப்பு அவற்றில் நிறைய உண்டு.

சண்டை சச்சரவுகள் அற்ற சமாதான உலகம், அடக்கு வோர் அடக்கப்பட்டோர் இல்லாத உலகம், அனைவருக்கும் இன்பகரமான வாழ்வை அளித்திடச் சகல இனத்தவரும் நிறத் தவரும் சகோதரர்களாக ஒருமித்துப் பணியாற்றும் நல்லுகம்—இதுவே எங்கள் வேட்கை.

சோவியத் நாடு எனும் ஏடு, இந்த அன்பழைப்பினை வெளியிட்டிருக்கிறது; இதே கருத்துப்பட, இங்கு மக்களின் மகத்தான வரவேற்பினைப் பெற்று உள்ளம் பூரித்த புல்கானின், குருஷெவ் இருவரும் பேசியுள்ளனர்.

காமராஜரே, ரஷியா போகிருராம்!

ரஷியா போய்விட்டு வந்தவர்களெல்லாம், (இராஜ குமாரி அமிர்தகௌர் உட்பட) அங்கு உள்ள வளம், வசீகரம், இவைகளை வழங்கிய முறை, இவை குறித்துப் பாராட்டினர். அந்தப் புதுமுறை பூத்திடும் பொன்னுலகு பற்றிய ஆய்வுரை களைப் படித்து இன்புற்ருேரும், அந்நாட்டின் ஏற்றம், எழில் பற்றி மகிழ்ந்து பேசினர்.

காமராஜர் இந்த இரு வாய்ப்புகள் பெற்ருரில்லை எனி னும், ரஷிய நாட்டு முறை பற்றிக் குறைகூறிப் பேசக் கூச வில்லை.

ரஷியாவை ஏதோ சொர்க்க பூமி என்று பேசுகிருர்கள்—சொக்கிப் போகிருர்கள். சுத்தத் தப்பு. அதெல்லாம் ஒன்று மில்லை, ஒரு பெரிய ஜெயில் மாதிரி. சோத்துக்கே அங்கு கஷ்டம். அங்கு சுதந்திரம் கிடையாது, சுகமும் கிடையாது—என்று காமராஜர் பேசுவது வாடிக்கை. அவருக்கு ரஷியா செல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. பயணம் பக்குவத்தை யும் பயனையும் அளிக்கவேண்டும்.

ரஷியா சென்று வருபவர்களைக் கேலி பேசும் காமராஜர், ரஷியா போகும் நிலை ஏற்படுவதுகூட ஆச்சரியமல்ல—அவரை ரஷியாவுக்கு அழைத்துக்கொண்டு வருவதாக ராமமூர்த்தி வாக்களித்தாராமே, இந்தப் பூரம் பூண்ட புதுமைதான் எல்லாவற்றினையும்விட ஆச்சரியமானது.

வெளி உலகத் தொடர்புகொள்வதிலே விசேஷ அக் கரையோ அவசரமோ காட்டாமலிருந்துவந்த சோவியத் தலைவர்கள், இப்போது சில காலமாக, பல்வேறு நாடுகளுடன் நேசத் தொடர்புகள்கொள்ள முயற்சிக்கிருர்கள்—அமெரிக்கா அச்சப்படும் அளவிலும், பிரிட்டன் பீதி கொள்ளும் விதத்தி லும் வெற்றியும் பெறுகிருர்கள்.

குபேரபுரியின் சொந்தக்காரர்கள் சாம்ராஜ்யாதிபதிகள் என்ற வகையில, முறையே அமெரிக்காவும் பிரிட்டனும் உலகில் உலவி உயர் இடம் கேட்டுப் பெறமுடிந்தது, உலகில் இல்லாமையை விரட்டி அடித்து, ஏழை எளியோருக்கு வந்துற்ற இடர்ப்பாடுகளை ஒழித்துக்கட்டி, எல்லோருக்கும் எல்லாம் எனும் தூய கருத்து நடைமுறையில் மலர்ந்து மணமளிக்கத் தக்கதோர் புதுமுறை கண்ட நாடு என்ற முறையில், சோவியத் எவருடைய கவனத்தையும், ஏழை எளியோரின் அன்பையும், பெறத்தக்க ஒப்பற்ற நிலையில் இருக்கிறது.

முப்பதாண்டுகளுக்கு மேலாகவே இந்த அதிசயபுரி பற்றி, கவிஞர்கள் பாடி வந்தனர், இலட்சியவாதிகள் புகழ்ந்து வந்தனர், பொதுமக்கள் பூரிப்புடன் பாராட்டி வந்தனர்—எதேச்சாதிகாரிகளும் ஏய்த்துப் பிழைத்திடும் போக்கினரும், மதவாதிகளும் மாமிச மலைகளும் அருவருப்பையும் அச்சத்தையும் கக்கி வந்தனர், ஏளனமும் எச்சரிக்கையும் கலந்த குரலில் ஏசி வந்தனர்—எவரும் மறக்கமுடியாததோர் மகத்தான நிலையில் சோவியத் நாடு முப்பதாண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது.

இல்லாமையை ஒழித்த இன்பபுரி என்றனர் மக்கள். ஈசனை மறந்த இழிநிலையில் உள்ளநாடு என்றனர் எத்தர்கள், வீரமும் தீரமும பொங்கிடும் நாடு, விம்மிடும் ஏழையின் கண்ணீரைத் துடைத்த நாடு, உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வீணில் உண்டு கொழுத்திருப்போரை விரட்டிய வீரர் கோட்டம் சோவியத் நாடு, தூங்கிக் கிடந்த அரிமா, விழித்தெழுந்து, தன் பிடரியில் ஒட்டிக் கொண்டு கிடந்த பூச்சி புழுக்களை உதறித் தள்ளிவிட்டு, காட்டரசன் என்ற நிலையில் அடவியில் ஆட்சி செலுத்துவதுபோல, சுரண்டிப் பிழைப்போர் சூதுமதியினர், ரசுபுடீன்கள், ராஜகோலாகலர்கள், உழைப்பைத் திருடுவோர், ஊரை அடித்து உலையில் போடுவோர் போன்ற நச்சுப் பூச்சிகளை நசுக்கிச் சாகடித்து, மக்களின் சக்தியை முழு அளவில் மிளிரச் செய்து, உலகிலேயே ஒப்பற்ற நாடாக விளங்குவது சோவியத் நாடு என்று, உள்ளத்தில் உயர் கருத்துக்களுக்கு இடமளிப்போர் பெருமிதத்துடன் கூறினர்—கோயில்களை இடித்துக் குளங்களைத் தூர்த்துவிட்டு, ஆத்மீகத்தை அழித்துவிட்டு, ஞானிகளை விரட்டிவிட்டு, மதத்தை மாய்த்துவிட்டு, மக்களை மாக்களாக்கி, கொடுங்கோலால் அவர்களைக் கருத்துக் குருடர்களாக்கி பெரியதோர் சிறைக்கூடமாக நாட்டினை மாற்றி, இந்த உண்மைகளை உலகு அறிந்திடா வண்ணம் ஓர் 'இரும்புத் திரை' போட்டுக்கொண்டு, வன்னெஞ்சம் கொண்டதாகச் சோவியத் இருந்துவருகிறது, எங்கும் எந்த வேளையிலும் ஏதேனும் கலாம் விளைந்த வண்ணம்

இருத்தல் வேண்டும் என்பதற்கான திட்டமிட்டு ஒற்றர்களை யும், கூடிக் குடிகெடுப்போரையும் ஏவிவிட்டு பிறநாடுகளின் பலத்தை ஒடுக்கி, அங்கு அமளியை மூட்டிவிட்டு, அதன் இறுதியில், அங்கெல்லாம் தன் ஆதிபத்தியத்தைப் புகுத்தி, உலகினை ஆளவேண்டும் என்ற கெடுமதி கொண்டுள்ள நாடு, சோவியத்; தீயாரைக் காண்பதுவும் தீது, தீயார் சொல் கேட்பதுவும் தீது என்ற முறையில், திருவருளை இகழ்ந்து வாழும் அந்நாட்டுடன் எத்தகைய தொடர்பு கொள்வதும், தீது மட்டுமல்ல, ஆண்டவனுக்கே இழைக்கும் துரோகமாகும்! என்று தம்மை அருளாளர்கள் என்று கூறிக்கொண்டவர்கள், பீதி மூட்டினர்.

நாட்டிலே பெருங்காற்று வீசிடினும், காட்டிலே பெருங் கூச்சல் எழுந்திடினும், ஆற்றிலே வெள்ளம் கரைபுரண் டோடி வந்திடும்போதும், காட்டுத் தீ கட்டுக்கடங்காது பரவி டும்போதும் நில நடுக்கத்தின்போதும் தொத்துநோய் படை எடுத்திடும்போதும், பஞ்சம் பரவிடும்போதும், இயற்கைக் கோளாறு எது நேரிடுப்போதும், "எல்லாம் ஈசன் சோதனை—மகேசனை மறந்தனர், ஐயன் தண்டிக்கிறார்—பக்தி குன்றிற்று, இன்னல் வந்துற்றது—நாத்திகம் தலைகாட்டுகிறது, நாசம் தலைவிரித்தாடுகிறது – ஈசன் நாமத்தைப் பஜியுங்கள்" என்று உபதேச மூலம் ஊர் மக்களை மிரட்டினர் ஆதின கர்த்தாக்கள்; அவர்களின் அடிதொழுது காணிக்கை கொட்டிக்கொடுத்து, அந்தத் திருத்தொண்டு மூலமே தம்மைச் சீலர்கள் என்ற நிலைக்குக்கொண்டு சென்ற சுயநலக்காரர்கள், எதேச்சாதிகாரி கள், ஏன் என்று கேட்பவனையும் ஆகுமா என்று பெருமூச்சு விடுவோனையும், பாடுபடும் எனக்கா இந்தப் பஞ்சமும் நோயும்? உறிஞ்சிப் பிழைப்போனுக்கா உல்லாச வாழ்வும் வாழ்க்கையில் விருந்தும்? இடுப்பொடிய உழைக்கிறேன் இல்லாமை கொட்டுகிறதே, ஊருக்கு உழைக்கிறேன், உருக் குலைந்துபோகிறேன், நான் வெட்டி எடுக்கும் இரும்பே எத்த ரிடம் சிக்கி என் கரங்களில் தளைகளாகவும், என் நெஞ்சைத் துளைக்கும் குண்டுகளாகவும் உருவெடுக்கிறதே, ஈதென்ன அக் ரமம்? இதற்கோ நான் எலும்பு முறியப் பாடுபடுவது? நான் கட்டிக் கொடுக்கும் பாசறையும் நான் சமைத்துத் தரும் படைக் கலங்களும், நான் அமைத்துத் தரும் அரண்மனைகளில் புகுந்துக்கொண்டு அரசோச்சும் அக்ரமக்காரரிடம் சிக்கி, என்னையே அல்லவா கொடுமை செய்திடக் காண்கிறேன், இதுவோ நல்லாட்சி முறை? இதற்கோ நான் ஆயிரம் தொழில் செய்வது? காட்டில் உலவும் புலிக்குக் குகையும், நச்சுப் பல்கொண்ட பாம்புக்குப் புற்றும், நயவஞ்சக நரிக்குப் புதரும் கிடைக்கிறது; ஆயிரமாண்டுகள் அழகொளியுடன்

நிற்கத்தகும் அரண்மனைகளும், மந்தகாச வாழ்வுக்கான மாளிகைகளும், மாற்றாரைத் திகைக்கச் செய்யும் கோட்டை கொத்தளம், அரண் அகழி ஆகியவற்றினையும் கட்டித் தந்திடும் எனக்குத் தங்க ஓர் குடில் இல்லை! இது அக்ரமம் என்று எடுத்துக்கூற எந்தத் தூய்மையாளனும் தோன்றிடக் காணோம், சாமான்யன் இதைக் கேட்டாலோ, சன்மார்க்க மறியாதான், சழக்கருடன்கூடி நாசமானோன், சர்வேசன் திட்டத்தை எதிர்த்திடும் சண்டாளன் என்று ஏசுகின்றனர், மலை மலையாக ஏடுகள் உள்ளன, படித்துப் படித்துப் பக்குவம் பெறுகின்றனர் என்று கூறுகின்றனர், மேதைகள் தீட்டியன மட்டுமல்ல, மேலே உள்ள தேவன் திரு அருளால் கிடைத்தன என்றும் இந்த ஏடுகள் பற்றிக் கூறுகின்றனர்—ஒரு ஏடும் எமக்கு நீதி வழங்குவதுதான் முறை, என்று கூறக் காணோமே —என்று ஏழை கேட்கிறான்—பசியால் பதைத்து, கொடுமைக் காளானதால் குமுறி, துரத்தப்பட்டுத் துரத்தப்பட்டு மேலே சென்று தப்பிட வழி அடைபட்டுப்போன நிலையில், நிமிர்ந்து நிற்கவும், புருவத்தை நெரிக்கவும், கரத்தை உயர்த்தவும், கனல் கக்கவும் தொடங்குகின்றான்—உடனே ஆத்மீகப் பாது காவலரும் அரசியலில் எதேச்சாதிகாரம் செலுத்துவோரும் அவனைத் தாக்கிடுகின்றனர்—தாக்கும்போது, இவன் ரஷிய ஏஜண்டு, பொது உடைமைக்காரன், புரட்சிக்காரன், அழிவு வேலைக்காரன், ஆண்டவனுக்கு விரோதி என்று பழி சுமத்து கின்றனர்!

அப்போதெல்லாம், சோவியத் ரஷியா பற்றித்தான் பேசுவர்—ஏசுவர்.

உழவன் உள்ளம் குமுறிப் பேசும்போதும் பாட்டாளி பதைத்தெழுந்து நீதி கேட்கும்போதும், தாழ்த்தப்பட் டோன் தலை நிமிர்த்தி ஆண்டவன் படைப்பிலே பேதம் ஏதய்யா என்று கேட்கும்போதும், புரோகிதப் புரட்டு, மதத்தின் பெயரால் புகுத்தப்பட்டுள்ள மடைத்தனம், ஆகியவற்றினைப் பகுத்தறிவாளர் கண்டிக்கும் போதும் — ரஷியா, ரஷ்யா! — அந்த நாசபுரியின் நண்பர் கள் இந்த மாபாவிகள், இவர்களைத் தூண்டிவிட்டு, இந்த நாட்டைப் பிடித்தாட்ட பெருந் திட்டம் தீட்டுகின்ற னர் ரஷியாவில் பேயாட்சி நடத்திடுவார்—உடனே அழித் தொழித்திட வேண்டும்—எம் முறையும் மேற்கொள்வோம்— கையில் கிடைத்ததைக்கொண்டு தாக்குவோம்—என்று கொக்கரித்துக் கிளம்புவர், ஒவ்வோர் நாட்டுக் கொடுங் கோலர்களும்!

பட்டினி கொட்டும், பஞ்சம் பரவும், அகவிலை தலைவிரித் தாடும்—நன்மையும் தீமையும் பகல் இரவு போல மாறி மாறி

வரத்தான் செய்யும், அவனவன் பாவ புண்யத்துக்குத் தக்க படி ஓர் புனிதன் படி அளக்கிறுன், ஆட்டுக்கும் அளந்து தான் வால் அமைக்கிறுன் ஐயன், இட்டார்க்கு இட்ட பலன், அன்று எழுதினுன் இன்று நடக்கிறது—என்று பேசிட பூசாரிக் கூட்டம் எங்கும் கிளம்புகிறது; ஏழையின் வாயை அடைத்துவிடுகிறது.

"ரஷியா என்றோர் நாடு இருக்கிறதாம்....அங்கு...." என்று ஏழை பேசத் தொடங்கினுலோ,...."அங்கு தேனும் பாலும் ஆருக ஓடுகிறது, வாரி வாரிப் பருகலாம், பாடுபடா மல் பிழைக்கலாம்,...பைத்யக்காரா! பைத்யக்காரா! பொய் யுரை கேட்டுப் பூரித்துப் போகிருயே! அது ஓர் பாப பூமி! பழி பாவத்துக்கு அஞ்சாத பாதகர்கள், எதையும் இல்லே என்று கூறிடும் வஞ்சக நெஞ்சினர், ஏழை மக்களே இம்சித்து வேலே வாங்கி, மிருகங்களேப் பட்டியில் அடைத்து வைத்துத் தீனி போடுவதுபோல, கடுமையாக வேலேவாங்கி, கட்டுக் காவலில் வைத்துவிட்டு, ஏதோ தீனிபோட்டு வருகிருர்கள், அங்கு ஞானமும் மோனமும் கிடையாது, கலேயும் காவியமும் காணமுடியாது, தேர் திருவிழா இல்லே, தேவனருள் கிடை யாது, மகிழ்ச்சி இல்லே, எழுச்சி இல்லே, செக்கு மாடுகள் போல மக்கள் கிடந்துழல்கின்றனர்; இங்கு நீ ஆயிரம் கேள்வி கள் கேட்கிருய், பொறுமையாகப் பதில் அளிக்கிறேம், அஞ் ஞானத்தால் உளறுகிருய், மெய்ஞ்ஞானம் போதிக்கிறேம், சந்தேகப் பேய் பிடித்தாட்டுகிறது அதைப் போக்குகிறேம்— அங்கு இதுபோல் முடியுமா? ஏன் என்றுகேட்டு வாய்மூடு முன் பிணமாவாய்! எதிர்த்து வேலே செய்ய எண்ணினுல் போதும் சைபீரியா பாலேவனத்துக்குத் துரத்துவர்—அங்கு உன்னேச் சாகடிக்கத் துப்பாக்கி தேவை இல்லே, கடுங்குளிர் போதும்"—என்று கூறி மிரட்டிவிடுவர், ஆட்சியாளர்களும் ஆலய அதிபர்களும்.

நாம் என்ன கண்டோம்! நமக்கென்ன புரிகிறது!— என்ற மனப் போக்குடன் பல ஆண்டுகள் பாமரர் இருந்து வந் தனர்—அந்த நிலே மெள்ள மெள்ள மாறலாயிற்று சோவியத் நாட்டின் சோபிதம் பற்றிய சொல்லோவியங்களேக் காணவும், ஆய்வுரைகளேக் கண்டு தெளிவு பெறவும் வாய்ப்புகள் கிடைத் தன; சோவியத் நாடும் 'பரீட்சைக் கூடம்' என்ற நிலேயிலிருந்து பாசறையாகி, இன்று சமதர்ம அறிவு பரப்பிடும் பல்கலேக் கழகமாகித் திகழ்கிறது உலகப் பெரும் போரிலே ரஷியா காட்டிய ஆற்றல், அவனிக்கே ஓர் பாடமாக அமைந்தது— பிரிட்டனும் அமெரிக்காவும் பேயாட்சி நடத்தப்படும் பாப பூமி என்று எந்த ரஷியாவைக் கண்டித்துப் பேசினரோ, அந் தப் பேரரசின் பெருந்தலேவனும் ஸ்டாலினுடன் கூடிப் பணி

யாற்றினர்-உலகில் ரஷியாவுக்கு ஓர் உயர் இடம், உரிய இடம் கிடைத்திடத்தான் போகிறது என்ற உறுதிப்பாடு, ஹிட்லரின் வீழ்ச்சியின் மூலம் ஏற்பட்டுவிட்டது! இனி எத்தர்கள் தம் சித்தம் போல் பேசி மக்களை ஏமாளிகளாக்கி விட முடியாது என்ற கட்டம் பிறந்துவிட்டது; பல்வேறு நாட்டுப் போர் வீரர்கள், சோவியத்தின் செஞ்சேனை வீரர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது; மிருக நிலை என்றனர், இவர்களோ, மென்மையான இதயம் படைத்தோராக உள்ளனர்—ஏதும் அறியாதவர்கள் என்று ஏளனம் செய்தனர், இவர்களோ எல்லாம் அறிந்து பேசுகின்றனர்; கலை அறியார் என்றனர், இவர்களோ ஆடலிலும் பாடலிலும் அகமகிழ்கிறார்கள்; ஆட்சியாளரின் கொடுமையால் இவர்கள் ஆமைகளாய் ஊமைகளாய் உள்ளனர் என்று கூறினர், இவர்களோ ஸ்டாலினைத் தமது ரட்சகர் என்று புகழ்ந்து கொண்டாடுகின்றனர், இல்லாமையை ஒழித்துக் கட்டிய ஆட்சிமுறையைக் காப்பாற்ற இன்னுயிரைத் தத்தம் செய்வதற்குத் தயாராக இருப்பதாகச் சூளுரைக்கின்றனர்; மாற்றானைத் தாக்கும்போது புலியாகின்றனர், நண்பர்களிடம் பழகும்போது குழந்தை போலாகின்றனர்! இவர்களா பாப பூமியினர்!! செச்சே! வீண் புரளி! வேண்டுமென்றே கூறப்பட்ட கட்டுக் கதை. நமது கண்களை மறைத்திட, கருத்தைக் குழப்பிட, காதகர்கள் கட்டிய பொய்யுரை! சோவியத் ஆட்சி, நல்லாட்சிதான், ஏனெனில் அங்கு மக்களின் மாட்சிக்கு மதிப்பு இருக்கிறது—என்று களம் சென்ற காளையர் கூறினர்; சோவியத் நாடு பற்றி இருந்துவந்த இருட்திரை பல்வேறு இடங்களில் கிழிந்தது—சமதர்ம ஆட்சியின் ஒளிக் கதிர்கள் மெல்லிய கோடுகளாக, உலகின் பல்வேறு இடங்களில் தெரியலாயின; மிகச் சிரமப்பட்டு அமெரிக்கா, தங்கத்திரையிட்டுத் தன் மக்களின் பார்வையை மறைத்து வந்தது—இன்றுங்கூடப் பெருமளவுக்கு இந்நிலைதான் அமெரிக்காவில்.

மீண்டும் ஓர் பயங்கரப் போரை மூட்டிவிட்டு வல்லரசுகள் தமது பலத்தை ஒன்று திரட்டி, ஏமாந்த நாடுகளைத் தமது முகாமுக்குள் இழுத்துப் போட்டுக்கொண்டு, எழிலும் ஏற்றமும் பெற்று, எவருடைய மனதையும் வசீகரித்தக்க முறையை வெற்றிகரமாக நடத்திக் காட்டிவரும் சோவியத் நாட்டின் மீது கடைசித் தாக்குதலை நடத்தவேண்டும் என்று திட்டமிட்டு, அமெரிக்கப் பேரரசு வள்ளல் வேடமிட்டுக்கொண்டு கிளம்பியது கண்டு, சோவியத் நாடு, இனியும் நாம் வாளாயிருத்தல் தேவையில்லை, வண்ணம் தனைக் காட்டுவோம், வலிவும் பொலிவும் பிறர் காணட்டும், நல்லோர் மகிழவும் நாசகாலர் மிரளவுமான நிலையை நாம் பெற்றிருக்கிறோம், இனி உலகி

னரே! காண்மின்! உயர்ந்த திட்டம் இது என அறிமின்!-என்று கூறிட நமக்கு இயலும், என்று பெருமிதத்துடன் பேசிடும் கட்டத்தில் நிற்கிறது.

இந்தக் கட்டத்தில் சோவியத் நாடு இருக்கும் நேரத்தில் புல்கானினும், குருஷேவும், இந்தியத் துணைக்கண்டத்திலே சுற்றுப்பயணம் செய்து, இங்குக் களிப்புச் சூருவளியைக் கிளப்பிவிட்டனர்—அது கடல் கடந்து பிரிட்டனேயும், அமெரிக்காவையும் மிரட்டிவிட்டது.

பத்து இலட்சம் மக்கள் கூடினர்! பதினறு மைல் வரையில் மக்கள்! கட்டுக்கடங்காக் கூட்டம்.

மலர் மலே போல! மக்கள் கூட்டம், கடல் போல!

ஆரவாரம் அலேபோல! ஆனந்தம், பெரு வெள்ளம் போல!

கண் கொள்ளாக் காட்சி! சரிதம் காணு வரவேற்பு!

இவைபோல, தயாரிக்கப்பட்ட தலேப்புகள் அல்ல, விளக்கம் வெளியிடுகின்றன, நாட்டிலே உள்ள ஏடுகளெல்லாம்; பட்டி தொட்டிகளிலும் புல்கானின், குருஷேவ்! என்று பேசுகின்றனர்; பார்த்தோர் பிறருக்குக் கூறுகின்றனர், அனேவரும் திருவிழாப் போலக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இவ்வளவுக்கும் வந்தவர்கள் ஈராண்டுகளுக்கு முன்புவரையில் இந்நாட்டுப் பொதுமக்களுக்கு அறிமுகமாகாதவர்கள்.

ஸ்டாலின் அல்ல, வந்திருப்பது—புல்கானின்—குருஷேவ்—ஸ்டாலின் வழி நிற்பவர்கள்—அவர் விட்டுச் சென்ற பணியினேத் தொடர்ந்து நடத்துபவர்கள்.

இங்கு டிட்டோ வருவதற்கு முன்பு, அவரைப் பற்றி மக்கள் தெரிந்திருந்த அளவுக்குக் கூட, புல்கானின், குருஷேவ் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்ததில்லே.

எனினும், சோவியத் நாடு, அதன்முறை, நெறி ஆகியவை பற்றி, ஏறக்குறைய ஒரு தலேமுறை கேட்டுக் கேட்டு, மக்கள் மனதிலே ஏற்பட்டிருந்த எழுச்சி இன்று வெள்ளம்போல் கரைபுரண்டோடிற்று—என் வாழ்நாளில் இவ்வளவு பெரிய கூட்டத்தை எங்கும் நான் கண்டதில்லே என்று எப்போதும் மாபெருங் கூட்டங்களேக் காணும் நேரு பண்டிதரே கூறத்தக்க வகையில் கூடிற்று.

சுகர்னேவும் யூநூவும், நாசரும் டிட்டோவும், இங்கு வந்தனர்—அவர்களெல்லாம் அந்தந்த நாட்டு நேருக்களாக இருப்பவர்கள். எனவே, நாட்டு விடுதலேக்காக வீரப்போரிட்ட தலே

வர்கள் என்ற முறையில் மக்களும் மக்களின் தலைவர்களும் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

ஈடனும் டல்லசும் வந்திருந்தனர்—அவர்களை மாளிகை வாசிகளும், அவர்களிடம், மக்களுக்குச் தம்மிடம் உள்ள பாசத்தைக் காட்டி, நண்பர்களாக்கிக் கொண்ட ஆளவந்தார் களும், மதிப்பளித்து வரவேற்றனர்.

நேபாள மன்னர் வந்தார், பிரியமாகத் தலைவர்கள் வர வேற்றனர், கவர்ச்சி மிக்க காட்சியைக் காண்போம், பொழுது போக்குக்காக என்ற அளவில் மக்கள் கூடினர்.

இதோ இப்போது சவுதி அரேபிய மன்னர் வந்திருக்கிறார் —உலகில் மிகப் பெரிய பணக்காரரில் அவர் ஒருவரா்ம்— எனவே அவரைப் பயம் கலந்த பாசத்துடன் வரவேற்று, மகிழ்ச்சியூட்டிட ஆட்சியாளர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர்.

புல்கானின் குருஷேவ் வரவேற்பின் போதோ மக்கள் இத யத்திலிருந்து அன்பு பொழிந்தது, வழிந்தது, காரணம், இவர் கள், ஆற்றலால் தியாகத்தால் நாட்டின் அடிமைத் தளைகளை உடைத்தவர்கள் என்று மட்டுமல்ல, உலகினுக்கே புதுமை யாகவும் புதிராகவும் பூத்திட்ட ஓர் புது ஆட்சி முறையை மக் களுக்கு ஒரு புதுவாழ்வு முறையை அமைத்திட, உலகக் கொடுங் கோலர்களை எதிர்த்து வீரமாகப் போரிட்டு வெற்றி பெற்ற பரம்பரையின் இன்றைய வாரிசுகள்.

எனவே இலட்சக் கணக்கிலே மக்கள் ஆர்வத்துடன் திரண்டனர்.

ஏழை என்றும் அடிமை என்றும் மனிதன் இடர்ப்படவும் இழிநிலை அடையவும் தேவை இல்லை, அது நீக்கமுடியாத விதி என்று வெட்டிப் பேச்சுப் பேசி வீண்பொழுது ஓட்டவேண்டிய தில்லை, ஏழையை வாழவைக்க முடியும், இல்லாமையைப் போக்கமுடியும், சீமான்களின் சீற்றத்தையும் மதத் தலைவர் களின் சித்தாந்தத்தையும் எதிர்த்து நிற்கும் அறிவாற்றல் மட் டும் கொண்டு, கஷ்டநஷ்டம் ஏற்கும் திறம் பெற்றுவிட்டால், ‘புதியதோர் உலகு செய்வோம்’ என்ற கவிதா வாக்கை, நடை முறைத் திட்டமாக்கிக் காட்டமுடியும் என்பதைச் சோர்விலா உழைப்பிற்குப் பிறகு சொல்லொணாத கஷ்டநஷ்டங்களை ஏற் றுக்கொண்டு வெற்றிபெற்று உலகினுக்குப் புதுப்பாடம் தந்த வர்கள் வருகிறார்கள்; நமக்காக ஓர் நல்லரசு முறை அமைத் திடும் வழிகாட்டியவர்கள் வருகிறார்கள்; மாளிகைகளிலே தான் மேதைகள் தோன்ற முடியும், கொலு மண்டபங்களிலே இருந்துதான் வீரர் கிளம்பமுடியும், ஏழை உழைத்திடுவான், ஆனால் உயர்ந்த திட்டம் தீட்டிடும் வகையறியான், பாடுபடு

வான், ஆனல் எம்முறையில் பாடுபட்டால் பலன் மிகுதியும் காணமுடியும் என்ற பக்குவம் அறியான், கூர்வாள் போன்ருன், திறம்பட உபயோகிக்கும் ஆற்றலை ஆண்டவன் சீமான்களிடம் மட்டுமே ஒப்படைத்து அருளினர், எனவே அந்தச் சீமான்கள் காட்டும் வழி நடந்தால்தான் ஏழையின் உழைப்புக்கே உயிரூட்டம் ஏற்படும், பெரும்போரிலே மாள ஏழையால் முடியும், ஆனல் பேரரசைக் கட்டியாள அவன் தகுதி பெற்றிடவில்லை, தயாபரன் அந்தத் தகுதியைத் தனவந்தர்களுக்குத்தான் தந்திருக்கிருர், என்று ஜெபமாலையினர், தூப தீப நைவேத்தியத்தின் துணைகொண்டு உபதேசம் செய்தனரே, அது புரட்டரின் பொய்யுரை என்பதைப் புவியறியச் செய்த புரட்சி வீரர்கள் வருகிருர்கள்—அவர்கள் ஆட்சி நடத்தும் நாட்டினிலே, வளமுள்ள வயல் இருக்கிறது, இங்கு போல—ஆனல், அவை மக்களின் உடைமை—தொழிற்சாலைகள் உள்ளன—அவை தம்மை உடைமையாகக் கொண்ட டாட்டாக்கள் இல்லை—உல்லாசக் கூடங்களிலே மானே! மயிலோ! அன்னமோ! அழகு நிலவோ! என்று வியக்கத்தக்க விதத்தில் அணங்குகள் உளர். ஆனல், அவர்கள் சீமான்களின் சிற்றின்பக் கருவிகளாக இல்லை, நாட்டுக் கலைக் கருவூலக் காவலர்களாக உள்ளனர்—மக்களின் நன்மதிப்பைப் பெற்று வாழ்கின்றனர்—என்ற உண்மையை அறியும்போது, இங்கு மட்டுமல்ல, எந்த நாட்டிலும் உள்ள மக்களின் மனதிலே ஆர்வம் அன்பாகப் பொங்கி வழியத்தான் செய்யும். “அதைத்தான், சென்னையும் கோவையும், பம்பாயும் டில்லியும் கல்கத்தாவும் போட்டியிட்டுக்கொண்டு காட்டின. பொற்காலம் பிறந்தது, பொல்லாங்கு மடிந்தது, புரட்டர் ஒழிந்தனர், புல்லர்கள் சாய்ந்தனர்; மக்களுக்கே உடைமை, மக்களுக்கே அரசு என்ற புதுத் திட்டத்தை நிலைநாட்டினர். இஃதோர் வானவில், காற்றினிலே மிதந்துவரும் கீதம், சின்னுட்களிலே மறையும், மடியும் —நாட்டு வளம் குன்றும், ஆட்சி ஆட்டம் கொடுக்கும், வாணிபம் நலியும், தொழில் துவளும், கல்வி கெடும், கலை மடியும், செய்வதெதுவெனத் தெரியாது, புயலில் சிக்கிய சிருர் போலாவர் தலைவர்கள் எனறு கூறினர், சென்றது இனி மீளாது என்பதை ஏற்க மறுத்திடும் உள்ளம் படைத்த உலுத்தர்கள். முப்பதாண்டுகளுக்கு மேல் உருண்டோடி விட்டன—முதலாளித்துவ நாடுகள் என்னென்ன வளம் காட்ட முடியும் என்று கூறினவோ, அவையாவும், மும்மடங்கு பெருகிய நிலையில் பொதுவுடைமை நாடு காட்டுகிறது. களிப்பும் கலையும், தொழிலும் தோழமையும் கைகோர்த்துக் கொண்டு நடமிடுகின்றன. வீரமா? உலகு வியக்கத்தக்க அளவில், தியாக உள்ளமா? கேட்போர் எழுச்சி பெறத்தக்க வகையில்! இந்த நிலை வந்தது, வாரீர்! காணீர்! கேளீர்!—என்ற நம்பிக்கையும் உற்சாகமும்

கலந்த குரலில், புல்கானினுலும் குருஷேவாலும் மக்களிடம் பேச முடிகிறது.

இரும்புத் திரையிட்டுள்ளனர் என்று பிறநாட்டார், குறிப்பாக வல்லரசுகள் பேசிய காலேயில், கொல்லன் உலேக்கூடத்து வெப்பம் போல, ரஷியாவின் புதுமுறை உருவாகிக் கொண்டிருந்தது என்று கூறலாம். இன்று வடித்தெடுத்த வாளேக் காண வாரீர், என்று புல்கானின் அழைக்கிருர்—வந்திடின் காண இன்னின்ன காட்சிகள் உள்ளன என்று குருஷேவ் பட்டியல் தருகிருர். எவரும் வரலாம், எம்மை மதிப்போரும் வரலாம், எமது முறையினேக் குறித்து மட்டமான கருத்துக் கொண்டோரும் வரலாம் என்று அழைக்கிருர்கள் ரஷியத் தலேவர்கள்.

நமது நாட்டு விவசாய மந்திரி பக்தவத்சலத்தைக் கூட அழைத்தார்களாம்.

பிறநாடுகளிலிருந்து இதுவரை வந்திருந்த தலேவர்கள் யாருக்கும் தரப்படாதவகையில் மக்கள், இவர்கட்கு வரவேற்பு அளித்தனர் என்பது மட்டுமல்ல, பிற எந்தத் தலேவரும், மக்களிடம் காட்டாத வகையில் அன்பையும் அக்கரையையும் இவர்கள் காட்டினர்.

இன்னிசை கேட்டு இன்புறுதல்

நாட்டியம் கண்டு மகிழ்தல்

குல்லாயணிந்து குதூகலப்படுவது

குங்குமப்பொட்டு வைத்துக்கொண்டு கும்பிடுவது

இளநீர் பருகுவது

நமஸ்தே கூறுவது!

இவைகளெல்லாம், பொதுவான முறைகள்—இங்கு வரவேற்கப்படும் யாருக்கும் ஏற்பாடாகும் உபசார முறையாகும்.

ஆனல் மக்களின் முகத்திலே ஓர் மலர்ச்சி, திருவிழாக் கோலம், தோழமை உணர்ச்சி—இவைகளே யார் தீட்ட முடியும், ஊட்ட முடியும்!

அது போன்றே, மக்களின் சார்பிலேயே எந்தக் காட்சியானுலும், சம்பவமானுலும், பொருளானுலும், பேச்சானுலும், ரஷியத் தலேவர்கள் கண்டனர், பேசினர், இங்கு வந்தது மக்களேக் காணவும் மக்களிடம் பழகவும் மக்களின் பிரச்சினேகளேப் பற்றிப் பேசவும், அறியவும்—என்ற நோக்குடனேயே அந்தத் தலேவர்களின் போக்கு இருந்து வந்தது.

குதுப்மினரையும், தாஜ்மஹாலேயும் ஜும்மா மசூதியையும் அமெரிக்க நாட்டுத் தலேவர்களோ பிரிட்டிஷ் பிரபுக்களோ

கண்டால், உடனே எத்தனை கோடி பவுன்கள் செலவாகியிருக்கும்—இவ்வளவு செலவிடத் தக்க நிலையில் பொன் பூத்திடும் பூமியாக இருக்கிறது இந்நாடு.........இது நம் ஆதிக்கத்துக்கு உட்பட்டால்...........என்று ஆசை ஊறும் நெஞ்சுடன் நிற்பர்!

பேசும் போதோ, இந்தியாவின் பண்டைப் பெருமையை, கலைத் திறனை, அழகினை நுகரும் அருந்திறனைப் பாராட்டுவர்.

புல்கானின், குருஷேவ் கண்டனர்—அழகொளியுடன் விளங்கிடும் அந்த அற்புதமான கட்டிடங்களைக் கண்டதும், அவர்கள் மனக்கண் முன்பு என்ன காட்சிகள் தெரிந்தன? இவைகளைக் கட்டுவதற்காக எத்தனை எத்தனை ஏழைகள், அடிமைகள், வேலை வாங்கப் பட்டிருக்க வேண்டும், மக்களின் பொருள் மன்னனிடம் எவ்வளவு மிகுதியாகக் குவிந்திருந்தால், இத்தகைய மணி மாடங்களும் கூடங்களும் கட்டித் தமது கீர்த்தியை நிலைநாட்டிட வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்—என்ற எண்ணங்களைக் கிளரத் தக்க காட்சிகளே தோன்றின.

பாரிஸ் பட்டினத்துக்காரனின் மனக்கண்ணில் இந்தக் காட்சியா தெரிந்திருக்கும்? ஆஹா! இவ்வளவு 'ரசிகத் தன்மை' கொண்ட பாதுஷாவின் அந்தப்புரத்தில் எத்தனை எத்தனை துடியிடை, காமக் களியாட்டத்தில் ஈடுபட்டுத் துவண்டதோ, சிரிப்பையும் சிருங்கார ரசத்தையும் சிந்திய சிட்டுகள் எத்தனையோ! சேல் விழியாள் பாதம் வருடிய பாதுஷாவின் கரம் செம்பஞ்சுக் குழம்பினைப் பூசியதால் பெருமைப் பட்டதோ அல்லது ஆலம் ஏற்ற விழிச்சியரின் அதரம் கொண்டிருந்த சிவப்பினை அவர் தம் கண்கள் கொண்டிட, அஃதறிந்து ஆவன செய்ததால், பிறகு அப்பப்பா! இனி ஆகாது! இது அடுக்காது! என்று எப்படி எப்படி அவள் கொஞ்சு மொழியில் கெஞ்சினளோ, என்னென்ன பானங்களோ, எவ்விதமான பளிங்குக் கிண்ணங்களோ...........எப்படி எப்படி இன்பம் கண்டனரோ...........என்று இவ்வகையில் எண்ணம் நெளியத் தக்க வகையான காட்சிகள் தான் தெரிந்திருக்கும்.

ரஷியத் தலைவர்களின் கண்களுக்கோ உழைத்து அலுத்த மக்கள், உப்பரிகையில் உலவிக்கொண்டு உத்தரவுப் பிறப்பித்த பாதுஷாக்கள்—இந்தக் காட்சிதான் தெரிந்தது.

குருஷேவ், இதனைக் கூறியும் விட்டார்!

வல்லரசுகளை நடத்திக்கொண்டு, வஞ்சகத்தைப் புன்னகையாலும் பூச்சாலும் மறைத்திடுவோருக்கு இது பண்பு குறைந்த பேச்சாகத் தென்படும்.

குருஷேவ், மக்களின் சார்பில்தான் பேச வேண்டும், அது மாளிகையின் இலக்கணமல்ல எனினும் பரவாயில்லை!—என்று துணிந்து கூறினர்.

பெரம்பூரில் கட்டப்பட்டுள்ள தொழிற்சாலையில், குருஷேவ், மக்களின் தலைவன், எதைக் கண்டறிய வேண்டும், கண்டறிந்ததை எங்ஙனம் கூறிடல் வேண்டும், என்பதை விளக்கிய முறையில் பேசிய பான்மை ஆச்சர்யகரமானது.

உமது முயற்சி பாராட்டத் தக்கது என்று கூறுவதற்கு அனுமதியளிக்கும்படி தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் மனமுவந்து சம்மதம் அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் நான் கூற விரும்புகிறேன்—என்று இவ்வண்ணம் சொல்லரண் கட்டி, கருத்தை மறைத்திடும் போக்கிலே தான் பிறநாட்டுத் தலைவர்கள் பேசுவர், பூசுவர்! குருஷேவ் அவ்விதமல்ல; "எம் பொருட்டு இந்தத் தொழிற்சாலையை அமைத்திருப்பதாகக் கூறுகிறீர்கள்—குருஷேவ் அவர்களே! தயவு செய்து அதனைப் பார்வையிட்டு, அதிலே குற்றம் குறையிருப்பின் எடுத்துக் கூறுக!" என்று மக்கள் கேட்டுக் கொண்டு, அனுப்பி வைத்திருப்பது போலவே, குருஷேவ், பெரம்பூர் தொழிற்சாலையைப் பார்த்துவிட்டு, சிறிதளவு கோபமாகவே,

செச்சே! ஏன் இப்படி கட்டிட வேலைக்கு எஃகு உபயோகித்தீர்கள்—

இது வீண் நஷ்டம்! பாழ்படுத்தி விட்டீர்கள்.

இங்கு உபயோகித்திருக்கும் எஃகிலே முக்கால் வாசியை மிச்சப்படுத்தி யிருக்கலாம்.

சிமிட்டியில் கட்டியிருக்கலாம்.

எஃகு பாழாக்கப் பட்டு விட்டது,

என்று கண்டித்து விட்டார். தொழிற்சாலை அதிகாரிகள் சமாதானம் கூற, சமர்த்துடன் முயற்சித்தனர். குருஷேவ் சம்மட்டியடி கொடுப்பது போல,

என்மீது கோபித்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்.

இது போல, எந் நாட்டிலேயும் சொல்லுகிறேன்.

எமது நாட்டில் இவ்விதம் எஃகு பாழாக்கப் படுவதில்லை.

வந்து பாருங்கள், எமது நாட்டினை என்று கூறினர்.

எவ்வளவு பிரமாண்டமான கட்டிடம்!

எத்தனை உற்சாகத்துடன் வேலை நடக்கிறது.

எல்லாம் என் ஆட்சியில், என் திட்டப்படி!—என்ற முறையில் தான் நேரு பண்டிதரே பெரம்பூர் தொழிற்சாலையைப் பார்த்தார், பூரித்துப் போனர், பாராட்டுரை வழங்கினர்; இங்கு எஃகு இவ்வளவு பாழாக்கப்படுகிறது என்பதை அவர்

கண்டறியவுமில்லை, அவருடைய கருத்து அவ்வழி செல்லவுமில்லை.

நேரு பண்டிதரும், பிறநாடுகளிலே காணப்படுகிற பெருந்தலைவர்கள் போலவே, நாட்டிலே அணை வேண்டும் தேக்கம் வேண்டும், தொழிற்சாலைகள் வேண்டும் என்பது பற்றியும், தம்மாட்சியிலே இத்தகைய "வெற்றிகள்" உருவெடுக்க வேண்டும் என்பது குறித்துந்தான் எண்ணுகிறாரே தவிர, இவைகள் மக்கள் சார்பிலே நடத்தப்படுகின்றனவா, மக்களின் பொருள் பாழாக்கப்படாமல் இருக்கிறதா, என்பது பற்றிய அக்கரையைச் செலுத்தக் காணோம். அவருக்கு மலைகள் எல்லாம் மலர்த் தோட்டங்களாக வேண்டும் என்ற ஆசை இருக்கிறதே தவிர, மந்திகள் அங்கு நுழைந்து பாழாக்கா வண்ணம் அரண் அமைக்க வேண்டுமே என்பது பற்றிய, எண்ணம் எழுவதில்லை.

"என் திறமையை மா மன்னா! கூறிடப் பெருமைப் படுகிறேன். கேட்டிடின் தாங்களே பூரிப்படைவீர்கள்" என்றான் மல்லன்.

மாமன்னன், "கூறு, கேட்டிடுவோம், வீரச் செயல் யாது செய்தனை?" என்றான்.

"ஒரே அறை—கன்னத்தில், காவலா! ஒரே ஒரு அறைதான், அதுவும் இலேசாகத்தான்—பற்கள் முப்பத்திரண்டும் பொல பொலவெனக் கீழே உதிர்ந்தன" என்றான் மல்லன்.

"பளா! பளா! ஒரே அறையில் 32 பற்களும் உதிர்ந்தனவா? அருமை! அருமை! அமைச்சரே! மல்லன் செய்ததைக் கேட்டீரோ? தங்கத் தோடா, முத்து மாலை பரிசு அளித்தோம்" என்றான் மாமன்னன்.

அமைச்சர் குறுக்கிட்டு, "அரசர்க்கரசே! மல்லன் திறம் கண்டு மகிழ்வது சரியே; பரிசுக்குரியவன் எனத் தாங்கள் உரைத்ததும் மன்னர்க்கழகுதான்; ஆனால், ஒரே அறையினால் எல்லாப் பற்களையும் இழந்தவன் யார் தெரியுமா?" என்று கேட்டான்.

மாமன்னன், "ஆமாம், ஆமாம், அதை மறந்தேன். யார் அவன்?" என்றான்.

மல்லன் திகைத்தான்.

அமைச்சன் கூறினான், "மன்னவா! மல்லன், தன்மதி மிக்க மகனுடைய பற்களைத்தான் அங்ஙனம் உதிரச் செய்தான். அவன் குற்றம் ஏதும் செய்யாதவன் குடித்துப் புரளும் தந்தையைக் கண்டித்தான்-கோபத்தால் மல்லன் இக்

கொடுஞ் செயல் புரிந்தான். இதற்கோ பரிசு'' என்று கேட்டான். மன்னன் வெட்கித் தலைகுனிந்து, மல்லனைத் தண்டித்தான்.

கதை தான்! ஆனால் கடைசியில் தண்டனை கிடைக்கிறது, தகாத செயல் புரிந்து விட்டு அதனைத் தம் தீரத்துக்குச் சான்று என்று பேசிய மல்லனுக்கும்......பாரதத்தின் முடிசூடா மன்னனே ஜீப் ஊழல், உரபேர ஊழல், மாளிகை வாங்குவதில் ஊழல், என்று அடுக்கு அடுக்காக, தன் ஆட்சியிலே ஊழல்கள் நடந்து கொண்டிருப்பது பற்றி அக்கரையே காட்டாமல், ஒரே அறையில் 32 பற்களும் வீழ்ந்ததா! என்று வியந்திடும் நிலையில் இருக்கும் போது, பெரம்பூரில் எஃகு பாழாக்கப் படுவது பற்றியா அக்கறை காட்டுவார்! குருஷேவ் வந்து அல்லவா இதைக் கூறிக் கண்டிக்க வேண்டியிருக்கிறது.

மக்களை ஆள்வது என்பதற்கும் மக்களாட்சி நடத்துவது என்பதற்கும், உள்ள வித்தியாசம் நன்கு தெரியத்தானே செய்கிறது.

நேருவுக்கும் குருஷேவ்வுக்குமே, மனப்போக்கிலும் கண்ணோட்டத்திலும் இந்த வகையான மாறுபாடு இருக்கிறது என்றால், தங்கத்திரைக்குப் பின்னாலே வீற்றிருக்கும் அமெரிக்கத் தலைவர்களுக்கும் குருஷேவ்வுக்கும் மனப்போக்கிலே உள்ள வித்தியாசம், சாமானியமானதாகவா இருக்கும்!

"என்னவென்றே எனக்குப் புரியவில்லையே! இந்த ஜனங்கள் ஏன் இப்படி இந்த ரஷியத் தலைவர்களை வரவேற்கிறார்கள். என்ன தந்தார்கள் இந்த ரஷியத் தலைவர்கள்? என்ன தரமுடியும்? ஒரு இரும்புத் தொழிற்சாலை அமைத்துத் தர இசைந்திருக்கிறார்களா! அதற்கும் இந்தியா, 47 கோடி ரூபாய் தரவேண்டுமாம்; அமெரிக்கா இதுவரை இந்தியாவுக்குக் கொடுத்துள்ள தொகையின் அளவையும் செய்திருக்கும் உதவியின் வகையையும் ஒப்பிடும்போது, ரஷியர்கள் கொடுத்தது சுண்டைக்காய் அளவுதானே இருக்கிறது! இருந்தும், இவ்வளவு அமோகமாக வரவேற்கிறார்களே! காரணம் தெரியவில்லையே!"

லெஸ்டர் பியர்சன் என்ற கனடா நாட்டு மந்திரி இந்தக் கருத்துப்பட, நியுயார்க் நகரில், இந்தத் திங்கள் 28ந் தேதி பேசினார்.

காரணம் தெரியவில்லையாம்—எப்படித் தெரியும்? தங்கத் திரை கண்ணை மறைக்கிறது.

தங்கத்திரை கண்ணைப் பறிக்கும்வகையில் அமைந்திருக்கிறது. அமெரிக்காவும் அதன் ஆதீனத்திலே சிக்கிக்

கொண்டுள்ள நாடுகளும், அந்தத் திரையின் தகத்தகாயத்தைக் கண்டு சொக்கிக் கிடக்கின்றன.

பியர்சன், இந்தப் பொன்னொளி கண்டு மயங்காமல் சோவியத் தலைவர்களிடம் ஏன் சொக்கிப் போகிறார்கள் இந்த மக்கள் என்று கேட்கிறார்.

இரும்புப் பெட்டியைத் திறந்து காட்டுகிறது அமெரிக்கா! இதயத்தைத் திறந்து காட்டுகின்றனர் ரஷியத் தலைவர்கள் !!

காரணம் கேட்கிறாரே, பியர்சன், காரணம் இதுதான். ஆனால் இதை அவர் போன்றார் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்—ஏனெனில் அவர்கள் இன்னமும் இரும்புப் பெட்டியிடம் அச்சத்தால் ஆசை கொள்பவர்களாக உள்ளனர்; அது மட்டுமா, நேரு பண்டிதரும் இரும்புப் பெட்டிக்காரரின் தோழமையை இழக்க விரும்பாத ஆட்சி முறை நடத்துபவர்தானே என்ற எண்ணம் வேறு, பியர்சன் போன்றாரின் உள்ளத்தைக் குடைகிறது.

இரும்புப் பெட்டிக்கும் இதயத்துக்கும் உள்ள வேறுபாடும் முரண்பாடும் கூறிட ஆசை எழுகிறது, ஆனால், தம்பி! அடிகள் கோபிக்கிறார், இடம் இல்லை என்று, எனவே அடுத்த வாரம் பார்ப்போம்.

அன்புள்ள,

*4—12—1955*

அண்ணாதுரை

கடிதம் : 29

# உன்னால் முடியும்

* புயலின் கொடுமை—மக்கள் துன்பம்—
கழகப் பணி.

தம்பி,

எந்தப் பிரச்சினையும் நினைவிற்கு வரவில்லை; நெஞ்சமெலாம் துக்கம் துளைத்தெடுக்கிறது—திகைப்பு தாக்குகிறது—வேதனைப்படு! வேதனைப்படு! வெற்றி ஒளியின் கீறல்களைக் காண்கிறேன்! உள்ளத்தில் உறுதிகொண்டோரின் அணி வகுப்பு காண்கிறேன்! விடிவெள்ளி காண்கிறேன்! என்றெல்லாம் எக்களித்துக் கிடக்கும் ஏமாளியே! வேதனைப்படு! வேத

னைப்படு! ஒன்ரு இரண்டா உனக்கு வந்துறும் துயரங்கள்! எதை எதைத் தாங்க வேண்டும் என்பதறியாமல் ஏதேதோ பேசிக் கிடக்கிருயே! பித்து மனம் கொண்டோனே! இதோ பார் உன் கண்ணெதிரே, வெறிநடமிடும் அழிவினை!—என்று கொக்கரிக்கிறது நிலைமை. கண்களைத் திறந்து கிடப்பினும், மூடிக் கிடப்பினும், பேசாது கிடப்பினும், ஏதேனும் பேசிக் கொண்டிருப்பினும், தனிமையிலமர்ந்து தாங்கிக்கொள்ள முயற்சித்தாலும், துக்கத்தைப் பகிர்ந்துகொள்ளப் பிறருடன் பேச்சில் ஈடுபட்டாலும், பெற்ருேரின் பேரன்பு, துணைவியின் கொஞ்சுமொழி, குழந்தைகளின் மழலை, இசை, இன்ப நினைவு கள், எதைத் துணைக்கு அழைத்தாலும், எல்லாம் தோற்ருேடு கின்றன, துக்கம் எல்லாவற்றையும் துரத்தி அடிக்கிறது— இமை திறந்திருப்பினும் மூடிக் கிடப்பினும், எதிரே தெரிவ தெல்லாம் பேய் மழை, சூறைக் காற்று, கடற்கொந்தளிப்பு, பிணக்குவியல், அழிவு, அழிவு!

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்—தம்பி! ஆயிரம் முறை கூறுவேனல்லவா இதனை! தாங்கிக்கொள்ள பழகிக் கொண்டுகூட இருக்கிறேன்—எனக்கென்று வரும் ஆபத்து, துக்கம், இழிமொழி, இன்னல், பழி இவைகளை. ஆனல், இது தம்பி! என்னல் மட்டுமல்ல, எவராலும் தாங்கிக்கொள்ள முடியாத பேரிடி! நூற்றுக்கணக்கான கிராமங்களே காணேமே! நகரங்கள் பலவும் களத்தில் படுகாயமுற்றுக் கிடக்கும் வீரர்போல! ஆயிரம் பேர் கொல்லப்பட்டுப் போயினராம்! ஐயகோ! எப்படி இதைத் தாங்கிக்கொள்ள இயலும்? எதை எண்ணி இதயத்துக்குச் சாந்தி தேடிக் கொள்ள முடியும்? யாரை நோவது? யாரைச் சுட்டிக் காட் டிச் சாடுவது? தாமரை பூத்த தடாகமான தஞ்சையில், வெள் ளத்தில் அழுகிய பிணங்களடா தம்பி! பிணங்கள்! பேசி விட்டுப் படுத்திருப்பான், கொஞ்சிக் குலாவிவிட்டுப் படுத் தாள் பாவை, மார்புடன் அணைத்துக்கொண்டாள் மதலையை, வெண்ணெய் காய்ச்சின நெய் கலந்த சோறு காணுவிடினும், அன்னையின் அன்பு கலந்த உணவினை உண்டு உறங்கினர் சிருர்—அவர்களைச் சூழ, அவர்தம் உழைப்பினைப் பெற்று, செந்நெற் பயிர் ஆடிக் கிடக்கிறது, 'இளநீர்' சுவையுடைய தாக இருக்கலாம், தென்னையே! நீயோ, அதனைச் சுலபத்தில் மக்களுக்குத் தர மனமின்றி உயரத்தில் வைத்துக்கொண்டு கிடக்கிருய், நான் அவ்விதமல்ல, என் உள்ளம் இளகியது, இதோ பார், கனிகளைப்பெற வருபவருக்குக் கஷ்டம் அதிகம் தரக்கூடாது என்று எந்த அளவில் நிற்கிறேன்!—என்று கதலி தென்னைக்குக் கூறுகிறதோ என்று எண்ணத்தக்க நிலையில்! நாளைக் காலையில் இதைச் செய்யவேண்டும், இவ்விதம் செய்ய

வேண்டும் என்று—பேசிவிட்டுப் படுத்தனர், உழைத்திடும் அந்த உத்தமர்கள். அந்தோ ! அந்தோ ! அவர்கள் காலையில் கண்டது கதிரவனை அல்ல—அவர்களைக் காலைவரையில்கூட விட்டுவைக்கவில்லை சாவு, பற்றி இழுத்துக்கொண்டு சென்று சின்னாபின்னமாக்கிவிட்டது. கடலிலே கொந்தளிப்பு ! பேய்க் காற்று வீசுகிறது, பெருமரங்கள் சாய்கின்றன வேரறுந்து ; தோப்புகள் சிதறுகின்றன !—பெருமழை பெய்கிறது—இருள் கப்பிக்கொள்கிறது—வயலெல்லாம் ஏரிகளாகி, ஏரிகளெல் லாம் கடலாகி, வாய்க்கால்களெல்லாம் ஆறுகளாகி, ஆறுக ளெல்லாம் அழிவு தருவனவாகி, எங்கும் வெள்ளக் காடா கிறது ! தூக்கம் கலையுமுன் பேரிடி மனதைப் பிளக்கிறது—உயிர் காத்துக்கொள்ள முயற்சிக்கு முன்பு உருத் தெரியாதபடி, வெள்ளம் மக்களைக் கொள்ளை கொள்கிறது. தம்பி ! நாசம் விளைவித்துள்ள அளவுமட்டுமல்ல, அதன் வேகம் திடுக்கிட வைப்பதாக இருக்கிறது. எனவேதான், இத்தனை அளவு உயி ரிழப்புகள்—பொருட்சேதம்—அழிவு.

கடல்நீர் ஊருக்குள் படை எடுத்தால், கதிகலங்கிப் போகாமல் என்ன செய்ய இயலும்—எட்டடி பத்தடி உயரத் துக்கு எழும்பி, பேரிரைச்சலுடன் அலைகள் ஊருக்குள்ளே படை எடுக்கும்போது, பீதி போதும் கோழைகளுக்கு, நமது உடன் பிறந்தோர் வீரமாகப் போரிட்டுப் பார்த்திருக்கிறார் கள்—ஒன்றைச் சமாளிப்பதற்குள் மற்றொன்று—என் செய் வர்—கடல் அலைக்குத் தப்பிட, ஒதுக்கிடம் தேடிச் செல்லலா மென்றாலோ, பாதைகள் அழிந்து பட்டுப்போய் எங்கும் வெள்ளம், பெரு மழை தாக்கிய வண்ணமிருக்கிறது, பேய்க் காற்று வீசியபடி ! இந்த நிலையில் வீசி எறியப்பட்டவர்கள், மூழ்கி மூச்சுத் திணறிப் போனவர்கள், மோதி நசுக்குண்டவர் கள், அம்மவோ ! எண்ணும்போதே, செவிகளில் பேய்க் காற் றின் கூச்சலையும் மீறிக்கொண்டு கிளம்பும், கதறல் கேட்கிறது. அந்தோ ! என்ன எண்ணினரோ, எதை எதை எண்ணிக் கொண்டனரோ, விபரீதம் விளைவித்த அந்த விநாடியின் போது. குழந்தைகள், மந்தி கரம்பட்ட மலராகிவிட்டன ! சிறுமதி படைத்தோரிடம் சிக்கிய செல்வம்போல, தமிழகத் தின் உண்மைச் செல்வங்களாம் நம் சிறார்கள், சின்னாபின்ன மாகிவிட்டனர். பெரியவர்களோ ! பேய்க் காற்றினால் முறிந்து போயினர். தஞ்சையும் இராமநாதபுரமும், இந்த அழிவுக்கு இலக்காகி, நொந்து கிடக்கின்றன. நமது நெஞ்சம் வெடித் திடும் நிலையில் இருக்கிறது. இதை எங்ஙனம் தாங்கிக்கொள்ள முடியும் !

எரிமலை, நெருப்புக் குழம்பினைக் கக்கும்—பொறி நூறு மைல்களுக்கு அப்பாலும் தெரிக்கும்—தீயிலே நகரங்கள் கரு

கும், சூழ இருந்த சுந்திரபுரிகள் யாவும் சுடுகாடுகளாகும்!—என்று இன்னுமோர் திங்களுக்குப் பிறகு, எவரேனும், வெசுவசயஸ் எரிமலை குறித்தோ, ஜப்பான் நிலை பற்றியோ கூறினால்—ஆமாம்! அந்த அழிவு பயங்கரமானதுதான் அத்தகைய ஆபத்திலே சிக்கிக் கொள்வதென்றால், கொடுமைதான் என்று கூறிட முடியும்—மக்கள் சமுதாயம் இதுபோன்ற அழிவுகளை ஓரோர் சமயம் சமாளித்துத் தான் தீரவேண்டி இருக்கிறது, என்ன செய்வது, கடற்கொந்தளிப்புக்கும், கடும்புயலுக்கும், நில நடுக்கத்துக்கும் எரிமலைக்கும், ஆபத்து கக்கிடும் எண்ணற்ற பல நிலைமைகளுக்கும் இடையிலேயேதான் மனித சமுதாயம் நிற்க வேண்டி இருக்கிறது, என்று பேசிடக்கூட இயலும். ஆனால் இன்று? மனம் வேலை செய்ய மறுக்கிறது! ஏடுகள் பலவற்றிலே நாடுகள் சிலவற்றிலே நேரிட்ட அழிவுகள் பற்றிப் படித்த நினைவுகூட நசித்துப் போகிறது—நெஞ்சம் வேதனை ஒன்றைத் தவிர வேறெதனையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் வீசியது புயலல்ல—சிறிதளவு வேகமாக வீசிய தென்றல் என்று கூறத் தோன்றுகிறது, இதுபோது நேரிட்டிருக்கும் 'அவதி'யைக் காணும்போது. தென்னையும் வாழையும் அழிந்தது அதிகம் அப்போது—உயிர்ச்சேதம் அதிகமல்ல; இப்போது உயிர்ச் சேதம், கேட்போர் உள்ளத்தை உடைத்திடும் அளவில். கிராமம் கிராமமாக அழிந்து கிடக்கின்றன! பிணமலை! கால்நடைகள் அழுகிக்கிடக்கின்றன. புதைக்கு முன்பு, இன்னின்னார் என்று அடையாளம் கண்டறியக்கூட முடியாத நிலையில், உடலங்களாகி விட்டனவாம். காலமெல்லாம் உழைத்து உழைத்து, ஊரை வாழ வைத்து வந்த உத்தமர்களே, மிக அதிகமான அளவில் நாசத்துக்குப் பலியாகி இருக்கிறார்கள், அவர்கள் தானே, பாபம், கடலோரத்தில் குடில்கள் அமைத்துக்கொண்டு வதிகிறார்கள்—செல்வம் படைத்தோர், கடலிடம், உள்ளத்துத்துக்கு உற்சாக மூட்டும் காற்றினையும், முத்துக்களையும் மட்டும் பெற்றுக்கொண்டு, பாதுகாப்பு அரண் அமைத்துக் கொண்டு வாழ முடிகிறது—இந்த ஏழைகள் கடலிடமிருந்து பெறுவது அலைகளைத் தானே! இதுபோது, அவதியே அலை அலையாக வந்துள்ளது. கடல், சாவினையே அலையாக்கி அவர்மீது ஏவி இருக்கிறது. காற்று சிறிதளவு பலமாக வீசினாலே போதும், குடில்கள் கூளமாகிவிடும்! மழையின் அளவு சிறிது அதிகமானாலே போதும், குடில்கள் மிதந்துகிடக்கும் நிலை ஏற்பட்டுவிடும். இப்போது, நாட்டுவளத்தை அழித்திடவே, கடற்படையும், காற்றுப் படையும், மழைப் படையும் தாக்கினவே, என் செய்வர், எளியோர்—பிணமாயினர்—அழுகிக் கிடக்கின்றன உடலங்கள்.

சேரிகள்—பரதவர் குடில்கள்—பட்டாளிகளின் குடிசைகள்—உழவர் உழன்று கிடக்கும் குச்சுகள்—இவை யாவும் நாசமாகிவிட்டன—அந்த உத்தமர்களிலே நூற்றுக் கணக்கானவர்கள் மாண்டு போயினர்—மீதமிருப்போருக்கு வீடில்லே, வயலில்லே, உயிர் இருக்கிறது, உள்ளத்தில் திகைப்பின்றி வேறெதுவுமில்லே—ஆனல் தம்பி! நமது முதலமைச்சர், காமராஜர், அவர்கள் மத்தியில் இருக்கிருர்! பொறுப்புணர்ந்த ஆட்சி முதல்வர், இருக்க வேண்டிய இடம்! ஆம்! அங்கு பெரிய அதிகாரிகள் புடைசூழ இருக்கிருர், பெருநாசத்துக்கு ஆளான மக்களின் கண்ணீரைத் துடைத்திடும் காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிருர், என்பதை எண்ணும்போது, கொந்தளித்தெழுந்த கொடுங் கடலே! குடும்பங்களே அழித்த பேய்க் காற்றே! மக்களே அழிவிலே மூழ்கடித்த பெரு மழையே! அழிவினே, இரக்கமின்றி எம்மீது ஏவினீர்—கர்வம் கொள்ளற்க—பிணமலே கண்டு பெரு வெற்றி கொண்டுவிட்டோம் என்றெண்ணிப் பேயுள்ளம் கொள்ளற்க—அழிவு ஏவினீர்—இதோ எமக்கு ஆறுதல் அளிக்க, எமது முதலமைச்சர் வந்துள்ளார்! எமது கண்ணீரைக் காணுகிருர், தமது கண்ணீரைச் சிந்துகிருர், அழிவு சூழ் இடங்களில் ஆறுதலே அள்ளித் தருகிருர்! கோட்டையில் அமர்ந்து கொண்டு, 'உத்தரவுகள்' போடும் முதலமைச்சர் அல்ல இவர்! ஆண்டவன் கோபத்தாலே நேரிட்ட சோதனே என்று பேசிடும் பூஜாரி அல்ல! நமது ஆட்சியின் போது இந்த அழிவு வந்துற்றதே, என்று உளம் பதைத்து, பறந்து வந்தார், எமக்கு வாழ்வளிக்க—என்று மக்கள் எண்ணி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிருர்கள்; தம்பி! சொல்லத்தானே வேண்டும். முதலமைச்சர் காமராஜரின் பொறுப்புணர்ச்சி கண்டு நாம் பெருமைப் படுகிறேம். அளவு குறைவு—முறை குறையுடையது—என்று நிபுணர்கள் பேசக்கூடும் நாலாறு மாதங்களுக்குப் பிறகு, ஆனல் முதலமைச்சரின் இதயம் தூய்மையானது, ஏழை எளியோர்பால் அவர் இதுசமயம் காட்டிய அக்கரை தூய்மையானது என்பதை எவரும், எந்நாளும் மறந்திட மாட்டார்கள்—இயலாது.

வளம் கொஞ்சும் தஞ்சை, வாளே துள்ளும் வாவிகளும், கெண்டை புரளும் ஆறுகளும், கமலம் முகம் காட்டும் கழனிகளும், என்றெல்லாம் நாவலரும் பாவலரும் பன்னெடுங்காலமாகவே பாட்டு மொழியால் பாராட்டியுள்ளனர். அங்கு இப்போது பிணமலே.

பேயா மழை பேயுது, பெரிய வெள்ளம் வருகுது! ஆனல் எல்லாம் வேற்றுச் சீமைகளில், எங்கள் தரணிக்கும் மழைக்கும் நீண்ட காலமாகவே பகை நெளிகிறது என்று அவலச்

சுவைபடக் கூறுவர், இராமநாதபுரம் மாவட்டம் குறித்து, அங்கு இப்போது, வெள்ளக்காடு! காமராஜர் காண்கிறார், கண்ணீர் உகித்திடாமலிருக்க முடியுமா. உபநிஷதம் படித்து உள்ளத்தைப் பாறையாக்கிக் கொண்டவர்கள் தவிர, மற்ற எவரும் மனம் உருகிடத்தான் செய்வர்—நிலைமைகண்டு.

நமது அண்ணன் தம்பிகளின் குடும்பங்கள் ஆலாய்ப் பறக்கின்றன—அழுகுரல்! பிணங்களைத் தேடித்தேடி எடுக்கிறார்களாம்! உருவமே தெரியாதபடி அழுகிப் போய்விட்டனவாம்! தினசரி வரும் செய்திகளைக் கேட்கத் திகைக்கிறோம். தாயை இழந்த தனயர்கள், பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் ஜோடி ஜோடியாகப் பலர், தூங்கியோர் தூங்கிய நிலையில், ஒதுங்கி ஒண்டினோர் கூண்டோடு, குழந்தைகள், வாலிபர்கள், வயோதிகர்கள்—இவ்விதம், நூறு நூறாகச் செத்துக் கிடக்கிறார்களாம்,—தென்னஞ் சோலைக்குள்ளும், இடிந்து விழுந்த வீடுகளுக்கடியிலும், செய்திகளை அறிய, அறிய திகைக்கிறோம்—செய்வதென்ன வென்றறியாது விழிக்கிறோம்—தென்னகம் இதுவரை இப்படியொரு கோரத்தைச் சந்தித்ததில்லை. கடல் நீர், ஊருக்குள்ளே! பச்சை பசேலெனக் காட்சி தரும் நன்செய் எல்லாம் வெள்ளக்காடு! வள்ளல் தருக்களாம் தென்னந்தோப்பைக் கொண்டு வயிறு கழுவும் பட்டுக்கோட்டை முத்துப்பேட்டை வாசிகள் பரிதவிக்கிறார்கள்! உப்பளம் வேதாரண்யம்—ஒரு செய்தியையும் அங்கிருந்து தெளிவாகப் பெற முடியாத நிலை. மதுரை, திருச்சி, இராமநாதபுரம்—ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், நெஞ்சு வெடிக்கத்தக்க நிகழ்ச்சிகளைப் போய் பார்த்த மதுரை மாவட்டச் செயலாளர் முத்துவும், திருச்சி மாவட்டச் செயலாளர் தர்மலிங்கமும் எழுதுகிறார்கள். இளங்கோ, தஞ்சை மாவட்டச் செயலாளர், என்ன நிலையிலிருக்கிறார் என்றறிய தபால் போக்குவரத்தே இல்லை. மூன்றாண்டுகளுக்கு முன்பு இயற்கையின் நாச நர்த்தனத்துக்கு ஆளாகி அவதிப்பட்டனர்—மக்கள். அதே மக்களுக்கு அதை விடப் பெரிய பேரிடி! கட்டுமரம் கட்டிச் சென்று, கடலை அளந்து, மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் எத்தனைபேர் எங்கே போனார்கள் என்றும் திகைப்பாயிருக்கிறதாம்! அவர் தம் கலங்கள் உடைந்து, ஊருக்குள் வந்து கிடக்கும் படங்களைப் பார்க்கும்போது, வயிறு எரிகிறது! வளைந்து கிடக்கும் மின்சாரக் கம்பங்கள்—தூள் தூளாகிப் போன நெல் ஆலைகள்—பள்ளிக்கூடங்கள்—ஏழை ஆதித்திராவிடச் சேரிகள்—ஐயோ, நாசம்! நாசம்! படுநாசம்!!

துயர்துடைக்க ஓடிய முதலமைச்சரையும், அதிகாரிகளையும், பொதுமக்கள் தொண்டர்களையும் பாராட்டுகிறோம், தத்தமது கடமையைச் சரியான சமயத்தில், தவறாமல் செய்தார்

களே எனும் மகிழ்ச்சியால். இந்த உதவிகளும் இல்லாது போனுல், என்னுகி யிருப்பரோ நம்மவர்கள் என்றெண்ணும் போது, பெருமூச்சு விடுகிறோம். அந்தக் கோரத்தை எண்ணவே முடியவில்லே.

ஏற்பட்டிருக்கிற நாசம் சாதாரணமானதல்ல—எங்கோ ஓரிடத்தில் தோழர் காமராஜரைக் கேட்டதற்கு, "இறந்துப் போனவர்களேப் பற்றி, எதுவும் செய்ய முடியாது சர்க்காரால். உயிரோடிருப்பவர்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனேயையும் செய்துதரும்" என்று சொன்னுராம், உண்மை தான்! இயற்கையின் பல்லுக்கு இரையான நமது மக்களின் வாழ்வை, இனி எப்படிப் பெறமுடியும் எம்மால்? அவர்களுக் காக. வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவதி யுறுவோரின் அச்சத்தையும் துக்கத்தையும் ஆற்ற நம்மாலான முயற்சிகளே எடுக்க வேண்டும்! ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தை எண்ணிடிலோ, உதவி, பெயரளவில் இருந்தால் போதாது—ஒருவர் இருவர் வழங்கிவிட்டாலும் போதாது—சர்க்கார் பெருத்த அளவில், பலகோடி ரூபாய்களே, ஒதுக்க நேரும் என்றே கருதுகிறோம். இடிந்து போன கட்டிடங்கள், அதோ நிற்கின்றன. அதற்கருகில், அழுதவாறு கிடக்கிருர்கள், வீட் டின் சொந்தக்காரர்கள். விவசாயி, அழுகிருர்—இடுப்பொடி யப் பாடுபட்டேன்—கதிர் முளேத்த காலேயில், என் கழனி வெள்ளக் காடாகிவிட்டதே ஐயா, எப்படி காலந்தள்ளப் போகிறேன்—'கிஸ்தி' எப்படிக் கட்டப்போகிறேன் என்று—தென்னஞ் சோலேயையும், வாழைத் தோட்டங்களேயும் நம்பி வாழ்ந்தோர் அதோ மடமடவெனச் சாய்ந்துவிட்டதே எமது வாழ்க்கை. ஐயகோ, என்று நிற்கிருர்கள். இவர்களனே வருக்கும், உதவியளிப்பது என்ருல், சதாரணமான காரிய மல்ல. பல குடும்பங்களிலே புதிதாக விளக்கு ஏற்றிவைக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டுவிட்டது, அவ்வளவு பெரிய நாசம்.

மூன்ருண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட அவதி கண்டு உளம் பதைத்த நாம், நமக்கு நாட்டிலே உள்ள வாய்ப்புக்கு ஏற்ற முறையில் ஓரளவு பணியாற்றி ஏறத்தாழ முப்பதாயிரம் திரட்டி ஏழை எளியவர்களுக்கு ஆடைகள் வாங்கி, சர்க்கார் மூலமாகவே அனுப்பிவைத்தோம். இது போது நேரிட்டுள்ள நாசத்தின் அளவைப் பார்க்கும் போது, அவதியுறும் மக்க ளுக்கு வாழ்வளித்திடவும், அழிவு தந்த புண்களே ஆற்றிடவும், விபத்தால் ஏற்பட்டுள்ள வடுக்களேப் போக்கிடவும், பலமும் மக்கள்பால் பரிவும்கொண்ட சர்க்காரன்றி, வேறு எந்த தனிப்பட்ட அமைப்பினுலும் இயலாது என்று திகைக்க வேண்டி இருக்கிறது. கலத்தைச் சுக்கு நூருக்கத் தக்க சூறை

யும் சுழலும் வீசும் போது, கலத்தைக் காத்திடக் கட்டுமரம் ஏறிச்சென்று என் செய்வது ? பெருந் தீ பற்றிக்கொண்ட நிலையில் பிடிமண் தூவியா அணைத்திட முடியும் ? நிச்சயமாகப் பல கோடி ரூபாய்களைச் செலவிட்டாக வேண்டும்—உடனடி உதவி அளிக்கும் திட்டங்கள் அளிப்போரின் உள்ளங்களுக்கு மகிழ்வளிக்கும், அவதிக்காளானோருக்கு வாழ்வளிக்கவோ, நீண்ட கால திட்டங்கள் தேவை. பணம் சர்க்காரின் பெட்டியிலிருந்து செலவிட வேண்டும், என்று கூறிவிட்டு பொறுப்பைத் தட்டிக் கழித்துவிடப் பேசுவதல்ல இது—சர்க்காருக்கு நாட்டில் உள்ள எல்லாப் பெட்டிகளும் சொந்தம்—முறைப்படியும் உறவுகொண்டும், அவை தமை திறந்து, பணத்தை அள்ளி எடுத்துச் சர்க்கார் செலவிட முன் வரவேண்டும்.

"அடே ! அடே ! என்ன அக்ரமம் செய்கிறாய் ?" என்றான் குறும்பன், நண்பன் திடுக்கிட்டுப் போனான், காரணம் அவன் ஒரு அக்ரமமும் செய்யவில்லை, அங்கமெலாம் தொழு நோயால் தாக்குண்டு கிடந்த ஒரு பிணியாளனுக்கு ஒரு அணா கொடுத்தான்—அதை அக்ரமம் என்று கண்டித்த குறும்பன், அரை மணி நேரத்துக்கு முன்புதான் தன் குழந்தைக்கு ஒரு ஆடும் குதிரைப் பொம்மை வாங்க, ஐந்து ரூபாய் பெற்றான்—நன்கொடையாக.

"அக்ரமம் என்ன செய்தேன்..." என்று திகைத்துக் கேட்டான் நண்பன். குறும்பன் "அக்ரமமல்லவா இது ? அக்ரமம் மட்டுமல்ல, ஆண்டவனுக்கு விரோதமான காரியமுமாகும். குஷ்டரோகிக்குப் பணம் தந்தாயே, தரலாமா ? இந்தப் பாவி பூர்வஜென்மத்திலே செய்த கெடுவினைக்காகத்தானே, பகவான் இவனுக்கு இக்கொடு நோயை ஏவித் தண்டிக்கிறார். நீ, இவனுக்குப் பணம் அளித்து, அவன் படும் கஷ்டத்தைக் குறைத்திடுவது, ஆண்டவனுக்கு எதிராகச் செய்யும் காரியமாகாதா ! தர்மப் பிரபு என்று பெயர் எடுக்க வேண்டும் என்ற சூதான எண்ணம் உனக்கு !" என்று குறும்பன் குத்தினான். நண்பன், பதிலேதும் பேசவில்லை—சிரித்தான்—இத்தகைய சிறு மதியாளனையும் நண்பனாகக் கொள்ள நேரிடுகிறதே என்று.

இக் கதை போல, வெள்ள நிவாரணம், புயல் நிவாரணம் என்ற சாக்கு கூறிக் கொண்டு அரசியல் கட்சிகள் வெளிச்சம் போடும்—அது கூடாது—ஆமாம் ! கூடவே கூடாது—என்று கூவிடும் குறுகிய மதிபடைத்தோர்கூட, இருக்கிறார்கள். எது இல்லை நாட்டில் ! மலர்த் தோட்டத்திலேயே ஒரு மூலையில் மலம் இருக்கிறதல்லவா ! பழத் தோட்டத்திலே ஒரு பொந்தில் பாம்பு இருக்கிறதல்லவா, அது போல தன்னாலும் முடிவதில்லை, பிறர் செய்தாலும் பார்த்துச் சகித்துக்கொள்ள மனம் இடம் தருவதில்லை. "இவ்வளவும் மலமாகத்தானே

போகிறது'' என்று விருந்து சாப்பிடுவோரிடம் கேட்டானும், விரட்டி அடிக்கப்பட்டவன்; அதுபோல் இது ஒரு ரகம்—கிடக் கட்டும். இத்தகைய மந்தமதிக்காரர்களின் மண்டையிலடிப் பது போல, பெரியார் புயல் நிவாரணத்துக்கு ஓராயிரம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார். கெடுமதி எனும் புழு நெளியும் உள்ளத்தினருக்கு தக்கதோர் புத்திமதி புகட்டிடவே பெரியார் இந்த அன்புக் காணிக்கை தந்தார் என்பது மட்டு மல்ல, வந்துற்ற அவதி எவ்வளவு பயங்கரமானது என்பதை அனைவரும் அறியச் செய்ய வேண்டும் என்ற பெரு நோக்கும் இதற்குக் காரணம் என்று கூறவேண்டும். தம்பி ! நமது கழ கத்தின் சார்பில் ஓராயிரம் தரப்பட்டிருப்பதுபற்றிப் பத்தி ரிகைகளில் பார்த்திருப்பாய். சென்னையில் நமது பொதுச் செயலாளருடன் நானும், அறிவகத்தின் தொடர்பினை அடிக் கடி கொள்ளும் கழகத் தோழர்கள் சிலரும் பேசினோம்—அவர் பட்டுக்கோட்டை தெரியுமல்லவா—கண் கலங்கிய நிலையில் இருந்தார். கடலில் கடுகு, இந்த ஆயிரம். செய்ய வேண்டியது இனி தொடர்ந்து;—இது உதவி செய்யும் சீலர்களுடன் நாமும் சேருகிறோம் என்பதை எடுத்துக் காட்டும் சிறு அறிகுறி.

தம்பி ! முன்பு நாம் நாடகமாடியும் நல்லோரிடமும் கரம் நீட்டியும் நிதி திரட்டினோம்—அப்போது இக்காரியத்தில் ஈடு பட மற்றவர்கள் துடித்தெழுந்து கிளம்பாததால். இம்முறை நாட்டிலுள்ள நல்லோர் எல்லோருமே, நான், நீ என்று போட் டியிட்டுக் கொண்டு உதவி திரட்டிட முனைந்திடுகிறார்கள்— மகிழ்கிறேன்—மகிழ்வாய். நாம் அந்த முயற்சியில் நமது பங்கினைச் செலுத்த உடனே முற்பட வேண்டும்.

காங்கிரஸ்காரர்கள், கம்யூனிஸ்டுகள், கழகத்தார்கள், என்று 'அளவு கோல்' போட்டு அளக்க வேண்டிய விஷயமல்ல இது ! வீடு, தீப்பற்றிக் கொண்டு எரியும்போது பேரம் பேசுப வன், வீணன். எனவே, துயர் துடைக்கும் எந்த முயற்சியில் யார் நம்முடைய ஒத்துழைப்பைக் கேட்டாலும் தரத் தயாரா யிருக்கிறோம்—நம்மாலான உதவிகளைச் செய்யவும் சித்தமாயி ருக்கிறோம். ஏனெனில், நிகழ்ந்திருக்கிற நாசம் சாதாரண மானதல்ல, அவதிப்படும் மக்கள் தொகையும் கொஞ்ச நஞ்ச மல்ல. எனவே, அதன் துயர் களையும் பொறுப்பில், அரசுக்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளை யாவரும் செய்ய வேண்டும்.

அதே சமயத்தில் அரசினரும், பணத்தைப் பணம் என்று பார்க்காமல் இயற்கையின் கோரத்தாண்டவத்துக்குப் பலியா னோர் அனைவரின் வாழ்க்கையிலும் விளக்கேற்றி வைக்கும் பெரு முயற்சியிலீடுபட வேண்டும். ஆபத்துக்கு ஆளாகி அல் லற்படுபவர்கள், நமது உடன் பிறந்தோர்கள், இதில் கட்சி பேதம் கலக்கக் காரணமில்லை—கருணையுள்ளம் கொண்ட

அனைவரும் ஈடுபட்டு, வழியும் கண்ணீரைத் துடைக்க முயல வேண்டும்—அதுதான், திண்டாடும் நமது சகோதரர்களுக்கு நாம் காட்டக்கூடிய அன்பும்—அனுதாபமும்.

கூட கோபுரங்கள்
மாட மாளிகைகள்
வணிகக் கோட்டங்கள்
சினிமாக் கொட்டகைகள்
நடுத்தர மக்கள் இல்லங்கள்
அலுவலகங்கள்

இங்கெல்லாம், 'ஒரு நாளைய வருமானம் இந்த நிவாரணத்துக்கு என்று ஒதுக்கி, திரட்டி, சர்க்காரிடம் தரும் முயற்சியில் ஆட்சியாளர்களாகியுள்ள கட்சியினரே! பல்வேறு கட்சித் தோழர்களே! பணிபுரிய வாரீர் என்று அழைக்கிறோம்.

அமைச்சர்களே! எல்லா இடங்களிலும் என்று இல்லாவிடினும், சென்னை, கோவை, மதுரை போன்ற பெருநகர்களில் வீதிகளிலே செல்லுங்கள்! மக்கள் வேண்டிய மட்டும் பணமும் பண்டமும் அளிப்பர். கடை வீதிகளிலே வாருங்கள்! ஆடைகளைக் குவிப்போம், அமைச்சர்கள் மட்டுமல்ல, அருளாளர் ஆதீனகர்த்தர்கள், எவரும் இப்பணிக்கு முன் வருதல் வேண்டும்—அனைவரும் மனிதரன்றோ!

கலை உலகத் தோழர்களே! உமது பணி, இச்சமயம் மிக்க பலனளிக்கும். நிதி திரட்டவும், ஆடைகள் பெறவும், அங்காடிகளிலும் பெருஞ்சாலைகளிலும் அணிவகுத்துச் செல்லுங்கள். பெருநோக்கும் கருணை வழியும் உள்ளமும் கொண்டவர்கள் கலை உலகில் ஏராளமாக உள்ளனர்; எனவே, அவர்தம் முயற்சிக்குப் பலன் நிச்சயம் கிடைக்கும்.

அனைவரும் பணியாற்றித் தீரவேண்டிய கட்டம்.

இன்றே துவக்குக! என்று வேண்டுகிறோம். தி. மு. க. தோழர்களிடமிருந்து எத்தகைய ஒத்துழைப்பு கேட்பினும், கிடைக்கும் என்று உறுதியளிக்கிறோம்.


தேம்பித் திகைத்துக் கிடக்கும் தோழர்களே! உடன் பிறந்தோரே! இதோ உதவி, இதோ, இதோ என்று கூறிப் புறப்படுக; பணிபுரிக.

ஆமாம், அண்ணு! எல்லாம் சரி, டில்லி என்ன செய்கிறது, என்று கேட்கிருய், தெரிகிறது, தம்பி! அதுபற்றி இப்போது எண்ணிக் கிடப்பது வேண்டாம். ஏதேனும் செய்யும். இப்போது என் கண்ணுக்கு டில்லி தெரியவில்லை—வெள்ளம், பிணமலை தெரிகிறது—நீயும் நானும் இருக்கிறோம். நம்மாலானதைச் செய்வோம், உடனே புறப்படு! ஒரு பிடி அரிசி, தாயே! ஒரு பிடி அரிசி, என்று கேள். கேள் கொடுக்கப்படும். ஆடை

கேள், அளிப்பர்—பழைய ஆடையேனும். கோபுர வாயில்களி லேயும் கேட்டுப் பெறலாம், நீ வேண்டாம் தம்பி, குன்றக்குடி யாரின் குறுநகையில் பெருமதி கண்டோரெல்லாம். உடனே, தோழர்களுடன் கலந்து பேசு—அமைப்பு ஏற்படுத்து—அன்பு உள்ளம் கொண்டோர்களிடம் சென்று முறையிடு—பலன் நிச்சயம் கிடைக்கும்—பாதிப் பிணமாகக் கிடக்கும் பரிதாபத் துக் குரியவர்களைக் காப்பாற்றிடும் தூய பணியில் பங்கு பெற எவரும் முன் வருவர்—எவரும். நான் என்ன செய்ய வேண் டும் என்பதையும் எனக்குக் கூறு. நாம் என்ன செய்ய வேண் டும் என்பதைப் பொதுச் செயலாளருக்குக் கூறு. முறைகூட அல்ல தம்பி ! இப்போது முக்கியம், உடனடியாகப் பணியாற் றித் தீர வேண்டியதுதான் முக்கியமானது. உன்னால் முடியும்.

அன்புள்ள,

*11—12—1955*



கடிதம் : 30

## கலை உலகக் காணிக்கை

* புயல்—நிதி திரட்டுதல் —கழகக் கலைஞர் பணி.

தம்பி,

புயலும் வெள்ளமும் விளைவித்த வேதனையும் பெருநஷ்ட மும் குறித்த செய்திகள் வந்தவண்ணம் உள்ளன ; நெஞ்சைப் பிளக்கும் செய்திகள்.

கிராமம் கிராமமாக அழிந்து போயின—குடும்பம் குடும்ப மாக இறந்து பட்டுள்ளனர்—மீதமிருப்போர் இப்போது படும் துயரம் சொல்லுந்தரத்ததன்று.

எங்கு நோக்கினும் அழிவு—எப்பக்கம் பார்ப்பினும் பேரிடி, பெருநஷ்டம். ஏழை எளியவர்கள் வாழ்விலே வேத னைப்படுவதை பல காலம் கண்டு பாறை நெஞ்சினராகிவிட்ட வர்கள்கூட, பதறிப்போயுள்ளனர், இந்த அழிவு கண்டு.

பழந்தமிழகத்தின் திருவும் பண்பும் சிறந்து விளங்கிய பூம்புகார், கடலால் அழிந்த காதையைப் படித்துமட்டுமே நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம் ; இப்போது, பெருமழை

யும் பேய்க்காற்றும் கூடி இழைத்துள்ள கொடுமை குறித்த 'அழிவு' பூம்புகார் அழிந்துபட்டதை நினைவிற்குக் கொண்டு வருவதாக இருக்கிறது.

அரசு இழந்து, அதனல் வாழ்வு இழந்து, வளம் வகைப் படுத்தப்படாததாலும், உழைப்பின் பலன் சுரண்டப்படுவ தாலும், வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்துக் கிடக் கிறேம்; கொற்றம் இழந்தோம், கோலெடுத்தவனுக்கு ஏவ லராகி இழிநிலை பெற்றேம்; விண்ணை அண்ணாந்து பார்த்து விம்முவோரும், மண்ணில் இரத்தக் கண்ணீர் சொரிவோரும், திகைப்பால் தாக்குண்டுக் கிடப்போரும், என்ற நிலைக்குத் துரத்தப்பட்டு, துயருற்றுக் கிடக்கிறேம்; இந்த அல்லலும் அவமதிப்பும் போதாதென்று, இயற்கையுமா நமது நாட்டைத் தாக்கிடவேண்டும்? கண்ணெடுத்துப் பாரீரோ! காரியமாற்ற வாரீரோ! எம் இனத்தின் பண்பறிந்து அதற்கேற்ற வாழ் வளிக்க இணங்கீரோ!—என்றெல்லாம், ஆதிக்கம் செலுத்தி வரும் வடவரிடம், உரிமைக்குரல் எழுப்பி வருகிறேம். தங்க மும் தரித்திரமும், இரும்பும் இல்லாமையும், நிலக்கரியும் நொந்த வாழ்வும், வயலும் வறுமையும், என்றுள்ள வேதனைத் தொடரினை விளக்கி, மக்களை வீறுகொண்டெழச் செய்து வரு கிறேம்; விடுதலைப் பேரார்வத்தையும் அறப்போருக்கான அஞ்சாமை, இடுக்கண் வருங்கால் இதயமொடிந்து போகாமை, ஆகியவற்றினையும் ஊட்டிடும் பெருமுயற்சியில் ஈடுபட்டுள் ளோம்; எங்கணும் வீர முழக்கம், எவரிடமும் விடுதலை வேட்கை; இந்த நிலை கண்டு பெருமிதம் கொண்டு, பெற்ற பொன்னுட்டின் விழிப்புணர்ச்சியைக் கண்டு இதயம் விம்மி, கண்களிலே களிநடமிடும் ஆர்வம் கண்டு, வெற்றி பற்றிய பெருநம்பிக்கை கொண்டு இறுமாந்திருக்கும் நேரத்தில், கொடுமையை வீசிற்றே கடல்! அழிவை ஏவிற்றே காற்று! பேயாகிவிட்டதே பெருமழை! என் செய்வோம்! எங்ஙனம் இதனைத் தாங்கிக்கொள்வோம். மூழ்கிவிட்ட கிராமங்கள், மிதக்கும் உடலங்கள், அவர்கள் உழைத்து உருவாக்கிய திரு அத்தனையும் அழிந்த நிலை! இந்தக் கோரக் காட்சியைக் கண்டு எங்ஙனம், உள்ளத்தில் எழும் குமுறலை அடக்கிக்கொள்ள முடியும்.

"அண்ணா! சென்ற தடவை தாங்கள் இங்கு வந்திருந்த போது தங்கியிருந்தீர்களே, அழகான சோலை, அதன் நடுவே அமைந்திருந்த எனது இல்லம், இன்று அவை அழிந்து போய் விட்டன. இந்தப் பகுதியில் நமது தோழர்கள் பெருத்த நஷ்டப் பட்டுப் போயுள்ளனர்; என் வேதனை சொல்லுந்தரத்த தல்ல," என்று நண்பர் பேராவூரணி அடைக்கலம் எழுதிய கடிதத்தில் என் கண்ணீர் சிந்திற்று. தம்பி! நான் அந்த அழ

கிய விடுதியில் தங்கியிருந்தபோது, நான் கண்ட செழுமை தான் எவ்வளவு! இன்று அழிவல்லவா காண்கிறார் நண்பர் அடைக்கலம். நானிருக்கக் குறை என்ன! என்று கேட்டு, நம் பிக்கை நாதத்தை மீட்டுவது போல, காற்றினிலே அசைந் தாடிய வாழையும் தென்னையும், அவைதமை வேலிகளாகக் கொண்டிருந்த செந் நெல் வயலும், அதனூடே சென்ற வாய்க் கால்களும், நடுவே இருந்த அழகிய விடுதியும், அங்கு அமர்ந்து எம்மை உபசரித்து, முகமலர்ச்சியை எமக்கு அளித்த அன்பன் அடைக்கலமும்—இன்று? எண்ணும்போதே, துக்கம் கரத் தைத் தடுக்கிறது, கருத்தைப் பிளக்கிறது, திவலை கண்களைக் கப்பிக்கொள்கிறது! இன்று அடைக்கலம், அழிவினை அல்லவா எங்கும் காண்கிறார். இப்படி அடைக்கலங்கள், பதின்மரா இருபதின்மரா, நூற்றுக்கணக்கிலா, இலட்சக் கணக்கிலல்லவா உளர்? என்ன செய்வோம்?

நிதி திரட்டுகிறோம், ஆடைகளைச் சேகரிக்கிறோம், உணவு திரட்டுகிறோம். எல்லாம் எற்றுக்கு? எல்லாம் இழந்து தவித் திடுவோர்க்கு, இவை எம்மட்டு? கணக்கறியும் போது கலக்கம் மேலிடுகிறது; ஏற்பட்டுப்போன உயிர்ச் சேதத்தை நினைக்கும் போது உள்ளம் வெடித்துவிடும் நிலை ஏற்படுகிறது.

எனினும், நாம் இந்தப் பெருநட்டத்தை எதிர்த்துப் போரி டும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதை நிலைநாட்டியாக வேண் டும். "எல்லாம் இழந்தோமே! என் செய்வோம்?" என்று கதறிடும் நமது உடன் பிறந்தார்க்கு, உடன் பிறந்தோரே! உத்தமர்காள்! குடும்பத்தில் கண்மணிகளை, கருவூலங்களை, இன்பவாரிதிகளை, இதயராணிகளை, பேசும் பொற்சித்திரங் களை, பாழும் வெள்ளத்துக்கு இறையாகக் கொடுத்துவிட்டுப் பெருந்துயரில் ஆழ்ந்திருக்கிறீர். வீடிழந்தோம், வயலிழந் தோம், உடைமை அனைத்தையும் இழந்தோம், வாழ்விழந்தோம் என்று கூறிடுவீர், உண்மை, உண்மை, முற்றிலும் உண்மை— ஆனால் அன்பர்காள்! எல்லாம் இழந்தீர் எனினும், எம்மை இழந்துவிடவில்லை—உமக்கு வாழ்வளிக்க நாங்கள் இருக் கிறோம்—எமது ஆற்றல் மிகுதியானதன்று, ஆயினுமென், இத யத்தில் பொங்கி எழும் உணர்ச்சி எமது ஆற்றலைப் பன்மடங்கு அதிகமாக்கிடும், அறிவீர்! ஊரெங்கும் செல்கிறோம், உற்ற 'உற்பாதத்தை' எடுத்துரைக்கிறோம், காண்போரிடமெல்லாம் கை ஏந்தி நிற்கிறோம். கன்னெஞ்சக்காரனையும் கனிய வைக் கிறோம். ஓயமாட்டோம், உறங்கமாட்டோம், உதவி திரட்டும் ஓராயிரம் வழிகளையும் கண்டறிந்து பணியாற்றுவோம்! நேரிட்ட கொடுமைக்குப் பரிகாரம் தேடிட கட்சிகளை மறந்து காரியத்தில் ஈடுபடுவோம். ஆடுவோம்; பாடுவோம்! ஊரூ ருக்கும் ஓடுவோம்! எப்பாடு பட்டேனும் உதவி திரட்டும் பணி

யில் வெற்றிபெற்றுத் தீருவோம். மீண்டும் உமக்கு வாழ்வு—முன்பு நீவிர் கண்டனுபவித்த குதூகலம் குறைந்துபடினும்—வாழ்வு செம்மையாக அமைவதற்கான எல்லா முயற்சியையும் எடுத்துக்கொள்ளத் தயங்கப்போவதில்லை—என்று நாமனை வரும், தம்பி! எடுத்துக்கூறிட வேண்டும்.

நாட்டிலே எந்த அளவுக்கு நற்பண்பு இருக்கிறது என்பதை நாமெல்லாம் உணரத்தக்க வகையில், உதவி திரட்டிக் குவித்திடும் காரியம் வேக வேகமாகவும், வகை வகையாகவும் நடைபெற்றுக் கொண்டுவருகிறது. ஏழை எளியோரின் கஷ்ட நஷ்டத்தை நன்குணர்ந்த ஓர் நல்லவர் நாடாள்கிறார், வழக்கமாக ஆமை வேகத்தில் நகர்ந்து செல்லும் நிர்வாக இயந்திரமே இன்று புயல் வேகத்தில் பணியாற்றிடக் காண்கிறோம். அள்ளித்தர செல்வர்களுடன் சாமான்யர்கள் போட்டியிடுகின்றனர்.

தம்பி! நமது கலைச்செல்வர்கள் கருணை உள்ளம் கொண்டவர்கள் என்று சென்ற இதழிலே குறிப்பிட்டிருந்தேன், காண்கிறாயல்லவா, அவர் தம் கொடைத் திறனை!

இன்று அந்த கலைச்செல்வர்கள், வைரம் மின்னிட, தங்கம் ஒளிவிட, தந்தக் கட்டிலில் அமர்ந்து வெள்ளி வட்டிலில் இனிப்புப் பண்டம் வைத்து உண்டு மகிழத்தக்க நிலைபெற்றவர், எனினும் அவர்களில் எல்லோருமே, இல்லாமை கொட்டுவதை, வறுமை வாட்டுவதை அனுபவித்து அறிந்தவர்கள். ஏழையின் இதயக் குமுறலை நன்கு தெரிந்தவர்கள். கருணை அவர்கள் உள்ளத்தில் நிச்சயம் சுரக்கத்தான் செய்யும். ஆகவே, அவர்களிடம் எனக்கு நிரம்ப நம்பிக்கை உண்டு. சென்ற கிழமை அவர்கள் கூடி நிதி திரட்டத் துவங்கினர்; துவக்கக் கட்டமே வெற்றி அளித்திருக்கிறது: தொடர்ந்து பணியாற்றுவர்; அவர் தம் பணியின் பலன், அழிந்ததுபோக மீதமிருக்கும் வலிவு கொண்டு வாழ்வுடன் போராடி, உழைப்பால் மீண்டும் பொலிவு பெறும் ஏழை எளியவருக்கான அழகிய குடில்களாக காட்சி தரட்டும், அழிவு தோற்றோடட்டும்! நாசத்தின் கோரப் பற்களால் ஏற்பட்ட புண் ஆற்றிடும் மாமருந்து கிடைக்கும்.

நமது அருமருந்தன்ன நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன், மதுரையம்பதி கடைவீதியில் சென்று, கை ஏந்தி நின்று பணமும் பண்டமும் கேட்டுப் பெற்று உதவினார் என்றோர் செய்தி கேட்டு, இத்தகு இதயம் படைத்தவரை, நண்பராகப் பெற்றிருக்கிறோமே, நமது கழகத்தினராகவும் கொண்டிருக்கிறோமே என்பது எண்ணிப் பெருமைப்படுகிறேன்—பெருமைப்படுகிறேன்

கலைச் செல்வர்களின் பணி, உண்மையிலேயே போறறுதற் குரியதாக அமைந்திருக்கிறது. எனினும்......

ஆமாம், தம்பி! எனினும் என்று கூறத்தான் வேண்டி இருக்கிறது—ஏனெனில் அவர்கள் மூலம்தான் பல இலட்சங் கள் இந்த நற்காரியத்துக்கு, கேடு சூழ்ந்துள்ள நாட்டினை மீட் டிடும் தூய தொண்டுக்கு, கிடைத்தாக வேண்டும் என்று எதிர் பார்க்கிறேன். தமது இசையாலும் நடன மூலமும், நாடக படக்காட்சி மூலமும் நாட்டு மக்களுக்கு இன்பமும் நல்லறிவும் தந்துதவுபவரிடம் நான் சில பல இலட்சங்களை எதிர்பார்ப்ப திலே என்ன தவறு? அவர்கள் அறிவார்கள் அல்லலுறும் மக்க ளின் அவல நிலையைப் போக்குவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சி எவ்வளவு மாமலை போன்றதென்பதை. எனவே நம்பிக்கையுடன் நாடு அவர்கள் உதவியை நாடலாம்.

என்ன செய்ய நண்பரே! ஒன்று இரண்டு என்று இன்று ஆயிரக்கணக்கில் கொடுத்திருக்கிறோம்—இன்னும் என்ன செய்ய? அங்காடிகளில் சென்று வசூலிக்கவா, இசை அரங்கு கள், கலா நிகழ்ச்சிகள், திறந்த வெளி நாடகங்கள் மூலம் நிதி திரட்டவா? என்று கேட்பர்; இவைகள் மூலமெல்லாம் திரட் டத்தான் வேண்டும்—இன்றே துவங்கி; தொடர்ந்து; ஆனால், இம்முறையில் பணம் குவிய, பாடும் அதிகம், காலமும் மிகுதி யாகத் தேவைப்படும்.

மதுரை அங்காடியிலே நமது நண்பர் இராமச்சந்திரன் சென்ற காலை, நேரிட்டது என்ன? உதவியும் உபத்திரவமும், தோழமையும் தொல்லையும், நேசப்பான்மையும் நெருக்கடி யும் போட்டியிட்டு, அவர் மேற்கொண்ட பொறுப்பான காரி யத்தைக் குலைத்தேவிட்டது. நடிகர்கள் அங்காடி சென்றாலே இது! நட்சத்திரங்கள் சென்றாலோ!!

எனவே, நமது கலைச் செல்வர்களுக்கு நானோர் யோசனை கூறுவேன்.

N. S. கிருஷ்ணன்
M. K. ராதா
M. R. ராதா
K. R. ராமசாமி
M. G. ராமச்சந்திரன்
T. K. சண்முகம்
T. K. பகவதி
சிவாஜி கணேசன்
ஜெமினி, கணேசன்
S. S. ராஜேந்திரன்

இப்படிப்பட்ட கலைச் செல்வர்கள் (பட்டியல் பூர்த்தி யானதல்ல.)

T. R. ராஜகுமாரி
லலிதா
பானுமதி
பத்மினி
அஞ்சலி
வரலட்சுமி
T. A. மதுரம்

போன்ற கலைச் செல்வியர்கள் இவர்கள் யாவரும், ஒருசேர ஒரே படத்தில் நடித்தால்......!

எந்த முதலாளிக்காகவுமல்ல, தாயகத்தின் தவிப்பைப் போக்குவதற்கு, நாலு அல்லது ஐயாயிரம் அடி அளவிலே அமைத்துவிட்டாலும் போதும், பத்தே நாளில் படம் தயாரித்து, அதனை, கலைச்செல்வர்களின் அன்புக் காணிக்கையாகப் படைத்தால்......இலட்சங்கள் புயல் வேகத்தில் குவியும்.

இந்த நற்காரியத்தை ஒரு நடிகர் குழு மேற்கொண்டால், எந்தப்படம் தயாரிக்கும் அமைப்பும் இலவசமாக வசதிகளைச் செய்தளிக்கும்.

ஆர்வத்துடன் பணியாற்றினல் இரண்டு வாரத்தில், படம் தயாராகி விடும்,

இத்தனை கலைச் செல்வர்களையும் ஒரே படத்தில் காணும் வாய்ப்பு.

இவர்கள் அனைவரும் ஒரு தூய காரியத்துக்கு இந்தப் படத்தை அர்ப்பணிக்கிறார்கள் என்ற மதிப்பு.

இவை போதும், இலட்சங்களைக் கொண்டுவர !

இதற்கென்று ஒரு கதை—அதிலே பல கட்டங்கள்—இது அல்ல நான் குறிப்பிடுவது.

சலிப்பாக இருக்கிறது என்று கூறிக் கண்ணை மூடிக்கொள்கிறோமல்லவா, சர்க்கார் வெளியிடும் சில செய்திப் படங்கள்.

நான் குறிப்பிடுவது செய்திப் படம் போன்றது—ஆனல், செய்திப் படத்தை சர்க்கார் வெளியிடுகிறார்களே அத்தகைய சத்தற்ற, சாரமற்ற விதத்தில் அல்ல.

கொடுமைக் காட்சிகள்—அவை பற்றி நமது கலைஞர்கள், நாட்டு மக்களிடம் முறையிடுதல்.

நாட்டுக்கு இத்தகைய நெருக்கடிகள் தாக்கும்போது, மக்கள் காட்டவேண்டிய வீர உணர்ச்சி, தியாக உள்ளம்.

இழப்புகளுக்கு ஆளாகியிருப்போருக்கு ஆறுதல் மொழி.

இவ்வகையிலே படம் அமையலாம்.

முறை அல்ல முக்கியம்—என் மனம் இருக்கும் நிலையில் அது பற்றித் தெளிவுகூட இல்லை என்னிடம்—நான் விரும்புவது, கலைச் செல்வர்களின் முயற்சி, இப்படியோர் அன்புப் படையலாக இருத்தல் வேண்டும் என்பது.

நிதி குவியவும், வேகமாகக் குவியவும், தக்க பலன் தரக் கூடிய அளவில் குவியவும், இது நல்ல முறை என்று எண்ணுகிறேன்.

சர்க்கார் இதற்கு 'வரி' இல்லாமல் விலக்களிக்க வேண்டும்.


கலைச் செல்வர்கள் கூடிக் குழு அமைத்தால் ஒரு திங்களில், பலன் பூத்துக்காய்த்துக் கனியும்; நாடு சுவையும் பயனும் பெறும்.

தம்பி! கலைச்செல்வர்களுக்கு, நான் கூறிடும் இந்தக் கருத்து, சரி என்று உனக்கும் தோன்றினால், நீயும் அவர்களிடம் சொல்லு.

சரி, அது போதுமல்லவா அண்ணா! என்று கூறிவிட்டு வேறு காரியத்தில் மூழ்கிவிடாதே. வாழ்விழந்து வதைபடும் நமது தோழர்களைக் கைதூக்கிவிட முயற்சியில் ஈடுபட்ட வண்ணம் இருக்கவேண்டும். ஒரு படி அரிசி, ஒரு சிறு துண்டு... ஒரு சிறு பணமுடிப்பு— தம்பி! . எது பெறமுடிந்தாலும், அதற்காகக் காடு கடந்திட வேண்டுமாயினும், பரவாயில்லை, பெற்று வரவேண்டும்—இத்தகைய 'உதவிகளை' அவரவர்கள் தனித்தனி அமைப்பு ஏற்படுத்திக் கொண்டு திரட்டுவது, நமது நிதி அமைச்சருக்குப் பிடிக்கவில்லை—கிடக்கட்டும்—அவர் நாட்டு மக்களின் அமைப்புகளை நம்பவில்லை—நாம் அவரை நம்புவோம், நஷ்டமில்லை—அவர் குறிப்பிடும் இடங்களுக்கே வேண்டுமாயினும் அனுப்பிவை. நானும் அதே பணியில் என்னாலான அளவு ஈடுபட்ட வண்ணம் இருக்கத்தான் செய்கிறேன்.

அன்புள்ள,

*18—12—1955*



கடிதம்: 31

# குருபக்தி

★ அமைச்சர் சுப்பிரமணியமும் ஆச்சாரியாரும்—
நேருவும் மொழிவழி அரசும்-ம. பொ. சி-யின் குருபக்தி.

தம்பி,

இந்தப் பழைய பாடத்தைப் பற்றிப் புதிதாக இப்போது சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது—என்ன அவசியம் வந்தது—எத்தனையோ பிரச்சினைகள் நெஞ்சைக் குலுக்கும் வகையினதாக உள்ளனவே—அண்ணன் ஏன் இந்தப் பழசுக்குப் போகிறார் என்று எண்ணுகிறாய், தெரியும் எனக்கு. எனக்கும் 'பழசு' பிடிக்காதுதான் தெரியுமே உனக்கும்; என்றாலும் எனக்கு ஏனோ இன்று இங்கு வந்தவுடன் (சென்னைக்கு) 'பழசு' மீது நினைவு சென்றது—அதற்கும் காரணம் இருக்கிறது—'அறிவகத்தில்' சிறுகுன்று போல, பழைய துணிகள் உள்ளன, சிறுசிறு மூட்டைகளாக—நமது தோழர்கள் இங்கு திரட்டியவை. மிகமிகத் தேவையான காரியத்துக்கு இவை பயன்படப் போவதால், பழைய துணிகள் மீது ஒரு பாசமும், அதைத் தொடர்ந்து பொதுவாகவே 'பழசு' மீது எண்ணமும் சென்றது—அதன் விளைவுதான், தம்பி, பழைய பிரச்சினையாகிய 'குருபக்தி' மீது என் நினைவு சென்றது.

பிரச்சினை 'பழசு'; ஆனால் இந்தப் புதிய காலத்திற்கு முற்றிலும் தேவையற்றது என்று தள்ளிவிடக் கூடியதல்ல—பொருளும், பொருள் அறியும் முறையும், பயனும், பயன்காணும் வகையும் புதுப்பிக்கப்பட வேண்டியதாகவோ, பழுதுபார்க்கப்பட வேண்டியதாகவோ இருக்கலாம்; ஆனால், அந்த 'எண்ணமே' தேவை இல்லை என்று விரட்டிவிட முடியாததல்லவா? எனவே இன்று 'குருபக்தி'யைக் குறித்து நீயும் நானும் எண்ணிப் பார்ப்பது தேவையற்றதுமல்ல, பயனற்றதுமல்ல—உண்மையிலேயே, இந்தப் பிரச்சினையை ஆராய்வதன் மூலம் பயன் தரத்தக்க சிலபல கருத்துக்களைப் பெறவும் முடியும்.

தம்பி! குரு என்றவுடன் பழைமையில் மூழ்கிக் கிடப்போரின் மனக்கண்முன், ஜடையும் தாடியும் கொண்ட, வளைந்து தைலம் தீர்ந்து போன உடலுடன் காட்சிதரும் வயோதிகர், மரத்தடியில் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருப்பதும், அவர் எதிரே 'சிறுசும் பொடிசு'மாகச் சீடர்கள் பயபக்தியுடன்

வீற்றிருப்பதுமான காட்சிதான் தெரியும். அந்தக் காலம் மலையேறிவிட்டது—எனினும் அந்தக் காலம் மீண்டும் வராதா என்று ஆவலுடன் காத்துக் கிடக்கும் ஆச்சாரிய ஸ்வாமிகள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பழைய நாட்களிலே, 'குரு'மார்கள் 'பலரகம்' இருந்திருக்கிறார்கள்; அனைவரும் அறிவர்.

கட்டை விரலை வெட்டிக்கொடு காணிக்கையாக என்று கேட்டவரும் இருந்திருக்கிறார், கட்டழகியைச் சீடன் கொட்டிவிட்டதைக் கண்டு மட்டற்ற துயருற்ற குருவும் இருந்திருக்கிறார்.

கைகால் பிடித்துவிடவும் கட்டைகள் வெட்டி வரவும், கால் நடைகளை ஓட்டிச் செல்லவும், கறிகாய் நறுக்கித் தரவும் மட்டுமே பயிற்சி பெற்று, பாடம் கிடைத்ததெனப் பர்ணசாலையைவிட்டு வெளியேறிய சீடரும் இருந்திருக்கிறார்கள்—குரு, பாடம் சொல்லிக் கொடுக்கும்போதே 'வெட்டிவா என்றால் கட்டிக் கொண்டு வருகிற' வகையில், அறிவுத் தெளிவு பெற்று விளங்கிய சீடர்களும் இருந்திருக்கிறார்கள்.

'பழைய' நாட்களிலே இருந்த 'ரகம்' கிடக்கட்டும், இப்போது உள்ளவர்பற்றி எண்ணிப் பார்ப்பது, உடனடிப் பலனளிக்க உதவுமல்லவா, தம்பி, அதற்குச் சிறிது சிந்தனையைச் செலவிடு.

இப்போது, நிதி அமைச்சராக இருக்கும் கனம். சுப்பிரமணியம் காமராஜர் முதலமைச்சராக இருக்கும் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிறார்—ஆனால் அவர் காமராஜைத் தலைவராகவோ, குருவாகவோ, கொள்பவரல்ல—அவருடைய 'குருநாதர்' ஆச்சாரியார்தான்! அவர் அரியாசனத்தில் அமர்ந்திருந்தாலும் சரி, அரிகதா காலட்சேபம் நடத்திக் கொண்டிருந்தாலும் சரி, சுப்பிரமணியனாருக்கு ஆச்சாரியார் மீதுதான் குருபக்தி; அதை வெளியிட வேண்டிய நேரத்தில், தவறாது செய்கிறார்—சில வேளைகளில் பொருத்தம்கூட இருப்பதில்லை, ஆனால் 'பக்தி'க்குத்தான் பொருத்தம்கூடப் பார்க்க வேண்டியதில்லையாமே, அதனால் எந்தச் சமயம் கிடைத்தாலும், தமது குருபக்தியைக் கொட்டிக்காட்ட, கனம், தவறுவதில்லை.

நாடே குமுறிடத்தக்க கேடொன்று நேரிட்டது—புயற் கொடுமை: கேள்விப்பட்டதும் ஓடோடிச் சென்றார் முதல் அமைச்சர்—வெறுங்கையுடன் அல்ல—விதவிதமான பண்டங்களை மூட்டை மூட்டையாக ஏற்றிக் கொண்டும்—உயர்தர அதிகாரிகளை உடன் அழைத்துக் கொண்டும் சென்றார்—கண்ணீரைக் கண்டார், கண்ணீர் சொரிந்தார்—வேகவேகமாக

'நிவாரண' வேலேகளைத் தொடங்கினர்: புயற்கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்கள் புண்ணியவானே என்று அவரை வாழ்த்துகிறார்கள். இதுகண்டு, நாமெல்லாம், எதிர்க் கட்சியினர், எனினும் நல்ல இதயம் கொண்டோரை, நற்பணியாற்றுவோரைப் பாராட்டும் பண்பு அறிந்தவர்கள் என்ற முறையில், காமராஜரையும் அவர் நடத்திச் செல்லும் துரைத்தனத்தையும் மனதாரப் பாராட்டுகிறோம். ஆனல் உடனிருந்து பதவி பெற்று வாழ்ந்து வரும் கனம் சுப்பிரமணியனுருக்கு, யார்மீது 'நினைவு' செல்கிறது என்கிறாய் ? யாரிடம் பாசம், பரிவு, பக்தி, பீறிட்டுக்கொண்டு கிளம்புகிறது என்கிறாய் ? முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து சென்றவர் மீதல்ல, எப்புரியில் எது நேரிடினும், 'முப்புரி'க்கு ஆபத்தேதும் வராமலிருக்கும் வகையில், ஆயாசப்பட வேண்டியதில்லே என்று எண்ணும் ஞானவான் இருக்கிறாரே, ஆச்சாரியார், அவர் மீதுதான் செல்கிறது அமைச்சரின் நினைவு !!

தம்பி ! குருபக்தி—தலேக்கு அவ்வளவு ஏறி இருக்கிறது.

நந்தவனத்திலே, உலவிக் கொண்டிருந்த நாரீமணியை ஒரு 'பூதம்' சிறையெடுத்துச் சென்று யாரும் நுழைய முடியாத காட்டிலே இருந்த மாய மாளிகையில் சிறைவைத்துப் பொன்னும் பொருளும் கொட்டிக் காட்டி, புன்னகை தந்தால் போதுமென்று கேட்க, நவநிதி கொடுத்தாலும், என் நாதனை நான் மறவேன் என்று அந்த நாரீமணி சொன்னுள்—என்று கதைகளில் படிக்கிறோமல்லவா, அதுபோல, நிதிக்கும் மதிக்கும் அமைச்சரே ! என்ன மாறுதல் நேரிடினும், எவர் போனுலும் எவர் புதிதாக வந்தாலும் உமக்கு ஓர் இடம் உண்டு ! என்று சொல்லி அமைச்சரவையில், இவருக்குக் காமராஜர் இடமளித்திருந்த போதிலும் இருந்திருந்து,

"வள்ளிக் கணவன் பேரை
வழிப்போக்கர் சொன்னுலும்
உள்ளம் குளிருதடி, சகியே !"

என்று உருகிப் பாடுகிறார், நிதியமைச்சர், குருபக்தி, தம்பி, குருபக்தி !

இவருடைய குருநாதர் ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலேயும் புயல் கொடுமை விளைவித்தது—என்ன செய்தார் குருநாதர் ? பகவத்சோதனை என்று கூறிவிட்டு, மற்றக் காரியங்களைக் கவனிக்கலானார். இரவு பகலென்று பாராமல், வெள்ளம் வெடிப்பு என்று அஞ்சாமல், அந்தஸ்து பற்றித் துளியும் கவனிக்காமல், அவதியுறும் மக்களைக் கண்டு, இன்னலைத் துடைத்திட வேண்டும் என்று காமராஜர் சென்றார்—ஆச்சாரியாரோ—கோட்டையில் கொலுவிருந்தார் ! அவருக்கு, இப்

போதும், சீடர் நன்றி கூறுகிறார்—குருபக்தி என்றால் இஃதல்லவா குருபக்தி !

வெள்ளம் விளைவித்த பெரு நஷ்டத்தால், வேதனைப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு மீண்டும் வாழ்வளிக்கும் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமானால், இதற்குப் பெரும் பொருள் செலவாகும்—இதற்கு மத்திய சர்க்கார்—டில்லி தேவர்கள்-பெருந் தொகை உதவ வேண்டுமென்பதை, நேருவுக்கு உணர்த்தினார் காமராஜர்—நாட்டிலே காமராஜர் ஆட்சி எத்தகைய அமைதியை (ஆனந்தத்தை அல்ல) ஏற்படுத்தி இருக்கிறது, எதிர்ப்புகள் எந்த அளவுக்குச் சுருங்கிப் போயுள்ளன என்பதை எல்லாம் கண்ட நேருவும், நிவாரணத்துக்காகச் செலவிடப்படும் தொகையில் 'பாதி' அளவு மத்திய சர்க்கார் அளிக்கும் என்று தெரிவித்தார்.

இதற்கு யாருக்கு நன்றிகூற வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய் தம்பி !

நம் போன்ற செய்நன்றி மறவாதார் டில்லியின் மனமும் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஓரளவுக்கு இளகும்படி செய்தார் என்பதற்காகக் காமராஜருக்குத்தானே நன்றிகூற வேண்டும் என்று எண்ணுவோம். நிதி அமைச்சர் அப்படி எண்ணவில்லை-அவருடைய மனம், குருநாதன் மீது சென்றது. ஐயனே! போற்றி ! மெய்யனே போற்றி, போற்றி ! உமது ஆசியால், அருளால்தான், இந்தப் பேறு பெற்றோம் ! என்று கூறிக் குருவைத்தான் பூஜிக்கிறார்.

"டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை நிருபரிடம் இந்தத் திங்கள் பத்தாம் தேதி, "மத்திய சர்க்கார் மனமுவந்து செலவுத் தொகையில் பாதியளவு தர முன்வந்ததற்கு, நாம் ராஜகோபாலாச்சாரியாருக்குத்தான் நன்றி கூற வேண்டும்-ஏனெனில் 1952-இல், இப்படி ஏதேனும் ஒரு விபத்து நேரிட்டால், மத்தியசர்க்கார் பணஉதவி தரவேண்டும் என்று, ஆச்சாரியார் தான், நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் பேசினார்—அதற்கு இணங்கியே, மத்திய சர்க்கார் இந்த உதவி செய்கிறது" என்று கூறியிருக்கிறார்.

பார்த்தாயா, தம்பி ! குருபக்தியை !!

வெள்ளமென்றும் வெடிப்பென்றும் பாராமல் சுற்றிச் சுற்றிவந்தாரே காமராஜர்-வீழ்ந்துபட்ட மக்களுக்காக வெந்த மனதுடன் வாடிக் கிடக்கும் மக்களிடம் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாரே, காமராஜர்-அவருக்கல்ல நன்றி! இராஜகோபலாச்சாரியாருக்கு நன்றி ! ஏன் ? 1952-லேயே அவர் இந்த அரிய யோசனையைக் கூறிவிட்டாராம், அதனால். இதுதான் தம்பி கடைந்தெடுத்த குருபக்தி !!

'குருபக்தி' யைக் கொட்டிக் காட்டியதோடு விட்டுவிட வில்லை, இந்த வீரர். இரண்டு இலாக்காவுக்கல்லவா அமைச் சர். அதுபோலவே இரண்டு சீரியதொண்டு புரிவதை அல்லவா அவர் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்—ஒன்று குருநாதரையும் அவருடைய கூடாரத்தினரையும் குதூ கலப்படச் செய்வது, மற்றொன்று இன எழுச்சியூட்டும் நம் மைக் குத்திக் குதூகலிப்பது. எனவே, குருபக்தியைக் காணிக் கையாக்கியதும், நம்மைக் குத்தி மகிழ்கிறார்—குத்துவதால் மகிழ்ச்சி எப்படிப் பிறக்கும் என்கிறாயா, தம்பி! சிலருக்கு அப் படி ஒரு நினைப்பு. தாங்கள் குத்துவதால், நமக்கு வலிக்கும், வேதனை அடைவோம், அதைக் கண்டு மகிழவேண்டும் என்பது. அமைச்சர் சுப்பிரமணியம் அந்த ரகம்.

வடக்கு—தெற்கு என்று வம்பு பேசுகிறவர்கள், வடக்கு தெற்கைப் புறக்கணிக்கிறது என்று கண்டனம் கிளப்புகிறவர் கள் இருக்கிறார்களே, அவர்களுடைய வாயடைத்துப்போகும்—ஏனெனில் தெற்கே நேரிட்ட கொடுமைக்கு, வடக்கு வாரி வாரிக் கொடுக்கிறது—என்கிறார் நிதியார், பாபம்! நமது வாயடைத்துப் போகவேண்டும் என்பது அவருடைய நீண்ட நாள் ஆசை. அந்த ஆசை மேலிட்டு இப்படிப் பேசுகிறார்—ஆனால், நிலைமையை அவர் அறிய முயற்சிக்கவில்லை ஒரு வேளை முயன்றும் முடியவில்லையோ! மதிக்கும் அவர் அமைச்ச ராக்கப்பட்டிருப்பதால் உண்மை நிலையை அறிய அவர் முயற் சித்துப் பார்க்கலாம். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்றோர் முதுமொழி உண்டல்லவா!

தெற்கிலே அவதி, அதற்கு வடக்கு வாரி வழங்குகிறது! இது தேனாக இருக்கிறது அமைச்சருக்கு; தெற்கே எழுந்த அவதி துடைக்கப்படுகிறது என்பதால் அல்ல, நமது வாய் அடைக்கப்படும் என்பதால். எவ்வளவு சிறுபிள்ளைத்தனமான எண்ணம் என்று சொல்லத் தோன்றுகின்றது. ஆனால் நான் வயதில் அவ்வளவு பெரியவன் அல்ல என்பதால் சொல்லக் கூசுகிறது.

வடக்கு வாரி வழங்குகிறது என்றால், வடக்கே உள்ளவர் கள் பதைத்து எழுந்து பல முனைகளிலும் நிதி திரட்டிக் குவித்து இங்கு அனுப்பியுள்ளனர் என்று எண்ணிவிடச் சொல்கிறார் போலும்!!

இன்றுவரை அதுபோன்ற முயற்சியில், வடக்கே உள்ள பெருந்தலைகளும் ஈடுபடவில்லை. மக்கள் மனமும் உருகிடக் காணோம். உருகாதது கண்டு நாம் யாரும் ஆச்சரியப்படவு மில்லை.

தமிழகத்தில் இந்தத் தத்தளிப்பு என்று கண்டதும், கடல் கடந்து சென்றுள்ள தமிழர்களுக்குக் கண்ணீர் கொப்பளிக்கிறது. மலாயாவில் நிதி திரட்டுகிறார்கள்.

காபூலிலும் கராச்சியிலும் எந்த அளவுக்குக் கருணை பிறக்குமோ, அதே அளவிலேதான் கல்கத்தாவிலும் டில்லியிலும் பிறந்திடக் காண்கிறோமே அன்றிப் பீகார் பூகம்பம் அசாம் வெள்ளம் ஆகியவற்றின்போது, தெற்கேயுள்ள மக்கள், 'குடும்ப பாசம்' கொண்டோர் போலாகிப் பணத்தைத் திரட்டி அனுப்பினார்களே, அதுபோல இதுபோது வடக்கே, யாரும் கிளம்பிடக் காணோம்.

வடக்கே அமைந்திருக்கிற சர்க்கார், பண உதவி தருகிறது என்றால், அது கருணையுமல்ல, கனிவுமாகாது, கடமை —வேறென்ன ? நமக்கும் துரைத்தனமாக இருக்கிறது, நமது வரிப்பணத்தையும், தோலை நீக்கிச் சுளையாகக்கொண்டு செல்கிறது. வாழ்விலே வளம் பிறக்கத்தக்க வழியை எல்லாம் தன் கரத்தில் வைத்துக்கொண்டிருக்கிறது. செல்வப் பெருக்கத்துக்கான வாய்ப்பு அவ்வளவும் தன்னிடம் வைத்துக்கொண்டிருக்கிறது. இந்நிலையில் இயற்கையாய் விளைந்துள்ள கோரம் மிகுந்த இடர்ப்பாட்டிலே சிக்கி நாம் சீழியும்போது பணம் தரவேண்டிய பொறுப்புக் கூடவா கிடையாது? இதைச் செய்வதால் வடக்கு தெற்கு என்ற பிரச்சினை எப்படி நின்றுவிடும் ? வாயடைத்துப் போகுமோ !! என்ன மந்த மதி ? கூர்ந்து பார்க்கும்போது, வடககு—தெற்கு என்பது பற்றிய பிரச்சினையின் உண்மையல்லவா, மேலும் பளிச்செனத் தெரிகிறது. நமது தமிழகத்தில் ஒரு பெரும் விபத்து நேரிட்டிருக்கிறது, இலட்சக்கணக்கான மக்கள் துயருற்றுக் கிடக்கின்றனர், கோடிக் கணக்கில பொருள் நஷ்டம், உயிர்ச் சேதம் உள்ளத்தை வேகவைக்கும் நிலையில், ஐயோ ! என்று அலறும் மக்களுக்கு ஆறுதலளிகக, எல்லாம் இழந்தோமே, ஏதும் அற்றவர் ஆனோமே என்று கதறும் மக்களைத் தேற்ற, பிணக் காடாகிப் போன நஞ்சையை மீட்டிட, ஊர்களை வெள்ளக் காடுகளிலிருந்து வெளியே கொண்டுவர, வீடிழந்தோருக்கு ஒரு குடில் அமைத்துத் தர, இவைகளுக்கான பெரும் செலவுக்கான பணம் நம்மிடம் இல்லையே! தங்கம் விளையும் நாட்டிலே, இதற்குப் பணம் இல்லையே ! ஏன் ? செல்வம் கொழிக்கும் நாடுதானே, இயற்கையமைப்பின்படி. இங்குள்ள நாம், கையேந்தி நிற்கிறோம். கண்ணீரைப் பொழிகிறோம், கருணை நிதி நிறைந்தோரே ! எமக்கு வந்துற்ற கொடுமையைக் கண்ணால் பாரும், உதவி புரிந்திட முன்வாரும் ! என்று இறைஞ்சி நிற்கிறோம், விளைந்துள்ள பெரு நஷ்டத்தைக் கண்டு, நிலைமையை மீண்டும் சீராக்கப் பல கோடி தேவைப்படுமே,

என்ன செய்வது, பேழையோ கல்லார் மனம் போலக் காலி யாகக் கிடக்கிறது என்றெண்ணி அமைச்சர்கள் திகைக்கிறார் கள். ஏன் இந்த நிலைமை? வடக்குக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதாலல்லவா? தெற்குத் தேய்ந்து போனதாலல்லவா?

வடக்கு ஆதிக்கம் செலுத்தாமல், இங்குள்ள செல்வத் தைச் சுரண்டாமல், தொழிலைப் பாழ்படுத்தாமல், தெற்கு வளர வழி செய்திருந்தால், நாம் ஏன் இன்று பிச்சைப் பாத்தி ரத்தை ஏந்தும் இழிநிலையில் இருக்கப் போகிறோம்? இங்குள்ள மக்களின் உழைப்பு உடலும் உயிரும் ஒன்றியிருக்க மட்டுமே பயன்படுகிறது—துரைத்தனத்துக்கு உள்ள அதிகாரமோ, மக்கள் பசியால், போதாமையால், இல்லாமையால், இப்படி ஏதேனும் ஒரு வகையில் சாவதற்கு முன்பு 'தற்கொலை' செய்து கொள்ளாமல் தடுத்து நிறுத்திவைக்க மட்டுமே பயன்படும் வகையில் அமைந்திருக்கிறது. எனவேதான், கையேந்தி நிற்கி றோம். இந்தக் கேவலம் தெரியத்தானே செய்கிறது! தமிழ கத்திற்கு வந்துற்ற விபத்து உண்டாக்கியுள்ள வடுக்களைப் போக்கும் அக்கறை இருந்தும், இங்குள்ள சர்க்காருக்கு ஆற்றல் இல்லையே! வாஞ்சனை இருக்கிறது, வசதி இல்லை! கருணை பிறக்கிறது, காசு இல்லை! பேரன்பு கொண்டோரிடம் பேழையில் பணம் இல்லை! ஏன்? எல்லாம் டில்லியில் ஒப்படைக்கப்பட்டிருப்பதால்தானே?

பசியால் துடிக்கும் குழந்தை, பால்வேண்டி, தாயின் மார்பினைச் சுவைத்து, பால் காணாது கதற, சேய் அழக்கண்டு தாய் அழுவது போல, குடில் இழந்து குடும்ப மணிகள் இழந்து கதறும் மக்கள் காமராஜரைக் கண்டு கையேந்தி நிற்கிறார்கள் —அவர் கண்களைத் துடைத்துக்கொண்டு, நேருவிடம் கையேந்தி நிற்கிறார்! இதுதானே நிலைமை? இது, வேதனைக் கிடையிலும், நமது இழி நிலைமையைத்தானே காட்டுகிறது. வடக்குக்கு உள்ள ஆதிக்கம் விளக்கமாகிறதே! யார் அறிந்து கொள்ளமாட்டார்கள் இதனை. எனினும் இந்த நேரத்திலும் நம்மைக் குத்துவதிலே, அமைச்சர் சுப்பிரமணியனாருக்கு ஒரு அலாதி மகிழ்ச்சி! திருவல்லிக்கேணியும் திருமயிலையும், 'நம்ம சுப்பிரமணியம்' என்று அணைத்துக்கொள்ள வேண்டுமே, ஆச்சாரியார் என் குருநாதர் என்று கூறிப் பூஜித்தால் மட்டும் போதுமா, 'அதுகளை'யும் சாடினேன் என்று காட்டினால் தானே, 'என்னதான் சொல்லுங்கோ, நம்ம சுப்ரமணியத் துக்கு உள்ள புத்தி தீட்சணியம், இந்தக் காமராஜுக்குக் கிடையாது' என்று அக்கார வடிசல் கிடைக்கும். அதற்காக அவர் அர்த்தமற்றதைப் பேசுகிறார்.

வடக்கு தெற்கு என்ற பிரச்சினை, வெள்ளம், விபத்து, அவதி, அல்லல், இவைகளுக்காகத் தரப்படும் உதவி, இவற்று

டன் நின்று போவதல்ல. அரசியல் என்பது அன்னதான சமாஜமுமல்ல, உரிமைக் கிளர்ச்சி என்பது உண்டிப் பெட்டி நிரம்பிவிட்டால் கருகிப்போவதுமல்ல. காட்கில் என்னும் மாவீரர் முழக்கமிடுவதுபோல தன்மானத்தை இழந்துவிட எந்த ஆண்மகனும் சம்மதியான், கற்பை இழந்திட எந்தக் காரிகையும் சம்மதிக்க முடியாது. அதுபோன்றே உரிமையை இழந்திட எந்த நாடும் ஒருப்படாது.

சப்ரமஞ்சக் கூடம், சல்லாத் துணி, ஜரிகை வேலைப்பாடு, சந்தனம் பன்னீர்—என்று காட்டி, கற்பைச் சூறையாடுபவன் பேசுவதாகக் கதைகளில் படிக்கிறோம். கனம் சுப்பிரமணியமோ, சவக்குழி தோண்ட மண்வெட்டி உதவினனே மகானுபாவன், அவன் பாதம் போற்றுதும் என்று பேசிடும் பேதைமை போல, ஆதிக்கம் செலுத்தும் வடக்கு, நம்முடைய செல்வத்தைச் சுரண்டி வைத்துக்கொண்டு, கொடுமையில் சிக்கித் தவித்திடும் வேளையில் கொஞ்சம் தாராளம் காட்டுகிறதே, அதுவே போதும் என்கிறார்; அதனால் நாம் வாயடைத்துப் போவோம் என்று வேறு எண்ணுகிறார்—சொல்லவும் துணிவு கொள்கிறார்.

தனக்கென்று ஓர் இலட்சியம் கொண்டோர் எவரும், அதற்சான பணியாற்றுகையிலே, குறுக்குப் பாதைகள் கண்டால் அதிலே நுழைந்து, இலட்சியத்தை இழந்துவிடச் சம்மதிக்கமாட்டார்கள். இலட்சியத்தை நோக்கிச் செல்வோருக்கு, அதற்கான ஆக்கமும் ஊக்கமும் அளிப்போரே தலைவர்கள், நண்பர்கள், வழிகாட்டிகள், ஞானசிரியர்கள் இடையில் இளநீர் கொடுப்போர் நன்றிக்கு உரியோர், இதயம் நோகப் பேசுவோர் பரிதாபத்துக்குரியோர், உடனிருந்து கெடுப்போர் கண்டனத்துக்கு உரியோர், பாதையில் பயணத்தின் கடுமை தாங்கமாட்டாமல் பட்டுப்போவோர், அனுதாபத்துக்குரியோர். அமைச்சர் சுப்பிரமணியனாருக்குச் சிலபல அலுவல்கள் உள்ளன—தரப்பட்டுள்ளன! அவ்வளவே தவிர, அவர் ஓர் இலட்சியத்துக்காகப் பணியாற்றும் பொறுப்பில் ஈடுபட்டவரல்ல. எனவேதான் அவர் குரு பக்தியைக் கொட்டுவதிலும், நம்மைக் குத்துவதிலும் குதூகலம் காண்கிறார். காணட்டும், களிப்பூட்டப்படட்டும். நமக்கேதும் நட்டமில்லை. தமக்கென்று ஓர் குறிக்கோள், அது குறையுடையதோ நிறை மிகுந்ததோ, நாடு கொண்டாடுவதோ அல்லவோ, தன் நெஞ்சார நம்பும் ஓர் குறிக்கோளுக்காகப் பணியாற்றும் எந்தத் தலைவரும், அதற்குக் குந்தகம் விளைவிப்போர் எவ்வளவு பெரியவராயினும், பெருநிலையைப் பிடித்துக் கொண்டவராகவே இருப்பினும் குருபீடத்தில் அமர்ந்திருப்பவராகவே இருப்பினும்கூட, அவரைவிட்டு விலகவும், வேறு

பாதை தேடவும், அவர் மூலம் இழிவும் பழியும் கிடைப்பதா யினும் ஏற்றுக்கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் இடுப் பொடிந்ததுகளும், ஆசை அலைமோதுவதால் அங்கலாய்ப் போரும் அடிவருடிகளாகி ஏசலை வீசினும் பொருட்படுத்தா மல், எடுத்த காரியத்தை முடித்திடும் நோக்குடன் பணி யாற்றுவர்.

நேரு பண்டிதருடன் அமைச்சர் சுப்பிரமணியனுருக்கு உள்ள தொடர்பு, நாடு அறிந்ததுதான். நேரு பண்டிதரின் தர்பார்களிலே உள்ள பத்துப் பதினுறு தலையாட்டும் துரைமக ஞர்களிலே இவர் ஒருவர் என்ற அளவிலே உள்ள தொடர்பு தான்!

மராட்டிய மண்டலத்து காட்கில் அப்படி அல்ல.

நேரு பண்டிதருடைய எழுச்சி மிக்க வரலாற்றிலே, காட் கில் ஒரு சிறப்பான இடம் பெற்றவர்; உடனிருந்து பணியாற் றியவர்; விடுதலைக் கிளர்ச்சியில் முன்னணியில் நின்றவர்.

அவருக்கு அமைச்சர் அலுவல் இல்லை; எனவே ஆசாபா சத்துக்கு ஆட்பட வேண்டிய கேவலம் ஏற்படவில்லை; அவருக்கு ஓர் குறிக்கோள் இருக்கிறது; எனவே அவர் பூஜித்துக்கிடக்க மறுக்கிருர், இலட்சிய முழக்கமிடுகிருர்—குருபக்தி—கட்சிப் பாசம்—பதவியில் பற்று—அதிகாரத்தைக் கண்டு அச்சம்— இவைகள் தலைகாட்ட மறுக்கின்றன. டில்லி ஆட்சி மன்றத் திலே அஞ்சா நெஞ்சுடன் பேசுகிருர். நேசம் மறக்கவில்லை, பாசம் பட்டுப் போகவில்லை. எனினும், இவைகளுக்காகக குறிக் கோளை இழக்க முடியாது என்று முழக்க மிடுகிருர்.

அவ்வளவு பெரியவர் தொட்டிழுத்த போது, நான் என்ன செய்ய முடியும் என்று வாதாடுபவளைப் பத்தினியாகவா கொள்ள முடியும்?

நாளைக்கு அவர் எவ்வளவு பெரியவராவாரோ, யார் கண் டார்கள்? இன்றே எனக்கு அவர் நெஞ்சம் கிடைத்து விட்டது என்றெண்ணிப் பூரித்திடுவாள், கண்டாரைக் கொல்லும் காரிகை.

காட்கில், எவ்வளவு பெரியவராலுல் என்ன, உரிமை எல் லாவற்றிலும் பெரிது என்கிருர். அமைச்சர் சுப்பிரமணியம் இப்படிப்பட்டவர்கள் வாயடைத்துப் போக வேண்டும் என்று தவமிருக்கிருர்.

காட்கில் கேட்கிருர், தன்மானம், கற்பு, உரிமை இவை தமை இழக்க எப்படி முடியும் என்று.

வெள்ளத்துக்கு உதவி செய்கிறது வடக்கு, எனவே அதற்கு வெள்ளாட்டியாக இருப்பதிலே வெறுப்படைவதோ, வெஞ்சா

மரம் வீசுவதைக் கண்டிப்பதோ கூடாது; அப்படி எல்லாம் பேசுபவர்களின் வாய் இனி அடைத்துப் போகும் என்கிருர், சுப்பிரமணியனர்.

தேசீய உணர்ச்சி இல்லையா, மராட்டியருக்கு மராட்டிய மண்டலம் என்று பேசுகிறீரே, என்று இங்கு நம்மைச் சுப்பிரமணியர்கள் கேட்பது போல, காட்கிலைக் கேட்கிருர்கள். சந்தனமே! மணமாக இரு! என்று சொல்வாருண்டா? மராட்டியர்களைப் பார்த்து, தேசிய உணர்ச்சி கொள்ளுங்கள் என்று கூறுகிறீர்களே, என்று காட்கில் கேலியால் அவர்களைக் கொல்கிருர்.

வெட்டும் குத்தும், கலகமும் குழப்பமும், இரத்தக் களரியும் கூட நடத்த முடியும்—இவை போன்ற முறைகளிலெல்லாம் ஈடுபட வேண்டிய அளவுதான், நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது, என்று எச்சரிக்கையே செய்கிருர், காட்கில்.

"இராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் மராட்டியர்களைக் குறித்துக் கூறியுள்ள கருத்து, மராட்டிய இனத்தை இழிவுபடுத்துவதாக இருக்கிறது. கடந்த 600 ஆண்டுக் காலத்தில் இப்படிப்பட்ட இழிமொழியை மராட்டியர் மீது யாரும் வீசியதில்லை. இந்த இழிவைத் துடைத்திட, பதிலளித்திட எமக்குத் தெரியும்—ஆனல் அந்த முறைகள் இன்று சரியானவை என்று ஏற்றுக் கொள்ளப் படாதனவாக உள்ளன—குடி அரசுக் கோட்பாட்டுக்கு முரணனவைகளாகவும் உள்ளன," என்று மனம் குமுறிப் பேசுகிருர் காட்கில்.

பதிலளிக்கத் தெரியும்—பதிலளிக்கும் முறைகள் உள்ளன—என்று காட்கில் கூறினரே, தம்பி! அதிலேதான், கொலை கொள்ளை, குத்து வெட்டு, இரத்தக் களரி யாவும் அடங்கியுள்ளன.

மராட்டியரை மட்ட நிலையில் வைத்திடவும், அவர்களின் உரிமைக்கு உலைவைக்கவும், இன்று டில்லியில் ஓர் அரசு முயற்சிக்கும் போது அதே இடத்திலிருந்து பாதுஷாக்கள் முயன்ற காலமும், அந்த ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமும், மாவீரன் சிவாஜியின் பரம்பரையில் வந்த காட்கில் அறிவாரல்லவா? அமைச்சர் சுப்பிரமணியம் அவ்விதமல்லவே, அவர் இராமனுக்குத் தாசனுன அனுமனின் பிரபாவம் பற்றிய பெருங் கதையைப் பயபக்தியுடன் கேட்டு இரசிப்பவர் தானே! எனவேதான், குருபக்தியையும், குருவின் மனம் மகிழும் என்ற எண்ணத்தில் நம்மைத் தாக்கிப் பேசுவதையும் செய்து காட்டியிருக்கிருர்.

குறிக்கோள் கெடுகிறது என்று தெரிந்தால், சிலருக்குக் குருபக்திகூட மெள்ள மெள்ளக் குறைந்துவிடத் தொடங்கு கிறது என்பதை விளக்கும் வகையில், நண்பர் ம.பொ, சிவஞா னம் அவர்கள் இப்போது எழுதுகிருர்.

அவருடைய குறிக்கோள் 'மொழிவழி அரசு' என்கிருர்.

இதுதான் சாலச் சிறந்தது, மற்ற குறிக்கோள்கள் யாவும் போலி என்கிருர்.

மற்றக் குறிக்கோள்கள் யாவும் போலி என்று தன்னைத் தானே நம்ப வைத்துக் கொண்டால்தான், தான் மேற்கொண் டுள்ள குறிக்கோளிடம் தமக்கே ஒரு அச்சம் கலந்த ஆர்வம் பிறக்கும் என்று எண்ணுகிருர் போலும். எப்படியோ இருக் கட்டும்—அவர், மொழிவழி அரசு கிடைத்திடப் பணியாற்று வதைத் தமது கழகத்தின் தலையாய கொள்கையாகக் கொண் டிருக்கிருர். அதேபோது அவருக்கு நேரு பண்டிதரிடம் 'பக்தி' உண்டு; காங்கிரஸ் கட்சியிடம் 'பாசம்' நிரம்ப.

நேரு பண்டிதரை யாராவது—கண்டித்தால்—ம. பொ. சி. க்கு எரிச்சல் எழுகிறது. பண்டிதரைப் பதட்டமாகக் கண் டிக்கும் பதர்களை விட்டு வைக்கமாட்டேன் என்பார். தாய்—சேய்—உறவு, எனக்கும் காங்கிரசுக்கும் என்று அனுதைப் பிள்ளை ஆக்கப்பட்ட பிறகுங்கூடக் கூறுகிருர்.

நேரு பண்டிதரின் அமோகமான அறிவாற்றல்தான் என்னே ! அவருக்கு உலக அரங்கிலே கிடைத்துள்ள பெரும் புகழ்தான் என்னே ! என்னே ! என்று வியந்து கூறுகிருர்.

தமிழர்களை மிக மிகத் தாழ்வாக நேரு பண்டிதர் கண் டித்த போது தம்பி ! சீறி எழுந்து, கிளர்ச்சி நடத்தி, கடும் தண்டனைகளை ஏற்றுக் கொண்டவர்கள் நாம்—அவரல்ல. அவர், நேரு பண்டிதரைக் கண்டிக்காதது மட்டுமல்ல, முட் டாள்கள் ! சிறுபிள்ளைத் தனம் ! என்று நேரு பண்டிதர் இவர் களையா ஏசிப் பேசினுர், எங்களையன்றோ அது போல் பேசி ஞர், அற்காக இவர்கள் ஏன் கிளர்ச்சி செய்தனர் ? அடாது ! அடாது ! ! என்று பேசவே செய்தார். அவ்வளவு குருபக்தி அவருக்கு. ஆனுல் இப்போது, நேரு பண்டிதரின் போக்கு, மொழிவழி அரசுக் கொள்கையைப் போற்றுவோரைப் புல்லர்கள் என்று கண்டிக்கும் வகையினதாகவும் இருந்திடக் காண்கிறேம்—குருபக்தியின் வேகம் குறைகிறது ! !

தோற்ருல் துடிப்பார் ! பொய் பேசுவார் !
ஆவேசமாடுவார் ! குப்புற விழுந்தார் !

என்று ம. பொ. சி. இப்போது எழுதுகிருர்—நேருவைப் பற்றி.

'பிறர் தகுந்த காரணத்துக்காக' தடியடி சிறை என்று அஞ்சாமல் நேருவை எதிர்த்து நியாயமான முறையில் கிளர்ச்சி நடத்திய போது, எங்கள் நேருவுக்கா கண்டனம்? எற்றுக்கு? பாரத நாட்டின் அந்தஸ்தைப் பாரெல்லாம் உயர்த்தி விட்டாரே, அதற்கா? பஞ்சமும் நோயும் பாரத நாட்டிலா என்று கேட்டுப் போரிட்டு அவைதமை விரட்டி அடித்தாரே, அதற்கா? எதன் பொருட்டய்யா, எம்மானை, நேரு பெம்மானைக் கண்டிக்கிறீர்? என்று காய்ந்து கேட்டா ரல்லவா, அதே ம. பொ. சி.க்கு, 'மொழிவழி அரசு' என்பது வெறும் வறட்டுக் கூச்சல், வகைகெட்ட திட்டம், பொருளற்ற வாதம், புத்தி கெட்ட பேச்சு என்றெல்லாம் பொருள்படும்படி நேரு பேசுகிறார் என்றதும், கோபம் கோபமாக வருகிறது. கொதிக்கிறார், குமுறுகிறார், கோல் எடுக்கிறார், நேருவைத் தாக்க! குருபக்தி குறைகிறது, குலைகிறது!!

தனக்கு வரும்போதுதான் தெரிகிறது, தலைவலியும் காய்ச்சலும்.

பெர்ய்யர்—புரட்டர்—ஆவேசக்காரர் என்றெல்லாம் ஒருபோதும் எமது ம. பொ. சி. கூறமாட்டார் என்று கூறும் சிலர் உளர், தம்பி! மிகச் சிலர். எனினும் அவர்களுக்கும் நாம் விளக்கமளிப்பதுதான் கண்ணியம்.

தமது அந்தஸ்து தாக்கப்படும் போது, தம்முடைய கருத்திலே காலூன்றி நிற்க முடியாத போது, தோல்வி மனப்பான்மை கொண்டு மற்றவர்களுக்குச் சவால் விட்டுப் பேசுவது நேருஜீயின் சுபாவமாகி விட்டது.

ம. பொ. சி. தமது ஏட்டில் தீட்டுகிறார் இதனை:

சவால் விடுவது நேருவின் சுபாவம்.

தோல்வி மனப்பான்மை கொள்ளும் போது இவ்விதம் நேரு சவால் விடுவார்.

தமது அந்தஸ்து தாக்கப்படும் போது, இவ்விதம் சவால் விடுவார்.

தம்முடைய கருத்து நிலைக்காத போது சவால் விடுவார்,

இவ்வளவு கண்டனங்களையும் மணிகளாக்கித் தமது சொற் சிலம்புக்குள் போடுகிறார் ம. பொ. சி. இம்மட்டோ! இதோ மேலும்:

பெரிய பதவியிலிருக்கும் நேரு உண்மைக்கு மாறாகப் பேசியிருக்கிறார்.

ராஜ்யங்களைத் திருத்தி அமைப்பதில் மொழிக்கு முக்யத்துவம் கொடுக்கத் தாம் தயாராக இல்லை யென்றும் நேரு ஆவேசத்துடன் கூறியிருக்கிறார்.

மொழிவாரி இனங்களிடையே எழுந்த உரிமைக் கிளர்ச்சி, அவருடைய முதுக்கு மண் காட்டி விட்டது! அந்தத் தோல்வியை மறைக்க என்னென்னவோ பேசுகிருர்.

குருபக்தி, ம. பொ. சி. யை, நேருஜீ, தலைவர் நேரு என்றெல்லாம் அர்ச்சிக்கச் சொல்கிறது; கொள்கையோ, நேரு பண்டிதரை, வீணுரை பேசுவோர், குப்புற விழுந்த பிறகும் வீரம் பேசுவோர், பொய்யர் என்றெல்லாம் கூறச் சொல்கிறது.

அடக்கமாகத் துவக்க வேண்டும், இல்லையானுல் அவர்கள் போலாகி விடும் என்று கவலை குடைகிறது. கண்டிக்காமல் இருக்கக் கூடாது, கண்டிக்காது விட்டோமாயின் கொள்கை புதைகுழி செல்லும் என்று அச்சமும் துளைக்கிறது. எனவே, நேருஜீ என்ற மரியாதையும், உண்மைக்கு மாருகப் பேசுகிருர் என்ற கண்டனமும் ஒன்ருேடொன்று ஒட்டிக் கொண்டு வெளி வருகின்றன.

“மேன்மை தங்கிய ஐயனே! தங்கள் மீது சிறுதூசும் வீசும் நோக்க முடையேனல்லேன். எனினும், என் துப்பாக்கிக் குண்டு பாய வேண்டிய இடத்தில் தாங்கள் இருப்பதால் தங்கள் மீது சுட வேண்டி இருக்கிறது,” என்று கூறிஞனும், கைத்துப்பாக்கியால் ஒருவனைக் கொல்லக் கிளம்பியவன். அது போல், உண்மைக்கு மாருகப் பேசுகிருரே, என்று எழுதுகிருர், ம. பொ. சி., குருபக்தி குலைகிறது என்பதுதானே பொருள்? கொள்கையின் வழி பணியாற்றப் புகும்போது, குருபக்தி குறுக்கிட்டாலும் அதனைச் சமாளிக்கத்தான் வேண்டும். அந்த நிலைமை, ம. பொ. சி. க்களுக்கும் வந்தே தீரும் என்பதை இச் சம்பவம் விளக்குகிறது.

சுப்ரமணியஞர், தமக்கு அந்தச் சங்கடத்தை வைத்துக் கொள்ளவில்லை.

மொழி, இனம், உரிமை, இவைகளெல்லாம் அவருக்குச் சொற்ருெடர்கள்!!

பதவி, பவிசு, இவை அவருக்குப் பொருளுள்ளவை.

இவை தாக்கப்படாதிருக்கும் வரையில், அவரால் நிம்மதியாகக் குருபக்தி காட்டிக் கொண்டிருக்க முடிகிறது.

காட்கில் போன்ருேர் கடும் கோபம் கொள்வது போலவோ, ம. பொ. சி. போன்ருேர் சிந்தாகுலராவது போலவோ, சுப்ரமணியஞருக்குச் சங்கடம் நேரிடுவதில்லை. அவருக்கு அதனல், ‘குருபக்தி’யை வெளியிட்டுக் கொண்டிருக்க முடிகிறது; செய்கிருர்; செய்யட்டும், பாவம், இதையேனும்.


"என்ன புத்திக் குறைவடா, சீடா ! கீழே விழுந்த பொருளைக் கண்டெடுக்காமல் விட்டுவிட்டு வந்தனையே. ஈதோ உன் குருபக்தி ?" என்று கேட்டார், குருநாதர்; பயணத்தில் அவருடைய பீதாம்பரம் தவறி கீழே விழுந்து விட்டதைச் சீடன் கவனியாமலிருந்ததால். சீடன், "புத்தி! குருதேவா! புத்தி புத்தி", என்று கூறிவிட்டு, பிறகு மிகக் கவனமாக, கண்ணுங் கருத்துமாகப் பணிபுரிந்து வந்தான். முடிவு என்ன தெரியுமா தம்பி ? மடம் போய்ச் சேர்ந்ததும் ஒரு பெரிய 'மூட்டை'யைக் கொண்டு போய், குருவின் முன் வைத்து, சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான் சீடன். "என்னடா இது ?" என்று கேட்டார் குரு.

"ஒன்று விடாமல் எடுத்து வந்தேன். கீழே விழுந்ததையெல்லாம் எடுத்து மூட்டை கட்டிக் கொண்டு வந்தேன்" என்று கூறி, மூட்டையைப் பிரித்துக் காட்டினுன் சீடன். அவ்வளவும் குதிரையின் லத்தி. (மலம்)

குரு—சீட தொடர்பில் இப்படியெல்லாம் 'ரகம்' இருந்திருக்கிறது. கனம் சுப்பிரமணியம் இதில் ஒரு ரகம். பாவம்!

அன்புள்ள,

25—12—1955



கடிதம் : 32

# "பாவி, பொல்லாதவன்..."

★ வாஷிங்டன் கதை—இராமாச்சாரி கதை—
தட்சிணப் பிரதேசமும் தமிழ்நாடும்—
டில்லியின் ஆதிக்கம்.

தம்பி,

அந்தக் காரியாலயத்துக்குத் தலைமை அதிகாரியாக வேலை பார்க்க வந்த இளைஞர், மேனாடு சென்று, பல அலுவலகங்களின் வேலை முறைகளைக் கண்டறிந்து வந்தவர்.

இதுவரையில்தான் இராமாச்சாரி தலைமை அதிகாரியாக இருப்பவர்களை ஏய்த்து வந்தார். இனி அவர் 'ஜம்பம்' பலிக்

காது ; புதியவர் நெருப்பு என்கிறார்கள் ; சோம்பேறித் தனமாக இருப்பவர்கள், சூதாக நடந்து கொள்கின்றவர்கள், தவறான வழி செல்பவர்கள் ஆகியோரைக் கண்டு பிடித்து விடுவார், என்று அலுவலகத்து ஊழியர்கள் பேசிக் கொண்டனர்.

நீண்ட காலமாகத் தன்னிச்சையாக நடந்துகொண்டு வந்த இராமாச்சாரிக்கு இனி பிடித்தது தலைவலி என்றனர்.

இரண்டு மாதங்கள் சென்றன ! அலுவலகத்திலே புதிய கண்காணிப்பு, புதிய கண்டிப்பு.

எந்த வேளையிலோ தலைமை அதிகாரி குறை கண்டு பிடித்து விடுகிறாரோ, அதனாலே என்ன தண்டனை கிடைக்குமோ, என்று பயந்து பயந்து பணியாற்றி வந்தனர்.

எல்லோருக்கும் இராமாச்சாரிக்குத்தான் முதல் தாக்குதல் கிடைக்கும் ; அவருடைய 'சீட்டு'தான் கிழிக்கப்பட்டு விடும், என்று பேசிக் கொண்டனர்.

இரண்டு மாதம் சென்றதும், இராமாச்சாரிக்கு, வேலை உயர்ந்தது !

மற்ற யாரையும்விட திறமையில் குறைவானவர், தில்லு முல்லு செய்பவர், இராமாச்சாரி அப்படிப் பட்டவருக்கு 'மேலிடம்' தரப் பட்டது கண்டு பலரும் திகைத்தனர்.

புதிய மேலதிகாரி, எதையும் நுண்ணறிவுடன் கண்டு பிடிக்கக் கூடியவர் என்றல்லவா எண்ணிக் கொண்டோம். இராமாச்சாரி சூதுக்காரன் என்பதை எங்கே கண்டறிந்தார் ? தெரிந்திருப்பாரானால், அவனுக்கா மேலிடம் தருவார் ? என்று பேசிக் கொண்டனர்.

இராமாச்சாரிக்கு மேலிடம் கொடுத்தது மட்டுமல்ல, மேலதிகாரி மேகநாதன் அவரை வெகுவாகப் பாராட்டி, குறிப்பும் எழுதி வைத்தார்.

"பயல்கள் இஞ்சி தின்ற மந்தி போலாகி விட்டார்கள். புதிய மேலதிகாரி வந்ததும் என் தலை மீதுதான் கைவைப்பான் என்று பேசிக்கொண்டனர். இப்போது, அவனே எனக்கு மேலிடம் கொடுத்ததுடன், என் திறமையைப் புகழ்ந்து குறிப்பும் எழுதி இருக்கிறான். காரணம் என்னவென்று கண்டுபிடிக்க எல்லோரும் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டு கிடக்கின்றனர் !" என்று கேலி செய்தார் இராமாச்சாரி, தன் 'பார்யாளிடம்' பேசும்போது.

"நீர்தான், யாரையும் சொக்குப்பொடி போட்டு விடுவீரே ! உம்மோட சமர்த்து நேக்கல்லவா தெரியும் ?" என்றாள் சகதர்மிணி.

“உன்னுலேகூட அப்பாவோட சாமர்த்தியத்தைக் கண்டு பிடிக்க முடியாதடி அம்மா” என்றுன் வாசு—இராமாச்சாரி யாரின் ஏகபுத்ரன்.

“அப்படிச் சொல்லுடா, சிங்கக் குட்டின்னேன். இவ என்ன, இவளைப் படைச்ச பிரம்மதேவன் வந்தாலும், என் னேட முறைகளைக் கண்டுபிடிக்க முடியாதுன்னேன்” என்று பெருமை பேசினுர் இராமாச்சாரி.

“உம்ம பிரதாபத்தை நீரே பேசிண்டிரும், நேக்கு நேர மில்லை, அதை எல்லாம் கேட்டுண்டிருக்க, நேந்திரங்கா வந் திருக்கு, ‘பொடி மாஸ்’ பண்ணனும்” என்று கூறி விட்டு, அம் மையார் அடுக்களை சென்றபிறகு, மகன் கேட்டான் தந்தையை, “எப்படியப்பா, மடக்கினீர்? என்னமோ இலண்டன் போய் வேலை கற்றுண்டு வந்தானுமே, வெள்ளைக்காரனிடம்” என்று.

“வெள்ளைக்காரனிடம் வேலை கத்துண்டு வந்துவிட்டா, போதுமாடா! எல்லாம் ஏட்டுப்படிப்புத்தானே! ஒரு விநாடி யிலே நான் அவனை எடை போட்டுவிட்டேன். நிறைய படிச் சிருக்கான், ஆகையாலே ஜீரணமாகி இராது என்பது புரிந்தது. சரி, இவனைச் சுலபமாக மயக்கலாம்னு, தைரியமும் வந்தது. ஒரு நாள், ரயிலுக்கு ஒரு பத்து பார்சல் அனுப்புவதற்கு, பார்சல் கிளார்க், மோசஸ், வேலை செய்துண்டு இருந்தான். அவன் ஒரு முசுடு. உலகத்தையே பறிகொடுத்தவனுட்டம் எப்பவும் ‘உம்’முனு இருப்பான். ஒரு காரியம் அவனுலே ஆகவேண்டி இருந்தது. அங்கே போயிருந்தேன் — கிடங்கு அறைக்கு

மோசஸ் வழக்கப்படி, கூலியாட்களை வாய்க்கு வந்தபடி வைதுண்டு இருந்தான்; அதனுலே அவாளும் வேலையை ஒண் ணும் பாதியுமா செய்துண்டிருந்தா. ஆனு ஒரு பய மட்டும், ரொம்ப சுறுசுறுப்பா வேலை செய்துண்டிருந்தான். நான் அவனையே கவனிச்சிண்டிருந்தேன் என்பது அவனுக்குத் தெரியாது.

மோசஸ் நாற்காலியில் உட்கார்ந்துண்டு, நாயே! பேயே!ன்னு கூலியாட்களைத் திட்டிண்டு இருந்தான். நானும் அவனேடு சேர்ந்துண்டு திட்டுவது உண்டு—சில வேளைகளிலே நாலு தட்டுகூடத் தட்டுவதுண்டு. அப்படிப்பட்ட எனக்கு அன்னக்கி வேறுவிதமா நடந்து கொள்ளோணும்னு எண்ணம் வந்தது.

“மோசஸ்! தொழிலாளிகளை இப்படி அமுல் செய்தா, வேலை எப்படி சரியா செய்வா? இதமாத்தான் பேசவேணும். மேலும், அவாளும் மனுஷ ஜென்மந்தானே. கூடமாட வேலை

செய்தா உன் கௌரவமா கெட்டுவிடும்'' என்றேன். மோசஸ் திகைத்துப் போனன், கூலிக்காரன்லே ஒருத்தன் ரொம்பச் சுறுசுறுப்பா இருந்தான் என்றேன் பார், அவனுடை முகத்திலே ஒரே ஆனந்தம் தாண்டவமாடறது நன்னுத் தெரிந்தது, சரின்னு என்ன செய்தேன் தெரியுமோ, கோட்டைக் கழற்றி வைத்துவிட்டு, நானே பார்சல்களைத் தூக்கறதும் இறக்கறதுமா, கூலிக்காரர்களுக்கு உதவியா இருந்தேன்......''

"ஏன்! ஏன்! அதென்ன பைத்தியக்காரத்தனம்?''

"இதே போல எண்ணிண்டுதான் மோசசும் என்னைக் கேட்டான், என்னுடை செய்கைக்கு என்ன காரணம் என்கிறது, அவனுக்கு எப்படித் தெரியும்...இந்தச் சம்பவத்துக்கு பிறகு, அதாவது மறுநாள், என்னை மேகநாதன் தன் ஆபீஸ் அறைக்கு அழைத்து, வெகுவாகப் பாராட்டி, 'மேலிடம்' கொடுத்தார்.''

"கூலிக்காரர்களுக்கு உதவி செய்ததற்குப் பரிசா ?''

"அப்படின்னு அவன் சொல்லோணுமா ? நாமே தெரிஞ்சுக்கொள்ள வேண்டியதுதான்...''

"ஆமாம்.........கூலிக்காரர்களுக்கு உதவி செய்தீர் என்பதனுலே... ?''

"மண்டு! ஒரு உத்யோகஸ்தன், தன்னுடை அந்தஸ்து, கௌரவம் இவற்றைக் கவனிக்காமப்படிக்கு, ஆபீஸ் காரியம் நடக்கோணும் என்கிறதுக்காக, கூலிக்காராளுக்கு உதவிசெய்தான் என்ரு, அவனுக்கு ஆபீஸ் காரியத்திலே எவ்வளவு அக்கறை இருக்குன்னு அர்த்தம். அவனுடைய நிர்வாகத்திலே வேலை செய்கிறவாளுக்கு, எவ்வளவு அபிமானம் ஏற்படும். அதனுலே காரியாலயத்துக்கு அவர்கள் எவ்வளவு அன்போடு பாடுபடுவா, இதெல்லாம் புரியாதோ, எந்தத் தலைமை அதிகாரிக்கும். அதனுலேதான், கூலிக்காராளுக்கு இவ்வளவு உபகாரமாக இருந்தவனுக்கு உண்மையிலேயே சிலாக்கியமான குணம் இருக்கு என்பதை எண்ணி எனக்கு மேலிடம் கொடுத்தான் மேகநாதன்.''

"சரி, நீர் கூலிக்காரனுக்கு உதவியாக இருந்தீர்—உம்முடைய அந்தஸ்து, கௌரவம் இவைகளைக் கூடக் கவனிக்காமல் பாடுபட்டீர், அவாளோடு பக்குமாகவும் பிரியமாகவும் பேசினீர் என்பது மேகநாதனுக்கு எப்படித் தெரிந்தது ?''

"அசடே! அவன்தான் என்னுடை வேலையைப் பார்த்துண்டே இருந்தானே......''

"பார்த்துண்டு இருந்தான ? எங்கே இருந்து ?''

"அந்தரத்திலே இருந்து! சொல்றேன் கேள். மண்டு! நான்தான் இந்த மேகநாதன் நிறையப் படித்தவன் என்று சொன்னேனே. ஒருநாள் அவன் ரொம்ப சுவாரஸ்யமாக வாஷிங்டன் சரிதம் வாசித்திண்டிருந்தான், பார்த்தேன். வாஷிங்டன் தெரியுமாடா...?"

"தெரியாமலென்ன. அமெரிக்கா பிரசிடெண்டு."

"ஆமாம்! அதைக் கவனிச்சுண்டேன். கூலிக்காரனுக்கு நான் உதவி செய்தது இருக்கே, அந்தச் சூட்சமம், மேகநாதன் வாஷிங்டன் புத்தகத்தைப் படித்ததாலே ஏற்பட்டதுதான். ஏண்டா பேந்தப்பேந்த விழிக்கறே? இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம் என்கிறயோ! இருக்கு. வாஷிங்டனைப்பற்றி ஒரு கதை சொல்லுவாளே தெரியுமா......? ஒருநாள், வாஷிங்டன் வெளியே படை வீரர்கள் வேலை செய்வதைக் கவனித்துக் கொண்டு வரச் சென்றான். ஒரு இடத்தில், பிரம்மாண்டமான மரத்தைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு நாலைந்து போர் வீரர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தலைவனாக இருந்தவன், உதவி செய்யவில்லை, ஆகட்டும் சீக்கிரம், தூக்குங்கள் சோம்பேறிக் கழுதைகளா! என்று மிரட்டிக் கொண்டிருந்திருக்கான், நம்ம மோசஸ் போலவே. அப்போது இன்னொரு குதிரை வீரன் அங்கு வந்தான்—இதைப் பார்த்தான். பார்த்துவிட்டு, ஏன் ஐயா! இவர்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே, நீரும் ஒரு கை கொடுத்து உதவி செய்யக் கூடாதோ? என்று கேட்டான். அவன், ஏய்! யாரைப் பார்த்து அப்படிச் சொல்கிறே, நான் இவர்களுக்குத் தலைவன் என்று அவன் தற்பெருமையுடன் கூறினான். குதிரை வீரன், அப்படியா! அது தெரியாது எனக்கு என்று கூறி விட்டுக் குதிரையைவிட்டுக் கீழே இறங்கி வந்து, மரத்தைத் தூக்குவோருக்கு உதவி செய்துவிட்டு, போகும்போது சொன்னான்: "ஐயா! இதுபோல எப்போதாவது உதவிக்கு ஆள் தேவை என்றால், உடனே எனக்குச் சொல்லி அனுப்பும், வருகிறேன்—நான்தான் வாஷிங்டன், சேனாதிபதி என்றான். எப்படி இருக்கும் அந்தத் தலைவனுக்கு! அசடு வழிந்திருக்கும், பயம் பிய்த்துத் தின்னிருக்கும், மேகநாதனிடம் வாஷிங்டன் புத்தகம் இருப்பதைப் பார்த்ததும் எனக்கு, இந்தக் கதை கவனத்துக்கு வந்தது வந்திருக்கும் குதிரை வீரன் வாஷிங்டன் என்று தெரியாததால்தானே, அந்த அசடன் மாட்டிண்டான். அதுபோல நான் மாட்டிக் கொள்வனோ? அன்று மோசசிடம் திட்டு கேட்டுண்டு அதே போது சுறுசுறுப்பாக இருந்தான் ஒரு கூலிக்காரன் என்று சொன்னேனே, அவன் வேறு யாருமில்லை, சாட்சாத் மேகநாதன்தான்..."

“அதெப்படி உனக்குத் தெரிந்தது......”

“எப்படி என்பது இருக்கட்டும், அது தெரிந்தது. அதனலே தான், எனக்கு வாஷிங்டன் கதை கவனத்துக்கு வந்தது. உடனே இதுதான் மேகநாதனே வளேயக் கட்டச் சரியான சமயம் என்று, கூலிக்காரரானேச் சகோதரராளாக பாவித்து நடத்தவேணும் என்று மோசசுக்குச் சொன்னேன், நானே அவாளோடு சேர்ந்து பாடுபட்டேன். இதைக் கண்டு மேகநாதன் பூரிச்சுப் போகாமலிருக்க முடியுமோ! அதனுலே தான், மறுநாள் என்னைப் பாராட்டி, ‘மேலிடம்’ கொடுத் தான். நான், எப்போதும் இதுபோல வேலையாட்களுடன் சரிசமமாகப் பழகி, உதவி செய்து, பக்குவமாக நடந்துகொள் பவன் என்று எண்ணிக்கொண்டான், அந்த ஏட்டுச் சுரைக் காய். அவன் கண்டானு, என்னுடைது நடிப்பு என்பதை. ஏமாந்து விட்டான். ஆபீசிலே உள்ள அத்தனே பேரும் சேர்ந் துண்டு, அவனிடம் சொல்லட்டும், இராமாச்சாரி சுத்தச் சோம்பேறி, ஒரு வேலையையும் ஒழுங்காகச் செய்ய மாட்டார், எல்லோர் மீதும் எரிஞ்சி விழுவார் என்று சொல்லிப்பார்க்கட் டும்; மேகநாதன் ‘பொறுமை பிடித்தவர்களே, அந்தத் தங்க மான மனஷனே அவ்விதம் சொல்லாதீர், எனக்குப் பிரமாத மான கோபம் வரும். என் கண்ணுலே பார்த்தேன், அந்த ஆசாமி கூலிக்காரர்களிடம் அன்பாகப் பழகி, கூடவே இருந்து வேலே செய்ததை. அவரைப் போய், வாய்க்கு வந்தபடி பேசு கிறீர்களே. வயிற்றெரிச்சல்தானே இதற்குக் காரணம்?’ என்று கூறிக் கண்டிப்பார்.”

“அது சரி, மேகநாதன் அங்கு இருந்தது உமக்கு எப்படித் தெரிந்தது என்பதைக் கூறவில்லேயே......”

“கூலிக்காரர்களிலே ஒருவன், மற்றவர்களேவிட அதிக சுறுசுறுப்பாக வேலே செய்து கொண்டிருந்தான் என்று சொன்னேனல்லவா. அவன் சில சமயங்களிலே மோசசைப் பார்த்த பார்வை எனக்கு ஒரு சம்சயத்தைக் கிளப்பிற்று. மேகநாதன், மாறுவேடம் போட்டுக் கொண்டு வந்து இப்படி வேவு பார்க்கிருனே என்றுேர் சந்தேகம். வாஷிங்டன் புத்த கம் அவன் படித்தானே, அது கவனத்துக்கு வந்தது. வேலேயின் போது, இரண்டோர் நிமிஷம் அவன் தனியாகச் சென்றிருந் தான். பிறகு, அவன் போய்விட்டு வந்த இடத்தை, நான் போய்ப் பார்த்தேன். பாதி இருக்கும், சிகரட், அவன் பிடித் துப் போட்டுவிட்டுப் போயிருந்தான். கூலிக்காரனுவது இப்படி பாதி சிகரெட்டை வீணுக்குவதாவது! சரி, இவன் மாறு வேடம் போட்டுக் கொண்டிருக்கும் மேகநாதன்தான் என்று முடிவுசெய்துகொண்டேன். சிகரெட்டைக்கூர்ந்துபார்த்தேன், விலேயுயர்ந்தது, 555. போதுமல்லவா ஆராய்ச்சி. ஆசாமி,

ஏதேதோ புத்தகத்தைப் படித்து விட்டு இப்படிச் செய்கிறுன். இவனை இதே சமயத்திலேதான் சாய்க்கணும்னு 'பிளான்' செய்தேன். உடனேதான், தொழிலாளியானேன்—தோள் கொடுத்தேன் பார்சலைத் தூக்க. அசடன் அதை நம்பியே விட்டான்."

"பலே! பலே! உன்னுேட சமத்து வேறு யாருக்கும் வராதப்பா."

"புத்தி தீட்சணியம் இருக்கவேணும்; சமயமறிந்து நடக்க வேணும்."

தம்பி! இராமாச்சாரி கதை ஏன் கூறுகிறேன், என்று எண்ணுகிறுய் அல்லவா! இராமாச்சாரிகள் இப்படி நரித் தந்திரம் செய்து, பிழைக்கிறுர்கள் என்பதை விளக்குவதற்காக மட்டுமல்ல, மேனுடு சென்று படித்து, புதிய முறைகளிலே தேர்ச்சி பெற்று ஏடு பல படித்துப் பக்குவம் தேடிடும், மேக நாதர்கள் கண்களில், வெகு எளிதில், இராமாச்சாரி போன்றுர்களால் மண்ணைத் தூவிவிட முடிகிறது. அவர்கள் செய்ய வேண்டிய தெல்லாம், மேகநாதர்கள் மனம் எதிலே இலயிக்கும், என்பதைக் கண்டறியவேண்டியதுதான். அதை அன்பர் ஆச்சாரியார் செய்து நேரு பண்டிதரை எளிதாகத் தம் வலையில் விழச்செய்கிறுர்—முன்பு பல முறை செய்திருக்கிறுர்—இப்போதும் செய்கிறுர். இதை எண்ணிப் பார்த்தபோது எனக்கு இராமாச்சாரி கதை கவனத்துக்கு வந்தது. நாட்டிலே எங்கோ, எப்போதோ நடைபெற்ற சம்பவத்தைத்தான் கதையாக்கினேன் தம்பி!

ஆச்சாரியார், 'தட்சிணப் பிரதேசம்' கேட்டார்; யாருக்கும் உதிக்காத ஓர் ஆற்புதமான யோசனை இவருக்கு உதித்ததே—ஞானவான்களுக்கு எப்போதும் இப்படித்தான், என்று, ஆச்சாரியாரின் திருப்பல்லாண்டு பாடுவதிலே பயிற்சி பெற்ற கூட்டம் பாராட்டிற்று.

தமிழ் நாடு—மிகச் சிறிய அமைப்பு—இந்திய அரசியலிலே இந்தச் சிறிய அமைப்புக்குச் செல்வாக்கு ஏற்படாது—பெரிய அளவில் உள்ள உத்தரப் பிரதேசம், வைத்ததுதான் சட்டமாக இருக்கும், என்று காரணம் காட்டினுர், ஆச்சாரியார்.

எப்போது இதைச் சொன்னுர் என்றுல், ஆந்திரம் பிரிந்த போது அல்ல; ஆந்திரம், கருநாடகம், கேரளம், எனும் அமைப்புகளை எப்படி எப்படி உருவாக்குவது, எந்த அடிப்படையில் என்பதுபற்றி மூவர் கூடி ஒரு அறிக்கை வெளியிட்ட பிறகு!!

தமிழ்நாடு—மிகச் சிறிய அமைப்பு, ஆகவே அதற்குச் செல்வாக்கு இராது என்று கூறினதும், அப்படியானுல், 'சிறிசு

பெரிசு' பார்த்துத்தான் இந்திய அரசியல் நடந்து கொள்ளுமா, நீதி நேர்மைக்கு இடமளிக்காதா—தமிழ்நாடு சிறிய அளவாகவும், உத்தரப்பிரதேசம் பெரிய அளவிலும் இருந்தாலென்ன, எல்லாவற்றுக்கும் 'மேலே' உள்ள அதிகாரி, நேர்மையுடன் நடந்துகொள்ளக் கூடாதோ என்று யாரும் கேட்கவில்லை! கேட்டால் மட்டும் என்ன, ஆச்சாரியார் காதில் போட்டுக்கொள்வாரா! அவர்தான் கேளாக் காதர் என்பதை நாடு அறியுமே.

உலகிலே, பிரிட்டனும் பிரான்சும் அளவிலே சிறிய நாடுகள்—விரிந்து பரந்துகிடக்கும் அமெரிக்காவுடன், உலக அரங்கிலே அவை சமமாகத்தான் நடத்தப்படுகின்றன—அது மட்டுமல்ல, மிகப் பெரிய சீனவுக்கு ஐ. நா. வில் இடமளிப்பதா, வேண்டாமா என்பது பற்றி 'முடிவு' காண, இந்த நாடுகளிடம் முத்திரை மோதிரம் இருக்கிறது.

தனி அரசு நடாத்தும் நாடுகளிலேயே, அளவுபற்றி அல்ல அந்தஸ்து கிடைப்பது என்பதற்கு இதுபோன்ற ஆயிரத்தெட்டு எடுத்துக்காட்டுகள் உள்ளன—தமிழகத்து மன்றங்களிலே தளராது நமது தோழர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

தம்பி! மிகப் பெரிய சீனவை, இராணுவத் திறனுலும் அமெரிக்க உதவியாலும், சிறிய ஜப்பான், ஆட்டிப் படைத்ததே!

ஜப்பான் விமானம் வட்டமிடுகிறது என்ற பீதியில் சென்னை நகரே காலி செய்யப்பட்டதல்லவா-உடைமையுடையோர்களால்!

பெரிய அளவு – சிறிய அளவு என்பதல்ல, ஒரு நாட்டின் செல்வாக்கை நிர்ணயிக்கும் காரணம்—அதற்கு ஏற்ற எத்தனையோ காரணங்கள் உள்ளன.

இவ்வளவு பெரிய நாடுதானே பண்டிதரின் பாரதம், நாள் தவருமல் நானிலத்திலே பல நாடுகளிலே இருந்தும், 'தலைவர்கள்' பவனி வருகிருர்கள், பாராட்டுத் தருகிருர்கள், பொது உடைமைத் தலைவரும் பூரிப்படைகிருர், மத அதிபர் எனத் தக்க முறையிலே உள்ள சவூதி அரேபிய மன்னரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிருர். எனினும், போர்ச்சுகல், போர்க்கோலமே போட்டுக்காட்டுகிறதே, கோவா-என் கொல்லை என்று கொக்கரிக்கிறதே! அளவுதான் ஒரு நாட்டின் நிலையை நிர்ணயிப்பது என்ருல், போர்ச்சுகல் பாரதத்தை நிமிர்ந்து நின்று பார்க்கக் கூட முடியாதே! என்ன செய்ய முடிகிறது பண்டிதரால்? **அகிம்சை பேச முடிகிறது!** அவ்வளவுதானே!!

நாட்டுக்கே அளவு முக்கியமல்ல என்ருல், ஒரே பேரரசில், ஒரு அங்கமாக உள்ளவைகளிலே, ஒன்று பெரிய அளவு, மற்ருென்று சிறிய அளவு என்று இருந்தால் என்ன குடிமுழுகி விடும் ? நீதியுடன் பரிபாலனம் செய்யும் ஆட்சியில், அளவு பற்றிய கவலே கொள்வானேன் !

வங்கமும் பாஞ்சாலமும் துண்டாடப்பட்டுப் போயின—அளவு குறைந்து விட்டன, எனவே அவைகளே, மூலேயில் தள்ள வேண்டியதுதான், தென்னகம் என்ற பெரிய அமைப்பு, ஆந்திரம், தமிழகம், கேரளம், கருநாடகம் என்றெல்லாம் தனி அமைப்புகளாகி விட்டன, சிறிய அளவு—எனவே, சீந்தத் தேவையில்லே, என்று ஒரு அரசு எண்ணுமானுல், நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட மறுக்கிறது என்று பொருள். ஆச்சாரியாருக்கு இந்தச் சந்தேகம் வருவானேன்? ஏதோ ‘வாடை’ அடிக்கிறது.

ஊரிலே உள்ள சுருள் கத்திக்காரனுக்குத்தான் போலீசில் மரியாதை கிடைக்கிறது, சாதுவுக்கு மரியாதை கிடையாது என்று கூறினுல், அந்த ஊர் போலீசின் தரமல்லவா, மிக மட்டம் என்று பொருள் ? பெரிய அளவான அமைப்புக்குத்தான் செல்வாக்கு கிடைக்கும், சிறிய அளவுக்குச் சீரழிவுதான் ஏற்படும் என்று சொல்லும் போது, மேலே உள்ள அரசு, வலுத்தவனுக்கும் இழுந்தவனுக்கும் பெண்டாகும் போக்கிலே உள்ளது என்று ஆச்சாரியார் கருதுகிருர் என்றுதானே பொருள் ? அவரும் ‘ஜாடைமாடையாக’ அதைக் கூறவும் செய்கிருர்—மாகாண ஆட்சி என்று ஒரு புகைக் காட்சிதான் இருக்கிறது. உண்மையில், ‘பாரதம்’ இன்று ஒரு பண்டிதருடைய ஆட்சியில்தான் இருக்கிறது என்று கூறுகிருர். கூறி, அங்கலாய்க்கிருரா, ஆனந்திக்கிருரா என்று தெரியவில்லே.

ஒரு நேரு—என்று அவர் கூறுவதற்கு, ஒரு என்பதற்கு இரண்டு வகையிலும் பொருள் கொள்ளலாம்.

ஒரு—ஒப்பற்ற என்றும் கொள்ளலாம். ஒரே ஒரு தனி மனிதர் என்று வெறுப்புக்கும் இடமளிக்கிறது.

உபநிஷத் படித்த பெரியவர் **ஒரு** என்ற பதத்துக்கு அவர் இன்னும் பல பொருள்களே வைத்துக் கொண்டிருக்கக் கூடும்—ஒவ்வோர் இடத்துக்கு ஒரு பொருள் என்ற முறையிலே. மறைந்த மதிவாணர் சர். சண்முகம், பொருளற்ருக் கூறினர், ஆச்சாரியார் **குல்லூகபட்டர்** என்று !

ஒரு நேருதான் பாரதத்தை ஆட்சி செய்கிருர் என்ருல், அவருக்கு நீதியிலும் நேர்மையிலும நம்பிக்கையும் பற்றும் இருப்பதாக ஆச்சாரியார் மனதார நம்பினுல், ஏன், தமிழ்

நாடு சிறிய அளவான அமைப்பாயிற்றே, செல்வாக்கு ஏற்படாதே, சீர்குலைந்து போகுமே என்று சிந்தாகுலராக வேண்டும் ?

ஒரு நேருவிடம், அளவற்ற அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது—பல 'அரசுகள்' உள்ளன பாரதத்தில் என்று கூறப்பட்டாலும் உண்மையில் அரசாள்வது பண்டிதர்தான் என்றால், ஆட்சியிலே அனைவருக்கும் பங்கும் பலனும், நீதியும் நேர்மையும் கிடைக்க வேண்டும் என்று ஆச்சாரியார் கருதுவாரானால், அவர் ராஜ்யங்களின் அளவுபற்றி அல்ல, கவலைப்பட வேண்டியது. தமிழ்நாடு எவ்வளவு அளவுள்ளது, ஆந்திரத்தின் அகலம் என்ன என்பது அல்ல, அவர் கவனிக்க வேண்டிய பிரச்சினை !

சாவிலிருந்து காப்பாற்றுவதா, சர்வேஸ்வரன் விட்ட வழிப்படி நடக்கட்டும் என்று விட்டுவிடுவதா என்பதுதான் பொருளுள்ள பிரச்சினையாக இருக்கலாமே தவிர, கழுத்தை நெறித்துச் சாகடிப்பதா, விழித்திருக்கும்போதா தூங்கும் போதா, விஷமிட்டா கத்தியால் வெட்டியா என்பதையா பிரச்சினையாக்கிக் கொள்வது?

அது போலவே, ஒரு நேருவிடம், எல்லா அதிகாரமும் குவிந்திருக்கிறதே, இந்த ஆட்சி முறை நல்லதா, அல்லது ஆட்சிப் பொறுப்பும், அதனை நிறைவேற்றுவதற்கான வசதிகளும் வாய்ப்புகளும், பாரதத்தில் பல்வேறு பகுதிகளிலே உள்ள அரசுகளுக்கும் நீதி நேர்மையின் அடிப்படையிலே பகிர்ந்தளிக்கப்பட வேண்டியதுதான் நல்லாட்சி முறையா, என்றுதான் ஆச்சாரியார் பேசியிருக்க வேண்டும்.

அது விஷயமாக அவருக்கு ஒரு தெளிவான, முடிவான கருத்து இருப்பதாகவே தெரியக் காணோம்.

உப்பு மிஞ்சினால் தண்ணீர், தண்ணீர் மிஞ்சினால் உப்பு என்பார்களே அது போல, சென்னையிலே செல்வாக்கு கிடைத்தால் டில்லியில் இவ்வளவு அதிகாரமா என்று எண்ணுகிறார், சென்னையிலே பிடி தளர்ந்தால், டில்லியிடமே இருக்கட்டும் எல்லா அதிகாரமும் என்று எண்ணுகிறார்.

தன்னைத்தான் மிக முக்கியமாக முன்னாலே நிறுத்தப் பார்க்கிறாரே தவிர, தாயகம், தனி அரசு, என்ற முறையிலே அவர் இந்தப் பிரச்சினையை அணுகவே இல்லை.

தன்னிலிருந்து, எப்போதாவது வளருகிறார் என்றால், தன் இனத்துக்கு, எது நல்லது, சென்னையில் அதிகாரம் வளமாக இருப்பது நல்லதா, அல்லது டில்லியில் குவித்துவைப்பது நல்லதா என்று யோசிக்கும் நிலைக்குச் செல்கிறார். அவ்வளவு

தானே தவிர, அதிகாரங்கள் அனைத்தையும் டில்லியில் குவித்து வைத்துவிடுவதால் தென்னகம் தேய்கிறது, தன்மானம் மாய்கிறது என்பது பற்றிய கவலை அவருக்கு எழுவதாகக் காணோம்.

ஆகவே, அவர் இப்போது, தமிழ்நாடு அளவில் சிறியதாகி விடுவதாலே, இந்தியப் பேரரசிலே செல்வாக்கு இராது, என்று பேசும் போது அவருடைய 'இதயச் சுத்தி'யிலே நமக்கெல்லாம் சந்தேகம் வரத்தானே செய்யும்?

டில்லியில் ஏன் இவ்வளவு அதிகாரம் ?

டில்லி எதற்காக இந்த ஆதிக்கம் செலுத்த வேண்டும் ?

சென்னை, கப்பம் கட்டிக் கட்டியங் கூறி, காவடி தூக்கி, சேவடி தாங்கி, தன்மான மிழந்து தவிக்கிறதே, இது தகுமா ?

இவைபற்றி அல்ல அவர் கேட்பது? இவைபற்றிக் கொதித்தெழ அவருக்கு மனம் இடம் தரவில்லை. இதுதான் பிரச்சினை என்று அவர் கூற மறுக்கிறார். டில்லியில்தான் எல்லா அதிகாரமும் இருக்கும், அதன் ஆதிபத்தியத்தின் கீழ்தான் எல்லா இராஜ்யங்களும் இருக்கும், இராஜ்யங்கள் வரிகளைத் திரட்டும்; டில்லி வாரிக் கொண்டுதான் போகும், இதை மாற்ற வேண்டியது பிரச்சினை அல்ல ! இந்த ஆதிக்கம் டில்லியிலிருக்கும் போது, சென்னை, அதைத் தாங்கிக் கொள்ளும் 'வலிவு'டன் இருக்க வேண்டுமே—தமிழகம் என்று பிரிந்து, குறைந்த அளவிலே இருக்குமானால், எப்படித் தாங்கிக்கொள்ளும் என்று கேட்கிறார் ஆச்சாரியார் !!


"பாவி! பொல்லாதவன்! படுக்கையைத் தட்டிப் போடு!" —என்று கூறிய பாட்டியின் கவலை, பாவையின் கற்பைக் காப்பாற்றுவது அல்ல—அது முடியாத காரியம் என்று பாட்டி விட்டு விட்டாள்-கற்பை இழந்துவிடப் போகும் காரிகைக்குக் குத்தும் வெட்டுமாவது இல்லாமலிருக்கட்டுமே என்பதுதான் பாட்டியின் கவலை. ஆச்சாரியாருக்கும், டில்லிக்கு ஏன் இந்த ஆதிக்கம் என்று கேட்கும் துணிவும் எழக் காணோம், தூய்மை உணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை. அவருடைய கவலையெல்லாம், டில்லியின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் 'வலிவு' வேண்டுமே, 'தமிழ் நாடு' என்றாகிவிட்டால், வலிவு இராதோ என்ற சம்சயம்தான். தட்சிணப் பிரதேசம் எனும் திட்டததில், வேறு எந்தத் தத்துவமும் இருப்பதாகத் தெரியவில்லை.

'பாவி ! பொல்லாதவன் ! படுக்கையைத் தட்டிப்போடு!" என்று பேசும் பாட்டிப் போக்குத்தான் இந்தத் தட்சிணப் பிரதேசம் எனும் திட்டத்திலே தொக்கிக் கிடக்கிறது.

இனி, மேகநாதனை இராமாச்சாரி எப்படித் தந்திரமாகத் தன் வலையில் விழச்செய்தாரோ அதுபோல, நேரு பண்டிதரை, ஆச்சாரியார், தம்முடைய தட்சிணப் பிரதேசத்துக்கு அழைத்துவர எடுத்துக் கொண்ட முயற்சி எப்படிப்பட்டது என்று அறிய ஆவல் ஏற்படும், தம்பி. அடுத்த கிழமை வரையில் ஆவலை அடக்கிக் கொண்டிரு. நல்ல தம்பியல்லவா......

அன்புள்ள,

*1—1—1955.*



கடிதம்: 33

# அகலிகையும் ஆச்சாரியாரும்

★ ஆச்சாரியாரின் தட்சிணப் பிரதேசம்—பாகிஸ்தான் பிரிவினை.

தம்பி,

பாவி, பொல்லாதவன், படுக்கையைத் தட்டிப் போடு என்று, பயத்தால் ஒரு பாவையை, பாதகனொருவனின் காமப் பசிக்குப் பலியாக்கிடும் பாட்டியின் சேட்டைக்கு ஒப்பிட்டேன் ஆச்சாரியாரின் 'தட்சிண ராஜ்ய' திட்டத்தை; மானத்தையும் மாண்பையும் மதித்திடும் இனத்தினரும் வகையினரும், இந்தப் 'பாட்டி'போல நடந்துகொள்ளவும் மாட்டார்கள், நாட்டுப் பற்றே எல்லாவற்றிலும் மேலானது என்று எண்ணிடும் எவரும் ஆச்சாரியார் தருவது போன்ற திட்டத்தைத் தரமாட்டார்கள், எது எப்படியாயினும், என் சபதம் நிறைவேறவேண்டும், என் நோக்கம் ஈடேறவேண்டும் என்று எண்ணிடும் போக்கினர், தமக்கென ஒரு உயர்ந்த இலட்சியத்தினைக் கொண்டிராதவர்கள் போக்கிலே, ஆச்சாரியார் செல்வது கண்டு நான் உள்ளபடியே வருந்துகிறேன். பெரியார் பலமுறை இவரைப் பாராட்டிப் பேசுவதை—பொதுக்கூட்டங்களில் மட்டுமல்ல, தனியாக உரையாடும்போதும்—கேட்டுக் கேட்டு எனக்கு ஆச்சாரியாரிடமிருந்து, நாடு அதிகம் எதிர்பார்க்கலாம், முயற்சித்தால் அந்த முதியவராலே பல பெரிய காரியங்களைச் சாதிக்க முடி

யும் என்ற நம்பிக்கை ஏற்பட்டதுண்டு. கூர்ந்து பார்ப்பதனுல் ஒரு உண்மை எனக்குப் புலப்படுகிறது. தம்பி! கருடன், மிக மிக உயரமாகப் பறப்பதைப் பார்க்கிருயல்லவா? அழகாகக்கூட இருக்கும் பார்ப்பதற்கு. கழுத்து மட்டும் தூய வெள்ளை நிறம் கொண்ட கோலத்தில் உள்ள கருடன், மேலே எழும்பி வட்டமிடுகிறது—எதற்கு என்று எண்ணுகிருய்? உலகம் எப்படி இருக்கிறது என்று அழகு காணவா? ஊரார் எப்படி இருக்கிருர்கள், அவர்களுக்கு ஏதேனும் குறை வந்துளதோ என்று கண்டறியவா? இல்லை, இல்லை! இரை தேடுகிறது. அதற்காகவே அவ்வளவு உயரத்தில் பறக்கிறது. அதற்குத் தேவையான 'இரை' அங்கே கிடையாது. கீழேதான் இருக்கிறது—ஆனுல் அதைப் பெற, கருடன் மேலே வட்டமிட்டுப் பார்க்கிறது. கருடனுடைய கூரிய கண்ணுக்கு, அவ்வளவு உயர-தில் இருந்து பார்க்கும்போதும், கீழே உள்ள பொருள் பளிச்சென்று தெரியுமாம் அவ்வளவு கூரிய பார்வை—கண்டறியும் திறன். ஆனுல், இவ்வளவு உயரம் மேலே பறந்து, இவ்வளவு திறமையாக, கூரிய பார்வைகொண்டு, கருடன் கண்டெடுக்கும் இரை என்ன தெரியுமா, தம்பி, செத்துப்போன எலி, சாக இருக்கும் தவளை, இப்படி! இதற்கா இவ்வளவு உயரம் பறந்து இலாவகமாக வட்டமிட்டு, கூரிய கண்களால் கண்டறியவேண்டும்? செத்த எலிக்கும் தவளைக்கும், இத்தனை உயரம் பறந்திடும் கருடன்போல, ஆச்சாரியார் உயர உயரச் செல்கிருர், மந்திரியிலிருந்து கவர்னர், அதிலிருந்து வைசிராய் என்று இப்படி உயரப் பறக்கிருர், கடைசியில் ஏதாவதொரு செத்த எலி, சாக இருக்கும் தவளை கிடைக்கிறது! பரிதாபமாகத்தானே இருக்கிறது!

ஆச்சாரியார் தமது உயர்ந்த நிலையையும், திறமையையும் தக்க முறையில் பயன்படுத்தினுல், நிச்சயமாக, தாயகத்தைத் தருக்கரிடமிருந்து மீட்டிடும் காரியத்தை காந்தியார் காலத்திலேயே துவக்கி இருந்திருப்பார். அங்ஙனம் அவர் செய்யாததற்குக் காரணம், எனக்குத் தெரிந்த அளவில், இரண்டு: ஒன்று, அவருக்கு எதைச் செய்தால் வேறு எது கெட்டுவிடுமோ என்ற அச்சம். சுருட்டுக்காக நெருப்பைத் தேடினுல், நெருப்புப் பட்டு மீசை போய்விடுமோ என்று பயந்தான் என்று ஏமாளி பற்றிய கதை கூறுவார்களல்லவா, அதுபோல! அவருக்கு, தாயகத்தை வடநாட்டாரிடமிருந்து மீட்டிடும் காரியத்தில் ஈடுபட்டால், இங்கே ஆரியத்துக்கு ஆபத்து எளிதாக உண்டாக்கிவிடுவார்களோ என்று அச்சம் கிளம்பி விடுகிறது. ஆரியத்தைக் காப்பாற்ற வேண்டுமானுல், நாட்டு விடுதலை எனும் நல்ல இலட்சியத்தைத் தலைமுழுகிவிடத்தான் வேண்டும் என்று துணிந்துவிடு

கிறார். மற்றென்று, அவருக்குக் கூரிய மதி இருக்கிறது, மறுப்பார் இல்லை. ஆனால், மிகமிகக் காலங் கடந்தே அது பயன்படுத்தப்படுகிறது. வேடிக்கைக் கதை ஒன்று சொல்லு வார்கள்: தீராத தலைவலியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந் தான் ஒரு மன்னன்; இதைத் தீர்த்துவைப்பவர்களுக்குப் பதினு யிரம் வராகன் பரிசு என்று முரசறைவித்தான். ஆண்டு ஒன்று ஆயிற்று—மருத்துவனோ, மகானோ யாரும் வரவில்லை—தலை வலி அதிகமாகிவிட்டது. இந்தப் பொல்லாத தலைவலியைப் போக்கிடும் மூலிகையோ, தைலமோ தருபவனுக்கு என் இராஜ்யத்தில் பாதி பகிர்ந்தளிக்கிறேன் என்று பறைசாற்றச் சொன்னான்—பலன் ஏற்படவில்லை. இராஜ்யத்தில் பாதி மட்டுமல்ல, என் மூத்த பெண்ணையும் கலியாணம் செய்து தருகிறேன், மூலிகை தரும் மருத்துவனுக்கு என்று மூன்ரு மாண்டு தெரிவித்தான்; ஒருவரும் முன்வரவில்லை. கோபம் மூண்டுவிட்டது; நாலாம் ஆண்டு பரிசு தருவதாகப் பறை சாற்றவில்லை, மனதுக்குள்ளாகவே 'சபதம்' எடுத்துக்கொண் டானும், என் தலைவலியை எவன் போக்குகிறானோ, அவன் தலையை வெட்டிவிடுகிறேன் என்று—ஏனெனில் நாலு ஆண்டுக் காலமாக இவ்வளவு வேதனையை அனுபவிக்கக் காரணம் இவன்தானே, முதல் தடவை முரசு அறைந்தபோதே மூலிகை தந்திருந்தால், கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லையல்லவா! ஆகவே, தலைவலி போக்கும் வழி தெரிந்திருந்தும், மன்ன னுடைய மண்டைக் குடைச்சலைப் போக்க முன்வராதவன், கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டியவனே என்று தீர்மா னித்தான். அதுபோலவே, ஒரு மருத்துவன் மன்னனுடைய தலைவலியை நீக்கினான், தன் தலையைப் போக்கிக்கொண்டான் —என்றோர் கதை உண்டு. அதுபோலவே, ஆச்சாரியார், எந்தத் திட்டம் பற்றித் தமது கருத்து, பரிகாரம் கூறுவதாக இருந்தாலும், தேவைப்படும் நேரத்தில், பயன்படக்கூடிய வேளையில், வகையுள்ள விதத்தில் கூறுகிற வாடிக்கையே கிடையாது. மாருக, எவ்வளவு கடுமையாக எதிர்க்கலாமோ அவ்வளவும் செய்வார்; கடைசிக் கட்டத்திலேயோ, குப்புற விழுவது போலாகிவிடுவார். இதற்குள் பிரச்சினை, ஒன்று தீர்ந்துபோயிருக்கும், அல்லது வேறு உருவம் கொண்டுவிட் டிருக்கும், அல்லது, இவருடைய பரிகாரமோ பரிவோ தேவை யில்லை என்று கூறத்தக்க கட்டம் பிறந்துவிட்டிருக்கும்.

பொங்கும்போது சிறிதளவு நீர் தெளித்து, பால் பக்கு வம் கெடாதபடி காய்ச்சிக் கீழே இறக்கத் தவறிடும் தாய்மார் கள், பால் பொங்கி வழியக் கண்டு பதைபதைத்து ஓடிச் சென்று, அவசரத்தினால், இன்னது செய்வதென்று தெரியாமல், பாத்திரம் நெருப்பாகி இருக்குமே என்பதையும் மறந்து, பதட் டத்துடன் அதைப் பற்றிட, பாதிப் பால் அடுப்பிலும் பாதி

அவர்கள் ஆடையிலுமாகி அவதிப்படுவார்களே—அது போலத்தான் ஆச்சாரியார்.

நாடே கொதித்தது, பாகிஸ்தான் கிளர்ச்சியின் போது—உலகமே உற்றுக் கவனித்தது. உயர்ந்த அறிவாளி என்ற உன்னதமான பட்டத்தைச் சுமந்து கொண்டிருந்த உத்தமர் செய்தது என்ன ? இது அடக்க முடியாத ஆர்வம் ? கொழுந்து விட்டெரியும் இனக் கிளர்ச்சி ? எனவே இந்தக் கோரிக்கை வளர்ந்து வளர்ந்து, எதிர்ப்பின் காரணமாகக் கோர உருவம் பெற்று, எதிர் காலத்தில் கொலையிலும் குழப்பத்திலும் கொண்டுபோய் விடும்; ஆகவே இதனை உடனடியாகக் கவனித்துத் தக்க பரிகாரம் தேடியாக வேண்டும் என்று புறப்பட்டாரோ ? இல்லை ! இவரும் கோடையிடிகளுடனும் பீடிப் பெருமான்களுடனும் கூடிக்கொண்டு, பாகிஸ்தானுவது மண்ணுவது, அதையாவது நாங்கள் தருவதாவது, நாடாவது பிரிப்பதாவது, பாரதமாதாவை வெட்டுவதா, பசுவை அறுப்பதா, பாலகனைத் துண்டுபோடுவதா, என்றெல்லாம்தான் பேசினுர்.

பக்குவம் எப்போது ஏற்பட்டது என்கிருய், தம்பி ! பரிகாரம் தேடித் தீரவேண்டும் என்ற பக்குவம் இவருக்கு எப்போது ஏற்பட்டது ? பாஞ்சாலம் படுகளமாகி, சிந்து சீறி எழுந்து, எல்லைக் காந்தியே தொல்லைக்கு ஆளாகி, வங்காளம் கச்சையை வரிந்து கட்டி எழுந்து, வெளியே உள்ள வல்லரசுகள், வஞ்சகம் கக்கும் கண்களுடன், இங்கே உருவாகிக் கொண்டிருந்த களக் காட்சியைக் கவனிக்க ஆரம்பித்த பிறகுதான், இவருடைய அறிவில் ஓர் விறுவிறுப்பு ஏற்பட்டது, பேச்சிலே ஒரு பரபரப்பு காணப்பட்டது, போக்கிலே ஒரு பக்குவம் தெரியத் தலைப்பட்டது. ஆச்சாரியார் இந்தப் பக்குவம் பெறுவதற்குள், ஜின்னு, எந்த நிலைக்குச் சென்று விட்டார் ! நீங்களாகப் பாகிஸ்தான் தருகிறீர்களா ? நானுக எடுத்துக்கொள்ளட்டுமா ? என்று கேட்டே விட்டார், தம்பி ! பிறகுதான், ஆச்சாரியார், காரணங்களைக் காண்பிக்கவும், கதை மூலம் விளக்கவும், தத்துவம் தரவும், தூது போகவுமாகி, பாகிஸ்தான் தரப்படத்தான் வேண்டும் என்று கூறினுர். இதற்குள், நான் குறிப்பிட்ட கதையில் உள்ளது போல, மூன்று முறை முரசு அறைந்தாகி விட்டது—நாலாவது ஆண்டு பிறந்தது, இனிப் பரிசு இல்லை பரிகாரம் தருபவனுடைய தலை வெட்டி வீழ்த்தப்படும், என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

துவக்கத்திலே, பாகிஸ்தான் திட்டம் வெற்றி பெற்றே தீரும் என்பதை அறிந்து உரைத்திருந்தால், ஆச்சாரியாருடைய ‘தீர்க்க தரிசனம்’, துணிவு இரண்டுமே விளங்கி இருக்கும். கடைசி நேரத்தில், கட்டைக்குப் போகிற சமயத்தில் காஷாயம் தரிப்பது போல, இஸ்லாமியர்களின் இதயதாபத்

தைக் கவனிக்கா விட்டால் இந்தியா ரணகளமாகும். எனவே பாகிஸ்தான் தரப்பட வேண்டியதுதான் என்று பேசினர். கால தாமதம்! இரயில் எப்போதும், குறித்த நேரத்தில் புறப்படுவதில்லை, போய்ச்சேர வேண்டிய நேரத்துக்குப் போவதுமில்லை!

இதில் மட்டுமல்ல, அவருடைய அரசியல் வாழ்வில் இதுபோல அடுக்கடுக்காக.

சின்னாட்களுக்கு முன்புதானே சொன்னர், "இந்தி நமது மொழிகளில் எதற்கும் ஈடாகாது" என்று. சொன்னதுடன், "இந்தி வெறியர்கள் இங்கு, மக்களுடைய விருப்பத்துக்கு மாருக, இந்தியைத் திணிப்பதை யாரும் சகித்துக் கொள்ள மாட்டார்கள்; எனக்கே கோபம் கோபமாக வருகிறது" என்று கூடச் சொன்னரே!

ஆனல், எப்போது ஏற்பட்டது இந்த 'இதோபதேசம்'—புத்தறிவு!! விருத்தநாரி பதிவிரதா!! அப்போதுதானே—ஆற்றுவார் இல்லை, தேற்றுவார் இல்லை, என்று ஆன பிறகு ஆலயப் படிக்கட்டில் அமர்ந்து "கோவிந்தா! கோபாலா!" போடும் போக்குத்தானே இது. இந்தி வெறியர்களை இன்று கண்டிக்கும் இந்தச் சக்கரவர்த்தியாரின் இந்தி வெறிக்குப் பலியாகி உயிரிழந்தவர்கள்தானே தாலமுத்துவும் நடராசனும்.

"எது சரி என்று தோன்றுகிறதோ அதைச் செய்ய, நான் யாரைக் கேட்க வேண்டும்?" என்று இறுமாந்து பேசிய அதே ஏந்தலுக்குப் பார்த்தாயா, தம்பி! வந்திருக்கும் ஞானேதயத்தை—ஆனல் எவ்வளவு பரிதாபம் என்பதைக் கவனித்துப் பார், காலங்கடந்துதான் வருகிறது.

அது போலவே, தமிழும் தெலுங்கும், கன்னடமும் மலையாளமும் ஒரே மூலம் கொண்டமொழிகள்-ஒரு இனத்துக்குப் பொதுவானவை, என்ற திராவிட ஒருமைப்பாட்டினை நாம் வலியுறுத்திக் கொண்ட நேரத்திலே, இவர், வாய் பொத்திக்கொண்டும் இருந்தாரில்லை, வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பி, தமிழும் தெலுங்கும், மலையாளமும் கன்னடமும் மட்டும்தான் ஒன்றுக் கொன்று பந்தமும் சொந்தமும் உள்ள மொழிகளோ? வங்கம், மராடம், குஜராத் எனும் ஏனைய மொழிகளுள் மட்டும் என்ன? அவை அன்னிய மொழிகளோ? ஏன், என் மொழி! என் மொழி! என்று வெறிகொண்டு அலைகிறீர்கள்? எல்லா மொழியும் பாரத மொழிதான்! இதிலே தனித் தமிழ் என்று ஒரு கிறுக்கு! திராவிட மொழிகள் என்று ஒரு பித்தம்! செச்சே! ஏன் இப்படிப் பேதம் காட்டி நாசமாக்குகிறீர்கள்? என்று கேட்டார் இந்தப் பெரியவர்; இப்

போது பேசுகிறார், "இவை நான்கும் ஒரே மூலத்தில் தோன்றிய மொழிகள்" என்று; அத்துடன் அமையவில்லை, "எனவே" போடுகிறார் ! எனவே இவை ஒன்று கூடி, "தட்சிண ராஜ்யம்" அமைத்துக் கொள்ள வேண்டும் என்று உபதேசம் அருளுகிறார். எதன் பொருட்டு என்று கேட்கும் போதுதான், பாவி, பொல்லாதவன் படுக்கையைத் தட்டிப்போடு என்கிறார்; உத்தரப் பிரதேசம் ஓங்கி உருவெடுத்திருக்கிறது, டில்லி எல்லாவற்றையும் தின்று ஏப்பம் விடுகிறது, இந்த ஆபத்தைச் சமாளிக்க வேண்டுமானால், நாம் ஒன்றாக இருந்து, உருவத்தைப் பெரிதாக்கிக் கொள்ள வேண்டும்—அதுதான் தட்சிண ராஜ்யம் என்கிறார்.

இதே யோசனையை இவர் ஐந்தாண்டுக் காலத்துக்கு முன்பு சொல்லியிருந்தால் கூடச் சிறிதளவு செல்வாக்குக் கிடைத்திருக்கக் கூடும். நாம் திராவிட நாடு கேட்டு, மொழி வழியில் தனித் தனி அரசுகளாக, தமிழகமும், ஆந்திரமும், கேரளமும், கருநாடகமும் பிரிந்திடினும், இனவழி ஒன்றுபட்டு ஓர் கூட்டாட்சி அமைத்து அந்தக் கூட்டாச்சி மூலம், வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபடலாம் என்று நாடெங்கணும் பேசிவந்தோம்—அதேபோது இவரும், 'நான்கு மொழிகளும் ஒரே மூலத்தவைதான்—நான்கு பகுதிகளும் ஒரு கூட்டாட்சிக்குள் இருக்கத் தக்கவையே' என்று பேசியிருந்திருப்பாரானால், பலருடைய செவிக்கு விருந்தாகவும், சிலருடைய சிந்தனைக்கு வேலை தருவதாகவும் அமைந்திருக்கும்.

இப்போதுள்ள நிலைமையோ வேறு மட்டுமல்ல, விசித்திரமானது

மொழிவழி அரசு என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய திட்டமாகி விட்டது.

இந்தத் திட்டத்தைத் 'திராவிடம்' கேட்கும் நாமும் கேட்கிறோம், அதன் உட்பொருளை உணரமறுத்திடும் தமிழரசுக் கழகத்தாரும் கேட்கின்றனர். பாரத ஆட்சியிலே இன்னமும் பாசம் கொண்டிருப்பவர்களிலே சிலரும் கூடக் கேட்கிறார்கள்.

பாரதம் ஒன்றுதான்—அதைப் பிளக்கவோ, பிரிக்கவோ கூடாது என்று பேசுவோரும் பாரதத்திலே எந்தப் பகுதி எந்த மொழிக்காரரிடம் இருந்தால் என்ன என்று பேசிடக் கூசுகின்றனர்; எல்லோரும் பாரத மக்கள் என்பது இருக்கட்டும் ஒரு புறம், அதைச் சாக்காக்கி, என் நாட்டிலே சில பகுதிகளைச் செதுக்கி எடுத்து உன் நாட்டுக்குச் சுவைதேடிக் கொள்ள நான் அனுமதிக்க மாட்டேன், என்று முழக்கமிடுகிறார்கள்.

திராவிட நாடு திராவிடருக்குத்தான்—ஆனால் அதைச் சாக்காக்கிக்கொண்டு தேவிகுளம் பீர்மேடும் எனக்கு என்று

அபகரிக்க மலையாளத் தோழர்களை அனுமதிக்க மாட்டோம்; அதேபோலத்தான் தமிழர்க்குரிய இடங்களை ஆந்திரர் கொள்ளவிடமாட்டோம், என்று நாம் கூறுகிறோம்.

இந்தச் சமயமாகப் பார்த்து, வீடு தீப்பற்றி எரியும்போது சுருட்டுக்கு நெருப்புக் கேட்கும் போக்கிலே, சித்தூர் யாருக்கு? தேவிகுளம் எவருக்கு ? என்று நமக்குள் சண்டை போட்டுக் கொண்டால் நல்லதா ? அதோ, பார், உத்தரப்பிரதேசத்தை, டில்லியைப் பார், எல்லோரையும் ஆட்டிப் படைப்பதை, 'இந்த உற்பாதத்தை' ஒழித்துக் கட்ட 'தட்சிணப் பிரதேசம்' தேவையே தவிர, தமிழ், தெலுங்கு, மலையாளம் என்று பேசுவது சரியல்ல என்று சாந்தோபதேசம் செய்கிறார்—சாணக்கியர்—தூங்கி எழுந்து விட்டு, மாலையைக் காலை என்றெண்ணி மயங்கிடும், சாணக்கியர்.

இப்போது மூன்று திட்டங்கள், எல்லோருக்கும் புரிகிறது—ஒவ்வொரு சாராருக்கு ஒவ்வொன்று பிடிக்கிறது.

பாரதம் ஒன்றேதான்—இதிலே மொழிவழி அரசுகள் கேட்பதே தவறு—தேவையற்றது—என்றோர் கருத்து இருக்கிறது. எதேச்சாதிகாரப் போக்கினருக்கு இது இனிக்கிறது; முதலாளிகளுக்கு இது சுவை தருகிறது; பெரிய அதிகாரிகளுக்கு இது, 'பிரேம கீதம்' ஆகியிருக்கிறது !

பாரதத்துக்கு டில்லியில் ஒரு பெரிய ஆட்சி இருக்கட்டும்—ஆனால் மொழிவழி அரசுகள் நிச்சயமாக இருக்க வேண்டும்—இதிலே ஒரு மொழிக்காரரை மற்றோர் மொழிக்காரர் வஞ்சிக்க அனுமதிப்பதோ, உடந்தையாக இருப்பதோ கூடாது, என்று மற்றோர் பிரிவினர் கொள்கை கொண்டுள்ளனர். இதை உரிமையற்ற முறையில், பிறமொழியாளரின் செல்வக் கோட்டங்களைச் சுரண்டிச் சுகபோகிகளாக உள்ள சூது மதியினர் எதிர்க்கின்றனர்—ஏளனம்கூடச் செய்கின்றனர்.

நாம் மொழிவழி அரசும் வேண்டும்—அதிலே ஓரவஞ்சனையும் இருத்தலாகாது—இதை மட்டும் பெற்றால் போதாது, எல்லாவற்றையும் அடக்கி ஆதிக்கம் செலுத்தும், டில்லி ஆட்சிப் பிடியும் ஒழிந்தே ஆகவேண்டும் என்கிறோம்.

இதை ஆகுமா ? என்றெண்ணும் பெருமூச்சுக்காரர்கள், ஐயையோ ! என்று கூறும் அலறல்காரர்கள் ஆகியோர் எதிர்க்கின்றனர்.

ஆச்சாரியார், இந்த எதிலும் சேரவில்லை.

அவருக்கு சர்வம் டில்லிமயம் என்பதும் கசக்கிறது.

மொழிவழி அரசு என்றால் குமட்டுகிறது.

எனினும், ஒரு குடும்ப மொழிகள் என்று சொந்தம் கொண்டாடிடவும், அதன் காரணமாகவே 'தட்சிண ராஜ்யம்'

என்ற அமைப்பிலே, தமிழ், தெலுங்கு, மலையாளம், கருநாடகம் எனும் தனி அரசுகளை விட்டுவிட்டு ஒன்றாகிவிட வேண்டும் என்று எண்ணவும் முடிகிறது; சொல்லவும் துணிகிறது. அப்போதுதான் டில்லி ஆதிபத்யத்தின் போக்கைச் சமாளிக்க முடியும் என்று காரணம் காட்டவும் முன் வருகிறார்! அதே போது வடநாட்டு ஆதிக்கத்துக்கு உட்பட்டு, உருக்குலைந்து போவானேன், தனித் திராவிடம் அமைக்கலாமே என்று அழைத்தாலோ, குமட்டுகிறது, குடலைப் புரட்டுகிறது, ஏதேதோ அச்சம் புகுந்து குடைகிறது.

பரிதாபமல்லவா, தம்பி, இந்த நிலைமை?


தெரிந்ததாம், இது வேறு ஆசாமிபோலத்தான் இருக்கிறது! இதுநாள் வரை கண்டதற்கும் இவரிடம் காணும் சுகத்திற்கும் நிச்சயமாக மாறுபாடு இருக்கிறது—எனினும் மதுரமாகவும் இருக்கிறது இவர், அவரல்லபோல் தோன்றுகிறதே. என்ன செய்வது? இனிச் செய்வது என்ன, நடப்பது நடக்கட்டும், நமக்கென்ன, நாம் கண்ணை மூடிக்கொள்வோம் என்று அகலிகை அம்மையார் கருதினார்களாமே, அதுபோல, இவர் வடநாடு ஆதிக்கம் செலுத்தத்தான் செய்கிறது, ஒரு நேருதான் எல்லாவற்றையும் நடத்திச்செல்கிறார், இருந்தாலும் என்ன செய்வது? கண்ணை மூடிக்கொள்ள வேண்டியதுதான்—என்று கூறுகிறார். கண்ணை மூடிக்கொண்டால் போதும் என்று கருத முடிந்தது அகலிகைக்கு. ஆச்சாரியாருக்கு, அடிமைப்பட்டுக் கிடக்கும் நிலையில் வீட்டைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, அழகுபடுத்தி, ஆளுக்குக் கொஞ்சம் என்று சேர்த்துத் தொல்லையை அனுபவித்தால் நல்லது என்று தோன்றுகிறது. அகலிகை போக்கும் ஆச்சாரியார் போக்கும் இந்த அளவிலே மட்டும்தான் தம்பி! ஒப்பு உவமை. வீணாக நீ, கயிறு திரிக்காதே. ஆமாம், நான் அகலிகையைப் பற்றி நன்றாகப் படித்திருக்கிறேன், ஆச்சாரியாரைப் பார்த்திருக்கிறேன். இருவருக்கும் வேறோர் வகையிலேகூட உவமை இருக்கிறது.

அம்மையும் ஒரு படுகிழத்துக்கு வாழ்க்கைப்பட்டுக் கிடந்தார்கள்.

ஆச்சாரியாரும் படுகிழமாகிப் போன கோட்பாடுகளைத்தான் கட்டிக்கொண்டு அழுகிறார்.

அன்புள்ள,

*8—1—1956*



கடிதம் : 34

# தம்பி தயார்! தயார்!

★ மொழிவழி அரசு—தேவிகுளம்
பீர்மேடு பிரச்சினை—இந்திய யூனியனில்
ஆங்கில மொழி—பிப்ரவரி 20 போராட்டம்.

தம்பி,

சிறைக் கதவுகள் தூளாயின! போலீஸ் ஸ்டேஷன்கள் கொளுத்தப்பட்டன! இரயில்வேக்கள் தடம் புரண்டன! வட்டமிடும் விமானம் வந்திறங்க முடியவில்லை, பாடவந்த பாகவதர்கள் வீடு திரும்பியோடினர், ஆலைச் சங்கு ஊத வில்லை, மாலைக் காட்சிகள் கொட்டகையில் இல்லை, பள்ளிக் கூடம் இல்லை, பணிமனைகள் வேலை செய்ய வில்லை, போக்கு வரத்து செயலற்று நின்றது—நாடு போர்க்கோலம் பூண்டு விட்டது.

"எத்தனை எத்தனை இலட்சம்! அவர்கட்குத்தான் என்னிடம் எத்தகைய பக்தி! எவரும் கண்டு சொக்கிடும் வகையிலல்லவா வரவேற்புகள் அளிக்கிறார்கள்! மலர் மாரி பொழிகிறார்கள்! இதயத்தைக் காணிக்கையாக்கித் தருகிறார்கள். நான் செல்லும் பாதையில் மலர் தூவி, என் முன் சிரம் தாழ்த்தி நிற்கிறார்கள். என் சுட்டு விரல் காட்டும் வழியில் சென்று செயல் புரியக் காத்துக் கிடக்கிறார்கள் கோடிக்கணக்கான மக்கள். வெள்ளிப் பனி படர்ந்து, வண்ணப் பூக்களும் வகை வகையான பழங்களும் குலுங்கிடும் பூஞ்சோலைகளும், படகு வீடுகள் மிதநதிடும் பாங்கான ஏரிகளும் கொண்ட எழில் மிகு காஷ்மீரிலிருந்து, கடல்கள் ஒன்றை ஒன்று முத்தமிட்டுத் தழுவிக்கொள்வது கண்டோ என்னவோ முறுவலித்து நிற்கும் குமரிமுனை வரையிலும், அவர்கள், பஞ்சாபிகள், சிந்திகள், மார்வாடிகள் குஜராத்திகள், வங்கத்தார் கலிங்கத்தார், மராட்டியர், ஆந்திரர், ஒரியர், தமிழர், கேரளத்தார், கன்னடத்தார், இந்து, முஸ்லீம், பார்சி, கிறிஸ்தவர் எனும் எவராக இருப்பினும், அவரெல்லாம் என்னைக் காணுந்தோறும் காணுந்தோறும், 'எமை ஆளும் தலைவா வருக! எமக்கு வாழ்வளித்த மாவீரனே வாழ்க! உலகில் உயரிடம் பெற்றவனே வருக! ஆசிய ஜோதியே வருக! அகிலம் புகழும் ஆற்றலரசே வாழ்க!' என்றெல்லாம் வாழ்த்தி வரவேற்கிறார்கள்—என்னை

அவர்தம் அன்பு! எவரிடமும் இது நாள் வரை காட்டாத பேரன்பை என்பால் இம்மக்கள் காட்டுகின்றனர்! உலகப் பெருந் தலைவர்கட்கெல்லாம், இந்தக் காட்சியைக் கண்டால், சிறிதளவு பொறாமையாகக்கூட இருக்கும்!—'' என்றெல் லாம் எண்ணி எந்தப் பண்டித நேரு புளகாங்கித மடை கிறாரோ, அதே பண்டிதர்தான் ஆட்சி செய்கிறார். அவர் தம் கொற்றம் கவிழவில்லை, எனினும் கோல் சாய்ந்தது என்று அறிந்த மக்கள், எத்துணைப் பேராதரவு அளித்துப் பெருந்தலைவராக்கினோம், காட்டிய வழியெல்லாம் சென் றோம், களத்தில் நின்று கடும் போரிட்டோம், கேட்ட காணிக்கை எல்லாம் கொடுத்தோம், அவரைக் கண்டதும் அகமும் முகமும் மலர நின்றோம், ஆயிரம் புகழுரைகளால் அர்ச்சித்தோம், நீதியின் பிறப்பிடமே! நேர்மையின் இருப் பிடமே! உரிமையின் உயர்வை உணர்ந்த உத்தமனே! மக்கள் மனப்போக்கை மதித்திடும் மாவீரனே! என்றெல்லாம் சிந்து பாடினோம், வந்தனை வழிபாடு செய்து, நொந்த வாழ் வினைச் செம்மைப்படுத்தி அருளும்படி தேவனைத் தொழுதிடும் பக்தர் போல இவர் முன் நின்றோம், அவர் பவனி வருகிறார் நமது பட்டினத்துக்கு என்றால், அந்நாளைத் திருநாளாக்கி னோம், ஊரெல்லாம் எழிலாக்கி, உளமெலாம் மகிழ்வு மய மாக்கி, மணிக் கொடியைப் பறக்கவிட்டு, மகர தோரணங்கள் கட்டி, பாதைகளைச் செப்பனிட்டு, இல்லங்களில் புத்தொளி காட்டி, வரவேற்று மகிழ்ந்தோம். நம்மிடம் இத்துணை அன்பினைப் பெற்றவர், நம்மிடம் இவ்வளவு ஆதரவு பெற்ற வர், ஐயகோ! இவ்வளவு கன்னெஞ்சராகவா மாறிவிட வேண்டும்? யாரிடம் நியாயம் கிடைக்குமென்று எதிர் பார்த்து, ஏத்தி ஏத்தித் தொழுது வந்தோமோ, அவரே அல்லவா, அநீதிக்குப் பரிந்து பேசுகிறார், அக்ரமத்துக்கு உடந்தையாகிறார்! எவரிடம் நல்வழி காட்டிடும் இன்மொழி கிடைக்கும் என்று எதிர்பார்த்தோமோ, அவரிடமிருந்தல் லவா, எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பேச்சும், ஏறெடுத்தும் பாரேன் என்ற போக்கும், என் ஆணையை அறியீரா என்ற ஆர்ப்பரிப்பும், என்னை எதிர்ப்போர் என்ன கதி அடைவர் தெரியுமா என்ற மிரட்டலும் பீறிட்டுக் கிளம்புகிறது? பண்டிதரே! பண்டிதரே! பாமரருக்குப் பாதுகாவலர் என்ற பட்டப் பெயர் பெற்றது போதும், இனி 'இம்'மென் றால் சிறைவாசம் ஏனென்றால் வனவாசம் என்று தண்டனை கொடுக்கும் கொடுங்கோலராகி மகிழலாம் என்று துணிந்து விட்டீரோ! ஏனோ இக் கெடுமதி? எதற்கோ இக்கடும் சித்தம்? இதற்கோ நீர் எமக்கெல்லாம் இத்துணைக் காலம் நம்பிக்கை ஊட்டி வந்தீர். அழகாக ஆடிடும் பாம்பு, 'படம்' கண்டு பரவசமடைந்திருப்போன் சிறிதளவு ஏமாந்ததும்,

அவனைத் தன் நச்சுப் பல்லால் தீண்டிக் கொல்வது போலல்லவா நிலைமை ஆகிவிட்டது! இறுமாந்து கிடந்தோம், எமது பண்டிதருக்கு இணை ஏது என்று கேட்டு மகிழ்ந்தோம்! அவர் அறியாத பொருளில்லை, அவர் புகழ் பரவாத நாடில்லை, அவர் சொல் கேளாத தலைவனில்லை, அவர் உறவு நாடாத நாடில்லை! கர்ஜனை புரியும் கம்யூனிஸ்ட் நாட்டுத் தலைவர்கள், அவர் முன் காதல் கானம் பாடி நிற்கிறார்கள்! தங்கத் தாளம் கொட்டிப் பிறரை ஆடச் செய்யும் அமெரிக்காவும், தங்கத்தையும் கொட்டிக் கொடுத்துவிட்டுத் தயவுக்கும் காத்துக்கிடக்கிறது! கண்டதுண்டோ இவர் போல்!! என்றெல்லாம் கேட்டோம், மார்பை நிமிர்த்தி நின்று கேட்டோம்!

பேதைகளே! என்னை முழுவதும் கண்டுவிட்டீர்களோ! வீர சுதந்திரம் வேண்டி நின்ற கோலம், காந்தியாரின் பாதம் பணிந்த கோலம், வெஞ்சிறையில் வாடிக்கிடந்த கோலம், சமதர்மம் பேசி மகிழ்வித்த கோலம், அரியணை அமர்ந்த கோலம், அவனி எங்கணும் பவனி வந்த கோலம், இவைகளைத்தானே கண்டீர்! இவைகளைக் கண்டு விட்டால் போதுமோ? கருத்தற்றவர்களே! கோலமெல்லாம் கண்டு விட்டதாக உமது எண்ணமோ? இதோ காணீர் ஓர் கோலம்! கண் அலட்சியத்தை உமிழ, கரம் துப்பாக்கி தூக்கி நிற்போரை ஏவிடும் குறிகாட்ட, நின்று, 'ஏன்' என்று கேட்போரை, என் பாதையில் குறுக்கிடுவோரை, என் அறிவைச் சந்தேகிப்பவர்களை சுட்டுத் தள்ளிடும் 'சம்ஹாரக் கோலம்' காட்டுகிறேன், காணீர், இதுவும் கண்டால் தான் என்னைக் கண்டறிந்து கொண்டதாக முடியும் என்று கூறுபவர் போலல்லவா, கொடுங்கோலர்கள் எந்த மொழி பேசுவரோ, எந்த விழி காட்டுவரோ, எந்த முறை கொள்வரோ, அது போன்று நடக்கத் தலைப்பட்டுள்ளார்! இத்தனைக்கும் நாம் அவர்க்கு இழைத்த தீங்கு ஏதேனும் உண்டோ? மணிமுடியைத் தட்டிப் பறித்திடத் திட்டமிட்டோமா, அவருடைய அரண்மனை வாழ்வுக்குக் குந்தகம் விளைவித்தோமா, அடி தொழ மறந்தோமா, அன்பு பொழிவதை நிறுத்திக்கொண்டோமா! இல்லையே! விளக்குக்கு எண்ணெய் கேட்டோம், விழிக்குப் பார்வை இருத்தல் வேண்டுமென்று சொன்னோம், உரிமை கேட்டோம்—உப்பரிகை வாழ்வுகூடக் கேட்டோமில்லை! வாக்களித்ததைக் கேட்டோம், பலகாலமாகக் கூறிவந்த ஆசை வார்த்தையை நிறைவேற்றித் தரும்படி கேட்டோம், இழந்ததைக் கேட்டோம், பிறர் எவர்க்கும் இடரோ இழிவோ தராத தன்மான உரிமை கேட்டோம், தாயகம் கேட்டோம்! தாயகம் கேட்டோம், பேயகம் ஆக்கி விடுகிறேன் நாட்டை என்று இப்பெருந் தலைவர் கிளம்பிட

வேண்டும்! பிறப்புரிமை கேட்டோம், அதற்கோ நம்மை வேட்டையாடி வாட்டி வதைக்கக் கிளம்பி விட்டார் இந்த வல்லவர்! தாயகம் கேட்பது தவறு? கேளாதிருப்போன் மனிதன்தானு? கேட்டோர் பெருது போயினர் என்று வரலாற்றுச் சுவடி காட்டுகிறதோ? தாயகம் தரப்படும், சுற்றிலுமுள்ள கள்ளி காளானும், சூழ்ந்து கொண்டுள்ள வெள்ளை ஆட்சி எனும் முட்புதரும் அழிக்கப்பட்டான பிறகு, நிச்சயம், தாயகம் தரப்படும்! மலைமேல் செல்வது மூலிகை எடுக்க, கடலில் குளிப்பது முத்து எடுக்க, காடு செல்வது சந்தனம் பெற, பூமியைக் குடைவது பொன் எடுக்க என்பது போல, வெள்ளையரை எதிர்த்துப் போராடிச் சுயாட்சி பெறுவதே, தாயகம் அவரவர்க்குக் கிடைக்கச் செய்வதற்கேதான் என்று சொன்ன சொல் கொஞ்சமா, கொடுத்த வாக்குறுதி வெறும் வார்த்தைக் கோவைதானு, தீர்மானங்கள் எழுதப் பட்ட தாட்கள், குப்பைதானு?—இவை தமை மறந்து, மமதை மிகுந்து, தாயகமா வேண்டும் தாயகம்! இதோ அங்கு செல்லும் வழி, என்று இறுமாப்புடன் கூறி, துப்பாக்கியை அல்லவா பேச வைக்கிருர்! கேட்டது தாயகம், அவர் கொடுப்பதோ கல்லறை! இஃதோ இவர், நம்மிடமிருந்து பெற்றதத் தனைக்கும் நன்றி காட்டும் செயல்! என்று கேட்டனர், கொதித்தெழுந்தனர்—ஓடும் இரயில் நின்றது, பாடும் இடம் பீதி கொண்டது, பள்ளிகளில் மாணவருமில்லை, ஆசிரியருமில்லை, வகுப்பறையில் நடைபெற்ற பாடமத்தனையும் அளித்த உரிமை உணர்ச்சி அவர்களைச் சீறிப் போரிடச் செய்தது, அமைச்சர்கள் அச்சத்தால் தாக்குண்டனர், காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் கதிகலங்கிப் போயினர், போலீஸ்! போலீஸ்! என்று கூவியபடி ஓடினர்—எங்கும் கலாம்—பம்பாயில் கோலாப்பூரில், புனவில் கட்டாக்கில், கல்கத்தாவில் நாசிக்கில், சட்டம் சரிந்துவிட்டதோ என்று இங்குள்ளோர் கேட்டிடவும், நேருவின் செல்வாக்குக் காகிதக் கோட்டை தானே என்று வெளி நாடுகளில் கேலி பேசிடவுமானதோர் நிலைமை ஏற்பட்டது. எல்லாக் கிளர்ச்சியும், குண்டுகிளம்பும் வரையில்தான், முழக்கமிட்டவன் ஐயோ என்று அலறிக் கீழே விழுந்து புரண்டு, பிணமாவது கண்டால், காக்கை குருவிக் கூட்டம் கல் கண்டதும் கடுகிப்போதல் போல இந்த வீராதி வீரர்கள் வீறிட்டழுதபடி ஓடோடிச் செல்வர் என்று சர்க்கார் எண்ணிற்று! துப்பாக்கி முழங்கிற்று! எழுபது பிணங்கள், நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமுற்றனர். ஆயிரக்கணக்கானவர்களுக்குத் தடியடி. ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறையில், எனினும் எதிர்ப்புணர்ச்சி மடியவில்லை. எக்காளம் குறையவில்லை, எமது உரிமையையாவது

தாருங்கள், அல்லது உயிரையாவது பறித்துக்கொள்ளுங்கள் என்று கூறி மார் காட்டி நின்றனர் மக்கள்.

இவர்கள்தானு புல்கானின் பவனியின்போது நேரு பண்டிதரின் புகழ் பாடி நின்றவர்கள் என்று எவரும் திடுக்கிட்டுக் கேட்பர். எங்கிருந்து பிறந்தது இந்த வீரம்? எவரிடமிருந்து கற்றனர் இந்த உரிமை முழக்கத்தை? 'ஜே' போட்டுத் திரிந்தவர்கள் 'சீ' கூறி உமிழ்கிறார்களே, படத்திறப்பு விழா நடத்தியவர்கள், சிலைகளை மூளியாக்குகிறார்களே, என்று எண்ணி சர்க்கார் திகைக்கவேண்டி வந்தது. தம்பி, இந்தத் திங்கள், உத்தரப் பிரதேசத்தில் உருவாகியுள்ள சர்வாதிகாரத்தை எதிர்த்துக் கிளம்பிய சூறுவளி, நேருவின் கண்ணையும் திறந்திருக்கும், வெளி நாட்டுத் தலைவர்கள் மெச்சிக்கொள்வதற்காக, நேரு, முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டோம் என்று வீரம் பேசுகிறார்—ஆனால், நடுக்கம் காலில் மட்டுமல்ல, கருத்திலும் புகுந்து விட்டது.

மொழிவழி அரசு என்ற திட்டத்துக்காகவே, இத்துணை பயங்கர நிலை மூண்டது.

கதர் கட்டினாலே ஆபத்து என்று எண்ணிப் பீதி கொள்ளும் நிலைமை இன்னமும் அங்கெல்லாம் நீங்கவில்லை.

பண்டிதரின் பவனியே சிறிதளவு தடைபட்டுப்போய் நிற்கிறது.

புதிய போலீஸ் படையும், துருப்புகளும், 'கலகம்' நேரிட்ட நகர்களில் வந்து குவிந்த வண்ணம் உள்ளன.

பம்பாயில் உத்தரப் பிரதேசம் போலீஸ், ஒரிசாவுக்கு மத்தியப் பிரதேசப் போலீஸ்! இவ்விதம் 'ராஜதந்திரம்' கையாளப்பட்டு வருகிறது. எரிமலை மீண்டும் எப்போது நெருப்பைக் கக்கும் என்று கூறமுடியாத நிலைமை. நாடு, பெருஞ் சோதனையில் சிக்கிக் கிடக்கிறது என்று காங்கிரஸ் தலைவர்களே பீதியுடன் பேசுகின்றனர்.

அருந்தமிழ் நாட்டில் மட்டும், தம்பி! அற்புதமான அமைதி நிலவுகிறது! யாதும் ஊரே, யாவரும் கேளிர்! அக்ரமத்தை உணர்ந்தோர் எத்துணை பேர் என்பதையும் அறிய முடியவில்லை. மாணவர்கள் மட்டுமே இதுபோது, நாட்டு மானங் காப்போம் என்று கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பியுள்ளனர், மற்றையோரில் ஒரு பகுதியினர் மனம் இறுகிக் கிடக்கின்றது; மற்றோர் பகுதியில், மனமாச்சரியங்களை விட்டொழிக்க முடியாது திண்டாடுவோரும், பிரச்சினையின் அளவு கண்டு, நம்மால் எப்படி இதனைத் தீர்த்துவைக்க முடியும் என்று திகைத்துக் கிடப்போரும், பிரச்சினை தீருகிறதோ இல்லையோ, இதை யார் தீர்த்து வைப்பதால் செல்

வாக்குப் பெற்று விடுவார்களோ என்று பொச்சரிப்பால் பயமடைவோருமாக, இங்கு இருப்பதால் தம்பி! அக்கிரமம் செய்யப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், அதனுல் என்ன? என்றும், ஆமாம் அப்படித்தான் என்றும், ஆனது ஆகிவிட்டது இனிச் செய்யக்கூடியது ஏதுமில்லை என்றும் பேசும் அமைச்சர்களும், எஜமானுக்கு உடலைச் சொரிந்துவிட்டு, அவர் மகிழும்போது ஊதியத்தை உயர்த்தச் சொல்லிக் கெஞ்சும் ஊழியக்காரன் போக்கிலே சில அமைச்சர்கள் இங்கு பேசவும், உரிமைக்காகத் துணிந்து பேசுபவர்களை ஏசவும் துணிவு பெறுகிறுர்கள்—துரைத்தனம் இருக்கிறதல்லவா துணைக்கு, அதனுல்.

தம்பி! பிரச்சினை உனக்கு நன்கு தெரியும்—விளக்கம் தேவையில்லை.

“மொழிவழி பிரிந்து இனவழி ஒன்று பட்டு, சோஷலிச திராவிடக் குடி அரசுக் கூட்டாட்சி அமைப்பது” என்பதல்லவா நமது கொள்கை. அதற்கு நாம் கட்டுப்பட்டிருக்கிறேம்—அதற்காகப் பணியாற்றி வருகிறேம்.

நாம் இதற்கு இப்போது போரிட்டாக வேண்டிய கட்டம் பிறந்து விட்டது—போர் என்ருல், கண்ணியம் கடமை கட்டுப்பாடு கெடாத, அமைதி குலையாத, பலாத்காரம் தலைகாட்டாத அறப்போர் என்பதையும் அறிந்திருக்கிருய், தம்பி! அதற்கான வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம், பூத்துக் கிடக்கும் மல்லிகைக் கொத்தினைப் பறித்துச் சூடிக் கொள்ளப் பூங்கொடியாள் புள்ளி மானெனத் துள்ளி ஓடுவது போல, களம் சென்று பழக்கப்பட்டும் இருக்கிருய்.

தி. மு. கழகத்தை நடத்திச் செல்லும் பொறுப்பில் உள்ளவர்கள், குறிப்பாக நமது பொதுச் செயலாளர் இதனை மறந்து, இது நாள் வரை வாளா இருந்துவிடவில்லை.

நாட்டிலே கிடைத்திடக்கூடிய, நல்லோர் அனைவரும் தந்திடக்கூடிய ‘சக்தி’ அவ்வளவையும் ஒன்ருகத் திரட்டி, ஒரு முனையில் நிறுத்தி, ஒழுங்குபடுத்திப் போரிட வேண்டிய நிலைமை இப்போது.

ஆற்றல் நம்மிடம் நிரம்ப இருக்கிறது—ஆயிரமாயிரம் தோழர்கள் வீரச் செயலுக்கும் கஷ்டநஷ்டம் ஏற்பதற்கும் உளர்—அறிந்து அகமகிழ்கிறேன்—எனினும், ஆற்றல் கொண்டவர் என்ற முறையில், நாம் அறப்போர் துவக்கினுல், பிறரிடமிருந்து பெறக்கூடிய துணையை இழந்திட வேண்டி நேரிடக்கூடும் என்பது மட்டுமல்லாமல், நாம் அவசரப்பட்டுத் துவக்கிவிட்டதால், அருமையாக அமைய இருந்த ஓர் ‘ஐக்கியம்’ கூட்டு முயற்சி கெட்டு விட்டது என்று பழி கூறுவோர் இருக்கிறுர்களே தம்பி! அதற்கேன் இடமளிக்க வேண்டும், சிறிதளவு

பொறுத்திருப்போம், பெருமுயற்சி ஒன்று எடுத்துப் பேரவை என்று கூறத் தக்கதோர் கூட்டு முயற்சிக்கு வழி காண்போம் என்று எனக்குத் தோன்றிற்று; ஆச்சரியம் இதிலே இல்லை, பொதுச் செயலாளருக்கும் தோன்றிற்று; அவருடன் அடிக்கடி அரசியல் பிரச்சினைகளையும் கழகப் பிரச்சினைகளையும் கலந்து பேசும் வாய்ப்பினை நான் பெற்று மகிழ்பவன் எனவே, கலந்து பேசமுடிந்தது. ஒத்த கருத்து அவர் உள்ளத்திலும் இருக்கக் கண்டேன்; களிப்புற்றேன்.

இதற்கிடையில், பெரியார், இந்தப் பிரச்சினை சம்பந்தமாகத் திருச்சியில் பேசியதாகப் பத்திரிகைச் செய்தி கண்டேன்—கண்களை அகலத் திறந்து பார்த்தேன்—ஆச்சரியத்தால் மூர்ச்சையாகி விடக்கூடிய நிலைமை—அவர் நம்மையும் அழைத்து ஒரு பொதுத் திட்டம் தீட்டப் போவதாகப் பேசினார் என்று பத்திரிகையில் இருந்தது. பாழும் மனம் கேட்கிறதா ! எவ்வளவு பட்டாலும், இந்த ஒரு விஷயத்தில் மட்டும் எனக்குச் சபலம் இருப்பதுதான் உனக்குத் தெரியுமே. எனவே, அப்படியோர் அருஞ்செயலைச் செய்வதற்கு மட்டும் முன்வந்து, நம்மைப் பற்றிக் கொண்டுள்ள வெறுப்பையும், அதன் பயனாகவே அவராகவே வளர்த்துக் கொண்ட வேதனையையும், பொதுவாழ்க்கைத் துறையிலே, ஓட்டை ஒடிசல்கள், ஓடுகாலர்கள், கூடுவிட்டுக் கூடுபாய்வோர் ஆகியவர்களைக்கூடச் சகித்துக் கொள்ளுவேன், 'இதுகளை' மட்டும் நடமாடவிட மாட்டேன் என்று பேசும் போக்கையும் மாற்றிக் கொண்டால், ஆஹா ! இங்கு எத்தகைய இன்பச் சூழ்நிலை, இன எழுச்சி, விடுதலைக் கிளர்ச்சி காணக் கிடைக்கும் என்றெல்லாம் எண்ணினேன். நாளை எதிர்பார்த்துக் கிடந்தேன்—நானாக அவரை நாடுவது என்றாலோ, 'வழி மறித்தான்களும் இடம் அடைத்தான்'களும் புடைசூழ அல்லவா அவர் நிற்கிறார்?

இந்நிலையில், அஞ்சற்க, அனைவரும் ஒன்று கூடுவோம், என்று கூறுவதுபோல, நண்பர் ம. பொ. சி. யின் தந்தி எனக்குக் கிடைத்தது—கலந்து பேசலாம் என்பதாக.

சென்னையில் அவர் என்னிடம் சுவையான தகவல்களைக் கூறினார்—எனக்குத் தெம்பும் நம்பிக்கையும் ஏற்படும் விதமான தகவல்கள்.

"பெரியாரும் நானும் கலந்து பேசினோம்" என்றார் ம. பொ. சி.

"பரவாயில்லையே, இப்போது நாம் ம. பொ. சியைப் பார்ப்பது, பாபமல்ல, இதற்கு எந்தப் பழியும் பிறவாதல்லவா—முதலில் பெரியாரும் ம. பொ. சி. யுமல்லவா சந்தித்தனர்—பிறகுதானே நாம், பரவாயில்லை—என்று மனதைத் திடப்

படுத்திக்கொண்டு அந்த மகத்தான சந்திப்பின்போது பேசப் பட்டவைகள் பற்றி அவர் கூறக் கேட்டு இன்புற்றேன்.

தமிழகத்துக்கு உரிமையான பகுதிகளை மீட்பதற்கான கிளர்ச்சி அவசியம் நடத்தப்பட வேண்டும் என்ற கொள் கைக்குப் பெரியார் ஒப்புதலளித்துப் பேசினர் என்று கூறினர்—களிப்புற்றேன்—அந்தக் களிப்புப் பன்மடங்கு வளரும் வகையில், இந்தச் சந்திப்புக்குப் பிறகு, பெரியார் பல இடங் களில் பேசினர்.

எனினும், 27-ந் தேதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத் தில், பெரியார் கலந்து கொள்ளவில்லை; காரணம் முன்னுளே காட்டினர்.

அவர் காட்டிய காரணங்களின் தன்மை பற்றியோ உண்மை குறித்தோ ஆராய்ச்சி நடத்துவது, தேவையுமல்ல, என் வழக்கமுமல்ல—ஆனுல் ஒன்று மட்டும் கூறுவேன், அவர் காட்டிய காரணங்கள் அன்றைய கூட்டத்துக்கு அவர், வராத தற்குப் போதுமானவையாகாது.

மேலெழுந்தவாரியாக நான் கேள்விப்பட்டதும், 'தினத் தந்தி' ஆசிரியர் ஆதித்தன் என்னிடம் நேரில் சொன்னதும் என் னைத் தூக்கிவாரிப் போட்டது—நீ வருவதால்தான் பெரியார் வரவில்லை என்ருர்—தம்மிடமே சொன்னதாகச் சொன்னர்—ஆனுல் சொன்னவர் தினத்தந்தி!

நான் அவரிடம் சொன்னேன், 'நான் இங்கு வருவதுதான் பெரியார் இங்கு வராததற்குக் காரணம் என்று எப்படிக் கூற முடியும்? நாளைக்கு 28ல், வேருேர் இடத்தில் மற்றேர் பொதுப் பிரச்சினை குறித்து நடைபெற இருக்கும் ஆலோசனைக் கூட்டத் தில் நான் கலந்துகொள்கிறேன்—பெரியாரும் பெருந்தன்மை யுடன் அங்குவரச் சம்மதம் தந்திருக்கிருரே, அது மட்டும் எப் படிச் சாத்தியமாகிறது?'' என்று கேட்டேன்.

காரணம் அது மட்டுமல்ல, தேவிகுளம் பீர்மேடு பிரச்சினை பற்றி மட்டுமே ம. பொ. சி. யின் கூட்டத்தில் கவனித்துக் கிளர்ச்சிக்கு வகை காண முன் வருகிருர்கள். பெரியாரோ, தம் முடைய ஒத்துழைப்பும் துணையும் தரப்பட வேண்டுமானுல், வேறு சில பிரச்னைகளையும் போராட்டத்துக்கானதாக உடனடி யாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதுகிருர்—அதன் படி இங்கே காரியம் நடைபெருது என்று எண்ணியே வர வில்லை என்று என்னையும் பெரியாரையும் ஒருசேரத் தோழமை கொள்ளும் நண்பர் கூறினர்.

இதுவும் பொருத்தமாகப் படவில்லையே! நாளைய தினம் நடைபெற இருக்கும் கூட்டத்திலும், ஒரே ஒரு பிரச்சினை மட் டும்தான் கவனிக்கப்பட இருக்கிறது; அங்குப் பெரியார், தம்மு

டைய மற்றப் பிரச்னைகளை வலியுறுத்துவதாகக் காணோமே என்றேன். எனக்கென்ன தெரியும் என்றார் நண்பர்; எனக்குப் புரிந்தது—புன்னகையும் பிறந்தது.

தம்பி! 27-ந் தேதி கூட்டத்தில் கலந்து கொண்ட மாபாவிகளிலே பலர்; 28-ந் தேதி கூட்டத்தில் கலந்து கொண்டனர்; அங்குப் பெரியார், தட்டாமல் தயங்காமல் வந்திருந்து, தமது சீரிய யோசனையை வழங்கினர்.

ம. பொ. சி. யும், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியனும், இரத்தினம் M. L. A. யும், பி. டி. இராஜனும், சுயம்பிரகாசமும் 27-லும் 28-லும் கலந்து கொண்டனர்; நானும், இரண்டு கூட்டங்களிலும் கலந்து கொண்டேன்.

பெரியார் 27-ல் வரவில்லை, 28-ந் தேதிய கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

27-ந் தேதிய கூட்டம் தேவிகுளம் பீர்மேடு சம்பந்தமாக.

28-ந் தேதிய கூட்டம் ஆங்கிலமே இந்திய யூனியனின் அதிகாரபூர்வமான மொழியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதற்காக.

இந்த ஒரு பிரச்சினைக்காக 'இதுக'ளோடு, நான் கலந்து பேசுவதா என்று கேட்ட பெரியார், மொழிப் பிரச்சினை மட்டுந்தான் என்று 28-ந் தேதிய கூட்டம் நடத்தப்பட்ட போதிலும், அதிலே 'இதுகள்' இருந்த போதிலும், வந்தார்!

நான் திகைத்துப் போனேன்—உன் நிலை எப்படியோ ?

ஒன்று மறந்தேனே கூற, 28-ந் தேதிய கூட்டத்தில் இராஜகோபால ஆச்சாரியாரும், திருப்புகழ்மணி கிருஷ்ணசாமி ஐயரும், K. S. ராமசாமி சாஸ்திரிகளும், வெங்கட்ராம அய்யரும் வந்திருந்தனர். 27-ல் இந்த 'ஜமா' இல்லை!

எப்படியோ ஒன்று தம்பி! இரண்டு கூட்டங்களிலும், நல்ல பலன் விளைந்திருக்கிறது; இதிலே, நமது மூலாதாரக் கொள்கைக்குக் கேடோ, நமது கழகத்தின் கண்ணியத்துக்கு மாசோ ஏற்படக் கூடியது எதுவும் ஏற்படாதது மட்டுமல்ல, நாட்டை எதிர்நோக்கி நிற்கும் பலமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொது முயற்சிகள் ஏற்பட்டால், நாம், தடைக்கல்லாக இருக்க மாட்டோம், என்பதை எடுத்துக் காட்டும் நல்வாய்ப்பும் கிடைத்தது !

27-ல், தேவிகுளம் பீர்மேடு பிரச்சினை என்ற பெயரில், தமிழரின் உரிமைப் பிரச்சினை, மொழிவழி அரசுப் பிரச்சினை, அதை வெட்டி வீழ்த்தக் கிளம்பும் தட்சிணப் பிரதேச யோசனையை வீழ்த்தும் பிரச்சினை, சென்னைக்குத் தமிழ்நாடு என்று உரிய பெயர் பெறும் பிரச்சினை இவைகளுக்கெல்லாம்,

தி. மு. க.
தமிழரசுக் கழகம்
கம்யூனிஸ்டு கட்சி
சோஷியலிஸ்டு கட்சி
பிரஜா சோஷியலிஸ்டு கட்சி
திராவிட பார்லிமெண்டரி கட்சி
ஷெட்யூல் காஸ்ட் பெடரேஷன்
வடக்கெல்லை பாதுகாப்புக் கமிட்டி
திரு. கொச்சி இணைப்புக் கமிட்டி
எழுத்தாளர் சங்கம்
நடிகர் சங்கம்
புதுவை முன்னணி
ஜஸ்டிஸ் கட்சி

ஆகிய இத்தனை அமைப்புகளின் தலைவர்கள் ஒப்பமளித்தனர்; உடனிருந்து பணியாற்ற ஒருமனப் பட்டனர். செயலாற்றக் குழு அமைக்கப்பட்டது. பி. டி. இராசன் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; ம. பொ. சி. அமைப்புச் செயலாளராகவும், நமது என். வி. நடராசன், ப ஜீவானந்தம், அந்தோணிப் பிள்ளை, சுப்ரமணியம் ஆகியோர் செயலாளர்களாகவும் உள்ளனர்.

இந்தச் செயற்குழுவில் நமது பொதுச் செயலாளர் இருந்து பணியாற்ற இசைவு தந்தார்.

இது போன்றதோர் 'கூட்டணி' இதற்குமுன் எப்போதும் ஏற்பட்டதில்லை. தாயக மீட்புக்கு, அவரவர் தத்தமது கடமையைச் செய்ய, காணிக்கை தர, தயாராகிவிட்டனர்.

இதிலே இடம் பெற்றுள்ள எந்தக் கட்சியின் உருவமோ முறையோ, வேலைத் திட்டமோ கொள்கைகளோ, இந்தக் கூட்டினால், குலையும் நிலையில் ஏதும் இல்லை.

தேவிகுளம் பீர்மேடு என்ற குறிச் சொல்லால் இன்று உணர்த்தப்பட்டுவரும் மொழிவழி அரசுத் திட்ட வெற்றிக்கான வரையில் கூடிப் பணியாற்றுவது என்பதே நோக்கம்.

இல்லையேல், பி. டி. இராசன் தலைவர், ம. பொ. சி. யும் ஜீவானந்தமும் செயலாளர்கள் என்று ஓர் அமைப்பு ஏற்பட்டிருக்க முடியுமா?

தம்பி! அன்று நான் அனைவரிடத்திலும் கண்ட உள்ளத் தூய்மை என்னை உவகைக் கடலில் ஆழ்த்திற்று! ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டிருந்தவர்கள்—எவ்வளவோ ஏசினோம்,

ஏசப்பட்டிருக்கிறோம்—எனினும், அன்று நாட்டுக்கு வந்துற்ற பெருங் கேட்டினை நீக்கிட நாமனைவரும், ஓர் அணியில் நின்றாக வேண்டும் என்று ஒவ்வொருவரும் பேசியது கேட்டு, உளம் பூரித்தேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்—என் உள்ளத்தில் எப்போதும் இருந்துவருபவர்—நீண்ட நாட்களாகக் காணுதிருந்தேன்—அவருக்குக்கூட அல்லவா என்னிடம் கோபம், கசப்பு-அவர் அன்று அங்கு அமர்ந்து, அரசோச்சும் மன்னருக்குப் பழந் தமிழ்ப் புலவர்கள் பேராண்மையுடன் அறிவுறுத்திய பான்மை போல், அவையினருக்கு, செயல்! செயல்! உடனடியாகச் செயல்! உரிமை காத்திடும் செயல் என்று பேசியதை நான் என்றும் மறந்திட முடியாது.

இந்தக் கூட்டு முயற்சியைக் குறைகூறிப் பேசுவோரும் எழக் கூடும்—நாட்டிலே எதற்குத்தான் வாய்ப்பு ஏற்பட வில்லை? எனினும், ஒன்று நாடு அறியும், பெரியதோர் பிரச்சினை நம்மை நோக்கி நிற்கும் போது, ஒதுங்கி நின்றோம், ஒற்றுமைக்கு இணங்க மறுத்தோம் என்ற குற்றச்சாட்டு நம் கழகத்தின் மீது ஏற்படாத வகையில் நமது பொதுச் செயலாளர் நடந்து கொண்டார்.

இந்தக் கூட்டணி அமைந்ததால், தத்தமது கட்சி கலைக்கப் பட்டு, கொடி அகற்றப்பட்டு, கொள்கை தகர்க்கப்பட்டுப் போகும் என்பதல்ல. ஏமாளியும் அங்ஙனம் எண்ணத் துணிய மாட்டான். ஒவ்வோர் கட்சியும் இந்தப் பொதுப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில், தத்தமது சக்திக்கேற்ற வகையிலும் அளவிலும் பணியாற்றி, அந்தக் கூட்டுச் சக்தியின் பலனாக, நாட்டுக்கு வந்துற்ற கேட்டினை நீக்குவர் என்பதுதான் பொருள்.

தம்பி, ஏற்பட்டுள்ள உறவு, முன்னாளில் இருந்து வந்த கசப்புகளையும் மறந்திடச் செய்யும் வகையில் அமைந்திருக்கிறது.

அப்படிச் செய்தவர்! இப்படிப் பேசியவர்!—என்று இரு தரப்பிலும் பேசிடுவது, அவரவர்க்குத் தத்தமது அமைப்பினிடம் உள்ள பாசத்தை முன்னிட்டுத்தானே!-இனிக்கூட்டுமுயற்சி மூலம், பல்வேறு அமைப்புகளும், பகையின்றிப் பூசலற்று, ஏசலை விடுத்துக் கூடுமான போதெல்லாம் ஒன்றுபட்டுச் செயலாற்றவும், கருத்து வேறுபாடு எழும் பிரச்சினைகளில், தனித்து நின்று, ஆனால் ஒரு அமைப்பை மற்றோர் அமைப்புத் தாழ்த்திக் கொள்ளாமலும், அவரவர் துறை நின்று பணியாற்றுதலே பண்புடைமை, அறிவுடைமை என்பது பற்றி, நானும் நண்பர் ம. பொ. சி. யும் பேசிய போது, ஏன் அத்தகைய அன்

புச் சூழ்நிலையை அமைத்தல் கூடாது? நீண்டகாலப் பகையும் ஒன்றை ஒன்று அழித்திடத்தக்க முறையும் கொண்ட, திராவிடர் கழகமும் கம்யூனிஸ்டும், கடந்த பொதுத் தேர்தலிலே, காங்கிரசை முறியடிக்க ஒன்றுபட்டுப் பாடுபடவில்லையா? இன்று காமராஜர் நமது இனப் பாதுகாவலர் என்ற காரணம் காட்டிப் பெரியார் அவருக்குப் பெருந் துணைவராக இல்லையா? அதேபோல, மற்றவர்கள் பண்பறிந்து நடந்து கொள்ளவா முடியாது—நிச்சயம் முடியும் என்றே எனக்கும் தோன்றிற்று. ம. பொ. சி.யும் அதனையே உற்சாகத்தோடும் உள்ளன்போடும் கூறினர். கொஞ்ச நஞ்சம் அதிலே பயமோ சந்தேகமோ இருந்தாலும், 28-ந் தேதி ஆச்சாரியாரும் பெரியாரும் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்ட 'அன்பினை'ப் பார்த்தபோது, இஃதன்றோ, தமிழகம் காண வேண்டிய காட்சி என்று தோன்றிற்று.

பார்ப்பனர்களைப் பூண்டோடு ஒழிக்க வேண்டும். பார்ப்பனீயத்தை ஒழிக்கிறேன் என்று இதுகள் பேசும்! அது தப்பு, தப்பு, சுத்தத் தப்பு.

அக்கிரகாரம் கொளுத்தப்பட வேண்டும். இப்போது செய்து விடாதீர்கள்—நாள் தருகிறேன்—என்று பெரியார் பேசுவது, ஆச்சாரியாருக்கோ, இராமசாமி சாஸ்திரியாருக்கோ, கிருஷ்ணசாமி ஐயருக்கோ தெரியாதா? தெரியும்.

இவர்கள் பார்ப்பனர்கள்—பார்ப்பனத் தலைவர்கள் என்பது பெரியாருக்குத் தெரியாதா? பேதையும் அங்ஙனம் கூருன். அன்று ஆச்சாரியார் சொன்னர்:

"உலகத்திலே உள்ள அவ்வளவு பேதங்களும் எங்கள் இருவருக்கிடையில் உண்டு; மறைத்துப் பயனில்லை; என்றலும் இந்த ஒரு விஷயத்தில் நானும் அவரும் ஒத்துப் போகிறோம்; ஒரே அபிப்பிராயம்தான்" என்று பேசினர்.

பார்ப்பனச் சூழ்ச்சி என்று கூறி விடலாம், அவர் மட்டுமே இப்படிப் பேசி இருந்தால். பெரியார் பேசியது என்ன தெரியுமா, தம்பி!

"என் அன்புக்குரிய ஆச்சாரியார்,
நண்பர்,
தலைவரென்றே சொல்லலாம்"

என்று துவங்கி,

"இந்த ஒரு விஷயத்தில் நானும் அவர் கருத்தைப் பூரணமாக ஆதரிககிறேன்" என்றார்.

தம்பி! இது 28! 27-ல், நாமும், ம. பொ. சி. யும், ஜீவாவும் அந்தோனிப் பிள்ளையும், பாரதிதாசன் அமரும் அவையில்,

பி. டி. இராசன் நடத்திச் செல்லும் குழுவில் இருக்கச் சம்மதித்தது, 28-க்கு முன்னறிவிப்பு போல் இருக்கிறதல்லவா? ஆமாம், இனிக்கவும் செய்கிறது.

28-ல் ஏற்பட்ட கூட்டு, ஆங்கிலமே பொதுமொழியாக இருத்தல் வேண்டும் என்று மத்யசர்க்காருக்குப் பல கட்சியினர் கூடிக் கூறி, அதைப் பெறுவதற்கு வழி காண ஏற்பட்டது.

27-ல் ஏற்பட்ட கூட்டு, நாம் பெற வேண்டிய எல்லைகளைப் பெறவும், சென்னைக்கு உரிய தமிழ்நாடு என்ற பெயர் கிடைக்கவும், தட்சிணப் பிரதேசம் என்ற பேய்த் திட்டத்தை ஒழித்துக் கட்டவும் ஏற்பட்டது.

28-ன் உடனடி விளைவு, ஆங்கிலமே பொதுமொழியாதல் வேண்டும் என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவிப்பது.

அதில் நாங்கள் அனைவரும் இசைவு தந்திருக்கிறோம்.

27-ந் தேதி செய்த முடிவு, தேவிகுளம் பீர்மேடு பிரச்சினை சம்பந்தமாக, மத்திய சர்க்கார் மேற்கொண்ட போக்கினைக் கண்டிக்கும் வகையில் பிப்ரவரி 20-ல் நாடெங்கும் பொது வேலை நிறுத்தம் செய்வது என்பதாகும்.

தம்பி! சர்க்கார் எத்தகைய கடுமையான முறைகொண்டும் நம்மை ஒடுக்கத் தயாராக இருக்கிறது. இப்போதே அறிவகத்தைச் சுற்றிப் போலீஸ் வட்டமிட்டவண்ணம் இருக்கிறது.


அந்தத் 'தட்டும் குவளையும்' துடியாய்த் துடிக்கின்றனவோ என்னவோ யார் கண்டார்கள்—சிறையில்!

எது எப்படி நேரிடினும் பிப்ரவரி 20, வெற்றிகரமாக, அமைதியாக, பலாத்காரமற்ற வகையில் நடைபெற்றாக வேண்டும்.

தம்பி! தயார்! தயார்!!

அன்புள்ள,

*29—1—1956*



கடிதம் : 35

# முத்தான வாய் திறந்து...

★ பொதுக் குழுவில் உறுப்பினர் கருத்துக்கள்—
ஜஸ்டிஸ் கட்சியில் அண்ணு—பொது
வேலை நிறுத்தம்.

தம்பி,

பொதுக் குழு, நமது பொதுச் செயலாளர் ஈடுபட்டுள்ள சர்வகட்சிக் கூட்டணி முயற்சிக்கு ஆதரவளித்துத் தீர்மானம் நிறைவேற்றி விட்டது—எனவே நாம் அனைவரும் சர்வகட்சிக் கூட்டணி மேற்கொண்டுள்ள 'பொது வேலை நிறுத்த' நடவடிக்கையை வெற்றிகரமானதாக்கிக் காட்டும் பெரும் பொறுப்பை மேற்கொண்டு விட்டோம் என்பது பொருளாகிறது.

பொதுக்குழுவில், இது பற்றிய விளக்க உரையாற்றினர் நமது நாவலர்; பிற அமைப்புகளிலே வாய் பிளந்துகொண்டு கேட்பவர்கள், கொட்டாவி விட்டபடி கேட்பவர்கள், இருக்கிருர்கள்; இவ்வளவு என்ன, மாதாமாதம் சுளைசுளையாகப் பணம் பெற்றுக்கொண்டு பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ள சட்டசபை உறுப்பினர்களிலேயே பலபேர், முக்கியமான விவாதம் நடைபெறும்போது, மன்றத்தில் இருப்பதில்லை, வெளியே மரத்தடியில் நின்றுகொண்டு, காண வந்தவர்களிடம் கதை பேசிக்கொண்டும் 'காபி' விடுதியில் உட்கார்ந்துகொண்டும் இருப்பதாக அவவப்போது 'தகவல்' வெளி வருகிறதே! உள்ளே, பலகோடி மக்களின் வாழ்வினைப் பாதிக்கக் கூடிய 'பிரச்சினை' பேசப்பட்டு வருகிற போது, நில உடைமையின் உரிமை எந்த வகையிலே கட்டுப்படுத்தப் படுவது, எவ்வளவு அளவு இருக்கலாம், என்பது பற்றிப் பேசப்பட்டு வருகிறபோது, ஆட்சி மன்றத்தில் அமர்ந்திருந்து அக்கறையுடன் பிரச்சினையை அலசிப் பார்த்து அறிவுரை அளித்திட வேண்டியவர்கள், அந்தக் காரியம் செய்வதாக மக்களிடம் வாக்களித்து 'ஓட்டுப்' பெற்றவர்கள், காப்பிக்கொட்டை கணேசர் மார்க்கா, காளி மார்க்கா, பவுடரா பசுவின் பாலா என்பன போன்றவை பற்றிப் பேசிச் சுவை

காணுகின்றனர்; மணி அடிக்குமாம் 'ஓட்' எடுக்கிறார்கள் என்பதை அறிவிக்க; இவர்கள் அப்போதுதான், அவசர அவசரமாக ஓடுகிறார்களாம் உள்ளே! இந்த இலட்சணத்தில் நடைபெறுகிறது. சட்டசபைகளிலே இது! கட்சிக் கூட்டங் களிலோ, சொல்லத் தேவையில்லை.

இந்த இழவெல்லாம் நமக்கென்ன புரிகிறது!—என்ற போககினரே அதிகம்.

நமது பொதுக் குழுவில் அங்ஙனமில்லை.

காரம் சற்று அதிகம்—எப்போதும் எனக்கு இனிப்பு அதிக மாக இருப்பதைவிடக் காரம் சற்று அதிகம் இருப்பது பிடித் தம்தான்—எனவே நமது பொதுக்குழுவில் 'காரம்' சிறிதளவு அதிகமாக இருப்பது காணும்போது களிப்பாகவே இருக்கிறது. ஆனால் காரம் புளிப்பு கசப்பு உவர்ப்பு எனும் எதுவும் அள வுடன் இருந்தால், சுவை கெடாது, பண்டம் பாழாகாது, பக் குவம் இருக்கும், பயனும் மிகுதி! எனினும் இவை சிறிதளவு அதிகமானாலும் பரவாயில்லை, உப்பு மட்டும் அதிகமாகி விடாமல் பார்த்துக் கொண்டால் போதும்!

நமது பொதுக் குழுவில் பணியாற்றும் வாய்ப்புப் பெற்ற வர்கள் அனைவரும், பிரச்சினைகள் குறித்து அதிகமான அளவு அக்கறை காட்டுவது, உள்ளபடி ஜனநாயக வளர்ச்சிக்குத் தேவையாகிறது; நமக்கென்ன? அது என்னவோ? புரிய வில்லையே!—என்ற அலட்சியப் போக்குத்தான், ஜனநாயகத் துக்குப் பேராபத்து விளைவிக்கும்; வேண்டிய அளவைவிடச் சிறிது அதிகமாகவே காரம் கூட்டப்பட்டாலுங்கூடப் பரவா யில்லை, அக்கறை கொள்கிறார்கள் என்றால், அது வரவேற்கத் தக்கது.

எந்தப் பிரச்சினையிலும், நமது 'பொதுக் குழு' உறுப்பி னர்கள் மிகுந்த அளவு அக்கறை காட்ட வேண்டியது அவசிய மாகிறது என்று நான் எண்ணுவதற்குக் காரணம், பொதுக் குழுவில் நிறைவேற்றப்படும் எந்தத் தீர்மானமும் நம் அனை வரையும் கட்டுப்படுத்துவதால், பொதுக் குழு காட்டும் வழி யில் நாட்டை நடத்திச்செல்லும் பொறுப்பு நம் அனைவருக்கும் இருப்பதால், பேசப்படும் பிரச்சினைகள் குறித்தும், எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கை பற்றியும், தீட்டிடும் தீர் மானங்கள் குறித்தும், அளித்திடும் தீர்ப்புப் பற்றியும், நடத்தப் படும் ஆய்வுரைகள் பற்றியும், மிகமிக அக்கறை காட்டியாக வேண்டும்—பிரச்சினையின் சகல கோணங்களையும் கண்டறிய வேண்டும். 'எல்லாம் அவருக்குத் தெரியும்' என்ற எண்ண மும் கூடாது, "எதுதான் நமக்குப் புரிகிறது?" என்ற மனப்

போக்கும் ஆகாது ; பொதுக் குழுவில் மேற்கொள்ளப்படுகிற எல்லா நடவடிக்கைகளும், நமது பொறுப்பையும் ஆற்றலையும் நம்பியே விடப்பட்டுள்ளன என்பதை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்; ஜனநாயகத்தில் அப்போதுதான், தரம், திறம், பக்குவம், பலன் கிடைக்கிறது !

நமது வயலிலே விளையும் செந்நெல்லாயினும் நாமே அல்லவா புடைத்து எடுக்கிறோம்—பதர் போகவும், மணி கிடைக்கவும் ! நாம் பெற்ற செல்வமாயினும் நாமே அல்லவா, குளிப்பாட்டி அழுக்கு நீக்கி, ஆடை அணி புனைந்து பிறகு கொஞ்சுகிறோம். அதுபோலத்தான், தம்பி, நமது பொதுக் குழுவில் காரியமாற்றுவதற்கான வேலை முறை பற்றிக் கலந்துரையாடும்போது நாம் அக்கறை காட்டவேண்டும்.

தம்பி ! நான் ஜஸ்டிஸ் கட்சிக் காலத்திலிருந்து, இப்படிப்பட்ட குழுக்களில் அமர்ந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்—பெருந் தலைவர்கள், அருகே நெருங்கவே முடியாத நிலையினர், அரண்மனைவாசிகள் ஆகியோர் அமர்ந்து அரசோச்சிய அவைகளிலே, ஒப்பி என்னையும் உடனிருக்கச் செய்திருக்கிறார்கள்—பொப்பிலியும் செட்டிநாட்டுக் (அப்போது) குமாரராசாவும், சர் முகமது உஸ்மானும் அவர் போன்ற வேறு பல கனவான்களும் வீற்றிருந்த குழுக்களில், (அப்போது) அரும்பு மீசையும், கல்லூரி முலாமும் கொண்ட நான் அமர்ந்திருக்கிறேன்—அப்போதெல்லாம், கூடத்தில் நடைபெறும் நிகழ்ச்சி, மறு அறையில் உள்ளவர்களுக்குக்கூடத் தெரியாது—கேட்காது—அவ்வளவு மெல்லிய குரலில், விட்டு விட்டு வார்த்தைகள் வெளிவரும், அதுவும் ஒருவர் இருவரிடமிருந்து; மற்றையோரெல்லாம், இவ்வளவு செல்வவான்கள் நமது முகாமில் இருக்கும் போது தேர்தலைப்பற்றிய பயமென்ன என்று எண்ணிக்கொண்டு இருக்க வேண்டியதுதான்.

உறுப்பினர்களிலே பலருக்கு, அந்தக் குழுவிலே இடம் பெற்றது, அந்தஸ்தின் அறிகுறியே தவிர, பணியாற்றும் வாய்ப்பு என்றோ, பொறுப்பான செயலென்றோ, எண்ணம் இருந்ததில்லை.

போடியும் போலாவரமும், வெங்கிடகிரியும் வடபாதியும், காளஹஸ்தியும் கார்வேட்டியும், சிங்கம்பட்டியும் உத்தம பாளையமும், பொப்பிலியும் பிறவுமாக வீற்றிருக்கும் இடத்தில், பணியாற்றும் வாய்ப்பு, பொறுப்பேற்கும் பேறு என்ற எண்ணம் இருக்க முடியும் ! நான், தம்பி ! அப்போது ஜஸ்டிஸ் கட்சிக்குப் புகுத்தப்பட்ட 'புது இரத்தம்'—இளவெட்டு—ஜஸ்டிஸ் கட்சி அந்தஸ்தை இழந்து வருகிறது என்பதற்கு எடுத்துக்

காட்டு என்ற அளவிலே, அங்குச் சீமான்களால் அனுமதிக்கப் பட்டிருந்தேன் ; அந்த நிலை கிடைத்ததற்கும் காரணம், ஜஸ்டிஸ் கட்சிக்குச் சுயமரியாதை இயக்கம் துணை புரிந்தாக வேண்டிய கட்டம் பிறந்ததுதான்.

தம்பி! அந்தப் பழைய நாளை நான் நினைவுபடுத்திக் கொண்டதற்குக் காரணம், அந்த நாட்களிலே, கட்சியின் கனவான்கள், கட்சிக்கு நீங்காத் தொடர்பு கொண்ட பிரச்சினைகளிலே எந்த அளவுக்கு அக்கறை கொண்டவர்கள் என்ற வேதனை தரும் வேடிக்கையை உனக்குக் கூறுவதற்குத் தான்!

அப்போது, அரசியலில் மிகச் சூடான பிரச்சினை, திலகர் சுயராஜ்ய நிதி என்ற பேரால் திரட்டப்பட்ட ஒரு கோடி ரூபாய், காங்கிரஸ்காரர்களால் பாழாக்கப்பட்ட பயங்கரச் சம்பவம்தான்.

டி. ஏ. வி. நாதன் எனும் எனது நண்பரும், 'சண்டே அப்சர்வர்' ஆசிரியரும் என்னை 'ஜஸ்டிஸ் கட்சிக்கு' இழுத்துச் சென்றவருமான பி. பாலசுப்பிரமணியமும், 'ஜஸ்டிஸ்' இதழில், வெளுத்து வாங்கினார்கள், திலகர் சுயராஜ்ய நிதி மோசடிபற்றி.

கடப்பையில், ஜஸ்டிஸ் மாநாடு! நான் அதிலே பேசினேன்— திலகர் நிதி மோசடி குறித்து—அப்போது, நான்தான் சொன்னேனே, 'அரும்பு மீசை' என்று—அதற்கேற்ற வகையில், ஆங்கிலத்தில்! பெருந்தலைவர்கள், வழக்கப்படி கைக்கடியாரத்தை அடிக்கடி பார்த்துக்கொண்டனர்—முகம் சுளித்த படி அல்ல ; ஆங்கிலத்துக்கு மதிப்பளிக்க வேண்டுமல்லவா, அதனால், கேட்டுக் கொண்டிருந்தனர்.

ஒரு மணி நேரம்—ஆத்திரம் தீரப் பேசி முடித்தேன்—அங்கே கூடி யிருந்தவர்கள் அவ்வளவு பேரும், என் எதிரிகள் போலவும், அவர்கள் யாவரும் திலகர் நிதி மோசடியே நடைபெற வில்லை, என்று என்னிடம் வாதாடக் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு நிற்பது போலவும், எண்ணிக் கொண்டு பேசுகிறேன்—பழுப்பேறாத மிளகாய், அப்போது, நான், அதனால்!

தேனீர் விருந்துக்காகக் கலந்து சென்றோம்—நான் கற்பனைக் காற்றில் மிதக்கிறேன்—இனிப் பரவாயில்லை—திலகர் நிதி மோசடிபற்றி நாடே சீறி எழும் என்று எண்ணியபடி—ஒரு தலைவர், என் நன்மதிப்பினைப் பெற்றவர்— முதுகில் என்னைத் தட்டிக் கொடுத்தபடி, தனியே அழைத்துச் சென்று, "அண்ணாத்துரை! இதென்ன ஏதேதோ பேசிவிட்டாயே!

உன் ஆங்கில நடை அழகை நான் ஒப்புக்கொள்ள முடியும். ஆனால் நீ பேசிய அண்டப் புளுகுகளை எப்படி ஏற்றுக் கொள்ளுவேன்? இப்படி எதற்காகப் பேசினாய்?'' என்று கேட்டார்.

நானோ, தம்பி! நாட்டு மக்களுக்கு ஒரு பேருண்மையை விளக்கி விட்டோம், காங்கிரஸ் கட்சியினர் செய்த ஒரு கயமைத்தனத்தை அம்பலப்படுத்தி விட்டோம் என்ற பூரிப்பில் 'ராஜ நடை' போட்டுக் கொண்டு செல்கிறேன். இந்தப் பெரியவரோ, அண்டப்புளுகு பேசுவது அழகா என்று என்னைக் கேட்கிறார். என் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை எண்ணிப் பார்.

நான், கூச்சத்துடன், ஆனால் துணிவினைத் தருவித்த படி, திலகர் நிதி மோசடிபற்றி அவரிடம் விளக்கலானேன்.

நான், அவருக்கு! சாமான்யன் — பிரமுகருக்கு!! தொண்டன்—தலைவருக்கு!!

அப்படியா? உண்மையாகவா? ஒரு கோடியா? பாழாகிவிட்டதா? என்று மேலும் மேலும் ஆச்சரியத்தால் தாக்குண்ட நிலையில் கேட்டார் அவர்—நான் திகைத்துப் போனேன். ஆனால், தம்பி! கடைசியாக என்னைத் திணற வைத்தது அது அல்ல.

''அதென்ன பெரியவரே! இதெல்லாம் தெரியாது என்கிறீரே? பத்துக் கட்டுரைகள் வெளிவந்தனவே இது குறித்து, நம் 'ஜஸ்டிஸ்' பத்திரிகையில் என்றேன் நான். அமைதியாக அந்த அருந்தலைவர் சொன்னார், ''நான் ஜஸ்டிஸ் படிப்பதில்லை'' என்று!

தம்பி! அவர் ஜஸ்டிஸ் கட்சியிலே முக்கியஸ்தர்—மற்றோர் முறை ஜஸ்டிஸ் கட்சி மந்திரி சபை அமைத்திருந்தால், அவர் நிச்சயம் மந்திரியாகி இருப்பார்! அவர், 'ஜஸ்டிஸ்' படித்திடும் வழக்கமில்லை என்பதை, பதறாமல், கூறுகிறார்!!

கேட்டுக்கொண்டேன், தம்பி, கேட்டுக்கொண்டேன்! இப்படி எத்தனையோ!!

எதற்குக் கூறுகிறேன் என்றால், ஒரு கட்சியின் முக்கியஸ்தர் அதன் நிர்வாகக் குழுவிலே இடம் பெற்றவருக்கு இந்த அளவுக்குத்தான் 'அக்கறை' இருந்தது!! அதை எல்லாம் பார்த்துப் பார்த்து, கசப்பும் கிலியும் கொண்டிருந்த எனக்கு, இப்போது, நமது பொதுக் குழுவில் உறுப்பினர்கள் காட்டும் அக்கறையும், அளித்திடும் ஆய்வுரையும், பெற்றுள்ள தெளிவும், காட்டும் துணிவும், உள்ளபடி, தெம்பு தருவது

டன், தென்னகத்தில் நாம் நடத்திக் கொண்டு வரும் ஜன நாயகப் பரீட்சையில் நிச்சயம் வெற்றி பெற்றுவிடுவோம், என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

தம்பி! பொதுக் குழு கூடி, பிப்ரவரி-20 பொது வேலை நிறுத்தம் நடத்திக் காட்டுவது, தாயகத்தின் தன்மானத்தை அழித்திட எண்ணும் தருக்கரின் அகந்தையை எதிர்த்து அறப் போர் நடாத்திக் காட்டுவது என்று முடிவு செய்துவிட்டது. இனி, உனக்கும் எனக்கும், பெரியதோர் பொறுப்பு ஏற்பட்டு விட்டது. நீயும் நானும், இந்தப் பெரும் பொறுப்பை எந்த அளவில், வகையில் நிறைவேற்றி வெற்றி காணப்போகிறோம், என்பதைக் காண, நாடு தயாராகி விட்டது.

பொது வேலை நிறுத்தம் என்றால் தமிழக மெங்கும் ஒரே நாளில், ஒரே முறையில் வெற்றியுடன் நடத்தப்பட வேண்டிய மகத்தானதோர் செயல்!! சாமான்யமானது என்று எண்ணி விடப் போகிறார்கள், தம்பி! இதனுடைய முக்கியத்துவத் தைத் தயவு செய்து நன்றாக விளக்கிச் சொல்லு.

இதென்ன பிரமாதம்? அடைக்கச் சொன்னால் அடைக் கிறார்கள்! அமளிக்குப் பயந்து அங்காடி மூடப்படும்!—என் றும் அலட்சியம் காட்டலாகாது; "இது ஒரு தீவிரமான திட்டமா? அங்கங்கே நடைபெறுகிற காரியத்தைப் பார்க்கும் போது இது உருசியற்ற, பசையற்ற காரியம்!"—என்றும் கவலையற்று இருந்து விடக்கூடாது.

இது வெற்றிகரமாக நடத்த விடக்கூடாது என்று இப் போதே நாட்டை ஆளும் 'நல்லவர்கள்' நானாவிதமான காரி யத்திலும் ஈடுபட்டு விட்டார்கள்—அதனைக் கவனித்தால், தம்பி! நாம் மேற்கொண்டுள்ள காரியம் எத்தகையது என் பது தெரியும்.

குதிரை பறிபோன பிறகும் கொட்டிலைப் பூட்டாத குண வான் ஒருவரை முதலமைச்சராகப் பெற்றிருக்கிறோம். அவர் காதில் இடியோசை விழாது, மின்வெட்டு கண்ணில் படாது, பெருங்காற்று அவர் மேலாடையையும் அப்புறப்படுத்தாது! அவ்வளவு இறுகிப் போன மனம்!

எதிலும் ஓர் அலட்சியம், அக்கறையற்ற தன்மை! அதது தானாக உருவாகட்டும் என்று இருக்கும் போக்கு!

மீன் பிடிப்போன்கூட, 'தக்கை' தண்ணீருக்குள் போகி றதா என்று கவனித்தபடிதான், அரைத் தூக்க நிலையில் கரை யில் உட்கார்ந்திருக்கிறான். இவரோ, மீன் தானாகத் தூண் டிலைப் பிடித்து ஆட்டினாலும், என்ன தொல்லை இது! மீன் நேராகத் துள்ளி ஓலைக் கூடைக்குள்ளேயே குதித்துத் தொலைக் கக் கூடாதா என்று கருதும் போக்கினராக இருக்கிறார்!

எந்த ஒரு பிரச்சினைக்காக நாடே இன்று கொந்தளித்துக் கிடக்கிறதோ, அது இவருடைய உள்ளத்தைத் தொட்டதாகக் கூடத் தெரியக் காணோம், அபாரமான நம்பிக்கையே இந்தப் போக்குக்குக் காரணம் என்கிறார்கள் ஆதரவாளர்கள்; திகைப் பால் செயலற்று மட்டுமல்ல, சிந்தனையற்றும் போய் விட்டார் என்று செப்புகிறார்கள், ஆய்வுரை வல்லோர்.

அப்படிப்பட்ட 'அசமந்த'ப் போக்கினரே, 'பொதுவேலை நிறுத்தம்' என்று கூறப்பட்டதும், பேசுகிறார்! ஆமாம், தம்பி! வழக்கமாக 'இரத்தினச் சுருக்க' மாகப் பேசும் முதலமைச்சர், 'வேலை நிறுத்தம்' என்று கேள்விப்பட்டதும் 'நீண்ட பிரசங் கம்' செய்திருக்கிறார்—'சுதேசமித்திரன்' கூறுகிறது.

செஞ்சியில், முதலமைச்சர் போர்வையைக் கிழித்துக் கொண்டு, மெள்ள மெள்ளப் பழைய காமராஜர் வெளி வரு கிறார்!!

சர்வ கட்சி மாநாடு கூடி, வேலை நிறுத்தம், கடை அடைப்பு, இதெல்லாம் செய்யப்போவதாகத் தீர்மானம் செய் திருக்கிறார்களாம். ஏன் இதெல்லாம் என்னிடம் வந்து சொல்லலாமே!—என்று துவக்கி, இறுதியில், 'கபர்தார்' கூறு கிறார்.

பம்பாயைப் பார்த்துமா புத்தி வரவில்லை!—என்று கேட் டிருக்கிறார்.

தம்பி! பொருள் தெரிகிறதல்லவா? பம்பாயில், என்ன செய்தோம் தெரியுமா? தடியால் தாக்கினோம், துப்பாக்கியால் சுட்டுத் தள்ளினோம், 7 l-பேர் பிணமானார்கள், நூற்றுக் கணக் கிலே படுகாய மடைந்தனர், ஆயிரக்கணக்கானவர்களைச் சிறையிலே அடைத்து விட்டோம், புதிய புதிய போலீஸ் படை கொண்டு வந்தோம்—பட்டாளத்தையே ஏவினோம்—தெரியு மல்லவா—ஜாக்கிரதை!—நீங்கள் ஏதேனும் கண்டனம் தெரி வித்தால், சுட்டுத் தள்ளுவோம்! என்கிறார்.

பாழாய்ப் போன பதவிக்காக, மெத்தச் சிரமப்பட்டு, சம ரசவாதி, எதிர்க்கட்சிகளை அணைத்துச் செல்பவர், எதையும் ஆத்திரப்படாமல் கவனிப்பவர், என்றெல்லாம் 'ராஜதந்திர' 'பட்டுப் பட்டாடை' போர்த்திக் கொண்டு, புது மனிதராகத் தோற்றமளித்து வந்தார், இத்தனை நாளாக! வேலை நிறுத்தம் —நாடெங்கும்—எல்லாக் கட்சியும் கூட்டாகி நடவடிக்கையில் ஈடுபடும் என்று தெரிந்ததும், பழைய காமராஜர், பட்டாடை யைக் கிழித்துக் கொண்டு வெளியே வருகிறார். பார்! பம்பாய் நகரை! என்று கூறிப் பயமுறுத்தப் பார்க்கிறார்! துப்பாக்கி இருக்கிறதாம்! அதனால் நாம் பயந்து சாக வேண்டுமாம்!! தம்பி! துப்பாக்கியின் பெயர் கேட்டுப் பயந்து சாவதைவிட,

துப்பாக்கியின் குண்டுபட்டே இறந்து படுவோமே! தமிழனுல் இதுகூடவா முடியாது!! குடியாத்தம் தேர்தலில் குடும்பம் குடும்பமாக இவருக்குப் பணியாற்றியதற்கு, அவரும் ஏதாவது ஒருவகையில் நன்றி காட்ட வேண்டாமா! அதனுல்தான் பம்பாய்! என்று பேசுகிருர்.

இவர், 'நம்மவர்' என்று நாம் நாத்தழும்பேறப் பேசியதும், 'நல்லவர்' என்று நாடெங்கும் பறை அறைந்ததும், உள்ளபடி இவரை நம்மவராகவும்—நல்லவராகவும ஆக்கியிருந்தால், "பண்டிதரே! உமது பேச்சுக்கு நான் மறு பேச்சுப் பேசாதவன், அறிவீர்!! ஆனுல் இதோ, நாடு உள்ள நிலைமையைப் பாரும்! கொதித்தெழுகிறது, போர்க்கோலம் கொள்கிறது! என்னைக் குணாளனே! குலக் கொழுந்தே! என்றெல்லாம் கூறி மகிழ்ந்த மக்கள், இன்று தாயகத்துக்கு வந்துற்ற கேட்டினைக் கண்டு மனம் பதறி, என்னையும் மீறி, எழுச்சி பெற்றுள்ளனர். இதனை 'ஏதோ' என்று எண்ணி விடாதீர், பதவி பெறும் சூதல்ல, துவேச மனப்பான்மையல்ல, இப்போது எழுந்துள்ளது, விழிப் புற்ற தமிழகத்தின் வேதனைக் குரலொலி, தன்மானம் காத்திடத் தாயகம் எழுந்துள்ள காட்சி. இதிலே சகலரும் முனைந்து நிற்கிருர்கள்—சட்டத்தை மதித்திடும் பி. டி. ராஜன் தலைமை வகிக்கிருர்.

தமிழரசுக் கழகம்
திராவிட முன்னேற்றக் கழகம்
கம்யூனிஸ்டுக் கட்சி
பிரஜா சோஷியலிஸ்டுக் கட்சி
சோஷியலிஸ்ட் கட்சி
ஜஸ்டிஸ் கட்சி
எல்லைப் பாதுகாப்புக் கமிட்டி
இணைப்புக் கமிட்டி

எனும் எல்லாம் ஈடுபடுகின்றன. ஏதோ என்னிடம் கொண் டுள்ள 'சபலம்' பெரியாரை ஓரளவு தடுத்து நிறுத்தியிருக் கிறது—அதுவும் நிரந்தரம் என்று கூறிவிட முடியாது; தமிழகத் தில் இதற்கு முன் எப்போதும் இது போன்றதோர் கூட்டு முயற்சி உருவானதில்லை—இதனை அலட்சியப் படுத்துவதோ, அடக்கப் பார்ப்பதோ, பெரும் ஆபத்தாக முடியும்—எனவே—தீது பயக்கும் தீர்ப்பை மாற்றுக.

தமிழக எல்லைகளைத் தருக!
சென்னைக்குத் தமிழ் நாடு என்ற பெயரிடுக!
தட்சிணப் பிரதேச யோசனையைக் கை விடுக!

எதற்கும் நானிருக்கிறேன், எந்த நிலைமையையும் நான் சமா ளித்து விடுவேன், என்று நான் ஆச்சாரியார் போலக் கூறி உம்மை ஏமாற்ற விரும்ப வில்லை, அமைந்துள்ள கூட்டணியை எதிர்த்து நான் அடக்கு முறை ஏவினுல், நாடு காடாகும்— எதிர்காலம் இருள் சூழும்—என்று காமராஜர் டில்லிக்குக் கூறுவார்!

ஆனல், அவரோ, நம்மைப் பயமுறுத்துகிருர்!

தம்பி! பொது வேலை நிறுத்தம், நீண்டகாலப் போர்த் திட்டத்துக்கான முதல் முழக்கமாக அமையப் போகிறது! எனவேதான், முதலிலேயே இதனை முறியடித்திடக் காமராசர் சர்க்கார் முயற்சிக்கிறது.

டாக்டர் வரதராஜுலு, 'முட்பொறுக்கி' ஆழ்வாராகி, நமக்குப் புத்திமதி கூறுகிருர்—வேலை நிறுத்தம் வேண்டாம் என்று பேசுகிருர்.

பம்பாய் என்ற உடன், தம்பி இவர்கள் சுட்டுக் கொன்ற மக்களின் தொகையும், அடித்து நொறுக்கியவர்களின் எண் ணிக்கையும் மட்டும்தான தெரிகிறது? பாபம்! அடக்கு முறையிடம் அழுத்தமான நம்பிக்கை வைத்திருக்கும் அன்ப ருக்கு, இதுதான் தெரிகிறது, நமக்கோ, நாட்டின் தன்மா னத்தை, இனத்தின் எதிர் காலத்தை, மொழிவழி அரசுகோரு பவரின் உரிமையை அழித்திட, எவ்வளவு உச்ச கட்டத்தில் வீற்றிருந்து அரசோச்சுபவர் முயற்சித்தாலும், நாடு, எவ்வளவு சீறி எழுகிறது, கோழையும் வீரனுகி, கோட்டைகள் மண்கூடு ளாகி, வாழ்வுக்கும் சாவுக்கும், வீட்டுக்கும் சிறைக்கும் வித்தி யாசம் தெரியாத மனநிலையை மக்கள் பெற்று, புதியதோர் ஒற் றுமை, அசைக்க முடியாத நம்பிக்கை பெறுகிருர்கள், என்ப தல்லவா தெரிகிறது!

பதவியைக் கால் தூசு என்று உதறித் தள்ளும் வீரர் களைக் காண்கிருேம்!

மேலிடத்துக்குக் காவடி தூக்க, கட்டியங் கூற, மறுக் கும் தீரர்களைக் காண்கிருேம்!

கொடி கட்டி ஆள்பவர்கள் கொடுங்கோலராகி விட் டதால், இன்று குலைநடுங்கிப் பதுங்கும் நிலையைக் காண் கிருேம்.

மராட்டிய இன எழுச்சி கொழுந்துவிட்டெரியக் காண்கிருேம்.

மாவீரன் சிவாஜியின் மரபினர் நாங்கள்—மமதை யாளாகள் முன் மண்டியிட மாட்டோம் — வேண்டு

மானல்—எம்மை வெட்டி வீழ்த்துங்கள்—கழுகு தின்னட்டும், கயவர்களின் காலடியில் வீழ்ந்து கிடப்பதைவிட அது எவ்வளவோ மேலானதாகும் என்று கனலும் புனலும் ஒரு சேரச் சோரும் விழியுடன் கூறிடக் காண்கிறோம்.

நகரமும் குக்கிராமமும், ஆலையும் அங்காடியும், பள்ளியும் பண்டக சாலையும் துறைமுகமும் பிறவும், பாசறைக் கோலம் அடைந்தது காண்கிறோம்.

பம்பாயைப் பார்த்துமா புத்திவரவில்லை, என்று நாமும் கேட்கிறோம்; அகந்தையுடன் அக்ரமத்தைத் திணிக்கும் போக்கினரைக் கேட்கிறோம்.

எந்தப் பம்பாயில் நேரு பண்டிதர் வந்தால் 'ஜன சமுத்திரம்' கூடுகிறதோ, அங்கு இன்று, நேரு படத்துக்கே பாதுகாப்பு தேவைப்படுகிறதே!

துப்பாக்கி தெரிகிறதா என்று காமராசர் கேட்கிறார்—அதற்கு அஞ்சாமல் மார் காட்டி நின்ற மாவீரர்களை நாம் காட்டுகிறோம்.

தம்பி! துப்பாக்கிகளைத் தாண்டித்தான், தூய விடுதலைப் போர் வெற்றிகளைக் கண்டிருக்கிறது!! எந்தக் கொடுங்கோலனிடம் துப்பாக்கி இல்லை—எந்தக் கொடுங்கோலாட்சி துப்பாக்கியினால் காப்பாற்றப்பட்டிருக்கிறது?

எனினும், காமராஜர் இதுபோல் பேசினதற்குக் காரணம், அவருக்கு ஏற்பட்டு விட்ட பீதி! ஆமாம்! வெற்றிகரமான பொது வேலை நிறுத்தம் என்பது, ஆட்சியாளர்களுக்கு ஓர் அவமானச் சின்னம்!! அதை அறிந்துதான், முத்தான வாய் திறந்து முதலமைச்சர் பேசுகிறார்—சத்தான பேச்சல்ல, எனினும் அவருக்குச் சுவையான பேச்சு அது!

துப்பாக்கியைத் துரைத்தன மூலம் பெறுவதற்கு முன்பே, அவர், நம்முடைய 'கட்டை விரல்களை' ஒட்ட வெட்டி விடுவேன் என்று பேசியவர்தான்!!

**தட்சிணப் பிரதேச யோசனையை வீழ்த்த**

**தமிழகம் மொழிவழி அரசாக**

**தமிழ்ப் பகுதிகள் அனைத்தும் தமிழ்நாட்டில் சேர**

**சென்னைக்குத் தமிழ் நாடு என்று பெயர் கிடைக்க**

இத்தனைக்கும் சேர்த்தே பிப்ரவரி 20!!

பொதுக் குழு, வாக்களித்துவிட்டது—நம்மை நம்பி, நாம் கடமையறிந்து, கண்ணியம் தவறாமல், அமைதி குலையாமல், பலாத்காரத்துக்குத் துளியும் இடமளிக்காமல், பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டுவோம் என்ற நம்பிக்கையுடன், பொதுச் செயலாளர், எல்லாக் கட்சியினருக்கும் வாக்களித்து விட்டார்—சகல கட்சியினரும் கூடிய அந்த அவையில், சூள் உரைத்து விட்டார்—உடன் இருந்து ஒப்பமளிக்கும் வாய்ப்பினை நானும் பெற்றேன்—பொதுக் குழுவும் ஏற்றுக் கொண்டது—எனவே, தம்பி! பொறுப்பு இனி உனக்கும் எனக்கும்! புறப்படு! புறப்படு! பிப்ரவரி-20 வெற்றி காண, பணியாற்றப் புறப்படு!! இதோ நானும் புறப்படுகிறேன்!!

இந்தத் திங்கள் 12-லிருந்து 15-வரையில், தமிழகமெங்கும் உள்ள தம்பிமார்களை (பொதுக் கூட்டத்தில் அல்ல) சந்தித்துப் பேச, வரக்கூடும் திட்டம், 'நம் நாடு' வெளியிடும்! தம்பி! நான் நேரில் வந்தால்தானா? இதோ என் வேண்டுகோள்! எனக்குத்தான் வீறுகொண்டெழுந்து ஏறுநடை போட்டுப் பணியாற்றக் கிளம்பும், உன் உருவமே தெரிகிறதே, மனக்கண் முன்! பம்பாய்! பார்! பார்! என்றல்லவோ பயம் காட்டுகிறார் காமராஜர்!

நாம் யார்? என்பதைக் காட்ட வேண்டாமா? நாமென்ன, அடக்கு முறை கண்டஞ்சும் கோழைகளா? சாகத் துணியாத சடங்களா? உரிமையின் மாண்பறியா மரக் கட்டைகளா? தமிழரல்லவா நாம்! பிப்ரவரி 20-ல் அது தெரியட்டும், தம்பி! நன்றாக, ஆனால் அமைதியாக! பளிச்சென்று, ஆனால் பலாத்காரமற்ற வகையில்!

அன்புள்ள,

5—2—1956

அண்ணாதுரை

கடிதம் : 36

# மேற்கொண்டுள்ள மேலான பணி

* தமிழ் நாட்டின் சிறப்பு—பொதுச் செயலாளர் சுற்றுப் பயணம்.

தம்பி,

காஞ்சிபுரம், வாலாஜா, செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விழுப்புரம், புதுவை, கடலூர், சேத்தியார் தோப்பு, அணைக்கரை, மாயவரம் குடந்தை தஞ்சை, திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், மதுரை, திருமங்கலம், விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, எட்டயாபுரம், தூத்துக்குடி, நெல்லை, அம்பாசமுத்திரம், விக்ரமசிங்கபுரம், தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோயில், ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், உசிலம்பட்டி, வத்தலக் குண்டு, ஒட்டன்சத்திரம், பழனி, உடுமலை, பொள்ளாச்சி, கோவை, திருப்பூர், ஈரோடு, பவானி, சேலம், தருமபுரி, திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், குடியேற்றம், வேலூர், ஆற்காடு, இராணிப்பேட்டை, காவேரிப்பாக்கம், பெருமந்தூர், பூவிருந்தவல்லி,......

இங்கே மோடார், மேலால் போக மறுக்கிறது! அங்கு இதயத்து மொழியை விழி காட்ட, "இதுவோ நான் உம்மிடம் எதிர்பார்ப்பது?" என்று கேட்டு நிற்கும் துணைவியாரின் கணையால் தாக்குண்டு, நின்று விடுகிறார், நமது பொதுச் செயலாளர்; ஆனால் அதற்குள், ஆறு இரவுகள் ஓடிவிடுகின்றன—12-ந்தேதி கிளம்பி 17-ந்தேதி இரவுதான் சுற்றுப் பயணத்தை முடிக்க முடிகிறது—ஓரளவுக்கு.

ஆறு நாட்கள், ஓரிடத்தில் மணிக்கணக்கில் தங்காமல், இரவு நடுநிசிக்குப் படுத்துறங்கி, விடிய எழுந்து பயணம் துவக்கி நடத்தி, இவ்வளவு இடங்களை மட்டுமே காண முடிகிறது—விடுபட்டுள்ள இடங்களோ, இதுபோல் பன்மடங்கு—நாகையும் திருத்துறைப்பூண்டியும், மன்னார்குடியும் பிறவும், கரூரும் ஆத்தூரும், ராசிபுரமும் நாமக்கல்லும், அருப்புக்கோட்டையும் காரைக்குடியும், சிதம்பரமும் வேறு பல பாசறைகளையும் காணமுடியாது— விடுபட்ட சிற்றூர்களோ, ஏராளம்; எனினும், வேறேதும் செய்வதற்கில்லை; இதற்குமேல் அதிகநாட்கள் இந்தக் காரியத்துக்காகச் செலவிடுவதற்கில்லை—

என்ற வருத்தம் உடனிருக்க, இவ்வளவேனும் காண வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள முடிகிறதே என்ற உற்சாகம் ஊக்கி விட, நமது பொதுச் செயலாளர், தம்பி! அனைவரையும் கண்டு பேச வருகிறார். நான் வரக்கூடும் என்று சென்ற கிழமை அறிவித்து இருந்தேன்—சென்னையில் நான் தங்கி யிருந்து கவனிக்க வேண்டிய சில பணிகள் ஏற்பட்டுவிட்டன— சிரமம் பாராமல், நாவலர் இந்தப் பயணத்தை மேற்கொண் டுள்ளார்—தோழர் என். வி நடராசன் உடன் வருகிறார், தோழர் கண்ணதாசனும் வருகிறார்.

பிப்ரவரி 20-ல், கடை அடைப்பு, வேலை நிறுத்தம், எவ் வளவு அமைதியான முறையில் நடைபெற்றாகவேண்டும் என்ப தனை விளக்கிக் கூறிடவும், சர்வகட்சிக் கூட்டணி சம்பந்தமான முயற்சி பற்றி எடுத்துரைக்கவும், வருகிறார்.

பொது வேலை நிறுத்தம் என்பது சாமான்யமான காரியமல்ல.

ஜனநாயகம் நன்கு மதிக்கப்படும் நாடுகளில், ஆட்சியா ளர்கள், இதனைத்தான் தமக்கு ஏற்பட்டுவிடக்கூடிய பெருத்த அவமானம் என்று எண்ணுவார்கள்.

காந்தியார், "யங் இந்தியா" பத்திரிகையில் தெளிவு படுத்தி இருப்பதைப் போல, "ஆயிரம் பிரசங்கங்களை விட இந்த அர்த்தால் பலனுள்ளது." அதிலும்; பிப்ரவரி-20, எந்த ஒரு கட்சியும் தனி உரிமை கொண்டாடும் காரியமாக இல்லை; பல்வேறு கட்சிகளும் தத்தமது சக்தியைக் கூட்டிக் காட்டிடும் மாபெரும் சம்பவமாகும்.

எனவேதான், நமது கழகத் தோழர்கள் துளியும் புகாருக்கு இடமற்ற முறையில், எவரும் கண்டு பாராட்டத் தக்க வகையில், நடந்து காட்ட வேண்டும்.

இந்தப் பொறுப்புணர்ச்சியை, பொங்கி எழும் ஆர்வத் தால் உந்தப்பட்டிருக்கும் தோழர்கள், மறந்துவிடலாகாது என்பதற்காகவே பொதுச் செயலாளர் இந்த மின்னல் வேகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

தம்பி! காமராஜரும், பயணமாகி இருக்கிறார்—கடுங்குளிர் கொட்டும் அமிர்தசரசுக்கு.

இருவரும் போகும், திக்குகள் மட்டுமல்ல, வேறு வேறாக இருப்பது, இருவரின் நோக்கமும் வேறு வேறு!!

அமிர்தசரஸ் சென்றுள்ள காமராஜர், நீட்டிய இடத்தில் கையெழுத்திட்டுவிட்டு வரப்போகிறார்—உங்களைக் காண வரு பவரோ, நீங்கள் காட்டிடும் உற்சாகத்தைக் கண்டு களித்துப் புதியதோர் நம்பிக்கை பெற்றுவரப் போகிறார்.

திரும்பி வந்தவுடன், காமராஜர், போலீஸ் மேலதிகாரி களுடன் பேசக் கூடும்.

"பிப்ரவரி-20, என்ன நேரிடும் என்று எதிர்ப்பார்க் கிறீர்கள் ?"

"சர்வகட்சிக் கூட்டணியாக இருப்பதால், சற்று வெற்றி கரமாகவே, அர்த்தால் நடைபெறும் என்று எதிர்பார்க் கிறோம்."

"எந்த நிலைமையையும் சமாளிக்கத் தக்க ஏற்பாடுகள் உள்ளன அல்லவா ?"

"ஆகா ! தாராளமாக ! தங்கள் உத்தரவைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்."

"ஜனங்கள் எப்படி இருக்கிறார்கள் ?"

"வேலை நிறுத்த விஷயத்திலே அக்கறை காட்டுகிறார்கள்—ஆயிரக்கணக்கில் கூடுகிறார்கள் கூட்டங்களில்—உற்சாகம் காட்டுகிறார்கள்."

"அது சரி ! அது சரி ! ஒரு நாளைக்கு நேருவை அழைத்து வந்து கூட்டம் போட்டால் போகிறது. இவர்கள் இப்போது செய்யும் காரியம் ஒரு பிரமாதமா ? அது கிடக்கட்டும்—நாம் என்ன செய்யலாம் என்று நினைக் கிறீர்கள் ?"

"நாமா......... தாங்கள் சொல்கிறபடி செய்யலாம்...... முதலிலேயே, முக்கியமானவர்களைப் பிடித்துப் போட்டு விடலாம்......"

"நாற்பது ஐம்பதாவது இருக்கும் போலிருக்கே...பிடிக்கப் பட வேண்டியவர்கள்......"

"இருக்கும்...கமிட்டியில் 27 பேர்..."

"கமிட்டியை அப்படியே..."

"அரெஸ்டு செய்துவிடலாம்...எல்லோருடைய விலாசமும் குறித்து வைத்திருக்கிறோம். அன்றாட நடமாட்டம் பற்றிக்கூட குறிப்பு எடுத்திருக்கிறோம். விநாடி தவறாமல் கண்காணித்து வர ஏற்பாடு இருக்கிறது."

"அரெஸ்டு செய்யலாம்... ஆனால்..."

"முன்பு தி. மு. க. மும்முனைப் போராட்டத்தின் போது, இதுபோலத்தான், அவர்கள் கூடி முன்னேற்பாடுகள் செய்வ தற்குள், துளியும் அவர்கள் எதிர்பாராத நேரத்தில், தலைமை நிலையம் சென்று, சுற்றி வளைத்துக் கொண்டோம்; கமிட்டியை அப்படியே கொண்டு வந்து விட்டோம்."

"ஆமா...மாம்..."

"ஏன் ? ஏன் ? ஏன் சிரிக்கிறீர்கள் ?"

"சிரிப்பா! இது என்ன சிரிப்பு! அப்போது நானும் என் நண்பர்களும், இதைவிடப் பலமாகக் கைகொட்டிச் சிரித்தோம்......என்ன பைத்தியக்காரத்தனம்! சீப்பை ஒளிய வைத்துவிட்டால் கலியாணம் நின்று போகும்?......இந்தக் கிழவர், இப்படி முக்கியமானவர்களை முன்னாலேயே சிறையில் போடுகிறாரே... அந்த ஆத்திரம் போதுமே, மற்றவர்களுக்கு வீராவேசம் ஊட்ட! என்ன பைத்யக்காரத்தனமான போக்கு இது என்று பேசிச் சிரித்தோம்..."

"அப்படியானால்...?"

"அதே பைத்யக்காரத்தனத்தை நானும் செய்வதா! வேறு முறை கூறுங்களய்யா..."

"வேறு...! கலகம் குழப்பம் என்றால் முதலில் கண்ணீர்ப் புகை குண்டு வீசி விட்டு, பிறகு, துப்பாக்கி..."

"பிறகு கீழே விழும் பிணத்தைப் பார்த்து மக்கள், என்னை வாழ்த்துவார்களா!......"

"அதுவும் கவனிக்க வேண்டியதுதான்..."

"கடைகளை மூட வேண்டாம் என்று கூறி, போலீஸ் பாதுகாப்பு பலமாகக் கொடுத்து கடை அடைப்பைத் தோற்கடித்தால் என்ன? அதற்குப் போதுமான போலீஸ் இருக்கிறதல்லா...?"

"மாமாங்கத்துக்குப் போவது போக, மிச்சமிருப்பதைக் கொண்டுதான் பார்க்க வேண்டும்...ஆந்திரா, மலபார்...... போலீசும் தருவிக்கலாம்... பட்டாளத்தைக்கூட பம்பாயில் தருவித்தார்கள்."

*　*　*　*

திரும்பி வந்ததும் நமது பொதுச் செயலாளரோ,
எங்கும் எழுச்சி
எங்கணும் முழக்கம்
எவர் உள்ளத்திலும் உறுதி
சென்ற இடமெல்லாம் வீரம்
பரணி பாடி நிற்கின்றனர்
தியாகத்துக்குத் தயாராக உள்ளனர்

என்ற 'சேதி'யை, இங்கு அவர் வருகைக்காக ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் என்னிடமட்டுமல்ல, சர்வகட்சிக் கூட்டணியில் உள்ள தலைவர்களிடமெல்லாம் கூறப் போகிறார் —ஆமாம் தம்பி! உன்னைக் கண்டால், எவர் உள்ளத்திலே தான், வீர உணர்ச்சியும் நம்பிக்கையும் ஊற்றெடுக்காது.

ஆர்வம், கொழுந்து விட்டு எரிகிறது தம்பி, எங்கும்.

தமிழ் இனம், தன் இயல்பை இழந்துவிடவில்லை; வீழ்ச்சி யுற்றது போல் காணப்படினும், எழுச்சி பெற நேரம் அதிகம் பிடிக்காது என்பதை எடுத்துக் காட்டவும் இடித்துக் காட்டவும் முடியும் தமிழகத்தால் என்பதை உணருகிறேன்.

தயார்! தயார்! என்ற பேரொலி கிளப்பிடும் ஆயிர மாயிரம் தோழர்களைக் காணும்போது, வீரம் எத்துணை இங்கு இருக்கிறது என்ற எண்ணம் தேனென இனிக்கிறது ....ஒரு கணம்— எனினும், மறுகணமோ, இத்துணை வீர உணர்ச்சி வீறிட்டெழும் நிலையில் நாடு இருக்கும் போதே, எத்தனை அக்ரமத்தைச் செய்ய, அநீதியைப் புரியத் துணிந்துவிட்டனர், நேரு சர்க்கார் என்பதை எண்ணும்போது, துக்கம் நெஞ்சினைத் துளைக்கிறது.

ஒட்டகத்தின் 'நகாரா' கொட்டுவோர்—ஓராயிரம் ஈரா யிரம் என்ற அளவில், புதுச் சட்டை கிடைத்த மகிழ்ச்சியுடன் தொண்டர்கள், பூர்ண கும்பம் எடுப்போர், பொட்டிட்டு மகிழ்வோர், தட்டுத் தூக்குவோர், தாளம் கொட்டுவோர், கட்டியங் கூறுவோர், கானம் பாடுவோர், விட்ட அம்பு பாய் வது போலாகி இட்ட பணியினைச் செய்து முடித்திடவல்லேன் என்று வீரம் பேசுவோர், வெட்டி வா என்றால் கட்டி வரு வேனே நான்! என்று வீம்பு பேசி விருது தேடுவோர், ஆகிய அணிபணிபுனைந்த படை புடைசூழ, நேரு பெருமகனார், தலைவர் பீடத்தில் அமர்த்தப்பட்டிருக்கும் தேபர் பராக்குக்கூற, அமிர்தசரசில் பவனி வருகிறார்—அவர் ஆணையை நிறைவேற் றித் தருவதற்கு, அதன் பயனாக அரசுக்கு இழுக்கு வரினும் மக்க ளுக்கு உரிமை பறி போயினும், ஜனநாயகத்துக்குக் குழிபறிக் கப்படினும் கவலையில்லை, அவருடைய புன்னகை நம்மைக் கவர்னராக்கக் கூடும், அவருடைய தயவு நம்மைக் கோடீஸ் வரனாக்கக் கூடும், அவர் 'தெரிசனம்' நமக்கு எத்தனையோ இலாபம் தரவல்லது, அது போதும், இந்த மக்கள் கிடக்கட் டும்! இதுகளுக்கென்ன! வறட்டுக் கூச்சலிடும்—சில நாட்கள்!! வீரம் பேசும்—சில வேளைகளில் காட்டவும் செய்யும்—துரத்தி அடித்தால் போகிறது—துப்பாக்கிக்கு முன் என்ன செய்யும் இந்தக் கும்பல்!!—என்று இறுமாந்து கூறிக்கொண்டு செல்கிறார்கள், முதலமைச்சர்கள், முடிச்சமைச்சர்கள் ஆகியோர்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே காந்தாரமும் கனோசும், காமரூபமும் மாளவமும், கூர்ஜரமும் பிறவும் உருவாகாத நாட்களிலேயே, அயோத்தியும் அஸ்தினாபுரமும், காசியும் அரித்துவாரமும் 'திவ்ய க்ஷேத்திரங்கள்' ஆகாததற்கு முன்பே, பூம்புகாரும், கொற்கை, தொண்டி, முசிரி, எனும் பல்வேறு

துறைமுகங்கள் கொண்டதாய் விளங்கியது எந்த நாடோ, எந்த நாட்டிலே முரசு மூன்று, தமிழ் மூன்று வகை என்றும், தானை நால்வகை, போர் முறை பல்வேறு வகை, கருவிகள் பலப்பல என்றும் வகுத்து வைக்கப்பட்டிருந்தனவோ, எந்த நாட்டிலே நிலமே ஐவகையாக இயல்பும் எழிலும் பயனும் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டு இருந்ததோ, எந்த நாட்டு முத்தும் பவழமும் பிறநாட்டுப் பேரரசர்கள் தமது காதலைப் பெற்ற கட்டழகியர்க்குக் காணிக்கையாக்கிக் களித்தனரோ, எந்த நாட்டுப் புலவர்கள் புவியாளுவோரையும் துச்சமென்றெண்ணி அறநெறிக்கு மக்களை அழைத்துச் சென்றனரோ, எந்த நாட்டிலே முகிலின் முழக்கமும் முழவின் ஒலியும், மின்னல் ஒளியும் கன்னல் சுவையும், ஆடலழகியரின் கடையிடையும் ஆற்றலரசர்களின் கட்டாரியும் கொல்லவும் வெல்லவும் பயன் பட்டனவோ, எங்கு,

நற்றிணை நல்ல குறுந்தொகை
ஐங்குறு நூறு, ஒத்த பதிற்றுப் பத்து
ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு
அகம் புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்றபடி, பேரிலக்கியங்கள், கற்றோர் ஈட்டிய கருவூலமாக உளதோ, அந்த நாடு, அதன் எல்லைகள் வெட்டப்பட்டு, வேற்றூரால் கவரப்பட்டு, அதன் பண்பு பாழ்படும் வகையினதான மொழிக்கும் கலைக்கும் இடமளித்துவிட்டு, இடர்ப்பட்டு, இழிநிலை பெற்று, இயல்பு கெட்டு, எழில் குலைந்து, கொற்றம் அழிந்து, கோலம் கலைந்து, மற்றையோர் கண்டு எள்ளி நகையாடத்தக்க விதத்தில் மானமழிந்து, ஈனர்க்குக் குற்றேவல் புரிந்து கிடக்கும் எடுபிடியாக்கப்படுகிறது! எட்டுத் திக்கும் ஒரு காலத்தில் புகழ்க் கொடி பட்டொளி வீசிப் பறந்திட்டதாம்! இன்றோ, திக்குத் தெரியாத காட்டிலே சிறகொடிந்த நிலையில், தத்தித் தத்திச் செல்லும் தத்தை போலாகிக் கிடக்கிறது! முத்துப் பந்தலளித்து முழங்காற்படியிட்டுப் பணிந்தான் ஓர் மன்னன்! தந்தக் குவியல்களைக் காலடியில் கொட்டி, அரசர்க்கரசே! என்று அஞ்சலி செய்தான் மற்றோர் வேந்தன். படைகொடு வருவேன் என்று கூறினதும், திறைகொண்டு வந்தேன் என்று பதிலிறுத்தனர் மன்னர் பலர். காவிரிக் கரையிலே காதல் கீதம் பாடிய கட்டிளம் காளை, கட்கம் ஏந்திக் கங்கைக் கரையினரைப் போரிலே வென்று, அவர்தம் தேர்ச்சிலைச் சீலையினை, தமக்கு அதரத்தேனளித்து ஆட்கொண்ட ஆரணங்குகள் விளையாட வைத்திருந்த பொம்மைகளுக்கு அளித்தானாம்.

தம்பி! தம்பி! ஏன் பிறந்தோம் இந்நாட்டில்! பிறந்திடினும், தொதவர், தொம்பரவர் போல் இருந்து தொலைத்திடக் கூடாதா! ஏனோ, நம்மை எல்லாம் தமிழர் என்ற இன உணர்வும், அதனாலாய பெருமையினையும் பெறுமாறு, நாவலரும் பாவலரும் செய்துவிட்டனர். அதனாலன்றோ நமக்கு நமது நாட்டின் அந்நாள் ஏற்றம் தெரிகிறது; தெரிவதனாலன்றோ, இன்றுள்ள இழிநிலையும், இனி எதிர் காலம் எப்படியோ என்ற அச்சமும் பிடித்தாட்டுகிறது—அல்லற்படுகிறோம்—அழுது நிற்கிறோம்.

இவை பற்றி ஏதும் தெரியாத காரணத்தால், அதோ பார், அந்த 'அரும்பெருந் தலைவர்' தொல்லையற்றுத் துயரற்று, அமிர்தசரசில், ஆனந்தமாகக் காட்சிகளைக் கண்டு களித்தபடி, தமிழ் நாடு தனியாக இருத்தல் கூடாது என்கிறீர்களா? சரி! சரி! மெத்தச் சரி. தட்சிணப் பிரதேசமா? ஆஹா, அதனாலென்ன, ஏற்பாடு செய்வோம், கேரளமும் கருநாடகமும் தமிழகத்துடன் கூடி, ஓரரசு ஆகட்டும் என்று ஆணை பிறப்பிக்கிறீர்கள். சரி, அங்ஙனமே ஆகுக, என்று கூறிக்கொண்டு நிற்கிறார். இங்கே அலைகிறார் அலைகிறார், ஐயகோ, தமிழரே! பரணை எல்லாம் பழந்தமிழ்ச் சுவடிகள், பாளையமெங்கும் பாவாணர் மரபுகள், வயலெலாம் செந்நெல், வாவி எலாம் வாளை, நினைவெலாம் நேர்மையின்மீது, என்றெலாம் செப்பிடுவர் செந்தமிழ்க் காவலராம் பாவலர் பலர். இன்றோ, தமிழகம் தமிழர்க்கு இல்லையாம், தகுதியற்றோமோ, திறமை அற்றோமோ அறிந்தோமில்லை. மொழி வழி அரசு எனப் பலகாலும் மொழிந்து வந்தனர், வாக்கினைத் தாமே மாய்த்திடும் வன்கணாளர்களாகி விட்டனர் ஆளவந்தோர். எனவே அரசு இனி, தமிழ் நாட்டுடன் அமையாது என்று அறைந்து விட்டனர்; பிற மொழியாளருடன் கூடி ஓர் அரசு நடாத்துவதே பெருமை அளிக்குமாம், சிறுமை ஒழிக்குமாம், பிணக்குத் தீர்க்குமாம், பிளவு போக்குமாம். இங்ஙனம் ஏலாதன வெல்லாம் கூறி பொய்யுரையைத் துணிந்து கூறி பொலிவுள்ள தமிழகத்தை, களமாக்கத் துணிந்து விட்டனர்

சங்கம் அறிந்த சான்றோரே! சிலம்பொலி கேட்டுச் சிந்தையில் தேன் பெய்தது என்று கூறிக் களித்திடுவோரே! வீரம் செறிந்த தமிழ் நாடே! உன்னை வாழ்த்துகிறேன் என்று போற்றிடும் அன்பர்காள்! 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்ற பாரதி வாக்கினை மாய்த்திட ஓர் மாபாதகத் திட்டம் வகுத்து விட்டனர்—வாய்க்கரிசியும் கைக்கிழங்கும் கிடைத்தால் போதுமென்றெண்ணி விட்ட ஆளவந்தார்கள், அத்தீய திட்

டத்தினை நிறைவேற்றித் தர ஒப்பம் அளித்து விட்டனராம். ஓங்கு புகழ் நம்முடையது என்று ஓராயிரம் புலவர் பெரு மக்கள், நம் இதயம் விம்மும் அளவு பாடி வைத்து விட்ட னர்! ஒரு நொடியில் அதனை அழித்திடுவேன் என்று கூவு கிறார் நேரு, தாளம் கொட்டுகிறார் காமராசர். இதற்கென்ன செய்வது ? கூறுமின் ! கூறுமின்! கூடிப் பணியாற்றிட வாரீர். பிப்ரவரி 20-ல், முதல் முழக்கம். அன்று தமிழரின் பெருமூச்சு, டில்லி செங்கோட்டையில் வீற்றிருக்கும் பாறை மனம் கொண் டோருக்கும் இரக்கம் எழத்தக்கதாக வேண்டும். அதற்கான அழைப்பினை நேரிலேயே தந்துவிட்டுப் போகவே, இதோ நான் வந்துள்ளேன். உமது வீரத்தை, ஆர்வத்தை, மொழிப் பற்றை, நாட்டுப் பற்றை, பண்பு கெடாமல் பணியாற்றும் திறத்தை நம்பி, பிறவேறு கட்சியினர் கூடியதோர் பேரவை யில், சூள் உரைத்து விட்டேன். அவர்களும் ஆமாம், உமது அணிவகுப்பின் ஆற்றலை நாங்கள் அறிவோம், நாடு அறியும் என்று கூறினர்.

நண்பர்களே, நாள் அதிகம் இல்லை. நாடெங்கணும் நடந் தாக வேண்டும், கடை அடைப்பும், பொது வேலை நிறுத்தமும். எனவே, உடனே துவக்குவீராக; வெற்றிக்கு வழிவகுத்துத் தருவீராக! தமிழகம், தன் வீரத்தை, உமது வெற்றியின் மூலம் விளக்கட்டும்—வீறு கொண்டெழுந்து இரத்தச் சேற்றிலே தள்ளப்பட்டாலும், தாயகத்துக்கு வர இருந்த தாழ்வினைத் தடுத்திடத் தவறினேன் இல்லை; இன்னுயிர் போகுமுன் அன்னை யின் பொருட்டுப் பணியாற்றிவிட்டேன்; ஆவி பிரிகிறது எனி னும், கண்மூடுமுன், இக்காரியத்தைத் தொடர்ந்து நடாத்தி வெற்றி காணும் வீரர் குழாம் எனைச் சூழ நிற்கக் காண் கிறேன்—அக்காட்சி தீட்டிடும் புன்னகையுடனேயே, புகழ் பெற்று மறைகிறேன்—தமிழ்நாடு மறையாது—மறையாது— என்று கூறும் அளவுக்கு வீர உணர்ச்சி கொள்வீராக—என் றெல்லாம் எடுத்துக் கூறிக் கொண்டு அலைகிறார், வாள் பெற உலைக்கூடமெங்கணும் சென்று காணும் பான்மைபோல, அறப் போருக்கான அணிவகுப்பு அமைத்திட, வீரர் கோட்ட மெலாம் வருகிறார். அவர் தம் வருகையின் போது வெற்றுரையும் வேண்டாம், விழாவும் கூடாது—வேலைத் திட்டம் தாருங்கள், பெறுங்கள்—நெடுஞ்சாலையோர மெல்லாம் நின்றிருந்து உரை யாடுங்கள், கடும்போராயினும் கலங்கமாட்டோம் என்ற உறுதி யினைத் தாருங்கள்; அமிர்தசரசில் ஆக்கப்பட்டு வரும் அக்ர மம், எந்த வடிவுடன் வந்தாலும், அதனை எதிர்த்தொழிக்கா முன்னம், ஊண் கொள்ளோம், உறக்கம் இல்லை என்று உறுதி கொள்ளுங்கள்.

ஆளைக் கொண்டுவருபவருக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு அளிக்கப்படும்—என்று இந்தியப் பேரரசு, நாகர் தலைவன்

பிஜோ குறித்து, அவசர அறிக்கை வெளியிட்டிருக்கிறது; அந்த உரிமைப் போர் வீரனுடைய சிரிப்பொலியை எதிரொலித்துக் கொண்டு குன்றும் மலையும், குணங்கெட்ட குடிலர்களின் கொற்றம் கொடுமை பல செய்கிறது, கொடுமை அதிகமாக வாக, அது அற்று வீழ்வது உறுதி என்று கூறுவதுபோல் நிமிர்ந்து நிற்கின்றன.

நமக்கும், அது போன்றதோர் 'கொடுமை'யினைத் தாங்க வேண்டிய கட்டம் பிறக்கக்கூடும்.

பிப்ரவரி 20—ஒரு பெரும் பயிற்சி நாள்.

சர்வ கட்சிக் கூட்டணியின் பின்னல் திரண்டுள்ள சக்தியினை அறிந்துள்ள சென்னை சர்க்கார், டில்லி, சிண்டு பிடித்திழுத்து மண்டை ஓட்டு மாலையைக் கொண்டு வந்து தந்தாக வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தாலொழிய, நம்மைத் தீண்டும் என்று கூறுவதற்கில்லை. தீண்டியவர் என்ன ஆனர் என்பது, அந்த நிலையினுலேயே முதலமைச்சரானவருக்கா தெரியாமற் போகும்?

ஆனல் அதிகாரம், அத்தகைய அகந்தையை ஈன்றெடுத்தளித்திடும்—அதன் வயப்பட்டோருக்கு முன்னுள் நிலைமைகளும் நினைப்புகளும்கூட மறந்து போவதுண்டு.

எனவே எத்தகைய கொடுமைகள் இழைக்கப்பட்டாலும் தாங்கிக் கொள்ளும் தியாக உள்ளத்துடன் பணியிலே ஈடுபட வேண்டும். உனக்கென்ன, அறிவுக்கோ ஆற்றலுக்கோ பஞ்சமா? பழக்கமோ பயிற்சியோ இல்லையா? களம்பல கண்டவன்! வாகை உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது; வழியிலே உள்ள முட்புதருக்காக அஞ்சிச் சிரித்திடும் முல்லையைப் பறித்திடாது திரும்பிடும் பேதையும் உளனே?

தம்பி! உன்னைக் காணவரும் பொதுச் செயலாளரிடம் உறுதி கூறு,

**பிப்ரவரி 20-ல்**
**அமைதி கெடாது**
**பலாத்காரம் தலைகாட்டாது**
**கண்ணியம் கெடாது**
**கட்டுப்பாடு குலையாது**
**களங்கம் ஏற்படாது!**

என்று. உள்ள நாட்களோ குறைவு, மேற்கொண்டுள்ள பணியோ, மேலானது.

அன்புள்ள,

*12—2—1956*

அண்ணாதுரை

கடிதம் : 37

# புலித்தோலும் எலிவாலும்

★ மறவரும் மகளிரும்—மொழிவழி
அரசும் பெரியாரின் கருத்தும்

தம்பி,

கிள்ளையும் நாகணவாய்ப் புள்ளினமும் அளித்திடும் இசையையும், சிரித்திடும் முல்லை பரப்பிடும் மணத்தினையும், வீசிடும் தென்றல் அளித்திடும் குளிர்ச்சியினையும், பெற்று மகிழ்ந்தவன்; இத்தனையையும் இவற்றினுக் கெல்லாம் மேலானதான 'காதல்' கனிரசத்தினையும் பருகிடும் பருவத்தினன்; சோலையும் சாலையும், வாவியும் வயலும், மாடமும் கூடமும், எங்கும் எழிலாளின் இன்முகம் அன்றோ தெரிகிறது, 'குறி' இடம் சென்று அக்குமரியிடம் கொஞ்சுமொழி பெற்று மகிழ்வதற்குத் தடையாகவன்றோ கதிரோன் கண்விழித்தபடி உள்ளான், அவனுக்கு மதி புகட்டிட வளர்மதியே வாராயோ! என்று எண்ணிடும் இயல்பினன்; கொழுகொம்பினைத் தழுவிடும் கொடியினையும், பெடையுடன் பெருமிதத்துடன் உலவும் அன்னத்தினையும், கண்டு காதல் தீ கொழுந்து விட்டெரியும் உள்ளத்தினனாகி, தோழியின் பேருதவியைத் தொழுது பெற்றுத் தோகையாள் வரக்கண்டு விழி கூத்தாட, மொழி குளற, வழி தெரிந்ததோ, வாடாப்பூ மேனியாளே! மனம் இளகிற்றோ இப்போதேனும்! அச்சமும் மடமும் அரிவையர்க்கு அணிகலன் தான், ஆயினும், பிஞ்சுநிலை சென்றுவிட்ட என்னை ஏறெடுத்தும் பாராதிருந்திடலாமோ! என்றெல்லாம் பேசி, ஏந்திழையாளை, அருவிக்கரைக் கழைத்து மருவி மகிழ்ந்திடும் மணாளன், பிறகோர் நாள், என்ன இக்காளை, பெற்றோர் ஈட்டிய பெரும் பொருளைத் தின்று தீர்த்திடும் போக்கினனாக உள்ளானே, குந்தித் தின்றால் குன்றும் கரையும் எனும் மொழியினையும் இவனறியானோ! கடல் கடந்து சென்றேனும் பொருள் ஈட்டி வாழ்வதன்றோ பெருமைக் குரியது என்ற தமிழ் முறையை இவன் ஏனோ அறியாது போயினன் என்று, பெரியோர் பேசிடக் கேட்டு, பொருள் ஈட்ட வெளிநாடு செல்லக் கிளம்புவான்—முன்னாளில் தமிழ் இளைஞன். செல்லுமுன், சேயிழையை அருகழைத்து ஆயிரம் உறுதி மொழிகளை அளித்து, முகம் துடைத்து, முத்தமளித்து, மெல்ல மெல்லச் சேதிதனைச் சொல்லுவான்; சொல்லக் கேட்டதும் அனலிடை மெழுகாவாள்; புனல் பொங்கிடும்

கண்களைக் கண்டு கலங்குவான், அவன்; "பொன்னு வேண்டும் ?" என்று கேட்பாள் அப்பூவை, அதைப் பெற என்னைப் பிரியவா துணிந்தீர் என்பாள்; உமக்கு அந்தத் துணிவு ஏற்படக் கூடும், ஆடவருக்கே அது இயலும், எனினும் என்னிடம் கூறுகிறீரே, நான் அதைக் கேட்டுக் கொள்ளும் துணிவு உடையவளோ என்பாள்—இவ்வளவும் மங்கையரின் தனி மொழியாம் கண்மூலம் ! பொன்னும் வேண்டாம், பொருளும் வேண்டாம், மின்னிடும் கண்ணொளியே போதும். பேச்சுக்கும் ஏச்சுக்கும் அஞ்சினேன், பிறிதொன்றில்லை. ஆடிப்பாடிக் காலங் கழிக்கிறான், பொருள் ஈட்டும் வகை அறியான் என்று பேசுவது கேட்டேன்—பிரிய எனக்கு மட்டும் மனம் இடம் தருமா ? என்றெல்லாம் கூறி, அவளை அருகே அழைத்துக் கண்ணீர் துடைத்திடுவான். பொருள் பெறப் பிரிதல்—இத்துணை இடர்ப்பாட்டுடன் துவங்கும். எனினும் அதே மங்கை, அத்தமிழ் மகன் பொருள் ஈட்ட அல்ல, புகழ் ஈட்ட, தாய்நாட்டின் மானம் காக்க, உரிமையை அழித்திட எண்ணிடும் உலுத்தரின் கொட்டத்தை அடக்கிக் களம் செல்லக் கிளம்புங்காலை, கண்ணீர் சிந்தியோ, கரம் கூப்பியோ, தடுத்து நிறுத்தியோ, தழதழத்த குரல் காட்டியோ, காதற்கணவனை இல்லத்தில் இருந்திடச் செய்வதில்லை ! வாளையும் வேலையும் எடுத்துத் தந்து வாகையுடன் திரும்பிவாரீர் என்று கூறி வழியனுப்பிவைப்பாள் ! ஆற்றல் மறவர், அவர் தமக்கு ஏற்ற மகளிர் !!

எல்லையைக் கடந்து பகைவன் வந்ததில்லை—வந்தவன் தோற்றோடாமல் இருந்ததில்லை !

பிறருடைய கொல்லையில்கூடத் தமிழன், காரணமற்று நுழைந்த தில்லை—எனினும், தாயகத்தில் ஒருபிடி மண்ணையும் மாற்றான் கவர்ந்திட விட்டதில்லை.

வேண்டிக் கேட்பவனுக்கு இன்னுயிரும் தருவான்; பகை எனிலோ எழு கடலையும் கலக்குவான் !

கட்டழகியின் கட்டளைக்குக் கட்டுண்டு, மலர் கொய்து தருவான்—அதே கரங்கள், தாயகத்தை இழித்துரையாடுபவனின் தலையினைக் களத்தில் கொய்திடும்.

செம்பஞ்சுக் குழம்பெடுத்து அவள் பாதத்தில் தடவி மகிழ்பவன், மாற்றான் வீசிய வேல், மார்பிலே பாய்ந்திட, அதனை அப்புறப்படுத்தும் போது, கொப்பளித்துக் கிளம்பும் குருதியைக் கண்டு களித்திடுவான், களத்தில்.

வீரமிக்க நாட்களைப்பற்றி விரித்துரைத்திடும் ஏடுகளிலே காணக்கிடக்கும் சொல்லோவியம், பலப்பல.

எந்நாட்டவர் கண்டறியினும், நாமேன் இந்நாட்டவராகப் பிறந்தோமில்லை என்று எண்ணுவர், அத்துணை ஏற்றம்

பெற்று வாழ்ந்தனர், கொற்றம் இழக்காத நிலையிலிருந்த தமிழர்!

இன்று? கொற்றமில்லை; அஃது இல்லையே என்ற மனக் குமுறலும் போதுமான அளவு எழக் காணேம். புகழ் ஈட்டச் செல்லுங்காலே, பொற்கொடியும் தடுத்திடாள், பழந் தமிழ் நாட்டில் என்று செப்பும் ஏடுகளே, செல்லரித்துக கிடக் கின்றன!

எனவேதான், இன்று, எவனுக்கும், இந்நாட்டில் எதனே யும் செய்து வெற்றிபெற முடியும் என்ற துணிவு பிறந்து விட் டது; பணிவோனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கப்படும், எதிர்த் திடுவோனே இருக்குமிடம் தெரியாமல் ஒழித்திடுவேன் என்று—வீரம் பேசுகின்றனர், பிற பிரச்சினைகளிலே பேசிப் பேசிப் பணிந்திடும் பெருந் தலைவர்கள்!!

எல்லை குறைந்துபடும், அதனுலென்ன! எழிலிடங்கள் கவரப்படும், அதனுலுமென்ன! மொழி வழி அரசு அமைத்திட ஒப்பமளிக்க மாட்டோம், என்ன செய்து விடுவாய்! உரிமை என்று நா உலரும்வரை கதறிக் கிட, இல்லை, இல்லை, அதனே யும் நான் அனுமதிக்கமாட்டேன், என் காதுமல்லவா குடை யும், எனவே துக்கம் துளைத்தால் தாங்கிக்கொள். எதிர்த்துப் பேசினுலோ, இருப்பதும் போகும், அறிவாய், அடங்குவாய்—என்று, உலகுக்கெல்லாம் சாந்தம் போதிக்கும் நேரு பெரு மகனுரே பேசுகிருர்!

கல்லினைக் கசடர் தலையில் ஏற்றியது அந்த நாள்! சுடு சொல்லினைத் தாங்கி, கருகிய உள்ளத்துடன், உழலுவது இந்த நாள்!!

தமிழகமே! தாய் நாடே! இத்துணை தாழ்ச்சியுறவோ நீ ஓர் நாள் அத்துணை ஏற்றத்துடன் பொலிவினைக் காட்டி நின்ருய்!!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, எழில் நிரம்பி இருந் தது என்று எல்லா வரலாற்ருசிரியரும் எடுத்தியம்புகின்றனர்! ஏ! ஏ! இதென்ன காட்டுமிராண்டிப் பேச்சு! என் மொழி! என் இனம்! என் நாடு! என் அரசு! என்றெல்லாம் பேசு கிருயே! என்று ஏசுகிருர் நேரு பெருமகனுர்!

இந்த இழிநிலையினைத் தாங்கிக் கொள்ள மறுக்கும் தமிழர் உளர். இந்நிலையினை ஒழித்திட, தளராது உழைத்திடுவோம் என்று 'சூள்' உரைத்துக் கிளம்பும் தமிழர் உளர். தமிழர்க்குத் தமிழ் நாடு வேண்டும், தமிழ் நாட்டுக்குச் சொந்தமான இடம் பிற நாட்டுடன் பிணைபட்டு இருந்திடும் கொடுமை களையப்பட வேண்டும், எல்லை குறைதல் கூடாது, எமது இடத்துக்கு உரிய பெயராம் தமிழ்நாடு என்பதே எமக்கு வேண்டும், இவைதமை

மறுத்திடும் போக்கில், மாய்த்திடும் கருத்துடன் வடநாட்டு ஆட்சியாளர் வகுத்துள்ள சூதுத் திட்டத்தை, அக்ரம ஏற் பாட்டை, அநீதியான தீர்ப்பை, நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம், உரிமையும் நீதியும் கிடைக்கும்வரை போராட நாங்கள் உறுதி கொண்டு விட்டோம், கொடியும் கோட்டை யும் வேறு வேறு, போக்கும் நோக்கும் பிற பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், வேறு வேறுதான், எனினும், தமிழ்நாடு அமைய வேண்டும், அது எல்லை குறையாத, ஏற்றம் கெடாத, உரிமை பெற்ற, மொழிவழி அரசாக மலர வேண்டும் என்ப திலே, நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கிறோம், இதற்கு முன்பு எப்போதும் ஏற்பட்டிராததோர் 'கூட்டணி' காணீர் !- என்று எடுத்துக் காட்டும், ஏற்புடைய நாள், எழுச்சியூட்டும் நாள், நாடு விழிப்புற்று இருக்கிறது என்று விளக்கிடும் நாள், தாயகத்தின்மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை நொறுக்கிடும் வீரம் கொண்டோர் முதல் முழக்கம் தரும் நாள், பிப்ர வரி 20.

பிப்ரவரி 20 என்ற நாள்பற்றி எண்ணிடும் போதே, தம்பி, பிற எந்த நாட்டாரும் பெற்றிராத எழிலரசினை நாம் ஓர் காலத்தில் பெற்றிருந்தோம் என்பதையும், பல்வேறு நாடு கள், பனி படர்ந்தும் பாலை மிகுந்தும், இடர் குவிந்தும் இயல்பு கெட்டும் இருந்திடுவது போலன்றி, வளமெல்லாம் குறைவறப் பெற்று, வாழ்விலே பெறத்தக்க பேறுகளை அடை வதற்கான அறிவாற்றலைக் கொண்ட மக்கள் மன்றமாக நமது நாடு, பன்னெடுங் காலத்துக்கு முன்பே பொலிவு பரப்பி வந் தது என்பதும், நினைவிலே நிற்க வேண்டும்.

வானிடை மிதந்திடும் தென்றலிலே,
மணிமாடங்கள் கூடங்கள் மீதினிலே
தேனிடை யூறிய செம்பவள
இதழ்ச் சேயிழை யாருடன்

காதலின்பம் பெற ஆடிப்பாடி மகிழ்ந்தும், பகல் இரவாகிவிட் டதோ என்று கூறத்தக்க வகையில் பெரும் புழுதி கிளம்பிடச் சுழலெனச் சுற்றிப் போரிட்டு வெற்றி காணும் வீரத்தைக் களத்திலே காட்டியும், அடிப்படை உண்மைகளை ஆய்ந்தறிந்து அவனியோருக்கு அளித்திடத்தக்க அறிவினை மன்றங்களில் விளைவித்தும், வந்த நம் தந்தையர் நாட்டிலே, இன்று, 'அண்டை அயலார்கள்' ஆதிக்கம் செலுத்துகின்றனர், பிழைத் திருக்க வேண்டுமானல், ஆளடிமை ஆகவேண்டும், என்று ஆர்ப்பரிக்கின்றனர்.

நீதி கேட்கிறோம்—வீதியில் நிறுத்திவைத்துச் சுட்டுத் தள்ளுவோம் என்கிறார்கள், நம் கொற்றம் பறித்தோர்.

எமது உரிமையும் உடைமையும் பறிக்கப்படலாமா என்று வாதாடுகிறோம்; பேதையே! உயிரைவிட்டு வைத்திருக்கிறோமே, அது போதாதோ என்று கேட்கின்றனர், நம்மைப் பிடித்தாட்டும் பெருந் தலைவர்கள்!!

அமிருதசரஸ் காங்கிரஸ் மாநாட்டிலே, நேரு பண்டிதர், நடுவீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டால், அதற்கு அங்கேயே பதிலளிக்கப்படும் என்று பேசி, கோபமூட்டப் பட்டால், நான் டயரையும் மிஞ்சுபவனாகிவிடுவேன், என்று மிரட்டுகிறார்.

இத்தனைக்கும், தம்பி, பிப்ரவரி 20-ல், நாம் நாட்டிலே என்ன நடைபெற வேண்டு மென்று கூறுகிறோம்?

பாசறைகளைத் தாக்குக; ஆயுதக் கிடங்குகளைச் சூறையாடுக; அலுவலகங்களில் புகுந்து கலாம் விளைத்திடுக—என்று கூறுகிறோம்? இல்லை, இல்லை, முக்காலும் இல்லை.

அமைதி! அமைதி! என்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறோம்.

பலாத்காரம் அறவே கூடாது என்பதைப் பன்னிப் பன்னிக் கூறுகிறோம்.

பட்டி தொட்டிகளிலும் இந்த அறிவுரை பரவவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியுடன் நமது பொதுச் செயலாளர், கழகத் தோழர்களை, ஆங்காங்குக் கண்டு பேசி வருகிறார்!!

**கடை அடைப்பு—பொது வேலை நிறுத்தம்**—காந்தியார் கையாண்ட தூய்மையான முறை—கருத்துக் கெட்டுக் கிடக்கும் ஆட்சியாளர்களுக்கு நல்லறிவு அளிக்கும் அறநெறி—இதுவே பிப்ரவரி 20-ல் நாம் மேற்கொள்ளும் திட்டம்.

ரயில்களைத் தடுத்து நிறுத்துவதா என்று கேட்கின்றனர் நமது கழத் தோழர்கள்—தம்பி! இது சர்வ கட்சிக் கூட்டணி. தி. மு. க. மட்டும் நடத்துவதல்ல. எனவே, பணியாற்றச் செல்லாதீர்கள் என்று பாட்டாளிகளை வேண்டிக் கேட்டுக் கொள்வதும், அன்று மட்டும் பயணப்படாதீர்கள் என்று பொதுமக்களை வேண்டிக்கொள்வதுந்தான், நாம் கையாள வேண்டிய முறையே தவிர, **தண்டவாளத்தில் படுப்பதோ, சங்கிலியைப் பிடித்திழுப்பதோ அல்ல, என்பதைத் தெளிவு படுத்தியிருக்கிறோம்.**

அனைவர் மனதிலும் அன்று ஓர் தூய்மை மலர வேண்டும்—மலரச் செய்யும் அளவுக்கு நம்மிடம் அன்பு முறை எழ வேண்டும் என்றுதான் நாம் அவாக் கொண்டுள்ளோம். ஆரவாரமும் ஆர்ப்பரிப்பும் நமது நோக்கமே அல்ல.

நாட்டின் நல்லோர் நமது நோக்கத்தை அறிந்து, பாராட்டி, துணைதர முன்வந்துள்ளனர்.

துரைத்தனத்துக்குத் தூபதீப நைவேத்தியம் செய்து 'பிர சாதம்' பெற நினைக்கும் போக்கினர், நமது முயற்சியைக் குலைத்திட முயல்கிறார்களாம்! வெண்மேகத் தழகினையும், அது விதவிதமான உருவம் காட்டி உலவுவதையும் கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கும் ஓவியனைத் தீண்டிடக் கட்டுவிரியன், ஓசைப்படாமல், பசும்புற்றரையில் மறைந்து மறைந்து, வளைந்து வளைந்து வருகிறதல்லவா! மனித இனத்தில் நற்காரியத்தைக் கெடுத்திடும் பேராற்றல் படைத்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்!

இவர்களெல்லாம் கூடி, இப்படி எல்லாம் செய்வதா? அது வெற்றிகரமாக நடப்பதா? அதை நான் கண்டு சகிப்பதா? என்று எண்ணும் 'நல்ல உள்ளம்' படைத்தவர்கள் இருக்கிறார்களே! புள்ளிமான் துள்ளி விளையாடக் கண்டு, செச்சே! அடவியில் நானிருக்க, அழகு மான் இப்படியா ஆட்டம் போடுவது என்றுதானே சிறுத்தை பாய்கிறது! தம்பி! நாடு, சர்வ கட்சிக் கூட்டணியின் திட்டத்துக்குப் பேராதரவு தரத் தயாராகி விட்டது கண்டு, நடுக்கம் கொண்டு விட்டவர்கள், நானாவிதமான, நய வஞ்சகமும் செய்து, நமது அறப்போரின் தூய்மையைக் கெடுத்திட எண்ணங்கொண்டு, பல கூறுவர். நண்பர் போல், உசுப்பி விடுவர் உடன் இருந்துகொண்டு —மிகமிக விழிப்பாக இரு! ஆமாம், தம்பி! மிகமிகப் பொறுப்பான செயலில் ஈடுபட இருக்கிறாய் என்பது மட்டுமல்ல, இதிலே கிடைக்கும் வெற்றி, வேறு பல நல்ல திட்டங்களுக்கு வித்தாகப் போகிறது!

தம்பி! இன்னுயிரையும் இழக்கச் சித்தமாகி, மாற்றானை விரட்டிடக் களம் சென்ற தமிழ் மரபிலே வந்து உதித்தவர்களை நாம் பிப்ரவரி 20-ல் செய்யச் சொல்வதெல்லாம், அன்று தெருவெல்லாம் முடங்கி, நடமாட்டம் நின்று, அலுவல்கள் ஒடுங்கி, எங்கும் ஓர் அமைதியான செயலற்ற சூழ்நிலை தெரியச் செய்யுங்கள்—இந்நிலை கண்டால், முன்பு இனிக்க இனிக்கப் பேசினோமே, இப்போது, வேண்டி நிற்கும் மக்களிடம் கடுகடுத்த முகம் காட்டலாமா என்பது பற்றியும் எண்ணிப் பாராமல், நெரித்த புருவத்துடன் நின்று, ஏகாதிபத்தியப் பொறி பறக்கும் போக்கில் பேசும் நேரு பண்டிதர், தம் கோலத்தை மாற்றிக் கொண்டாக வேண்டிய 'காலம்' வந்து விட்டது என்பதை அறிந்து கொள்வார்; நீதி வழங்கும் நிலைக்கு வந்து சேருவார்!

முப்பதாண்டு காலமாக, கருவில் உருவாகி வந்து, இன்று ஓங்கி வளர்ந்துள்ள உரிமை உணர்ச்சி, மொழிவழி அரசு என்பது.

மொழிவழி அரசு அமைக்காமல், ஆணவ வழியில் அரசு அமைத்துக் கொண்டான் ஆங்கிலேயன்; அவனது ஆட்சி அழிக்கப்பட்டானதும் 'இந்தியா' வில், மொழிவழி அரசு ஏற்படும், என்று, 'மகாத்மா'வே வாக்களித்தார்.

மாநாடு தவருமல், இதற்கான தீர்மானங்கள், நிறைவேற்றப்பட்டன; நாட்டு மக்களுக்கு நம்பிக்கை வளர்ந்தது.

தலைவர்கள் மேடைகளிலே பேசும் போது, இந்த மொழி வழி அரசுத் திட்டத்தை வலியுறுத்தினர், விளக்கினர், அதனுல் கிடைக்கக் கூடிய சுவையும் பயனும் பற்றி உணர்ச்சியூட்டினர்!

காங்கிரஸ், தேர்தல்களின் போதெல்லாம் மொழிவழி அரசு ஆதரவு காட்டியே 'ஓட்டு' வாங்கிற்று.

**இப்போது, 'நம்பிக்கை மோசடி' நடத்தத் துணிந்து விட்டனர்.**

முதுபெருங்கிழவர் ஆந்திர நாட்டுத் தலைவர் பிரகாசம் கூறினர், ஆந்திர அரசு அமைந்த நாளில்: "மொழிவழி அரசு அமைப்பு இருத்தல் வேண்டும் என்ற தூய்மையான திட்டம் தந்தவர் தேசப்பிதா மகாத்மாவாகும். அவர் ஆணைபடி, 'இந்தியா' மொழிவழி பிரிந்து, 21 அமைப்புகள் கொண்ட நிலையில்தான் காங்கிரசின் அலுவலே நடைபெற்றுவந்தது."

வங்க மாகாணக் காங்சிரஸ் கமிட்டி, மராட்டிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி, என்ற முறையிலேயே, காங்கிரஸ் கமிட்டிகள் பெரிதும் மொழிவழி அமைந்து பணியாற்றி வந்துள்ள பேருண்மையைப் பிரகாசம் சுட்டிக் காட்டினர்.

மகாத்மாதான் மறைந்துவிட்டாரே, இனி அவர்தம் மணிவாசகந்தனைக் கல்லில் செதுக்கிவிடுவோம், நம் நெஞ்சினின்றும் அவர் தந்த நல்லறிவைக் கல்லி எடுத்து எறிந்திடுவோம், என்று துணிந்து விட்டனர், அவர் பெயர் கூறி ஆள வந்தார்களாகிவிட்ட மகானுபாவர்கள்.

'மொழிவழி அரசு' இருந்தால் மட்டுமே, உண்மை 'தேசீயம்', உறுதியான ஜனநாயகம் மலரும் என்று அறிவாளர் பலர் கூறினர்; ஆமாம் என்றனர் நேரு உள்ளிட்ட தலைவர்கள்.

ஆள்பவருக்கும் ஆளப்படுவோருக்கும் ஓர் தொடர்பும் தோழமையும் ஏற்பட்டால்தான், குடி அரசுக் கோட்பாடு தழைத்திடும், எனவே, அந்த அரசிலே உள்ள மக்களின் மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்; அம்முறைப்படி, ஆந்திரருக்கு அமையும் ஆட்சி மன்றத்தில் தெலுங்கு மொழிக்கு ஏற்றம் இருந்திடல் வேண்டும்; எனவே மொழிவழி

அரசு வேண்டும் என்றனர், தேசீயம் அறியாதவர்களல்ல, அது நின்று நிலேத்து, கனிந்து சுவைதர யாது செயல் வேண்டும் என்பதனே அறிந்த அரசியல் நிபுணர்கள்.

'ஆந்திர நாடு' அமைக்கப்படுவதற்கான திட்டம், டில்லி மக்கள் மன்றத்தில் அலசப்பட்டபோது, கட்ஜு கூறினர்: "புதிய ஆந்திர மாகாணம், இனி அமைய இருக்கும் மொழி வழி அரசு அமைப்புகளுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. மக்கள் ஆட்சி மன்றங்கள் பல மொழி பேசும் இடங்களாக இருக்குமாயின், அங்கு, ஜனநாயகம் எப்படிச் சரியாகப் பணியாற்ற முடியும் என்பதை என்னுலே புரிந்துகொள்ளவே முடியவில்லே"—என்று மேதைப் பேச்சளித்து, மொழிவழி அரசு அமைவதுதான், ஜனநாயகத்துக்கு வெற்றி தரும் என்ருர்.

கட்ஜு, நேருவின் நேசத்தைப் பெற்று, தேசத் தலேவர்களிலே ஒருவராக விளங்கிடும், காங்கிரஸ் பிரமுகர். கண்டிப்பானவர்; அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுப்பட மறுப்பவர்; அவர், மொழிவழி அரசுமூலமே ஜனநாயகம் உயிரூட்டம் பெறும் என்று 1953 செப்டம்பர் 8-ஆம் நாள் டில்லியில் பேசினர்; நேரு பெருமகனர் இதை மறுத்தாரில்லே. இன்ருே, அதே டில்லியில், பலமொழி ராஜ்யமே சாலச் சிறப்புடையது என்று கூறப்படுகிறது—காரணமும் காட்டப்படுவதில்லே.

மத்ய பாரதத்தைச் சேர்ந்த தேஷ்முக் எனும் காங்கிரஸ் தலேவர் அதுகாலே, பலமொழி ராஜ்யங்கள்தான் இந்தியாவின் ஒற்றுமையை வளர்த்திடும் என்று கருதுவது தவறு—என்று இடித்துரைத்தார்.

தியோகிரிகார் எனும் பம்பாய்க் காங்கிரஸ் தலேவர், நீண்ட காலமாகத் தூய்மையானது, தேவையானது என்று காங்கிரஸ் கட்சியினுல் ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிவழி ராஜ்ய அமைப்புத் தத்துவத்தை, இன்று கசக்குகிறது என்று காங்கிரஸ் மூலவர்கள் ஏன் கூறுகிருர்களோ, தெரியவில்லேயே; சரியில்லேயே அவர்தம் போக்கு, என்று கூறினர்.

இந்தியாவில், நாம் ஏன் மாகாணங்களேப் பிரித்து அமைக்கிருேம், அறிவீரா? என்று கேட்டுவிட்டு, கட்ஜு பதிலளிக்கிருர். இந்தியாவின் ஒற்றுமையைத் தக்க விதத்தில் பாதுகாக்கவும், ஜனநாயகம் திறமையுடன் பலனளிக்கவும், சிறு அரசு அமைப்புகளே தேவை. அரசு, சிறிய அளவினதாக இருந்தால் தான், ஆட்சி மன்றங்களிலே மக்களின் குரலுக்கு மதிப்பு இருக்கும், ஆட்சி நடைபெறும் விதம் பற்றி மக்கள், அறிந்து கொள்ள முடியும், ஆட்சியின் போக்கை மக்கள் கண்காணிக்க இயலும். எனவேதான் சிறிய அளவினதாக ராஜ்யங்கள்

இருத்தல் வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம்—என்று அறிவளித்தார். இன்றோ, அதே டில்லியில், "என்ன அறிவீனம்! என்ன அறிவீனம்! மொழிவழி அரசு என்பது காட்டுமிராண்டித் திட்டம், சிறிய அரசு நாட்டு ஒற்றுமையைச் சீர்குலைக்கும்" என்று பேசுகிறார் பண்டிதர்—காரணம் காட்டாமலேயே கண்டிக்கிறார்.

இந்தியா எங்கணும், மொழிவழி ராஜ்யங்கள் அமைந்திட வேண்டும் என்று நேரு பண்டிதருக்கு எடுத்துரைக்க ஓர் தனி மாநாடே கூட்டினர் 1953 செப்டம்பர் 26-இல். அதிலே நேரு பண்டிதரால் அலட்சியப்படுத்திவிட முடியாத வகையில் நாட்டுப் பணியாற்றிய காங்கிரஸ் தலைவர்களும் கலந்து கொண்டனர். பட்டாபி சீதாராமையா, மொழிவழி ராஜ்யம் அமைவது, இந்தியாவைப் பிளவு படுத்துவதாகும் என்று எண்ணுவது பெரும் பிழை, தவறான வாதம்—என்று கருத்துரை வழங்கினார். அவர் இன்று கவர்னர்! நேரு பெருமகனாராலேயே இந்த ஏற்றம் அளிக்கப்பட்டது. இன்றோ பட்டாபி எதை அறிவீனம் என்று கூறிக் கண்டித்தாரோ, அது டில்லியில் பேரறிவு என்று கொண்டாடப்படுகிறது.

மனு, வேண்டுகோள், மாநாட்டுத் தீர்மானம், உண்ணாவிரதம், பொட்டி சீராமுலுவின் உயிர்த் தியாகம், இத்தனைக்கும் அசைந்து கொடுக்காத இந்த ஆட்சி, ஆந்திரம் பெற்றே தீருவதென்று, மக்கள் வீறுகொண்டெழுந்து வீதிகளில் வந்த பிறகுதான், வழிக்கு வந்தது. ஆந்திர நாடு தந்தது! இம்முறைதான் ஏற்றது, என்று ஆட்சியாளர்கள், மொழிவழி அரசு கோரும் மற்றவருக்கும் கூறுகின்றனரா? என்றே கேட்டுவிட்டார், ஒருவர், மக்கள் மன்றத்தில், அன்று. இன்று நடு வீதியில் மக்கள் கூடினால் சுட்டுத் தள்ளப்படுவர் என்று மிரட்டுகிறார், ஜாலியன்வாலா படுகொலையைக் கண்டித்து, மனிதருள் மாணிக்கமான, மாபெரும் தலைவர்—ஜவஹர் பண்டிதர்!

மொழிவழி அரசு கூடாது என்று, இன்று, பண்டிதர் பேசுவதைப் பெரும்பாலன காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், தமது எண்ணத்தை வெளியிட அவர்கட்கு உரிமை அளிக்கப்படவில்லை—மீறுவோர் மீது கட்டுப்பாடு எனும் கட்டாரி வீசப்படுகிறது—எனவே பலர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிட வேண்டி ஏற்பட்டுவிட்டது.

உள்ளத் தூய்மை கொண்டவர்கள், ஒருவரிருவர், இன்றும் முழக்கமிடுகின்றனர்—வீரமும் உரிமை வேட்கையும் அறவே அற்றுப் போய்விடவில்லை.

காட்கில் அமிருதசரசிலேயே பேசுகிறார்.

அந்த அவையில், பல தலைவர்களின் வாழ்வை ஆக்கவும் அழிக்கவும் வல்லமைபெற்ற பண்டிதர் இருக்கிறார் என்பதை அறிந்தும், அவர் ஆதரவு சேக் அப்துல்லாக்களை, ஷேரே காஷ்மீர் ஆக்கும். அவர் வெறுப்பு, அதே அப்துல்லாவைக் கைதியாக்கி, விசாரணையுமின்றிச் சிறைக்குள் இருக்கச் செய்திடும்— என்பதை அறிந்தும், அஞ்சாது கூறுகிறார், பலமொழி ராஜ்யம் பற்றிய தத்துவார்த்தம பேசுங்கள், கேட்டு ரசிக்கிறேன், ஆனால், அதை நடைமுறைத் திட்டமாக்கி, என் நாட்டை என் நாட்டவர்க்கு அளிக்காது இருப்பீரேல், மராட்டிய மண்டலம் அமைத்து, பம்பாயை மராட்டியருக்கு அளித்திடாது போவீரேல், பெரியீர்! பேராற்றல் கொண்டோரே! நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன்—கட்சி பெரிது, என் நாடல்ல, மக்களல்ல, என்று கூறிக்கிடந்திட மாட்டேன், அறப்போர் தொடுத்து, உரிமையைப் பெறவே உறுதி கொள்வேன், என்று பேசுகிறார்.

மொகலாய ஆதிக்கத்தின் முன்பு நாம் எங்ஙனம் தலை காட்டமுடியும், என்று கோழைகள் குப்புறக் கவிழ்ந்தகாலை, குன்றேறிக் கொடி நாட்டிய மாவீரன் சிவாஜியின் மரபு பட்டுப் போகவில்லை. காட்கில், மரபு காத்திடுகிறார்.

*1953*, அக்டோபர் 1-இல் ஆந்திர அரசு அமைந்தது; மொழிவழி அரசு அது.

பொட்டியின் உயிரைக் குடித்தான பிறகு, பெட்டிப் பாம்பானார் பண்டிதர், கொட்டு முழக்கத்துடன் கர்னூல் வந்தார், ஆந்திரருக்கு அரசு அமைத்துத் தந்தார்.

தந்தகாலை, வாழ்த்தியோரும் வரவேற்றோரும் கூறினர், இதோ ஓர் புது அரசு—மொழிவழி அமைகிறது; இது எந்த வகையில் வளர்ச்சி பெறுகிறது; இதனால் தேசீயம் எந்த வகையில் பாதிக்கப்படுகிறது, எனபதனைப் பார்த்து, பிற ராஜ்யங்களை அடுத்தடுத்து அமைப்போம் என்று கூறினர்.

இன்று, என்ன இழிவும் பழியும் வந்துற்றது?

ஆந்திர அரசு அமைந்தான பிறகு, என்ன அல்லலும் அவதியும் வந்துற்றது?

உறவு கெட்டு விட்டதோ? அல்லது உள்ளன்பு பட்டுப் போயிற்றோ? இல்லையே!

ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கூறுவது போல, பிரிந்து சென்று தனி ராஜ்யம் அமைத்துக்கொண்ட பிறகு, ஆந்திரர் தமிழரிடம் முன்பெலாம் கொண்டிருந்த கசப்பும் கிலேசமும் போக்கப்பட்டு, இன்று அன்பராய், நண்பராய், தொடர்பு கொண்டு மகிழ்கின்றனர்.

அது போன்றே, மொழிவழி அரசு அமைந்துவிட்டால், பாரதம் பிளவு பட்டுவிடும் என்று பீதி காட்டினர். ஆந்திர அரசு, பிளவுச் சக்தியாகவா இன்று உளது ?

எனின், இன்று மொழிவழி அரசு கூடாது, கேடு பயப்பது, என்று கூறிடக் காரணம் என்ன ?

தம்பி ! கொண்டைக்கு ஒரு செண்டு மல்லிகை கேட்டாளாம், கொண்ட கணவனிடம்; அந்தக் குணக்கேடனே, கொண்டை உள்ளமட்டும் இவள் செண்டு கேட்டுத் தொல்லை தந்தபடிதான் இருப்பாள், எனவே, செண்டு தேடிடும் சங்கடம் நமக்கு இல்லாமலிருக்க, இவள் கொண்டையை அறுத்தெறிவோம், என்றானும்.

மொழிவழி அரசு என்ற திட்டத்தின்படி பம்பாய் மராட்டியருக்கு, தேவிகுளம் பீர்மேடு ஆகிய தமிழ் வட்டாரங்கள் தமிழ்நாட்டுக்கு, என்பது குறித்து, கிளர்ச்சி இருக்கிறது; இதிலே அநீதியான தீர்ப்பு வழங்கினர் நேரு; எதிர்க்கின்றனர், உரிமை வேட்கை கொண்டோர்; இதனைக் கண்டு, கொண்டை இருந்தால் அல்லவா, மல்லிகைச் செண்டு வேண்டும் என்பாள், இதோ, பிடித்திழுத்து வா, கொண்டையை அறுத்து எறிகிறேன்—என்கிறார் பண்டிதர். மொழிவழி அரசு என்று பேசுவதால் அல்லவா, இது யாருக்கு, அது யாருக்கு என்று சச்சரவு கிளம்புகிறது, மூலத்துக்கே வேட்டு வைத்து விடலாம் என்று கூறுகிறார். நீதியா ? வணிகப் பெருங்குடியினரே ! வாழ்வளிக்கும் தொழில் பல புரிவோரே ! நாட்டின் கண்மணிகளாம் மாணவத் தோழர்காள் ! நீதிதானா ? கூறுங்கள்.

உமது தீர்ப்பு, பிப்ரவரி 20-இல், நாடறியச் செய்ய வேண்டும்.

காந்தியார் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை வெட்டிப் புதைக்கிறார்கள்.

முப்பதாண்டுகட்கு மேலாக நாட்டவருக்குத் தரப்பட்ட வாக்குறுதி மீறப்படுகிறது.

தேர்தல் சிலவற்றிலும் மக்களுக்குத் தரப்பட்ட நம்பிக்கை தகர்க்கப்படுகிறது.

ஆந்திரர் பெற்றுப் பயன்காணும் மொழிவழி அரசு, நமக்கு மறுக்கப்படுகிறது.

மொழிவழி அரசு கேட்டால், விழியில் ஒன்றினை இழந்துவிட வேண்டுமாம்—தேவிகுளம், பீர்மேடு கிடையாதாம் !

தேவிகுளமும் பிறவும் தேவை என்று நாம் கேட்டாலோ, மொழிவழி அரசே கிடையாதாம் !

கொண்டை மிஞ்சவேண்டுமானுல், செண்டு கேட்காதே! —நேரு கூறுகிருர்.

நேர்மையுள்ளம் படைத்தோரே! இதனை மாற்றிட வழி இருக்கிறது. எல்லா ஜனநாயக நாடுகளிலும் கையாளப்பட்டு வெற்றி அளித்திட்ட வழி, காந்தியார் கைகண்ட மருந்தாக உபயோகித்த வழி, கடை அடைப்பு, பொது வேலை நிறுத்தம்.

நீதி மறுக்கப்படுகிறபோது, நேர்மை நசுக்கப்படுகிறபோது, உரிமை அளிக்கப்படுகிறபோது, தன்மானம் தகர்க்கப்படுகிற போது, அன்பர்காள்! பழந்தமிழ் வீரன், கட்கமேந்திச் சென்ருன் களம் நோக்கி. நாங்கள் உங்களைக் கேட்டுக் கொள்வதெலாம், பிப்ரவரி 20, ஒரு நாள் மட்டும் கடை அடைப்பும் பொது வேலை நிறுத்தமும் செய்து, இந்தப் புனிதமான காரியத்தில் பங்கேற்றுக் கொள்ளுங்கள்,—என்பதனைத் தம்பி, அங்காடியிலும் அலுவலகங்களிலும் உள்ள அன்பர்களிடமெலாம், கூறு.

தம்பி! காங்கிரஸ் கட்சியினரில் சிலருக்கு நாம் ஈடுபட்டுள்ள இந்தக் காரியத்தைக் கெடுப்பது, ஏதோ 'தேசீய கைங்கரியம்' என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. 'தினமணி' இதற்கான திருத்தொண்டினை நடத்தி வைத்து இருக்கிறது.

காலிகள் இதனைப் பயன்படுத்திக் கொள்வர் என்று கிலி மூட்டியும், பலத்த போலீஸ் வளையம் உங்களுக்குப் பாதுகாப்பளிக்கும், கடைகளைத் திறவுங்கள் என்று ஆசை காட்டியும், இப்போது ஒரு முடிவும் தமிழருக்கு விரோதமாகச் செய்யப்படவில்லை என்று நயவஞ்சகம் பேசியும், அந்த 'அன்பர்கள்' சர்வகட்சிக் கூட்டணியின் முயற்சியைக் கெடுக்கலாம் என்று எண்ணி வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

சிலர், இந்தக் கூட்டணியினரைக் கூண்டிலே தள்ளி விடுங்கள் முதலில், பிறகு நாங்கள் மற்ற ஏற்பாடுகளைக் கவனித்துக் கொள்கிறோம் என்று சர்க்காரிடம் 'காவடி' எடுக்கிருர்கள் என்றும், ஆச்சாரியார் செய்த அதே தவறை நாமும் செய்வதா, ஆப்பை அசைப்பானேன், பிறகு அதனுல் அவதிப்படுவானேன் —நடப்பது நடக்கட்டும் என்று கண்ணை மூடிக் கொண்டு இருந்து விடுவோம் என்று சிலரும் பேசுகின்றனராம்!

கடைகள் மூடிக்கிடக்கட்டும், செயலற்றுக் கிடக்கட்டும் நாடு, நாங்கள் மறுதினம் 'சேதி'யை முழுவதும் இருட்டடிப்பு நடத்திவிட மாட்டோமா! என்று தேசீய இதழாசிரியர்கள் பேசுகிருர்களாம்.

கண்ணை மூடிக்கொண்ட பூனை, உலகமே இருண்டுவிட்டது என்று எண்ணிக் கொண்டதாமே, அதுபோல.

இருட்டடிப்பு மூலமோ, இடர் தருவதன் மூலமோ, எதன் மூலம் நமது ஏற்பாட்டினைக் கெடுத்திட எண்ணினாலும், தம்பி! நாம் நமது கடமையைக் கண்ணியத்துடன் செய்து முடித்தோமா என்ற ஒரே எண்ணம்தான், உனக்கு இருக்க வேண்டும்.

எவ்வளவு குத்தினாலும், சகித்துக்கொள்ள வேண்டும்.

தாக்கினால், தாங்கிக் கொள்ள வேண்டும்.

சிறையில் தள்ளினால் சிரித்த முகத்துடன் செல்ல வேண்டும்.

இன்று நமது தூய்மை நிரம்பிய இந்தக் காரியத்தைக் கெடுத்திடக் கருதும் காங்கிரஸ்காரர்கள்கூட, அவர்கள் ஏசினாலும் எரிச்சலூட்டினாலும், எதிர்த்தாலும், இழிமுறையால் தாக்கினாலும், தம்பி! தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். உன் உள்ளத்தில் ஒரு துளியும் ஆத்திரம் எழலாகாது. உள்ளத்து உறுதியும், கஷ்ட நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளும் திறனையும் கண்டு, அந்தக் காங்கிரஸ் நண்பர்களேகூட தமது போக்கினை மாற்றிக் கொள்வர்.

தம்பி! நாமென்ன கண்டோம்? இன்று நமக்கு 'விரோதம்' செய்யும் காங்கிரஸ்காரர்களிலே எத்தனை பேர், எதிர்காலத்தில் நமது கிளைக் கழகச் செயலாளர்களாகப் போகிறார்களோ!!

அவர்களெல்லாம், இன்று இல்லாவிட்டால் நாளை, நமது 'முகாம்' வந்து சேருவர் என்ற எண்ணத்துடனேயே, உன் பணி அமைந்திருக்கவேண்டும்.

அவர்கள் சிறிதளவு சிந்தித்துப் பார்த்தால் பிப்ரவரி 20-ல் நாம் மேற்கொண்டுள்ள, அறநெறியின்படி அமைந்துள்ள காரியம், அவர்களின் தன்மானத்தையும் சேர்த்துக் காப்பாற்றிடுவதற்கே என்பது புரியும்.

தேவிகுளம் பீர்மேடு ஆகியவை, தமிழ் நாட்டுக்குத்தான் என்பதை, காங்கிரஸ் அமைச்சர்கள் உட்பட ஆதரித்தனர். சென்னைச் சட்டசபைகளிலே தீர்மானம், ஆர்வத்துடன் நிறைவேற்றப்பட்டது.

காங்கிரஸ் கமிட்டியிலும் இதே கோரிக்கை!

கக்கன் அவர்களும் இதற்கு உறுதிமொழி அளித்தார்.

காமராஜரோ, நான் கவனித்துக் கொள்கிறேன் என்றார்.

சுப்பிரமணியம், கனம்—புள்ளி விவரங்களாகக் கொட்டிக் காட்டினார், நமக்குத்தான் தேவிகுளம் என்று; பூரிப்புடன், நேருவுக்குத் தமிழர் என்றாலே தனியான அன்பு, ஆகவே அவர் நியாயம் வழங்குவார் என்றார்.

நாம், தேவிகுளம் பற்றிப் பேசிய போதெல்லாம், ஏதுக்கு இதுகள் வீண் கூச்சலிட்டுக் கிடக்கின்றன? எமது தலைவர்கள் தேவிகுளத்தைப் பெற்றே தீருவர் என்று காங்கிரஸ் நண்பர்கள் கூறினர்.

இன்று, எல்லாருடைய ஆசையிலும் மண்விழுந்து விட்டது. நாமெல்லாம், எதிர்க்கட்சிக்காரர்கள். எனவே, நம்மைத் துச்சமாக மதிக்கிறார்கள். சரி, பொறுத்துக்கொள்வோம். காமராஜர் கக்கன், சுப்பிரமணியம் பக்தவத்சலம், மேல்சபை, கீழ்சபை, காங்கிரஸ் கமிட்டி, தீர்மானம், எல்லாமே இன்று துச்சமாக ஒதுக்கித் தள்ளப்படுகிறதே, இதற்கென்ன சொல்லுகிறார்கள்? அந்த வெட்கக் கேட்டால் விளையும் வேதனையை எண்ணியாவது, வேலை நிறுத்தத்தில் காங்கிரசார் பங்கு கொள்ள வேண்டும்.

பாசமும் நேசமும், பயமும் பக்தியும், பணிவும் கட்டுப்பாடும் இருக்கட்டும் மலை அளவுக்கேனும்; தன்மானத்தில் பற்றுதல் இருக்க வேண்டாமா ?

எனவே, தம்பி! நீ மட்டும் உண்மையை அவர்கள் உணரு மட்டும், பொறுமையை இழக்காமல், ஆர்வம் குன்றாமல், துணை தருவோர் அதிகமா, தொல்லை தருவோர் மிகுதியா என்பது பற்றிய வேலையற்று, நமது கடமையை நாம் செய்கிறோம்—என்ற பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்று. பார், தம்பி! பிறகு அவர்களிலே எத்தனை பேர், 'நம்மவர்' ஆகிறார்கள் என்று !

இன்றே இல்லையா நமது கழகத்தில்—மாஜி காங்கிரஸ்காரர்கள்.

ஒன்று மட்டும் உறுதியாக வைத்துக்கொள்.

இந்த நற்காரியத்திலே ஈடுபடும் போது, அடக்கு முறை எந்த வடிவிலே வீசப்பட்டாலும், அதனை நாம் தாங்கிக் கொள்ளும் திறமிருக்கிறதே, அது, தாயக விடுதலைக்கான உறுதி அளிக்கிறது. தியாகத் தழும்புகள் ஏறுமுன்பு நாட்டு விடுதலை எங்ஙனம் கிடைக்கும் ? தம்பி! நாம், எத்தகைய மரபினிலே வந்துற்றோம், அறிவாயே !

அன்பே! இந்த 'வடு'... என்று கேட்டிடும் அஞ்சுகத்தை ஆரத் தழுவிய ஆணழகன், "கட்டழகி! கலிங்கப் போரிலே நான் பெற்ற வடு இது...இதோ பார், இது நான் சிங்களச் சீமையிலே பெற்றது, கடாரம் தந்த தழும்பு இது," என்றெல்லாம் அவன் கூறிட, அது கேட்ட காரிகை என் கணவன், கண்ணுக்கு இனியவன் மட்டுமல்ல, கருத்துக்கு மிக இனியவன், அவன் அம்புலி காட்டவும் அருவியில் நீந்தவும் மட்டுமே பழகியவனல்ல, சீறிப் போரிட, செந்நீர் சிந்திட வல்லவன்,

புகழ்க் குறிகளாம் போர்த்தழும்பு பெற்றவன் ! என்று பூரித்துப் போவாள் !

அத்தகைய தமிழகத்தில் பிறந்தோம்.

இற்றை நாளில் கொற்றம் இழந்தோம். எனினும் நமது இயல்பு பட்டுப் போகவில்லை !!

இன்றேகூட, தமிழகத்தில் ஆறுயிரம் தோழர்களேனும் உளர், தமது உள்ளத்தை வென்றாரிடம் உவகையுடன் தியாகத் தழும்புகளைக் காட்டி இது முன்ஷி வந்தபோது கிடைத்த முத்திரை, இது மேதாப் வந்தபோது ஏற்பட்ட வடு, இது தடை உத்தரவை மீறியபோது ஏற்பட்ட சிறுகாயம், இது ஆச்சாரியார் ஆட்சி தந்த தழும்பு என்றெல்லாம் காட்டி நிற்போர் !

எனவே, தம்பி ! எனக்கு நம்பிக்கை நிரம்ப உண்டு! பிப்ரவரி 20-ல் என் உள்ளம், மேலும் பெருமிதம் கொள்ளத் தக்க விதத்தில், நீ பணியாற்றி வெற்றி பெற்றுத் தருவாய் என்பதும் தெரியும்.

கடுமையான அடக்குமுறை வீசப்படலாம்—என்றாலும், அதற்காகக் கலங்கவா போகிறோம்? இல்லை!

உட்பகை கூடாது, ஊர்க் கலகம் ஆகாது, கட்டுப்பாடு கெடலாகாது, கண்ணியம் பாழ்படக் கூடாது, பலாத்காரம் தலைகாட்டவே கூடாது என்பது பற்றித்தான் எனக்குக் கவலையே தவிர, கடுமையான அடக்குமுறை கொண்டு, நம்மைத் தாக்கிடுவரோ துரைத்தனத்தார் என்பதுபற்றிக் கடுகளவும் கவலை கொள்ளேன். கொள்பவனும் என் தம்பி அல்ல.

தம்பி ! காட்டிலே வேட்டையாடி, கொன்ற புலியின் தோலினைக் காட்டி மகிழ்பவனைத்தான் வீரன் என்று உலகு ஏற்குமே தவிர, காரக் கருவாட்டைப் பக்குவமாக வைத்து பொறியில் விழச்செய்து, நான் கொன்ற எலியின் வால் காணீர் என்று கூறுபவனையா, உலகு மதிக்கும் ?

புலித்தோலுக்கும் எலிவாலுக்கும் உள்ள வேற்றுமை, ஒரு வீரனுக்கும் ஒரு வீணனுக்கும் உள்ள வேறுபாட்டினையன்றோ விளக்குகிறது!

எனவே, உயிர் போவதாயினும் உரிமை பறிபோக விடமாட்டோம் என்ற உறுதிப்பாடு கொண்ட என் தம்பிமார்களிடம் எனக்குத் தளராத நம்பிக்கை உண்டு. எனவே, எதிர்ப்புகள் மலை என வளரினும், வெற்றிபெற்றுத் தருவர் என்று உறுதி கொண்டிருக்கிறேன்.

தமிழ்நாடு ஒரு நாதியற்ற நாடாகி விட்டது என்று பெரியாரின் 'விடுதலை' கூறும் போது, நாமும் நம்மாலானதைச்

செய்து, தமிழ்நாட்டில் தமிழர் சிலரேனும் உளர் என்பதைக் காட்ட வேண்டாமா?

பெரியார், இந்தக் கிளர்ச்சியை விரும்பவில்லையாமே என்று கேட்கிறாயா தம்பி! உண்மை அது அல்ல; பெரியார் இந்தக் கிளர்ச்சியையும் இதைவிடத் தீவிரமான கிளர்ச்சியையும் விரும்புகிறார். அவர், நம்மைத்தான் விரும்பவில்லை—இனி அவரும் நம்மை விரும்பும் வகை ஏற்பட வேண்டுமானால், அவரே பார்த்து, "பயல்கள் பரவாயில்லையே, ஓரளவுக்குச் செம்மையாகவே செய்து காட்டினார்கள்" என்று கூறத்தக்க விதமாகக் காரியமாற்றிக் காட்டவேண்டும்.

மும்முனைப் போராட்டத் துவக்கத்தின்போதும் அவர் இப்படித்தான், 'இன்றைய வழிப்போக்கர்களின் மனமகிழ்ச்சிக்காக, இதுகளுக்கு ஒரு போராட்டமா!' என்று ஏளனம் பேசினார்; ஆனால், தம்பி! நாடே கண்டு ஆச்சரியப்படத்தக்க அளவில் கிளர்ச்சி வளர்ந்து, இருட்டடிப்பினையும் கிழித்துக் கொண்டு, நாள் தவறாமல், நமது கழகச் சேதிகள், எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது கண்டு, அவரே அல்லவா சென்னைக் கடற்கரையில் கூட்டம் நடத்தினார், நம்மீது சர்க்கார் அடக்குமுறை வீசியது கொடுமை என்று! இன்று, மீண்டும் ஏளனம் செய்கிறார் என்று கேள்விப்படுகிறேன்! இதிலே கவலைப்படவோ கோபப்படவோ என்ன இருக்கிறது!—நாம் அவருடன் ஒன்றாக இருந்தபோது கூட இப்படித்தான் வேடிக்கையாகப் பேசுவார், ஏளனத்தால் குத்துவார், எல்லாம், நாம் நமது காரியத்தைச் சரியாகச் செய்யவேண்டுமே என்கிற அக்கறையினால்தான்!!

* *

பெயரளவில் தமிழ்நாட்டில் தமிழர்களே எட்டுக்கு ஏழு பேர் மந்திரிகளாக இருக்கிறார்கள் என்றாலும், ஒருவருக்காவது தமிழர் இனம், தமிழ் மொழி, தமிழர் ஆட்சி என்கின்ற உணர்ச்சியே இருப்பதாகத் தெரிவதற்கு அடையாளம் இல்லை.

முதலாவது, தமிழன் என்பதற்கு அறிகுறியாகத் தமிழ் மொழி உணர்ச்சியாவது எந்தத் தமிழ் மந்திரிக்காவது இருக்கிறதா என்று பார்த்தால், ஏதோ தமிழரை ஏமாற்றி ஓட்டு வாங்குவதற்காக நடிக்கிற முறையில்தான் தமிழ் உணர்ச்சியைக் காட்டுகிறார்களே தவிர, காரியத்தில் காட்டுவது மிக மிக அருமையாக இருக்கிறது.......................

எனவே, தமிழ்நாடு ஒரு நாதியற்ற நாடாக ஆகிவிட்டது. இந்த மந்திரிசபை காலத்திலாவது இந்த விஷயங்களில் ஏதாவது கவனம் செலுத்தப்படுமா என்று பார்த்தால், நாள் எண்ணவும், சம்பளம் வாங்கவும், நாட்டில் பவனி வரவும்,

விருந்து, நாட்டியம், கோலாகல வாழ்வு அனுபவிக்கவும் பெரு நேரம் செலவாகிவிடுகிறது.

—9-8-55 'விடுதலை' தலையங்கம்

* * *

தமிழர்களிடம் இருக்கின்ற தமிழ்மொழிப்பற்று, தமிழ் இனப் பற்று, வடமொழி எதிர்ப்பு, ஆரிய வெறுப்பு ஆகிய வற்றை ஒழித்துக் கட்டுவதற்காகவே இம்முயற்சி. (தட்சிணப் பிரதேசம்)........................

இம்முயற்சியில் ஈடுபடுவார்களானுல் என்ன நடக்கும் தெரியுமா?............

தமிழ்நாட்டில் இரத்த ஆறு ஓடும்படியாக மாபெரும் இரத்தப் புரட்சியே நடக்கப்போகிறது.............................

தமிழ்நாட்டைச் சுடுகாடாக்கி, பிணக்காடாக்கி விட்டுத் தான் தட்சிணப் பிரதேசம் என்ற புது இணைப்பைக் காணப் போகிருர்கள் மேலிடத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள். இவர் களுக்கும் இவர்கள் கட்சிக்கும் அழிவுகாலம் நெருங்கிவிட்ட தென்றே கூறலாம்.

9-9-55 'விடுதலை'-தலையங்கம்.

* * *

இப்போது என்ன சொல்லுகிருய் தம்பி! பெரியாரின் மனம் என்ன பாடுபடுகிறது பார்த்தனையா, நாட்டிலே காங்கிர சாட்சியினர் செய்யும் அலங்கோலம் கண்டு?

இதற்காகத்தானே நாம் எதிர்க்கிருேம், பிப்ரவரி 20ல்.

பிறகு, பெரியாருக்கு ஏன் கோபம் வரப்போகிறது?

சரியாகச் செய்வார்களோ, இல்லையோ என்பது அவருக் குள்ள சஞ்சலம். தம்பி! உன் வெற்றி மூலம் அவருக்கு உள்ள சஞ்சலத்தையும் போக்க முடியும். செய்வாயா?

காங்கிரஸ் கட்சிக்காரர்கள், மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், தட்சிணப் பிரதேசப் பிரச்சினைபற்றி வாய்மூடி இருந்து வந்தனர். பிற கட்சிகள் கண்டித்தன. அந்தக் கண்டனம் இப்போதே ஓரளவுக்குப் பலன் அளித்திருக் கிறது.

டில்லியிலிருந்து திரும்பிய காமராஜர், தட்சிணப் பிரதேச திட்டத்தைப் பலரும் கண்டிப்பது தனக்குத் தெரிகிறது என்று நிருபர்களிடம் கூறியிருக்கிருர்.

காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மவுனமாக இருந்ததுபோல நாமெல்லாம் இருந்து விட்டிருந்தால், நாடு, தட்சிணப் பிர தேச திட்டத்தைக் கண்டிக்கிறது என்பது நேருவுக்கோ, காம

ராஜருக்கோ எப்படித் தெரிந்திருக்க முடியும்? இதனுல்தான், தக்க சமயத்தில் முற்போக்குக் கட்சிகள், தீமை பயக்கும் திட்டங்கள் கிளம்பியதும், கண்டனம் தெரிவிக்க வேண்டியது ஜனநாயகக் கடமையாகிறது!

அதே கடமை உணர்ச்சிதான் பிப்ரவரி 20-க்கும் காரணம்.

காமராஜர், இது தேவையுமில்லே, விரும்பத்தக்கது மல்ல என்கிருர்.

தேவிகுளம் பீர்மேடு ஆகிய எல்லே குறித்து, டில்லியின் தீர்ப்பு அமுலுக்கு வராது என்ருே, அந்தப் பகுதி மக்களிடம் வாக்கெடுப்பை நடத்தி பிரச்சினேயைத் தீர்த்துக்கொள்ள நேரு சம்மதமளித்திருக்கிருர் என்ருே காமராஜர் உறுதியளிக்கவில்லே.

அர்த்தால் செய்தால், விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் நேரிட்டுவிடும் என்பது மட்டும் அவர் காரணமாகக் காட்டுகிருர்.

பொறுப்புணர்ச்சி, அவருக்கு, நம்மைவிட உடனடித் தேவை என்பது உண்மை. ஆனுல், அர்த்தால் நடத்தத் திட்டமிட்டிருக்கும் சர்வ கட்சித் தலேவர்கள், பொறுப்புணர்ச்சியற்றவர்கள் என்று காமராஜரே கூறமுடியாது.

அர்த்தால், அமைதியாக, பலாத்காரமற்ற முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதைக் கூட்டணித் தலேவர் பி. டி. இராஜன், இப்போதும் ஓர் அறிக்கையில் வலியுறுத்தியிருக்கிருர்.

தேவிகுளம் பிரச்சினே சம்பந்தமாக நாடு எவ்வளவு மன வேதனே அடைந்திருக்கிறது என்பதை டில்லி அறிந்தாக வேண்டும். அர்த்தால், அருமையான வாய்ப்பு.

தேவிகுளம் பிரச்சினேயில், காமராஜருக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் அக்கறை இருப்பது உண்மையானுல், தமிழரின் உரிமையையும், தமிழ் நாட்டின் எல்லேயையும் காத்திட வேண்டுமென்பதிலே முதலமைச்சருக்கு அக்கறையும் நம்பிக்கையும் இருப்பது உண்மையானுல், அவர் கூட்டணியின் திட்டத்துடன் ஒத்துழைத்து, வெற்றிகரமாக்கி, இந்த அர்த்தால் கட்சிப் பிரச்சினே அல்ல, நாட்டுப் பிரச்சினே என்பதை டில்லியே அறிந்திடச் செய்யலாம்.

எனவே, அர்த்தால் மூலம் ஏதேதோ நேரிடும் என்று பீதி காட்டாமலும் கொள்ளாமலும், காமராஜர் துணிந்து பிப்ரவரி 20-ல் அர்த்தாலுக்கு தமது 'ஆத்மீக ஆதரவு' அளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அர்த்தால் சமயத்தில், சமூக விரோதிகள், அல்லல் மூட்டுவோர் என்ற 'தினமணி' வாதத்தை நாடாளும் பொறுப்பேற்றுள்ளவரும் கூறுவது அழகல்ல.

சர்வ கட்சிக் கூட்டணி அமைதியான அர்த்தாலைத்தான் திட்டமிட்டிருக்கிறது

நாட்டின் அமைதியிலும், அதே போது தமிழர் உரிமையிலும், ஜனநாயகக் கோட்பாட்டிலும், காமராஜருக்கு நம்பிக்கை இருக்குமானால், நிச்சயமாக அவர் நம்முடன் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்.

தட்சிணப் பிரதேச திட்டம் இப்போதைக்கு இல்லை என்ற அளவு மட்டுமே காமராஜர் அறிக்கை மூலம் தெரிகிறது. இதுவே, மகிழ்ச்சிக்குரியதுதான். ஆனால், தேவிகுளம் பிரச்சினை அப்படியே இருக்கிறது என்பதை எப்படி மறந்துவிட முடியும்! தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சின் சித்தூர் ஆகிய தமிழ்ப் பகுதிகளை, கேரளத்துடன் இணைக்கும் திட்டம் உயிரோடு இருக்கிறது. அது மார்ச் மாதத்திலேயே சட்டசபைக்கு வருகிறது.


முன்பே சட்டசபை இதுபற்றி அளித்த தீர்ப்பு, டில்லியால் குப்பைக் கூடைக்குப் போடப்பட்டது.

மீண்டும் அதே கதி ஏற்படாமல் இருக்கவேண்டும். அதற்கு பிப்ரவரி ௨0 வெற்றிகரமாக நடைபெறவேண்டும்.

அமைதி குலையாதிருக்கவும், கலாம் எழாதிருக்கவும், என்னென்ன முறைகளைக் கையாள வேண்டும் என்ற யோசனைகளைக் கூறவும், கூட்டணியின் ஒத்துழைப்பைப் பெறவும், காமராஜருக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அச்சத்தைக் காட்டி, அர்த்தாலைக் கைவிடச் சொல்வதிலே பொருள் இல்லை. எனவே, கூட்டணித் திட்டத்துக்கு முழு ஒத்துழைப்பை அளித்து, காமராஜர் தமிழ்ப் பண்பாட்டை எடுத்துக்காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்புள்ள,

***19—2—1956.***



கடிதம் : 38

# தண்டோரா சர்க்கார்-1

★ சர்வ கட்சிக் கூட்டணி—தமிழர் பெருமை—பி. டி. ராஜன்.

தம்பி,

கண்ட காட்சியோ பெரியதோர் நம்பிக்கையை அளித்தது—கடலலை ஒலியையும் அடக்கிடும் வகையில் முழக்கம், காண்போரின் கோழைத்தனத்தைக் கல்லி எறிந்திடும் விதமான வீரத் தோற்றம், காரியமாற்றும் திறன் படைத்த காளையர் இலட்சக் கணக்கில் உளர் என்ற பேருண்மையை எடுத்துக்காட்டிடும் எழுச்சி, எல்லாம் கண்டேன். வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் பிறந்தோமே, வீரர் குறைந்து, வீணர் மிகுந்துள்ள நாட்டிலே வாழ்கின்றோமே, உரிமை உணர்வற்று, உண்போம், உறங்குவோம், இடையில் உல்லாசம் தேடுவோம், என்றுள்ளனரே மக்கள், என் செய்வோம், மரபினை மறந்து, தாயகத்தின்மீது தளை பல பூட்டிடத் தருக்கர் துணிந்திடுவது தெரிந்தும் சிறு விரலையும் அசைக்காது உளரே பெரும்பாலோர், என் செய்வது என்று திகைத்துக் கிடந்த என்னை, அன்று நான் கண்ட காட்சி, தட்டி எழுப்பிற்று. ஏடா! ஏதேதோ எண்ணி ஏங்கிக் கிடந்திடும் அசடனே! கண்டாயா, இப்பெரும் படையினை! இவர்தம் உறுதியினை அறிவாயோ! எதையும் தாங்கிக் கொள்ளும் இதயம் கொண்டோர்! எந்தையர் நாட்டின் உரிமை காத்திட இன்னுயிரையும் ஈந்திடும் உரம் கொண்டோர்! துரைத்தனத்தார் அவிழ்த்துவிடும் அடக்குமுறை கண்டு அஞ்சுவோர் இவர் அல்ல! துப்பாக்கி உறுமட்டும், தூற்றல் துளைக்கட்டும், தூய உள்ளம் படைத்த இத்தமிழ்ப் பெருங்குடிமக்கள், துளியும் அஞ்சப் போவதில்லை! நீ ஏதேதோ பேசுகிறாய், பலப்பல எழுதுகிறாய், இதோ இவர்கள் நாளையதினம் 'வீரகாவியம்' தீட்டிக் காட்டப்போகிறார்கள்! கலிங்கமும் கடாரமும் வென்றவர் அல்லவா, தமிழர்! அவர் வழி வந்தோர் காட்டாட்சி நீட்டிடும் தடியடி துப்பாக்கிக்கா அஞ்சுவர்! வீண் பயம் உனக்கு, காரணமற்ற சந்தேகம்! அதோ அந்தக் கண்ணொளி தந்திடும் கருத்துரை அறிகிறாயா? இவர்கள் இத்துணை இலட்சம், திரண்டிருக்கக் கண்டும், என்ன ஆகுமோ, எது நேரிடுமோ என்று கலங்கிக்

கிடக்கிறுயே, சந்தனம் இருக்கும்போது 'மணம்' கிடைக்குமோ இல்லையோ என்றும் கலங்கிடப்போமோ!—என்றெல்லாம், எண்ணிடச் செய்ததோர் எழில் நிறை காட்சியைக் கண்டேன், உளம் உணர்ச்சியின் ஊற்ருயிற்று. களிப்பிலே மிதந்தேன், கற்பனைச்சிறகடித்து எண்ணவானில் பறந்தேன், இன்பம், இன்பம் என்னென்பேன் நான் கொண்ட இன்ப எண்ணங்களை.

எனினும், மீண்டும் மனம் குழப்பத்துக்கு இடமளித்தது.

கடற்கரையில், கூடினர் நான்கு லட்சம் மக்கள்!

தலைவர்களின் 'அழைப்பு'க் கேட்டுத் திரண்டெழுந்து வந்தனர்!

பண்டைப் பெருநாட்களிலே பாராண்ட மன்னர்கள், தமிழகத்தின் மானம் காத்திட, மாற்ருனைத் தாக்கிடக் கிளம்பியகாலை, நம் மூதாதையர் இங்ஙனம்தான் கூடியிருப்பர், கோட்டைப் பெருவெளியில்! அன்று அவரிடம் வடித்தெடுத்த வாளும் வேலும் இருந்தன! களிறுகள் ஏப்பமிடுவது போலப் பிளிறிக்கொண்டிருக்க, காற்றையும் வெல்ல வல்லோம் என்று பரிப்படை கனைத்திட, இவற்றினைக் கண்டு, வேட்டை! வேட்டை! என்று வீரர் கூட்டம் துடித்தெழுந்தது!

ஆனல், அது, அன்று! இன்று? இனமும் இயல்பும் கெட்டு, இழிவும் பழியும் படர்ந்திட, பான்மைபட்டுக் கிடக்கும் நாளன்ரே!

தமிழன் என்ரோர் இனம் உண்டு! தனியே அவர்க்கோர் பண்பு உண்டு!—என்று நாமக்கல் கவிஞரும், 'தேசியத்தையும்' மறந்து பாடிட வேண்டிய விதமாக அல்லவா, தமிழர் என்ற இன உணர்வு குன்றிக்கிடக்கிறது. இதனை அறிந்தல்லவா, குடிலர்கள் கோலோச்சத் துணிந்தனர், குணக்கேடர்கள் ஆசான்களாக முன்வந்தனர்! இந்நாளில், எழுச்சி ஏற்படுவதெங்ஙனம் இயலும்! ஏன்? என்று கேட்கும் திறனற்று, அநீதியை எதிர்த்து நிற்கும் வீரமற்று,பிறந்து தொலைந்தோம், இறந்து படும் வரையில் வாழ்ந்து தொலைப்போம், கைகட்டி வாய்பொத்தியேனும், காடு கரம்பு உழுது கிடந்தேனும், பல்லெலாம் தெரியக்காட்டிப் பிச்சை எடுத்தேனும், இச்சகம் பேசிக் கிடந்தேனும், பிழைத்துக் கிடந்தால் போதும் என்று எண்ணிடும் பேதையராஞேமே, அஃது அறிந்தன்ரே, மூதாதையர் காலத்தில் முழங்காற்படியிட்டுக் கிடந்த இனத்தோரெல்லாம் இன்று, முடுக்கும் மிடுக்கும் காட்டுகின்றனர், —இந்நிலையில், இழிவினை ஒழித்திட அறப்போர்ப்படை திரளட்டும் என்று, நா உலர, நெஞ்சம் உலரக் கூவித்தான்

பயனென்ன, என்று மனம் குமுறும் நிலையில் இருந்திடுபவனல்லவா, நான்! பிப்ரவரி 9, மாலை, கடற்கரையில் கூடிக் கடமை உணர்ச்சியை இழந்தோமில்லை, காரியமாற்றிடும் திறனை இழந்தோமில்லை, வேற்றூர் மாற்றாராயினர் என்பதறிந்தால் அவர்தம் கொட்டம் நொறுக்குவோம், நமக்கென்றோர் கொற்றம் அமைப்போம், கோழை என்று எண்ணுதீர்! அண்ணா! கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள முடியும் எம்மால்! குழப்பமடையாதீர்! கோல் கொண்டோன், உருட்டி மிரட்டட்டும், கலங்கப் போவதில்லை! விரட்டித் தாக்கட்டும், கீழே வீழ்ந்துபடும் வரையில் வீரப் போரிடுவோம்! எம்மைச் சந்தேகிக்க வேண்டாம், உடன் பிறந்தாரிடம் நம்பிக்கை கொள்ளாமல், வேறு அதனை எங்ஙனம் பெறுவீர், எவரிடம் பெறுவீர், கலப்பை தூக்கிய கரங்களெல்லாம், அதற்கான காலகட்டம் வந்தபோது, வாளேந்திக் களம் சென்ற காதையினை மறந்தனையோ! ஏரடிக்கும் சிறுகோலும், எருதுகளும்தான் இவன் அறிவான், இவனுக்கு வாளேந்த, ஈட்டி எறிய, எங்ஙனம் இயலும் என்று எண்ணினரோ நமது முன்னோர்! மடை கட்டி அறிவானே தவிர, படையில் பணியாற்றத் தெரியுமோ இவனுக்கு! மேடு வெட்டிப் பள்ளம் நிரப்புவான், வாய்க்கால் வெட்டுவான், வளமளிக்க நீர்பாய்ச்சுவான், அறுத்தெடுப்பான், புடைத்து எடுப்பான், குவிப்பான், களிப்புறுவான், இவ்வளவுதான் இவனறிவானேயன்றி, பாய்ந்து தாக்கவும், பக்கவாட்டத்தில் செல்லவும் கோட்டைச் சுவர் ஏறவும், கொத்தளங்களைத் தூளாக்கவும் இவனுக்கு என்ன தெரியும், என்று சந்தேகித்தனரோ முந்தையோர்! இல்லை! இல்லை! உழவனெனினும், களம் அமைத்துக்கொண்டன்றோ பணியாற்றுகிறான்! எனவே காலம் கட்டளையிட்டதும், கரம் வாளாகும், உழவன் உயர்தரமான போர் வீரனாவான்! என்றன்றோ எண்ணினர். அஃதேபோல நாங்கள் கடைவைத்துப் பிழைக்கிறோம், கட்டை வெட்டி வாழ்கிறோம், கல்பிளந்தோ மண் சுமந்தோ கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழிதேடிக் கொள்கிறோம், தொழில்கள் ஆயிரம் புரிகிறோம், துயரமோ மலையத்தனை காண்கிறோம், ஆலைகளில் கரும்பாகிப் பிழியப்படுகிறோம், ஆவிசோரப் பாடுபடுகிறோம், கட்டுமரம் ஏறிச்சென்று கடலில் பிழைப்புத் தேடுகிறோம், ஆமாம், அரைவயிற்றுக்காக ஆலாய்ப் பறக்கிறோம், அது உண்மைதான்; எனினும், ஆன்றோரும் சான்றோரும் வாழ்ந்த நந்தம் நாட்டுக்கு ஓர் ஆபத்துச் சூழ்ந்திடுகிறது என்று அறியும்போது, நாங்கள் அஞ்சிடும் போக்கிலா இருந்திடுவோம், நம்மால் ஆகுமா என்று பெருமூச்சு விட்டபடியா முடங்கிக் கிடப்போம், வாள் கிடைக்காது போயினும் எதிரியின் வாளை ஒடித்திட இக்கரங்களைப் பயன்படுத்துவோம், மார்

பிலே மாற்றார் வீசும் கணைகளைத் தாங்கிக்கொள்வோம், களம் எது காட்டிடு, காலம் குறித்திடு, செயல் முறையினைச் செப்பிடு, செய்து முடித்திடுவோம், இல்லையேல் செத்து ஒழிந்திடுவோம் ! செந்தமிழுக்குத் தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு இலாபம் உண்டோ ? என்று பாடியவர் நம்முடைய பாரதிதாசனல்லவா! அந்தப் புரட்சிக் கவிஞன் கிளப்பிய பொறிகளெல்லாம் எங்கே போய் விட்டன ? இதோ, எமது கண்ணொளி காண்பாய் ! இங்கே வந்தன்றோ, அவை அத்தனையும் குடி ஏறிவிட்டன, என்றெல்லாம் எனக்கு எடுத்துரைப்பது போலிருந்தது பிப்ரவரி 19-ல் நான் சென்னைக் கடற்கரையில் கண்ட காட்சி.

தம்பி, நான் மந்திரியல்லவே, அதனால் மக்கள் திரண்டெழுந்திருப்பதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். எழுச்சியூட்டும் பெருங்கூட்டம் பலவற்றிலே கலந்து கொண்டிருக்கிறேன்—எனினும் எனக்கு ஒருகணம் திகைப்பே ஏற்பட்டு விட்டது, அன்றைய கூட்டத்தின் அளவையும் அங்குக் காணப்பட்ட எழுச்சியின் வகையையும் கண்டு !

மக்களோ, ஒரே மேடையில், ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கிடக்கும் பல்வேறு கட்சியினர் அமர்ந்திருப்பது கண்டு, மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

காலை மலர்ந்ததும், நாடெங்கும் கடை அடைப்பும் பொது வேலை நிறுத்தமும் நடைபெற வேண்டும்.

அது எந்த அளவு வெற்றிபெறுகிறதோ இல்லையோ, கலாம் ஒரு துளியும் நடைபெறக் கூடாது.

ம. பொ சி., பி. டி. ராஜன் பாராட்டிப் புகழத்தக்க விதமாகப் பேசுகிறார், ‘எத்தனை சதவிகிதம் கடை அடைப்பு வெற்றிபெற்றது என்பதைவிட, எத்தனை சதவிகிதம் அமைதி நிலவுகிறது என்பதுதான் முக்கியம்’ என்று.

நான், பன்னிப் பன்னி, ‘அமைதி, அமைதி ! அடித்தால் பொறுத்துக் கொள்ள வேண்டும்; தாக்கினால் தாங்கிக்கொள்ள வேண்டும்; தூற்றுவர், கோபம் கொள்ளக் கூடாது; இழித்தும் பழித்தும் பேசுவர், ஏளனம் செய்வர், அது கேட்டு மன எரிச்சலடையக் கூடாது’ என்கிறேன்.

நமது முறையில் பலாத்காரம் தலைகாட்டக் கூடாது, யாரையும் நாம் வற்புறுத்தவும் கூடாது—கடை அடைப்பிலும் வேலை நிறுத்தத்திலும் ஒவ்வொருவரும் தாமாக மனமுவந்து ஈடுபட வேண்டும், யாரையும் நாம் பலவந்தப் படுத்தக் கூடாது, என்று தமக்கே உரித்தான பண்புடன் பேசுகிறார், பி. டி. ராஜன்.

மக்களோ, அப்போதே நகரெங்கும் குழுமிக் கிடக்கும் கவசத் தொப்பி தரித்த போலீசைக் காண்கிருர்கள்; அவர்களின் முகம் கடுகடுத்து இருப்பதும் தெரிகிறது. இவர்கள் என்னென்ன 'இம்சை'கள் தருவார்களோ என்றும் எண்ணுகிருர்கள். இங்கோ தலேவர்கள், காந்தியார் பார்த்து மெச்சத்தக்க வகையில், 'சாந்தோபதேசம்' செய்கிருர்கள்—போலீஸ் முகாமிலோ, துப்பாக்கிகளுக்குத் தோட்டாக்களைப் பொருத்திக் கொண்டும், தடிகளுக்குப் போடப்பட்டுள்ள 'பூண்கள்' சரியாகப் பொருந்தியுள்ளனவா என்று சரிபார்த்துக் கொண்டும் உள்ளனர்.

இலட்சக்கணக்கான மக்கள் கடற்கரையில்.

அவர்களே 'அடக்கி ஆள' ஆயிரக் கணக்கில் புதிய புதிய போலீஸ் படைகள் வந்திறங்குகின்றன. ஆந்திர நாட்டிலிருந்துகூடப் போலீஸ் படைகள் தருவிக்கப்பட்டிருப்பதாக, அன்று தோழர் விநாயகம் அறிவித்தார்.

தம்பி ! 19-ந் தேதிய கூட்டத்தையும் கண்டேன், தலேவர்கள் காட்டிய அடக்கத்தையும் அவர்கள் தந்த அறிவுரையையும் எண்ணி எண்ணிப் பார்த்தேன்—என் கண்களில் நீர் துளிர்த்தது !

சென்னே நகரை, என்ன வேண்டுமானுலும் செய்துவிடலாம் அன்று இரவு ! ஆம், தம்பி ! என்ன வேண்டுமானுலும் ! எழுக, வீழ்த்துக—என்று தலேவர்கள் அன்று கட்டளேயிட்டிருந்தால், எதனே? என்றுகூடக் கேட்டுக் காத்துக்கொண்டிருக்க மாட்டார்கள், எதையாவது வீழ்த்திவிட்டு,வேறு எதை வீழ்த்த வேண்டும் என்று கேட்டிருப்பர். அவ்வளவு உணர்ச்சி வயப்பட்ட நிலேயில் இருந்தனர் மக்கள்.

என்ஞல், எண்ணத்தை வெளியிடாமல் இருக்க முடியவில்லே.

இன்று ஆளவந்தார்களாக உள்ள இதே காங்கிரசாரிடம் இந்த 'ஜனசக்தி' கிடைத்த போது, அம்மவோ ! என்னென்ன செய்து பகிழ்ந்தனர்; எதிர்கட்சியினரைத் துரத்தித் துரத்தித் தாக்கினர். துரைத்தனத்தைத் துழைத்து எடுத்தனர். சட்டமாவது மண்ணுவது ! அமைதி என்று கோழைத்தனம் பேசுவதா, அடிமைத்தனத்தைப் போக்கிக் கொள்ளும் அரும் வாய்ப்பினே இழந்து விடுவதா ? தத்துவம் பேச இதுவா தருணம்? தாக்குக, நொறுக்குக, தண்டவாளங்களைப் பெயர்த்திடுங்கள், தபாலாபீசுகளே.க் கொளுத்துங்கள் ! சர்க்கார் கட்டடத்துக்குத் தீ மூட்டுங்கள், தனியே சிக்கிடும் அதிகாரியின் மீது திராவகம் ஊற்றுங்கள்—என்றெல்லாம் பேசினர்—மக்

களை எதெதற்கோ ஏவினர்—பலாத்காரத்தை அவிழ்த்து விட்டனர். மக்களின் ஆற்றலைக் கொண்டு, நாச வேலையைச் செய்துமுடித்தனர்.

இதோ, பி. டி. ராஜன் எதிரில் நான்கு இலட்சம் மக்கள். சர்வக் கட்சிக் கூட்டணியின் தலைவர் அவர்.

அவர், தம்மிடம் தரப்பட்டுள்ள நான்கு இலட்சம் மக்களைக் கண்டு, என்ன எண்ணுகிறார்? இந்தப் பெரும் படையினைக் கொண்டு, எத்தகைய பேயாட்டம் நடத்திக் காட்டலாம் என்று? இல்லை, தம்பி, இல்லை. பெருநோக்கம் கொள்கிறார்! மகத்தானதோர் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறோம், எதையும் சாதிக்கவல்லதோர் ஆற்றல் படை இதோ அணிவகுத்து நிற்கிறது! இதனை நாசப் பாதையில் நாட்டம் கொள்ளாதிருக்கச் செய்யவேண்டும், தமிழ்ப் பண்பு அழியும் விதமான போக்கிலே நடந்து கொள்ளாதிருக்கச் செய்ய வேண்டும் என்பது பற்றித்தான் மிக மிகப் பொறுப்புடன் பேசினார்.

எனக்குத் தம்பி, உண்மையாகவே உருக்கமாக இருந்தது. மாற்றுக் கட்சிக்காரர்களுக்குத் தன் 'வலிவை' எடுத்துக் காட்டுவதற்கான எத்துணை பெரிய வாய்ப்பு இது. இதனைப் பெற்றும், மகிழ்ச்சியடைந்தும், வாய்ப்பு, பெரும் பொறுப்பு தவிர, பகைக்குவதற்கான சாதனம் அல்ல என்பதை உணர்ந்து பேசுகிறாரே, இவரல்லவா கண்ணியவான், என்று எண்ணிக்கொண்டேன், பெருமிதம் கொண்டேன்.

இலட்சக்கணக்கிலே கூடி இருந்த மக்களிடம் சொன்னேன், தங்களிடம் மக்கள் சக்தி குவிந்திருந்த போது கொடுமையையும் நாசத்தையும் அவிழ்த்துவிட்ட அந்த அரசியல் வாதிகள் எங்கே? தமிழகம் தன் பக்கம் திரண்டு நின்று ஆர்வம் கொப்பளிக்கும் நிலையில் ஆதரவு காட்டி நிற்பது அறிந்தும், அமைதியுடன் நீதியைப் பெற அறநெறி நிற்கவேண்டும் என்று அறிவுரை தரும் இவர் எங்கே? தமிழ் நாட்டின் கண்ணியம், இதோ இங்கு அமர்ந்திருக்கிறது. காண்பீர்! என்று எடுத்துச் சொன்னேன். என் இதயம் பேசிற்று.

அத்தகைய 'கண்ணியவான்' ஜனவரி 27-ந் தேதிய சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்—கூட்டணித் தலைவரானார்; பிப். 20, பொதுவேலை நிறுத்தம், கடை அடைப்பு, அன்றே தீர்மானிக்கப்பட்டது.

பி. டி. ராஜன், அரசியலில் இப்போது நுழைந்த டி. டி. கே. அல்ல.

காலமெல்லாம் வேறு வேலை பார்த்துவிட்டு, சமயமறிந்து காங்கிரசில் பதுங்கும் 'சந்து' தேடிடும் சந்தர்ப்பவாதியல்ல.

கப்பல் மூழ்குவது தெரிந்தாலும், அதில் உள்ளோர் தப்பிச் செல்ல வழி செய்துவிட்டு, நான் தப்பித்துச் செல்வது அறமாகாது, நானும் கப்பலுடன் சேர்ந்து மூழ்கினுலும் கவலையில்லை என்று கூறி, கொடி வணக்கம் செய்தபடி, கப்பல் மேல் தட்டிலே நிற்கும் கப்பற் றலைவன் போல, ஜஸ்டிஸ் கட்சியில் நின்றவர்.

காமராஜ், அரசியல் இயக்கத்தில் தொண்டராக, கொடி ஏந்தியாக இருந்த நாட்களிலே, கோலோச்சும் அமைச்சராக இருந்தவர்; துள்ளி விளையாடும் சிறு பிள்ளைப் பருவத்தில் காமராஜர் இங்கு இருந்த நாட்களில், சீமை சென்று பார்-அட்-லா படித்தவர். பண்புக்கும் அன்புக்கும் உறைவிடம்; அரசியல் நாகரிகத்துக்கே ஆசான்.

அவரைச் சந்தித்து, பிப்ரவரி 20 குறித்துப் பேசவேண்டும் என்ற அளவுக்குக்கூட, தமது உயர்ந்த இடத்திலிருந்து கீழே இறங்க, காமராஜருக்கு மனம் இடம் தரவில்லை.

அழைத்துப் பேசவும் அவருக்குத் தோன்றவில்லை.

அலட்சியப் படுத்தினுர்—கூட்டணி என்றோர் அமைப்பு உருவாக்கி இருப்பதையே, கவனிக்க வேண்டிய அளவில், நான் சாமான்யனல்ல, ஓஹோ! அதனை அறிவீரா? நான் இந்த இராஜ்ய முதல் மந்திரி! என்று எண்ணி இறுமாந்து கிடந்தார்.

'அர்த்தால்' நடத்தத் தேவையில்லை, கோரிக்கைகளை நான் கவனித்துக் கொள்ளுகிறேன் என்று கூறிட, முன்வரவில்லை.

ஒருவேளை, முதல் மந்திரிக்கு இருக்கும் மிகுதியான, பலரச வேலைகளிலே, இதனை அவர் கவனிக்கவே இல்லையோ என்றுல், தெரிந்திருக்கிறது, தூற்றிப் பேசியுமிருக்கிறுர் செஞ்சியில்.

வேண்டுமென்றே அலட்சியப் படுத்தினுர்—துச்சமென்று எண்ணினுர்—கூட்டாவது குழம்பாவது என்றுர்!

அப்படிப்பட்டவருக்குக் 'கண்ணியம்' காட்டினுர், பி. டி. இராஜன். தமிழனின் புகழ்க்கொடி, உயர உயரப் பறந்தது, தம்பி, பறந்தது!

நாடு, சர்வ கட்சிக் கூட்டணியின் அழைப்புக்கு ஆதரவு காட்டிற்று. தம்பி, நீ உன் முழுத்திறமையையும் அளித்து பிப். 20 வெற்றி தேடித் தந்திருக்கிறுய், நான் உன்னிடம் எவ்வளவு எதிர்பார்க்கிறேனே, அந்த அளவு குறைவு, இன்னும் அதிகம் நான் உன்னிடம் எதிர்பார்க்கலாம் என்பதை எடுத்துக் காட்டிவிட்டாய்.

திக்திக்கும் செய்திகளாகவே அனைத்தும் இருந்துவிட வில்லை; குருதி கொட்டினர் நண்பர்கள்; தடியடிக்கும் ஆளா யினர் அன்பர்கள்; அரசியல் பிரச்சினையிலே அக்கறை கொண் டுள்ள தமிழர்கள் அத்துணை பேரும், அவர்கள் எந்தக் கட்சி யினராயினும், ஏதேனும் ஓர் வகையில் தமது பங்கினைச் செலுத்த வேண்டும் என்ற ஆர்வத்துடன் பணியாற்றினர்— வெற்றி பெற்றனர். வாழ்த்துகிறேன்—வணங்குகிறேன். அவர்களின் 'தோழனாக' இருக்கும் 'பேறு' கிடைக்கப் பெற்ற தற்காகப் பெருமகிழ்வு கொள்ளுகிறேன்.

சைமன் கமிஷனை பகிஷ்கரித்தபோதுகூட இப்படி இருந்த தில்லை என்றும்,

ரவுலட் சட்ட எதிர்ப்பின் போதும் இதுபோல் கொதிப்பு எழுந்ததில்லை என்றும்,

இராஜ்யம் பூராவிலும் நடைபெற்ற மிகப் பெரிய அர்த் தால் இதுதான் என்றும்,

எதிர்க்கட்சிக்காரர்கள் ஏற்பாடு செய்த அர்த்தால், இது போல் மகத்தானது வேறு ஒன்றும் இதற்குமுன் நடைபெற்ற தில்லை என்றும்,

பெரிய பத்திரிகைகளின் ஒத்துழைப்பு ஒரு துளியுமின்றி, அவைகளின் எதிர்ப்பையும் ஏளனத்தையும் தாங்கிக்கொண்டு, வெற்றிகரமாக நடைபெற்றது இந்த அர்த்தால் ஒன்றுதான் என்றும்,

காலித்தனமோ குழப்பமோ, பலாத்காரமோ பயங் கரமோ இல்லாமல், மிக மிக அமைதியாக மக்கள் பெருமள வுக்கு நடந்து கொண்டது, இந்த அர்த்தாலில்தான் என்றும்,

ஓரிரு இடங்களில் கட்டுக்கடங்காத ஆர்வத்தினால் சில காரியங்கள் நடைபெற்றிருந்தாலும், அவை விதிவிலக்கு அல்லது 'திரிஷ்டி பரிகாரம்' என்று கூறத்தக்க வகையில்தான் இருந்தது என்றும்,

இந்த அர்த்தாலின்போதுதான், பொதுமக்கள், பயமற்று உலவி, காட்சிகளைக் காண முடிந்தது என்றும்,

பெரும்பணத்தைச் செலவிட்டு, முதலாளிமார்கள் முன் முழங்காற்படியிட்டு, போலி வெற்றி தேடாமல், மன முவந்து, தாமாக மக்கள் ஈடுபடவேண்டுமென்று முறை வகுக் கப்பட்டு, நடத்தப்பட்டது இந்த அர்த்தால் ஒன்றுதான் என் றும், நேர்மை உள்ளம் படைத்தவர்கள், மாற்றான் தோட் டத்து மல்லிகையானாலும் மணம் இருந்தால் ரசிக்கத் தெரிந்த வர்கள், அனைவரும் கூறினர்—பாராட்டினர்.

கண்டித்துப் பேசவும், கேலி பொழியவும், பகை உமிழவும், பொறுமையைக் கக்கவும் தலைவர்கள் இல்லாமற் போக வில்லை.

முட்டாள்கள்—பைத்யக்காரத்தனமான செயல்—என்று மேதை பக்தவத்சலனார் பேசியிருக்கிறார் !

தம்மம்பட்டியிலும் கல்லக்குறிச்சியிலும் குண்டடிபட்டு, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கள், நாங்கள் குண்டடி பட்டபோது குற்றுயிராய்க் கீழே கிடந்த போது, மருத்துவரிடம் சிக்கியபோதுகூட எமக்கு இவ்வளவு வேதனை ஏற்பட்டதில்லை; மொழி காக்கவும் மொழிவழி அரசுக்காகவும், நீதிக்காகவும் அறப்போர் நடத்தியவர்களை, முட்டாள்கள்—பைத்யக்காரர்கள் என்று ஏசுகிறாரே ஒரு மந்திரி—தமிழ் இனத்தவர்—அதைக் கேட்கும் போதுதான் எமக்கு அதிகமான வேதனை மூண்டுவிடுகிறது என்று கூறுவர்.

உள்ளம் உண்மையிலேயே வேதனைப்படத்தானே செய்யும்.

கல்லக்குறிச்சியில் மூவர், தம்மம்பட்டியில் மூவர், குண்டடிபட்டு மருத்துவ மனையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்கள், வாழ வேண்டியவர்கள், அவரவர் இல்லங்களிலே இன்று இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டுள்ளனர். மகனுக்குக் குண்டடிபட்டதாம்—குருதி கொட்டக் கொட்டக் கீழே வீழ்ந்தனராம்—குற்றுயிராயினராம்— என்று கேட்டதும், தாய் எப்படிப் பதறினார்களோ, என்னென்ன கூறிக் கதறினார்களோ ! வம்புதும்புக்குப் போகாதவன், யாரிடமும் இன்முகம் காட்டிப் பேசுவான், ஊருக்கு உழைப்பதிலே ஆசை மிக்கவன், ஒருவரிடமும் விரோதம், குரோதம் கொள்ளமாட்டானே, ஐயோ ! அப்படிப்பட்ட என் அருமை மைந்தனை, துப்பாக்கியால் சுட்டார்களாமே ! பெற்றெடுத்து வளர்த்துப் பெரியவனாக்க நாங்கள், சுட்டுத் தள்ள சர்க்கார் ! இந்தக் கொடுமைக்கு என்னதான் பரிகாரம் ? யாரும் இல்லையா நீதி கேட்க ?...... என் மகன் என்ன, வெடிகுண்டு வீசினானா, வெட்டரிவாள் தூக்கினானா ? வீடு புகுந்து கலாம் விளைவித்தானா? போவோர் வருவோரைத் தாக்கினானா ? கொலையும் கொள்ளையும் நடத்துவோனை அடக்கப் பயன்படுத்தவேண்டிய துப்பாக்கி கொண்டா, கொள்கைக்காகப் பணியாற்றுவோரைத் தாக்குவது, இப்படி ஒரு துரைத்தனமா? இதற்குத் தூபதீப நைவேத்தியம் வைத்தல்லவா தேர்தலில் ஓட்டுக் காணிக்கை தந்தோம், மாட்டுப் பெட்டிக்கு ஓட்டளியுங்கள், மகத்தான நன்மைகள் செய்து தருகிறோம் என்று ஆசை வார்த்தை கூறினர்; சாரை

சாரையாகச் சென்று ஓட்டு அளித்தோம்—இப்போது தடியும் துப்பாக்கிக் குண்டுமல்லவா தருகிறார்கள். என் மகனைத் துப்பாக்கியினால் சுட்டிருக்கிறார்களே! அவதார புருஷன் என்றும், அஹிம்சா மூர்த்தி என்றும், ஒப்பற்ற முனிவன் என்றும், போற்றப்பட்ட உலக உத்தமராம் மகாத்மாவின் சீடர்கள், வாரிசுகள், என்று கூறிக்கொண்டே, இவ்வளவு கொடுமைகளைச் செய்கிறார்களே, ஏனென்று கேட்க யாரும் இல்லை, பெற்ற வயிறு பற்றி எரிகிறதே; இந்த அநீதியை, அக்ரமத்தை ஏனென்று கேட்க நீதிமான் யாரும் இல்லையா! காட்டில் உள்ள புலி நாட்டுக்குள் நுழைந்து விட்டால், வீட்டுக்கோர் வீரன் கிளம்பிச் சென்று வேட்டையாடிக் கையில் கிடைத்ததைக் கொண்டு தாக்கி, புலியைக் கொன்று போடுகிறார்களே, நாட்டைக் காடு என்று எண்ணிக் கொண்டு, மக்களை அடக்குமுறைக் கொடுமைக்கு ஆளாக்கும் ஓர் ஆட்சி நடக்கிறது, அறிஞர் பெருமக்களும் ஆண்மையாளர்களும், குடி அரசின் கோட்பாட்டின் பாதுகாவலர்களும் வாய் மூடி இருந்திடலாமா? என்றெல்லாம் அவர்களுக்குப் பேசத் தெரியாது. ஆனால் கண்ணீருக்கு வேறென்ன பொருள்?

தம்பி, தம்மம்பட்டிச் சம்பவம், கேட்கும்போதே நெஞ்சு உருக்குவதாக இருக்கிறது.

தம்மம்பட்டி, ஆத்தூர் வட்டாரத்தில் உள்ள சிற்றூர்.

மாபெரும் புரட்சி நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடத்தினாலும், மொத்தமாக ஒரு ஆயிரம் மக்கள் திரண்டிட முடியாது.

அங்குள்ள மக்களுக்கு, நமது இயக்கத்தைப்பற்றி அறிவிக்க, தம்மம்பட்டியில் நமது கழகக் கூட்டம்கூட நடைபெற்றதில்லை.

சுற்றுப்புறமுள்ள இடங்களிலே நடைபெற்ற, நமது கழகக் கூட்டங்களின் மூலமாகப் பெற்ற உணர்ச்சிதான், தம்மம்பட்டிக்கு இருந்து வந்தது. ஆனால், பிப். 20 அர்த்தால் பற்றிய சர்வக் கட்சிக் கூட்டணியின் பிரசாரம் தம்மம்பட்டிக்கும் பரவிற்று—தமிழர் வீறுகொண்டெழுந்தனர்—ஊர் வலம் நடந்தது. தம்மம்பட்டி சென்று வந்த தம்பி மதியழகன், அறுபது எழுபது பேருக்கு மேல் ஊர்வலத்தில் செல்லவில்லை என்று தெரிந்துவந்து அறிவிக்கிறார். இதைப் 'புரட்சிப் படை', போலீசைத் தாக்கவந்த படை, நாசம் விளைவிக்கக் கூடிய படை என்றெல்லாம் கருதிக் கொண்டு, அதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார் ஒரு சப்-இன்ஸ்பெக்டர். மூவர், தம்பி! குண்டடிப்பட்டு, மருத்துவ மனையில் இருக்கிறார்கள்.

மகாத்மா, மொழிவழி ராஜ்யமே தேவை என்று வலியுறுத்தி வந்தார். மக்களுக்கு வாக்களித்தார். அவர் 'வாரிசு' ஆகவந்து அரசோச்சும் நேரு பண்டிதரோ, மகாத்மாவின் மொழிவழி ராஜ்யத் திட்டத்தைக் கிழித்தெறிகிறார்.

மகாத்மாவின் உபதேசத்தைப் புறக்கணித்து நடக்கும் நேரு பண்டிதருக்குப் பக்கபலமாக இருப்பதில் பெருமை கொள்ளும் காமராஜர் சர்க்காரோ, தம்மம்பட்டி, கல்லக்குறிச்சி நடத்தி மகிழ்கிறது.

தருக்கரிடம் ஆட்சி சிக்கிக் கொண்டதால், குண்டடிக் கொடுமைக்கு ஆளான தம்மம்பட்டித் தோழர்களே! நீங்கள் அனுபவித்த கொடுமையை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கிறோம்—முதலில்—பிறகோ தாயகத்தின் உரிமை முழக்கமிட்டு, அதனை ஒடுக்க எண்ணுவோரின் குண்டினைத் தாங்கிக் கொண்ட, நெஞ்சு உரம் கொண்ட தோழர்காள்! உமது வீரத்துக்குத் தலைவணங்குகிறோம் என்று நான் மட்டுமா, சர்வ கட்சிக் கூட்டணித் தலைவர்களெல்லாம், ஏன், தமிழகமே கூறுகிறது.

கல்லக்குறிச்சியிலும் தடியடி—குண்டடி; அங்கும் மூவர் படுக்கையில்.

கேட்கும்போது, கண்ணீர் வருகிறது—பிறகோ, மார்பு நம்மையுமறியாமல் நிமிர்கிறது. தமிழகமே! தாயகமே! உன் மக்களில் வீரரும் தீரரும் இல்லாமற் போகவில்லை—அனைவரும் பக்தவத்சலங்களாகி விடவில்லை—இதோ தம்மம்பட்டியும் கல்லக்குறிச்சியும் உனக்கு இரத்தக் காணிக்கை தந்திருக்கின்றன, தருக்கராட்சிக்குக் குருதி மேலும் தேவை என்றாலும், தரச் சித்தமாக உள்ள வீரர் அணிவகுப்பு, உன் தளைகளை ஒடித்திடும் வல்லமையை மெள்ள மெள்ள, ஆனால் நிச்சயமாகப் பெற்றுக் கொண்டு வருகிறது என்று எண்ணி எக்காளமிடத் தோன்றுகிறது.

கடை அடைப்பும் பொது வேலை நிறுத்தமும்தான் நடத்தினோம்—அதிலும், வற்புறுத்தல், துன்புறுத்தல், வம்பு வல்லடி செய்தல், குறுக்கே படுத்தல், மறித்து நிறுத்துதல், கூடாது என்று கூறிவிட்டோம்—கொழுந்து விட்டெரியும் ஆர்வத் தீயைத் தணியச் செய்து கொள்ள முடியாததால், இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில நடைபெற்றுவிட்டன—சிந்தை நொந்து தமது வருத்தத்தைத் தெரிவிக்கிறார் கூட்டணித் தலைவர்.

சென்னையில், ஊர்வலத்துக்கு வந்த மக்களை ஒழுங்கு படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த அன்பர் ஜீவாவும், கம்யூனிஸ்டுத்

தலைவர் வெங்கடராமனும் போலீசால் தாக்குண்டனர். ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளவர், இது சேட்டு இன்னமும் வெட்கித் தலை குனியக் காணோம், இத்தகைய அக்கிரமத்தில் இறங்கியவர்களைக் கண்டித்ததாகவும் தெரியவில்லை. கட்சியின் நடுநாயகங்களாக விளங்கும் இருவர், நாற்பதாண்டுகளாகப் பொதுப் பணியாற்றி வரும் மக்கள் தலைவர்கள், தாக்கப்படுகின்றனர், பட்டப்பகலில் நடுவீதியில் அமைதியைக் காத்திட அவர்கள் ஈடுபடுகிற நேரத்தில்.

அமைதி பிறகு எங்ஙனம் நிலைக்கும்? தங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தலைவர்களைக் கண்ணெதிரே போலீஸ் அடிக்கக் கண்டால், மக்கள் மனம் என்ன பாடுபடும்—கொதித்தெழுவரன்றோ மக்கள். ஆமாம், அதைத்தான் விரும்புகிறார்கள் அடக்கு முறையில் பயிற்சி பெற்றோர். மக்களைக் கொதித்தெழச் செய்வது, கொதித்தெழுந்த மக்கள் மீது தம்மம்பட்டி, கல்லக்குறிச்சி நடத்துவது! இதுதான் முறை என்றால், இதற்கு ஜனநாயகம் என்ற போர்வை ஏன்?

தோழர் கோவிந்தசாமி M. L. A. கடலூரில் கைதானார்—குற்றம் என்ன தெரியுமா தம்பி, கொள்ளை அடித்தார் என்பது. நம்ம கோவிந்தசாமியேதான், எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார் காங்கிரசுக்குத் 'தத்து' போனபோது, தொத்திக் கொண்டிருந்தால், சீமானாகி இருக்கக்கூடும்—அந்த வாய்ப்பு வேண்டாம், வாக்குறுதி காப்பாற்றப்படவேண்டும், மக்களுக்குத் துரோகம் செய்யக்கூடாது, பதவி அல்ல முக்கியம், பண்புதான் என்று உணர்ந்து உழைப்பாளர் கட்சியை உருவின்றிப் போகச் செய்ததைக் கண்டித்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தோழமைகொண்டு பொதுப்பணியாற்றி வருகிறாரே, புன்னகை மாறாத முகமும், புன்மொழி பேசிடா வாயும், எவரிடமும் இன்மொழியே பேசிப் பழக்கமும் பெற்றுள்ள பண்பாளர் இருக்கிறாரே, அவர், "என்னை மீறி நடக்கிறானே, பார், பார், ஒழித்துக் கட்டிவிட்டு மறுவேலை பார்க்கிறேன்" என்று மந்திரி மிரட்டியபோதும் மனம் தளராமல் மக்கள் தொண்டனாகி, மகத்தான பணியாற்றிக் கொண்டு வரும் அதே கோவிந்தசாமிதான், தம்பி, கொள்ளைக்காரனாகப்படுகிறது, ஆட்சியாளர்களின் கண்களுக்கு. வழக்கு இருக்கிறது. எனவே மேலால் அது குறித்துக் கூறுவதற்கில்லை.

தமிழகத்தில் ஒட்டு மொத்தம் ஆயிரம் தோழர்களைப் போலீசார் இழுத்துச் சென்றனர்—இப்போது நூறு தோழர்கள்மீது வழக்குத் தொடரப்படக்கூடும் என்று தெரிகிறது.

தோழர்கள் A. கோவிந்தசாமி, M. L. A., நாமக்கல் இராமசாமி M. L. A., திருச்செங்கோடு அர்த்தநாரி M. L. A., சென்னை ப. ஜீவானந்தம் M. L. A., சென்னை V. முனிசாமி

கார்ப்பரேஷன் கவுன்சிலர், வேலூர் நகரசபை உறுப்பினர்கள் மூவர்—ஆகியவர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டனர் —இதிலே தோழர் A. கோவிந்தசாமி அவர்கள் மீது மட்டும் வழக்குத் தொடரப்படுகிறது.

வழக்கம்போல், தீவிரக் கிளர்ச்சியில் முன்னணியில் நின்று பெருமை பெற்றிருக்கிருர் நமது அலமேலு அப்பாத்துரை யார்—தமிழரசுக் கழகத் தோழியர் சரோஜினி நாராயண சாமி அவர்களுக்கும் இதே பேறு கிடைத்திருக்கிறது.

மொத்தத்திலே, நாமெல்லாம் நீண்ட நாட்களுக்குப் பிறகுங்கூட எண்ணிப் பார்த்துப் பார்த்துப் பெருமைப்படத் தக்க விதமாகவே நிகழ்ச்சிகள் இருந்திருக்கின்றன. எவ்வளவு கடுமையான கிளர்ச்சியாளுலும், எவ்வளவு நீண்ட காலத்துக் குத் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமென்ருலும், தமிழகத் தில் அதற்கான வாய்ப்பும் திறனும் நிரம்ப இருக்கிறது என்ப தும், வேண்டுமென்றே ஆத்திரமூட்டிவிடப்பட்ட சிற்சில இடங் களில் தவிர மற்றெல்லா இடங்களிலும் பண்பறிந்து மக்கள் நடந்து கொண்டனர் என்பதும் மகிழ்ச்சி யூட்டுகிறது—அவ் வகையில் நடத்திச் செல்லும் திறமையைப் பெற்றதாகச் சர்வ கட்சிக் கூட்டணி அமைந்திருக்கிறது என்பதும், நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. இவ்வளவுக்கும், சர்வ கட்சிக் கூட் டணியைப் பிளவுபடுத்த, பலத்த முயற்சி எடுத்துக் கொள்ளப் பட்டிருந்தது. நமது பொதுச் செயலாளரும் துணைப் பொதுச் செயலாளரும் தமிழகமெங்கணும் கூட்டணித் திட்டத்துக்கு நமது கழகத் தோழர்களிடம் ஆதரவு திரட்டச் சென்றிருந் தனர். தோழர் மதியழகன் கோவை, சேலம், வடாற்காடு மாவட்டங்களிலே சுற்றுப் பயணம் செய்து வந்தார். தம்பி சம்பத்து முழக்கம் கேட்ட வண்ணமிருந்தது—நான்தான் இங்கே சென்னையில் தனி ஆளாக விடப்பட்டிருந்தேன்! எனக்கு எப்போதுமே இத்தகைய கிளர்ச்சியின் போது உட னிருந்து உற்சாக மூட்டவும், என் கோபதாபத்தில் பங்கேற்றுக் கொள்ளவும், சம்பத்து வேண்டும். இம்முறையோ நாட்கள் அதிகம் இல்லாததால், நானே, சம்பத்து, பல ஊர்களுக்குச் சென்றுவர வேண்டும் என்று விரும்பினேன். இதனுல், இங்கு தம்பி! என் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளவோ, கலந்து பேசிப் புதிய கருத்துப் பெறவோ மெத்தத் திண்டாடிப் போனேன். நாள் தவருமல் கூட்டம்—பலப்பல ஆயிரம் மக்கள் - பேரார்வம், போரார்வம் என்றுகூடச் சொல்லலாம்- எனினும் அலுத்துவந்தமர்ந்து, கண் அயரும் வேளை வரையில், அன்றைய நிலைமைபற்றி உரையாட, அவர் வருவாரா, இவர் வருவாரா என்று எதிர்பார்த்தவண்ண மிருப்பேன், எவரும் வருவதில்லை, ‘வேலைவெட்டி’ யற்ரு அனைவரும் இருக்கிருர்கள்,

இந்தத் தொல்லேபிடித்த காரியம் பற்றி என்னுடைய ‘தொண தொண’ப்பைக் கேட்டுக் கொண்டிருக்க—எனினும், துணைக்கு நாங்கள் இருக்கிறோம், நாங்கள் கழக முன்னணியில் இல்லா மற்போனது எங்கள் குற்றமல்ல என்று கூறுமற் கூறிக் கொண்டு, என்னுடன் கலந்துரையாடவும், கருத்துக்களைத் திரட்டித் தரவும் தோழர்கள் போளூர் சுப்பிரமணியமும், சென்னை வேதாச்சலமும் இருந்தனர். என்னைப் போன்ற மற்றோர் ‘மாஜி’ இல்லையா சென்னை கே. எம். கண்ணபிரான், அவரும் இருந்தார்—அறிவகத்தில் உள்ள கழகத் தோழர் சிவஞானம்—இவர்கள் இருந்தனர்.

இந்தக் கட்டத்திலேதான், சர்வ கட்சிக் கூட்டணியின் தலைவர்களுடன் அடிக்கடி சந்தித்துப்பேசும்வாய்ப்பு ஏற்பட்ட படி இருந்தது. அதனுல் எனக்கு உற்சாகம் ஏற்பட்டதுடன், எங்களுக்குள் ஓர் உள்ளன்பு வளர்ந்திருக்கிறது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நீண்ட நாட்களுக்குப் பிறகு ம. பொ. சி.யுடன் மீண்டும் பழகும் வாய்ப்புக் கிடைத்தது—இருவருமே இதனை மெத்தச் சுவைத்தோம் என்று எண்ணுகிறேன்.

தமிழரசுக் கழகத் தோழர்களில் எனக்கு, நீண்ட கால மாகவே நண்பர், உமாபதி. கூட்டணி காரணமாக நாங்கள் சந்திப்பதும், பொதுவாகத் திட்டம் தீட்டுவதும், காணக் காண அவருக்கு மெத்த மகிழ்ச்சி—அலாதியான ஆனந்தம்!

கோவை சின்னதுரையும், சென்னை சுப்பிரமணியமும், ஈரோடு சின்னச்சாமியும், சென்னை அந்தோணிப் பிள்ளையும், அவரவர் தொடர்பு கொண்டுள்ள தொழில் சங்கங்களின் மூலம் சர்வ கட்சிக் கூட்டணி பெறக்கூடிய வாய்ப்புகள் பற்றிக் கூறியும், பிரச்சினைகளை அன்புடன் விவாதித்தும், திட்டங்கள் காணுவதிலே தெளிவும் துணிவும் காட்டியும், எனக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டினர்.

ஜீவாவைப் பற்றித்தான் சொல்லத் தேவையில்லை!

“பொல்லாத ஆசாமி, சொல்லாமல் கொள்ளாமல் வேறு இடத்துக்குக் குடிபோய் விட்டார்,” என்று நாமெல்லாம், எப்போதும் சொந்தம் கொண்டாடிப் பேசும் நிலையில் உள்ள தோழர்.

இவ்வளவு பேருக்கும் அன்பை அள்ளிக்கொடுத்து, முற்றிலும் தமக்குப் பழக்கமே இல்லாத முறைகளையும் திட்டங்களையும் நாங்கள் திணிக்க முயற்சித்த போதெல்லாம், புன்முறுவல் காட்டி, எங்கட்கெல்லாம் பொறுப்புப் பற்றி அடிக்கடி நினைவு படுத்தி, எம்மை ஊக்குவித்து வந்தார், உடனிருந்து நடத்திச் சென்றார், பி. டி. ராஜன் அவர்கள்.

சர்வ கட்சிக் கூட்டணிக்கு, சட்டத்தைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற பொறுப்பைத் தாங்கித்தாங்கித் தழும்பேறிப் போனவர் தலைவர்; அதிலே உறுப்பினர்களாக உள்ளவர்களில் பெரும்பாலோர், ஜனநாயகத்தின் பேரால் பதவிக்கு வந்தவர்கள் சட்டத்தைப் பயன்படுத்தியே சர்வாதிகாரியாகி விடுகிறார்கள் என்ற உண்மையை அறிவதால் ஆத்திரமே கொள்பவர்கள்! இந்தக் 'கூட்டு' எத்தனை நாளைக்கு நிலைக்கும்? ஒரு சிறு விவாதத்தில் சச்சரவு மூண்டுவிடாதா? திட்டம் தீட்டும் போதே தகராறு கிளம்பி விடாதா? கொள்கைக்கு விளக்கமளிக்கும்போதே ஒவ்வொருவர் ஒவ்வொரு கோணம் சென்று விடமாட்டார்களா? என்றெல்லாம் எண்ணிக்கொண்டுதான் காமராஜர்கூட, கூடட்டும் கூடட்டும், தீட்டட்டும் தீட்டட்டும் என்று கூறிக்கொண்டு சும்மா இருந்துவிட்டார் என்று எண்ணுகிறேன். அப்படியே அவருக்குச் சிறிதளவு ஆயாசமோ அச்சமோ ஏற்படவிடக்கூடாது என்பதற்காகவே, பெரியாரும் பூ, பூ! இதுகளெல்லாம் கூடி ஒரு காரியம் செய்யமுடியுமா? யார் இதுகளை நம்புவார்கள்? இதுகள் யார் என்பது யாருக்குத் தெரியாது? என்றெல்லாம் பேசியும் எழுதியும் வந்தார்.

எனினும், தமிழகம் கண்டு பாராட்டத்தக்க விதமாக, கூட்டணி செயலில் ஈடுபடுவதிலே, தோழமை உணர்ச்சியையே காட்டிற்று. ஒவ்வொரு சந்திப்பும், நேசத்தை வளர்த்தது. ஒவ்வொரு விவாதமும், தோழமைக்கு அழைத்துச் சென்றது.


கூட்டணி முறியவில்லை என்பதையும், பெரியாரின் பகைப் பிரசாரத்துக்குப் பிறகும், கூட்டணியின் குரலுக்கு நாட்டு மக்கள் ஆதரவு அளிக்கிறார்கள் என்பதைத் தெரிந்த பிறகும் தான், ஜனவரி 27-ல் அமைக்கப்பட்ட கூட்டணியை அலட்சியப்படுத்தி, தலைவருடன் பேச முயற்சிக்காமல் முடுக்குடன் இருந்து வந்த காமராஜர் சர்க்கார், கூட்டணித் தலைவரைக் கண்டு பேசவும் அர்த்தாலைக் கைவிட்டு விடும்படி அவரைக் கேட்டுக் கொள்ளவும் முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டம் பிறந்தது! ஆனால், அதற்குள் கூட்டணி அலுவலகக் கதவு தாளிடப்பட்டு விட்டது; தட்டினால் திறக்கப் படும், கேட்டால் விளக்கம் அளிக்கப்படும், கெஞ்சினாலும் மிஞ்சினாலும் அர்த்தாலைக் கைவிடுவது என்பது மட்டும் முடியாது என்பது அறிவிக்கப்பட்டாகி விட்டது.

அரசியலில் அமளிகளைத் தடுத்துச் சமரசம் காண்பதற்கென்றே தம்மை ஒப்படைத்திருப்போர் மூலம், 'சமரசம்' பேசப்பட்டது—பலன் ஏதும் இல்லை. காரணம், கூட்டணி தன் திட்டத்தில் தடுமாற்றமற்ற நிலையில் இருந்ததுதான்.

19-ந் தேதி காலை, தம்பி! இரவெல்லாம் எனக்குத் தூக்கம் இல்லை—ஏதேதோ வித விதமான வதந்திகள்! நானும் விதவிதமான புத்தகங்களைச் சேகரித்து வைத்துக் கொண்டேன், உள்ளே போக......விடியற் காலையில் மதுரையிலிருந்து தலைவர் சென்னை வருகிறார். வருகிறவரிடம் கெஞ்சுவது போலவும் கொஞ்சுவது போலவும் ஓர் அறிக்கையும், வழிக்குவராவிட்டால் தாக்குவோம் என்று மிரட்டும் விதமாக மற்றோர் அறிக்கையும் சர்க்கார் வெளியிட்டு விட்டார்கள். பி. டி. ராஜன் வருவார், இந்த அறிக்கைகளைக் காரணமாகக் காட்டுவார், கடை அடைப்பு வேண்டாமென்று கூறி விடுவார், கூட்டணி உடைபடப் போகிறது! என்றெண்ணிக் குதூகலம் கொள்கிறார்கள், மாற்றார். என் செய்வேன்? நானும், காலையிலே எழுந்தேன், தலைவரைக் காணச் சென்றேன். தம்பி! அந்தக் சாட்சியை நான் என்றைக்கும் மறந்திட முடியாது. பி. டி. ராஜன் அவர்கள் முகத்தில் 'சோப்பு' போட்டுக் கொண்டிருக்கிறார், உள் அறையில்; நான் வெளி அறையில் நுழைகிறேன். எப்படியாவது காமராஜரின் அறிக்கையில் திருப்தி பெறச் செய்யவேண்டும் என்று எண்ணி அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்த நண்பரும் இருக்கிறார்—நான் சிறிதளவு பயந்து போனேன். இருவரிடமும் எனக்குச் சாதகமாக இருந்தாக வேண்டும் என்று சண்டை போடக்கூடிய அளவு உரிமை உண்டு—எனினும் அதேபோல அவர்களுக்கும், நாங்கள் சொல்லுகிறபடி கேட்டுத்தானாக வேண்டும் என்று என்னிடம் கூற உரிமை உண்டல்லவா. அதனால் பயந்து போனேன். என் மனநிலையைப் புரிந்துகொண்டாரோ என்னவோ, பி. டி ராஜன் என்னைப் பார்த்ததும், "அண்ணாதுரை! என்ன, விஷயமெல்லாம் எப்படி இருக்கிறது? எது எப்படி இருப்பினும், 20-ந் தேதிய காரியத்தில் நான் உங்களோடு இருப்பது உறுதி விட்டு விட்டுப் போய்விடுவேன் என்று மட்டும் எண்ணிக் கொள்ளாதே!" என்றார். வெற்றிப் புன்னகையுடன் நான், சமரசத் தூதுவரைப் பார்த்தேன் அவர் மட்டும் என்ன செய்வார்? அவருக்கே உரித்தானதோர், பரிவான பார்வை காட்டினார், தம்பி! உன்னை மனக்கண்ணால் கண்டேன், உறுதி கொண்டேன்.

அன்புள்ள,

26—2—1956



கடிதம் : 39

# தண்டோரா சர்க்கார்-2

★ பொது வேலை நிறுத்தமும் சர்க்காரும்—
பிப்ரவரி 20-ன் வெற்றி !

தம்பி !

"இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது என்ன வென்றால், யாரோ ஒரு விஷமி, நமது மகாராஜாவுக்கு 'வெண் குஷ்டம்' கண்டிருககிறது என்று ஓர் வதந்தியைப் பரப்பிவிட்டிருக்கிறான். நமது மக்களில் சிலர் அதை அப்படியே நம்பிவிட்டதாகத் தெரிகிறது. மகாராஜாவின் உடம்பு பத்தரை மாற்றுப் பசும்பொன் போன்றே எப்போதும் போல இருக்கிறது. 'ஸ்நானம்' செய்தானதும் சிவபக்தராம் நமது அரசர் பெருமான் தூய வெண்ணீறு அணிந்து கொள்வது வாடிக்கை, அதையே சில துஷ்டர்கள் 'வெண்குஷ்டம்' என்று கூறிவிட்டிருக்கிறார்கள். இந்த வதந்திக்கு ஒரு துளியும் ஆதாரமில்லை."

நகரெங்கும் இப்படி 'தண்டோரா' போடச் செய்தான் மந்திரி—இராஜாவின் பெயரைக் காப்பாற்ற !

அரசனுக்குக் குட்ட நோய் கண்டிருப்பதாக, யாரோ வதந்தி கிளப்பி விட்டார்கள் என்று கேள்விப்பட்ட 'மந்திரி' இராஜாவின் மரியாதையையும் புகழையும் காப்பாற்றும் பெரும் பொறுப்பு தனக்கு இருக்கிறது, அதைத் திறமையாக நிறைவேற்றி விடவேண்டும், மன்னர் பார்த்துப் பாராட்ட வேண்டும் என்று எண்ணிக்கொண்டு, இவ்விதம் 'தண்டோரா' போடச் சொன்னானும். நகரெங்கும் தண்டோரா போட்டனர். ஊர் மக்கள் அங்காடியிலும், நெடுஞ்சாலைகளிலும், முச்சந்திகளிலும் கூடினர்.

"விஷயம் தெரியுமா ?"

"எது ? மகாராஜாவுக்கு வெண் குஷ்டம் என்பதுதானே. உனக்கு இப்போதுதான் தெரியுமா ? எனக்கு நெடு நாளகவே தெரியுமே."

"அப்படியா, ஊரில் எல்லோருக்கும் இந்த விஷயம் தெரிந்துவிட்டதால்தான், 'தண்டோரா' போட்டார்கள் போலிருக்கிறது."

"ஆமாம்...தண்டோரா போட்டு ஊர் மக்கள் 'வாயை' மூடிவிடலாம் என்று எண்ணுகிருர் இந்தப் புத்திசாலி மந்திரி."

"திருநீறு பூசிக்கொள்கிருர் மன்னர், அது குஷ்டம்போல இருக்கிறது என்று 'தண்டோரா' மூலம் தெரிவிக்கிருர்களே ?"

"வேறே, எப்படித் தெரிவிப்பார்கள் ? பைத்யக்காரனுக இருக்கிருயே, மகாராஜாவுக்குக் குஷ்டம் பிடித்து விட்டிருப்பது உண்மைதான் என்ரு 'தண்டோரா' போடுவார்கள் ? திருநீறு இவர் மட்டுமா பூசிக்கொள்கிருர் ? திருநீறு பூசிக் கொள்கிறவர்களை எல்லாமா வெண் குஷ்டம் பிடித்திருக்கிறது என்று கூறுகிருேம் ?"

"இல்லாமற் பிறவாது, அள்ளாமற் குறையாது."

"குற்றமுள்ள நெஞ்சுதானே குறுகுறுக்கும். மகாராஜாவுக்கு உண்மையிலேயே குஷ்டம் இல்லை என்ருல், எவனே பைத்தியக்காரன் எதையோ உளறினன் என்று சும்மா விட்டு விட்டிருப்பார்களா, இல்லை, இல்லை, மகாராஜாவுக்குக் குஷ்டம் இல்லை என்று 'தண்டோரா' போடுவார்களா ?"

"அதுதானே, நானும் யோசிக்கிறேன். குட்டு வெளிப் பட்டுவிட்டதே என்று திகில், எங்கே ஊரிலே இதுபற்றி இழிவாகப் பேசுகிருர்களோ என்ற பயம். அதனுலே 'தண்டோரா' போடுகிருர்கள்."

"தண்டோரா போட்டு விட்டால், மக்கள் ஏமாந்து விடுவார்களா ?"

"அதெப்படி முடியும்? எனக்கு உண்மையில், தண்டோரா போட்ட பிறகுதான் ராஜாவுக்குக் குஷ்டம் என்கிற விஷயமே தெரியவந்தது."

மந்த புத்தி படைத்த மன்னர்களும், மதியற்ற மந்திரிகளும் இருந்த காலத்துக் கதை

இந்தக் காலத்திலும் இப்படி 'தண்டோரா' போடும் மந்திரி இராஜ்யம் இருக்குமென்று என்னல் நம்பமுடியவில்லை— ஆனல் செவியில் விழுறகிதே ' தண்டோரா.'

கடைகளை மூட வேண்டாம்.

கடைகளை மூடவே வேண்டாம்.

போலீஸ் பாதுகாப்பு அளிக்கிருேம்.

போலீஸ் பாதுகாப்புப் போதுமான அளவு தருகிருேம்.

கடைகளைத் திறந்து வையுங்கள்.

அர்த்தாலில் சேரவேண்டாம்.

என்றல்லவா 'தண்டோரா' போடுகிறுர்கள் ! அதற்கும் போலீஸ் பாதுகாப்பு ! !

மன்னனுக்குக் குட்டம் கிடையாது என்று தண்டோரா போட்ட பிறகே, ஊரிலே அனைவரும், மன்னனுக்குக் குட்டம் இருப்பதுதான் உண்மை என்று பேசிக் கொண்டனர்—அது போலவே, வசதிக் குறைவிலே இருந்து வந்த நம்மாலே தெரிவிக்க முடியாத இடங்களுக்கும் 'தண்டோரா' மூலம் பிப். 20 அர்த்தால் நடைபெறப் போகிறது என்ற செய்தி தெரிவிக்கப் பட்டது. அங்காடியிலும் நெடுஞ்சாலையிலும் அர்த்தாலைப் பற்றி மக்கள் பேசிக் கொள்ளலாயினர்.

அர்த்தாலாமே ?
யார் சொன்னது ?
சர்க்காரே தண்டோரா போட்டார்கள் !
அர்த்தால் நடத்தச் சொல்லியா ?
இல்லை இல்லை, அர்த்தால் கூடாது என்று.
ஏன் கூடாதாம் ?
அதைச் சொல்லவில்லை.
வேறே என்ன சொன்னுர்கள் ?
போலீஸ் பாதுகாப்புத் தருகிறோம், கடைகளைத் திறந்து வையுங்கள் என்று 'தண்டோரா' போட்டார்கள்.
அப்படியானல் நடக்கப்போகிற அர்த்தால், ரொம்பப் பிரமாதம் என்று தெரிகிறதே.
அதென்ன அப்படி ?
இல்லையானல், ஒரு சர்க்காரே தண்டோரா போடுமா ?
ஆமாமாம் !

## "தண்டோரா" இதற்குத்தான் பயன்பட்டது.

ஜனவரி 27-ல், சர்வகட்சிக்கூட்டணி, 'அர்த்தால்' பற்றிய தீர்மானம் தீட்டிற்று.

காங்கிரசும் திராவிடர் கழகமும் தவிர, பொதுமக்களிடம் தொடர்பு கொண்ட சகல கட்சிகளும், கூட்டணியில் இருந்த போதிலும், அவ்வளவு கட்சிகளும், பிரச்சார சாதனமான பெரும் பத்திரிகைகள் இல்லாமலிருந்து வருவன. எனவே பொதுக்கூட்டங்கள் மூலமாக மட்டுமே நாட்டு மக்களுக்கு பிப்-20 அர்த்தால் பற்றிய செய்தியைக் கூற முடிந்தது.

'இந்து'வுக்கும் 'மித்திர'னுக்கும், 'தினமணி'க்கும் 'எக்ஸ் பிரசு'க்கும், 'மெயி'லுக்கும் இதுவா வேலை ! !

இந்த நிலையில், 'தண்டோரா' போடச் சர்க்கார் முன் வந்தது கூட்டணியின் திட்டத்தை அனைவரும் ஓரளவுக்குத் தெரிந்து கொள்ள வாய்ப்பளித்தது.

சர்க்காரை நடத்தும் பெரிய கட்சியே, 'தண்டோரா' போட்டு, அர்த்தாலில் சேராதீர்கள், சேரவில்லை என்பதற்காக யாராவது ஏதாவது செய்து விடுவார்களோ என்று அஞ்சத் தேவையில்லை, நாங்கள் பலமான போலீஸ் பாதுகாப்புத் தருகிறோம் என்று கூறவேண்டிய நிலைமை வந்ததென்றால், 'அர்த்தால்' குறித்து, மக்களிடம் வெகுவாகச் செய்தி பரவிவிட்டது, அர்த்தாலில் நாடு ஈடுபடத் தயாராகி விட்டது, சர்க்காரே குறுக்கிட்டுத் தடுத்து நிறுத்தினாலொழிய அர்த்தால் முழு மூச்சுடன் நடைபெறும் என்பது விளங்கி விட்டது!

அந்த அளவுக்கு இந்தத் 'தண்டோரா' நமக்கு உதவியாக இருந்தது. மகிழ்ச்சி, நன்றி.

*　　　*　　　*

மகா மேதை என்று கொண்டாடப்படும் ஆச்சாரியாரின் இராஜ தந்திரக் குறைவான போக்கு கண்டு, செச்சே! என்ன இந்தக் கிழவர் இப்படி ஆழம் தெரியாமல் காலை நுழைத்து விட்டு அவதிப்படுகிறார், இவர் அவதிப்படுவதுடன் காங்கிரஸ் கட்சியின் பெயரையுமல்லவா பாழடிக்கிறார், வயதாகி விட்டதாலே, வீணான வம்பு வல்லடிக்குத் தாமாகப் போய்த் தலை கொடுத்து விடுகிறார், நான் இப்படி நடந்து கொள்ளமாட்டேன், எனக்குப் 'பக்குவம்' தெரியும், பதம் பார்த்து நடந்து கொள்வேன், அனைவரையும் அணைத்துச் செல்லுவேன், எதிர்க் கட்சிகளைத் தோழமை கொள்ளுவேன், அதற்கெல்லாம் என்னிடம் 'மந்திரம்' இருக்கிறது, யாருக்கு எதிலே விருப்பம், எதைச் சொன்னால் யாருக்கு இனிக்கும், பிடிக்கும் என்பதை அறிந்து நடந்து கொள்வேன், ஏங்கித் தவிக்கும் இடங்களாகப் பார்த்து இரண்டொன்று வீசுவேன், இப்படி நடந்து கொண்டால் எதிர்ப்பாவது முளைப்பதாவது, எல்லாம் எனக்குத் தெரியும் என்று கூறிவிட்டுக் கொலு வீற்றிருக்கப் புறப்பட்ட கோமானல்லவா காமராஜர்! அவர் பார் தம்பி! தமது பக்குவம், திறம், பண்பு ஆகியவற்றைக் காட்ட வேண்டிய நேரம் வந்ததும், எல்லாம் சொல்லுமாம் பல்லி, காடிப் பானையில் விழுமாம் துள்ளி என்ற பழமொழிப்படி, 'மகாமேதை' செய்தது போலவே, தரக் குறைவும் ரசக் குறைவுமான காரியத்தில் ஈடுபட்டார்! 'தண்டோரா' போடச் செய்தாரே!!

கலகம் குழப்பம், கல்லெறி கத்திக்குத்து, கொள்ளை கொலை, ஆகியவை எப்போது எங்கே நேரிட்டு விட்டாலும்,

தடுக்க, ஆட்களை மடக்க, பிடிக்க, தண்டிக்க, போலீஸ் எப்போதுமே இருக்கிறது, இதைத் தண்டோரா போட்டுத் தெரிவிக்க வேண்டிய அவசியமென்ன வந்தது !!

அதிலும் 'அர்த்தால்' நடத்தும்படி, மக்களைக் கேட்டுக் கொண்ட நாமெல்லாம் பெரிய கட்சியினரா, பெருந் தலைவர்களா, இல்லையே ! வசதியற்ற, வாய்ப்பு இல்லாத, கட்சிகள் !

'இதுகள்' பேச்சை, யார் கேட்கிருர்கள் என்றுதான் பொறுத்திருந்து பார்ப்போம். பி. டி ராஜனும், ம. பொ. சி. யும் சொல்வதைக் கேட்டுக்கொண்டு சுண்டல் கடையோ தண்டல் கடையோ, எதனையும் யாரும் அடைக்க மாட்டார்கள்; இதுகள் கரடியாய்க் கத்தி விட்டு, கடைசியில் முகத்தில் கரி பூசிக் கொள்ளட்டும், அப்போது நாம் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்போம், என்று இருந்திடும் தைரியம் காமராஜருக்கு ஏன் வரவில்லை !

முதல் மந்திரி வீட்டிலே மறியல் செய்தால் என்ன, குடியா முழுகிப் போய்விடும், ஒரு நாளைக்கு ஓடும் இரயிலை நிறுத்தித் தொலைத்தால் என்ன, 'பிரளயமா' வந்துவிடும், அதற்காக வேண்டி, தடியடியும் துப்பாக்கிப் பிரயோகமும் செய்து, இந்தக் கிழப் பார்ப்பனர் காரியத்தைக் கெடுத்துத் தொலைத்தாரே ! ஊரெல்லாம் கொதிக்கிறது—எல்லோரும் என்னையல்லவா கேட்கிருர்கள் ? நானல்லவா, காங்கிரசின் செல்வாக்கைக் காப்பாற்றித் தீரவேண்டி இருக்கிறது—என்றெல்லாம் கதை அளந்துகொண்டு 'சுனம்' ஆவதற்குப் பல்விளக்கிக் கொண்டிருந்ததை மறந்துவிட்டு, 'அர்த்தால்' நடத்துவதா ? இதுகளா : என் காலத்திலா ? அதை நான் பார்த்துக்கொண்டிருப்பதா ? என்று கருவிக்கொண்டு கிளம்பி, 'தண்டோரா' போட்டுவிட்டால் போதும், கடைக்காரர்கள், இவர் இருக்கும் திக்குநோக்கித் தெண்டனிட்டு விட்டு, கடைகளைத் திறந்து வைத்துக் கொள்வார்கள், என்று எண்ணினர், காமராஜர்.

சர்வ கட்சிக் கூட்டணி அர்த்தாலுக்காக எடுத்துக் காட்டிய காரணங்களை அங்காடி நண்பர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற அச்சமும், தக்க காரணம் காட்டப்படுவதால், கடைக்காரர்களும் அலுவலகத்தினரும் பிறரும், தமக்கும் நீதியிலும் நேர்மையிலும் நாட்டம் உண்டு என்பதை எடுத்துக் காட்டும் வகையில், அர்த்தாலுக்குத் தமது ஒத்துழைப்பை அளிக்க முன்வருவர் என்று புரிந்து கொண்டதால் ஏற்பட்ட பீதியும், சர்வ கட்சிக் கூட்டணி அர்த்தாலுக்காக எடுத்துக் கூறிய காரணங்களை மறுத்துரைக்க வக்கும் வழியுமில்லையே என்பதாலே ஏற்பட்ட மிரட்சியும் சேர்ந்து சர்க்காரை, 'தண்

டோரா' தூக்க வைத்தது ! இந்த விந்தையைக் கண்டவர்கள், கடை அடைப்பதுடன், கை கொட்டியும் சிரிப்பரே என்று காமராஜர் சர்க்காருக்குத் தோன்றுமற் போயிற்று ! !

* * *

'தண்டோரா' போடும்போதே தம்மிடம் போலீஸ் படைகள் ஏராளமாக உண்டு என்பதையும் ஊராருக்குக் காட்டிவிட வேண்டும் என்று எண்ணி, வகை வகையான போலீசை, நகரெங்கும் துரத்திற்று துரைத்தனம்.

சர்வகட்சிக் கூட்டணி பிப். 20 அர்த்தால் குறித்து, நகரில் வெளியிட்ட சுவரொட்டிகளை, மூவர்ணச் சினிமா விளம்பரங்கள் விழுங்கியே விட்டன ! புன்னகை பூத்த முகத்துடன் பூவையும், பொறி பறக்கும் கண்களுடன் கதாநாயகனும் பொன்னொளியும் புகழொளியும் பரப்பும் விதமாகச் சுவரெங்கும் காட்சி தந்தபோது, பிப். 20-ல் அர்த்தால் என்று நாம் வெளியிட்ட சுவரொட்டி எவ்வளவு மக்களுடைய கண்ணை ஈர்க்கும் என்று நான் கவலைப் பட்டதுண்டு. அந்தச் சுவரொட்டிகள் வெளியிடுவதற்கான பணம் தேடவே 'உன்னைப் பிடி என்னைப் பிடி' என்றாகி விட்டது !

கவச மணிந்த போலீசும், சைகிள் போலீஸ் படையினரும், போலீஸ் வான்களும் கிளம்பி நகரெங்கும் 'பவனி' வந்தன— மக்கள் பிப். 20 நடைபெறவேண்டிய அர்த்தால் பற்றி, விவரமாக அறிந்து கொள்ள இந்நிலை பேருதவி புரிந்தது.

அர்த்தாலுக்குப் பேராதரவு இருக்கிறது—சர்வ கட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்திட மக்கள் தயாராகி விட்டனர்—அர்த்தால் வேண்டாம், கூடாது என்று, துரைத்தனத்தார் சொல்வது தூசுக்குச் சமம் என்று மக்கள் தீர்மானித்து விட்டார்கள். அர்த்தால் நடைபெறப் போவது உறுதி. நிலைமையைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமே என்ற கவலை, சர்க்காரைக் குடைகிறது. எனவேதான், கவசத் தொப்பி கிளம்பி விட்டது, சைகிள் படை புறப்படுகிறது, போலீஸ் லாரிகள் பவனி வருகின்றன, என்று ஊரெங்கும் பேசிக்கொள்ளத் தலைப்பட்டார்கள் !

மன்னனுக்கு நிச்சயமாகக் 'குட்டம்' இருக்கிறது !—மக்கள் கூறிவிட்டனர்.

துரைத்தனத்துக்குத் துதி பாடவும் ஆதரவு தேடவும், பெரிய இதழ்கள் பாடுபட்டன !

அர்த்தால் வேண்டாம்—ஜனநாயக ஆட்சியில் அர்த்தாலுக்கு அவசியமே இல்லை—என்று எழுதின.

பிப். 14-ல், அர்த்தால் வேண்டாம் என்று 'தினமணி' தலையங்கம் தீட்டிற்று. பரிதாபம் என்ன என்கிருய் தம்பி, பிப். 20-ல் இத் 'தினமணி' விற்பனை செய்யப்படும் கடைகளே திறந்தில்லை ! !

வேடிக்கை ஒன்று தெரியுமா உனக்கு? அர்த்தாலாவது நடப்பதாவது, அர்த்தால் என்ருல் என்ன சாமான்யமா ? மகாத்மா நேரு போன்றவர்கள் நாட்டுக்குப் பெரிய நெருக்கடி ஏற்படுகிறபோது மட்டுமே 'கட்டளை'யிடுவார்கள், அப்போது தான் 'அர்த்தால்' நடைபெறும், கண்டவர்கள், கண்ட கண்ட காரணம் காட்டிக் கடை அடைக்கச் சொன்னுல், நடக்குமா ! என்று கேலி பேசிய ஏடுகளை, பிப். 20-ல் எப்படி வெளியே அனுப்பி வைத்தார்கள் தெரியுமா ? 19-ந் தேதியே, 'இந்து', 'எக்ஸ்பிரஸ்' ஆகிய இரு இதழ்களுக்காகவும் துண்டு அறிக்கைகள் வெளிவந்தன.

பிப். 20-ந் தேதிய 'இந்து' விடியற் காலை 4-30-க்கே, தயாராகிறது. ஏஜண்டுகள், அங்கேயே வந்து பெற்றுக் கொள்ளவும்.

'இந்து' இதழை, நகரில் பல்வேறு இடங்களுக்கும் கொண்டு வந்து தருவதற்கில்லை—அன்று அர்த்தால். ஆகவே கடைகள் திறந்திருக்காது—விடிந்து 6, 7, ஆகிவிட்டாலும், இங்கு வந்து இதழ்களை வாங்கிக் கொண்டு போவதிலே தொல்லை இருக்கும். எனவே, வெள்ளி முளைக்கு முன், 4-30-க்கே, ஓசைப்படாமல், ஒருவருக்கும் தெரியாமல், இங்கேயே வந்து, இதழ்களை எடுத்துக் கொண்டு போய்விடுங்கள்—என்று அறிக்கை தெரிவிக்கிறது.

கண்ணே ! கதிரவன் ஒளிக்கீறல் தெரிகிறது ! இனியும் நான் இங்கு இருப்பது, ஆபத்து ! சென்று விடுகிறேன் !-என்று கூறிவிட்டு யாரும் காணுவண்ணம் மறைந்து மறைந்து செல்வான் காதலன் என்று கதைகளில் படிக்கிறோமல்லவா ! 'இந்து'—விடியுமுன் வருக ! என்று ஏஜண்டுகளை, முன்னுளே அறிக்கை மூலம் அழைத்தது. எக்ஸ்பிரசோ, 3-30-க்கே வந்து, விடுக என்று ஏஜண்டுகளை அழைத்தது, அறிக்கை வெளியிட்டு. பிப். 20 அர்த்தால் வெற்றியுடன் நடைபெறப் போகிறது என்பது. 'இந்து', 'எக்ஸ்பிரஸ்' ஆகிய இதழ்களுக்கு முன்கூட்டியே தெரிந்து விட்டன. ஆனுல் 'மிடுக்கும் முடுக்கும்' குறையலாமா ! ! அதனுல் அர்த்தாலை அலட்சியப்படுத்துங்கள் என்று மக்களுக்கு மட்டும் எடுத்துக்கூறி வந்தன.

* * *

மொழிவழி அரசு பிரச்சினை சம்பந்தமாக, என்ன செய்வது என்பது தெரியாமல், சர்வ கட்சிக் கூட்டணியினர் திண்டாடிப்போய், எதையாவது செய்வோம் என்று இந்த அர்த்தாவில் ஈடுபட்டது போலவும், அவர்களுக்குச் சிறிதளவு தெளிவைத் தன் மேதா விலாசத்திலிருந்து எடுத்தளித்தால் போதும் என்று எண்ணிக் கொண்டும் 'தினமணி' எழுதிற்று.

"தமிழர் சம்பந்தப்பட்ட வரையில் தமது கேகரிக்கைகளைத் தெரியப்படுத்துவதற்கு ஜனநாயக வசதிகள் நிறைய இருக்கின்றன. கூட்டம் போடுவது, விவாதம் நடத்துவது, தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்புவது முதலியவைகள் தாம் சகஜமாகப் பின்பற்ற வேண்டிய முறைகள்."

பார் தம்பி, பார்-அட்-லா படித்து அமைச்சர் வேலை பார்ப்பதும் பி. டி. ராஜனுக்கு, "முறை" தெரியவில்லை!

தமிழர் நலனில் அக்கறை காட்டியதற்காகவே, வேட்டையாடி வாட்டப்படும், இன்னமும் காங்கிரசிடம் கனிவு காட்டுபவரான, ம. பொ. சி.க்குத் தெரியவில்லை!

மற்றும் ஜீவா, அந்தோணிப்பிள்ளை, சின்னத்துரை, இவர்களுக்கெல்லாம், கோரிக்கைகளை எப்படித் தெரியப்படுத்துவது என்ற சாதாரண விஷயம் தெரியவில்லை.

இதய நாதத்தையும் இயற்கை எழிலையும், தமிழ்ப்பண்பையும் கலைச் செறிவினையும் கண்டறிந்து கவிதை வடிவாக்கித் தரும் பாரதிதாசனுக்கு இது தெரியவில்லை.

'தினமணி'க்குத் தெரிகிறது—தெரிந்து, இவர்களுக்கெல்லாம் அருளுகிறது—கனியிருக்கக் காய் கொள்கிறீரே, கருத்தற்றோரே! கருத்தற்றோரே! கோரிக்கையைத் தெரியப்படுத்தும் வழி தெரியாமல் திண்டாடித் தவித்துத் திறந்திருக்கும் கடைகளை மூடச் சொல்கிறீர்களே, தெளிவற்றோரே! என்னைக் கேட்கக் கூடாதா! சரி, இதோ கூறுவேன் கேண்மின் கோரிக்கைகளைத் தெரியப்படுத்த,

கூட்டம் போடலாம்
விவாதம் நடத்தலாம்
தீர்மானம் நிறைவேற்றலாம்
தீர்மானங்களை அனுப்பலாம்.
இவை போதும்—என்கிறது.

அன்றிரவு ஆசிரியர் ஆனந்தமாகத் தூங்கி இருப்பார் என்று எண்ணுகிறேன். நாட்டுக்கு வர இருக்கும் ஒரு நெருக்கடியை ஒரு தலையங்க மூலம் தடுத்து விட்டோம், இதற்காக, 'பத்மவிபூஷண்' நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்திருப்பார், தம்பி, கனவிலே

கலாராணி வைஜயந்தி நாட்டியம் கண்டிருப்பார்—விருந்து வைபவம் பட்டமளிப்புக்காக நடைபெறுமல்லவா! அரிய பெரிய உண்மையை, அந்தரத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் சர்வ கட்சிக் கூட்டணியினருக்கு அளித்துவிட்டோம், இனி அர்த்தால் இராது என்று எண்ணிப் பூரித்திருப்பார். ஒரு சமயம் இவ்வளவு அரிய பேருண்மையைக் கேவலம் ஒரு அணுவுக்கு விற்றுவிட்டோமே என்றெண்ணி வருத்தப்பட்டாரோ என்னவோ, அப்படியும் இருக்கலாமல்லவா! எப்படியோ ஒன்று அர்த்தாலே நிறுத்திவிட, அவருக்குத் தெரிந்த காரணத்தைக் காட்டினுர்.

ஏன், இந்த ஜனநாயக முறை இருக்க, சர்வ கட்சிக் கூட்டணி 'அர்த்தால்' திட்டமிட்டது? கூட்டம் போடலாம், தீர்மானம் நிறைவேற்றலாம், அவைகளை அனுப்பி வைக்கலாம் என்றல்லவா 'தினமணி' கூறுகிறது. இவைகளைச் செய்யாமல் வேலைக்குச் செல்லாதீர், கடைகளைத் திறவாதீர் என்று ஏன் சர்வ கட்சிக் கூட்டணி கூறிற்று?

ஜனநாயக முறைகளில் நாட்டமற்றதாலல்ல; திறனற்றுமல்ல; அந்த முறைகள் யாவும் செய்து பார்த்தாகிவிட்டது. யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காகி விட்டது! ஆமாம், தம்பி! ஒரு பிரபல தமிழ் இதழாசிரியரின் 'வாக்கை' எடுத்துக் கையாண்டிருக்கிறேன். அவர்தான், தமிழ் மக்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளைப் பல வழிகளிலும் எடுத்துக் கூறினர், மத்திய சர்க்காரிடம்; எனினும் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது என்றுர்.

"ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் சிபாரிசுகள் மீது இந்திய சர்க்கார் அறிவித்துள்ள முடிவுகள், தமிழர் சம்பந்தப்பட்டவரை, அநீதியாகவே இருக்கின்றன. அடுத்தாற்போல் உள்ள ராஜ்யங்களில் தமிழர் பெரும்பாலோராயுள்ள பகுதிகள் (பீர்மேடு, தேவிகுளம் உட்பட) சென்னை ராஜ்யத்தில் சேரவேண்டும் என்ற நியாயமான கோரிக்கையைத் தமிழகம் ஒரு குரலில் கேட்டது இதை இந்திய சர்க்கார் **அடியோடு நிராகரித்துவிட்டனர்.** எல்லாக் கட்சிகளும் இதை வற்புறுத்தின. அரசியலுக்குப் புறம்பாகவுள்ள பல ஸ்தாபனங்களும் ஒருமித்து இதைக் கேட்டன சட்ட சபையின் இரு மன்றங்களும் இதை மிகப் பெரிய மெஜாரிடியுடன் கோரின. அநேகமாக எல்லா நகர சபைகளும் ஜில்லா போர்டுகளும் இந்தக் கோரிக்கையை ஆதரித்துத் தீர்மானங்களை நிறைவேற்றின. மேலும் ராஜ்ய சர்க்காரும் போதிய புள்ளி விவரங்களுடனும், ஆதாரங்களுடனும், நிதானம் தவருமல், இந்தக் கோரிக்கைக்கு இணங்குமாறு இந்திய சர்க்காரைக் கேட்டனர். இராஜ்ய மந்

திரிகளும் பல்வேறு ஸ்தாபனத்தினரும் டில்லி சென்று பன் முறை நியாயம் வழங்குமாறு வேண்டினர். இம்மாதிரி தமிழகம் ஒருமித்துக் கேட்டும் பயனில்லை.

எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது."

தமிழர், ஜனநாயக முறைகளைக் கையாண்டது வீணுகிப் போனது, இவ்விதம் விளக்கப்படுகிறது. இந்த 'விவேகி' யார் என்கிறீர்களா? அர்த்தால் எதற்கு? கூட்டம் போடலாமே, தீர்மானம் நிறைவேற்றலாமே, ஜனநாயக முறை எவ்வளவோ இருக்கிறதே, அவைகளை விட்டு விட்டு, அர்த்தால் ஏன் ஏற்பாடு செய்கிறுர்கள் என்று நமக்கெல்லாம், நாட்டுக் கெல்லாம் 'புத்தி' கூறினுரே, அதே 'விவேகி' தான், இப்படியும் எழுதினுர் இதைக் கூறினவரும் 'தினமணி' ஆசிரியர் தான்!

ஜனநாயக முறைகளைத் தமிழர்கள் கையாண்டனர்; கூட்டம் போட்டனர்; தீர்மானம் நிறைவேற்றினர்; மேலிடம் அனுப்பி வைத்தனர்.

தமிழரின் ஆட்சியாளர்களாக அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சியும், இதே ஜனநாயக முறைகளைச் செய்தது.

கக்கனே, எடுத்தார் பேனுவை, எழுதினுர் காகிதத்தில், விடுத்தார் அறிக்கை, விடமாட்டோம் தேவிகுளம் பீர் மேட்டை என்று. 'மணி மகுடம் தரித்துக் கொண்டுள்ள ஏழைகளின் பாதுகாவலர்' இருக்கிருரே காமராஜர் ('விடுதலை' தரும் விருது) அவரும் நாட்டுக்கு வாக்களித்தார், நானிருக்கிறேன்—கவனித்துக் கொள்கிறேன் என்று. இந்த ஜனநாயக முறை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று! பிறகே, கூட்டணி அர்த்தால் நடத்தத் திட்டமிட்டது!

* * * *

தமிழரின் முகத்தில் பொதுவாகவும், காங்கிரசார் முகத்தில் குறிப்பாகவும், காமராஜர் முகத்தில் சிறப்பாகவும், டில்லி கரிபூசிய 'கண்ணருவி'க் காட்சியைக் கண்ட பிறகுதான், கூட்டணி டில்லியின் போக்கையும் நோக்கையும் மாற்றக் கூடிய வேறு முறை தேடலாயிற்று; காந்தியார் அருளிய அறிவுரை நினைவிற்கு வந்தது. எனவே 'அர்த்தால்' நடத்தத் தீர்மானித்தது.

செவிடன் காதிலே மேலும் சங்கு ஊதுங்கள் என்கிறது 'தினமணி'. மக்கள், மதிநுட்பமுள்ளவர்கள்; அவர்கள் ஆசிரியர்களாக இல்லாதிருக்கலாம், அங்காடியிலோ, வேறு ஏதேனும் அலுவலிலோ ஈடுபட்டிருக்கக்கூடும், எனினும் அவர்களுக்குப் புரட்டு எது, புல்லர் யார், என்பனவற்றைக் கண்டறியும் திறன் இருக்

கிறது; சிற்சில சமயங்களிலே இத்திறன் பழுதுபட்டுவிடுகிறது. எனினும் அடியோடு பட்டுப் போய்விடவில்லே. இந்த உண்மையை உணராமல், எதைக் கூறினுலும் நம்பிவிடும் ஏமாளிகள் இந்த மக்கள் என்று எண்ணிக் கொண்டு, இறுமாந்த நிலேயில் இருப்பதால்தான் ஜனவரி 18-ல் தமிழரின் ஜனநாயக முயற்சி யாவும் செவிடன் காதுக்குச் சங்கு போலாகிவிட்டது, என்று இடித்துரைத்தோமே, அதற்கான காரணமும் விளக்கிக் காட்டினேமே, அதைப் படித்த அதே மக்களிடம், பிப்ரவரியில் அர்த்தால் கூடாது, ஜனநாயக முறைகள் உள்ளன என்று கூறுகிருேமே, என்ன எண்ணிக் கொள்ளுவார்கள் மக்கள், வேளேக்கொரு பேச்சா ? நாளேக்கு ஒரு நோக்கமா ? என்று கேலி பேச மாட்டார்களா ? நமது அறிவுடைமை பற்றியே கூடச் சந்தேகிக்கமாட்டார்களா ? என்பது பற்றி எல்லாம் துளியும் எண்ணிப் பார்க்காமலேயே, 'தினமணி' எழுதிற்று—எனவே, என்ன மதிப்பு தரவேண்டுமோ அதைத் தந்தார்கள் மக்கள்—பொட்டலத்துக்கு, ஏற்ற காகிதமாகக் கொண்டனர்; தமது போக்குக்கு வழிகாட்டும் ஆசானுகத் 'தினமணி'யைக் கொள்ளவில்லே. எனவேதான், அர்த்தாலே மக்கள், வெற்றிகரமாக்கினர். தம்பி, நம்மிடம் வெறுப்புணர்ச்சிகொண்ட பெரியவர்கள், நடமாடும் நாசம்—வலேவீசும் வன்கணுளர்—வயிற்றுப் பிழைப்புக்காகவே பொதுவாழ்வில் இருப்போர் — வஞ்சகர்—சூதகர்கள் என்றெல்லாம் நம்மைப்பற்றி எண்ணிக் கொண்டும் கூறிக் கொண்டும் வருபவர்கள், நாம் ஈடுபட்ட காரணத்தாலேயே சர்வ கட்சிக் கூட்டணியையே அலட்சியப்படுத்தவும், எதிர்த்துப் பேசவும், முற்பட்டனர்—காங்கிரஸ் ஏடுகளெல்லாம்கூட, ஒரே அடியாக உண்மையை எப்படி மறைப்பது என்று திகைத்தது கண்டு, இது என்ன கஷ்டம் ? என்னேப் பாருங்கள், முழுப் பூசிணியைச் சோற்றில் மறைக்கிறேன் என்று கூறுவது போல, அர்த்தால் வெற்றி பற்றி இருட்டடிப்புச் செய்து காட்டவும் முன் வந்ததுடன் இப்போது, அர்த்தாலேக் காலித்தனம் என்றும், போலித்தனம் என்றும், தேர்தல் சூது என்றும், தெளிவிலாதாரை ஏய்த்துவிட்டனர் என்றும் ஏதேதோ பேசுகின்றனர். இதுவரை தமிழகம் கண்டிராத அளவு வெற்றிகரமான அர்த்தால் நடைபெற்றது—கண்டோர் வியந்தனர்—பிறர் பற்றி என்ன, தம்பி ! நான் கண்ட காட்சி என்னேத் திடுக்கிட வைத்தது.

20-ந் தேதி பகல் பதினெரு மணி இருக்கும்—நான் வெளியே எந்த அளவுக்கு வெற்றியோ என்ற கவலேயுடன், மூலேயில் முடங்கிக் கிடந்தேன்—நண்பர் W. K. தேவராசனுர் மோட்டார் கிடங்கில் ! தமிழரசுக் கழகக் கொடியும், தி. மு.க. கொடியும் கட்டப்பட்டிருந்த ஒரு மோட்டார் வான் வந்து

நின்றது—பழந் தமிழ்ப் போர் வீரர் போன்ற உடலும் பரிவும் பண்பும் ததும்பும் உள்ளமும் படைத்த என் நண்பர் உமாபதி—தமிழரசுக் கழகம்—அண்ணு! என்று கூறிக்கொண்டே கீழே இறங்கினர். அவர் முகத்திலே வெற்றிக்களை கண்டேன்—எளிதில் களிப்புப் பெருத இயல்பினரல்லவா நமது பொதுச் செயலாளர், அவரும் வெற்றி! வெற்றி! என்று கூறியபடி உடன் வந்தார்—எதிர்பார்த்ததைவிட அதிகம், ஆமாம், பரிபூரணக் கடை அடைப்பு என்ருர் ம. பொ. சி. வந்து பாருங்களேன் அந்தக் காட்சியைத்தான் என்றழைத்தார் தோழர் விநாயகம்; அண்ணுவுக்கு எப்போதும் இப்படித் தான் குழப்பம், சந்தேகம் என்று கேலி பேசினர், நடராசன்.

கடைகளெல்லாம்...?

எல்லாக் கடைகளும்!

மவுண்ட் ரோடு?

ஒரு கடை கிடையாது!

சைஞ பஜார்?

சம்பூரண வெற்றி!

மூர் மார்க்கெட்?

திறக்கவே இல்லே!

திருவல்லிக்கேணி?

நிசப்தம்!

மயிலாப்பூர்?

ஒரு கடை இல்லே!

தியாகராயநகர்?

வந்து பாருங்கள், வெற்றியை!

கலகம்? குழப்பம்?

எல்லாம் காமராஜர் மனதோடு சரி! ஊரில் எங்கும் உணர்ச்சி மயம்! உற்சாக மயம்!

ஆலேகளில் நிலேமை?

அந்தோணிப் பிள்ளேயின் அபாரமான சாதனேயை வந்து பாரப்பா, ஆச்சரியப்படுவாய்!

தீப்பெட்டித் தொழிற்சாலே?.

மூடிக் கிடக்கிறது!

கல்லூரிகள்?

திறந்துள்ளன—மாணவர் அணிவகுப்பு நெடுஞ்சாலேகளில்!

கொத்தவால் சாவடி?

கீரை விற்கும் கிழவிகூட அங்கு இல்லே!

அப்படியானுல்......?

அப்படியாவது இப்படியாவது' நம்மால் இவ்வளவு சாதிக்க முடியும் என்று நேற்று யாராவது கூறியிருந்தாலும் நம்ப மாட்டோம். இப்போது பார்த்தாலல்லவா, தமிழ் மக்களின் பேரார்வம் விளக்கமாகத் தெரிகிறது. காட்சியைக் காண்போம், பட்டபாடு வீண்போகவில்லே, ஆட்சியாளர் மிரட்டலுக்கு நாடு செவிசாய்க்கவில்லே. முழு வெற்றி ! மகத்தான வெற்றி !!

தம்பி ! பல ஆண்டுகளாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள நான், 'புளகாங்கிதம்' கொள்ளத் தக்க பல சம்பவங்களேக் கண்டிருக்கிறேன். ஆனுல், அன்று நான் நண்பர்களுடன், சென்னேயின் பல பகுதிகளிலும் சுற்றிப் பார்க்கும்போது, என்னவென்று சொல்வேன், என் மனம் களிநடமாடிற்று, பாதை ஓரத்தில் ஆங்காங்கு நின்றுகொண்டு, அமைதியைக் காத்து நின்ற வீர இளேஞர்கள், வெற்றிப் புன்னகையுடன் இருந்த காட்சியைக் கண்டேன், கண்களில் நீர் துளிர்த்தது !! இதோ தமிழகம் ! தன்மானத்தை இழக்கத் துளியும் சம்மதியோம், உரிமைக்கான போரிடத் தயங்கோம் ! என்று உலகுக்கு அறிவிக்கும் தமிழகம் ! மூடிக் கிடக்கும் கடைகள், வெறிச்சென்று கிடக்கும் அங்காடிச் சாலேகள், பள்ளிகளில் ஆசிரியர்கள், வெளியில் மாணவர்கள், சர்க்கார் நடத்தும் மோட்டார் பஸ்கள், ஆள்தேடும் காட்சி, மக்கள் கூட்டம் கூட்டமாக நடந்து செல்லும் காட்சி, ஆலேகளில் ஆள் இல்லே, அரவம் இல்லே, எங்கும் வெற்றி, எவர் முகமும் வடிவழகுடன்; அர்த்தால் கூடாது என்று முன்பு ஆர்ப்பரித்தோர் கூட, ஊருடன் ஒத்துப் போயினர், தம்பி ! அப்படிப்பட்ட மகத்தான வெற்றியை நான் கண்டதில்லே !!

எவ்வளவு ஏளனங்களேத் தாங்கிக் கொண்டோம்—எத்துணே இடர்ப்பாடுகள்—என்னென்ன வகையான பழிச் சொற்கள் ! மக்களேத் திரட்டி, மகத்தான சக்தியாக்கிடும் 'மாமந்திரம்' தெரிந்த பெரியார், நமக்கு ஆதரவாக இல்லே ஏதோ நடக்கட்டும், எப்படியோ தொலேயட்டும் என்றும் இருந்துவிடவில்லே. ஏதாவதொரு காரணத்துக்காகக் காமராஜர் கூடச் சும்மா விட்டுவிடுவார் போலிருக்கிறது, இவரோ விடமாட்டேனென்கிருர், வெளுத்து வாங்குகிருர், பத்திரிகையிலும் மேடையிலும், "இது கடைந்தெடுத்த காலித்தனம்; கண்ணீர்த் துளிகளின் கயவாளித்தனம்; அர்த்தால் தேவையில்லே" என்றெல்லாம். அவருடைய எதிர்ப்பு ஒரு புறம்—அவருடைய ஊசிகளும் முட்களும் மற்ருேர்புறம்—காமராஜர் சர்க்காரின் தண்டோரா !—காங்கிரஸ் கமிட்டிகளின் மறுப்பு வெளியீடுகள்—ஒன்ரு, இரண்டா, எதிர்ப்புகள், இவ்வளவுக்குமிடையில்

நேற்று வரை முரண்பட்டுக் கிடந்தவர்கள் அமைத்துள்ள சர்வ கட்சிக் கூட்டணியிலே, குழப்பமும் பிளவும் ஏற்படுத்தும் முயற்சிகள் வேறு !

"ஹலோ ! ஹலோ !..."

"யாரு...நீங்களா ?"

"ஆமாம். நான்தான்......வணக்கம், வணக்கம்......... ஆமாம், இரண்டு நாளாகச் சென்னையில்தான்......"

"சரி, என்னய்யா நடுராத்திரியில்......"

"நடு நிசிதான், ஆனால் என்ன செய்வது......எப்படியாது இந்த அர்த்தாலை..."

"நிறுத்துவதா ? என்னய்யா இது வேடிக்கை பேசுகிறீர் ?"

"அவர் ரொம்பச் சங்கடப்படுகிறார்."

"அவருக்கு என்ன சங்கடம் இதிலே. அர்த்தால் ஏற்பாடு செய்கிற எங்களுக்கல்லவா சங்கடம், சஞ்சலம் எல்லாம்."

"என்னிடம் நம்பிக்கை வைக்கக் கூடாதா ? நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளமாட்டேனா ? என்றெல்லாம் ரொம்பச் சொல்கிறார். தங்களிடம் நேரிலேயே பேச வேண்டுமாம்..."

"என்னிடம் பேச, என்ன இருக்கிறது. இது கூட்டணித் திட்டமய்யா—ஒருவர் தீர்மானிக்கும் விஷயமல்ல."

"டெலிபோனில் விவரம் பேச முடியவில்லை. நீங்கள் உடனே புறப்பட்டுச் சென்னை வந்தால் நல்லது, ரொம்பவும் விரும்புகிறார்."

"வருவதற்கு இயலாதே! 19-ந் தேதி காலைதான் சென்னை வருகிறேன்."

"ஐயோ ! 19-ந் தேதி வந்து என்ன செய்வது ? உடனே பிளேனில் புறப்பட்டுவரச் சொல்கிறார்."

"முடியாத காரியம். மேலும் நான் வந்து செய்வதற்கு ஒன்றும் இல்லை. ஏதாவது பேச வேண்டுமானால், அண்ணாதுரையிடம் பேசுங்கள்."

"அந்த ஆள் இணங்கிவர மாட்டானே..."

"நான் மட்டும் என்னவாம் ! என்னய்யா இது ! அர்த்தால் நிச்சயம் நடைபெறும். அது அமைதியுடன் நடத்தப்பட நான் சர்க்காருடன் ஒத்துழைக்கத்தான் விரும்புவேன். அதுவே தவிர, அர்த்தாலைக் கைவிட முடியாது. அது தெளிவாகி விடுவது நல்லது..."

சென்னைக்கும் மதுரைக்கும் நடுநிசியில் இப்படி "டெலி போன்"—கோவைக்கும் 'சேதி'—தூத்துக்குடிக்குத் "தூது" —எங்கெங்கு சமரசவாதிகள்—சந்தர்ப்பவாதிகள்—கிடைப் பார்களோ அங்கெல்லாம், தூது பேசுவதும், பேரம் பேசுவதும் மும்முரமாக நடைபெறுகிறது. நீ தம்பி, இவைபற்றி ஏது மறியாமல், 'அர்த்தால்' வெற்றிகரமாக நடைபெறுவதற்கான காரியத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்ட வண்ணமிருக்கிறாய். நாங்கள் இங்கே, எங்கே சதிச் சுழலில் சிக்கி, இந்த முயற்சி சுக்கு நூறாகி விடுகிறதோ, யார், எத்தகைய பிளவு உண்டாக்கும் பேதத்தைத் தூவுகின்றார்களோ, என்று பயந்தபடி இருந்து வந்தோம்.

"சர்வ கட்சிக் கூட்டணி என்ற பெயரால், பிப். 20-இல் நடைபெற இருக்கும் காலித்தனத்தைக் கண்டித்துப் பெரியார் பேசப் போகிறார்—அனைவரும் வருக !"— என்று சிதம்பரம் தெருக்களில், ௭-ந் தேதி பகலில், பட்டப் படிப்பில் ஈடுபட்டிருக்கும் வாலிபரொருவர், ஒலிபரப்புகிறார் !! எங்கெங்கு, வாய்ப்புக் கிடைக்கிறதோ அங்கெல்லாம், காமராஜர் கேள்விப் பட்டதும், முதுகில் தட்டிக்கொடுத்து, 'சபாஷ்' கூறிப் பாராட்டத் தக்க வகையில், பெரிய இடத்தவர்கள் சீரிய காரியத்தில் ஈடுபட்டனர், பாவம் சிரமத்துக்கு ஏற்ற பலன் கிட்டவில்லை; நாடு, அர்த்தாலை வெற்றிகரமாக நடத்திக் காட்டிற்று.

கடை அடைப்புக்கூட ஓரளவுக்கு நடைபெற்றுவிடும்; ஆனால், இவர்களால் அர்த்தால் நிகழ்ச்சியில் அசம்பாவிதம் நேரிடாதபடி, கலாம் விளையாதபடி தடுத்திட எங்ஙனம் முடியும், வீறுகொண்டெழும் மக்களிடையே திடீரென்று கோபப் புயல் கிளம்பிவிட்டால், விபரீதம் நேரிட்டு விடுமே, எதிர்ப்பட்டோரைத் தாக்குவது, எந்த நாசம் பற்றியும் கவலை கொள்ளாத போக்கு, சாவு பற்றிய பயமற்ற துணிவு, இவை கிளம்பி விடுமே, இவை எல்லாவற்றையும்விட, வீடு வேகிற போது கிடைத்தவரையில் பறிப்போம் என்று காலிகள் கிளம்பிவிடக் கூடுமே, அவர்களை எல்லாம் எப்படித் தடுக்க முடியும், இவர்களுக்கு ஏது அந்த ஆற்றல், இவர்கள் என்ன போர் பல கண்டவர்களா ? இவர்கள் கெஞ்சிக் கூத்தாடினாலும், தொண்டை உலர உலரக் கூவினாலும், மக்களைக் கட்டுப் படுத்த முடியுமா, அர்த்தால் என்றால் சாமான்யமா, என்னென்ன நடைபெறப் போகிறதோ யார் கண்டார்கள், பம்பாயில் பார்த்தோமல்லவா, கொலையும் கொள்ளையும், கற்பழித்தலும் கத்திக்குத்தும், பயங்கரமான பலாத்காரமல்லவா தலை விரித்தாடிற்று, இங்கும் அதுதான். பிறகுதான் தெரியப் போகிறது இந்தப் 'பச்சுக் காண'க்களையும், கத்துக் குட்டிகளையும் நம்பினால் என்னென்ன நாசம் விளையும் என்ற பேருண்மை—இப்போது, என்னவோ,

இதுகள் தூண்டிவிடுவது கேட்டு ஆட்டம் போடுகிருர்கள், பிப். 20-இல் பல இடங்களில் பிணக்காடு பார்க்கப் போகிருர் கள், கொலையும் கொள்ளையும் கோரத் தாண்டவமாடப் போகின்றன, பெண்டு பிள்ளைகள் குய்யோ முறையோ என்று கதறிப் பதறி ஓடப்போகிருர்கள்—அப்போதல்லவா 'இதுகள்' முகத்திலே காரித் துப்பப் போகிருர்கள் நாட்டு மக்கள்—என்று நம்முடன் சேர மறுத்து, அதனுலேயே தமக்குத் தாமே வேதனையை வருவித்துக் கொண்ட பெரியவர்கள், பீதி மூட்டினர்.

எனக்கும் தம்பி, பயம்தான். திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் ஈடுபடும் கிளர்ச்சியானுல், கட்டு மீறி யாரும் காரியமாற்ற மாட்டார்கள்; எவரேனும் அது போலானுல், அவர்களிடம் மன்ருடும் உரிமை எனக்கு உண்டு, ஒத்துழைக் கும் பண்பு நமது கழகத் தோழர்களிடம் நிரம்ப உண்டு என் பது அறிவேன்—எனவே கலாம் எழாதபடி தடுத்திட முடியும் என்று மார்தட்டிக் கூறுவேன்.

அது போன்றே, இப்பக்கம் செல்க ! அப்பக்கம் செல்லற்க! என்று கூறிடவும், கட்டுக்குக் கொண்டு வரவும் முடியும் நண்பர் ம. பொ. சி. யால், தமிழரசுக் கழகம் மட்டும் கிளர்ச்சி நடத்துவதாக இருந்தால்.


அது போன்றே ஒவ்வொரு கட்சிக்கும்.

ஆனுல், இதுவோ சர்வ கட்சிக் கூட்டணி! பல்வேறு அணி வகுப்புகள் ! ஒவ்வோர் அணிவகுப்புக்கும் பழக்கமாகியுள்ள முறைகள் உண்டு ! எப்படி, இந்தக் கூட்டணியைக் கட்டுப் படுத்துவது ? யாருடைய சொல்லுக்கு எந்த அளவு மதிப்புக் கிடைக்குமோ ? யாரால் கலாம் விளைந்தது என்பதைச் சுலபத்தில் கண்டுபிடிக்கமுடியாதே ! இந்நிலையில் கூட்டணிக் கிளர்ச்சி, மூட்டிவிடுபவர்களின் சாகசத்துக்கு இரையாகி, கட்டுக்கு மீறிச் சென்று விட்டால், என்ன செய்வது, சென்னை சென்னைதான், பம்பாயல்ல என்று மார்தட்டித் தட்டிப் பேசி விட்டோமே, அந்த நற்பெயர் கெடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமே, எப்படி ? எப்படி ? என்று எண்ணி எண்ணி நான் பெருங்குழப்பமுற்றுக் கிடந்தேன். தம்பி ! ஒரு தூய கொள் கைக்காக மக்கள் சக்தி திரண்டெழுந்தால் அந்தக் கொள் கைக்காகப் பாடுபடும் யாருடைய சொல்லுக்கும் கட்டுப்படு வர்—பெருந் தலைவர்களுக்கு மட்டுமே கட்டுப்படுவோம், இவர்கள் சொல்வதென்ன, நாங்கள் கேட்பதென்ன என்று இருந்து விடமாட்டோம், எமக்கு இலட்சியம் முக்கியமே தவிர, தலைவரின் தோற்றம்கூட அல்ல. என்று கூறுவது போல மக்கள் நடந்து கொண்டனர். எப்போதும் நான் இதனை உணர்ந்து உவகை கொள்வேன்.

பிப். 20, இலட்சம் மக்கள் திரண்டெழுந்து நடத்திய மகத்தான ஊர்வலம், எனக்கு மக்களிடம் ஏற்கெனவே உள்ள நம்பிக்கையை மேலும் அதிகமாக்கிற்று. ஆனால் ஒன்று. தம்பி, நான் ‘குட்டை’யனல்லவா ? அது பற்றி எனக்கு இதற்குமுன் எப்பேதும் வருத்தம் இருந்ததில்லை. பிப். 20-இல், அடடா ! இப்படிக் ‘குள்ளமாக’ இருக்கிறோமே, ‘உயரமாக’ இல்லாமற் போய் விட்டோமே, என்று நான் உள்ளபடியே வருத்தப்பட்டேன். ஏன் என்கிறாயா ? கொஞ்சம் ஆவலை அடக்கிக் கொள், தம்பி ! அடிகள், இடம் இல்லை என்கிறார், அடுத்த கிழமை கூறுகிறேன்.

அன்புள்ள,

*4—3—1956*



கடிதம் : 40

# தண்டோரா சர்க்கார்-3

★ கூட்டணித் தலைவர்களும் ஊர்வலமும்—காமராஜர் ஆட்சி—கழகத்தை ஒழிப்பவர்.

தம்பி,

ஏன் நான் உயரமாக இருந்திருக்கக் கூடாது என்ற எண்ணம் எனக்கு பிப். 20 இல் ஏற்பட்டதென்று சென்ற கிழமை கூறினேனல்லவா ! காரணம் என்ன தெரியுமா ? அன்று சென்னையில், அதுநாள் வரையில் கண்டிராத மகத்தானதோர் ஊர்வலம் நடைபெற்றது, அதிலே கலந்து கொள்ளும் அவசியம் எனக்கு வந்துற்றது ! எதிரே என்ன நிலை, பின்புறம் என்ன நிலைமை, பக்கவாட்டங்களிலே எப்படி இருக்கிறது என்பவைகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள ஆவல் கொண்டேன். ஆனால், நான் குள்ளமாயிற்றே—என்னால் நிலைமைகளைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இன்னும் சிறிதளவு உயரமாக இருந்தால், ஊர்வலத்தின் போக்கையும் சரியாகத் தெரிந்துகொள்ள முடியும், நிலைமைக்குத் தக்கபடி, தோழர்களை நடத்திச் செல்லவும் முடியும் என்று எண்ணினேன். எண்ணி என்ன பயன் ? வருத்தப்பட்டேன் !!

ஊர்வலம் என்றாலே எனக்குப் பிடிக்காது என்பதையும், நமது கழகத் தோழர்கள் ஆர்வத்துடன் அவ்வப்போது நடத்தும் உற்சாகமான ஊர்வலத்தின்போது, என்னைத் தேடிப் பிடித்திழுத்து வந்தாலும், நான் ஓடி ஒளிந்து கொள்பவன் என்பதும் உனக்குத் தெரியும். அப்படிப்பட்ட சுபாவமுள்ள நான், அன்றைய ஊர்வலத்தை நடத்திச் செல்பவர்களில் ஒருவனாக வேண்டி நேரிட்டது.

ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கினார் பி. டி. ராஜன், உடனிருந்து நடத்திச் சென்றார், ம. பொ. சி.

நமது பொதுச் செயலாளர் ஊர்வலத்தில், படைத் தலைவர், தமது படை வரிசைகளை ஒழுங்குற நடத்திச் செல்லும் பான்மையில் சென்றார்.

நானோ, தம்பி! திகிலும் திகைப்பும் கொண்ட நிலையில், இவ்வளவு திரளான மக்கள், எதைக் கண்டு கோபம் கொண்டு விடுகிறார்களோ, எந்த 'விஷமி' எத்தகைய கலகமூட்டி விடுவானோ, அதனால் எத்தகைய விபரீதம் விளைந்துவிடுமோ, என்ற அச்சத்துடன் சென்றேன்—சென்றேனா!—ஓட்டமும் பெருநடையுமாகச் சென்றேன்.

ஊர்வலம், 'ஐலண்ட்' மைதானத்திலிருந்து கிளம்புவதற்குள், போலீஸ் தடியடியும் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சும் நடைபெற்று, மக்கள் பலதிசையிலும் துரத்தப்பட்டு, ஒரே குழப்பமாகிவிட்ட நிலை; ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காகக் கிளம்பிய நமது பொதுச் செயலாளரையும், துணைச் செயலாளரையும் வழியனுப்பிவிட்டு, கிடங்கில் இருந்தேன், ஒரு அரைமணி, முக்கால் மணி நேரத்துக்கெல்லாம் நமது நாவலர் சென்ற மோடார் திரும்பிவந்தது.

ஒரே குழப்பமாகிவிட்டது. சுட்டு விட்டாாகள்! மக்கள் ஆத்திரமடைநது விட்டார்கள்! தலைவர், தாக்கப்பட்டார். மக்களைப் போலீஸ் கண்மண் தெரியாமல் தடியால் அடித்து விரட்டுகிறது. பெரிய அமளி!

என்று நண்பர் வந்து கூறினார்; என்ன செய்வேன். கிளம்பினேன். திடல் சென்றெேன். மக்கள் கூட்டம், கண்களை மிரட்டும் அளவுக்கு! அவர்கள் மனநிலையோ என்னை மருட்டும் விதத்தில்! ஆனால், ம. பொ. சி. யும், பி. டி. ராஜனும், நாவலரும் பிறரும் அங்கு நிலைமையைச் சரிசெய்து கொண்டிருந்தனர். நானும் அவர்களுக்குத் துணையாக நின்றேன்.

போலீஸ் அதிகாரிகள், கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டு விட்டது என்ற காரணம் காட்டி ஊர்வலத்தைத் தடுத்து விடலாம் என்று எண்ணியிருப்பர். தடியடி, தலைவர்கள்

தாக்கப்பட்டனர், மக்கள் கொதிப்புற்ற நிலை. கண்ணீர்ப் புகைக்குண்டு கிளப்பிய, புகையும் நெடியும், தடியடியால் ஏற்பட்ட தழும்பும் குருதியும், இவை எல்லாவற்றையும்விட, நடுக்கும் குரலில், கண்ணீர் சிந்தியபடி நண்பர் நடராசன் நடைபெற்ற சம்பவத்தை என்னிடம் சொன்னதும், என்னை வெகுவாக உருக்கிவிட்டது.

பி. டி. ராஜன் என்ன சொல்கிறார் ? என்று கேட்டேன்.

ஊர்வலம் நடத்தியே தீர வேண்டும் என்று கூறுகிறார். போலீஸ் அதிகாரிகளிடம் கூறிவிட்டார்—என்றார் நடராசன்.

தம்பி ! பி. டி. ராஜன் இருக்கும் இடம் நோக்கி என் விழிகள் சென்றன. அந்தத் தமிழ்த் தலைவர், மக்களை அமைதிப்படுத்திக்கொண்டும் ஒழுங்குபடுத்திக் கொண்டும் இருந்த காட்சி என் உள்ளத்தைத் தொட்டது.

ஊர்வலம் கிளம்பிற்று; ம. பொ. சி. உடனிருந்தார்; நான் ஒழுங்கு ! அமைதி ! ஒழுங்கு ! அமைதி ! என்று கூவினேன்—'வாழ்த்தொலி' என்னைக் களிப்பிலாழ்த்திற்று—கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது ஊர்வலம்.

தம்பி, எழுச்சியுற்ற தமிழகத்தைக் கண்டேன், எந்தையர் நாடு இனி எத்தரின் பிடியிலிருந்து விடுபடும் என்று உறுதி கொண்டேன் - அதோ தமிழர், வரிசை வரிசையாக வருகிறார்கள்—வாழ்த்தொலியுடன்—அடிபட்டார்கள் தடியால்—போலீஸ் துரத்திற்று, கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டது—கலங்கினரோ தோழர்கள்? கடமையை மறந்தனரோ? இல்லை, தம்பி ! பெருங்கூட்டம் ஆத்திரமடைந்து, கட்டுக்காவலை மீறிக் கையில் கிடைத்ததைக் கொண்டு எதிர்த்தோரைத் தாக்கி இடர்விளைவித்து நாசம் நர்த்தனமாடச் செய்வதற்கான, எரிச்சல் என்னென்ன உண்டாக்க முடியுமோ அவ்வளவையும், மக்கள் போக்கறியாப் போலீஸ் செய்து விட்டது.

அமைதியை நிலைநாட்டச் சென்ற ஜீவாவைத் தாக்கிக் கீழே சாய்ப்பதைக் கண்ட பிறகும், மக்கள் எங்ஙனம் கட்டுக்கு அடங்கி நிற்க முடியும்? எந்த விநாடியிலும், எரிமலை நெருப்பைக் கக்கும், என்ற நிலை—குமுறலே, பயமூட்டுவதாக இருந்தது. எனினும் எடுத்த காரியத்தைப் பழுதின்றி முடித்தாக வேண்டுமே என்ற பொறுப்புணர்ச்சியும், ஆத்திரத்துக்கு இடமளித்தால் அதுவரை பெற்ற மகத்தான வெற்றிக்குக் களங்கம் ஏற்பட்டுவிடும், தமிழரின் பண்பாடு கெட்டு விடும், இழிவும் பழியும் வந்து தாக்கும் என்பதை அறிந்ததால் ஏற்பட்ட பொறுமையும், மக்களை ஒரு கட்டுக்குள், ஒப்பற்ற ஒழுங்குக்குள் கொண்டுவந்து நிறுத்தி வைத்தது. ஆகஸ்ட்டுக் கலகம் அறிந்த

மக்கள்—பம்பாய் சம்பவம் பற்றிய பத்திரிகைச் சேதிகளைப் படித்த மக்கள், அன்று மட்டும், தமது கோபத்துக்கு இடமளித்திருந்திருப்பாராஞல், தம்பி! வெண்ணிற மணல செந்நிறமாகி இருக்கும், நாம் அனைவரும் வெட்கித் தலைகுனிந்தோ, அல்லது வெட்டுண்ட கரம், கால் கண்டு துக்கித்துக் கொணடோ இருந்திருப்போம். மயில்தானே ஆட வேண்டும்! வான் கோழியுமா? காங்கிரஸ் பெருந்தலைவர்கள் மட்டுந்தானே, அர்த்தால் நடத்த முடியும்—இதுகளெல்லாமா, என்று கேட்டு, இன்னேரம், தண்டோரா சர்க்கார் நம்மை இடித்துரைத்திருக்கும்—இழித்துரைத்திருக்கும்; நாமும் பதிலளிகக முடியாமல் திண்டாடித் தேம்பிக் கிடந்திருப்போம். ஆனல் தீயில் தள்ளப்பட்டது போன்ற நிலை எனினும், தமிழர், தமது பண்பினை இழந்தாரில்லை! வீரம் கொழுந்து விட்டெரிந்தது. ஆனல் வெறி தலை காட்டவில்லை. ஆர்வம் ஆற்று வெள்ளம் போல் எழும்பிற்று. எனினும் கரை உடைபடவில்லை. குறிக்கோளை மறவாத பொறுப்புடன் நடந்து கொண்டனர்.

தம்பி! 'உறுதி மொழி' எடுத்துக் கொள்ளும்படி, கூட்டணித் தலைவர் கேட்டுக் கொண்ட போது, அவர் நிகழ்த்திய உரை, என்னென்பேன், நெஞ்சம் கரைந்தது, கண்களில் நீர் நிரம்பிற்று, எங்கிருந்து கிடைத்தது அவருக்கு அந்த உருக்கம், எவரிடம் கற்றூர் அந்தக் கனிவு, மக்கட் கூட்டத்துடன் அடிக்கடி தொடர்பு கொள்ளாதவர் என்ற பழிச்சொல்லுக்கு ஆளான ஓர் கட்சியின் தலைவர், அன்று மக்களைத் தன் வயப்படுத்திய திறமையை இதுநாள் வரையில் எங்கே 'ஒளிய' வைத்திருந்தார் என்று நான் எண்ணி எண்ணி வியந்தேன்.

'திருஷ்டி பரிகாரம்' போல, சிறு குழப்பம் நடைபெற்றது—அது கண்டு நான் வருந்துகிறேன்—அதுவும் இல்லாதிருந்திருக்குமாஞல், நாம் இன்று பெற்றுள்ள வெற்றி, மாசு மறுவற்றதாகும் என்று கூறிஞா கூட்டணித் தலைவர். கண்ணியத்தை அணியாகக் கொண்ட ஒரு தலைவரால் மட்டுமே, அது போல் கூறியிருக்க முடியும்.

பொதுவாகவே தம்பி! மக்கள், பெருந்திரளாக, வெள்ளம் போல் கூடியிருக்கும் நேரத்தில், அவர்களிடம் ஆத்திரத்தை மூட்டிவிடுவதும, அவர்களைப் பலாத்காரத்தில் ஈடுபடச் செய்வதும், எளிதான காரியமாகும். அது மட்டுமல்ல, இரண்டாந்தர மூன்ருந்தரத் தலைவர்கள், அந்த மன அரிப்புடன் இருப்பர்; இச்சமயம் தவறினல் மறு சமயம் வாய்ப்ப தரிது எனற போக்கிலே,

இழுத்துப் போட்டு உதையுங்கள்!
இடியுங்கள்!
உடையுங்கள்!
கொளுத்துங்கள்!
அஞ்சாதீர்கள், தாக்குங்கள்!
போலீஸ் சுண்டைக்காய்போல!

குண்டுகள், உமது கரங்களுக்கு விளையாட்டுச் செண்டுகள்!

என்றெல்லாம் 'தூண்டி விட்டு'க் கலகம் மூட்டிவிடுவதற்குத்தான் துடியாய்த் துடிப்பர்.

தமிழ்த் தலைவர்கள் அங்ஙனமா நடந்து கொள்வர்!

அன்று, பி. டி. ராஜன் கொண்டிருந்த கவலையெல்லாம், மக்களைச் சமாதானப்படுத்தி, மனக் கொதிப்பை மாற்றி, அவர்களை அமைதியான முறையில், தத்தமது இல்லம் சென்று, அன்று நடத்திய அர்த்தாலின் வெற்றியை நேர்த்தியான தாக்கிக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பதுதான்.

அவரே, பிறகு கூறியபடி, அப்படிப்பட்ட மக்கட் கூட்டத்தை அவர் அதற்கு முன்பு கண்டதில்லை.

மக்களோ, தடியடி கண்டு கொதிப்படைந்த நிலையில் உள்ளனர்.

ஒரு இலட்சத்திற்குக் குறையாது என்று, மாற்றார்கள் ஒப்புக் கொள்வர்.

அவர்கள் ஆலைகளிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் அலுவலகங்களிலிருந்தும் குடில்களிலிருந்தும் வந்துள்ளனர்.

எளிதாக, அவர்களைத் துப்பாக்கி மிரட்டி விடாது!

கண் எதிரே, தமது தோழன் சுடப்பட்டுச் சுருண்டு கீழே வீழ்ந்தாலும், அவன் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, மாற்றாரை நோக்கிப் பாய்ந்து தாக்கிடும் வல்லமை பெற்றோர்.

மார்பில் பாய்ந்த வேலினை இழுத் தெடுத்து, எதிரே வரும் வேழத்தின் மீது வீசிய வீரர்வழி வந்தவரல்லவா! வீரத்திற்கும் நெஞ்சு உரத்துக்கும் பஞ்சமா? அவர்கள் ஈடுபட்டிருக்கும் காரியமோ, தாயகத்துக்கு வந்துற்ற கேட்டினை ஓட்டிடும் விடுதலைக் கிளர்ச்சி! இந்நிலையில் அவர் அச்சம் கொள்வரோ? அப்படிப்பட்ட மக்களைத் தூண்டிவிட்டு அமளியை மூட்டிவிடுவது தானே எளிதான காரியம். ஆனால், பி. டி. ராஜன், இதயத்திலிருந்து கிளம்பி, கேட்போர் இதயத்தில் சென்று தங்கும் திறன் படைத்த பேருரையால், அவ்வளவு மக்களையும் அமைதியுறச் செய்தார்! அன்று, ஒரு துளி கலகமும், சிறு அடிதடியும்,

எத்தகைய கூச்சலும் குழப்பமுமின்றி, அவ்வளவு மக்களும் கலந்து சென்றனர். எத்தனை சம்பவங்களை இதற்கு ஈடாகக் காட்ட முடியும், எங்கள் கட்சி பெரிய கட்சி என்று 'விருது' பேசுவோரால் !

தம்பி ! கோவாவில் நடைபெற்ற கொடுமையைக் கண்டிக்கச் சென்னையில் அர்த்தால் நடத்தினர். சர்க்கார் துணை நின்றனர். சகல கட்சிகளும் கலந்து கொண்டன. எதிர்ப்பாளர், ஏளனம் பேசுவோர், எவரும் கிடையாது, தண்டோரா இல்லை. அர்த்தால் வேண்டா மென்று தலையங்கம் தீட்டவில்லை. பெரியார் கூட, அதனைப் பலாத்காரம் என்று, பேசினாரில்லை. திராவிடர் கழகமும், திருநாளில் கலந்து கொள்வது போல, அதிலே கலந்து கொண்டது. கண்ணீர்த் துளிகள் கலந்து கொள்ளும் காரியத்தில் நாங்கள் கலந்து கொள்வதா, என்ன ஆவது எமது கண்ணியம் என்று வாதாடவில்லை. அதே கடற்கரையில், கூட்டம் நடைபெற்றது.

எதிர்ப்பே இல்லாத அந்த அர்த்தாலில்கூட, அமளி மூண்டது; குழப்பம் ஏற்பட்ட து.

பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தாலை நடத்தியவர்களை, கக்கன் அரசியலில் தோற்றோடிப் போனவர்கள் என்று கேலி பேசினாரல்லவா, அவர், வாய் பொத்திக் கொண்டுதான் கிடந்தார்.

நமது நடராசன்

ம. பொ. சி.

சுயம்பிரகாசம்

விநாயகம்

இரத்தினம்

ஜீவானந்தம்

ஆகியோரெல்லாம் இருந்துதான் அர்த்தால் கூட்டம் நடத்தினர்.

டாக்டர் வரதராஜுலுவும், ராஜாராம் நாயுடுவும், அண்ணாமலைப் பிள்ளையும், இவர்களுடன் தோளோடு தோள் சேர நின்றனர். தேசீயம் தீட்டுப்பட்டுவிடவில்லை ! நாடு நாசமாகிவிடவில்லை ! காமராஜர் சர்க்கார், 'தண்டோரா' போட்டுக் கடைகளைத் திறவுங்கள், போலீஸ் பாதுகாப்புத் தருகிறோம் என்று கனிவு காட்டவில்லை; ஜனநாயக முறைகள் இருக்கும் போது, ஏன் அர்த்தால் நடத்துகிறீர்கள் என்று 'தினமணி' கேட்கவில்லை, 'மெயில்' தன் 'மேதா விலாசத்தை'க் காட்டவில்லை.

முதன் மந்திரி காமராஜர் காலேயும் மாலேயும் நகரைச் சுற்றிப் பார்த்தார்—எல்லாம் அமைதியாகவே இருக்கிறது என்ருர்.

அமைதியின் இலட்சணம் எப்படி இருந்தது தெரியுமா, தம்பி !

''பஸ்கள் ஓடின; ஊர்வலம் நடத்தியோரும் தொழிலாளர் களும் குறுக்கிட்டதால் நின்றன ! மீண்டும் ஓடத் தொடங் கின ! மீண்டும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்; பஸ்கள் நின்று விட்டன.''

இது, கோவாவுக்கான அர்த்தாலின் போது! 'தினமணி'யே எழுதியது.

கூட்டணியோ, பஸ்களேத் தடுத்து நிறுத்தக்கூடாது—மக் களே மறிக்கவும் கூடாது—ஒருவரையும் வற்புறுத்தக் கூடாது—என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டது.

இந்த அர்த்தால் கண்டிக்கப்பட்டது. கோவாவுக்கான அர்த்தால் பற்றியோ, கொஞ்சு மொழி பேசினர், வேளேக் கேற்ற கொள்கை பேசும் போக்கினர்.

கல்லெறி சரமாரியாக நடைபெற்றிருக்கிறது, கோவா அர்த்தாலின் போது.

காலிகள் கல்வீச்சு—என்று கூறவில்லே. 'தினமணி' கனிவு டன் பேசுகிறது ! பஜாரியை மனேவியாகக் கொண்ட பயந்தாங் கொள்ளிக் கணவன், அவளிடம் 'பாத பூஜை' பெற்ருலும், கோபம் காட்டாமல், உதைக்காதே பெண்ணே ! உன் கால் வலிக்குமடி கண்ணே ! என்று பேசுவானுமே, அது போல, கல் லடி கண்டும், கனிவு ஒழுக ஒழுக எழுதுகிறது.

'சந்தடி சாக்கில் சில பொடியன்கள் ஸ்மால்காஸ் கோர்ட் பகுதியில் கற்களே வீசினர்.'

பொடியன்கள்—காலிகள் அல்ல ! தெரிகிறதா தம்பி, தேசியம் ! !

நடைபெற்றது என்ன தெரியுமோ ? எல்லாக் கதவுகளே யும் மூடிக் கொண்டு, ஹைக்கோர்ட் வேலேயைக் கவனிக்க லாயிற்று, கோவா அர்த்தால் கூட்டத்தினர், விடவில்லே, கோஷமிட்டுக் கொண்டு சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விசாரணே நடந்து கொண்டிருக்கும் கோர்ட்டுகளுக்குள் புகுந்தனர்.

உடனே, துப்பாக்கி முழங்கிற்ரு ? இல்லே ! உடனே ரிஜிஸ் டிரார், பிரதம நீதிபதியைக் கலநது கொண்டு, கோர்ட்டுகள் மூடப்படும் என்று அறிவித்தார் !

இரண்டு கவுண்டர்களையும், மேஜை நாற்காலிகளை யும், ஜெனரல் போஸ்டாபீசில், ஒரு கூட்டம் நுழைந்து உடைத்தது.

அரை குறையாகத் திறந்து வைத்திருப்பவை போலத் தோன்றிய கடைகள், ஸ்தாபனங்கள் முன்னிலையில், ஆர்ப் பாட்டக்காரர்கள், கோஷமிட்டனர்; மூடச் செய்தனர்.

தம்பி! 'தினமணி'யிலிருந்து திரட்டித் தந்திருக்கிறேன், சேதிகளை. தொழிலாளர்களுக்கும், தேவிகுளம் கிளர்ச்சிக்கும் என்ன சம்பந்தம்? தொழிலாளர்களே! அரசியல் கட்சிகளின் வலையில் விழாதீர்!—என்று மாய்மாலம் பேசினுர்களல்லவா, தம்பி! கோவா அர்த்தாலுக்கு, 'தினமணி', திருப்தியுடன் எழுதுகிறது,

''ராஜ்ய சர்க்காரின் தொழிற்சாலைகள்
கார்ப்பரேஷன் ஒர்க்ஷாப்
பெரம்பூர் ரயில்வே ஒர்க்ஷாப்
பி. சி. மில்
சால்ட்—கொட்டார்ஸ் கூட்ஸ்ஷெட்
இவை யாவும் மூடிக் கிடந்தன என்று.

இவை மட்டுமா, கப்பல்களில் சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி இல்லை—ஏனென்றால், அந்தத் தொழிலாளர்களும் அர்த்தாலில் சேர்ந்து கொண்டனர், என்று செப்புகிறது, 'தினமணி'.

மாணவர்களை, விட்டு விடுங்களய்யா! அவர்களை, இத் தகைய அர்த்தால் கிளர்ச்சிகளிலே ஈடுபடச் செய்யாதீர்கள் என்று மகானுபாவர்கள் கூறினர்—கல்வித் துறைத் தலைவ ராகி, தமிழரின் கலி தீர்த்தவர் இருக்கிறாரே, சுந்தரவடி வேலர் (குத்தூசியாரின் சகலை), அவர் பலமான தாக்கீது பிறப் பித்தார்—பள்ளிகள் அடைபட்டுக் கிடக்கக்கூடாது என்று கோவாவின் போது.

பச்சையப்பன்
லயோலா
சட்டக் கல்லூரி
வைத்தியக் கல்லூரி
கிண்டி கல்லூரி
தாம்பரம் கல்லூரி

எல்லாம் மூடிக் கிடந்தன. மாணவர்கள், அர்த்தால் ஊர்லலம் நடத்தினர், என்று தேசீயம் பேசுகிறது, 'தினமணி'.

அர்த்தாலால் கஷ்டம் ஏற்படவில்லையா என்றால், நிரம்ப என்பதும், தினமணி' மூலமே தெரிகிறது. ஆனால் அதனை அந்த ஏடு, கூறும் 'தினுசு' இருக்கிறதே, வேடிக்கை அதுதான்.

திடீல்னு தொடவே, நான் தடாலுன்னு கீழே விழுந்து விட்டேனுங்க, ஜாடை மாடையா முன்கூட்டியே சொல்லி யிருந்தா நான் கொஞ்சம் சிங்காரிச்சுக்கிட்டு வந்திருக்கமாட் டேனு—என்று கேட்கும் 'இரவு ராணிகள்' பற்றிக் கதை கதை யாகப் படிக்கிறோம் அல்லவா ! அதெல்லாம் எந்த மூலைக்கு ! இதோ பார், தம்பி 'தினமணி'யின் எழுத்தை.

"ஒரு நாள் இடைவெளி கொடுத்து, முன்னறிவிப்புடன் திட்டமிட்டு நடத்தியிருந்தால் யாரும் கஷ்டப்படாமல் அர்த் தால் நடந்திருக்கும் என்பது பொதுஜன அபிப்பிராயம்.''

நாம் நடத்திய அர்த்தாலோ, பல நாள் திட்டமிட்டு, பலாத்காரம் எந்தெந்தச் சந்துகளின் வழியாக வந்துவிடக் கூடுமோ அவைகளை எல்லாம் அடைத்துவிட்டு, பொதுமக்க ளுக்குக் கூடுமானவரையில், சங்கடம் ஏற்படாதிருப்பதற்காகப் பல 'விதிவிலக்குகள்' அளித்து, காரியம் பெரிதே தவிர வீராப்பு பெரிதல்ல என்ற நோக்கத்துடன் நடத்தப் பட்டது.

தேவிகுளம் பீர்மேடு பிரச்சினையை, தமிழர்—மலையாளி மாச்சரியமாக்க நாம் விடவில்லை ! நாம், பாராட்டிப் புகழ வேண்டிய வகையில் மக்கள் நடந்து கொண்டனர்.

இத்தனைக்கும், மலையாளிகளைத் துரத்துங்கள் ! மலையாளி கள் ஆதிக்கம் ஒழிக ! மலையாளிகளின் ஆதிக்கம் தெரிய வேண்டுமானால், ஆபீசுகளைப் பார், ஓட்டல்களைப் பார், ரயில் வண்டிகளைப் பார் !—என்றெல்லாம், 'விடுதலை' மும்முரமாக முரசறைந்து வந்தது. அர்த்தாலைக் காரணமாக்கிக்கொண்டு, யாராவது இரண்டொரு எரிச்சல் பேர்வழிகள் இந்தச் செய லில் ஈடுபட்டு விடுவார்களோ என்று நான் அஞ்சிய துண்டு.

தமிழ்நாடு முழுவதும் வெற்றியுடன் நடைபெற்ற இந்த அர்த்தாலில், ஒரு இடத்திலாவது தமிழர்—மலையாளி மோது தல் ஏற்படவில்லை என்பது, கூட்டணிப் பொறுப்புள்ள கண் ணியவான்கள் கொண்டது என்பதற்கு மறுக்கொணாச் சான்றா கும்.

மிகப் பெரும்பாலோர், பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் கூட்டணியின் முயற்சியில் காணக்கிடக்கும் தூய் மையை அறிந்தும், கூட்டணியில் இடம் பெற்றவர்களிடம் நம்பிக்கை வைத்தும் இந்த 'அர்த்தாலை'த் தங்கள் காரியமாகக்

கொண்டனர். அதனுலேயே, இவ்வளவு எளியவர்களால், இத்துணை சிறப்பான வெற்றி பெற முடிந்தது.

போகட்டும், வெற்றிகரமாக அர்த்தால் நடைபெற்றுன பிறகாவது, போக்கை மாற்றிக் கொண்டனரா என்றுல், இல்லை, தம்பி. அந்த அளவுக்குக் கூடக் கண்ணியம் அரும்பிடக் காணேம். மாருக, அறிக்கையும் தலையங்கமும், முழக்கமும் முணுமுணுப்பும் மீண்டும், நையாண்டி செய்யும் போக்கிலேயே உள்ளன.

"என்ன மகா அர்த்தால்! மோட்டாரெல்லாம் ஓடிற்று—ரயிலெல்லாம் ஓடிற்று—ஆபீசெல்லாம் வேலை செய்தது" என்று ஏளனம் செய்தனர்.

இவர்கள் ஏதோ திங்களுக்கொருதரம் அர்த்தால், திட்டம் வைத்துக் கொண்டிருப்பதுபோலவும், அப்போதெல்லாம், காக்கை குருவியிலிருந்து கனவேக ஆகாய விமானம் வரையில் வானத்தில் பறந்திடாது, நத்தை நண்டிலிருந்து மோட்டார் ரயில வரையில் நகராது, நடவாது, சத்திரம் சாவடியிலிருந்து சர்க்கார் பணிமனை வரையில் திறவாது, அலுவலாற்றுது மூடிக் கிடப்பது போலவும், நம்மால் இந்த அளவுக்கு வெற்றி காண முடியாததால், நாம் வெட்கித் தலை குனிய வேண்டும் போலவும், பேசுகின்றனர்.

நாம் நடத்திக் காட்டிப் பெற்றதைவிட மகத்தான வெற்றியைப் பெறக் கூடியவர்கள், முன்வருவார்களானுல், நாம் குறுக்கே நிற்கப் போவதுமில்லை, குறை கூறித் திரியப்போவதுமில்லை, அனுமதி அளித்தால் அவர்தம் கொடி ஏந்திகளாகக் கூடப் பணியாற்றுகிறேம்! ஆனுல், சற்றே அவர்கள் தங்கள் குறிப்பேட்டினைக் காட்டச் சொல்லு தம்பி!

அர்த்தாலை வெற்றிகரமாக, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடத்திக் காட்டவேண்டுமானுல், நம்மைக் குறை கூறுவோரில் பலர் முன்வரக் கூடுமே தவிர, சர்க்காரின் தண்டோராவும், சந்தர்ப்பவாதிகளின் எதிர்ப்பும், முதலாளிக்குக் கையாட்களாக உள்ள தொழிலாளர் தலைவர்களின் தெகிடுதத்தமும், மூக்குவரை நம்மீது கோபம் கொண்டோரின் குத்தலும் ஏற்பட்டும், சமாளித்து நாம் பிப். 20-இல் வெற்றி கண்டது போல, நடத்திக் காட்டச் சொல்லு பார்ப்போம்!

நேராப் பார்க்கிரு. ஜோரரா இல்லை! என்னைப் போல மாறு கண்ணு உண்டாடி, மங்கத்தாயி!—என்று கிராமத்திலே பாடுவார்கள், அது போல், இயலாதவர்கள், தமது இயலாமையை மறைத்துக் கொள்ள ஏதேதோ பேசுகிருர்கள். வேறென்ன!

"அர்த்தால் வெற்றியாம்! என்ன வெற்றி! கடைகளை மூடி விட்டார்கள்! ஆனால் ஏன் மூடினார்கள்? இவர்களுடைய வேண்டுகோள் கேட்டா? அதுதான் இல்லை! காலிகளுக்குப் பயந்து கடைகளை மூடினார்கள்!" என்று ஒத்த கருததினர் ஒரே குரலில் பேசுகின்றனர்! எவ்வளவு நேர்ததியான வாதம்!

காலிகளுக்குப் பயந்து கடை மூடினார்களாம்! ஏனய்யா பிப். 20-இல் மட்டும், காலிகளுக்குப் பயந்தனர்? 19, 21, ஏன் அந்தப் பயம் இல்லை? என்று கேட்டுப் பார், தம்பி. கொழுக் கட்டை இல்லாமலே,வாய் மூடிக்கிடக்கும்.

காலிகளுக்குப் பயந்து கடை மூடினார்கள் என்ற வாதம் ஏதோ நமககு இழிவளிபபது என்று எண்ணிக் கொண்டு பேசுகிறார்களே தவிர, அலசிப் பார்த்தால அது, ஆட்சியாளர் களுக்கே பெருத்த அவமானம் அளிப்பதாகும் என்பதை அறியலாம்.

காமராஜர் ஆட்சி எப்படி இருக்கிறது?

காலிகள் நிறைய இருக்கிறார்கள்—கடைக்காரர்கள் எல்லோரும் கண்டு அஞ்சத்தக்க அளவுக்கு இருக்கிறார்கள்!

இவ்வளவு பலம் பொருந்திய நிலையில் காலிகள் இருப்பானேன்? கையாலாகவில்லை, அவர்களை அடக்க, ஒடுக்க, ஒழித்துக்கட்ட!

ஒரு ஆட்சியின் திறமைக்கு இதுவா நற்சான்று?

காலா காலத்தில், தக்க முறையில் அடக்கினால், காலிகள், ஏன் ஆட்சியாளர்கள் குறிப்பிடத்தக்க அளவிலும், கடைக் காரர் அஞ்சத்தக்க தொகையிலும் இருக்கப் போகிறார்கள்? ஏன், காலிகள் அடக்கப்படவில்லை? முயற்சிக்கவில்லையா? முடியவில்லையா? இரண்டில் எதுவாக இருப்பினும் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள் ஆட்சிப் பொறுபபை ஏற்றுக் கொண்டுள்ளவர்களன்றோ!

காலிகளுக்கு அஞ்சாதீர்! கலவரத்துக்குப் பயப்படவேண் டாம்! போலீஸ் பாதுகாப்புத் தருகிறோம்! என்று 'தண் டோரா' போட்டீரே, அப்படியிருந்தும், கடைக்காரர்களுக்கு அச்சம் இருப்பானேன்? கவசத் தொப்பியைக் காட்டினீர்கள், விரைந்து செல்லும் சைகிள் போலீசை அனுப்பினீர்கள், கடு கிச் செல்லும் போலீஸ் வான்களை முடுக்கினீர்கள், தடியும் துப் பாக்கியும் ஏந்தினர், சந்து பொந்துகளிலும் நின்றனர், நெடுஞ் சாலைகளில் சென்றனர். எல்லாம் காட்டினீர்களே, ஏன் கடைக்காரர்களுக்குத் தைரியம் பிறக்கவில்லை!

உங்களிடம் நம்பிக்கை இல்லை! அப்படித்தானு, ஐயா; ஆட்சியாளர்களே! உங்களால் காலிகளை அடக்க முடியாது, கலவரத்தைச் சமாளிக்க முடியாது, உங்கள் போலீஸ் பாதுகாப்புப் பயனில்லை—என்று கடைக்காரர்கள் எண்ணுகிருர்கள். ஏனய்யா, 'மணிமகுடதாரி' என்று 'விடுதலை'யிடம் பட்டப் பெயர் பெற்றுள்ளவரை முதல்வராகக் கொண்டுள்ள ஆட்சியாளர்களே! அப்படித்தானு? உங்களிடம் நம்பிக்கை இல்லையா, கடைக்காரர்களுக்கு?

காலிகளை அடக்கக்கூடத் திறனற்றவர்கள் என்று கடைக்காரர் உங்களைப் பற்றித் தீர்ப்பளித்து விட்டார்கள் என்றல்லவா ஏற்படுகிறது உங்கள் வாதத்தை அலசினுல், வெட்கமில்லையா உங்களுக்கு? காலிகளைக்கூட அடக்கமுடியாத உங்களுக்கு ஏனய்யா, ஆட்சியும் அந்தஸ்தும்?

போலீஸ் இருக்கிறது தொகை தொகையாக! காலிகளைக் கண்டு, கடைக்காரர் அஞ்சினராம்! சொத்தையானது மட்டுமல்ல, தமக்குத்தாமே இழிவு தேடிக் கொள்ளும் வாதமல்லவா இது. சாமர்த்தியமாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு, இப்படியா சத்தற்ற பேச்சுப் பேசுவது!

இங்கே உள்ளவர்கள் இந்த வாதத்தைக் கேட்டு என்ன எண்ணுவார்கள் என்பது கூடக் கிடக்கட்டும், வெளிநாட்டில் உள்ள ஆட்சியாளர்கள், இந்த விசித்திர வாதத்தைக் காண நேரிட்டால் என்னென்ன பேசுவர், எண்ணும் போதே வெட்கம் வேலாகிக் குத்துமே!

சென்னையில் காமராஜர் என்ருேர் 'கனவான்' முதல் மந்திரியாகக் கொலுவீற்றிருக்கிருராம். மகா சாமர்த்தியசாலியாம்! எதிர்ப்பே எழாமல் தடுத்துக் கொள்வதில் சூரராம்! எவரையும் கண்டு அஞ்சாது போரிடும் பெரியாரையே சொக்க வைத்து விட்டவராம்! அப்படிப்பட்டவர் ஆட்சியிலே, காலிகள் ஏராளமாகி விட்டனராம், கடைக்காரர்கள் அஞ்சினராம்; பயம் வேண்டாம், போலீஸ் பாதுகாப்பு இருக்கிறது என்று காமராஜர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாராம்! கடைக்காரர்களுக்கு நம்பிக்கையோ, தைரியமோ வரவேயில்லையாம். அதனுல்தான், அர்த்தாலின் போது கடை அடைத்துவிட்டனராம்—என்று பேசிடும்போது, காங்கிரஸ் நண்பர்களே! கைகொட்டி மட்டுமா, அவர்கள் சிரிப்பார்கள். செச்சே! எனக்கே எண்ணும்போது வெட்கமும் வேதனையுமாக இருக்கிறது!!

கடை அடைத்ததற்குக் காரணம், இவர்களை மதித்து அல்ல, இவர்கள் எடுத்துக் காட்டிய பிரச்சினையை மதித்துக்

கடை மூடினர், என்று வாதாடினுல், அதிலே தரக் குறைவோ, ரசக்குறைவோ ஏற்படாது. நாங்கள் 'சின்ன மனிதர்கள்' என்று எள்ளி நகையாடித் திருப்தி கொள்ளலாம்—கவலே யில்லே. பிரச்சினேயின் கண்ணியம் கடைக்காரர் மனதைக் கவர்ந்தது என்று சொல்லலாமே.

எங்களேயும், நாங்கள் எடுத்துக் காட்டிய பிரச்சினேயை யும் சின்னதாக்கிக் காட்ட வேண்டும் என்ற சிறுமதியால், எப் படிப் பேசினுல் எப்படிப் எப்படிப் பொருள் கொள்வர் என்பது பற்றியும் எண்ணுமல், சொத்தை வாதத்தில் இறங்கி, காலி களுக்கல்லவா, போலீசைவிட, அதை ஆளும் ஆட்சியாளர்களே விட மேலான இடம் கொடுத்து விட்டீர்கள்! சரியா? ஆட்சி யாளர்களுக்கே அல்லவா இது அவமானம்.

கடைகளே மூடியதற்குக் காரணம், காலிகள் பற்றிய பயம் என்று வாதாடிவிட்டு, அடுத்த விநாடியே, கலவரம் அன்று ஏற்படாததற்குக் காரணம், கூட்டணித் தலேவர்களின் கட்டுப் பாடு முறை அல்ல, எமது போலீசின் திறமைதான் அதற்குக் காரணம் என்று பேசுகிருர்கள். பொருந்துகிறதா, பொரு ளிருக்கிறதா!

அர்த்தாலன்று கலகம் எழாதபடி பாதுகாப்பளித்திடும் திறமை படைத்தது உமது போலீஸ் என்ருல், காலிகளேயும் அடக்கி, கடைக்காரரின் அச்சத்தையும் துடைத்து, கடைகளேத் திறக்கச் செய்து அர்த்தாலே முறியடித்திருக்கலாமே. ஏன் செய்யவில்லே? ஏன்? ஏன்?

தண்டோரா போட்டும், 'கபர்தார்' கொடுத்தும், கவசம் மாட்டியும், கைத்துப்பாக்கி கொடுத்தும், கடைக்காரர்களின் அச்சத்தைப் போக்க முடியாத ஒரு சர்க்கார் இருக்கிறது, அதனே, அதுவே கூறிக்கொள்ளவும் செய்கிறது.

இது சிறப்புக்குச் சான்று என்று ஆட்சியாளர்களும் அவர் தம் ஆதரவாளரும் எண்ணிக் கொண்டால், நமக்கென்ன நட் டம்! போகட்டும்.

அர்த்தாலால் கண்டது என்ன? என்று, கை நிறையத் தண்ணீரை வாரி இறைத்தானதும் காயும் கனியும் பறித்தெடுத் திடக் கூடை தேடிடும் குணளர்கள் குத்தல் பேச்சுப் பேசுகிருர் கள்.

கோவா அர்த்தால் நடந்த மறு நாள் போர்ச்சுகீசியன் போய்விட்டான என்று நாம்கேட்டோமில்லே. ஏனெனில், அற் பத்தனமும் அரசியலும் ஒன்று கலந்தால், அசிங்கமும் அயோக் யத்தனமும்தான் நாட்டில் தலேவிரித்தாடும்.

அர்த்தாலில் ஈடுபட்ட எவரும், அர்த்தால் வெற்றி பெற்ருன உடனே, தேவிகுளம் கிடைத்து விடும் என்று எண்ணிடும் ஏமாளிகளல்ல; அவ்விதம் எண்ணிட இது ஏமாளிகள் நாடல்ல; அறிவு செறிந்த நாடு.

அர்த்தால் மூலம், தமிழரின் விழிப்புணர்ச்சி, எழுச்சித் திறன், நெருக்கடியான நேரத்தில் ஒன்றுபடும் உளப்பண்பு, கட்டுப்பாட்டுணர்ச்சி, பொறுப்புணர்ச்சி இவை, விளக்கமாகி விட்டன. மதிப்பான பலன்கள்; மாண்புள்ள விளைவுகள்.

இதுவரை எவருமே சொல்லாதது, யாரையும் திடுக்கிட வைப்பது, பெரியார் துவக்கும் கொடி எரிப்புப் போர்—என்றனர்.

நாடு, அலறித் துடித்தது. நண்பர்கள் நல்லுரை கூறித் தோற்றனர்—திராவிடர் கழகத்தின் கடமை உணர்ச்சியினர், கொடி தயாரித்தனர், 'விடுதலை' பட்டியல் வெளியிட்டது. பெரியார் சுழல் வேகச் சுற்றுப் பயணம் செய்தார்—நாளை என்ன நேரிடுமோ—என்று மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு நின்ற நிலை அனைவருக்கும்—ஆயினுமென்ன, ராஜதந்திர நிபுணர் ரணகளச் சூரர் காமராஜர் ஒரு சிறு அறிக்கை வெளியிட்டார்—பெரியார் தணிந்தார், துணிந்தோர் பணிந்தனர், கொடி எப்போதும் போலப் பறந்தது, கோட்டை மாளிகையிலே, குறு நகையுடன் கொலுவீற்றிருந்தார் காமராஜர்.

"என்ன ஆயிற்று கொடி எரிப்பு ?"

"நின்று விட்டது !"

"அப்படியா ? எப்படி ?"

"நான் அறிக்கை வெளியிட்டேன்...பெரியார் கொடி எரிப்பை நிறுத்திவிட்டார்......"

"அச்சா ! பஹுத் அச்சா !"

நேரு பெருமகனுருக்கும் காமராஜருக்கும் இதுபோல் உரையாடல் !

அதே முறையில், கூட்டணி திடுக்கிடத்தக்க திட்டமல்ல, சாத்தியமான ஒரு திட்டம் தீட்டிற்று. நாட்கள் பல சென்றன; நாடு ஆதரிக்கத் தொடங்கிற்று; காமராஜர் கடைசி நாளன்று, ஒரு அறிக்கை விட்டார், திட்டம் கைவிடப் பட்டது—

இப்படி ஒரு 'சரித்திரம்' தேடினுர் காமராஜர்.

கிடைக்கவில்லை, தம்பி, கிடைக்கவில்லை. ஒன்றுக்கு இரண்டாக அறிக்கை வெளியிட்டார் ! ஓடோடி வேலை செய்தனர்,

திட்டத்தை நிறுத்த, கூட்டணியை உடைக்க, ஓட்டை ஓடிசலை உண்டாக்க; முடியவில்லை.

காமராஜரின் ராஜ தந்திரம், எல்லோரையும் பலிபீடத்துக்கு அழைத்துச் செல்லாது என்பது விளக்கமாகிவிட்டது. மகத்தான வெற்றி என்பேன் இதனை; ஏனெனில், காரணம் எதுவாசுவேனும் இருக்கட்டும் அரசியலில், சபலத்துக்கு இடமளித்து விட்டு, குறிக்கோள் நிறைவேற ஒரு தனிக் கட்சி வைத்துக் கொண்டிருப்பது, இயலாத காரியம், அரசியல் அறமுமாகாது.

காமராஜர்மீது பகை கக்கவே, இந்த முயற்சி என்று சிலர் காதல் பேசுகின்றனர்.

காதல் கடிமணமாக மாறுவதை நான் வரவேற்கிறேன். அது வெறும் "சண்ணடி, கைப்பிடி, கடித வீச்சு, அவசர அணைப்பு" என்ற முறையில் இருப்பதில், சுவை இருக்கலாம், பயன் இல்லை.

காமராஜர், தமிழரின் நலனைக் காப்பாற்றக் கூடியவர்; அவர் ஆட்சியில் ஏழை எளியவர் காப்பாற்றப்படுவர்; எவர் உரிமையும் பறி போகாது; இனமும் தன்மானமும் தழைத்திடும், என்பதிலே உள்ளம் நிறைந்த நம்பிக்கை ஏற்பட்டால், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து, அவருடைய கரத்தையும் வலுவடையச் செய்யலாம், நம் கருத்தையும் புகுத்தி வெற்றி காணலாம் என்று கருதிக் கூடிக்கொள்பவர்களை நான் பின்பற்ற முடியாது என்றாலும், அவர்களின் நேர்மைக்கும நெஞ்சு உரத்துக்கும் மரியாதை காட்டத் தயங்கமாட்டேன்.

எனக்கென்று ஒரு கட்சியும் கொடியும் உண்டு, வேண்டும்.

அதற்கான கொள்கையும் திட்டமும் உண்டு, வேண்டும்.

காங்கிரஸ் கட்சி, இந்த என் கொள்கை, குறிக்கோள், திட்டம், கட்சி ஆகியவற்றுக்கு, விரோதி, துரோகி.

ஆகவே நான் காங்கிரஸ் கட்சியில் சேரப்போவதில்லை, முடியாது.

ஆனாலும், நான் காமராஜரை ஆதரிப்பேன், அவர் முதல் மந்திரியாக இருக்க வேண்டும் என்று பாடுபடுவேன்; காங்கிரஸ் மெஜாரிடியாக வந்தால்தான் அவர் முதல் மந்திரியாக முடியும், ஆகவே காங்கிரஸ்காரர் தேர்தலில் ஜெயிக்க முழுமூச்சாகப் பாடுபடுவேன், காங்கிரசை எதிர்த்து, அதன் மூலமாகக் காமராஜருக்குச் சங்கடம் விளைவிக்கத் துணிபவர்களைக் கண்டதுண்டமாக்குவேன், இதனாலே, நான் காங்கிரசில்

சேர்ந்துவிட்டேன் என்று எண்ணுதீர்கள், எனக்கென்று ஒரு தனிக் கட்சி உண்டு, கொடி உண்டு, கொள்கை உண்டு, காங் கிரஸ் என் விரோதிதான், நாட்டுக்குத் துரோகிதான்! !— என்று வாதாடும் போதுதான், தம்பி! எனக்கு மயக்கம் வருகிறது.

இத்தனைக்கும் காமராஜரைப் பெரியார் படம் பிடித்துக் காட்டியிருப்பதைப் பார்க்கும் போது காமராஜர் ஏதோ 'தூய்மையான ஒரு தேவன்' என்று எனக்குத் தோன்றவில்லை.

ஆச்சாரியாரையும் காமராஜரையும் ஒப்பிட்டுப் பெரியா ரின் 'விடுதலை'யில் எழுதப்பட்டிருக்கிறது:

"இருவரில் கழகத்தை ஒழிப்பதில், கழகக் கொள்கைகளை எதிர்ப்பதில், பார்ப்பனீயத்தை வளர்ப்பதில், வடநாட்டானுக் குக் கங்காணி வேலை செய்வதில், நேருவுக்கு வெண்சாமரம் வீசுவதில், ஒருவருக்கு ஒருவர் இளைத்தவரல்ல!!"

தம்பி! படப்பிடிப்பு பார்த்தனையா! திராவிடர் கழகத் தோழர்களிடம் காட்டிவிடாதே, அவர்களின் கண்கள் கொப் பளிக்கும்.

கழகத்தை ஒழிப்பவர்
கழகக் கொள்கைகளை எதிர்ப்பவர்
பார்ப்பனீயத்தை வளர்ப்பவர்
வடநாட்டானுக்குக் கங்காணி
நேருவுக்கு வெண்சாமரம் வீசுபவர்!

இது, காமராஜர், பெரியார் படப்பிடிப்பின்படி.

காமராஜர் எதிர்க்கப்பட்டால், என்னுல் சகித்துக்கொண் டிருக்க முடியாது என்று பெரியார் கூறுவானேன்?

சுந்தரவடிவேலு
ராஜரத்தின முதலியார்
அப்பாத்துரைப் பிள்ளை

என்று ஏதோ ஒரு பட்டியலைக் காட்டிவிடுவதால்,

பார்ப்பனீய வளர்ப்பு
கங்காணி வேலை
வெண்சாமரம் வீசுவது
கழகத்தை ஒழிப்பது

ஆகியவை யாவும் இனிப் 'பஞ்சாமிருதம்' ஆகிவிடுமா!

கோழைகள்! துரோகிகள்!!—என்றெல்லாம் வெளுத்து வாங்குகிருர் காமராஜர், கூட்டணியை.

மலை குலைந்தாலும் மனம் குலையாத மன்னன்—இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றதே, துளியாவது 'சட்டை' செய்தாரா—என்று காமராஜர் பற்றிப் புகழ்பாடினோர், இப்போது கண்களை அகலத் திறந்தபடி, என்ன இவர் இவ்வளவு கிலிகொண்டு குளறுகிறாரே !—என்று கேட்பர், அப்படி, ஆர்ப்பரித்திருக்கிறார் காமராஜர்—கல்லூரிக் கூட்டமொன்றில்.

என்னைப் பொறுத்த மட்டிலே, தம்பி! எனக்கு இந்தக் காமராஜர்தான் புரிகிறது !! ஏனெனில், இதுதான் உண்மைக் காமராஜர், நாம் சந்தித்தாக வேண்டிய காமராஜர்.

மெத்தச் சிரமப்பட்டு அவர், தம்முடைய இயல்பை மறைத்துவைத்திருந்தார்—மயங்கிக் கிடந்தனர் நமது தோழர்களிலேயே சிலர்! இப்போது, உண்மைக் காமராஜர், லயோலா கல்லூரி உறுமல் மூலம் தெரிகிறார்; நம்மவர், நல்லவர் என்று சொந்தம் கொண்டாடும் தோழர்களின் மயக்கம் தெளிய இது உதவும்—இன்னும் இரண்டோர் 'கர்ஜனைகள்' தேவை—அவசரமாகத் தேவை !

தேனி நடத்துவதும், தெருச் சண்டையும், சிண்டு முடிந்துவிடுவதும், சீட்டு எழுதி அனுப்புவதும், கட்டை விரலை வெட்டுவேன், நாக்கை அறுத்துவிடுவேன் என்றெல்லாம் கண்டபடி பேசுவதும், முறைகளாகக் கொண்டு தலைவரானவர், எவ்வளவு நாட்களுக்கு நாசுக்குப் பூச்சும் நளினமான பேச்சும் கொண்டு மறைந்து வாழ முடியும்? உண்மைக் காமராஜர் லயோலா கல்லூரியில் தெரிகிறார்.

கோழைகள்—என்று நம்மை ஏசிவிடுவதாலேயே, இவர் வீராதி வீரர் என்று ஆகிவிடாது—மெத்தக் கோபம் வந்துவிட்டது என்பதைத்தான் காட்டிக்கொண்டிருக்கிறார், அந்தப் பேச்சின் மூலம். இருக்காதா, தம்பி! அறிக்கைவிட்டுக் கிளர்ச்சிகளை நிறுத்திவிடும் அலாவுதீன் என்றல்லவா இவருக்கு வடக்கே கீர்த்தி இருந்துவந்தது. அது போய்விட்டதல்லவா, அதனால் பாபம், அவருக்கு எரிச்சல், குடைச்சல்; அந்தக் குடைச்சலால் குளறுகிறார். அர்த்தால், இம்முறையில், உண்மைக் காமராஜர் வெளியே தெரியச் செய்தது குறித்து, நான் மகிழ்கிறேன். ஏனெனில், சீறும் சிறுத்தைகளைவிட நயவஞ்சக நரிகள்தான், அரசியலுக்குப் பேராபத்து.

தம்பி! நாம் சில கொள்கைகளைக் கொண்டவர்கள்—எனவே கோணல் வழி போகக் கூடாதவர்கள் என்ற உணர்வு நமக்கு உயிரூட்டம் அளிக்கிறது.

அந்த உயிரூட்டம்தான், சர்வ கட்சிக் கூட்டணியில் சேர்ந்து, நாம் நமது 'பங்கினை'ச் செலுத்துவதற்கான திறத்தை நமக்கு அளித்தது.

இதிலே கிடைத்த வெற்றிக்காகக் குருதி கொட்டிய தோழர்களின் 'நாமத்தை'ப் பஜிக்கிறேன்.

அவர்கட்கு என் வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

கஷ்டநஷ்டமேற்ற நண்பர்கட்கு, என் மரியாதை கலந்த வணக்கம் செலுத்துகிறேன்.


கண்ணியத்தை நாம் கடைப்பிடிக்கவும், காரியமாற்றும் திறனைப் பெறவும் நமக்குப் பேருதவி அளித்த கூட்டணித் தோழர்களுக் கெல்லாம் நன்றி கூறிக் கொள்கிறேன்.

அரியதோர் வெற்றி கிடைத்திருக்கிறது. இது நமது ஆற்றல் வளரவும், ஆர்வம் பொங்கவும் மட்டுமல்ல, தம்பி! அடக்க உணர்ச்சியை நாம் பெறவும், அறநெறியில் அசையாத நம்பிக்கை கொள்ளவும் உதவுமாக.

வாழ்க கூட்டணி! வளர்க வெற்றி!

அன்புள்ள,

*11—3—1956*



கடிதம் : 41

# கிளிக்குப் பச்சை பூசுவதா...?

★ தமிழின் ஓசை நயமும் பொருள் நயமும்—
தமிழ் மொழியின் இனிமை.

தம்பி,

எங்கிருந்து வருகிறீர்? என்று கேட்டேன், நமது துணைப் பொதுச் செயலாளர் நடராசன் அவர்களை.

சூலூரிலிருந்து வருகிறேன் என்றார் அவர்.

நான் வேடிக்கையாக அவரைக் கேட்டேன்; "அதென்னய்யா அப்படிச் சொல்கிறீர்? நீர் மட்டுந்தானா, சூலூரிலிருந்து வருகிறீர்—நாமெல்லோருமே சூலூரிலிருந்துதானே வந்திருக்கிறோம்" என்றேன்—கருவில் உருவாகி வந்த காதையல்லவா, அதனால் அவரும் உடனிருந்தோரும் சிரித்தனர்.

அது சரி, சூலூரிலிருந்து கிளம்புகிறோம், பிறகு நாம் செல்லுமிடம் எது ? கூறும் என்றேன், குறும்புக்காக. அன்று என்னவோ ஒருவிதமான மகிழ்ச்சி. மாநில மாநாட்டுக்காக நல்லதோர் திடல் கிடைக்க இருக்கிறது, அதற்கான 'உத்தரவு' பெற, மாவட்டக் கலெக்டரைத் துறையூர் சென்று காணப் புறப்படுகிறேன் என்று நண்பர் அன்பில் தர்மலிங்கம், அப்போதுதான் கூறி விட்டுச் சென்றார், அதனால் ஏற்பட்ட குதூகலம் என்று எண்ணுகிறேன்.

நண்பர் நடராசன், பதில் ஏதும் கூறவில்லை—வழக்கமாக அவரிடம் வெளிப்படுமே ஒருவிதமான வெறிச்சென்ற பார்வை, அதனைச் செலுத்தினார். நான் விடவில்லை.

"சொல்லுமய்யா, சூலூரிலிருந்து புறப்பட்டு வருகிறோம், பிறகு......" என்றேன்.

அவர் பதிலளிக்காதது மட்டுமல்ல, என்னிடமிருந்தே அதற்கான பதிலை எதிர்பார்த்தார்.

சூலூரிலிருந்து (கருவிலிருந்து) புறப்பட்டு, பாலூர் (அன்னையின் அன்புப் பாலூட்டப் பெறுகிறோம்) செல்லுகிறோம், பிறகு முறைப்படி வளர்ந்து வளர்ந்து, வேலையூர் (தொழில் செய்தல்) செல்கிறோம், அங்குப் பக்குவம் பெற்ற பிறகு சேலையூர் (திருமணம்) சென்று இன்புறுகிறோம், பிறகு வசதியூர் தேடுவதிலே ஈடுபட்டுக் கடைசியில் சுடலையூர் சென்று அமைதி பெறுகிறோம்—என்று நான் கூறினேன்.

"என்ன அண்ணா ! பெரிய தத்துவம் பேச ஆரம்பித்து விட்டீர்கள்—வேதாந்தம் பேசுகிறீர்—என்று நடராசன் கேட்டார். கருவிலிருந்து கிளம்பிக் கல்லறை வரை நடத்தும் பயணத்தையும் அந்தப் பயணத்தில் பொதிந்துள்ள தத்துவத்தையும் விளக்கவே, நான் சூலூரிலிருந்து நாமனைவரும் புறப்பட்டுச் சுடலையூர் பயணமாகிறோம் என்று சொன்னதாக அவர் எண்ணிக்கொண்டார். ஆனால் தம்பி, நான் வேதாந்த விசாரத்தில் அப்போது மூழ்கியுமில்லை; நான் பேசினதும் தத்துவம் அல்ல; இலக்கணத்தில் மனம் செலுத்திக் கொண்டிருந்தேன்.

சூலூர்
பாலூர்
வேலையூர்
சேலையூர்
வசதியூர்
சுடலையூர்

இப்படி 'ஓசை' நயம், கற்பனை செய்து கொண்டிருந் தேன்—காரணம், நமது கழக வளர்ச்சி கண்டு அகத்தில் குடைச்சலும் முகத்தில் கடுகடுப்புங் கொண்ட யாரோ ஒரு வர், தமிழில் அடுக்கு மொழி பேசிப் பேசி மக்களை மயக்கி விடு கிறீர்கள், அப்பாவி மக்களும் ஓசை நயத்தில் மயங்கி உள்ளத் தைப் பறி கொடுத்து விடுகிறார்கள், அதனாலேயே, உங்களால், கூட்டம் சேர்த்திட முடிகிறது, என்று ஏளனம் பேசினாராம். அதைக் கேட்டுக் கடுங்கோபம் கொண்ட தம்பி ஒருவர், "அண்ணா! இவ்விதமெல்லாம் பேசுகிறார்கள்" என்று கூறிக் குறைபட்டுக் கொண்டார்; அதனால் என் மனம், அடுக்கு மொழி, இரட்டைக் கிளவி, எதுகை மோனை ஆகியவற்றின் எழில், பயன் மீது சென்றது; அதே நேரத்தில் சூலூர் எனும் இடத்திலிருந்து வருகிறேன், என்று நண்பர் நடராசன் கூறி னார்; உடனே,

சூலூர்
பாலூர்
வேலையூர்
சேலையூர்
வசதியூர்
சுடலையூர்

என்றெல்லாம் பேசலானேன்.

ஓசை நயம் தேடுவதும் தருவதும் குற்றமல்ல, இசைக் கலையே ஓசை நயத்தைத் தரப்படுத்தித் தரப்படுவதுதானே! ஆனால் சிலர், ஓசை நயம் என்பது ஏதோ ஓர் இழுக்கான செயல் போலவும், அதன் பயனாக மாபெருங் கேடு மனித இனத்துக்கு ஏற்படுவது போலவும் பேசுவர். ஆராய்ந்து பார்த்தால் அவர்தம் போக்குக்குக் காரணம் கோபம் என்ப தும், அந்தக் கோபத்துக்குக் காரணம் கவலை என்பதும், கவலைக்குக் காரணம் அவர்கள் ஓசை நயம் காட்ட முயன்று ஏற்பட்ட தோல்வி என்பதும் விளங்கிவிடும்.

வீட்டிலே, சின்னத் தம்பி இருந்தால், அவன் எதிரில், குழல் கொண்டு இசை எழுப்பிப் பார்—சிறுவன் சிரித்து மகிழ் வான், சிட்டுப் போலே பறப்பான், எனக்கு எனக்கு—என்று கொஞ்சுவான், கொடுத்தால், ஊதிப் பார்ப்பான், ஓசை நயம் கிடைக்காது, ஒவ்வொரு முயற்சியும் ஒவ்வொரு ஓசைக் கொலையாகும், தோல்வி கண்டு துயருற்று, கோபமுற்று, ஊதுகுழலை ஓங்கிப் பூமியில் அறைவான்.

மொழியில் ஓசைநயம் பெறவும் காட்டவும் முயன்று, முடி யாததால் கவலை கொள்பவர்கள், கோபம் கொண்டு, தமக்குத்

துணைவர மறுக்கும் ஓசைநயம், பிறரிடம் பேரன்பு காட்டுவது கண்டு, பெருங் கோபம் கொண்டு, ஓசைநயம் என்பதே தவறானது, தீதானது, என்று தூற்றத் தொடங்குவர்.

காதல் கைகூடாவிடத்துத் தென்றல் தேள்கடியாகும், நிலவு தீயாகச் சுடும், மலரே முள்போல் தைக்கும் என்கிறார்களல்லவா! காதல் மட்டு மல்ல, எது கைகூடாவிட்டாலும் கடுப்பு ஏற்படுவதும் அந்தக் கடுப்புக்குக் காரணமாகக் கடுங் கோபம் மூள்வதும், அதன் விளைவாகக் கடுஞ் சொற்கள் கிளம்புவதும், நிரம்பக் காண்கிறோம். அந்த முறையில்தான், தமிழின் இனிமையை ஓசை நயத்தின் வழியாகக் காட்ட முயன்று, தோற்பவர்கள், அந்த முறையில் வெற்றி கண்டோரைக் காணும் போது கொதிப்புற்றுச் சுடு சொல் வீசுகின்றனர்.

தம்பி, சம்பத்திடம், சில ஆண்டுகளுக்கு முன்பு ஒருவர் வேடிக்கைக்காகக் கேட்டாராம், "என்னடா சம்பத்து, உங்கள் அண்ணாத்துரை, அடுக்கு மொழி பேசுகிறான்-எதற்காக? அடுக்கு மொழி பேசினால்தான் இயக்கம் வளருமா? சீனியும் பாதாமும் சுவை தராதா, அதனைக் கூட்டிக் கலக்கி 'ஜிலேபி'யாக்கினால் மட்டுந்தான் இனிப்பளிக்குமா? அது போல, இயக்கக் கொள்கைகளை, மெருகு மெட்டு இல்லாமல், உள்ளதை உள்ள படி சொன்னால் உண்மை விளங்காதா, அதை விட்டு, அதனை அழகுபடுத்துகிறேன், சுவை கூட்டுகிறேன், அடுக்குமொழி தருகிறேன், ஓசை நயம் காட்டுகிறேன் என்று ஏன் உங்கள் அண்ணா கூறித் திரிகிறான்?" என்று கேட்டாராம். சம்பத்து, "சரிதானய்யா, 'ஜிலேபி'யைச் சரியானபடி செய்யத் தெரிந்தவர்கள் செய்து தரட்டுமே, அதனால் என்ன? உங்கள் சீனியும் பருப்பும், 'ஜிலேபி' வடிவம் எடுப்பதால், சுவை கெட்டா விடுகிறது?" என்று திருப்பிக் கேட்டிருக்கிறான். அந்தப் பெரியவர், சம்பத்தின் வாதத் திறமையைக் காண்பதற்கே கேள்வி கேட்டவர், வயிற்று வலிக்காரரல்ல. எனவே அவர், மகிழ்ச்சியுற்று, முதுகில் தட்டிக் கொடுத்து, பொல்லாத பயல்! போக்கிரிப் பயல்! என்று செல்லம் பொழிந்தார்.

ஓசை நயம் குறித்து நம்மீது குறை கூறுவோர், நம்மைக் குறை கூற இதுவரையில் ஓராயிரம் காரணங்களைச் சிரமப்பட்டுத் தேடித் தேடி அலுத்தவர்கள்—ஒவ்வொன்றும் கிளம்பும் வேகத்தைவிட அதிக வேகமாக மடிந்தொழியக் கண்டு மன வேதனையுற்றவர்கள். எனவே அவர்கள், மொழியை நாம் கையாளும் வகைபற்றிக் குறை கூறிப் பேசுவது குறித்து நாம் கவலைகொள்வதற்கில்லை. குழலும் யாழும் குழந்தையின் மழலையின் இனிமைக்கு ஈடா என்று கூறினவர் வள்ளுவர், அடா!

அடா! காது குடைகிறது, ஏன்தான், இதுகள் கழுதை போலக் கத்துகின்றன, கோட்டான் போலக் கூவுகின்றன என்று குழந்தைகளைப் பேணி வளர்ப்பதில் பொறுமையும் திறமையும் அறியாதவர்கள் அலறக்கேட்கிறோம்; கலையா கொள்கிறோம்; இல்லை, இல்லை, கைகொட்டிச் சிரிக்கிறோம்.

முரசொலி, வீரர்க்கு மகிழ்ச்சி அளிக்கிறது, வீணில் உண்டு கொழுத்து இருப்போருக்கோ! ஐயோ! முரசு அறைகிறார்களே, போரல்லவா மூளும் போலிருக்கிறது, என்று திகில் பிறக்கிறது, எனவே, அவர்கள் முரசு முழங்கும் போது அதிலே ஓசை நயம் காண்பதில்லை.

சதங்கைச் சத்தம் கேட்டதும், சாலைக்கும் சோலைக்கும் அதற்குள் பல நூறுதடவை நடந்து நடந்து அலுத்துப் போய்ச் சலித்துக் கொண்டுள்ள காதலன், புன்னகை கொள்கிறான், காதலி வருகிறாள், ஓசை நயம் அதனைத்தான் அறிவிக்கிறது என்று. காதலிக்குப் பதிலாக வேறோர் காரிகை அங்கு வந்து, தந்தை தடுத்து விட்டார், தத்தை இன்று வரமாட்டாள்—என்ற செய்தியை அளித்தால், ஓசை நயத்தின் விருந்துண்டவனே வேம்பு தின்றவனாகிறானல்லவா!

ஆலயமணியோசை, ஆலைச் சங்கொலி, சோலைக் குயிலின் கூவல், காலையில் காகம் கரைதல், கன்று தாயை அழைத்தல்—ஓசை நயம் ஒவ்வொன்றில் ஒவ்வொருவருக்கு, அவரவர் இயல்புக்குத் தக்கபடி கிடைக்கத்தான் செய்கிறது. எனவே 'ஓசை நயம்' என்பது வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. ஆனால் அதேபோது.........

அதோ பார் குகை
அங்கு முடிப்பேன் என் பகை
அறிவாயோ, என்னிடம் தோற்றவர் தொகை
ஆயிரம் உண்டு போர் வகை

குகை—பகை—தொகை—வகை!!

மேலும்கூடக் கூட்டிக் கொள்ளலாம், சிகை, நகை, என்றெல்லாம்.

ஓசைநயம் தமிழில் நிரம்பக் கிடைக்கும்—ஆனால் அதை மட்டுமே நம்பி, 'நடை' காட்டினால், சிறிது நாட்களில், தமிழின் இனிமைபற்றி அனைவரும் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே, அதற்கேகூட ஊனம் வந்து விடும்.

ஓசைநயம்—அடக்குத் தொடர்—இரட்டைக் கிளவி—போன்றவைகள், பூங்காவிலுள்ள கவின் மலர்கள் போன்றவை!

தாமாக மலர வேண்டும்—மணமுள்ளவைகளைப் பதமாகப் பறித்துப் பக்குவமாக மாலே தொடுக்க வேண்டும்—அப் போதுதான் கவர்ச்சி கிடைக்கும்.

ஓசை நயத்தை எப்படியும் பெற்றுத் தீரவேண்டும் என்று முயற்சித்தாலோ, காது குடைச்சல் ஏற்படுவது மட்டுமல்ல, மொழிக்கு ஏற்பட்டுள்ள பெருமதிப்பும் குன்றும், குறையும்.

கழுதூர்
பழுதூர்
தொழுதூர்
வழுதூர்

தம்பி, இந்தப் பெயர்ப் பட்டியலைப் பார்த்தாயா ? ஓசை நயத்துக்காகவே வேண்டுமென்றே இட்டுக்காட்டியது போலல் லவா தோன்றுகிறது?

குகை
பகை
தொகை
வகை

என்று தேடிப் பிடித்திழுத்து, கூட்டிக் கலக்கித் தருவது போலவே வழுதூர், தொழுதூர், கழுதூர், பழுதூர், கற்பனைக் கலவை என்றுதான் எண்ணிக்கொள்வாய்; ஆனால், உண்மையி லேயே இந்தப் பெயர்கள் கொண்ட ஊர்கள் தமிழ் நாட்டில் உள்ளன. அனைத்தையும் ஒருசேரக் கூறும்போது, குகை, பகை, தொகை, வகைபோல, வேண்டுமென்றே ஓசை நயத்துக் காகவே கூறப்படுபவை போலத் தோன்றும்.

ஓசை நயத்தில் இயல்பாகவே அமைந்து, பொருள் செறிந்து, பொலிவு தருபவையே தேவை; பொருளற்று, பொலிவற்று வலிந்து கொண்டு வருவது மொழிக்கு நாமே நம்மையும் அறியாமல் செய்துவிடும் தீங்காகும்.

ஓசை நயம் உயர்தரமாகவும், இயற்கைக்கு முற்றிலும் பொருந்திய தன்மையிலும் அமைந்துள்ள காப்பியங்களும், பாக்களும், தமிழ் மொழியில் உள்ள அளவு, பிற மொழி களிலே உண்டா என்பது சந்தேகமே.

மொழி வளமுள்ளதாகவும் நெடுங் காலமாகப் புலவர் பெருமக்களால் வளர்க்கப்பட்டதாகவும் இருந்தால் மட்டுமே, சுவையும் பொருளும் ஒரு சேரத்தரவல்ல ஓசை நயம்—அடுக் குத் தொடர் ஆகியவை கிடைக்கும். தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள நமக்கு அந்தச் செல்வம்

நிரம்ப இருக்கிறது. கண்டறிவதும் கொள்வதும் எளிது; கொண்டதைப் பொருள் உணர்ந்து தருவது கடினம்; எனினும் இயலாததன்று. எப்படியும் ‘ஓசை நயம்’ தந்தாக வேண் டும் என்ற ‘மன அரிப்பை’ச் சிறிதளவு அடக்கிக் கொண்டால் போதும், உயர்தரமான, ‘ஓசை நயம்’ கிடைக்கும்.

என்ன அண்ணா! தமிழாசிரியர் ‘வேலை’யைத் துவக்கிவிட் டாயே, என்று கேட்கிறாயா, தம்பி!

அடுக்கு மொழியாலும் ஓசை நயம் காட்டியும், மக்களை மயக்கி அவர்களை ஆகாத வழியெலாம் அழைத்துச் சென்று ஆன்றோரும் சான்றோரும் அமைத்தளித்த அறநெறியை, அருள் நெறியைக் கெடுத்தொழிக்கிறோம் என்றோர் பழி படர்ந்திருக்கிறதல்லவா, நம்மீது; அது பற்றிய ‘விளக்கம்’ விரும்பினார் ஒரு தம்பி! அவருக்குக் கூறுவதை உனக்கும் காட்டுவோமே என்ற எண்ணத்தில் இதை எழுதினேன்.

கலை
சிலை
வலை
நிலை
உலை
மலை
தலை
இலை

இவை, சிறு சிறு மாற்றங்கள் செய்து விட்டால்,

காலை
மாலை

என்று புதுவடிவம் மட்டுமல்ல, பொருளே மாறி விடு கின்றன!

மிகக் குறைந்த அளவு எழுத்தில் மாற்றங்கள் செய்து, முற்றிலும் வேறான பொருள் பெறத்தக்க வகையில், தமிழ் மொழி, அழகுற அமைந்திருப்பதைக் காணும் போது, நமக் கெலாம் பெருமையே பிறக்கிறது.

ஆனால், இவைகளை ஒரே இடத்திலே கூட்டி வைத்துக் காட்டியாக வேண்டுமென்ற ‘மன அரிப்பு’ ஏற்பட்டுக் கலை வலை என்பார், சிலைக்கும் உலைக்கும், மலைக்கும் தலைக்கும், இலைக்கும் ஓலைக்கும் வித்தியாசம் தெரியாத நிலையில் உள்ள வர்கள் என்று ஒரு தொடர் கட்டிக் காட்டி, இதிலே கலை, சிலை, வலை, நிலை, உலை, மலை, தலை, இலை, ஓலை, அத்தனையையும்

அடைத்துக் காட்டி இருக்கிறேன், எப்படி என் திறம்? என்று கேட்பது மொழிக்குத்தான் பெருமை தருகிறதா, அதைக் கையாள்வோருக்குத்தான் பெருமை தருமா?

நாம், ஓசைநயம் காட்டி, அடுக்கு மொழி பேசி, மயக்கி விடுகிறோம், என்று குறை கூறுவோரில் பலர், ஓசை நயமும் அடுக்கு மொழியும் இவர்களுக்குத்தானா, எமக்கும் எளிதுதான் என்று கூறி, வேட்டையாடி, நான் இப்போது காட்டிய 'தொடர்' போன்றவைகளைக் கட்டிக் காட்டுகிறார்கள்; விலைபோகாதது கண்டு கோபமும் கொள்கிறார்கள்.

துடுக்குத்தனமாக
அடுக்கு மொழி பேசுவோரை
மடக்குவதற்கு
வெடுக்கு மொழி பேசி
முடுக்குடன் நான் வந்தால்
தடுக்கும் பேர்வழி யார்?

நமது 'அடுக்கு மொழி'யைக் கண்டிக்கத் துடுக்கும் அடுக்கும், மடக்கும் வெடுக்கும், முடுக்கும் தடுக்கும் சரமாரியாகக் கிளம்புகின்றன. எல்லாம் குறி தவறி விடுகின்றன; கூரும் மழுங்கிப் போகின்றன.

'அடுக்கு மொழி' ஆகாது என்பதாலோ, அது தவறு என்பதாலோ அல்ல பிறர் அது குறித்து, நம்மைக் கண்டித்துப் பேசுவது. அடுக்குமொழி பேசவேண்டும் என்பதுதான் அவர்கட்கும் உள்ள ஆவல்; ஆனால் அது சுவைபடவும் பொருள் தரவுமான முறையில் நம்மிடம் இருப்பது கண்டு, இது இவர்களிடம் இருக்கிறதே என்ற எரிச்சலில் பழம் புளிக்கிறது என்கிறார்கள்! வேறொன்றுமில்லை.

அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காகவும், நாம் மொழியின் அழகு விளங்கிடும் வகையான அடுக்கு மொழியின் ஓசை நயத்தினை விட்டு விடவும் தேவையில்லை; ஓசை நயமும் அடுக்கு மொழியும் இருந்தால் மொழி அழகு பெறும் என்பதற்காகவே, தேடித் திரிந்து கூட்டில் அடைத்து வைத்து அழகு பார்க்கவுந் தேவையில்லை.

இருளைக் கீறிக் கொண்டு செல்லும் போதுதான், மின்மினியே அழகளிக்கிறது; மின்மினி ஒளி தருவது கண்டு, அதனைக் கண்ணாடிப் பெட்டிக்குள் அடைத்துவைத்து, அழகு காண முயற்சித்தல் சரியல்ல.

ஓசைநயம் தமிழ் மொழிக்கு மட்டுமே நிரம்பவும் நேர்த்தியுடனும் இருக்கிறது என்பதற்காகவே, அம் மொழி

வேறெல்லா மொழிகளேயும்விட உயர்ந்தது என்று மார்தட்டத் தேவையுமில்லே; அது அழகுமாகாது. இருபத்து ஆறு எழுத்துக்களே மட்டுமே கொண்ட ஆங்கில மொழி இன்று, உலக அரங்கம் எங்கணும் உயர்வு பெற்றுத் திகழ்கிறது; மறப்பது கூடாது.

கா
மா
வா
தா
போ
பா
பூ
தை
வை
கை
தீ
ஈ
நீ
சீ
தூ

இப்படி ஒரே எழுத்துக்கூடத் தமிழ் மொழியில் பொருளளிக்கும்திறம் பெற்றுத் திகழக் காண்கிறோம்; எனினும் இதனே வேண்டுமென்றே ஒரு கூட்டுக்குள் பிடித்திழுத்துப் போட்டுக் காட்ட 'நடை' தேடுவது நல்லதல்ல; அதாவது அளவும் முறையும், தேவையும் அறிந்து பயன் படுத்தினுல் எழிலும் சுவையும் நிரம்பக் கிடைக்கும்; தவறிஞல் எரிச்சல் கிளம்பும். ஏளனம் பிறக்கும்.

முறையுடன் தந்திடின் எத்துணே எழில் கிடைக்கிறது என்பதைத் தம்பி, இதோ இந்தப் பள்ளு எடுத்துக் காட்டுகிறது—பார்.

வானக் குரிசில் வள்ளலாய்—வரைக்
கோணப் பரிசு கொள்ளலாய்
வழங்கு மாறும் புறப்பட்டே—புனல்
முழங்கு மாறும் தலேப்பட்டே
தானக் களிறு படிந்திடக்—கொலே
ஏனக் களிறு மடிந்திடத்

தழையின் ஆரம் உந்தியும்—பசும்
கரையின் ஆரம் சிந்தியும்
கானக் குளவி அலேயவே—மது
பானக் குளவி கலேயவே

முக்கூடற்பள்ளு தரும் ஓசை நயம் இங்ஙனம் அமைந்திருக்கிறது. எனவே ஓசைநயம் எற்றுக்கு என்று கேட்போர் பற்றி நாம் கவலேப்படுவதற்கில்லே. ஆனால் முறையற்ற ஓசை நயம் கூடாது என்ற எண்ணம் நமக்கு எப்போதும் துணே நிற்க வேண்டும், இல்லே என்றால்,

பள்ளாம் பள்ளு
தள்ளு தூரத் தள்ளு

என்று 'விளேயாட'த் தோன்றும்—துவக்கத்தில் அது விலே போகவும் செய்யும், பிறகோ மொழியின் அழகுக்கு நாமே ஊறு செய்கிறோம் என்ற உணர்வு வந்து தாக்கும்.

'கூட்டுப் புருவம்' சில குமரிகளுக்கு இருந்திடக் கண்டிருப்பாய்—புருவமே இப்போது அருமையாக மட்டுமே காணக் கிடைக்கும் காட்சியாக இருக்கிறது—எனவே 'கூட்டுப்புருவம்' நிரம்பக் கிடைத்திடாது; ஆனால் அது இயற்கையாக அமைந்தாலோ அந்த அணங்குக்கு அது தனியானதோர் அணியாகவே விளங்கிடும்—ஆனால் அதனேக் கண்டு, சரி, சரி, கூட்டுப் புருவம் அழகளிக்கிறது, எனவே இரு புருவங்களேயும் மை கொண்டு இணேத்து, கூட்டுப் புருவம் ஆக்கிக் காட்டுவோம், என்று செய்தால் தூரத்துப் பார்வைக்கு அழகளிக்கக்கூடச் செய்யும், அருகே செல்லச் செல்ல,'மைவண்ணம்' காண்போம், கண்டு, இவ்வளவுதானா ! என்போம்; ஏளனம் கூடச் செய்யத் தோன்றும், நமக்கு ஏற்படுவதைவிட அதிகச் சங்கடம் கூட்டுப் புருவம் தீட்டிக் கொண்ட குமரிக்கு ஏற்படும், வண்ணம் எப்போது கைபட்டுக் கலேந்து விடுகிறதோ என்ற அச்சம் குடையும்.

மொழியின் ஓசை நயம் குறித்தும், இதே கதிதான்.

தம்பி ! சினிமாக்களில் ஒரு முறையைக் கையாளுகிறார்கள்.

அங்குக் கதைகட்கு ஏற்றவகையில் புருவங்கள் தேவைப்படுகின்றன ! குனித்த புருவம், கூட்டுப் புருவம், நெரித்த புருவம், படர்ந்த புருவம், வில்லுப் புருவம்—இப்படிப் பலப்பல !

நல்ல பெண்மணியின் புருவம் வில்போல் வளேந்து இருக்கும்—இருக்கவேண்டும். காதகிக்குப் புருவம், அரவம்போல

அச்சமூட்டுவதாக அமைதல் வேண்டும். அப்படி அங்கு ஒரு முறை !!

எந்த ஏந்திழையிடம் இத்தனை புருவங்கள் கிடைக்க முடியும். எனவே அங்கு முதலில், ஏந்திழையின் இயற்கைப் புருவத்தை எடுத்து விடுகிறார்கள்—வழித்தெடுத்து விடுகிறார்கள்—இயற்கை பறிக்கப்பட்டான பிறகு, எழில் காட்டும் கலைஞன் தன் இச்சைக்கு ஏற்ப, புருவங்கள் அமைக்கிறான்—காதளவு வளர்ந்த கண்ணினை என்னென்பேன், காமன் தன் கருப்பு வில் போன்ற புருவத்தைக் கண்டேன், அதன் அழகை எவ்வாறு கூறுவேன் என்றெல்லாம் பிறகு திரைக் காதலன் பாடம் படிக்கிறான். கொட்டகைக் கோமான்கள் குதூகலமடைகிறார்கள். ஆனால் உண்மையில் இயற்கையாக இருந்த 'புருவம்' பறிபோய்விட்டது, இரவல் புருவம் பிறர் காணும்போது எழில் காட்டும் வகையில், அமைக்கப்படுகிறது.

தமிழ் மொழியிலும், தம்பி, அதற்கென்று இயற்கையாக அமைந்துள்ள, எழில் முறைகளைக் களைந்தெறிந்துவிட்டு, பிற மொழிச் சொற்களையும் முறைகளையும் கலந்து புதிய எழில் காட்டுகிறோம் என்று கூறுவாருளர்.

சினிமாக்களுக்குச் சிதைத்தலும் சேர்த்தலும், கூட்டலும் குறைத்தலும், மறைத்தலும் மிகுத்தளித்தலும் தேவைப்படுகிறது; அந்த உலகத்து இலக்கணம் அது; குறை கூறுவதற்கில்லை; ஆனால், மொழித் துறையில் இந்த முறையைப் புகுத்தி, உள்ள எழிலை உருக் குலையச் செய்து, பாழ்படுத்துவது அடாத செயலாகும். ஆனால் 'மேதை'கள் பலர், பிற மொழிச் சேர்க்கையும், பிற முறைகளின் சேர்க்கையும், தமிழ் மொழியை வளமாக்கும் என்று காரணம் காட்டி இந்தத் தீய செயலைச் செய்து வருகின்றனர்.

இதனை அறிந்து, தடுத்திட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பணியாற்றும் நம்மாலேயே கூட, (சற்று அதிகமாகவே என்னால் !) பிறமொழிச் சேர்க்கையையும் பிற முறைகளின் சேர்க்கையையும் நீக்கிப் பேசவும் எழுதவும் முடியாமலாகி விட்டிருக்கிறது—ஏனெனில், நாம், தூய தனித் தமிழ் சித்திரவதை செய்யப்பட்டுப் பிறமொழியும் பிற முறையும் கலந்து பேச்சும் எழுத்தும் 'மணிப் பிரவாளம்' என்ற வடிவு கொண்டு, தமிழும் வடமொழியும் குழைத்து வழங்கப்பட்ட நாட்களில் பயின்றவர்கள்—எனினும், புலவர் பெருமக்களின் அறிவுரை கேட்டதால், இந்தக் 'கலவை' தீது பயப்பது என்று தெரிந்து, தமிழ் மொழிக்கு மீண்டும் தனியானதோர் ஏற்றம் தேவை என்ற தூய நோக்குடன் பணியாற்றி வரு

கிறோம். எனவே, நம்மாலே முற்றிலும் 'தனித் தமிழ்' எழிலைக் காட்ட இயலவில்லை.

நானே, பல தடவைகளில், பேசியானபிறகும், எழுதியான பிறகும், இன்னின்ன சொற்களுக்கு இன்னின்ன தமிழ்ச் சொற்களைக் கையாண்டிருக்கலாமே—தவறிவிட்டோமே என்று எண்ணி வருத்தமுறுவதுண்டு. எனினும், தம்பி, எங்கள் மூலம் நீ இவ்வளவுதான் பெறலாம்—அதிகம் எதிர்பார்க்காதே—ஆனால் உன்னாலே முடியும் இந்தக் குறைகளையும் களைய—நாடு உன்னிடம் நிச்சயமாக அதிகம் எதிர்பார்க்கிறது.

ஆரிய மதக் கற்பனைகளுக்கு நிரம்ப இடமளித்து விட்டதால், தமிழ் மொழிக் குரிய இயல்பு எத்துணை கெட்டொழிந்தது என்பதனை அறிய, வேறெந்தத் துறையினையும் விட 'உவமை' கூறுகிறோமே, அந்தத் துறையினைப் பார்த்தால், மிக மிக விளக்கமாகத் தெரிந்துவிடும்.

சனியனே ! உயிரை வாங்காதே.

எமன் போல வந்து தொலைத்தான்.

பெரிய அரிச்சந்திரன் தான், வாயை மூடடா !

துர்வாசர் போலச் சீறுகிறான்.

போதும், போய்ப் படுத்துத் தூங்கடா, அனுமாரே !

துரோபதை போலக் கதறுகிறாள்.

கலியுக பீமசேனன் என்று அவனுக்குப் பெயர்.

ஆசாமி, அர்ஜுனன்தான் !

அவள், ரம்பையேதான்.

அமிர்தம் போல இனிப்பான பானம்.

குபேரபட்டினம் போலக் காட்சி அளித்தது.

நிரம்பப் பேசுகிறோம், இது போல மேடைகளிலும், வீடுகளிலும், பழமை விரும்பிகள் மட்டுமல்ல, நாம் கூட.

கொல்லிமலைப் பாவை ! என்று கூற நமக்குத் தோன்றுவதில்லை; கூறிடின், புரிந்துகொள்வோரும் புலவர் அவையிலே மட்டுமே கிடைப்பர்; மக்கள் மன்றம் மறந்தேவிட்டது.

கொல்லிமலையில் ஓர் சித்திரப் பாவை செதுக்கப்பட்டிருந்ததாம்.

அத்துணை எழிலாம், அப்பாவைக்கு.

தொலைவிலிருந்து காண்போர், அழகால் ஈர்க்கப்பட்டு, அருகே செல்வராம், காண்பராம், உள்ளத்தைப் பறி

கொடுத்து விட்டு நிற்பராம், நிற்பராம், அந்த அழகு அவர் தம் உயிர் குடித்திடும் வரையில் நிற்பராம்.

மயக்கி மாய்த்திடும் பொலிவு, கொல்லிமலைப் பாவைக்கு! ஆனால், நாம் இதனை 'உவமைக்கு'க் கையாண்டதுண்டோ? இல்லை; ஏன்? நமது எண்ணத்திலேயே, பிறமொழிக் கருத்துக் கலக்கப்பட்டு விட்டதால், அழகு பற்றியோ, அதனால் வந்துறும் அவதிபற்றியோ எடுத்துரைக்க நினைக்கும் போதெல்லாம் மேனகை, ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, இவர்களே, நமது நாவில் நின்றுவிடுகிறார்கள். தமிழ் மொழியில் காணக் கிடக்கும் கொல்லிமலைப் பாவையை மறந்தே விட்டோம். இயற்கைப் புருவத்தை எடுத்தான பிறகு, கூட்டுப் புருவம், மிரட்டும் புருவம், எல்லாம் அமைத்துக் கொள்கிறோம்.

எனவேதான், தம்பி! தமிழ் மொழியில் காணக் கிடைக்கும், 'ஓசை நயம்' போன்ற எந்த எழிலையும் இழந்துவிடக் கூடாது என்று கூறிவருகிறோம்; அதேபோது, அந்த எழில் வேண்டும் என்பதற்காகவே, 'இட்டுக் கட்டியும்' 'இழுத்துக் குழைத்தும்' தரக்குறைவு ஏற்பட்டு விடும்படியும் செய்துவிடக் கூடாது என்கிறோம். தமிழ், எழிலும் பயனும் அளித்திடும் இன்மொழியாகத் திகழ்வதன் பொருட்டு முந்தை நாளில் புலவர் பெருமக்கள் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிகள் பலப்பல.

செதுமொழி சீத்த செவி செறுவாக
முதுமொழி நீராப் புலன் நாஉழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர

செவியில் பொல்லாத சொற்களே புகுவதில்லை.

செவிகளின் வழி பாய்வது சான்றோர் செய்யுட்களாம்!

நாவினையே ஏராகக் கொண்டு புலவர் உழுதுண்டனர்.

அவர்தம் மொழிகள் பழங்கதைகளாக இல்லை; புதுமொழிகள் தந்தனர்—அவைதமை மக்கள் கொள்ளை கொண்டு உண்டனர்.

இத்துணைச் சிறப்புடன் புலவரும் அவர்தம் உழவின் பலனை உண்டு களித்த மக்களும் வாழ்ந்திருந்ததனால் நாம் இன்று ஓர் உயர்தனிச் செம்மொழிக்கு உரிமையாளரானோம். உலகிலே எத்துணையோ தேயங்கள், இத்தகு மொழி பெற்றோமில்லையே என்று வாடிக் கிடந்திடுவதனையும், பிறமொழிகளின் துணையினைத் தேடி அலைவதனையும் காண்கிறோம்.

கள்ளக் கடத்தலைக் குறித்திட 'இந்தி'யில் சொல்லொன்று கிடைக்காது திகைத்தனர் ஆட்சியாளர் என்றோர் செய்தி, கண்டோமல்லவா சின்னாட்களுக்கு முன்பு.

இயலாமையை இந்த அளவுக்குப் பெற்றுக் கிடக்கும் 'இந்தி' மொழிக்கு ஏற்றம் கிடைக்கிறது; தமிழ் இனத்துதித் தோரில் சிலர் அம்மொழி எம் மொழி என்றும் பேசிடக் கேட் கிறோம், கருத்தினை விளக்கிட எழுத்து ஒன்று போதும், ஈரெழுத்து மட்டும் போதும் பொருளளிக்க, சிறு சிறு எழுத்து மாற்றங்கள் மூலமே, பொருள் மாற்றம் பெரிதும் காட்டிட இயலும், அதனையும் அழகுபட, ஓசை நயத்துடன் எடுத்துக் கூற முடியும் என்ற இத்துணைச் சிறப்புடன் தமிழ்மொழி இருந் திடக் காண்கிறோம், எனினும் அதற்கென்று ஓர் தனி இடம், உயரிய இடம், உரிமையான இடம், பெற்றளிக்கும் திறனுமற் றுக் கிடக்கிறோம்.

கானவன் யானைமீது வீசிய கவண்கல் வேங்கையின் பூவைச் சிதறி ஆசினி மென்பழத்தை உதிர்த்து, தேனின் இரு லைத் துளைப்படுத்தி, மாவின் குலையை உழக்கி, வாழையின் மடலைக் கிழித்து, பலாவின் பழத்துட் சென்று தங்கும்.

குறிஞ்சிக் காட்சியினைக் கூறுகிறார் புலவர்.

இவ்வளவுதானே, உமது புலவர் பெருமகனாரால் கூற முடிகிறது; இதோ கேளும் எமது புராணீகர் கூறுவதை. எம் பெருமான் ஸ்ரீராமச்சந்திரருடைய கோதண்டத்திலிருந்து கிளம்பிய 'அஸ்திர'மானது, புயற்காற்றெனக் கிளம்பிச் சென்று, இராவணன் மார்பைத் துளைத்து, உயிரைக் குடித்து, அவன் உள்ளத்தில் எங்கெங்குச் சீதாதேவி மீது காமக் கருத்து இருக்கிறது என்று தேடிப்பார்ப்பது போல உள்ளத்தைச் சல் லடையாகத் துளைத்து, பிறகு காரியம் வெற்றிகரமாக முடித் தான களிப்புடன், கடலிற் சென்று குளித்துக் கறை போக்கிக் கொண்டு, மீண்டும் பறந்து வந்து காகுத்தன் அம்பறாத் தூணி யில் சேர்ந்தது, என்கிறார் நம்பெருமாள் ஐயங்கார் !

மொழி, வரிவடித்தால் மட்டுமல்ல, மொழி மூலம், தரப் படும் கருத்துக்களின் வகை மூலம், ஒன்றுக் கொன்று எவ்வளவு மாறுபட்டன என்பது, குறிஞ்சியைக் காட்டிய நந்தமிழ்ப் புல வர் தரும் பாவுடன், இராமனின்வீரத்தை விளக்கிடப் புராணீ கன் தரும் ஆரியத்தினை ஒப்பிட்டுப் பார்த்தாலே விளங்கி விடும்.

புராணீகனின் கருத்தினை மறுத்திடாமல், ஆய்ந்து பாரா மல், ஏற்றுக் கொள்வதாயினும், இராமனுடைய 'தெய்வீகம்' வேண்டுமானால் விளங்குமே தவிர, பாநயமோ, இயற்கை உண்

மையின் அழகோ அதிலே துளியும் கிடைக்காது. இராம னுடைய 'அஸ்திரம்' மட்டுமே புராணீகன் சொன்னபடிசெய்ய முடியும்! குறிஞ்சி குறித்துப் பாடிய புலவன் காட்டும் கவண் கல் இருக்கிறதே தம்பி, அது நீயும் நானும், எடுத்து வீசினுலும் செய்யுளிலே காட்டப்படும் செயலைத்தான் முறைப்படி செய் யும்; அவ்வளவு இயற்கையோடு ஒட்டியதாகக் கருத்தினைத் தந்துள்ளார் புலவர்.

பெரிதும், கண்டகாட்சிகளைக் காண்பதால் ஏற்படும் கருத் துடன் இணைத்துத் தருவதற்கே பண்டைத் தமிழ்ப் புலவர்கள் விரும்பினர்.

காடுகளையும் கானுறுகளையும், ஓடைகளையும் அவைதமில் துள்ளும் மீன்களையும், குவளையையும் தாழையையும், யானை யையும் பெடையையும், செங்கால் நாரையையும் கருங் குயிலையும், கடுவனையும் மந்தியையும், உதிர்ந்த பூக்களையும் உலர்ந்த தருக்களையும், பாய்ந்தோடும் அருவிகளையும் பட்டுப் போன மொட்டுக்களையும்,காணும்போதெல்லாம் அவர்கட்குக் கருத்து ஊற்றெடுத்திருக்கிறது, அத்துணைக் கருத்தும், உண்மை யோடு ஒட்டியவையாக, கேட்போர் மறுக்கொணு வகையின தாக, கேட்டு இன்புறத்தக்கதாக அமைகின்றன. இந்தச் சிறப்பு புலவர் தேடித்தந்தது; புராணிகன் தேடித்தருவது அஃதன்று.

கானவன் கவண் வீசுகிருன் தம்பி! துவக்கத்திலேயே, புலவர் கானவனைக் கவண் வீசச் சொல்கிருர், ஏனெனில் வீச வேண்டிய முறைப்படி அதற்கேற்ற பயிற்சி பெற்றநிலையி லுள்ளவன் வீசினுலல்லவா, கவண்கல் செய்ய வேண்டியதைச் செம்மையுறச் செய்யும்.

தாக்க வந்தவனை, ஆட்டுக் குட்டியைத் தூக்கி எறிவது போல எறிந்தான்—என்ற கருத்தை அளிக்க முற்பட்டால் மல்லன் என்ற சொல்லைக் கோத்தாக வேண்டுமல்லவா, ஏனெனில் மல்லன் செய்யக் கூடிய காரியமல்லவா, அது; அது போலத்தான், யானைமீது வீசவேண்டும் கல்லினை—எனவே புல வர், கானவனைத்தான் காட்டுகிருர்.

கானவன், கவண்கல் வீசுகிருன் யானைமீது!

புராணீகனுடைய கல் அல்ல அது; எனவே யானை சாக வில்லை, விரண்டோடி விட்டது; வீசப்பட்ட கல்லோ வேங்கை மரத்தின்மீது உராய்ந்து செல்கிறது. வேகமாகச், செல்வதால், பூத்துக் கிடக்கும் பூ சிதறுகிறது, கல் சென்று கொண்டிருக் கிறது, ஆசினிப் பழத்தை உதிர்க்கிறது, தேன் அடை துளைக்கப்

படுகிறது, மாவின் குலே தாக்கப்படுகிறது, வாழை மடலேக் கிழிக்கிறது, இறுதியாகப் பலாப் பழத்துட் சென்று தங்கி விடுகிறது.

கல் செல்லும் வழியெலாம் ஒரு முறை கருத்தைச் செலுத்திப் பார் தம்பி, சுவையுள்ள இடம் சேருவாய், கல்லே, சுவை மிகும் பலாப் பழத்தை அல்லவா சென்று சேருகிறது.

வீசப்பட்ட கல்லின் வேகம், படிப்படியாகக் குறையும், வேகம் குறையக் குறைய, அதன் செயல் படும் வலிவும் குறையும் என்ற உண்மையை, யானைமீது வீசப்பட்ட கல், வேங்கை மரத்துப் பூக்களைச் சிதறச் செய்து, ஆசினிப் பழத்தை உதிரச் செய்து, தேன் அடையைத் துளைத்து, வாழை மடலேக் கிழித்து, இறுதியில் பலாவிடம் அடைக்கலம் புகுந்துவிடுவதாகக் கூறி விளக்கும் அழகினைப் பார். யானைமீதே கல் பட்டிருந்தால், கல் பிறகு யானை மீது மோதுண்ட காரணத்தால், மேலால் செல்லாது, கீழே 'தடும்' என விழும்; பிறகு வேங்கையும் ஆசினியும், மாவும் பிறவும், புலவர்தம் பாவினிலே வரத் தேவை ஏற்பட்டிராது.

வேங்கையின் மலர், ஆசினிப் பழம் இவற்றினைச் சிதறவும் விழவும் செய்தாரே தவிர, இதற்குள் கல்லின்வேகம் குறைந்து போயிருக்கும் என்ற இயற்கை உண்மையை உணர்ந்தவராதலால் மாங்குலேயின் மீது கல் பட்ட போது, உலுக்கி விடும் அளவுக்கும், பிறகு வேகத்தால் கிடைக்கும் வலிவு கல்லுக்குக் குறைந்து விடுவதால், வாழை மடலேக் கிழித்திட மட்டுமே இயலுமாகையால், அதனை மட்டும் கூறி, வேங்கை உயரத்துக்கு வேகமாக மேலெழும்பிய கவண்கல், பிறகு ஆசினி, மா, வாழை என்ற அளவுக்குக் கீழே இறங்கி, கடைசியில் பலாவில் சென்று தங்குகிறது—பழம், எனவே, கல் புக முடிந்தது, பலாப்பழம் எனவே அதற்குள்ளேயே ஒட்டிக்கொண்டு விட்டது என்ருர். தம்பி ! இவ்வளவு இயற்கையோடிணைந்ததாகக் கவிதை தருகிருர்; செய்யுட் சுவையுடன் கூடவே செந்தமிழ் நாட்டு வளம் தெரிந்திடச் செய்கிருர்.

யானை உலவும் காடுகள்; அங்குத் துணிவுடன் உலவும் கானவர்; அவர்கள் கவண் வீசும் திறம்; ஓங்கி வளர்ந்த வேங்கை மரம்; கனிதரும் மாவும் வாழையும் பலாவும், கானகத்தில் ! இவ்வளவு வளம் தமிழகத்தில்; குறிஞ்சி மட்டுமல்ல, எந்த நிலம்பற்றிப் பாடினுலும், இதே முறை—உண்மையை அழகு பட உரைத்திடுவது; இல்லே, தம்பி, உண்மையை உரைக்கிருர், அதிலே அழகு தவழ்ந்து வருகிறது !

இந்தத் ‘தமிழ்’ இனிமை பெற, ‘இரவல்’ எற்றுக்குப் பெற வேண்டும்? புள்ளிக் கலாபம் படைத்த மயிலுக்கு, வான் கோழிச் சிறகாலான தோகை தரவேண்டுமா! கிளி அழகு பெற, அதற்குப் பச்சை வண்ணம் பூச வேண்டுமா? கேட்க வேண்டாம் தம்பி! கோபிப்பர்! எண்ணிப் பார், அது போதும்!!

அன்புள்ள,

*18—3—1956*

அண்ணாதுரை

கடிதம் : 42

# எங்கள் பெரியார்

* அரசனும் அமைச்சரும்—கதை—இராதாவின் நாடகம்—திராவிடக் கழகக் கிளர்ச்சியும் தி. மு. க.வும்.

தம்பி!

ஆற்றலரசர்கள் காலம் முடிவுற்று, ‘அரசன் மகன் அரசன்’ என்ற நிலை பிறந்த பிறகு இருந்த ஒரு முடிதாங்கிக் காலத்துக் கதை கூறுகிறேன்—குடி அரசுக் காலத்து நிகழ்ச்சிக்கு விளக்கம் காணப் பயன்படுகிறது.

காலையில் கண் விழித்த காவலன், அரண்மனை ‘மாடி’யில் வந்து நின்றான். ‘அரச பாட்டை’யில் ஒருவன் அரண்மனையை அண்ணாந்து பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்; அரசன் கண்களுக்கு வேறு விருந்து ஒன்றும் கிடைக்கவில்லை; சரி, என்று சலித்தபடி, பார்த்துவிட்டு உள்ளே சென்றான்; செல்லும்போது, ‘வாசற்படித் தூலத்தில்’ தலை மோதிக் கொண்டது, இரத்தம் கசிந்தது.

அப்பப்பா! என்று அரசன் அலறினான்; களம் கண்ட காவலனல்லவே, வளை ஒடிந்ததாலும், பல் படிந்ததாலும் மட்டுமே ஏற்படும் வடுக்களைக் கண்டவன். எனவே, தலையில் அடி பட்டதும், துடியாய்த் துடித்தான். அரசனல்லவா? எனவே, ‘அப்பப்பா’வைக் கேட்டதும், ஆட்கள் ஓடோடி வந்தார்கள். மருத்துவர்கள் அழைக்கப்பட்டார்கள், அமைச்ச

ருக்கு ஆள் அனுப்பப்பட்டது. அவனுடைய வேட்டைக்குச் சிக்கி, சேட்டைக்குப் பலியான மாதரசிகள்கூட, என்னவோ ஏதோ என்று பதைத்தனர்; கசிந்த குருதியைத் துடைத்தபடி காவலன், "சனியன்! அவன் முகத்தில் விழித்தேன், உடனே இந்தப் பலன் ஏற்பட்டது!" என்று முணுமுணுத்தான் அமைச்சர் கேட்டார், "அரசே! எந்தச் சனியன்? யார் முகத்தில் விழித்தீர்கள்? என்ன கூறுகிறீர்கள்?" என்று. அமைச்சர் அறிவார், அப்படி ஒன்றும் அவலட்சணங்கள் அரண்மனையில் கிடையாது என்பதை—அவலட்சணத்தை அணிபணி, பூச்சு ஆகியவற்ருல் மறைத்திடும் திறமையுள்ளோரே மன்னனுக்கு மனேகரிகளாக இருந்தனர்.

"காலையில் எழுந்ததும் அமைச்சரே! மாடியில் நின்றேன், வீதியில் ஒரு சனியன் சென்று கொண்டிருந்தான், அவன் முகத்தில்தான் விழிக்க நேரிட்டது. கண நேரத்தில் இந்தக் கதி நேரிட்டது" என்ருன் மன்னன்.

"அப்படியா! அப்படிப்பட்ட 'சகுனத் தடை' ஏன் இராஜ பாட்டையில், அதிகாலையில் நடமாட அனுமதித்தார்கள், மடையர்கள்! இனி மன்ன! காலையில், மங்கள ஆரத்தியுடன் மாதர்கள், மலர்க்கூடைகள், பசு, இப்படிப்பட்ட 'தரிசனம்' தான் இருக்க வேண்டும், விடிந்ததும்—அதை இனிக் கவனித்துக் கொள்ளவேண்டியது என் பொறுப்பு" என்று ஆறுதலளித்தான் அமைச்சன்.

"எவ்வளவு மோசமான ஜென்மமாக இருக்கவேண்டும், அந்த மனிதன்; அவன் முகத்தில் விழித்ததும், இரத்தக் காயம் ஏற்பட்டதே, யார் அவன்?" என்று கேட்டான் மன்னன்.

"யாரடா அவன்?" என்று முழக்கமிட்டார் அமைச்சர், மெய்ப்பாதுகாப்பாளனை நோக்கி.

"ஏ! யார் அந்தச் சனியன்?" என்று போர்வீரனை நோக்கிக் கர்ஜித்தான் மெய்ப்பாதுகாப்பாளன்.

ஓடோடிச் சென்று 'இராஜபாட்டை'யின் கோடியில் அசைந்து சென்று கொண்டிருந்தவனைப் பிடித்திழுத்து வந்தான் போர்வீரன். விசாரணை நடைபெற்றது—மன்னன் முன் அல்ல. தீர்ப்பு அளிக்கப்பட்டது, அமைச்சரால்.

"மன்னர்பிரானுக்கு மண்டையில் இரத்தக்காயம் ஏற்பட்டதற்குக் காரணம், இந்த மாபாவி முகத்தில் மன்னர் அதிகாலையில் விழிக்க நேரிட்டது என்பது நிரூபிக்கப்பட்டிருப்பதால், இவன் ஓர் சகுனத் தடை என்பது தெளிவாகிவிட்டது. இத்தகையவன், அதிகாலையில் இராஜபாட்டையில் நடந்து சென்று, அதன் பலனுக மன்னருக்கு இரத்தக்காயம் ஏற்படக்

காரணமாக இருந்ததால், இந்த மாபாவிக்கு மரண தண்டனை விதிக்கிறேன்.''

மரண தண்டனை! என்று தீர்ப்புக் கூறப்பட்டதும், அவன் மருண்டு, காலில் விழுந்து உயிருக்கு மன்றாடவில்லை, மயக்க முற்றுக் கீழே விழவில்லை, 'இடி இடி'யெனச் சிரித்தான். அமைச்சர் குழுவுக்கு ஒரே ஆச்சரியம். இப்படியும் ஒரு பைத்யக்காரன் இருப்பானா? மரண தண்டனை விதிக்கிறோம், பயல், சிரிக்கிறானே அதைக் கேட்டு. பித்தனோ! சித்துகள் தெரிந்தவனோ! என்று பலப்பல எண்ணினர்.

''ஏ, ஏமாளி! என்னடா சிரிக்கிறாய்? உனக்குத் தண்டனை விதித்திருக்கிறேன்—தெரிகிறதா! வேட்டுப் பாறையில் உன் தலை துண்டிக்கப்படும், இன்று மாலை—புரிகிறதா?'' என்று விளக்கமளிக்கும் விதத்தில் பேசினார் அமைச்சர்.

''புரிகிறது அமைச்சரே, நன்றாகப் புரிகிறது'' என்று கூறி விட்டு, அவன் மீண்டும் சிரித்தான்; சிரித்துவிட்டு, ''மன்னனுக்கு மண்டையில் அடிபட்டது, என் முகத்தில் விழித்த காரணத்தால். அப்படிப்பட்ட பொல்லாத முகம் எனக்கு, அமைச்சரே! அதுதானே எனக்கு மரண தண்டனை அளித்திடக் காரணம்?'' என்று கேட்டான்.

''ஆமாம், அற்பனே! அரசனுக்குப் படுகாயமல்லவா ஏற்பட்டுவிட்டது, உன்னுடைய பாழான முகத்தை அவர் பார்க்க நேரிட்டதால்'' என்று அமைச்சர் 'விவேகம்' பேசினார்.

''விளங்குகிறது, அமைச்சரே! என் முகத்தின் இலட்சணம் இன்னது என்று விளங்குகிறது. என் முகத்தில் அதிகாலையில் மன்னன் விழித்ததால், அவருக்கு மண்டையில் இரத்தக்காயம் ஏற்பட்டது. அப்படிப்பட்ட 'சனியன் பிடித்த முகம்' எனக்கு. போகட்டும். என் முகமாவது இந்த மட்டோடு கெடுதல் விளைவித்தது—அந்த மன்னன் முகத்திலே நான் அதிகாலையில் விழித்தேன்—பலன் என்ன? உயிர் போகப் போகிறது. மரண தண்டனை கிடைக்கிறது எவ்வளவு புண்யவானய்யா நமது பூபதி. எத்தகைய 'பாக்யம் அருளும்' முகமய்யா, அவருக்கு. அதிகாலையில் 'இராஜ தரிசனம்' கிடைத்தால் உனக்கு நல்ல 'யோகம்' கிடைக்குமென்று ஒரு 'ஞானி' சொன்னார். அதனால்தான் அமைச்சரே, நான் அதிகாலையில், ஒருவர் முகத்திலும் விழிக்காமல், அரண்மனை எதிரே காத்துக் கொண்டிருந்தேன், இராஜ தரிசனத்துக்காக; இராஜ தரிசனம் கிடைத்தது, மரண தண்டனையும் கிடைக்கிறது, மகா பாக்யவான், புண்யவான் நமது பூபதி. பார்த்தால் போதும், பிராணன் போகிறது. நான், சனியன், பீடை, என்னைப் பார்த்ததால்

மன்னனுக்கு மண்டையில் அடிபட்டது—இரத்தம் கசிந்தது, அவருடைய முக தரிசினம் கண்ட எனக்கோ, மரண தண்டனை கிடைக்கிறது'' என்று கூறிச் சிரித்தானும்.

தம்பி, நாம் கூட இருப்பதால் மாற்றுக் குறைகிறது. ஆற்றல் குன்றுகிறது, வீரம் குன்றுகிறது, தூய்மை கெடுகிறது, ஏனெனில், நாம், சுயநலவாதிகள், வயிற்றுப் பிழைப்புக் காகவே பொது வாழ்வில் இருப்பவர்கள், சூதர்கள், சூழ்ச்சிக் காரர்கள், நாம் ஒழிந்தால் மட்டுமே உண்மைக்கும் உயர்வுக் கும், தீரத்துக்கும் தியாகத்துக்கும், அதிதீவிர திட்டத்துக்கும் அபார வெற்றிகளுக்கும் வாய்ப்பு ஏற்படும் வயலில் களை, போல் இருக்கிறோம், எனவே நாம் ஒழிந்தது மிக மிக நல்ல தாகப் போய் விட்டது. இனி, தமிழகத்தில் இதற்கு முன் எப் போதும், எவரும் கண்டிராத, கேட்டிராத, மகத்தான பலன் கள் கிடைக்கத்தக்க, மயிர்க் கூச்செறியும் போராட்டங்களும், மாபெரும் வெற்றிகளும் கிடைத்து விடும். பொறுக்கி எடுக்கப் பட்ட மணிகள், புடம் போட்ட தங்கக் கட்டிகள், கொள்கை தவிர வேறேதும் அறியாத கோமான்கள், கீறிய கோட்டினைத் தாண்டாத கடமை வீரர்கள், ஏன் என்று கேட்காத ஏந்தல் கள், எப்படி என்றுகூட எண்ணிடாத சுத்த வீரர்கள், இவர் கள் மட்டுமே இப்போது பாசறையில் இருக்கிறார்கள், என் றனர் பூரிப்புடன்.

நமது கூட்டுறவு கேடு பயப்பது, காட்டு வெள்ளத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கும் வீரர்கட்கு நாம் வேண் டாத சுமையாக, கால் கட்டாக இருந்து வந்தோம், வெளியே ஓடி விடுகிறோம், அதனால் இனி 'சொரி சிறங்கு' நீங்கிய உடலோன் போல, தி. க. 'தேஜோன்மயமாக' விளங்கப் போகிறது. தொட்டால் போதும், பட்டமரம் துளிர்க்கும், பார்வை பட்டால் போதும், பனையில் பலாச்சுளை தொங்கும், என்றெல்லாம் ஆரூடம்' பேசினர்.

தம்பி, இப்போது தி. க. 'பத்துப் பாட்டு' பாடுகிறது— அவர்கள் பத்து மாபெரும் காரியங்களில் ஈடுபட்டார்களாம், நாம் அவர்களுடன் சேரவில்லையாம்—பாவிகாள், இப்படி எங் களைக் கைவிட்டது நியாயமா ? களத்திலே நாங்கள் இறங்கிக் கடும் போராட்டத்தில் ஈடுபட்டபோது, நீங்கள் கைகொடுத் தீர்களா ? கன்னெஞ்ச மென்பதா, கபடமென்பதா—என் னென்று புகல்வது உமது செய்கையை, அவனியோரே, அவனி யோரே ! இதோ பாரீர், பத்துக் குற்றச்சாட்டுகள், இந்தப் பாவிகள் செய்த பாதகச் செயல்கள்—என்று பட்டியல் கொடுக்கிறது தி. க. ஏன் ? பத்துக் காரியங்களையும் துவக்கிய போது, தமது பாசறையில் போதுமான 'சரக்கு' இல்லை என்

பதும், துவக்கிவிட்டு, ஒவ்வொன்றும் துவண்டு போகக் கண்டு துடியாய்த் துடித்ததும், இப்போது மெள்ள மெள்ளத் தெரிகிறது என்றுதானே பொருள்.

நடிகவேள் இராதாவின் 'இழந்த காதல்' பார்த்திருக்கிருயா தம்பி, நாம்தான் யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்றபடி நம்மை நையாண்டி செய்தாலும், 'நம்ம இராதா' என்ற பாசத்தை விடாப்பிடியாகக் கொண்டவர்களாயிற்றே.

ஆகவே இராதாவின் நாடகத்தைக் காண்கிருேம், அடிக்கடி. 'இழந்த காதல்' நாடகத்திலே ஒரு கட்டம்.

வெறிக்கக் குடித்துவிட்டு, தலை கால் தெரியாமல் ஆடிக்கொண்டு வீட்டுக்குள் நுழைவார் ஜெகதீஸ். பத்மா, 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்று எண்ணும் பத்தினிப் பெண்! பயந்தபடி கணவனுக்குப் பணிவிடை புரிவாள். அந்தப் பணிவிடைகளிலே ஒன்று, ஜெகதீசுக்குச் சிகரெட் கொடுத்து அதைப் பற்றவைப்பது. இராதாவின் நடிப்பு அபாரமாக இருக்கும் இந்தக் கட்டத்தில். ஆனல் தம்பி, அது ஒரு அரசியல் நிகழ்ச்சிக்கு விளக்கம் அளிக்க உதவும் என்று நான் அப்போது எண்ணியதே இல்லை!

'சிகரெட்' எடுத்துப் பத்மா, ஜெகதீசன் கரத்திலே கொடுப்பாள்—அவனுக்குக் கால் பூமியில் பாவாது, கரம் ஒரு நிலையில் நிற்காது, கண்களோ 'துறைமுகத்து' விளக்குப் போலச் சுற்றும், சுழலும், ஒளிவிடும், குறையும். வாய் திறப்பான் கண்ணை மூடிக்கொண்டு—சிகரெட்டை வாயில் திணிப்பாள்—உதட்டுக்கும் சிகரெட்டுக்கும் சண்டை நடக்கும்—சிகரெட் ஒருவாறு வெற்றி பெறும்—தீக்குச்சி எடுத்துச் சிகரெட் பற்ற வைக்க பத்மா முயற்சிக்க வேண்டும்—ஒவ்வொரு தீக்குச்சியும் சிகரெட் அருகே செல்லும்போது அணைந்து போகும். குடிபோதை மிகுதியால் அவன் ஆடிக்கொண்டே இருப்பதும், மேஜைமீது இருக்கும் மின்சார விசிறிக் காற்று பலமாக இருப்பதும்தான் காரணம். அதைச் சொல்லக்கூடப் பயம் பத்மாவுக்கு. பத்துத் தீக்குச்சிகள் அணைந்து போகும். ஜெகதீசனுக்குக் கோபம் வரும்.

"ஏ, பத்மா! சிகரெட் பற்றவைக்கக் கூடத் தெரியவில்லையா......கழுதே..." என்று கூவுவான்—கண்ணீர் சிந்துவதைத் தடுக்க முயன்றபடி பத்மா, "தீக்குச்சி அணைந்து அணைந்து போகிறது" என்று கூறுவாள்.

"ஏனடி அணைகிறது?" என்று கேட்பான் ஜெகதீஸ்.

"விசிறி...காற்று......அதனல்" என்பாள், பத்மா.

ஒரு கேலிச்சிரிப்புடன், ஜெகதீஸ், அவள் கரத்திலிருந்து தீப்பெட்டியைப் பறித்துக் கொண்டு, "விசிறினுல் என்னடி, விசிறினுல என்ன? விசிறி இருக்கும்போது சிகரெட் பற்ற வைக்க முடியாதா? எவண்டி சொன்னது? இதோ பாரடி, நான் கொளுத்துகிறேன்—பாரடி இப்போ, விசிறி இருந்தால் தீக்குச்சி அணைந்து விடுமாம்—எந்த 'இடியட்' சொன்னுண்டி அப்படி? நான் பற்றவைக்கிறேன் பாரடி......இதோ பார்—நன்ருகக் காற்றடிக்கட்டும்—பலமாக அடிக்கட்டும்—இதோ பார்......" என்று கூறுவான், தீக்குச்சி ஒவ்வொன்றும் அணைந்து கொண்டிருக்கும்—கொட்டகையில் சிரிப்பொலி கிளம்பும்—"இதோ பார், கொளுத்திக்காட்டுகிறேன்"—என்று மீண்டும் கூறியபடி, தீக்குச்சியைப் பாழாக்குவான், திடீரென்று, "சீ! சனியனே! விசிறியை நிறுத்தேண்டி, அது தான் விசிறிக் காத்தாலே தீக்குச்சி அணையுதே—பார்த்துக் கொண்டே சும்மா நிற்கிறியே, சனியனே!" என்று கூறிக் கூச்ச லிடுவான், கொட்டகையில் கையொலி இடிமுழக்கம்போலாகும்.

தம்பி! விசிறிக் காற்று இருக்கும் போது, தீக்குச்சி கொண்டு சிகரட் பற்றவைக்க முடியவில்லை என்று பத்மா சொன்ன போதும் கோபிக்கிருன்; காற்று இருந்தால் என்ன, நான் பற்றவைத்துக் காட்டுகிறேன் பார் என்று 'சவால்' விடுகிருன், செய்ய முடியாமல் போனதும், கோபம் கொப்பளித்துக்கொண்டு வருகிறது, விசிறியை ஏன் நிறுத்தக் கூடாது என்று கேட்டுப் பத்மாவை ஏசுகிருன். பரிதாபத்துக்குரிய பத்மாவுக்கு எதைச் செய்யும் போதும், எதைச் செய்யாமலிருக்கும் போதும் திட்டு, தட்டுதான்—'இழந்த காதல்' நாடகத்தில்.

நாம் 'பத்மா'வாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறது தி. க. தம்பி. தம்பி, அந்த மட்டும்தான் உவமை—அதை முழு அளவுக்கு நீட்டிச் சென்று,—"ஓஹோ! எங்களைக் குடிகாரன் என்ரு கண்டிக்கிருய், உன் தலையில் இடி விழ, இல்லையாளுல் சாப்பாட்டு இலையில் ஈயாவது விழ," என்று 'சாபம்' கொடுத்துவிடப் போகிருர்கள்—என் நோக்கம், 'பத்மா' போல பரிதாபத்துக்குரிய நிலையில் நாம் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் சிலர் இருக்கிருர்கள் என்று எடுத்துக் காட்டுவதுதான்.

பத்துப் போர்களில் நாம் கலந்து கொள்ளவில்லை என்று குற்றம் சாட்டுகிருர்களே, இன்று, அன்று நாம், யோசனைகூற அனுமதிக்கப் பட்டோமா, கலந்து பேசி, ஏதாவது ஒரு திட்டம் தீட்டப்பட்டதா? அவர்கள் அழைத்து, நாம் நிராகரித்தோமா?

ஏ ! அப்பா ! இவ்வளவு பயங்கரமான போரில் ஈடுபட எம்மால் முடியுமா ? இதற்குத் தேவைப் படும் வீரம், தீரம், தியாகம், எம்மிடம் ஏது என்று கூறிவிட்டா, கைகட்டி வாய்த் பொத்தி நின்றோம். இல்லை. ஒவ்வொரு 'போர்'ப் பிரகடனம் வெளிப்பட்ட நேரத்திலும், நோக்கம், முறை, அமைப்பு எனும் மூன்று விஷயங்கள் குறித்த விளக்கமும், கலந்து பணியாற்றும் அழைப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தவண்ணம் இருந்து வந்தோம்—நம்மில் சிலர் ஏங்கிக் கிடந்தது முண்டு. 'போர்' அறிவிக்கப்பட்ட போது, 'இதுகளை' ஒரு கட்சி என்று மதித்து, அழைப்பு வேறு அனுப்ப வேண்டுமா ! கால்தூசு ! அறுந்து போன செருப்புகள் ! ப்யூஸ் போன பல்புகள் ! போக்கிடமத்ததுகள் ! என்றெல்லாம் சாக்கடை மொழியில் ஏசிவிட்டு, பத்தும் விதவைக் கரு வேலி ஓரத்தில் அழுகிக் கிடப்பது போலான பிறகு, பத்துப் போரிலும் ஈடுபடாத பாவிகள், பழிகாரர்கள் என்று தூற்றுவதா! இதென்ன நியாயம் ? எவர் ஏற்பர் இதனை ?

தி. க. வின் போர்த்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றித் தரும் வேலையை, நாமாக, வலிய வலியச் சென்று, வசையையே விருந்தாகக் கருதி மேற்கொள்ள வேண்டுமாம். தம்பி, மன்னன் ஆயிரம் மடங்கு மேல் என்பேன், அவனுக்காவது, மண்டையில் அடிபட்டது, நாமோ, நம்மால் இவர்களுக்குக் கிடைக்க இருக்கும் மாபெரும் வெற்றி கெடலாமா, நாம் ஒதுங்கிக்கொள்வோம், நம் கூட்டுறவு இல்லாவிட்டால்தான், இவர்கள் எதிரிகளின் கோட்டைகளைத் தூளாக்குவர், கொடி மரத்தை வெட்டி வீழ்த்துவர், என்று கருதினோம்—பாதை திறந்து இருந்தது, எனினும் இப்போது, வெற்றி கிட்டாததால் ஏற்பட்ட வேதனை கோபத்தைக் கிளப்பிவிட, நாங்கள் துவக்கிய 'பத்துக்' கிளர்ச்சிகளிலே இவர்கள் ஈடுபடவில்லை என்று குற்றம் சாட்டுகிறோம், என்று பட்டியல் வெளியிடுகிறார்கள். இதைப் போன்ற வேடிக்கை – நான் துவக்கத்தில் சொன்ன கதை, 'இழந்த காதல்' நாடகம் இரண்டிலுமே கூடக் கிடைக்காது.

தி. க.-வின் 'பத்து' அவர்களாகத் தேடிக்கொண்ட சொத்து. நமக்கு அதிலே பங்கு கிடையாது—கேட்க நமக்கு உரிமையும் கிடையாது—வெற்றி தோல்விக்கு தி. க. தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்—பிறர்மீது, உதவி செய்யவில்லை என்று பழி சுமத்துவது, தோல்வியை மூடி மறைக்கக்கூட உதவாது.

எந்த முற்போக்கான கட்சியும், நாம் மேற்கொண்டுள்ள மூலாதாரக் கொள்கைக்கு ஊறு நேரிடாத வகையிலும், நமது

கழகத் தன்மானத்துக்குக் கேடு சூழாத வகையிலும், எந்தப போராட்டம் துவக்கி, அதிலே கலந்துபேசிக் காரியமாற்ற அழைத்தாலும், நாம் தயாராக இருக்கிறோம் என்பதை அடிக்கடி அறிவித்திருக்கிறோம்—இப்போதும் அறிவிக்கிறோம்.

எங்களால் முடியாவிட்டால்தானே, பிறரை அழைக்க—என்று வாதாடுவோருக்கு, நாம் மதிப்பளிக்கிறோம்—அவர்கள் பேச்சுக்கேற்ப வெற்றியும் பெற்றால், அவர்கட்கு வாழ்த்தும் வணக்கமும் கூறுகிறோம்.

இவர்களை மதித்து நாங்கள் அழைக்க வேண்டுமா ? என்று கேட்பரேல், அரசியல் நாகரிகம் அல்ல அது என்று பணிவுடன் எடுத்துக் கூறுவோம்.

அழைப்பானேன், தாமாக வந்து கலந்துகொள்வதுதானே! என்று வாதாடுவரேல், தன்மானத்துக்கு அது அழகுமல்ல, தானகத் தாவிக் குதித்து நாங்கள் போட்டிருந்த திட்டத்தை நாசமாக்கி விட்டார்கள் என்ற பழிச் சொல்லுக்கு ஒரு சமயம் ஆளாக வேண்டி வரும் என்பதை எடுத்துக் கூறுகிறோம்.

ஒருவர் தயவை, கூட்டுறவை, ஒத்துழைப்பை, எதிர்பாராமலேயே, நாங்களே நடத்தி நாங்களே பெற்ற வெற்றி காணீர், இதிலே எவனும் பங்கு கேட்கக் கூடாது என்று கூறுவரேல், வேண்டாம் ஐயனே ! முழுக் கீர்த்தியும் உமக்கே இருக்கட்டும், எமக்குப் பங்கு ஒரு துளியும் தரவேண்டாம் என்று கூறுகிறோம்.

ஆனால்,

போர் நோக்கம், முறை, அதற்கான அமைப்பு யாவும் எங்கள் இஷ்டம் போல்தான் இருக்கும்,

யாரையும் கலந்து பேசமாட்டோம்,

எவரையும் அழைக்க மாட்டோம்,

நாங்களே நடத்துவோம்,

மற்றவர்கள் தாமாக வராவிட்டால், பிறகு அவர்களைப் பலமாகக் கண்டிப்போம், சாபம் கொடுப்போம்,

என்று ஒரு அரசியல் கட்சி கூறுகிறது என்றால், நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் நமக்கென்ன என்று இருந்து விடுவதன் விளைவு இந்த விபரீதப் போக்கு என்று கூறுவதன்றி, வேறென்ன தம்பி கூறமுடியும் ?

எனினும், ஒரு விதத்திலே எனக்கு அந்தப் 'பத்து' பார்க்கும் போது அலாதியான மகிழ்ச்சி. பத்து வெற்றிகளைக் காட்டி, வீணர்காள் ! நீங்களெல்லாம் பந்தாடிக் கொண்டும், பந்தியில் சுவைத்துக் கொண்டும் இருந்தீர்கள், நாங்கள் பள்ள

மென்றும் மேடென்றும் பாராமல், பகலென்றும் இரவென்றும் கவனியாமல், எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற எழுச்சியுடன், களத்திலே காற்றெனச் சுற்றிக் கடும் போரிட்டுப் பெற்ரோம் பத்து வெற்றிகள், காணீர்! காணீர்! என்று கூறவில்லை. நாங்கள் பத்து விதமான கிளர்ச்சிகளில் ஈடுபட்டோம், அவைகளில் இவர்கள் சேரவில்லை என்றுகூறுகிருர்கள்; கூறுவதன் மூலம் இவர்கள் சேராததால் நாங்கள் பெரிதும் ஏமாற்ற மடைந்தோம், வெற்றி கிட்டவில்லை என்று ஒப்புக் கொள்வதாகத்தான் பொருள்! வேறென்ன?

வஞ்சகி! கன்னெஞ்சக்காரி! ஏறெடுத்தும் பார்க்க மறுத்துவிட்டாள்—என்ருன் ஏமாந்த காதலன். நண்பன் கேட்டான், அவர்களுடைய காதலைப் பெற நீ எடுத்துக் கொண்ட முயற்சி என்ன என்று. நாஞ?

கல் வீசினேன்

காட்டேரி! மூளி! என்று ஏசினேன்

அவள் பாதையில் படுகுழி வெட்டினேன்

அவள் தோட்டத்து மலரை அழித்திட மந்தியை ஏவினேன்

இவ்வளவு செய்தும் அவள் என்னை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள். என்னென்பது அவளுடைய கன்னெஞ்சத்தை. காதகி! பாதகி! அவளைக் கண்டிக்க, ஊராரே! உலகோரே! ஒன்றுகூடுமின், உடனே எழுமின்! என்று கூறினல் எப்படி இருக்கும்!

தி. க. நாம், 'பத்து'க் கிளர்ச்சிகளிலே ஈடுபடவில்லை என்று எடுத்துக் கூறி, உலகம் தன்னிடம் அதற்காகப் பரிதாபம் காட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கிறது.

அவர்களை அழைத்தீர்களா?

இல்லை!

அவர்கள் கருத்தறிந்து போர் வகுத்தீர்களா?

இல்லை!

அவர்களிடம் ஒரு துளி அன்பு காட்டினீர்களா?

இல்லை!

அவர்களை இழித்தும் பழித்துமாவது பேசாதிருந்தீர்களா?
நாள் தவருமல் ஏசி வந்தோம்,

இப்படி 'வாதாடுகிறது' நாம் நமது உழைப்பைக் கொட்டி ஆக்கி வைத்த தி. க.

பத்மாதான் ஜெகதீசுக்கு வாழ்க்கைப்பட்டாள்—எனவே வதைபட்டாள்.

மரண தண்டனை பெற்றவன் மன்னன் ஆட்சியில் ஓர் குடிமகன். எனவே, அவன் அக்ரமத் தீர்ப்புக்கு ஆளாக நேரிட்டது.

மற்றவர்களுக்கு என்ன வந்தது? ஏன் அவர்கள் அத்தகைய நிலைமைக்குத் தங்களை உட்படுத்திக் கொள்ளப் போகிறார்கள்?

நாம் விலகி வந்தவர்கள்—அவர்களும் நாம் விலகியான பிறகு நம்மை விரட்டி விட்டதாகத் தெரிவித்து விட்டார்கள்.

நாம், வாழ்க்கைப்பட்டும் இல்லை, அந்த ஆட்சியில் குடிமக்களாகவும் இல்லை.

நமக்கென்று ஓர் குடும்பம், ஓர் கொற்றம் அமைத்துக் கொண்டாகி விட்டது.

எளிய குடும்பமாக இருக்கலாம்—ஏழெட்டு இலட்சம் இல்லாமலிருக்கலாம்.

குறுநிலக் கொற்றமாக இருக்கலாம், குவலயத்தில் கீர்த்தி சாமான்யமானதாக இருக்கலாம்.

அளவும் தரமும் எப்படி இருப்பினும், நாம் அந்தக் குடும்பக் கட்டளைக்கோ, கொற்றத்துத் தீர்ப்புக்கோ அடங்கித் தீரவேண்டும் என்று பேசுவது எப்படி நியாயமாகும்?

பத்மாபோல, அடுத்த வீட்டு அம்புஜமும் எதிர்வீட்டு ஏமலதாவும், ஜெகதீசுக்கு அடங்கிக் கிடக்கவும், ஆட்டி வைக்கிறபடி ஆடவும் வேண்டும் என்று நாடகத்திலும் கூறூர்களே!

அது போலவே தி. க. வில் உள்ளவர்கள், பத்தோ பதினைந்தோ, தேவையோ அல்லவோ, தலைமை தரும் போர்த் திட்டங்களைத் தாங்கித் தமது பத்தினித் தனத்தையும் குரு பக்தியையும் காட்டித் தீர வேண்டியதுதான் முறை. நம்மை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? ஏன் அந்த நினைப்பு வர வேண்டும்? அதிலேதான் தம்பி சூட்சமம் இருக்கிறது! அவர்கள் எவ்வளவுதான் நம்மை ஏசினுலும், ஏளனம் செய்தாலும், நமது வளர்ச்சியும் கட்டுப்பாட்டு உணர்ச்சியும், அவர்களையும் அறியாமல் நம்பால் ஈர்க்கிறது—ஈர்த்ததும், ஆஹா! இவர்கள் மட்டும் நாம் சொல்கிறபடி ஆடிஞல்......என்று எண்ணம் பிறக்கிறது! அவ்வளவுதான்!

அவர்களின் ஆசைக்காகப் பத்து அல்ல, இருபது போர் எனினும், நாம் ஈடுபடக்கூட முயற்சிக்கலாம். ஆனுல், எந்த நேரத்தில், எந்த வகையில் போர் அமையும், நோக்கம் எது வாக இருக்கும், முறை எப்படி இருக்கும், போர் எந்தெந்தக் கட்டம் செல்லும், எப்போது நின்று போகும், ஆகிய எது நமக்கோ, நாட்டுக்கோ புரிகிறது, தெரிகிறது? சொல்லேன், கேட்போம்.

மிகப் பிரமாதமாக தி. க. சேனுதிபதி இன்று பேசுவது பார்ப்பனர்களை நாங்கள் ஒழித்துக் கட்ட, நாட்டை விட்டு விரட்டப் போர்த் திட்டம் வகுத்துவிட்டோம், இவர்களோ, 'ஈயம்' பேசுகிருர்கள்—ஒட்டப்பட வேண்டியது, ஒழிக்கப்பட வேண்டியது பார்ப்பனர்கள்—பார்ப்பனீயம் என்று பேசுவது, கோழைத்தனம். பார்ப்பனர்கள்—கள்! அதுதான் எமக்குப் போர்த்திட்டம்—பார்ப்பனீயம்—ஈயம் அல்ல! என்று பேசு கிருர்.

'ஈயம்' ஒழிக்கப்பட்டால் போதும் என்பது கோழைத் தனம், துரோகம், காட்டிக் கொடுக்கும் கயமைத்தனம், இனத்துரோகம், என்றெல்லாம் குத்துகிருர்.

நாம், பார்ப்பனீயம் ஒழிக்கப்பட்டால் போதும் என்று கூறுவது பற்றி, பார்ப்பனர்களையே ஒழிக்க 'ஜல்லடம்' கட்டிக் கொண்டுள்ளவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? ஒழித்துக் கட்டுவதுதானே, யார் குறுக்கே படுத்துக்கொண்டு தடுக்கிருர் கள்? தடுத்தால் மட்டும் இவர்களுடைய படைபலம் கொண்டு, கண்ட துண்டமாக்கி விட்டு மேலால் வெற்றிக் கொடி பிடித்துக் கொண்டு செல்லலாமே! ஏன் தயக்கம்? எது தடுக்கிறது? பலம் இல்லையா? அல்லது காலம் சரியில்லையா?

பார்ப்பனர்களை ஒழித்துக் கட்ட வேண்டும்—அதற்காக இதோ திட்டம், போர்த்துவக்கம் இன்ன நாளில், படைத் தள பதிகள் இன்னின்னுர், களம் இன்னின்ன இடத்தில், என்று அறிவித்துவிட்டு, 'ஜாம்ஜா'மென்று நடத்த வேண்டியது தானே! காலமெல்லாம் சொல்லிக் கொண்டே இருப்பது தானு! இதற்கு,'நாம்' வேறு எதற்கு? அவர்களே போதுமே! நாளைக்கொரு தடவை குத்துவது, குடைவது—களிப்படை வது—இதுதான் 'போர்' என்றுல், இதற்கு நாம் ஏன்?

உண்மை என்ன தெரியுமா தம்பி! பார்ப்பனர்களை ஒழிக்க வேண்டும் என்பது 'தீவிரத் திட்டம்', புரட்சிகரமான திட்டம், பார்ப்பனீயத்தை ஒழிக்கவேண்டும் என்பது சொத் தைத் திட்டம், என்று பேசி அதனைச் சாக்காகக் கொண்டு நம்மை ஏசலாம். இது ஒரு நோக்கம். மற்றுென்று, பார்ப்ப

னர்களை ஒழிக்கவேண்டும், அக்ரகாரத்தைக் கொளுத்த வேண்டும் என்று அவர்கள் வீரதீரமாகப் போர் முழக்கம் செய்வார்கள்—அதற்காக அவர்களுக்கு அடிபணிந்துவிட்டு நாம், பார்ப்பனர்கள் மீது பாயவேண்டும்—படவேண்டிய கஷ்டம் படவேண்டும்—பிறகு அவர்கள் பரிகாசம் பேசவும், பாவிகள் பலாத்காரத்தை அல்லவா தூண்டிவிட்டார்கள், பார்ப்பனர்களை ஒழிக்கவேண்டும் என்று சொன்னதன் தத்துவத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளவே இல்லையே, கெடுத்தே விட்டார்களே, என்று பழி சுமத்தலாம். இது மற்றோர் நோக்கம்.

பார்ப்பனர்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று புரட்சி பேசுவது—பயங்கரமான சூழ்நிலை உருவாவதாகச் சித்தரிக்க வேண்டியது – தகுந்த சமயமாகப் பார்த்துக் காமராஜர் குறுக்கிட்டு இதெல்லாம் வேண்டாம் என்பார். உங்கள் வார்த்தைக்காக வாளை உறையில் போடுகிறேன் என்று கூறி, அவருக்கு நேருவிடம் நல்ல பெயர் வாங்கித் தருவது. இது மற்றோர் நோக்கம்.

இப்படி ஏதேனும் ஓர் நோக்கம் இல்லை என்றால், ஏன், பார்ப்பன ஒழிப்புப் பற்றி இன்னமும் பேச்சுக் கடை மட்டுமே இருக்கவேண்டும்? செயலுக்கு என்ன தடை? வீரதீரமாக நீங்கள் கிளம்பி, வெட்டிக் குவித்தோ, விரட்டி அடித்தோ பார்ப்பனர்களை ஒழித்துக் கட்டத் தொடங்கி விட்டால், இருந்த இடம் தெரியாமல், ஈயம் பேசுவோர் ஓடி விடுகிறார்கள்! 'ஈயம்' பேசுகிறார்களே, ஈயம் பேசுகிறார்களே என்று எத்தனை நாளைக்குச் சாக்குக் கூறித் தப்பித்துக் கொள்வது!

இந்த இலட்சணத்தில் இருக்கிறது திட்டம், இதிலே நாம் சேராதது குறித்துக் குற்றம் சாட்டுகிறார்களாம்!

இதிலாவது எத்தனை நாட்களுக்கு, ஒரே விதமான நிலையான கருத்து இருக்கும் என்று யார் கூறமுடியும்? இன்று, பார்ப்பனர்களை ஒழித்தாக வேண்டும் என்று பேசும் தி. க. வில் தம்பி, நீயும் நானும் இருந்தபோது, வெறும் கொடி தூக்கியாகவோ, கும்பி நிரப்பிக் கொண்டோ அல்ல, "பெட்டிச் சாவியைக் கொடுக்க ஒரு தனி மாநாடு போடுகிறேன்" என்று பெரியார் திராவிடத்துக்கு அறிவித்திடும் அளவுக்கு, குறிப்பிடத்தக்க 'இடம்' பெற்று இருந்தபோது, பார்ப்பனீயம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் திட்டம், பார்ப்பனர்களை ஒழிப்பது என்பது அல்ல! இன்றைய தி. க. வுக்கு எது 'ஈயம்' என்று ஏளனமாகப் படுகிறதோ, அதுதான், நாம் அங்கு இருந்தபோது, திட்டம். அதற்கு நாம் கட்டுப்பட்டவர்களே தவிர, அதற்குப் பிறகு, காரணம் காட்டப்படாமலும், நமது கருத்து அறியாமலும் அவர்களாக ஒரு திட்டம்—தீவிரமான

தாக, தீ பறப்பதாக, கேட்போர் திடுக்கிடக் கூடியதாக இருக்கட்டும் என்பதற்காகத் தீட்டிக்கொண்டால் அதற்கு நாம் கட்டுப்பட்டவர்களா ? அதன் முழுப் பொறுப்பும் இன்றைய தி. க. வுடையது, அதன் வெற்றிக்கு முழுமூச்சுடன்-பிறரை ஏசாமல் -வேறுயாரும் துணைக்கு வரவில்லையே என்பது பற்றிப் பொருட்படுத்தாமல்—பழி கூருமல்– துவக்கி வெற்றி காண்பதுதான் முறை. அதை விட்டுவிட்டு இங்கே திரும்பிப் பார்ப்பது ஏன் ?

தி. க. வின் நினைப்புக்கும் நிலைக்கும் நாமும் பொறுப்பாளிகளாக இருந்த வரையில், பார்ப்பனீய ஒழிப்புத்தான் திட்டம்—நாம் இன்றும் அதைத்தான் திட்டமாகக் கொள்கிறோம். அது போதாது என்ருல், இன்றைய தி. க. அதிதீவிரத் திட்டத்துக்குப் பயணமாகட்டும், நாமொன்றும் சுங்கச் சாவடி வைத்தில்லையே !

நாமறிந்த தி. க. மட்டுமல்ல, நாம் வெளியேறிய பிறகும், *1953*-இல் கூட, தி. க. வின் திட்டம், பார்ப்பனீய ஒழிப்பே தவிர, பார்ப்பனர்களை ஒழிப்பது அல்ல. தம்பி ! இதோ கேள், பெரியாரின் பேரன்பர் ஒருவர் பேசுகிருர்;

“தமிழ்த் தாத்தா அவர்களே! தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால், திராவிடக் கழகத்தாரின் கை ஓங்கி, திராவிடக் கழகம் பலமிக்கதாகி, பிராமண சமூகத்தைத் திராவிடக் கழகத்தார் ஒழித்துவிடுவார்கள் என்று சில பிராமணர்கள் பயப்படுகிருர்கள். இந்தத் தவருன எண்ணத்தைப் போக்கவே, பெரியார் அவர்களை இங்கு பேசுவதற்கு அழைத்தோம்.”

பேசுபவர், தம்பி ! ஆர். சீனுவாசராகவன் எனும் பார்ப்பனர் !

மூன்று வேடிக்கைகள் இதிலே காணலாம்.

பெரியார் இதில் தமிழ்த் தாத்தா—திராவிடத் தந்தை அல்ல !

பிராமணர்கள் என்றுதான் வார்த்தை. பார்ப்பனர் என்ற வார்த்தைகூட உச்சரிக்கப்படவில்லை.

இவ்வளவும், *6—1—53* ‘விடுதலை’யில் உள்ளது.

எப்போதும் ‘விடுதலை’யில் பார்ப்பனர் பற்றி எழுதப்படும் போது பார்ப்பனர் என்றுதான் வார்த்தை, இருக்கும். இந்த *6—1—53* பேச்சு மட்டும் ‘விடுதலை’யில் பார்ப்பனர் என்ற பதமே இராது—பிராமணர் என்றுதான் பதப்பிரயோகம் இருக்கும்—அவ்வளவு பவ்வியம்—அவ்வளவு நாகரிகம்—தேவைப்பட்டது. காரணம், பேசிய இடம் மயிலாப்பூர், இலட்சுமிபுரம் யுவர் சங்கம் !

*பெரியாரிடம் பவ்வியமாகப் பேசி, யாரோ பார்ப்பனர் ஏமாற்றுகிறார் என்று தோன்றும். தம்பி, பெரியார் பேச்சை நம்பவேண்டுமல்லவா ? சரி ! 8—1—53 'விடுதலை'யைப் பார், புரியும்.*

"எனக்கு முன் பேசிய நண்பர் ஸ்ரீனிவாசராகவன் அவர்கள் பேசும்போது ஒரு விஷயம் குறிப்பிட்டார். அதைப் பற்றி நான் ஏதாவது சொல்ல வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன்.

அதாவது, யாரோ சில பிராமணர்கள் அவரை, 'பெரியார் இராமசாமி நாயக்கர், பிராமணர்கள் இந்த நாட்டில் வாழவே கூடாது என்று பேசி வருகிறார். அவரை நீங்கள் எப்படி இங்கே கூப்பிட்டீர்கள் என்பதாகக் கேட்டார்கள்' என்று சொன்னார். பிராமணர்கள் இந்த நாட்டில் வாழக் கூடாது என்றோ, இருக்கக் கூடாது என்றோ திராவிடக் கழகம் வேலை செய்யவில்லை. திராவிடக் கழகத்தின் திட்டமும் அதுவல்ல. திராவிடக் கழகத்தினுடைய திட்டமெல்லாம், திராவிட கழகமும் நானும் சொல்லுவது எல்லாம் நாங்களும் கொஞ்சம் வாழ வேண்டும் என்பதுதான்.

இந்த நாட்டிலே நாங்களும் கொஞ்சம் மனிதத் தன்மையோடு, சமத்துவமாக இருக்க வேண்டும் என்பதுதான். இது பிராமணர்களை வாழக்கூடாது என்று சொன்னதாகவோ, இந்த நாட்டைவிட்டு, அவர்கள் போய் விடவேண்டுமென்று சொன்னதாகவோ அர்த்தமாகாது. அவர்களைப் போகச் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. அது ஆகிற காரியம் என்று நான் கருதவுமில்லை. தவிரவும் பிராமணர்களுக்கும் நமக்கும் பிரமாதமான பேதம் ஒன்றும் இல்லை. அவர்கள் அனுசரிக்கும் சில பழக்க வழக்கங்களையும் முறைகளையும்தான் நாங்கள் எதிர்க்கிறோம் ! இது அவர்கள் மனம் வைத்தால் மாற்றிக் கொள்வது பிரமாதமான காரியம் அல்ல. நமக்கும் அவர்களுக்கும் என்ன பேதம் ? ஒரு குழாயிலே தண்ணீர் பிடிக்கிறோம்; ஒரு தெருவிலே நடக்கிறோம்; ஒரு தொழிலையே இருவரும் செய்கிறோம். காலமும் பெருத்த மாறுதல் அடைந்துவிட்டது. மக்களும் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து விட்டார்கள். விஞ்ஞானம் பெருக்கம் அடைந்துவிட்டது. இந்த நிலையில் நமக்குள் மனித தர்மத்தில் பேதம் இருப்பானேன் ? ஆகவே, உள்ள பேதங்கள் மாறி நாம் ஒருவருக்கொருவர் சமமாகவும், சகோதர உரிமையுடனும் இருக்கவேண்டும் என்பதற்கு ஆகத்தான் பாடுபடுகிறேன். நம்மிடையில் பேத உணர்ச்சி வளரக் கூடாது என்பதில் எனக்குக் கவலை உண்டு. எனது முயற்சியில்

பலாத்காரம் சிறிதும் இருக்கக்கூடாது என்பதிலும் எனக்குக் கவலை உண்டு.''

*தம்பி! 1953-இல்,*

**பிராமணர்களை ஓட்டச் சொல்லவில்லை.**

**ஆது ஆகிற காரியமுமல்ல.**

**பிராமணர்களுக்கும் நமக்கும் என்ன பிரமாதமான பேதம்?**

**என் முயற்சியில் பலாத்காரம் இருக்காது.**

என்று பெரியார் பேசுகிறார்—அது 'ஈயம்' என்று ஏளனப் பொருளாகிறது? 1953-இல் இந்தக் கருத்து பொருளும் பொருத்தமும் உள்ளது என்றால், திடீரென்று, பார்ப்பனீயம் ஒழிக்கப்பட்டால் போதாது, பார்ப்பனர்கள் ஒழிக்கப்பட்டாகவேண்டும் என்று தாவுவதற்கு என்ன காரணம்?

பிராமணர்களுக்கும் நமக்கும் பிரமாதமான பேதம் ஒன்றுமில்லை என்று 1953-இல் கூறிவிட்டு 54, 55-இல் அக்ரகாரத்தைக் கொளுத்தவும் பார்ப்பனர்களை விரட்டவும் வேண்டும் என்று கூறவேண்டிய விதமாக, பார்ப்பனர்களிடம் திடீரென்று அடக்கமுடியாத ஆத்திரம், போக்கமுடியாத பகை ஏற்படக் காரணம் என்ன? தி. க. வினர் கூறுவரா? எண்ணிப் பார்த்தால்தானே கூற!

1953-இல் மட்டும்தானா அப்படி! இப்போதும் நான், தம்பி, கண்ணாரக் கண்டேன்—பெரியார், பார்ப்பனத் தலைவர்களிடம் எவ்வளவு விசுவாசமாக நடந்துகொள்கிறார் என்பதை. எவ்வளவு சாந்தமாய், சமரசமாய், பேசுகிறார் என்பதையும் காதாரக் கேட்டேன்.


நாம் 'ஈயம்' பேசுகிறோம் என்று கூறுவதெல்லாம், அது தான் நடக்கக்கூடிய, நாணயமான நாகரிக முறை; அதை நாம் கையாள்கிறோம் என்பதால் வந்த எரிச்சலாலேயே தவிர, தி. க. பார்ப்பனர்களை ஒழித்துக் கட்டக் கத்தியைத் தீட்டிக் கொண்டிருப்பதாக, யாரும் எண்ணமாட்டார்கள். அப்படி உண்மையிலேயே ஒரு தீவிரமான புரட்சித் திட்டம் இருந்தால், நீயும் நானும் தம்பி! தடுக்கவா போகிறோம்! நடத்தட்டும்! நாடு மட்டுமல்ல, உலகே உண்மையில் ''கிடு கிடுக்கும்.''

நாம், தம்பி! பார்ப்பனீய ஒழிப்புத் திட்டம் தந்த பெரியாரின் பாதையில் செல்வோம்—அதிலே தவறுமில்லை—துரோகமுமில்லை. ஈயம்...ஈயம்......என்று ஏளனம் கூறுவோர் கூறட்டும்......நாம் கூறுகிறோம், ஈயம் தந்தார் எங்கள் பெரியார்......அது ஏளனத்துக்கு உரியது என்று நாங்கள் எப்படிக்

கருதமுடியும்? உங்களிடம் உள்ள பெரியார் வேறு விதமான திட்டம் தந்ததாக நீங்கள் கூறுகிறீர்கள்—பொது மேடைகளில்—தனியாகப் பேசும்போதோ, பெரியாரை நான் அந்த இடத்துக்கு இழுத்துக்கொண்டு வந்துவிட்டேன் என்று எக்காளமிடுகிருராம் ஒரு இடம் பிடித்தான்—எப்படி இருப்பினும், அதை அவர்கள் நம்பட்டும், நம்பினுல் நடத்தட்டுமே. அதற்கு நமது உதவியை ஏன் எதிர்பார்க்கவேண்டும் ? கிடைக்காதது கண்டு, பத்துக் கிளர்ச்சியிலும் சேரவில்லையே என்று எதற்காகப் பதைக்கவேண்டும் ?

அன்புள்ள,

*25—3—1956.*



கடிதம் ; 43

# அம்பில் அழைக்கிருர்

★ திருச்சியில் மாநில மாநாடு—
தோழர்கள் திறமை.

தம்பி !

மாற்ருர்கள் தோற்றத்தில் மிகப் பெரியவர்கள் என்றெண்ணி மருட்சி அடையாதீர்கள்.

அவர்கள் மிகப் பிரம்மாண்டமான உருவினராகத் தெரிவதற்குக் காரணம், நீங்கள் மண்டியிட்ட நிலையில் அவர்களைப் பார்ப்பதுதான் !

பவுஜாடே எனும் பிரான்சு நாட்டுத் தலைவருள் ஒருவர், இது போலக் கூறியுள்ளார். வெத்து வேட்டு வகையில் அமைந்த பேச்சல்ல, 'ஓஹோ' என்று வாழ்ந்தவர்கள், உலகப் புகழ் பெற்றவர்கள், களம் பல கண்டவர்கள், எனப்படும் நிலையினராகத் தலைவர்கள், பலர், தலைமுறை தலைமுறையாகக் கட்டிக் காத்து, தத்துவ அரண்களைத் தேடித் தேடி அமைத்துக் கொண்டு கட்சிகள் நடாத்தும் பிரான்சு நாட்டில், யார் இந்த அரசியல்வாதி? எப்போது கட்சி துவக்கினுர்? தத்துவம் யாது? பத்திரிகைகள் எத்தனை ? என்று அலட்சியமும் ஏளனமும்

கலந்த குரலில் பெரியவர்கள் கேட்டுக் கொண்டிருந்த நிலையில் சூறுவளி போலக் கிளம்பி, பொதுத் தேர்தலில் 52 இடங்களை வெற்றிகரமாகக் கைப்பற்றி, பிரான்சு அரசியல் வட்டாரத் திலே 'புதிய பிரச்சினை'யாக உருவெடுத்துள்ள பவுஜாடேயின் பேச்சு இது. காரியமாற்றியவர் பேச்சு; கனவு காண்பவரின் கற்பனையுமல்ல, களமென்றுல் பன்னெடுங் காத தூரம் ஓடிச் சென்று பதுங்குமிடம் தேடியவரின் வீம்புப் பேச்சுமல்ல, வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற வகையான வறட் டுப் பேச்சுமல்ல, நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, அதற்கு ஏற்ற வண்ணம், நடவடிக்கையில் ஈடுபட்டு, அரசிய லில் இன்றளவு வரையில், அலட்சியப்படுத்தப்பட முடியாத தாகி விட்டுள்ள தேர்தலில் வெற்றி கண்ட தலைவனின், அனுப வப் பேச்சு.

மாற்ருர்களின் தோற்றம்—என்று இங்குக் குறிப்பிடப்படு வது, தனி ஆட்களின் உடல் தோற்றம் பற்றியதல்ல, அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளுக்கு உள்ள வசதி வாய்ப்பு, அதன் பய ஞக அமையும் பணபலம் படைபலம் இவை.

இம் முறையில், ஆளும் கட்சியாகி விட்ட குழுவில் இடம் பெற்றுள்ள எந்தத் தலைவரைப் பார்த்தாலும், பிற கட்சிக் காரர்களுக்கு, 'பிரம்மாண்டமான'வராகத்தான் தெரியும். காரணம், அவர்கள் முன், நாம் கூனிக் குறுகி நிற்கிருேம், மண்டியிட்டநிலையில் அவர்களைப் பார்க்கிருேம், அதனுல் நமது கண்களுக்கு 'பிரம்மாண்டமாக'த் தெரிகிருர்கள் என்று பவு ஜாடே கூறுகிருர்.

அறிவகத்தில் ஒரு அரை மணி நேரம் அமர்ந்திருந்து, அங்கு அலுவல் புரிவோரின் தொகை, அச்சாகும் தாட்களின் அளவு, காணக் கிடக்கும் வசதிகளின் பஞ்சத் தன்மை, இவை களைப் பார்த்து, பெருமூச்செறிந்து விட்டு, மவுண்ட் ரோட் 'இந்து' பத்திரிகை நிலையத்துக்கு உள்ள கட்டிடத்தைப் பார்த் தால் பீதி கூட ஏற்படும்—இந்த 'இதழ்' தரும் ஆதரவினுல் வலிவு பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியை, நாம் எதிர்ப்பது முடி கிற காரியமா......அரண்மனைபோல் அல்லவா அலுவலகம் இருக்கிறது—'இந்து' இதழக்குத் தேவைப்படும் காகிதக் குவி யலை வைத்திடப் போதுமானதாக இராது போலிருக்கிறதே 'அறிவகம்', இதிலிருந்து கிளம்பும் எதிர்ப்பு அலை, இதைப் போன்ற பிரம்மாண்டமான 'கோட்டைகளை'த் துணையாகப் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியை என்ன செய்துவிட முடியும்? என்ற அச்சமே உள்ளத்தில் புகுந்து குடையும். பவுஜாடே அந்த அச்சம்தான் கூடாது என்கிருர். நிமிர்ந்து நில்! உன் உருவத்தை நீயே குறுகலாக்கிக் கொள்ளாதே! மாற்ருன் முன்

மண்டியிட்டுக் கிடக்காதே. அவன் ஒன்றும் உன்னைக் காட்டிலும் பிரம்மாண்டமானவனல்ல ! என்று கூறுகிருர்.

நான், தம்பி ! இந்தப் பேச்சினைக் கண்டபோது மிகமிக மகிழ்ச்சியடைந்தேன்—ஏனெனில் என்னைத்தான் உனக்கு நன்ருகத் தெரியுமே, எதிரிகள் பிரமாண்டமானவர்கள் என்ற ஏக்கம் அதிகமான அளவு கொண்டவனல்லவா; அதனுல் பவு ஜாடே என்பவர் கூறிய பேச்சு, என்னையும் கொஞ்சம் நிமிர்ந்து நின்று, பார்க்கத் தூண்டிற்று; வேடிக்கை என்னென்பேன், கூனிக் குறுகிடாமல், நிமிர்ந்து நின்று பார்க்கும் போது, அப்படி ஒன்றும் நமது மாற்ருர்கள் உண்மையிலேயே 'பிரம்மாண்ட'மானவர்களல்ல என்பது புரியத்தான் செய்கிறது !

நாம், வெளியே நின்றபடி அண்ணுந்த நிலையில் அவர்களையும் அவர்கட்கு அமைந்துள்ள வசதிகளையும் பார்த்துப் பீதி கொள்கிருேமே, அதேபோது, கோட்டை போல நிலயங்களைக் கட்டிக்கொண்டு, அதிலே கொலு மண்டபத்தார் போல் வீற்றிருந்து கோலோச்சுபவர்களாக உள்ளவர்கள், இத்தகைய எழிலும் ஏற்பாடும், வசதியும் வாய்ப்பும், அமைப்பும் இல்லாமல், எத்தனை பொலிவும் வலிவும் பெற்று, எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு இலட்சக் கணக்கான மக்களின் உள்ளத்தைத் தொட்டு உறவு பெற்று, உன்னதமான இடம் பெற்றிருக்கிருர்கள், பார்க்குமிடமெல்லாம் அவர்கள் பேச்சு! காணுமிடமெங்கும் அவர்களின் கொடிகள்! பட்டி தொட்டிகளிலும் அவர்களின் பாசறைகள் ! நாள் தவருமல் அவர்களின் முழக்கம் ! கல்வி நிலயங்களிலே அவர்களின் வாடை ! ! களியாட்டக் கொட்டகைகளெல்லாங்கூட அவர்களின் கருத்தோட்டம் ! ! எங்கும் அவர்கள் ! எதிலும் அவர்களின் கைவண்ணம் ! எப்படி முடிகிறது இவ்வளவு சாதிக்க ! நமக்கு உள்ள வசதிகளில் ஆயிரத்திலொன்று உண்டா அவர்கட்கு ! இலட்சக் கணக்கில் அச்சிட்டு வெளியே தள்ளும் இதழ்கள் எத்துணை, அவைகளுக்கு இலண்டனிலும் நியூயார்க்கிலும் கிளைகள், எல்லா நாடுகளிலும் நிருபர்கள், எந்த நிகழ்ச்சி குறித்தும் அழகழகான படங்கள், வண்ணம் கண்ணைப் பறிக்கும் அளவு தருகிருர்கள் இதழாளிகள்—இந்தப் பயல்களோ, உள்ளங்கை அளவு பத்திரிகை, அதிலே செங்கல் அடுக்கியது போன்ற எழுத்துக் கோவை, அழகு இல்லை, தனி நிருபர் தரும் அலங்காரக் கட்டுரை இல்லை, விளம்பரம் கிடையாது, விமரிசனம் காணேம், வீரத் திராவிடனே ! விழித்தெழு ! வீறு கொண்டெழு, விடுதலைக்குப் போரிடு ! என்று எழுதுகிருர்கள், இதைக் கொண்டு மட்டுமே, இவர்களால் உறங்கிக் கிடந்த மக்களை விழிப்புறச் செய்ய முடிகிறது ! நமக்கென்ன என்றிருந்த மக்-

களை அக்கறை காட்டச் செய்ய முடிகிறது—கூப்பிய கரம், குனிந்து கிடக்கும் நிலை, கண்ணீர் சிந்திடும் போக்கு, எல்லாம் மாறி, கண்களிலே ஓர் வீரக்கனல், பேச்சிலே ஓர் புது முறுக்கு, நடையிலே ஓர் புதிய எழில் கொள்ளும்படி அல்லவா செய்து விட்டார்கள்—மொத்தமாக ஒரு பத்தாயிரம் ரூபாய் செல வழித்து ஏதேனும் ஒரு காரியம் செய்யக் கூடியவர்களா? இல்லையே. எனினும், மூலை முடுக்குகளிலும் முச்சந்திகளிலும், சாலை சோலைகளிலும், வாவி வயல்களிலும், ஆலைகளிலும் அலு வலகங்களிலும், சந்தை சதுக்கத்திலும்,

வாழ்க! வாழ்கவே!
வளமார் எமது
திராவிட நாடு
வாழ்க! வாழ்கவே!

என்ற பண் எழச் செய்து விட்டார்களே! எப்படி முடிகிறது இவர்களால்?

கோட்டையில் நமது கொடி மரம், கோலோச்சும் அணை வரும் நம்மவர், கடலிற் செல்லும் கலமும், காற்றுடன் போட்டியிடும் விமானமும் நமது கொடியினைத் தாங்கிச் செல் கின்றன; உலக நாடுகள் ஒவ்வொன்றும், நம்மிடம்தான் உறவு கொண்டாடுகின்றன. நம்மிடம்,

ஆசை கொண்டேன்
உந்தன் மேலே!
மோசம் நான்
செய்யமாட்டேன்!

என்று கீதம் பாடி நிற்கிறார்கள், கோடீஸ்வரர்கள்; இந்நிலை பெற்றிருக்கிறோம், இவ்வளவு 'பிரம்மாண்டமாக' வளர்ந்து விட்டிருக்கிறோம், இந்தப் 'பொடியன்கள்' ஒரு வசதியுமற்ற வாய்வீச்சுக்காரர்கள், வறண்ட தலையர்கள், நம்மிடமிருந்து மக்களைப் பிரித்து நெடுந்தூரம் கொண்டு சென்றிட முடிகி றதே, எப்படி? எப்படி? என்றுதான் எண்ணி எண்ணி ஏக்க முறுகிறார்கள். பவுஜாடே இப்போது சொன்னார்; நம்மில் பலர் ஏற்கெனவே, மாற்றார்களின் பிரம்மாண்டமான உருவம் வெறும் மனமயக்கந்தான் என்று தெரிந்து கொண் டிருக்கிறோம், எனவேதான், கூனிக் குறுகி நின்று பீதிகொள்ளா மல், நிமிர்ந்து நின்று, அவர்களை நேருக்கு நேர் பார்த் தோம்—நம்மைக் கண்டு அவர்கட்கு இதுபோது அச்சம் பிறக்கிறது—அருவருப்புக் கலந்த அச்சம்! இந்தப் பஞ்சை களால் இவ்வளவு சாதித்திட முடிகிறதே, என்ற அருவருப்பு—

இவ்வளவு சாதித்தவர்கள், இனியும் வளர்ந்தால் என்று எண்ணும் போது ஒருவகையான அச்சம்!

காரணம் என்ன தெரியுமா தம்பி! இங்கு நானோ மற்றவர்களோ, பவுஜாடே சொன்னதுபோல, மாற்றார்கள் ஒன்றும் பிரம்மாண்டமானவர்களல்ல என்று சொன்னதில்லை. எனினும், நீயும் நானும் காணும் இன்பத் திராவிடம், எழிற் பேருருவமாக நமது மனத்திரையில் இருக்கிறதல்லவா, அதைக் காணும்போது, எவ்வளவு பிரம்மாண்டமான தலைவரும், நம்மை மிரட்டிடும் அளவுக்குப் பெரியவராகத் தெரிவதில்லை!

நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று பார்க்கிறோம், காட்சி நம்மைக் கவினுனுக்குகிறது. தோளைத் தொட்டு அவ்வேளையில் ஒருவன், மூலைக் குழாயில் தண்ணீர் வெகு வேகமாக வருகிறது, விந்தையான காட்சி அது என்று சொன்னால், நாம் குறுநகை புரிந்தபடி, "ஏடா, மூடா! மூலைக் குழாயில் வேகமாக வரும் தண்ணீரிலா விந்தைக் காட்சி காணுகிறாய், இதோ பார் எதிரே, கடலே! கடலே! விரிந்து பரந்து வியந்திடச் செய்யும் நீலக்கடலே! ஓயாது ஒலி செய்து ஞாலத்துக்குத் தாலாட்டளிக்கும் அற்புதக் கடலே!—என்று பாடிடத் தோன்றுகிறது, எழிலும் அளவும், இயல்பும் உள்ளத்தை வேறு எதனிடமும் செல்லவிடாமற் செய்கிறது, இதைக் கண்டும் கருத்தற்றவனே! மூலைக் குழாயின் தண்ணீர் வேகத்தை வியந்து பேசி நிற்கிறாயே - என்றுதானே கேட்போம்.

அப்படித்தான் கேட்டோம் நாட்டினரைப் பார்த்து, "நாட்டினரே! நாட்டினரே! உடன் பிறந்தோரே! எதை எதையோ கண்டு சொக்கி நிற்கிறீரே, சோர்ந்து போகிறீரே! அவருடைய கெம்பீரம் தெரியுமா? இவருடைய வீரதீரம் அறிவீரா? அவர் உயரம் எவ்வளவு, உள்ள இடத்தின் உன்னதம் எத்தகையது! உலக நாடுகளிலே அவருக்கு எத்தகைய புகழ்! எவ்வளவு வரவேற்பு! மக்கள் உள்ளத்தில் குடியேறியவர். கோலைக் கீழே எறிந்து விட்டு, அவர் தாளின் கீழ்க் குப்புறப் படுத்துத் தொழுதனர், கொற்றவர்கள். அவர் பாதம் பட்டால் போதும், பாவமெலாம் ஒழியும், பவிசுகள் வந்து குவியும் என்று மாளிகைகள் பல தவங் கிடக்கின்றன! கரம் குலுக்க மாட்டாரா என்று கனதனவான்கள் காத்துக்கிடக்கின்றனர்; கடைகாட்ட மாட்டாரா என்று இடை நெளியும் இதழழகிகள் ஏங்கிக்கிடக்கின்றனர், கரம் அசைந்தால், ஆம்! ஆம்! என்று இலட்சக் கணக்கானோரின் சிரம் தாழ்ந்திடுகிறது! — இந் நிலையில், இவ்வளவு உயர் இடத்தில், பிரம்மாண்டமான உருவில் உள்ளாரே, காணும் போது உனக்குக் குலை நடுக்கமே எடுத்தாக வேண்டுமே, என்று

சிலர் பலர் கூறுகின்றனர். எனினும், இவர்களின் எழிலையும் உயர்நிலையையும் கண்டு சொக்கிடு முன்பு, திராவிடரே! நமது தாயகத்தின் முன்னுள் நிலையையும், அந்நாளில் நம்மவர் பெற்றிருந்த ஏற்றத்தினையும், கொற்றம் இருந்த தன்மையையும், கோல் கெடாவண்ணம் மக்கள் விழிப்புணர்ச்சி காட்டிய பான்மையினையும், அறநெறி தந்த புலவர்தம் மாட்சினையும், அந்த அறநெறி அவனியில் பரவித் தமிழ்ச் சின்னத்தின் புகழைப் பரப்பிய பெருமையினையும் சற்றே எண்ணிப் பார்த்திடுமின், சிந்தையில் செந்தேன் பாயும், விசை ஒடிந்த தேகத்தில் வன்மை சேரும், கூனிய உடலே நிமிர்ந்திடும், கண்களில் நீர் துளிர்க்கும், எத்துணை புகழ்ச்சியில் இருந்தனர் நம்மவர் என்பது புரியும், அந்த மாமலை முன்பு இன்று நாம் காண்பதெல்லாம் கடுகாகும்—இன்று காணக் கிடைக்கும் மாற்றாரின் காட்சியே மாட்சிமையுடையது என்ற எண்ணம், அன்று நமக்கென்று இருந்து, இடையில், இலாதொழிந்து, இன்று நெஞ்சத் திரையில், புகை உருவில் பதிந்துள்ள காட்சியின் மாட்சி பற்றி எ ண் ணி ஞ ல் போதும்—இருந்த இடம் தெரியாது போகும்—என்று எடுத்தியம்பினேம், ஏடுகளில் உள்ளனவற்றைக் கல்லி எடுத்து, கறை நீக்கிக் காட்டினேம், இன்று மக்கள் மன்றம் கல் சுமந்த கனகவிசயனையும் காண்கிறது, கடாரம் வென்ற தமிழ் மகனை அறிகிறது, சிங்களத் தீவினிலே போரிற் தோற்றவர்களைக் கொண்டு கட்டப்பட்டதாம் கல்லணை; தமிழனின் புகழ்க் கம்பம் பர்மாவில் நாட்டப்பட்டதாம் முன்னர்; யவனம் அறியுமாம் நமது புகழை, அந்நாட்டு நாரீமணிகளின் அழகுக்குத் துணை நின்று குலுங்கினவாம் நமது கடலில் கிடைத்த முத்துக்கள், சீனம் அழைத்ததாம் நம் நாட்டுச் சீலர்களை, ஆகா! தம்பி! உள்ளமெலாம் உவகை பொங்கும் உண்மைக் காதைகளை நமது மக்களிடம் கூறிவிட்டோம், செவியில் இந்தச் செந்தேன் வீழ்ந்து, சிந்தைக்குப் புது விருந்து கிடைத்தான பிறகு, இதழ் பல எழிலூட்டினுலும், கோடிகள் கோட்டைகளைக் கட்டித் தந்தாலும், கோல், துணிவு தந்திடினும், இவைகளைக் காட்டி, நம்மை மிரட்டியும் மயக்கிடவும் முனைவோரின் முன்னேர், கணவாயில் குதிரைகள் நுழையும் குளம்புச் சத்தம் கேட்டதும், பீதிகொண்டு பிடரியில் கால்பட ஓடி, பெண்டு போகட்டும், பிள்ளை போகட்டும், உயிர் மட்டும் தப்பினுல் போதும் என்று, செங்கிஸ்கான், தைமூர், கோரி, கஜனி, அலாவுதீன், ஆகிய இரணகளச்சூரர்கள் காலத்திலெல்லாம், தோற்றேடிய, 'தொடை நடுங்கிக்' கூட்டத்தினரே என்பது புரிகிறபோது, பவுஜாடே எதற்கு, உன் மாற்றூர்கள் பிரம்மாண்டமானவர்களல்ல என்று எடுத்துரைக்க! நாடு அதனை அறிந்து விட்டது—நாம் கூறினேம் என்பதை எண்ணும் போது, நாம் கூறியது மக்களின் உள்ளத்திலே இடம்

பெற்று விட்டது என்பதை உணரும் போது, நாம் மகத்தான வெற்றி பெற்று விட்டோம் என்று பெருமைப்பட நாம் தயங்குவானேன்? நாடு எத்துணை பெரியது, நானிலம் நம் நாட்டினை எத்தகைய உயர்வாகக் கருதிற்று என்பது விளங்கி விட்ட பிறகு, பொய்க்கால் குதிரை ஏறி, காகிதக் கவசம் பூண்டு, கட்டைக் கத்தி ஏந்தி, தாளத்துக்குத் தக்கபடி 'போரிடும்' வீரர்பால், மதிப்பா பிறக்கும், மருட்சியா ஏற்படும்? சேரன் செங்குட்டுவனைப் பற்றிய 'சேதி'யைத் தெரிந்து கொண்டவர்களிடம், சேட்டுமார்கள் கட்டித்தந்த கோட்டையில் அமர்ந்துள்ளவர்களின் பிரம்மாண்ட உருவம் பீதியையா கிளப்பும்! எலி தோண்டும் வளையில், புலியா வீழ்ந்துபடும்! தந்தையர் நாடு தன்னிகரற்று வாழ்ந்த வரலாற்றினையும், மீண்டும் அந்நிலை எய்துதற்கான எல்லா வசதிகளும் உள்ளன என்ற நிலையினையும் தெரிந்து கொண்டவர்கள் கண்களுக்கு, இன்று ஏமாந்த நேரத்தில் ஏற்றம் கொண்டோரின் தோற்றமா திகிலூட்டும்!

"நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து" நின்று, தமது ஆட்சியின் பயனாக ஏற்பட்டுள்ள அமைதியையும், அந்த அமைதியால் விளைந்த வளத்தையும், வளம் உண்டு வாழும் மக்களுடைய மகிழ்வையும் கண்டு, கொற்றம் உடையோம், குறை ஏதும் தந்தோமில்லை, என்று மனதிலே எண்ணி மகிழ்வுறும் மன்னர்களல்லவா, தாயகத்தில் ஆண்டு வந்தனர் என்று நமக்கு இலக்கியம் கூறுகிறது—இன்றைய ஏடுகள் கூறுவது என்ன? வெள்ள மென்றும் வெந்தழல் என்றும், பஞ்சமென்றும் பட்டினி என்றும், குட்ட மென்றும் காச மென்றும், குறை கூறித் திரியும் மக்கள், தேசத் துரோகிகள்—என்றல்லவா, நீதி நெறி விளக்கமளித்திடக் காண்கிறோம்! சிலம்பு ஒலித்த திருநாட்டிலே, இன்று, செய்வதென்ன வென்று தெரியாதோரின் புலம்பலொலி அல்லவா கேட்கிறது! சீறும் புலியெனச் சிங்களத் தீவின் மீது படை எடுத்துச் சென்ற இனத்தான், 'கள்ளத் தோணி' என்றல்லவா ஏளனம் செய்யப்படுகிறான்? முத்தெடுத்து மூலை முடுக்குகளில் உள்ள நாடுகளுக் கெல்லாம் அனுப்பிய தமிழன், இன்று பிச்சை எடுத்துப் பிழைக்க 'அனுமதி' கிடைக்கும் நாடு எது என்றல்லவா கேட்கிறான். ரோம் நாட்டு மாவீரர்களைக் கட்கமெடுத்து விளையாடியது போதும், கண்ணாளா! கனகப்பந்தளிக்கிறேன், விளையாடிட வாராய்! என்று அழைத்த, கண்டாரைக் கொல்லும் கட்டழகிகள் அந்தக் கவர்ச்சியினைப் பெற்றது, நந்தம் நாட்டினர் நெய்து அனுப்பிய பொன்னார் இழையும் துகிலும் என்று கவிவாணர் நமக்குக் கூற, இன்று கைத்தறியாளர் தம் கைக் குழந்தையை, காற்படி அரிசிக்கு விற்றிடும் கொடுமைக்கல்லவா ஆளாயினர்! கலம்

கட்டினர் தமிழர் என்கிறது கல்வெட்டு; கல் உடைத்துப் பிழைக்க, கண்காணு நாடு செல்கின்றனரே அவர்தம் வழிவந் தோர். பிற்காலப் புலவர்கூட, “செந்தமிழ் நாடெனும் போதி னிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே!” என்று பாடி ஞர். இன்றோ, செந்தமிழ் நாடெனும் போதினிலே, நெஞ்சில் செந் தீயாய் வேகுது டில்லி செங்கோட்டையிலே என்றல் லவா, கதறவேண்டி இருக்கிறது.

நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றம் காண் போம், வருகிருயா, தம்பி! வா, சிந்தனைச் சிறகணிந்து வா, செந்தமிழ் நாடு இருந்த நிலையைச் சற்றே கண்டு வர லாம், வா.

பாண்டிய மன்னன், அரண்மனை மேல்தளத்தில், அமைத் துள்ள நிலாமுற்றம்—இங்கு நின்ருல், திங்களின் எழிலைப் பருகிடலாமல்லவா! என்ன தம்பி, வாய்பிளந்து நிற்கிருய்? மேல் தளத்தில் அருவி ஏது? அருவி ஓசை கேட்கிறதே என்று ஆச்சரியப்படுகிருய்—அருகே சென்று பார்த்திடலாம், வா! நீர் நிறைந்த நிலையமொன்று இருக்கிறது இந்த நிலா முற்றத் தில்—குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன அந்த நீரினைக் கொண்டு செல்ல. இதோ பார்த்தாயா, மீனின் வாய் வழி நீர் கொப்பளித்துக் கொண்டு கீழே விழுவதை! ஆமாம் தம்பி! குழாயை மீன் வடிவத்தில் அழகுற அமைத்துள்ளனர். அந்த நீர் வீழும் ஒலிதான் நீ கேட்டது. உற்றுக் கேள்......தெரி கிறதா...மயில், தம்பி, புள்ளிக் கலாப மயில், அதன் அகவலும் கேட்கிறது. அரண்மனையின் எழிலை மேலும் காணலாம்; சுவர் கள்தான், தகடுகளல்ல! செம்பினுல் செய்தாற்போல அமைந் துள்ளது, அரண்மனைச் சுவர். சுவரிலே பலவண்ணப் பூக்கள் குலுங்கும் கொடிகளைப் படர விட்டனர் என்றுதானே எண் ணிக் கொண்டாய். தொலைவிலிருந்து பார்த்தால் அப்படித் தான் தோற்றமளிக்கும். ஆனல் அது ஓவியனின் கை வண் ணம்! வெள்ளி நிறச் சாந்து பூசி, அதிலே கொடியும் மலரும் தீட்டிவைத்திருக்கிருன்! போதும் காட்சி, விரைந்து சென்று விடுவோம், வா, தம்பி, மன்னனின் கண்ணில் மட்டும் நாம் பட்டுவிடக் கூடாது, அகம் தெரியுமா, புறம் தெரியுமா என்று கேட்டு விடுவான், அறியோமே என்று கூறிடின், தமிழனல் லவோ என்று கேட்டிடுவான், நமக்கேன் வம்பு, வா, வா, ‘இந்திக்கு வந்தனை செய்திடுவோம், அதை ஏற்காதவர் மீது காய்ந்திடுவோம்’ என்ற ஏற்றம் பெற்றுள்ள இன்றைய தமிழ் நாட்டுக்குச் சென்றிடுவோம்.

முடியாது, அண்ணு! முடியாது. ஜாதி முடைநாற்ற மடித்துக் கொண்டு, தரித்திரத் தேள் கொட்டிக்கொண்டு

கிடக்கும் அடிமைப் படுகுழியாகிவிட்டுள்ள தமிழகத்துக்கு நான் வரமாட்டேன், நான், இங்கேயே, நிலவுப் பயன்கொள்ளும் நெடுவெண் முற்றத்திலேயே உலவப் போகிறேன் என்கிருயா, தம்பி! வந்ததே வம்பு. எனக்குத் தெரியுமே உன் இயல்பு. உன்னிடம் திராவிடத்தைக் காட்டினுல், இப்படித் தான் நீ பிடிவாதம் செய்வாய் என்று நான் பயந்தேன்—சரியாகி விட்டது, தம்பி! காலத்தின் தாக்குதலாலும், கயவரின் சதியாலும், நமது ஏமாந்த தன்மையாலும் தகர்க்கப்பட்டுப் போயுள்ள அந்த முற்றத்தையும் கொற்றத்தையுமே எண்ணி எண்ணி ஏங்கி என்ன பயன்? உண்மை, உன்னேயும் என்னேயும், பிடித்திழுத்து வந்து, பேதமும் பீடையும், அடிமைத் தனமும் அறிவீனமும், கொடுமையும் பிறவும் நெளியும் இன்றைய நாட்டிலே கொண்டுவந்துதானே விடும்? எப்படித் தப்புவது? தவிர்க்க முடியாததாயிற்றே.

ஆயினும், அண்ணு! அந்தக் காட்சியை...தன்னுட்சியின் உயர்வினே, எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும்......என்று பேசி, என்னே உருக வைக்கிருய்; நான் என்ன செய்வேன் தம்பி, நாம் இழந்த இன்பம் மகத்தானதுதான், பிற எந்நாட்டவரும் பெற்றிராத எழிலேத்தான் பெற்றிருந்தோம், இழந்து விட்டோம், மீண்டும் அதைக் காணலாம், என்கிருயா? காண்பது கடினம்—ஆனுல், இயலாதது அல்ல!! அதற்காகவே, கற்பனேச் சிறகணிந்தது போதும், கண்ணீர் மலிந்த திராவிடம் செல்வோம், வா, என்று அழைக்கிறேன். சென்று, மேலும் கூறுவோம், மேதினி போற்றிடமேலான நிலேயிலிருந்த நந்தம் நாடு, இன்றுள்ள சீர்கெட்ட நிலேயினே—கூறி, திருந்தாத மனத்தினரையும் திருத்தி நம்பால் அவர்களேயும் சேர்த்துக் கொண்டு, இன்பத் திராவிடம் காண்பதற்கான, பணியில் ஈடுபடுவோம். கன்னியை எண்ணிக் கொண்டு உதட்டைக் குவித்துச் சத்தம் செய்தால், முத்தத்தின் சுவையா கிட்டும்!! இன்பத் திராவிடத்தை ஏடுகள் மூலம் மட்டுமே கண்டு, திருப்தி கொள்ள முடியுமா? இழந்ததைப் பெற வேண்டும், இன்பத் திராவிடத்தைக் காண வேண்டும்.

முடியும்—முடியும் என்று எண்ணுவோரின் தொகையையும் வகையையும், அவர்தம் உறுதியையும் உற்சாகத்தையும், அவர்தம் உள்ளத்தில் பொங்கி, கண்வழி வழியும் பேரார்வத்தையும், காட்டுகிறேன் வாரீர், என்று அழைக்கிருர், அம்பில்!!

இலட்சக் கணக்கில் கூடப் போகிருர்கள்—இலட்சிய முழக்கம் கேட்கப் போகிறது.

சிங்களத் தீவிலிருந்தும் திருநெல்வேலிச் சீமையிலிருந்தும், சிங்கரச் சென்னையிலிருந்தும் பிற மாவட்டம் பலவற்றிலிருந்தும் அடலேறுகளும், அவர்கட்குக் காதல்தேனில் வீரத்தைக் குழைத்தளிக்கும் குமரிகளும், வீரரைப் பெற்றெடுத்த தாய்மார்களும் அவர் தம் இளமை வளத்தை எண்ணிக் களித்திடும் முதியோரும், வரலாறு அறிந்த மாணவர்களும், புதிய வரலாறு காணும் பாட்டாளித் தோழர்களும் அணி அணியாக வரப்போகிறார்கள், கடலலையை மிஞ்சும் களிப்பொலி எழுப்பியபடி, குடும்பம் குடும்பமாக வரப்போகிறார்கள்—குதூகலம் காணப் போகிறார்கள். குன்றெடுக்கும் நெடுந்தோளையும், குளிர்மதிப் பார்வையையும், இன்று கண்டோம் இனிவென்றோம், என்று எவரும் ஆர்வத்துடன் கூறிடத்தக்க முறையில் திரண்டு வருகிறார்கள், திரு இடத்தவர்! காண வாரீர்! கடமையை உணர வாரீர்! கருத்தளிக்கவும் காரியமாற்றவும், கலங்கா உள்ளம் படைத்தோரே! திரண்டு வாரீர்! தீரரும் வீரரும், திரு இட மீட்புக்கு எத்துணை எழுச்சியுடன் அணி வகுத்து நிற்கின்றனர் என்பதை எவரும் அறியத்தக்க விதத்தில் வந்து சேருமின்!! தாயகம் அழைக்கிறது! தளை உடைபடும் வேளை எது எனக் கேட்டு, அழைக்கிறது. பெற்றேனே, இத்தகைய மக்களை, மாற்றான் எனை ஏச, கூசாது கேட்டுக் குனிந்த தலையுடன் கிடந்தனரே, என்னால் சீராட்டி வளர்க்கப்பட்ட இந்த மக்கள், என்று கூறிக் கதறிக் கொண்டிருந்த தாயகம், இன்று, மக்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியையும் வீரத்தையும் கண்டு, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "நான் பெற்ற செல்வங்களே! தீர்ந்ததடா என் துக்கம். இனி, என் தளைகளை உடைத்திடுவீர் என்ற நம்பிக்கை பிறந்ததடா!" என்று வாழ்த்தி வரவேற்கிறார். அன்னையின் பணிக்காக, அருமந்த மக்காள், அனைவரும் வருக!!...என்றெல்லாம் கூறி அழைக்கிறார், அம்பில் தர்மலிங்கம்.

தம்பி! அம்பில் அழைப்பிற் கிணங்க, நீயும் நானும், உடன்வர இசைவோரையும் அழைத்துக் கொண்டு சென்றால், உன் உள்ளத்தில் உவகைகொள்ளச் செய்யும் இன்பத் திராவிடத்தைப் பெறுவதற்கான, வழிவகை பற்றிக் கலந்து பேசவும், கருத்துக் காணவும், திட்டம் தீட்டவும், செயல்படவும் வாய்ப்பு ஏற்படும். அம்பில் அழைப்பதும் அதற்குத்தான்.

"நிலவுப் பயன் கொள்ளும் நெடு வெண் முற்றம்" காண விழைகிறாயல்லவா, தம்பி, அது தனியே கிடைத்துவிடாது, நமக்கென்று ஓர் அரசு அமைந்தால் மட்டுமே, அத்தகைய முற்றம் கிடைக்கும், மன்னர்கட்கு மட்டுமே சொந்தமானதாக அல்ல, மக்களுக்குச் சொந்தமான முற்றம்.

மே 17, 18, 19, 20 ஆகிய நாட்களில், திருச்சியில் நடைபெறும் நமது மாநில மாநாடு, உன்னையும் என்னையும், உன்னதமான அறப்போர் வீரர்களாக ஆக்குவதற்கான பாடிவீடு என்று கூடச் சொல்லலாம். நம்மையெல்லாம் வரவேற்று உபசரித்திட வகைவகையான எண்ணங்களைக் குவித்துக் கொண்டிருக்கிறார், வரவேற்புத் தலைவர், அம்பில் தர்மலிங்கம். பொல்லாத மனிதர், என்னை எதிரில் வைத்துக்கொண்டே, சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டைவிட, எங்கள் திருச்சி மாநாடு, பன்மடங்கு கவர்ச்சியுள்ளதாக, எழுச்சி மிக்கதாக, பயன்தரத் தக்கதாக அமையப் போகிறது என்று கூறுகிறார். நானும், அதை மறுப்பதற்கில்லை, உண்மையை மறைத்திடும் திறமையை நான் எங்கே பெற்றிருக்கிறேன் !

திருச்சியில், நிச்சயமாகச் சென்னையை மிஞ்சும் வகையில் தான் மாநாடு நடைபெறும்—ஐயமில்லை.

சென்னையிலிருந்து திருச்சிக்குப் பயணப்பட்டு வந்திருக்கிறோம்—முதல் மாநில மாநாட்டிலிருந்து இரண்டாவது மாநில மாநாட்டுக்கு இடையே நாம் பெற்றுள்ள எழுச்சியும் பயிற்சியும் சாமான்யமா ! எவ்வளவு வியர்வையும் குருதியும் கொட்டினோம், எத்துணைத் தொல்லைகளைத் தாங்கிக் கொண்டோம், எத்தகைய களமெலாம் கண்டோம்—இவை கிடக்கட்டும், எவ்வளவு இழிமொழியும் பழிச்சொல்லும் வீசி நம்மை மிருகமாக்க முயற்சித்தனர் ! ! மாலை மதியமும் உன் மலர்முகமும், காற்றினிலே கலந்துவரும் கீதமும், நம் கன்னல் மொழிக் குழவியின் யாழும், கண்ணே ! என்னை எங்கெங்கே அழைத்துச் செல்கிறது தெரியுமா என்று அவன் கேட்க, இன்னுயிரே ! எங்கு வேண்டுமாயினும் அழைத்துச் செல்லட்டும், இன்னொருத்தி மனைக்கு மட்டும் சென்றீரோ, ஆமாம், இந்தப் பேசும் புரு பிறகு பாயும் புலியாக வேண்டியதுதான், என்று அவன் உள்ளத்துக்கரசி கூறிட, இன்புற்று இருக்க வேண்டிய பருவத்தினரெல்லாம், நமது கழகக் கட்டளையை ஏற்று, கடும் சிறை புகுந்து, கஞ்சிக் கலயம் தரும் காவலாட்களின் உரை கேட்டு, உள்ளத்தில் ஓராயிரம் எண்ணங்கள் ஊற்றெடுக்க, பொறு மனமே பொறு ! திரு இடத்தின் மீட்புப் பணியில் ஈடுபடும்போதும், காதற் சுவையையும் இழக்க வேண்டித்தான் வரும், என் செய்வது, என்று தமக்குத் தாமே ஆறுதல் கூறிக்கொண்டனர்.

எந்த நாட்டு விடுதலை வரலாற்றிலும், எழிலுள்ளது என்று கருதத்தகும் காரியம் பல ஆற்றியிருக்கிறோம், ஆணவத்தைச் சந்தித்திருக்கிறோம், ஆத்திரத்தை வரவிடாமல் தடுத்து மிருக்கிறோம். தூற்றலைக் கேட்டோம், நெஞ்சத்

தினவுக்கு இடமளிக்க மறுத்து விட்டோம். சதியும் பழியும் பகையை உமிழ்ந்தன—சட்டை செய்ய மறுத்துவிட்டோம். அடக்கு முறை அகோரப் பசியுடன் வந்தது, இரை கொடுத்தோம்! இன்னுயிரை ஈந்தனர் வீரர் சிலர்! கரம் இழந்தோர், காலிழந்தோர் உளர்! எவரும் நெஞ்சுரம் இழந்தாரில்லை! நேர்மையை இழந்தாரில்லை!

சென்னையிலிருந்து திருச்சிக்கு வருகிறபோது இவ்வளவு கண்டிருக்கிறோம் எனில், அம்பில் கூறுவதுபோல, திருச்சி ஏன் சென்னையை மிஞ்சாது! நிச்சயமாக, எழிலும் பயனும் மிகுதியாகவே இருக்கும்.

இங்கு, தம்பி, உன் வேட்கை தணியுமளவுக்குக் கருத்து விருந்தளிக்கப் பல திட்டங்களைத் தீட்டிய வண்ணம் உள்ளனர், வரவேற்புக் குழுவினைச் சேர்ந்தவர்கள்.

இடமும் கிடைத்துவிட்டது—மாநாட்டுக்கு!

இதிலென்ன, அண்ணா! பெருமிதம், என்று கேட்பாய், தம்பி, ஏனெனில், நீ, திரு இடம் நமதாயிற்றே, இங்கு மாநாட்டுக்கா ஒரு இடம் கிடைப்பது அரிது, என்று கேட்பாய்! ஆனால், இடம் பெறப் பட்டபாடு கொஞ்சமல்ல.

வயலாக இருந்தால், மழை வந்துற்றால், என்ன ஆகும் என்ற பயம் வருகிறது—வெட்ட வெளியாக இருந்தாலும் பரவாயில்லை, ஆனால் நகரைவிட்டு நெடுந்தொலைவில் இருந்தால் தொல்லைமிகுமே என்று அச்சமும் கவலையும் குடைகிறது.

பெரிய பெரிய திடல்கள் உள்ளன கல்லூரிகளிடம்—அவை அத்தனையும் நேரு துரைமகனுக்கு மட்டுமே தருவது என்று 'சட்டம்' இருக்கிறது! என் செய்வது!

திருச்சியில், ஜல்லடை போட்டு ஜலித்தாயிற்று—சலிப்பே வந்து விட்டது.

கடைசியில், எங்காவது குக்கிராமமாகப் பார்த்துக் கொண்டு போய்விடுவது என்று முடிவு செய்தோம்—அந்த வேளையில், கிடைத்தது, வயலாகவுமின்றி, ஊருக்கு நெடுந்தொலையில் அமைந்ததாகவுமின்றி, திருச்சி ஜங்ஷனுக்குப் பக்கத்திலேயே, ஒரு ஆறு பர்லாங்கு தொலைவிலே ஒரு பரந்த வெளி. பாடு அதிகம் இதைப் பெற. மேலும் அதிகமாகப் பாடு பட்டாக வேண்டும், அந்த இடம், எழிலிடமாக! எனினும், பார் அண்ணா, இந்த வெட்ட வெளியை எவ்வளவு அழகான விழா இடமாக்கிக் காட்டுகிறேன் பார்! என்று அம்பில் கூறுகிறார்—பொல்லாத ஆசாமியல்லவா, செய்தாலும் செய்துவிடுவார்—எதற்கும் அவருடைய அந்த முயற்சிக்கு நானும் துணை இருக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன்.

துவக்கமே மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தருவதாக அமைந்தது—அன்று அந்த வெட்ட வெளியை, வேகும் வெய்யிலில் காணச்சென்ற 'குழு' சாதாரணமாக, ஆண்டுக் கொரு முறையோ ஆறு திங்களுக்கு ஒருமுறையோதான் ஒருசேரக் காணக் கூடியது—அன்று அம்பிலின் ஏற்பாட்டின் திறம் பாருங்கள், நாவலரும் கருணுநிதியும், நடராசனும் உள்ளூர் நண்பர்களும், நானும் சம்பத்தும், இவ்வளவு பேரும், சென்று பார்த்தோம்.

மைல் கணக்கில் விரிந்து பரந்து கிடக்கிறது திடல்—பார்ப்போம், எனக்குப் போர்வை தர உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது பார்க்கலாம் என்று மிரட்டுவது போலவே இருந்தது. எனினும் நாங்கள் திகைத்துப் போய் விடவில்லை.

தம்பி ! எங்கள் கண்களைத்தான், திடல் மிரட்டிற்று—நீ காணும் போது, அங்கு ஒரு சிறிய—சீரிய எழிலூர் காணப் போகிருய் !

பகலில் பகலவன் பகைவனுகப்பார்க்கக்கூடும்—அதை, பந்தல் முறை கொண்டு தடுத்திடத் திட்டமிட்டிருக்கிருர் தருமு.

மாலையும் இரவும், மதியழகு உனக்கு விருந்தாக இருக்கும்—உள்ளத்து வெப்பத்தையும் போக்கிடும் மென்காற்றும் கிடைக்கும்—ஒளி, திரு இட மீட்புக்காக உன் கண்களில் தோன்றுகிறதே ஆர்வம், அது போலிருக்கும். செலவு சற்று அதிகமாகத்தான் இருக்கும். தர்முதான் சொல்லிவிட்டாரே, திருச்சி சென்னையை மிஞ்சும் என்று; எனினும், சற்றுத் தாராளமாகவே இருக்க வேண்டியதுதான் என்று நான் நமது நாவலருக்கும், அவர் எனக்கும், தைரியம்கூறிக்கொண்டிருக்கிரும்—எல்லாம் உன்னுடைய கைவண்ணத்தைத் தாராளமாகப் பெற முடியும் என்ற நம்பிக்கையால்தான்.

சுற்றிலும், ஒரு சிறிய ஊருக்கு மதில் அமைவதுபோல், தட்டி அடைப்பு; வண்டிகள் நிற்கத் தனியிடம். வாயிற்புறங்கள் ஐந்து. முகப்பு வாயிலில் கண்ணுக்குக் காட்சியும் கருத்துக்கு விருந்துமான முறையில் வண்ணம், ஓவியம். இதிலே, தம்பி, நீ பூரிப்புடன் உள்ளே நுழைந்ததும், ஓங்கி வளர்ந்துள்ள கொடிமரத்தில் நமது கழகக்கொடி பட்டொளி வீசிடக் காண ஏற்பாடாகி இருக்கிறது; அதைத் தொட்டுக் கொண்டு பிறை வடிவத்தில் நூற்றுக் கணக்கான கொடிமரங்கள்—அவைகளிலே கிளைக் கழகக் கொடிகள் குதூகலத்தைப் பறக்கவிட்டுக் கொண்டிருக்கும்; ஒரு புறம் பார்வையைச் செலுத்தினுல் ஓவியக் காட்சிச்சாலை அழைக்கும்; மற்ருேர் புறம், தொண்டர்கள் முகாமும், மருத்துவ விடுதியும் காட்சி தரும். சற்றுத் தொலைவிலே அங்காடி நிறுவப்படும்—அழகுற விளங்கும். மேலும் சற்றுத் தொலைவு நடந்து சென்ருல், மாவட்ட முகாம்கள்

இருக்கும்; உண்டிச் சாலைகள் வேண்டு மளவு இருக்க ஏற்பாடாகி வருகிறது; பொதுக்குழு உறுப்பினர்கள் கூடிப்பேசக் கொட்டகை, பொதுச் செயலாளர் காரியம் கவனிக்க மற்றோர் கொட்டகையும் இருக்கும், பெண்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளவும், குறிப்பாகக் குழந்தைகளுக்கு வசதி தரவும் தனிக்கொட்டகை போடப்படும். இவை யாவும் புடை சூழ, மாநில மாநாட்டுச் சொற்பொழிவுக்கூடம், ஆயிரம் அடி நீளமும் அறு நூறு அடி அகலமும் கொண்டதாய், அலங்கார மேடையும் அழகளிக்கும் வேறு அமைப்புகளும் கொண்டதாய் விளங்கும்.

தம்பி! புறம் இது! மாநாட்டு அகச்சிறப்பு, நீயல்லவா அளிக்க வேண்டும். உன்னுலா முடியாது!!

எனக்கு இப்போது, 'புற'க்காட்சி அமைப்புக்காக எடுத்துக் கொள்ளப்படவேண்டிய முயற்சியின் அளவும் பணச் செலவின் மிகுதியும்தான் தெரிகிறது—புரிகிறது—மிரட்டவும் செய்கிறது.

மணி நான்கு—விடியப்போகிறது, தம்பி, இதை எண்ணி எழுதிக் கொண்டிருக்கிறேன், கோவையில் ஒரு ஓட்டல் அறையில்—கோமான்களும் சீமான்களும், மாளிகைகளிலே ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்!! இல்லை தம்பி! இல்லை! அவர்களும் தூங்கிக் கொண்டில்லை, "என்னையா, அக்ரமம்! ஒரு மாநில மாநாடு, பல இலட்சம் பேர் கூடுவது என்றால், இலட்சக் கணக்கிலே செலவாகுமே, பணம் ஏது இதுகளிடம்?" என்று எண்ணிக்கொண்டு, 'இதுகள்' இப்படியே வளர்ந்து கொண்டேபோனால், நிலைமை என்ன ஆகும் என்ற நினைப்பும் சேர்ந்து அவர்களைத் தூக்கம் கொள்ளாமல் புரளச் செய்யும்—சிலரையாவது.

அவர்கள் அறியமாட்டார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றுள்ள செல்வத்தை.

உன் ஆர்வமும் எழுச்சியும் பெற்றுத் தரும் பெரும்பலனை, அந்தச் சீமான் பேழையில், கோழைபோலப் பதுங்கிக் கிடக்கும் பணம் பெற்றுத் தருமா, என்ன!! அதை நம்பியா, நாம் கழகம் நடத்துகிறோம்? உன்னையல்லவா கருவூலமாகக் கொண்டு, கழகம் நடக்கிறது! வெள்ளியையும் தங்கத்தையும், வைரத்தையும் சர்க்கார் சின்னம் பொறித்த காகிதத்தையுமல்லவா, அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். கழகமோ, தம்பி! உன் எஃகு உள்ளத்தை நம்பிக் கொண்டிருக்கிறது. அம்பில் தர்மலிங்கம் அதற்காகத்தான், உன்னை அழைக்கிறார்.

அன்புள்ள,

*1—4—1956*

அண்ணாதுரை

கடிதம் : 44

# நாவலர் நம் கழகக் காவலர்

* ஆவடிக்குப் பணம் திரட்டிய வகை—திராவிடரின் மறம்—திருச்சியில் மாநாடு.

தம்பி,

ஒரு அலங்காரக் கூடம்—இரத்தின ஜமுக்காளம் விரிக்கப்பட்டிருக்கிறது—சோபாக்கள் விதவிதமானவை போடப்பட்டுள்ளன—வட்ட மேஜை, அதன் மீது கண்ணாடி வட்டிலில் அழகிய காகிதப்பூ—சுவரிலே பண்டித ஜவர்ஹர்லால் நேருவும் மகாத்மாவும் நேசமும் பாசமும் ததும்பும் முறையில் உட்கார்ந்து கொண்டு உரையாடும் காட்சியைக் காட்டும் படம்—பண்டித நேருவின் வேறு பல அலுவல்களைக் காட்டும் படங்கள் உள்ளன—ஒரு புறத்தில் 'ராஜாஜி' இருக்கிறார் படத்தில்—மற்றும் பல தேசீயத் தலைவர்களின் படங்கள்.

சீமான், பரபரப்பு அடங்காத நிலையில், கூடத்தில் உலவிக்கொண்டிருககிறார்—பெயரா, தம்பி! பெயரையா கேட்கிறாய்? சொல்லக் கூடாதே, ஆமாம், பெயர்பற்றி உனக்கேன் அவ்வளவு கவலை? சீமான் என்றால் போதாதா ! பெயர்...சீமான் சந்தர்ப்பவாதி என்று வைத்துக்கொள்ளேன்—சீமான்களுக்குப் பெயர் அவ்விதம் இருக்கிறதோ இல்லையோ, இயல்பு அப்படித்தானே இருக்க வேண்டும்—இருப்பதால்தானே சீமான்களாக முடிகிறது.

சீமான் சந்தர்ப்பவாதியின் சிங்கார மாளிகைக் கூடத்திலே, வெலிங்டன் படம் ஒருபுறத்திலும், விசுவாமித்ரா-மேனகா படம் மற்றொரு புறத்திலும், தோட்டக் கச்சேரிக் காட்சியும், துரைமாரிடம் கைகுலுக்கிய காட்சியும் காட்டும் படங்களும் இருந்தன; அது, முன்பு !

இப்போது, சீமான் சந்தர்ப்பவாதி, ஜில்லா காங்கிரஸ் போஷகர், தாலுக்கா காங்கிரஸ் பொக்கிஷதார், நகர காங்கிரஸ் தலைவர், மாகாண காங்கிரசுக்குப் பயணமாகி மந்திரி வேலையை எட்டிப் பிடிக்க வேண்டியவர் !

சீமான் சிறிதளவு சஞ்சலத்துடன், கடிகாரத்தைப் பார்ப்பதும் நுழைவு வாயிலை நோக்குவதுமாகவே இருந்தார்—உள்ளே நுழைந்தான் வேலையாள்.

"என்னடா..."

"கிடைக்கலிங்க..."

"மடையா...கடை வீதியிலே போய்ப் பார்த்தாயா...... பொட்டைக் கண்ணு ! சரியாகப் பார்த்துத் தொலேத்தாயா?"

"பார்த்தேனுங்க . .ஒரு கடையிலே கூட இல்லிங்க..."

"படக்கடையிலே ?"

"இல்லிங்க ! கதர்க்கடை ஐயரைக்கூடக் கேட்டேன்— இரவலாகவாவது கொடுக்கச் சொல்லி......"

"என்ன சொன்னரு ?"

"விழுந்து விழுந்து சிரிக்கிருரு......அந்தப் படம் இங்கே ஏதுடான்னு கேட்கருரு .."

"பெரிய கடைவீதி பூராவிலுமா இல்லே..."

"இல்லிங்க...போசு படம் இருக்குதுங்க...தாகூர் படம் கிடைக்குது- பிரசாது படம் பார்த்தேனுங்க...விவேகானந்தரு படம் கிடைக்குதுங்க..."

"வெங்காயம் கிடைக்குது—ஒரு கடையிலுமா, காமராஜர் படம் கிடைக்கல்லே..."

"இல்லிங்களே..."

"என்னடா பெரிய இழவாப் போச்சு.........இன்னும் ஒரு அரைமணி நேரத்திலே வந்திடுவாங்களே......ஏலே ! டேய் ! ஓடிப்போயி, காங்கிரஸ் கமிட்டி ஆபீசிலே..."

"இருக்குதான்னு பார்க்கச் சொல்றீங்களா ? பார்த் தாச்சிங்க...கிடையாதுங்க..."

"நாசமாப் போச்சி..."

"ஐயாமாரெல்லாம் வருகிருங்க..." என்று கூறிக்கொண்டு கணக்கப்பிள்ளே உள்ளே நுழைகிருர்; சீமான் வேலையாளே வெளியே விரட்டி விட்டு முகத்தை மலரச் செய்துகொள்கிருர். உள்ளே கதராடைக் கனவான்கள் வருகிருர்கள்.

சீமான் : வாங்க ! வாங்க ! நமஸ்காரமுங்க...... நமஸ்காரம்...இப்படி.. இந்தச் சோபாவிலே...

ஒருவர் : நமஸ்தே ! நமஸ்தே !

மற்ருெருவர் : வந்தேமாதரம்.

மூன்ருமவர் : நீங்க உட்காருங்க...

சீமான் : பரவாயில்லிங்க...

நான்காமவர் : சிவ ! சிவா ! நீங்க நிற்கறது, நாங்க ளெல்லாம் உட்காருவதா, செச்சேச்சேச்சே ! உட்காருங்க......

சீமான் : ஆகட்டுங்க...

முதலாமவர் : (ஒருவரைக்காட்டி) இவர்தான்...

சீமான் : இதென்னுங்க அறிமுகப்படுத்தவேணுமா ! உலகமறிந்தவர் ஊராள்றவரு, அவரைத் தெரியாதவங் களும் உண்டா ? நம்மைப்பத்திச் சொல்லுங்க அவருக்கு.

முதலாமவர் : சொல்லித்தானே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்—உங்களோட தயாள குணத் தையும் தர்ம சிந்தனையையும், காங்கிரஸ் பக்தியையும் கேள்விப்பட்ட பிறகுதான் அவர் தம்முடைய பல வேலை களை விட்டுவிட்டு, வந்தார்...

சீமான் : என் பாக்யம்னுதான் சொல்லோணும்... பாருங்க, இங்கே ஒரு தொண்டன், இந்த மாதிரி ஆளுக வீட்டுக்கு எங்க தலைவரு வரவே மாட்டாருன்னு, கடை வீதியிலே பேசிவிட்டிருக்கான்...கண்டபடி என்னைப்பத்தி, இல்லாததும் பொல்லாததுமாப் பேசினுனுங்க...

மற்றவர் : தள்ளுங்க குப்பையிலே...தடியடிபட்டேன் ...ஜெயிலுக்குப் போனேன்...நான் தியாகி, தேசபக்தன், அப்படி இப்படின்னு, சொல்லிக்கொண்டே காலத்தை ஓட்டலாம்னு பார்க்கிறவனுங்க அவனுங்களெல்லாம். அவனுங்க பேச்சை விட்டுத் தள்ளுங்க...

சீமான் : எதுக்கும் கொஞ்சம் அடக்கி வைக்கவேணு முங்க, இந்தமாதிரி அரட்டைகளை...

ஒருவர்: சரி...அதை எல்லாம் நாம், சாவதானமாய்ப் பேசிக்கொள்வோம்—இப்ப, வந்திருக்கிற விஷயத்தை...

சீமான் : சொல்லுங்க...

ஒருவர் : நான் இவரை, வேறே எந்த இடத்துக்கும் வரவேண்டாம், அதை எல்லாம் நாங்க பார்த்துக்கொள் ளுரேம்னு சொல்லி, இங்கே மட்டும் வந்தாப் போதும்னு சொல்லி...

சீமான் : ரொம்ப சந்தோஷமுங்க...

மற்றவர் : பேப்பர்லே பார்த்திங்களேல்லோ...

சீமான் : ஐயா, இங்கே வருகிருர் என்கிற சேதிங் களா ? காணோமே......

ஒருவர் : அதல்ல...ஆவடி காங்கிரசு பற்றி...

சீமான் : அதுங்களா...ஒவ்வொரு நாளும் வருதுங்க ...படிக்கப் படிக்கப் பிரம்மானந்தமா இருக்குதுங்க...

மற்றவர் : செலவு ஏராளமா இருக்குது...

சீமான் : இதென்னங்க பிரமாதம்.........பிரம்மா நினைச்சா ஆயுசுக்குக் குறைவான்னுனும், அதுபோல, நம்ம தலைவரு மனசு வைச்சா தீர்ந்தது...பட்ஜட்டிலேயே ஒரு பத்து இலட்சம் ஒதுக்கிவிட்டாப் போகுது...

மற்றவர் : அப்படிச் செய்யலாமா...அதிகாரம் இருக்குன்னு வையுங்க...எதிர்த்துக் கேட்கவும் ஆள் எவன் இருக்கான்...ஆனாலும், நாம் அப்படிச் செய்யப்படாது பாருங்க...அதனாலேதான், பணம் 'தண்டி'...பிரமாதமா நடத்திக் காட்டறதுன்னு தீர்மானிச்சாச்சி...உங்களிடமிருந்து, ஐயா, ஒரு இருவது எதிர்பாக்கிறுரு...

சீமான் : நீங்க ஒரு வேடிக்கை...டாட்டாவும், பிர்லாவும் தரலாம்...நான் என்னங்க, தகரக் குவளை......என் சக்திக்கு ஏற்றதை நான் தருவேனுங்க...

மற்றவர் : அனுமாருக்கு, அவரோட சக்தி அவருக்குத் தெரியாதாம்...பிறர் சொன்னாத்தான் தெரியுமாம்... கடலைப் பார்த்ததும் கலங்கிப்போனாராம், இதை எப்படித் தாண்ட முடியும்னு...ஜாம்பவான் சொன்னாராம்......... அனுமான்! தாண்டு, உன்னாலே முடியும்னு...தாண்டினார்! இராமாயணம் கேட்டிருக்கேன் அதுபோல, உங்களோட சக்தி உங்களுக்குத் தெரியாது...நாங்கதான் சொல்ல வேணும். இருவதுக்குக் குறைஞ்சா இவர் வந்ததுக்கும் கௌரவமல்ல...உங்கள் யோக்யதைக்கும்...

சீமான் : பிடிவாதம் செய்யாதிங்க...பெரியவரை எதிரே வைத்துக் கொண்டு, என்னோட மானத்தைக் கெடுத்துப் போடாதிங்க...இந்த வருஷம் ரொம்ப 'டல்லு'ங்க...வியாபாரம் சரியில்லை......நம்ம ஆபீசருங்களும் புலியாப் பாயருங்க...மேலே விழுந்துக்கருங்க...... எந்த மாதிரியா எழுதினாலும், அவங்க கண்ணுக்குத் தப்புக் கணக்காத்தான் தெரியுது ...நான் இதைப்பத்தி தலைவரிடமே வந்து சொல்லணும்னு எண்ணிக்கொண்டிருந்தேன்...ஏதோ என அதிர்ஷ்டம் அவரே வந்திருக்காரு...

ஒருவர் : உங்களுக்கு வேண்டியதை நான் கவனித்துக் கொள்கிறேன்—அதைப்பத்தி இப்ப பேசத் தேவையில்லை...

சீமான் : சரிங்க...நல்ல காரியம் நடக்கப் போகுது. நம்மோட கஷ்டத்தைக் கவனிக்கப்படாது. ஒரு அஞ்சு அனுப்பி விடறேன்.

ஒருவர் : அதென்னங்க அஞ்சும் பிஞ்சும்...

சீமான் : உங்களண்டை சொல்றதிலே தப்பு என்னங்க, அந்த அஞ்சுக்கே நான் அகர்சந்துகிட்டேதான் போகவேண்டி இருக்கு...

ஒருவர் : இதுபோலப் பேரம் பேசப் போறது தெரிஞ்சிருந்தா...இவரை அழைத்துக் கொண்டு வந்திருக்க மாட்டோம்.

அவர் : பரவாயில்லே...எனக்கு ரொம்ப நாளா இவரைப் பார்க்க வேணும்னு எண்ணம். பணம் கொடுத்தாத்தானு! அது அவர் சவுகரியம்......பத்து கொடுக்கிறவங்க 'லிஸ்டு' ஒண்ணு பண்டித நேருவுக்குப் போவுது... அதிலே இவர் பெயர் இருக்கவேணும் என்பது என் ஆசை...

சீமான்: அப்படிங்களா......நீங்க உத்தரவு போடுங்க ...நான் மீறவா போறேன்......ஐயா! கணக்கப் பிள்ளை!!

[கணக்கப்பிள்ளை வருகிறார். அவரிடம் இரகசியமாகச் சீமான் பேசுகிறார். அவர் போன பிறகு, சமையல் ஐயர் வருகிறார். 'பாதாம்கீர்' அனைவருக்கும் தரப் படுகிறது.]

எங்கு ? எப்போது ? என்றெல்லாம் கேட்டு என்னைச் சங்கடத்தில் இழுத்துவிடாதே தம்பி. ஆவடியில் கூடினரே காங்கிரசார், அப்போது, இதுபோலெல்லாம் பணம் திரட்ட முடிந்தது—எளிதாக. ஆவடியிலிருந்து இப்போது அமிர்தசரஸ் சென்றுள்ளனர்.

ஆளும் கட்சியாகக் காங்கிரஸ் மாறுவதற்கு முன்பேகூட, தேசீயப் போராட்டம், 'இந்திய முதலாளிகளுக்கு'ச் சாதகமான சூழ்நிலையை உண்டாக்கும் என்பதை அறிந்த 'பிர்லாக்கள்,' காங்கிரஸின் போராட்டங்கள், கிளர்ச்சிகள், தேர்தல்கள், மாநாடுகள் ஆகியவற்றுக்கெல்லாம் தாராளமாகப் பணம் கொடுத்தனர், விதைக்கிறோம், அறுவடை ஆனந்தமாகப் பிறகு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்.

பிர்லா என்று நினைக்கிறேன், ஒரு சமயம் காந்தியாருக்கு, ஒரு கடிதமும், கையொப்பமிட்ட, ஆனால் தொகை மட்டும் குறிப்பிடாத 'செக்'கும் அனுப்பினாராம்.

மகாத்மாஜீ ! காங்கிரஸ் பணிக்காக, என்னிடம் தாங்கள் பணம் கேட்பதுபோல நான் நேற்று ஒரு கனவு கண்டேன்;

உள்ளம் உருகி விட்டது; தொகை இவ்வளவு என்று தாங்கள், கனவில் குறிப்பிடவில்லை; எனவே நான், தொகை குறிக்காமல் 'செக்' அனுப்பியிருக்கிறேன், பெற்றுக் கொண்டு, தாங்கள் விரும்பும் தொகையை எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டு கிறேன் என்பதாக அவர் எழுதி இருந்தார் என்று அந்த நாட் களில் பத்திரிகைகளில் 'சேதி' வெளியிட்டார்கள்.

ஆலை அரசர்களும், வணிகக் கோமான்களும், சிற்றரசர் களும், சீமான்களும் பாலூட்டி வளர்த்தனர், பாரத மாதா வின் தளைகள் உடைபடவேண்டும் என்ற தூய நோக்கத்துக் காக அல்ல, வெள்ளையர் வெளியேற்றப்பட்டால், நாடு தங்கள் வேட்டைக் காடு ஆகும் என்ற 'நப்பாசையால்'. அந்த ஆசையும் அவர்கட்கு ஈடேறிற்று; காங்கிரஸ் ஆட்சிக்கு வந் தது. முதலாளிகட்கு நல்லதோர் பாதுகாப்பாக அமைந்து விட்டது; மாளிகைவாசிகள் 'கூர்க்கா'வுக்குப் பணம் கொடுத்துப் பாதுகாப்புத்தேடிக்கொள்வதுபோல, இப்போது, முதலாளிகள், ஆவடி, அமிர்தசரஸ் ஆகிய நிகழ்ச்சிகளுக்குத் தாராளமாகவும் ஏராளமாகவும் நன்கொடைகளைக் கொடுத்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள் கிறார்கள்.

பணக்காரரிடமிருந்து பணமும் ஏழைகளிடமிருந்து ஓட்டு களும், திரட்டிக் கொள்வதிலே, நேரு பண்டிதர் நிகரற்ற சமர்த்தர் என்று டாக்டர் லோகியா சென்னையில் ஒரு கூட்டத் தில் சொன்னார். உண்மை! நேரு, அவருடைய தரத்துக்குத் தக்க அளவில் திரட்டுகிறார் என்றால், மற்ற காங்கிரஸ் தலைவர் கள் அவரவர் தரத்துக்குத் தக்கபடி, பணம் திரட்டும் பக்குவ மும், பயிற்சியும், திறமும் பெற்றுள்ளனர்.

தேவைப்படும் வாழை இலை பூராவும், நான் அனுப்பி வைக்கிறேன்.

என்னிடம் உள்ள சவுக்குத் தோப்புகளை, நான் தந்து விடு கிறேன்.

சீரகச் சம்பா நூறு வண்டி அனுப்பி வைக்கிறேன்.

தலைவர்களுக்குத் தேவைப்படும் மாலைகள் முழுவதும் நான் அனுப்பி வைக்கிறேன்.

இவ்விதம், ஆவடிக்குப் போட்டி போட்டுக் கொண்டு அனுப்பினர்—அறுபட்ட விரலுக்குச் சுண்ணாம்பு தராதவர் கள், எச்சிற் கையால் காகம் ஓட்டாதவர்கள் என்று சூழ இருப்போரால் ஏளனம் செய்யப்பட்டவர்கள். திடீரென்று கருணையும், கனிவும், காதலும், கனதனவான்கள் உள்ளத்தில் ஊற்றெடுத்துவிட்டது என்பதல்ல பொருள்—துரைத்தனம்

இன்று காந்திக் குல்லாய்க்காரரிடம் இருப்பது தெரிவதாலும், காங்கிரஸ் கட்சியின் இரும்புப் பிடியினுல்தான், காலம் உசுப்பி விடும் புரட்சி தடுத்து வைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிவ தாலும்!

காங்கிரஸ் மாநாடு, இதன் பயனுக வைரம் ஒளிவிடும் கண்காட்சியாகிறது! தொட்டால் துவண்டுவிடும் தோகை யாள், மலர் பட்டால் சிவந்துவிடும் மென் பாதத்தாள், கெண்டை மீனும் மானும் கண்டு நாணுகின்ற விழியாள், கற் கண்டுப் பாகுமொழியாள், என்றெல்லாம் சொல்லத்தக்க சீமாட்டிகளும், அவர்தமை 'உடைமை' கொண்ட உரிமை யாளர்களும், தமது ப்யூக்கிலும் பாக்கார்டிலும், ரோல்சி லும் கெடிலாக்கிலும், வந்திருந்து மகிழ்வதற்கு இன்று கிடைக் கும் மன்றமே, காங்கிரஸ்தான்! அங்குதான் ஆலை அரசர்கள் ஆங்கில நாட்டுப் பிரபுக்களையும், அவர்களை ஆட்டிப் படைக் கும் அமெரிக்க நாட்டு டாலர் பூபதிகளையும் கண்டு பேசவும், கூட்டாளிகளாகக் கொள்ளவும் முடிகிறது.

"யார் அந்த ஒய்யாரி? அணிந்துள்ள உடை என்ன? தங்கநிறக் கண்ணுடியோ அல்லது அன்றலர்ந்த மலர் கொண்டு தொடுக்கப்பட்டதோ என்று கேட்டிடவும், "யார்? அந்த இளமங்கையா? நேப்பாள நாட்டு மன்னரின் பரிவாரத் தில் கண்டேன் இந்தக் காரிகையை..." என்று பதில் பெறவும், இன்றுள்ள ஒரே எழிலூர் காங்கிரஸ் மாநாடுதான்! கோடீஸ் வரர்களும் இலட்சாதிபதிகளும், பட்டத்தை விட்டுவிட்டுப் படாடோபத்தை மட்டும் கெட்டியாகப் பற்றிக் கொண்டுள்ள 'ராஜாக்களும்' கொலுவீற்றிருக்கக் கிடைக்கும் ஒரே இடம் காங்கிரஸ் மாநாடுதான்!

உடற் கனத்தைக் குறைத்துக் கொள்ளவும், உள்ளத் துக்கு உல்லாசம் தேடிடவும், சுவிட்சர்லந்துக்கும் பாரிசுக்கும் சென்று வரும் சுந்தரிகளையும், கல்வித்துறை ஆராய்ச்சிக்குக் கனடாவுக்கும், செல்வத்துறை ஆராய்ச்சிக்கு அமெரிக்காவுக் கும் சென்று வந்தேன் என்று கூறிடும் செல்லப் பிள்ளைகளையும் காணவேண்டுமானுல், காங்கிரஸ் மாநாடுகளில்தான் முடியும்.

அறுபதுக்கு ஆறே ஏழோதான் குறைவு என்ருர்கள் இந்த அம்மைக்கு; இப்போது உடையைப் பார்த்தால் இருபதாண்டு இளமங்கை போலிருக்கிறது, நடையோ முப்பதுக்கு மேலி ராது என்று மதிப்பிட வைக்கிறது, அலங்காரமோ நட்சத் திரங்கள் கண்டு பொருமைப்படத்தக்க விதமாக இருக்கிறது. எப்படி இந்த எழிலும் இளமையும் பெறமுடிந்தது என்று கேட்க, இவ்வளவுதானே உனக்குத் தெரிந்தது நண்பா! அந்த நளினியின் புன்னகையைக் கண்டால் என்ன சொல்வாயோ!

உடலழகைக் கண்டே இத்துணை ஆச்சரியமடைந்திருக்கிறாய், உள்ளத்திலே ஊற்றெடுத்துக் கிடக்கும் பரோபகார சிந்தனையைச் சிறிதளவேனும் அறிந்திடும் வாய்ப்பினைப் பெற்றால், ஏதேது எண்ணுவாயோ! இவ்வளவு எழிலும் இளமையும், முதுமையில் உழன்று கிடந்த இந்தச் சீமாட்டிக்குக் கிடைத்ததற்குக் காரணம் கீழ்நாட்டு ஓவியம் பற்றி மேனாட்டாருக்கு அறிவிக்க இவர்கள் ஈராண்டுக் காலம் அமெரிக்கா சென்று வந்ததுதான்! அங்கு ஓர் மருத்துவ விடுதியில், சருகு, தளிராக்கப்படுகிறதாம்!—என்று பதில் பெறவுமான உற்சாக உரையாடல்கள் கேட்கவேண்டுமானால், காங்கிரஸ் மாநாட்டிலேதான் முடியும். காங்கிரஸ் மாநாடு என்பது உல்லாச விழா ஆகிவிட்டது; எனவே வாழ்க்கைச் சல்லாபம் பெறும் செல்வக் குடியினர், அங்கு சென்று ஆனந்தம் காண்கின்றனர்.

நான் உன்னை, வறண்ட தலையினர், இருண்ட கண்ணினர், வாழ்க்கைச் சுமையைத் தாங்கித் தாங்கி வளைந்து போயுள்ள நொந்த உள்ளத்தினர், இவர்கள் கூடிடும், மாநாட்டுக்கு அழைக்கிறேன்! இங்கு நீ பட்டுப் பூச்சிகளைக் காணமுடியாது! படாடோபச் சீமான்கள் கிடைக்கமாட்டார்கள்! ஆலைக் கணக்கும் சோலைக் கணக்கும் கூட்டிக் கூட்டிக் களித்திடும் கனவான் உன் கண்ணில் படமாட்டார்! சல்லாபப் பேச்சிலே வல்லவரும், சாகச வீச்சிலே வெல்பவரும், இங்கு உலவமாட்டார்கள். இங்கு கண்களை மயக்கி, கருத்தினைக் குழப்பி, கால் தடுமாறவும் பேச்சுக் குழறவும் ஆகும்படியான நிலையை மூட்டிவிடும் நளினிகளின் நாட்டிய விருந்தை எதிர்பார்த்தால் ஏமாற்றம் அடைவாய். சதங்கைச் சத்தம், அதனுடன் போட்டியிடும் வளை ஒலி, அதற்குக் காரணமான மோகனப் பூசல், இவை உன் செவிக்கு விருந்தாகக் கிடைக்குமென்று எதிர்பார்த்திடாதே!

திருச்சியில், நடைபெறும் மாநில மாநாடு, திக்கற்றோருக்கு ஒரு திட்டம் காட்டும் திருச்சபை—வாழ்விழந்தோருக்கு வழிகாட்ட எடுத்துக் கொள்ளப்படும் ஒரு நன்முயற்சி—வழி தவறியோருக்கு நன்னெறி பற்றிய விளக்கமளித்திடும் முயற்சி!

ஒளி இழந்த கண்ணினரே! நமது முன்னோர் வாழ்ந்த வகை கூறிடக் கேண்மின்! பிறகு உமது கண்களிலே ஓர் புத்தொளி பூத்திடும்!!—என்று எடுத்தியம்பும் ஓர் மருத்துவக் கூடம்—இம்மாநாடு.

மகனே! மகனே! அருமந்த மகனே! என் ஆசை மகனே!! பெற்றேனே பாவி நான் உன்னை, பாலூட்டிச் சீராட்டி வளர்த்தேனே, உன் மழலை கேட்டு மகிழ்ந்தேனே, துள்ளித் திரியும்

பிள்ளைப் பருவத்திலே உன்னைக் கண்டு 'கர்வம்'கூடக் கொண்டேன், அந்தோ மகனே! அரும்பு மீசை கொண்ட வனுனய், அஞ்சா நெஞ்சினர் மரபு அன்றே, இனி அவனியே, எதிர்த்தாலும் எனக்கென்ன அச்சம் என்றெல்லாம் எண்ணி இறுமாந்து கிடந்தேன்! ஆனல், ஐயோ! அயலவன் என்னை ஆட்டிப் படைக்கிறன், அலங்கோலப்படுத்துகிறன், இம்சிக்கிறன், இழிவாக நடத்துகிறன், என் கூந்தலைப் பிடித்திழுத்துக் குற்றேவல் செய்யச் சொல்கிறன்—மகனே! எங்கே இருக்கிறய்? என் இழிநிலை கண்டு, புலி எனச் சீறி எழுவாய், புல்லர்தம் ஆதிக்கத்தை அழித்தொழிப்பாய்! என் கண்ணீர் துடைப்பாய், கலி தீர்ப்பாய் என்றெல்லாம் எண்ணிக் கதறி நின்றேன், உன்னைக் காணேமே, என்று பெற்றெடுத்த தாய் புலம்பும் போது, மகன், இழுக்கு நடைக்காரியுடன் வழுக்குப் பாறை வழியில் சென்றன் என்றல் எப்படி இருக்கும்!

வழுக்குப் பாறையில்தான் தம்பி இழுக்குடையாளின் பின்னே நாம் சென்று கொண்டிருந்தோம்.

திருஇடம் சீரழிக்கப்படுவதையும், பேரழிக்கப்படுவதையும், அடிமைப் படுத்தப்படுவதையும், அலங்கோலமாக்கப்படுவதையும் கண்டும் காணுதவர் போலாகி, ஆரியமெனும் இழுக்குடையாளுடனும், வடவர் ஆட்சி எனும் வழுக்கு நிலத்திலே தான் நடந்து சென்று கொண்டிருந்தோம்—நீண்ட நாட்களாக!

நமது நிலையினை உணரவும் நமது தாயகத்துக்கு வந்துற்ற தாழ்நிலையினைத் தெரிந்துகொள்ளவும், எளிதில் நம்மால் முடியவில்லை.

நாம் யார் என்பதனையும், நமது நாடு எது என்பதனையும், நம் நாடு எந்நிலையில் இன்று உளது என்பதனையும், அதனை மாற்றித் திருஇடம் காணவேண்டும் என்பதனையும் உணர்ந்தோரின் அணிவகுப்பு காணத்தான் உன்னை அழைக்கிறேன்—உல்லாசம் காண அல்ல.

திருச்சிக்குத் தீரர்கள் அழைக்கப்படுகிறர்கள்—திருவாளர்கள் அல்ல! தோழர்கள் கூடுகிறர்கள், சீமான்களல்ல! வைரம் அல்ல காட்டச் சொல்வது, எஃகு உள்ளத்தை! மலர்த் தோட்டமல்ல, மாநாடு, மறவர் பாசறை! வெந்ததைத் தின்றுவிட்டு வேடிக்கைத் தெந்தினம் பாடிட அல்ல; வேதனைப் படுகுழியில் வீழ்ந்துள்ள தாயகத்தை மீட்கவும், அதற்காக வெந்தழல் மிக்கதோர் அகழியைக் கடந்தாக வேண்டுமென்ற நிலை இருப்பினும், துணிந்து இறங்கி, கருகி மாண்டவர் போக, மீதமுள்ளோர் முன்னேறிச் சென்று, தாயின் தளைகளை உடைத்தெறிந்து, அன்னையை அரியாசனம் ஏறச்செய்து, "நான் உனது

மகனலனே ! நீ எனக்கு வாய்த்த தாய் அலவோ ?'' என்று தழதழத்த குரலிற் கேட்டு அன்னையின் அன்புக் கண்ணீரைக் காணிக்கையாகப் பெற்றுப் பெருமைப்பட, ஓர் பெரும்படை கூடுகிறது திருச்சியில், மே, 17, 18, 19, 20—நாட்களில்—வீரம் அறிந்தவனே! வெற்றிபெற்றுத் தரத்தக்க தீரம் மிகுந்தவனே ! களம் காணக் கலங்காத அடலேறே ! என் அருமைத் தம்பி ! வா ! காண்போர் மனம் மகிழவும், காணாதார் மனம் ஏங்கவும், ஏறு நடையுடன் வா ! என் அரும் திருநாடே ! எல்லா வளங்கட்கும் உறைவிடமே ! எவரையும் ஈர்க்கும் இயற்கை எழிலை ஏராளமாகப் பெற்ற என் பொன்னாடே ! கெம்பீரத்தை விளக்குவது போன்ற மாமலை பலவும், மனக் குமுறலைக் காட்டிவிடுவது போலுள்ள பெருங்கடலும், உணர்ச்சி பீறிட்டு வருவதுபோல் ஆர்த்தெழும் ஆறுகள் பலவும் அழகழகாய்ப் பெற்றுள்ள செல்வத் திருநாடே! செந்தமிழ் தன்னையும் அதன் சேய்களாய்க் கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் பெற்றெடுத்த பெருமைமிக்க நாடே ! வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து புகழ் பெற்ற புலமை மிக்க நாடே ! போர்க்கஞ்சாக் கொற்றவர்களையும், அவர் தம் கோலுக்கு அஞ்சாக் குடிமக்களையும், அவர் தம் ஏரடிக்கும் சிறு கோலுக்கு அஞ்சி, கேட்டதைத் தந்த செல்வியையும் பெற்றுச் சீருடன் விளங்கிப் பாராண்ட நாடே ! பண்பளிக்கும் பெட்டகமே ! கலைக்கு ஓர் கருவூலமே! வீரம் விளைவிக்கும் பண்ணையே! மறக்குடி மகளிரின் மாண்பினை மாநிலம் கண்டு வியக்கத்தக்க அளவில் பெற்றிருந்த ஏற்றமிக்க நாடே ! என் தாய்நாடே! உன்னை வணங்குகிறேன்; வாழ்த்துகிறேன் ! வளம் தந்தாய், வாழ்வு தந்தாய்—இனி நான், உனக்கு வந்துற்ற இடரும் இழிவும் நீங்கிட, இன்னலை ஏற்க மட்டுமல்ல, இதோ இன்னுயிரை ஈந்திடவும் துணிந்துவிட்டேன் ! அந்த உறுதியைத்தான், இதோ அணி அணியாக வந்துகொண்டிருக்கும் என் உடன் பிறந்தார் காட்டுகின்றனர். அவர்களின் வாழ்த்தொலி, வஞ்சனையால் நம்மை வீழ்த்தி, சாகசத்தால் இன்னமும் நம்மைச் சாய்த்திட எண்ணும், மாற்றாரின் மனதிலே மருட்சியை மூட்டுகிறது, காணாய் !—என்று கூறிட வாராய், என்று உரிமையுடன் அழைக்கிறேன்.

வெட்டவெளியில் வேகவைக்கும் வெய்யிலைப் பொருட்படுத்தாது, கொட்டகை அமைக்கவும் கோலம் கிடைத்திடச் செய்யவும், திருச்சித் தோழர்கள் முயற்சி எடுத்துக்கொண்டுள்ளனர்.

முடிமன்னர்கள் கட்டிய மண்டிலங்களும் அவைதம் சிறப்பும் பிடிமண்ணாகிப்போன காதை அறிந்தும், இந்தப் பொடியன்கள், ஏதேதோ பேசுகின்றனர், போர் போர் என்று முழக்க

மிடுகின்றனர், என்னே பேதைமை! என்று ஒரு புறம் ஆரியம் எள்ளி நகையாடுகிறது.

பணயுதத்தின் பராக்கிரமம் அறியாத பதர்களே! பாரெங்கும் எமது பண்டிதருக்குப் பராக்குப் பாடிடும் போது, எங்கோ ஓர் மூலையில் நின்றுகொண்டு விடுதலை என்கிறீர்கள், கிளர்ச்சி என்கிறீர்கள்-போலீஸ் பாயும், பட்டாளம் துரத்தும், சிறையில் தள்ளுவோம், தூக்குமரத்தில் ஏற்றுவோம், நாங்கள் துரைமார்கள் ஆகிவிட்ட சேதியை அறியீரா?—என்று ஆணவத்துடன் கேட்டு ஆர்ப்பரிக்கிறது வடவராட்சி.

வகையற்றோரே! வாழவழி அறியாதாரே! வறட்டுத் தத்துவம் பேசுவோரே! பட்டமும் பதவியும், பவிசும் தரக் காங்கிரஸ், கிட்டே நெருங்கி வருவோரை எல்லாம் அழைக்கிறது, குட்டம் கொண்டோனுயினும் பனிநீர் தெளித்து, பரிமளகந்தம் பூசிப் படுக்கை அறை அழைத்தேகும், பசிகொண்ட பாதகிபோல், கொள்ளை இலாபக்காரராயினும் கள்ள மார்க்கட்டுக்காரராயினும், மக்கட்கு மாபெரும் துரோக மிழைத்தோராயினும், ஊரை அடித்து உலையில் போடுவோராயினும், அனைவரையும் வரவேற்று உபசரித்து, உயர்வளிக்கக் காங்கிரஸ் சித்தமாக இருக்கும்போது, அதன் நிழலில் குளிர்ச்சியும், அதன் நேசத்தில் மலர்ச்சியும் கண்டு சுவைத்திடாமல், கொள்கை என்றும் குறிக்கோள் என்றும், தாய்நாடு என்றும் தன்னரசு என்றும், திராவிட மென்றும் தன்மான மென்றும் ஒலி கிளப்பிக் கொண்டு ஒய்யார வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்கிறீர்களே! ஓட்டாண்டியாகாதீர்! பதவிபெறும் பாதையை விட்டுவிட்டு, சிறைக்கும் சித்திரவதைக்கும் அழைத்துச் செல்லும் பாதையில் ஏன் செல்லுகிறீர்கள்? எம்மைப் பார்த்து, பிழைக்கும் வழி அறிமின்!—என்று கூவிக் கூவி அழைக்கின்றனர்—கொள்கையை இழந்து, கோல்கொண்டோரின் கொடியைத் தூக்கிக்கொண்டு கூத்தடிக்கும் கோணங்கிகள்!

நானிருக்கப் போர் ஏன்? என்று தத்துவம் பேசுகிறார் காமராஜர்.

வயிற்றுப் பிழைப்புக்காரர்கள்—வஞ்சகர்கள்—போக்கிடமற்றவர்கள்—என்று ஏசுகின்றனர், நாம் உழைத்து உயர்வளித்த குடும்பத்தினர் எனத் தகும் திராவிடக் கழகத்தினர்.

இந்தச் சூழ்நிலையில், தம்பி! நாம் நமது குடும்பத்தின் முழு வலிவும் பூரணப் பொலிவும், திருச்சி மாநில மாநாட்டில் விளங்கிடும் வகையில் கூடிட வேண்டாமா!

களம் பல சென்று கடும்போரில் ஈடுபட்டுத் தியாகத் தழும்புகளை ஏற்றிருக்கிறோம்—தாயக மீட்புப் பணிக்காக நம்மை நாமே ஒப்படைத்துவிட்ட நிலையினரானோம்.

பெற்ற தழும்புகளைக் கண்டு, பெருமிதம் அடைந்திட மட்டுமல்ல, இழித்தும் பழித்தும் பேசிடும் இயல்பினரை இனி நாம் பொருட்படுத்தப் போவதில்லை என்பது பற்றிப் பேசிட மட்டுமல்ல, எதிர்ப்போர், ஏளனம் செய்வோர் ஆகியோரின் திட்டத்தைத் தகர்த்தெறிய வழிவகை காணமட்டுமல்ல, நமது 'வரலாறு' பற்றிய ஆய்வுரையை நாட்டினர் அறியச் செய்யமட்டுமல்ல, சீரிய நம் கொள்கை வெற்றிபெறத்தக்க செயல் திட்டம் காணக் கூடுகிறோம்! இதற்குச் சிந்தையில் உறுதிதான் சிறப்புறத் தேவையே தவிர, சிங்கார அமைப்பு களும் செல்வப் பெருக்கமும் அல்ல!

களம் செல்லத் துடிப்போருக்குக் கட்கம் முக்கியமே தவிர, கட்டில் தந்தத்தாலா, தங்கத்தாலா, வட்டிலில் பாலா, தேனா, வனிதையின் மொழி யாழா, குழலா என்பதல்ல முக்கியப் பிரச்சினைகள்.

வதைபடும் தாயகத்தைக் காண்கிறோம்—விடுதலைக்கான வழிவகை காணக் கூடுகிறோம்.

கஷ்டநஷ்டம் ஏற்கும் உள்ளம் படைத்தோர் கூடுகிறோம்.

நாவலர் நெடுஞ்செழியனைக் கழகக் காவலராகக் கொண்டு கூடுகிறோம்

நாவலர்—நம் கழகக் காவலர், தன்னிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள படை, ஒப்புயர்வற்றது, உளத்திண்மை கொண்டது என்பதை உணரத்தக்க அளவிலும் வகையிலும், ஆற்றல் மிக்க தம்பி! உடன் பிறந்தோரை, உற்றாரை, உறவினரை, உளப்பண்புமிக்கோரை, அனைவரையும் அழைத்துக்கொண்டு, வா! உன் ஆர்வம் கண்டு களித்திடவும், கண்ணொளி கண்டு மகிழ்ந்திடவும், துடிக்கிறேன். இன்னலும் இழிமொழியும், வண்கணாளரின் வஞ்சகமும், என்னை வாட்டி வதைத்திடும் விதத்தில் ஏவப்படும் போதெல்லாம், நான் கலங்காது நின்று என் சக்திக்கேற்ற அளவு கடமையைச் செய்வதற்குக் காரணம் என்ன தெரியுமா? தம்பி உடையான் படைக்கு அஞ்சான்! அதனால் !!

அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பா அது! ஆகவே தம்பி, காடு மலை வனம் குறுக்கே நின்றாலும், காதகரும் பாத கரும் தடை விதித்தாலும், வேலை நெருக்கடி மிரட்டினாலும், பண நெருக்கடி பயமூட்டினாலும், விவரமறியாதார் குழப்ப மூட்ட முயற்சித்தாலும், அதிகாரம் கொண்டோர் அடக்கிட முனைந்தாலும், எதற்கும் சளைக்காமல் கிடைக்கும் வசதிகளைத் திரட்டிக்கொண்டு, வசதி கிடைக்காவிட்டால், ஓர் புனிதப் பயணத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற உறுதியைத் துணைக் கொண்டு, புறப்படு, திருச்சி நோக்கி!

உன் எழுச்சி, நாடெங்கும் எதிரொலிக்கட்டும்.

உன் முழக்கம், மாநிலமெங்கும் கேட்கட்டும்.

உன் பரணி, நாம் முன்னம் தரணி ஆண்டோர் என்பதை அனைவருக்கும் அறிவிக்கட்டும்.

குன்றுகளிலும், சிற்றூர்களிலும், வயலோரங்களிலும், ஆலைகளிலும், பள்ளிகளிலும், பணிமனைகளிலும், பட்டினங்களிலும், அங்காடிகளிலும், பண்புள்ளோர் காணப்படும் எல்லா இடங்களிலும், இன்றிலிருந்து, தம்பி, எடுத்துக் கூறு, திருச்சி தீரரை அழைக்கிறது, மே 17, 18, 19, 20 நாட்களில் என்பதை.


தேனென இனிக்கும் சேதி என்பர் திராவிடர்; பிறர்க்குக் தேட்கடிபோல் தோன்றும், இச்சேதி.

புதியதோர் அரசு காணப் புறப்படுவோம், புல்லர்தம் புரட்டாட்சி ஒழித்திடப் போரிடுவோம்.

திருஇடம் காண்பதற்கே திரண்டிடுவோம், தீரரெலாம் திருச்சி மாநகரில்தானே !!

அன்புள்ள,

8—4—1956



கடிதம் : 45

# குடும்ப பாசம்

★ தி. மு. க.-வும் குடும்ப பாசமும்—மாநில மாநாட்டு அமைப்பு முறை—பிறரின் ஏசல்கள்.

தம்பி !

நான் பெருமூச்செறிந்தபடி, பக்கத்தில் அமர்ந்திருந்த சம்பத்திடம்—இப்போதாவது புரிகிறதா, நான் ஏன் சங்கடப்படுகிறேன் ? என்ற காரணம், என்று கேட்டேன். நாங்கள் உட்கார்ந்திருந்த இடம், சினிமாக் கொட்டகை; படம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்; காட்சி என் கருத்திலே கிளர்ச்சியுண்டாக்கி விட்டது; ஆங்கிலப் படம், டிஸ்ரேலி எனும் பிரிட்டிஷ்

அரசியல் தலைவனைக் குறித்த வரலாற்றுப் பின்னணிகொண்டது.

டிஸ்ரேலி, ஆட்சிமுறையைக் கண்டித்துப் பேசுகிறான்; அவன் கருத்துரைக்கு ஆதரவு பெருகுகிறது, ஆட்சிப் பொறுப்பே அவனிடம் தரப்படும் சூழ்நிலை உண்டாகிறது; அப்போது, அறிவாளி, ஆற்றல் மிக்கோன், எதிர்ப்புக்கு அஞ்சாதான், எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடக் கூடிய துணிவுகொண்டோன், பிரச்சினைகளைத் துருவித் துருவி ஆராயும் திறன்கொண்டோன் என்றெல்லாம் புகழப்பட்ட டிஸ்ரேலி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறான், தன்னால் இயலுமா என்று சிந்தித்து ஐயமடைகிறான், அச்சத்துடன் கேட்கிறான் நண்பர்களிடம், "இந்தப் பெரும் பாரத்தை நானெப்படித் தாங்க முடியும்? என்னால் முடியுமா இந்தச் சுமையைத் தூக்கிட........." என்று. நான் அந்தக் காட்சியைக் கண்டுதான், சம்பத்தைக் கேட்டேன், "இப்போதாவது புரிகிறதா? இதோ, டிஸ்ரேலி எப்படி அச்சமடைகிறான் பார், புதிய பொறுப்புகளை ஏற்க; காரியமாற்ற வேண்டிய கட்டம் வருகிற போது, கவலை எப்படிப் பிறக்கிறது பார்! இதே நிலைதானே இப்போது எனக்கு ஏற்படச் செய்கிறாய். என்னால் முடியுமா? ஏன் எனக்குத் தொல்லை?" என்று கேட்டேன்.

திராவிட மக்களுடைய வாழ்க்கைக்கே பெரியதோர் சிக்கல் ஏற்பட்டிருந்த நேரம்; பெரியாரின் திருமணம் நம்மை எல்லாம் திகைக்க வைத்த சமயம்; திராவிடர் கழகத்தைத் துறந்து கண்ணீர் வடித்தபடி நாம் வெளியேறிய நேரம். தோழர் குருசாமி, சம்பத்துக்கு, காலத்தின் குறிகள், கடமையாற்றுவதிலே உள்ள கண்ணியம், இயக்கத்தை நடத்திச் செல்லவேண்டிய பெரும் பொறுப்பு இவை பற்றி எல்லாம் உணர்ச்சிகரமான குட்டிப் பிரசங்கங்கள் நடத்தி விட்டார். இருவரும், 'விடுதலை'யில் கூடிப் பணியாற்றிய காலம் அது.

விடாதே அண்ணாத்துரையை!—என்று கூறிவிட்டார்—விட்டால் போதும் என்று காஞ்சிபுரம் ஓடிவந்துவிட்டேன் நான்—சம்பத்தும் நமது இன்றைய துணைப் பொதுச் செயலாளர் நடராசன் அவர்களுமாக வந்து, என்னைப் பிடித்துக் கொண்டனர்.

இப்போதுகூட, எப்போதாவது, அந்த அறையில், பிற்பகலில் சிறிது நேரம் படுத்துறங்கப் போவதுண்டு—போகும் போதெல்லாம், எனக்கு அந்தக் காட்சி அப்படியே தெரிவது போலிருக்கிறது. ஒரு நாள் பிற்பகல், நான் படுத்துக் கொண்டிருக்கிறேன்—சம்பத்தும் நடராசனும் வந்து விட்டார்கள்.

இது சரியில்லே அண்ணு! எப்போதும் இப்படித் தாஞ ? பொறுப்பேற்கத் தயக்கமா ?

இந்த நேரத்தில் நாம் கடமையைச் செய்யத் தவறிஞல், நாடு நம்மை நிந்திக்கும்.

குருசாமி, எப்படியும் தங்களேக் கையோடு பிடித்திழுத்துக்கொண்டு வரச் சொல்கிருர்.

விளேயாட, இது சமயமல்ல; வேதனேயை மறைக்கப் பொழுதுபோக்குகளில் மூழ்கிவிடக்கூடாது.

இருவரும்—இரட்டைப் புலவர்கள்; கவிதைகளேக் கொட்டுவது போல—கருத்துக்களேக் கொண்டு என்னேத் தாக்குகிருர்கள். என்ன செய்வேன்! சென்னே சென்றேன்—செயலாற்ற இணங்கினேன்—ஆஞல் அதே போது, பொறுப்புகளே ஏற்றுக் கொள்வதிலே எனக்கோர் அச்சம் பிடித்தாட்டிய படி இருந்தது. இந்த என் எண்ணத்தை அப்படியே சித்திரித்துக் காட்டுவது போலிருந்த, டிஸ்ரேலி படக் காட்சி என்னேத் தூக்கி வாரிப் போட்டது; அதஞல்தான் பெருமூச்செறிந்தபடி சம்பத்தை, "இப்போது புரிகிறதா என் சஞ்சலத்துக்குக் காரணம் இருப்பது ?" என்று கேட்டேன். அவன் தந்த பதிலோ, காட்சியைக் கண்டதால் ஏற்பட்டதைவிட அதிகமான அதிர்ச்சியைக் கொடுத்தது—உன்னிடம் சொல்வதிலே தவறுஎன்ன? சிறிதளவு வெட்கம்கூடத்தான் ஏற்பட்டது. சம்பத்து மட்டுமே என்னிடம் அவ்வளவு தாராளமாகவும், சரளமாகவும் பேச முடிகிறது. சம்பத்தை மட்டுமே, நான், எவ்வளவோ முயன்ருலும் கூட, அவர் இவர் என்று கூறமுடிவதில்லே!

பொறுப்பேற்றுக் கொள்வதிலே உள்ள கலக்கத்தைக் காட்டும் காட்சியையும், அதன் மூலம் பெறப்படும் கருத்தையும் நான் என் நிலேக்குக் காரணமாகக் கொண்டு, இப்போது புரிகிறதா ? என்று சம்பத்தைக் கேட்டேனல்லவா—பதில் என்ன கிடைத்தது தெரியுமா ? இவ்வளவு பெரிய பாரத்தை, சுமையை எப்படி நான் தாங்க முடியும்? என்றல்லவா டிஸ்ரேலி கேட்ட முறைப்படியே நான் கேட்டேன்—பதில் என்ன என்று எண்ணுகிருய் ? "சுமையை—பாரத்தை—தாங்கப் போவது நான் ஒருவன்தான் என்று ஏன் அண்ணு! நீங்கள் எண்ணிக்கொள்கிறீர்கள்? சுமையைத் தாங்கப் போவது, நாம்—நாம்—உம்மீது மட்டுமல்ல பாரம்—" என்ருனே அந்தப் போக்கிரி! நான் உண்மையில் வெட்கப்பட்டேன். இயக்கத்தை நடத்திச் செல்லவேண்டிய சுமை—பாரம்—பொறுப்பு—அவ்வளவும் என்மீது மட்டுமே ஏற்றப்படும்—என்று எண்ணினதால்தானே, இவ்வளவு சுமையைத் தாங்க

என்ஞல் எப்படி முடியும் என்ற கலக்கம் எனக்கு ஏற்பட்டது. அந்த எண்ணம் தவருனது என்பதை எடுத்துச் சொல்வதாக இருந்தது சம்பத்து அளித்த பதில்—அந்தப் பதிலிலே பொதிந் துள்ள தத்துவம்தான், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே அச்சாணியாக அமைந்திருக்கிறது—'நாம்' என்பது வலிவும் பொலிவும் கொண்டதோர் தத்துவம்—'நான்' என்பது வேதாந்தத்திலேயே அதை அகம்பாவம் அல்லது மனமயக்கம் என்கிருர்கள் என்ருல், அரசியலில் அது அர்த்தமற்றது மட்டு மல்ல, அனுமதிக்கப்பட்டுவிட்டால் ஆபத்தை, அடுக்கடுக்காகக் கிளப்பிவிடக் கூடியதுமாகும்! காண்கிருேமே இப்போது, கல் லறைகளை எல்லாங்கூட அல்லவா கல்லி எடுத்துக் காட்டுகிருர் கள்—நாம்—நான் இந்த இரு தத்துவங்களில் எது மேலானது என்பதை மேதினிக்கு விளக்கிக் காட்டுகிருர்கள்.

'நான்'—என்பது தவறு—'நாம்'—என்பதுதான் நிலைமை என்பதை அன்று படக்காட்சிக் கொட்டகையில் கண்டதி லிருந்து, அந்தப் பொலிவும் வலிவும் பொருந்திய தத்துவம், கழ கத்துக்கு எவ்வளவு மாண்பளித்திருக்கிறது என்பதை அறிய வும் அகமகிழவும், வாய்ப்புகள் பலப்பல வந்தவண்ணமு முள்ளன!

'நாம்' என்ற கூட்டுச் சக்தியை—குடும்ப சக்தியைக் காட்டிடும் அந்தச் சொல்லுக்கு எழிலோவியமாக அமைந்து விட்டது, தி. மு. க.

நானும் நீயும்—நம்மில் ஒவ்வொருவரும்—அந்த 'நாம்' என்பதிலே இருக்கிருேம்—அதிலே இருப்பதன் மூலம் ஏற்றம் பெறுகிருேம்—அந்த ஏற்றம் நாட்டுக்குப் பயன்படுகிறது.

'நாம்' என்ற அந்தக் கூட்டுச் சக்தியைக் காட்டிடும் சொல்லினுள் பொதிந்துள்ள அரிய பாடம், ஜனநாயகப் பண் பாட்டுக்கே அடிப்படையாகிறது—அகில உலகிலும், எங்கு, எந்தச் சமயத்தில் எத்தகைய அரசியல் குழப்பமோ, அவல நிலையோ விளைகிறது என்ருலும், இந்த 'நாம்' என்பதிலே உள்ள தூய்மையிலே ஏதோ ஓர்விதத் தூசு படிந்து விட்டது என்று கூறலாம்—'நான்' என்பது, 'நாம்' என்பதை வலுச்சண் டைக்கு இழுக்கிறது என்று பொருள் கொள்ளலாம்.

தம்பி! 'நான்'—என்பதிலிருந்து 'நாம்' என்ற கட்டம் பய ணமாவதற்கு, ஒவ்வோர் நாடுகளிலே, கொட்டப்பட்ட வியர் வையும் இரத்தமும், காணிக்கையும் கொஞ்சமல்ல!! இவ் வளவு 'பலி' வாங்கிய பிறகும் கூட, இன்றும் 'நாம்' என்பதை 'நான்' என்பது, சமயம் கிடைக்கும் போதெல்லாம் உலுக்கிப் பார்த்திடக் காண்கிருேம்; நாடுகளிலேயுஞ் சரி, கட்சிகளுக்கு உள்ளேயுஞ் சரி, வீடுகளிலும் கூடத்தான்!!

திராவிட முன்னேற்றக் கழகம், இந்தத் துறையில், பிறர் பார்த்து, பாராட்டத்தக்க (பிறர் என்பது நம்மை மனிதர் என்று ஏற்றுக் கொண்டுள்ளவர்களை மட்டுமே குறிப்பிடுகிறது) அளவில், வெற்றிபெற்று, வீரர் கோட்டமாய், தோழர்களின் கூடமாய், குடும்பமாய்த் திகழ்கிறது. அந்தக் குடும்பத்துக்குக் குதூகலத் திருவிழா மே 17, 18, 19, 20-ல், எப்படி வராமலிருக்க முடியும், குடும்பத்தில் ஒருவர் என்ற பாசம் உள்ளவர்களால்?

நூறு தோழர்கள், சைகிளில் புறப்பட்டு. வழிநெடுக இலட்சிய முழக்கம் எழுப்பிய வண்ணம், திருச்சி மாநாட்டுக்கு வருகிறோம்—என்று குளித்தலைத் தோழர் முத்துகிருஷ்ணன் அறிவிக்கிறார்.

பூ! இதென்ன பிரமாதம்! குளித்தலைக்கும் திருச்சிக்கும் இடையே நெடுந் தொலைவா? தூத்துக்குடியிலிருந்து கிளம்புகிறோம் அண்ணா! என்று 'சேதி' தருகிறார் மற்றோர் தோழர்.

பல்வேறு ஊர்களிலிருந்து 'சைகிள்' படைகள், திருச்சி வருவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருவது, தெரிகிறது—தெம்பும் பிறக்கிறது. பல்வேறு ஊர்த் தோழர்களும், 'நாம்' என்பதற்கு உயிரூட்டம் அளிக்கும் உயர் நோக்குடன், நான்—நான்—நான்—என்று கூறிக்கொண்டு, மாநாட்டுக்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். டிஸ்ரேலி போல, எப்படிச் சுமையைத் தாங்குவது என்று சிந்திக்க வேண்டிய அவசியமில்லை, 'நாம்' பணியாற்றப் போகிறோம் என்று சம்பத்து கூறியது, வாதத்திறமை விளக்கமாகமட்டும் அமைந்துவிடவில்லை, கழக வரலாறே அதுபோல அமைந்துவிட்டது. ஒரு அருமையான குடும்பம் இன்று திராவிடத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, மற்ற எங்கும் காணமுடியாத, பெற முடியாத, ஓர் கனிவு இங்கு சுவையளிக்கிறது.

'என்னையே நம்பி' என்ற சொற்றொடருக்கு, தி. மு. க. இடமளிப்பதில்லை; என் மூலம் இது; என்னைக் கொண்டு இது; என்று குடும்பத்துப் பொதுச் சொத்துக்கும் சுகத்துக்கும், அதிலுள்ள ஒவ்வொருவரும் காணிக்கை செலுத்திடக் காண்கிறோம்.

கலையைக் காணிக்கையாக்குவோர், கருத்துக் கருவூலத்தைக் காணிக்கை யாக்குவோர், கஷ்டநஷ்டம் ஏற்கும் துணிவினைப் பெற்றிருப்போர், கள்ளி காளானைக் களைந்தெறிந்து பாதையினைச் செப்பனிட்டுத் தருவோர், படைவரிசையில் பரணி பாடுவோர், எழுத்தாளர் பேச்சாளர், இன்சொலால் எவரையும் வசீகரிக்கும் இயல்பாளர், நாவலர்,

பாவலர், நடிகர், இசைவாணர், எனும் இன்னபிற வகையால், கழகத்தின் பொது வலிவையும் பொலிவையும் வளர்த்திடும், வன்மைமிக்கோரின் குடும்பமாக, தி. மு. க. இன்று விளங்கிடக் காண்கிறோம்.

இதைத் தாக்குகிறார்கள், அதைத் தாக்குகிறார்கள்!

இங்கு கிளை!

அங்கு கிளை!

எங்கும் தழைக்கிறது கிளைகள்!

இடைவிடாத பிரச்சாரம்!

இணையில்லா ஊக்கம்!

மதத்துறை ஊழல்களைத் தாக்குகிறார்கள்.

ஆளவந்தாரின் போக்கை அம்பலப் படுத்துகிறார்கள்!

இழந்த இன்பத்தை மீட்போம் என்று முழக்கமிடுகிறார்கள்; சுகபோகிகளையும் சுரண்டிப் பிழைப்போரையும் சாடுகின்றனர்.

புதிய அரசு கேட்கின்றனர்.

பெரும் பத்திரிகைகளின் இருட்டடிப்பு!

பணம் படைத்தோரின் பரிகாசம்.

மதப் புரட்டர்களின் சாபம்!

மாற்றுக் கட்சியினரின் தூற்றல்.

ஆளவந்தாரின் அடக்கு முறை.

இவ்வளவும் கிளப்பிக் கொக்கரிக்கின்றன—எனினும் வளருகிறார்கள்—வளர்ந்த வண்ணமிருக்கிறார்கள்.

## ஏன்? எப்படி? எதற்காக?

நாடு கேட்கிறது இவ்வண்ணம். நமது வளர்ச்சி நாட்டிலே புதிய பிரச்சினையாகிவிட்டது. கழகம் ஒரு கேள்விக் குறியாகிவிட்டது—அபாயக் குறி என்று அலறுபவர்களும் உளர். எனவே, நமது முழு உருவமும் விளங்கும் வண்ணம் மாநில மாநாடு அமைதல் வேண்டும்.

குடும்பத்திலோர் குதூகல விழா—மாநில மாநாடு—தடையும் பணமுடையும் குறுக்கிட்டாலும் யாரும் திருச்சிக்கு வருகிற கடமையிலிருந்து மட்டும் தவற முடியாது—குடும்ப பாசம் அனைவரையும், மே 17, 18, 19, 20 நாட்களில் திருச்சிக்குக் கொண்டு வந்தே சேர்க்கும்.

நாலு நாட்கள்! நாடாண்ட ஓர் இனம், ஒட்டேந்திகளிடம் சிக்கிச் சீரழிந்த சோகக் காதை, நாவாய் செலுத்தி வாணிபம்

நடாத்தி நவநிதியைக் குவித்த ஓர் இனம், பாபத்துக்குக் கழுவாய் தேடுகிறேன் என்று கூறிக்கொண்டு புல்லேந்தியின் பாதம் கழுவிய பரிதாபக் காதை, கோட்டை கட்டிக் கொற்றம் நடாத்திய ஓர் இனம், வேட்டையாடி வீரத்தைக் காட்டிய ஓர் இனம், சேட்டைகளைச் சடங்குகளாகக் கொண்டு, 'கேட்டை மூட்டை'களுக்கெல்லாம் பொன்னையும் பொருளையும் கொட்டிக் கொடுத்து ஏமாளிகளாகி விட்ட இதயம் நோகச் செய்யும் காதை—இவைகளை உணராமலேயே, நாடு, இனம், மொழி, வாழ்க்கை முறை அனைத்தையும் மறந்துபோய், மாற்றானை மகேசனின் தூதுவன் எனக்கொண்டு, மதி இழந்து மதிப்பிழந்துபோன, மனதை வேகவைக்கும் காதை; கப்பிக்கொண்டிருந்த மன இருள் விடிவெள்ளியால் மெள்ள மெள்ள விலகிய வரலாறு, ஒளி கிடைத்ததும் உள்ளத்துக்கு ஏற்பட்ட உத்வேகம், அதன் பயனாக ஏற்பட்ட இயக்கம், அதன் வளர்ச்சி ஆகிய இன்றைய வரலாறு, இதன் மூலம் நாம் அடைய இருக்கும் இலட்சியம், அது அளித்திடப் போகும் இன்பம், அதன் பயனாக நாடு பெறப் போகும் ஏற்றம், அதன் விளைவாக ஏற்பட இருக்கும் பெருமிதமிக்க எதிர்காலம் பற்றிய கணக்கெடுப்பு, ஆகிய இவைபற்றி எலாம், நாம் பேசவும், பேசுவதைக் கேட்கவும், உரையாடவும், உணர்ச்சியைப் பரிமாறிக் கொள்ளவும், வழிவகைபற்றி ஆய்வுரை வழங்கிடவும், திட்டம் தீட்டிடவும், செயல்படு முறைபற்றித் தீர்மானித்திடவும், நாலு நாட்கள் போதா ! நாலே நாலு நாட்கள்தான் !! அந்த நாலு நாட்களுக்குள், நாம் நமது உள்ளத்திலே ஊற்றெடுக்கும் ஓராயிரம் எண்ணங்களையும், வகைப்படுத்தி, வரிசைப் படுத்தி, செயல்படத்தக்க செம்மையினைத் தேடிப் பெற்றிடவும் வேண்டும். தலைமுறை தலைமுறையாக—பன்னெடுங் காலமாகப் பாழ்பட்டுப் போயுள்ள நிலையினை மாற்றிடத்தக்க மகத்தானதோர் பணியில் ஈடுபட்டுள்ள நாம், மாநில மாநாடு நடாத்துவது, கூடிக் கலந்திட அல்ல—குடும்ப பாசத்துடன் கூடி, நாட்டு விடுதலைக்கான நல்லார்வத்தை எந்த அளவிலும் வகையிலும் மற்றையோருக்கு ஊட்டினோம் என்பது பற்றி ஆய்ந்தறிந்து, நமது முறைகளிலே குற்றம் குறை உளவா என்று பேசிக் கண்டறிந்து, திருத்தப்பட வேண்டியவை, நிறுத்தப்பட வேண்டியவை, புகுத்தப்படத் தக்கவை, களையப்பட வேண்டியன யாவை என்பதுபற்றி எண்ணிப் பார்த்து, நாம் ஏற்றுக்கொண்டுள்ள மகத்தான பணியினை வெற்றிகரமாக்கிட எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் வீறுகொண்டெழுந்துள்ள இந்தக் கால கட்டத்துக்கு ஏற்ற வழிவகை கண்டறிந்தாக வேண்டும். நாலே நாட்கள் மட்டுமே உள்ளன ! எனவே, ஒவ்வோர் நாளும், ஒவ்வோர் மணியும் மிகமிக அக்கறையுடன் பயன்படுத்தப்பட வேண்டிய அவசியமாகிறது.

பொதுச் செயலாளர் நான் இந்தக் கட்டுரை தீட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை என்னால் யூகித்துக் கொள்ளவும் முடிகிறது—பரிதாபப் படவும்தான் செய்கிறேன். இளமை எழிலளிக்கிறது, இன்ப புரிக்கு அழைக்கிறது, இயக்கமோ அவரை, திருச்சிக்குத் துரத்துகிறது ! தாமரை பூத்த தடாகத்தருகே சென்று முகத் தாமரையாளிடம் அகத்துறை இலக்கணம் கற்றிட வேண்டிய காளையர்தான்—பருவத்தை எண்ணிடின்—எனினும், களம் சென்று தமிழரின் தன்மானத்தைக் காத்திடவேண்டிய கட்டம் வருகிறபோது, வல்லூறு வட்டமிடும் களத்தில், மலர்த் தோட்டத்தில் காணும் இன்பத்தைவிட அதிகமன்றோ காண்பராம், வீரத் தமிழர்கள்—வீழ்ச்சியுறாத நாட்களில். நமது பொதுச் செயலாளர், அகமும் புறமும் நன்கு பயின்றவர்—எனவே, புறநானூற்றுக் காட்சிகளைத் துணைக்கழைத்துக் கொண்டு திருச்சிக்குச் சென்றுள்ளார்.

பந்தல் வேலை எந்த அளவில் உள்ளது ?
பாய்களை வாங்கிவிட்டீரோ ?
பணிமனையில் இன்று என்ன நிலைமை ?
கொடி மரம் உயரம் எவ்வளவு ?

இப்படி எல்லாம், கேட்டுக் கொண்டும், ஒவ்வோர் வேலையையும் கவனித்துக் கொண்டும் இருக்கிறார். அவர் உடனிருப்பதால் ஏற்படும் உற்சாகம், ஏற்கெனவே 'சிட்டு'ப் போல் பறந்து பணியாற்றிக் கொண்டுவரும் திருச்சித் தோழர்களுக்கு, மேலும் உரமும் திறமும், தரமும் தருகிறது—வேலை மும்முரமாக நடைபெற்ற வண்ணமிருக்கிறது. வேலையோ, தம்பி, ஏராளம், ஏராளம் !! தடைபல கடந்திட வேண்டி இருக்கிறது—ஒவ்வொர் கட்டமும் புதுப்புதுப் பிரச்சினையைக் கிளப்புவதாக அமைந்து விடுகிறது. ஒரு பிரச்சினை தீர்க்கப்பட்டானதும், வெற்றி இன்பத்தைக் கூடச் சுவைக்க முடிவதில்லை. வேறோர் பிரச்சினை கிளம்பி விடுகிறது. நாலே நாலு நாட்கள்—அப்பப்பா ! கடந்த நாற்பது நாட்களாக நமது தோழர்கள், எடுத்துக் கொண்டுள்ள முயற்சி சாதாரணமானதல்ல. கடினமான வேலை; ஐயமில்லை. ஆனால், திருச்சி தாங்கிக் கொள்ளும்.

நினைவிருக்கிறதா, தம்பி, எனக்குச் செந்தேனாக இனிக்கிறது நினைவு—திருச்சிதான், திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் பணியாற்றத் தொடங்கியதும், நாம் நடாத்திய முதல் மாநாடு—மாவட்ட மாநாடு !!

திருச்சியில் அந்த மாநாடு நடத்த நாம் திட்டமிட்ட உடனே, உனக்குத் தெரியுமோ என்னவோ, திகிலூட்டினுர் கள்—நம்மை நிந்திப்பதிலே நித்யானந்தம் காண்பவர்கள்.

திருச்சியிலா ?

மாநாடா ?

மக்கள் வருவார்களா ?

எங்கே இருந்து கொண்டு வரப்போகிருர்கள் ?

இடம் கொடுப்பவர் யார் ?

இரண்டு நாள் தங்கிட வசதி உண்டா ?

ஒரு வேளைச் சோற்றுக்கு வழியுண்டா ?

திருச்சியிலா, மாநாடு !! பேஷ் ! பேஷ் ! இங்கு தோல்வி தாக்கும்—மூலைக்கு ஒருவராக முக்காடிட்டுக் கொண்டு ஓடிவிடப் போகிருர்கள் !!—என்றெல்லாம் திகிலூட்டினர், எரிச்சலை மூட்டினர்.

என்னைத்தான் தம்பி, உனக்கு நன்ருகத் தெரியுமே ! சிறு சங்கடமென்ருலும் பெருத்த குழப்பம் புகுந்துவிடுமே உள்ளத்தில். அதனுல் நான் பயந்து போனேன். மாவட்ட மாநாட்டுக்கான கொட்டகை அமைக்கப்பட்டு விட்டது—மறுநாள் மாநாடு—முன்னுள் மாலை சென்று பார்க்கிறேன்—பசியுடன் உள்ள பெரும் புலி தன் அகன்ற வாயைத் திறந்துகொண்டிருப்பது போல, கொட்டகை காட்சியளிக்கிறது. இதோ என் மனக்கண்ணுல் காணமுடிகிறதே, அந்தக் கொட்டகையை.

"சாம்பு...!"

"என்னண்ணு!..."

"பந்தல்...கொட்டகை... ?"

"அவசரத்தில் போட்டது. இவ்வளவுதான் முடிந்தது..."

"இவ்வளவுதான் முடிந்ததா...என்ன சாம்பு, விளையாடுகிருய் ? இவ்வளவு பெரிய கொட்டகையை ஏன் போட்டாய் ? யார் போடச் சொன்னது ? இவ்வளவு பெரிய கொட்டகைக்கு, ஆட்கள் எங்கே இருந்து கொண்டுவந்து குவிப்பது ? நாளைக்கு இதிலே கால் பகுதிக்குக்கூட தோழர்கள் வருவார்களோ இல்லையோ ! இவ்வளவும் நாளைக்குக் 'காலி'யாக இருக்குமே ! எப்படி அந்த அவமானத்தைத் தாங்குவது ? என்ன வம்பு செய்துவிட்டாய், சாம்பு !"

"அண்ணு ! கொட்டகை பெரிது என்கிருயா ?"

"இதிலே சந்தேகம் வேறு உனக்கு. போ, சாம்பு. போய், பந்தல்காரர்களை அழைத்து வா. பந்தலில் பாதி அளவுக்குமேல், தனித்தனி விடுதிகளாக மாற்றி அமைத்தாக வேண்டும். காலி இடமாகக் கொட்டகை தெரியக் கூடாது. இதிலேயே ஒரு இடத்திலே தொண்டர்கள் முகாம், மற்ருேர் பக்கம் பிரதிநிதிகள் ஜாகை, இன்னுேர் பக்கம் ஏதாவது ஓர் விடுதி, எதையாவது செய்து கொட்டகையின் அளவைக் குறைத்திடவேண்டும்."

"வேண்டாம், அண்ணு!"

"சாம்பு! என்னிடம் விளையாடாதே! இதுதான் முதல் மாநாடு. நாம் கழகம் துவக்கி, காலை ஊன்றி வைக்க ஆரம்பித்திருக்கிருேம். இந்த நேரத்திலே, மாகாண மாநாட்டுப் பந்தல் போலக் கொட்டகை போட்டுவிட்டு ஆள் கிடைக்காமல், நாளைக்கு அசிங்கப் படுவதா? வீண் விஷப் பரிட்சை வேண்டாம். காலையில் நான் பார்க்கவருவேன்—அதற்குள் கொட்டகையின் அளவு சிறிதாக்கப்படவேண்டும்..."

"சரி, அண்ணு......"

"தர்மு, இந்த வேலையை உடனே கவனி. பராங்குசம், என்னவோ ஏதோ என்று இருந்துவிடாதே! மணி, கவனமிருக்கட்டும்! சாம்பு! உடனே வேலை நடந்தாக வேண்டும்."

கொட்டகை பெரிது, கூடிட ஆட்கள் வரமாட்டார்கள் என்ற சந்தேகம் குடைந்தது—சாம்புவிடம் சண்டைக்கு நின்றேன்.

அதே திருச்சியில், அதே சாம்புவே, இரண்டாயிரத்துக்கு ஆயிரம் என்ற அளவிலே கொட்டகை அமைத்துக் கொண்டிருக்கிருர்! தம்பி! இந்த இன்பம் எத்தகையது என்பதை எண்ணும் போது, ஆஹா! எப்படியிருக்கிறது என்கிருய்!!

சாம்பு! சாம்பு!! என்று அழைத்துக் கொண்டு, அன்புக் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்த சங்கரன் இல்லை, இந்த இன்பத்தை உடனிருந்து சுவைக்க—இயற்கையெய்தி விட்டார்—ஓடி ஆடி வேலை செய்து, சிறப்பினைக் கூட்டித் தந்திட நண்பர் இருதயராஜ் இல்லை, அணைந்து விட்டது அந்தத் திருவிளக்கு—இந்த வாட்டம் என்னை வதைக்கத்தான் செய்கிறது. தயக்கத்துடன் நாம் திருச்சியில் முதல் மாவட்ட மாநாடு துவக்கினேம்—தூய உள்ளத்துடன் பணியாற்றி வந்த வண்ணமிருக்கிருேம்—கொள்கையிலிருந்து வழுவினேமில்லை,

கொடுமைகளைக் கண்டு கலங்கினோமில்லை, பாதை வகுத்துக் கொள்வதிலே பொறுப்புக் காட்டினோம், வகுத்துக் கொண்ட பாதையிலே நடந்து செல்லும் போது குறுக்கிட்ட இடையூறு கண்டு அஞ்சி அயர்ந்தோமில்லை—பயணம் துவக்குமுன்பு பல் வேறு மனக்குழப்பமிருந்தது—எண்ணித் துணிந்தோம்—இதோ இன்று இரண்டாவது மாநில மாநாடு, திருச்சியில் நடைபெறு கிறது—நகருக்குள் கிடைக்கும் திடல்கள் போதுமானவை அல்ல என்று, ஊர்ப்புறம் தேடி, விரிந்து பரந்து கிடக்கும் திடலை நாடினோம்—அந்த அளவுக்கு வளர்ச்சி கண்டோம். காரணம், தம்பி, நாம்—நாம்—அதனால் !!

நாத்திகர்கள் !

துவேஷிகள்!

குழப்பக்காரர்கள்!

கூவித்திரிவோர்!

வகுப்புவாதிகள்!

என்னென்னவோ ஏசுகிறார்கள்—கேட்கும் மக்களின் தொகை குறையக் குறைய, வகை மட்டமாக மட்டமாக, தூற்றலின் வேகம் அதிகமாகக்கூடத் தெரிகிறது.

கட்டைவிரலை வெட்டிவிடுவேன்.

கையில் கிடைப்பது கொண்டு அடிப்பேன்.

ஈ, எறும்புபோல நசுக்கிவிடுவேன்.

இருக்குமிடம் தெரியாமல் அழித்துவிடுவேன்.

கணக்கைத் தீர்த்துக் கட்டிவிடுவேன் !!

காமராஜரும் சரி, ஆச்சாரியாரும் சரி, இதுபோல உருட்டி மிரட்டிப் பேசத் தவறியதில்லை.

உருட்டல் மிரட்டலோடு நின்று விடவில்லை—'தேனீ' நடத்திக் காட்டிடவும் அவர்களுக்கு வசதி இருந்தது. நாவலர் மீது பெரும் பாறையைப் போட்டு உயிருக்கே ஆபத்து ஏற் படுத்த, உத்தமர் காந்தியாரின் பெயர்கூறி அரசியலில் உயர் இடம் பெற்றவர்கள்—தியாகராசர்கள் முனைந்தனர் !

144ம், தடியடியும் சிறையும் சித்திரவதையும் துப்பாக்கி யும், நம்மைத் தாக்கின—தாக்குதலின் வேகமான கட்டத்துக் குத் துரைத்தனம் தன்னைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது என்றுகூடச் சொல்லலாம் ! கழகத்தின் முன்னணியில் நின்று பணியாற்றுவோர் அனைவருமே சிறை அனுபவம் பெற்று விட்டார்கள் !

சாமான்யர்களாகிய நாம், ஒரு விடுதலை இயக்கத்தை நடத்திச் செல்லும்போது, அலட்சியப் பார்வையால், ஏளனப் புன்னகையால், இரண்டோர் இழிமொழியால் நம்மை இருக்குமிடம் தெரியாமல் செய்திட முடியும் என்றுதான், கோட்டையில் கொடி நாட்டியவர்கள் எண்ணிக்கொள்வார்கள்.

நாம் வளர்கிறோம் என்பதை ஒப்புக்கொள்வதே தங்கள் பெருமைக்குக் களங்கம் என்ற அளவுக்கு ஆணவம் பிடித்தவர்கள், நமது மாற்றார்கள்—இதனையும் அறிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் முடிகிறது.

நாம், வளர்ந்துவிட்டோம், இனி மறைத்துப் பயனில்லை என்ற கட்டம் பிறந்ததும், முழு மூச்சுடன் நம்மை எதிர்ப்பர்—கடுமையாக எதிர்ப்பர்—என்பதும் எதிர்பார்த்ததுதான். இவைகட்கெல்லாம், நான் அஞ்சியதில்லை, 'நாம்' ஓர் இலட்சியத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆதலால்.

எனக்கு மட்டும் ஒரு அச்சம் இருந்தது—அது திராவிட கழகத்தைப்பற்றி.

ஆயிரம் கருத்து வேற்றுமைகள் இருப்பினும், பகைத்துக் கொள்வதற்கான காரணம் பல கிளம்பிவிடினும், திராவிடர் கழகம் என்பது, நமது 'பாசத்தைப்' பெற்ற இடமல்லவா !! சேலத்தில் ஜஸ்டிஸ் கட்சியே இனி திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றப்படவேண்டியதுதான் என்று 'அண்ணாத்துரை தீர்மானம்' என்ற பெயரிட்டு பெரியார் திட்டம் தந்தாரல்லவா, அதற்கும் முன்பே, காஞ்சிபுரத்தில் திராவிடர் கழகம் என்பதாக அமைப்பு அரும்பிற்று. சேலத்துக்குப் பிறகு, சீமான்களின் சீற்றத்தைத் தாங்கிக் கொள்ளவும், பதவிப் பிரியர்களின் பகையை எதிர்த்து நிற்கவும், எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருந்தது. சேலத்தில் சிந்தை குழம்பிப்போன சீமான்கள், சென்னையில் முகாமடித்துக்கொண்டு, எவ்வளவு 'சிண்டு' முடிந்து பார்த்தார்கள். தம்பி! அந்தக் காதை மிக மிகப் பெரியது. அப்போதெல்லாம் அன்புப் பாலூட்டி வளர்த்தோமே, அதற்கான அமைப்பு முறைபற்றி ஆயிரம் கனவு கண்டிருப்போம். அதற்கென ஓர் கொடி தேடிடப் பல முயற்சி—இவ்வளவு தொடர்பு பாசத்தை மூட்டாமலிருக்க முடியுமா! ஆகையினால், நாம் பெரியாரின் திருமணத்தால் திடுக்கிட்டுப் போன நிலையில் வெளியேறி, முன்னேற்றக் கழகமாகப் பணியாற்றத் தொடங்கியபோது, எனக்குப் பயமாகத்தான் இருந்தது—என்ன பயம் தெரியுமா தம்பி, எதிர்ப்பார்கள் என்ற பயமல்ல—பிரிந்து போனார்கள் பைத்தியக்காரர்கள், நல்ல பிள்ளைகள்தான், ஆனால் என்னவோ ஒரு தவறான காரணத்துக்-

காகக் கோபித்துக்கொண்டார்கள், அவர்களிடம் எனக்குக் கோபம் கிடையாது, சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம் பெரியோராயின் பொறுப்பதுதானே கடன், அதுபோல, சிந் திக்கத் தெரியாத இந்தச் சிறுபிள்ளேகள் என்னவோ தனிக் குடித்தனம் வைத்துக்கொண்டார்கள், போகட்டும் பாபம், எங்கே இருந்தாலும் புத்தியோடு பிழைத்தால் போதும், எங்கே இருந்தாலும் என் சீடப் பிள்ளேகள்தானே, அவர்களுக்கு என்ன பெருமை வந்தாலும் அது அவ்வளவும் எனக்குத்தானே பெருமை, நன்ருகப் பேசுவார்கள், என்னிடமல்லவா பயிற்சி பெற்ருர்கள், நன்ருக எழுதுவார்கள், ஈரோட்டுப் பள்ளியிலல் லவா படித்தார்கள், கொள்கையில் பற்று இருக்கும், என்னிடம் பெற்ற பாடம் வீண் போகுமா, நல்ல பிள்ளேகள் நமது சீடப் பிள்ளேகள்—என்று பெரியார் அன்புடன் பேசினுல்—பிரிந்து வந்துவிட்ட பிறகும் நம்மீது பிரியம் காட்டினுல், இன்மொழி பேசினுல், என்ன செய்வது !! பெரியார் அந்தப் போக்கிலே நடந்துகொண்டால், நாம் யார்தான் அப்போது என்ன செய் திருக்கமுடியும் ?

என்ன இருந்தாலும் அவருக்கு நம்மிடம் அன்பு குறையவில்லே.

என்ன காரணத்தாலோ ஒரு திருமணம் செய்து கொண்டாரே தவிர நம்மை இன்னமும் பிள்ளேகளாகவே பாவிக்கிருர்.

நாம் பிரிந்து வந்துவிட்டோம் என்ற போதிலும் நாம் நன்ருக இருக்கவேண்டும் என்பதிலே அவருக்கு எவ்வளவு அக்கறை பாாத்தீர்களா ! பெரியார் பெரியார்தான் !!

என்னவோ ‘விஷக்கடி வேளே’ என்பார்களே, அது போல, திருமண மூலம் ஒரு பேதம்—பிளவு ஏற்பட்டது — அவரோ நம்மைப் பகைவர் என்று கொள்ளவில்லே-பரிவு காட்டுகிருர்—பாசம் வைத்திருக்கிருர்.

பிரிந்து, தனியாகிவிட்ட போதிலும், எதிரிக்கு நம்மைக் காட்டிக்கொடுக்கவில்லே - கொள்கையை நாம், நமது முகாமிலிருந்து பரப்புகிருேம் என்ற வகையில் மகிழ் கிருர்—ஆதரிக்கிருர். கோபம் கொண்டு நாம்தான் அவரை விட்டுப் பிரிந்து வந்து விட்டோமே தவிர, அவருடைய பொன்ஞன குணத்தைப் பார், துளியாவது நம்மிடம் துவேஷம், பகை, இருக்கிறதா? இப்போதும், நல்ல பிள்ளே கள், நம்ம பிள்ளேகள் என்று பாசத்தோடு பேசுகிருர். இப் படிப்பட்ட பெரியாரிடமிருந்து நாம் பிரிந்துவிட்டோமே! என்ன பேதைமை! என்ன பேதைமை !!

தம்பி! இவ்விதமெல்லாம்தானே நாம் எண்ணி இருந்திருப்போம்—கோபம் தணிந்துவிட்டிருக்கும்—வெட்கம்கூட நம்மில் சிலருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும்—மெள்ள மெள்ள, நம்மிலே சிலரே, போகட்டும், நண்பரே ! ஏதோ நடந்தது நடந்துவிட்டது—இனியும் நாம் பிரிந்திருக்க வேண்டாம். அவர் இவ்வளவு அன்பும் பாசமும் காட்டும்போது, நாம் பேதமும் விரோதமும் காட்டுவது சரியல்ல. திருமணம்பற்றித் திடுக்கிட்டுப் போனோம்—கோபத்தால் வெளியே வந்தோம்—வெளியே வந்ததால், வேறு கட்சியாகப் பணியாற்றினோம், அவர் இவ்வளவுக்குப் பிறகும் நம்மிடம் பரிவு காட்டும்போது, நாம் பழையபடி ஒன்றுகிவிட வேண்டியதுதான்—என்று கூறிடத் தானே செய்திருப்போம்—பிறகு முன்னேற்றக் கழகம் ஏது ! ஒன்றுகிவிட்டிருக்க வேண்டியதுதான் ! இடையிலே, ஓடியதும், ஆடியதும், பரணி பாடியதும், படை கூடியதும் வீண் ! வீண் !!

இவ்விதமான ஓர் நிலைமை ஏற்பட்டுவிடுமோ, என்ற அச்சம் மட்டும் எனக்குத் துவக்கத்தில் இருந்தது.

எதையும் தாங்கிக்கொள்ள முடியும், ஆண்டு பலவாக நம்மை நடத்திச் சென்றவர், நாம் அறிந்த ஒரே தலைவர், யாருடைய வாயிலிருந்து உதிரும் வார்த்தைகளை எல்லாம் தத்துவம் என்று கொண்டாடும் அளவுக்கு நாம் 'பக்தி' செலுத்தி வந்தோமோ, அப்படிப்பட்ட பெரியார், அன்புக் கணைகளை ஏவியிருந்தால், அதனைமட்டும் நம்மால் எதிர்த்திருக்கவே முடியாது.

பாசத்துடன் கலந்த ஒரு பார்வை, பரிவான பேச்சு, பழைய நேசம் பாழ்படாது என்பதைக் காட்டும் சிறு நடவடிக்கை எழும்பியிருந்தால் போதும், முன்னேற்றக் கழகம் இல்லை !

பெரியாரின் போர்முறை இவ்விதம் அமைந்துவிடுமானல் தனிக் கழகம் தானுகவே வீழ்ந்துபடும்—இதற்கு, ஆயிரம் பாடுகள் படுவானேன்—என்று நான் எண்ணினதுண்டு.

ஆனல், அந்த என் அச்சம், பொருளற்றதாக்கப்பட்டு விட்டது.

அன்பினல் நம்மை வீழ்த்தியிருக்கமுடியும்—ஆரம்பக் கட்டத்தில்—பாசத்தால் நம்மை இழுத்துக்கொண்டிருக்க முடியும்—நேசம் காட்டி இருந்தால், நம்மில் பலருக்கு நெறித்த புருவம் இருந்திராது. ஆனல், அந்த முறைக்கு இடமில்லாதபடி 'சர்வ ஜாக்ரதை'யுடன், மிகத் திறமையாகக் கவனித்துக்கொண்

டார், தூண்டிவிட்டு, துண்டு தேடிக்கொண்டு ஓடிவிட்ட உத்தமர்.

என்றென்றும் ஒன்று கூடவே முடியாத நிலையில் 'இரு பிரிவுகளேயும்' வைத்துவிட்டார், இடம் தேடி ஏங்கிக் கிடந்தவர். அன்பு எங்கே சுரந்து விடுகிறதோ—என்று பயந்து, நரகல் நடையை அள்ளி அள்ளி வீசியும், அபாண்டம் சுமத்தியும், பழிபாவத்துக்கு அஞ்சாத புகார்களே அவிழ்த்துவிட்டும் பெரியாரின் பெருந்தொண்டுக்குரிய பலனே, 'குத்தகை'க்கு எடுத்துக்கொண்டார் அந்தக் குணாளர்.

துரோகிகள்

காலிகள்

கூலிகள்

போக்கிடமற்றவர்கள்

வயிற்றுச் சோற்றுக்கு வக்கற்றவர்கள்

அப்பாவிகள்

சூதர்கள்

கொலைபாதகர்கள்

பொறுக்கிகள்

தம்பி! எழுதக்கூடக் கூச்சமாக இருக்கிறது, அப்படியெல்லாமல்லவா, ஏசத்தலைப்பட்டார்கள்!

ஒவ்வொரு தூற்றலும், பிரிந்தோர் பிரிந்தோரே, என்பதை உறுதிப்படுத்தத்தான் உதவிற்று!! பிரிவினுல் இலாபம் தேடியவருக்கு மகிழ்ச்சி பிடரியைப் பிடித்தாட்டிற்று!

'அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாழ்' என்றார் வள்ளுவர். அந்த அன்புக்கு ஒரு துளியும் வேலையில்லாதபடி செய்துவிட்டார் நீண்டநாள் பசியால் வாடிக் கிடந்தவர்.

அந்த 'இராஜதந்திரம்' அவருக்குப் பெருத்த இலாபம் என்று எண்ணி மகிழ்கிருர் என்கிருர்கள். மகிழட்டும்!

ஆனல், அந்தப் போக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தை நிலைநிறுத்திவிட்டதுடன், அதன் மூலம், நாட்டிலே புதியதோர் 'சக்தி' வளர வழி செய்துவிட்டது; திராவிட முன்னேற்றக் கழகம் என்பது கோபத்தினின்றும் முளைத்தது என்ற நிலை மாறி, கொள்கையைப் பண்புடன் பரப்பிடவும், ஆற்றலுடன் செயல்படுத்தவும், அஞ்சா நெஞ்சுடன் அறப்போர் நடாத்தவும், இறுதி இலட்சியம் ஈடேறும் வரையில், இன்பத் திராவிடம் காணும் வரையில், இடையருது பாடு

படவும், இடையில் எவர் புகுந்து இளித்தாலும், கண் சிமிட்டினாலும், இது, அது என்று ஆசை மூட்டினாலும், எமது இலட்சியம் இன்பத் திராவிடம், அதைப் பெறவே எமது கழகம் என்று கூறி, ஏறு நடையுடன் இலட்சியப் பாதையில் நடந்திட ஓர் நேர்மையாளர் படை, நேர்த்தியான குடும்பம் நிலைத்து விட்டது.

நிந்தனை நமது கழகக் கழனிக்கு உரமாயிற்று.


தூற்றல், நமது குடும்பத்துக்குள் தோழமை மலர்ந்திடச் செய்தது.

இழிமொழியும் பழிச் சொல்லும் வீசினர்; நமது இதயத்தில் ஈட்டி கொண்டு தாக்கினர். மனப்புண் போக்கிட மாமருந்து தேடினோம். குடும்ப பாசம், அந்த மருந்தாக அமைந்தது.

அத்தகைய குடும்பம் நடாத்தும் குதூகல விழாவல்லவா தம்பி, *17, 18, 19, 20!!* கண்கொள்ளாக் காட்சியாகத் தானே இருக்கும். வரலாறு, இத்தகைய சம்பவங்களைப் பொன்னெனப் போற்றுகிறது. வா, தம்பி, வா*!!* நண்பர் குழாத்துடன் வா *!!*

அன்புள்ள,

*15—4—1956*



நாடு மறவாத ஏடு

# தி. மு. க. வரலாறு

## விலை ரூ. 4-00

தி. மு. க. வரலாறு திருத்திய இரண்டாம் பதிப்பு 640 பக்கங்கள் கொண்ட சிறந்த பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூலைப் பற்றிய அறிஞர்கள் கருத்துக்களிற் சில :

“நண்பர் பார்த்தசாரதி உடனிருந்து பணியாற்றி வருவதாலும், நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழகத்திலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள், எழுச்சிகள் ஆகியவைகளை அறிந்திருப்பதாலும், இத்தகைய நூல் தீட்டமுடிகிறது—பாராட்டுகிறேன்.

—அறிஞர் அண்ணா

“ தி. மு. கழகத்தைப் பற்றிய வரலாற்று நூல் ஒன்று உருப்பெற்றெழ வேண்டும் என்ற வேட்கை, கழகத்தை நடத்திச் செல்வோர் அனைவர் உள்ளத்திலும் தவழ்ந்து கொண்டிருந்தது. அந்த வேட்கையைப் பெருமளவுக்குத் தணிக்கும் வகையில் இந்நூல் அமைந்திருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

—இரா. நெடுஞ்செழியன்

“ திரு டி. எம். பார்த்தசாரதியார் அவர்களின் இந்த நற்பணியை நாடு மறவாது. காப்பாற்றப்பட வேண்டிய திராவிடத்தின் கருவூலங்களில் இந்த ஏடும் ஒன்றாகும். ஒவ்வொருவரும் பேணிப் பாதுகாக்க வேண்டிய ஏடு, ‘தி. மு. க. வரலாறு.’ —மு. கருணாநிதி

“தென்னகத்தில் தோன்றிய ஒரு மாபெரும் இயக்கத்தின் வரலாற்றை எழுதத் துணிந்து அதில் முழு வெற்றியும் கண்டிருக்கிறார், நமது இயக்கத்தின் மிகப் பழைய முன்னோடியும், நமது உழுவலன்பருமான திரு. டி. எம். பார்த்தசாரதி அவர்கள். —சி. பி. சிற்றரசு

“தென்னகத்தின் விடுதலையில் அக்கறை கொண்ட ஒவ்வொருவர் கரங்களிலும் தவழ வேண்டிய அருமையான வரலாற்று நூல்.” —கே. ஏ. மதியழகன்

## பாரி நிலையம்

59, பிராட்வே, சென்னை 1


Wrapper Printed at Neo Art Press, Madras-2